


# சீர் இணுவைத் திருவூர்







தொகுப்பு: மூ.சிவலிங்கம்

சைவத்திருநெறிக் கழகம்,

இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# "சீரிணுவைத்திருவூர்"

~ இணுவில் கிராம வரலாற்று நூல் ~



சகலகலாவல்லி

வெளியீடு:

இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சீரிணுவைத்திருவூர் |
| தொகுப்பாசிரியர் | : | மூ.சிவலிங்கம் |
| முதற்பதிப்பு | : | 15.05.2004 |
| ஒளிப் படங்கள் | : | ச.பிரதீபன் (சண்சைன் கிரபிக்ஸ், இணுவில்)<br>சி.சிவசத்தியநாதன் (சிவாத்தம்பி) |
| முகப்பமைப்பு | : | தி.கேசவன்<br>கா.சதீஸ்காந்த் |
| பக்கங்கள் | : | xxv + 428 |
| எழுத்து அளவு | : | 12 |
| பக்க அளவு | : | A5 |
| கணனி வடிவமைப்பு | : | வே.செந்தில்வேல்<br>(சண்சைன் கிரபிக்ஸ், இணுவில்) |
| புத்தக உருவாக்கம் | : | சண்சைன் கிரபிக்ஸ்<br>கே.கே.எஸ் வீதி,<br>இணுவில். |
| அச்சுப்பதிப்பு | : | யோகநாதன் கிரபிக்ஸ் அன் ஓவ்செற் பிறின்ரேர்ஸ்<br>கே.கே.எஸ் வீதி, இணுவில். |
| வெளியீடு | : | இணுவில் சைவத்திருநெறிக்கழகம் |
| நூலின் விலை | : | 500 ரூபா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீறிணுவைத்திருவூர்

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | i - iv |
| | சமர்ப்பணம் | v - viii |
| | ஆசிச்செய்திகள் | ix - xxi |
| | அணிந்துரை | xxii - xxiv |
| | இணுவைத் திருவூரின் பன்முகப் பரிமாணங்கள் | xxv |
| 1. | இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவில் | 1 - 19 |
| 2. | இணுவில் சிவகாமி அம்மன் கோவில் | 20 - 37 |
| 3. | இணுவில் கந்தசுவாமி கோவில் | 38 - 53 |
| 4. | இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் கோவில் | 54 - 58 |
| 5. | இணுவில் கோண்டாவில் விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமான் கோவில் (காரைக்கால்) | 59 - 75 |
| 6. | இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் கோவில் | 76 - 80 |
| 7. | விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வரர் கோவில் (சிவன் கோவில்) | 81 - 84 |
| 8. | இணுவில் கண்ணகா பரமேஸ்வரி ஆலயமும் தர்மசாஸ்தா குருகுலமும் | 85 - 87 |
| 9. | இணுவில் பரமானந்தவல்லி அம்மன் கோவில் | 88 - 94 |
| 10. | இணுவில் மாணிக்கவைரவர் பத்திரகாளி அம்மன் கோவில் | 95 - 97 |
| 11. | இணுவில் பல்லப்பை வைரவர் கோவில் | 98 - 102 |
| 12. | இணுவில் இராமநாதேஸ்வரன் பரமேஸ்வரன் கோவில் | 103 - 104 |
| 13. | இணுவில் நடுவிளாத்தி வைரவர் கோவில் | 105 - 107 |
| 14. | இணுவில் நரசிங்கவைரவர் ஆலயம் | 108 - 110 |
| 15. | இணுவில் வட்டுவினி விநாயகர் ஆலயம் | 111 |
| 16. | இணுவில் ஸ்ரீகௌரிஅம்பாள் ஆலயம் | 112 - 114 |
| 17. | இணுவில் அரசோளை கப்பனைப் பிள்ளையார் ஆலயம் | 115 - 116 |
| 18. | இணுவில் கொட்டம்பனை வைரவர் கோவில் | 117 - 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 19. | இணுவில் இளந்தாரி கோவில் | 121 - 124 |
| 20. | இணுவில் அண்ணமார்கோவில் - வேணுகோபாலர் ஆலயம் | 125 - 126 |
| 21. | இணுவில் சுந்தர ஆஞ்சநேயர் கோவில் | 127 - 134 |
| 22. | அந்தணப்பெரியார்கள் | 135 - 146 |
| 23. | இணுவில் பெரியசந்நியாசியார் | 147 - 162 |
| 24. | இணுவை தந்த தவயோகி | 163 - 170 |
| 25. | தவத்திரு இணுவில் சச்சிதானந்த சுவாமிகள் | 171 - 176 |
| 26. | இணுவில் சின்னத்தம்பிப்புலவர் | 177 - 178 |
| 27. | அம்பலவாணர் சுவாமியார் (காரைக்கால் சாமியார்) | 179 - 183 |
| 28. | அன்னை அருள்வாக்குரைக்கும் சாத்திரம்மா | 184 - 187 |
| 29. | இணுவில் திருவூரில் வந்து நடமாடிய அருளாளர்கள் | 188 - 192 |
| 30. | வேலாயுதர் சந்நியாசியார், ஆறுமுகம் சந்நியாசியார், சண்முகம் சுவாமியார், கணபதிப்பிள்ளைச் சுவாமியார், வை.தியாகராசாச்சாமியார், செல்லையாச் சுவாமியார், சங்கரலிங்கம் சுவாமியர், வேலுப்பிள்ளைச் சுவாமியார், பரமர்சுவாமியார், பண்ணிசைச் செல்வர் கா.சிவக்கொழுந்து, சு.குமாரசுவாமி, பெரியதம்பி கந்தையா, சோதிலிங்கச் சுவாமியார். | 193 - 201 |
| 31. | இணுவைத் திருவூரை அலங்கரித்து வாழ்ந்த பெரியார்கள் | 202 - 229 |
| 32. | இணுவைத் திருவூரை அலங்கரிக்க வாழ்கின்ற பெரியார்கள் | 230 - 272 |
| 33. | இணுவில் சைவத்திருநெறிக்கழகம் | 273 - 277 |
| 34. | இணுவில் இளந்தொண்டர்சபை | 278 - 280 |
| 35. | திருநெறிய தமிழ்மறைக்கழகம் | 281 - 283 |
| 36. | இந்துமகாசபை | 284 - 285 |
| 37. | இணுவில் இந்து இளைஞர் பேரவை | 286 - 287 |
| 38. | பக்திவளர்க்கும் பரமானந்தக்களம் | 288 - 296 |
| 39. | சிவகாமி அன்னதானசபை | 297 - 299 |
| 40. | இணுவில் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம் | 300 - 304 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 41. | இணுவில் கலைமரபும் கல்விமரபும் | 305 - 312 |
| 42. | இணுவில் சைவம்பேணிய திண்ணைப் பள்ளிகள் | 313 - 314 |
| 43. | யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடம் | 315 - 318 |
| 44. | இணுவில் இந்துக் கல்லூரி | 319 - 320 |
| 45. | இராமநாதன் கல்லூரி | 321 - 322 |
| 46. | இணுவில் மத்திய கல்லூரி | 323 - 326 |
| 47. | மருதனார்மடம் இறையியற் கல்லூரி | 327 - 329 |
| 48. | கல்வி, சமயம், சமூகப்பணியில் வரலாறு படைத்த பெண்கள் | 330 - 335 |
| 49. | இணுவில் மத்திய நூலகம் | 336 - 349 |
| 50. | இணுவில் தனியார் கல்வி நிறுவனங்கள் | 350 - 351 |
| 51. | இணுவில் கலை இலக்கிய வட்டம் | 352 - 353 |
| 52. | முத்தமிழ்க்கலைஞர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் | 354 - 356 |
| 53. | லயஞானகுபேரபூபதி வி.தெட்சணாமூர்த்தி | 357 - 358 |
| 54. | கலைஞர்கள் (பலர்) | 359 - 366 |
| 55. | ஈழத்து நாடக வரலாற்றிலே இணுவிலின் ஆரம்பகாலப் பங்களிப்பு | 367 - 373 |
| 56. | சீரிணுவைத் திருவூரின் நாடக / நடன வரலாற்றில் பிற்காலப் பங்களிப்பு | 374 - 376 |
| 57. | மேடைக்கூத்து - குரங்காட்டம் | 377 - 380 |
| 58. | கோமாதா எங்கள் குலமாதா | 381 - 382 |
| 59. | தெய்வீகத்தில் ஊறிய இம்மண்ணின் விவசாயக்களம் | 383 - 386 |
| 60. | இணுவில் தொழில்வளமும் இதர சேவைகளும் | 387 - 393 |
| 61. | சீரிணுவைத் திருவூரின் அச்சுக்கலையின் வளர்ச்சி | 394 - 396 |
| 62. | சீரிணுவையில் ஆரோக்கியம் | 397 - 400 |
| 63. | இணுவில் செல்லப்பா வைத்தியசாலை | 401 - 406 |
| 64. | சீரிணுவையில் சமூகநலன் பேணும் நிறுவனங்கள் | 407 - 410 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 65. | இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் | 411 - 413 |
| 66. | வாழ்வகம் (விழிப்புலனற்றோர் நிலையம்) | 414 - 417 |
| 67. | வில்லியம் மேதர் மெமோறியல் பெண்கள் நிலையம் | 418 - 419 |
| 68. | இணுவில் நம்பிக்கை இல்லம் | 420 - 422 |
| 69 | காரைக்கால் மயானம் | 423 - 426 |
| 70. | பூவோடை மயானம் | 427 - 428 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

ஆணைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

அன்பே உருவான அன்னை சிவகாமி அம்பாளின் அருளுடன், இணுவிலின் நாற்றிசைகளிலும் நிறைந்திருக்கும் கருணையுள்ள தெய்வங்களின் அருள்வளம் சுரக்க, ஆன்மீகச் சிந்தனையை ஏற்றுப் பணிபுரியும் இணுவில் சைவத் திருநெறிக்கழகம் தனது ஆறாவது ஆண்டு நிறைவில் 05.01.2003 அன்று "அறநெறிக் களஞ்சியம்" எனும் ஆன்மீகம் தழுவிய அரியநூலை வெளியிட்டது. இந்நூல் பல அறிஞர் களால் ஆசீர்வதிக்கப்பட்டதுடன் சிறந்த பாராட்டையும் பெற்றுத் தந்ததில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

"அறநெறிக்களஞ்சியம்" என்ற நூலின் கனதியை அறிந்த இவ்வூர்ச் சமயப் பிரமுகர்களும், இணுவிலைத் தாயகமாகக் கொண்டு, வெளிநாடுகளில் வசிக்கும் பல பெரியார்களும்; இணுவில் கிராமத்தின் கோயில்கள், கலைகள், பண்டைய மக்களின் பக்திநெறி, அவர்களை வழிநடாத்திய சித்தர்கள், அருளாளர்கள், கல்விமான்கள், ஆகியோரின் சிறப்பு என்பனவற்றை உள்ளடக்கிய நூல் ஒன்றை வெளியிடுமாறு அன்போடு கேட்டுக்கொண்டனர்.

இவ்வாறான நூல் ஒன்றை வெளியிடுதல் பற்றி; எமது சைவத் திருநெறிக்கழகத்தைத் தனது அன்பார்ந்த ஆலோசனையால் நல்லபடி இயங்க வைக்கும் பெரியாரும், எமது "அறநெறிக்களஞ்சியம்" நூலின் தொகுப்பாளருமான செஞ்சொற்செல்வர் - சிவநெறித்தவமகன், ஆறு.திருமுருகன் அவர்களிடம் எடுத்துரைத்தோம். அவர் நன்கு சிந்தித்தபின் "இணுவில் கிராமத்தின் பாரம்பரியங்களை நோக்கினால் இது சொல்லில் அடங்காத காவியமாகும். இம்முயற்சி பலவகையாலும் எவருக்கும் நன்மை பயக்கக்கூடிய விடயம். சிறந்த முறையில் இப் பணியை முன்னெடுங்கள். தகுந்த முறையில் ஒப்பீடு செய்து சிறப்பாக அமைய நீங்கள் சேகரிக்கும் விடயங்களைத் தொகுத்துத் தருகின்றேன் என்று கூறி எம்மை உற்சாகப்படுத்தினார். இணுவில் சைவத் திருநெறிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தினதும், கழகத்தால் நடாத்தப்படும் இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலையினதும் ஏழாவது ஆண்டு நிறைவையொட்டி இந்நூலை வெளியிடுவதற்குத் தீர்மானித்து இந்த நற்பணியில் இறங்கினோம். அன்னை சிவகாமி அம்பாளின் அருட்பார்வையும், கருணையும் எமக்குப் புத்தூக்கம் ஊட்டின.

இணுவிலில் மஹோற்சவம் நடைபெறுகின்ற கோயில்கள் ஆறு உள்ளன. இவற்றைவிட அலங்கார உற்சவங்கள் நடைபெறுகின்ற ஆலயங்கள் பல உள்ளன.

இணுவிலில் சித்தர்கள், தவசீலர்கள், அருளாளர்கள் பலர் வாழ்ந்தனர். இவர்களுடைய காலத்தில் நயினாதீவு முத்துச்சாமியார், யோகர் சுவாமிகள், கோண்டாவில் அம்பலவாணர் சுவாமிகள், குடைச் சாமியார் என அழைக்கப்பட்ட கந்தையா சுவாமிகள், குப்பிளான் மாணிக்கம் அம்மா போன்ற அருளாளர்கள் எமது ஊருக்கு வருகை தந்து கால்பதித்து அருளாசி தந்து எம்மண்ணைப் புனிதப்படுத்தி உள்ளனர்.

இறைதொண்டே தமது தலையாய கடனென்று வாழ்ந்த பெரியார்கள், நன்கு கற்றுத் தேர்ந்த அறிவாளர்கள், முத்தமிழ் வல்லுநர்கள், சிற்பங்கள் ஓவியங்கள் பல சமைத்த கலைஞர்கள் யாவரும் இணுவைத் திருவூருக்கு அணிசேர்த்தனர்.

இசைத்துறையிலே இணுவிலுக்குப் புகழ்சேர்த்த கலைஞர்கள், இந்தியாவின் தலைசிறந்த இசைவல்லுநர்களை இங்கு வரவழைத்து அவர்களோடு சேர்ந்து பல மேடைகளிலேறி இசையமுதத்தை இந்நாட்டிற்கு வழங்கினர். இந்தியாவிலிருந்து வருகை தந்த கலைஞர்கள் எமது கலைஞர்களின் திறமையைப் பாராட்டிச் சென்றனர். எமதூர் மக்களின் விருந்தோம்பலையும் சிறப்பாகப் பாராட்டினார்கள். இங்கு வருகை தந்து இசைவிருந்து அளித்தவர்களில் திருவாவடுதுறை இராசரத்தினம்பிள்ளை, அவர்கள். திருவெண்காடு சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள், சேக். சின்னமௌலானா அவர்கள், காரைக்குறிச்சி அருணாசலம் அவர்கள், ஏ.கே.சி.நடராசா (கிளாரினட் இசைவல்லுநர்), மதுரைச் சோமசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள், சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள், பக்தி இசைக் கலைஞர்களான கே.பி.சுந்தராம்பாள் அவர்கள், பித்துக்குளி முருகதாஸ் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

ஆன்மீக இலக்கிய - இசைப் பிரசங்கத்தின் இமயமெனத் திகழ்ந்த திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்கள் இங்கு பலமுறை வருகை தந்து அநேக நாட்கள் தங்கியிருந்து பிரசங்கங்கள் செய்து எம்மூரவரிடம் இயற்கையாகவே இருந்த சமய அறிவுடன் மேலும் அறிவு பெருகச் செய்தார். இவ்வூரில் வாழ்வோரில் பலர் விவசாயிகள். நம்மூர் முன்னோர்கள்

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

எனத் திருமூலர் திருமந்திரவாக்குப்படி, சிறந்த பக்தியுடன் தினமும் மலர்பறித்து இட்டு இறைவனை வணங்குவர். ஒவ்வொருவரும் தாம் வளர்க்கும் பசுக்களுக்கு நிறைவாகப் பசும்புல் கொடுத்து, பசு வழங்கும் பால், தயிர், நெய்யைக் கோயிலுக்கும் கொடுத்து, தாமும் அனுபவித்து, விருந்தினர்க்கும் கொடுத்து இன்னுரை பேசி மகிழ்ந்திருந் தார்கள்.

நம் முன்னோரதும், எமதும் சமய, சமூக நற்சிந்தனைகளையும், எம்மூரின் முத்தமிழ்ப் பெருமையையும், கலாசாரச் சிறப்பையும் உணர்ந்து பிற்சந்ததியினர் இவ்வூரின் நற்பண்புகளையும் சீரிய பாரம்பரியங்களையும் பேணிக்காப்பதற்கு முன்வரவேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கமையப் பிஞ்சுநெஞ்சங்களில், ஆன்மீகச் சிந்தனைகளை, அறநெறிச் சிந்தனைகளை, கலாசாரப் பற்றுதலை எல்லாம் பசுமரத்தாணியாக ஏற்றுவதற்குக் கல்விச் சாலைகள், அறநெறிப் பாடசாலைகள், ஆலய நிர்வாகங்கள் என்பனவும், கல்விமான்களும் பூரண ஒத்துழைப்பை நல்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிக்கல்வி பயிலும் நஞ்சுறையா நெஞ்சுப் பிஞ்சுகள் நல்லொழுக்கம், சமயப்பற்று, கலாசாரம் பேணல், பெற்றோரை, மற்றோரை, பெரியாரை, வயோதிபரை மதித்தல் போன்ற சீரிய குணங்களால் சீரிணுவைத் திருவூரின் பெருமைகளையும், சிறப்புக் களையும் தொடர்ந்து காப்பாற்றுதல் வேண்டும்.

எமதூர்ச் சிறப்பை யாவரும் ஆசீர்வதித்துத் தாமும் இன்புற ஏற்றவழி நிற்க அன்னை சிவகாமியின் பாதம் பணிந்து இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தின் ஏழாவது ஆண்டு நிறைவில் வெளியிடும் வெளியீடான "சீரிணுவைத் திருவூர்" எனும் இம்மலரை அன்னை சிவகாமியின் திருப்பொற்பாதங்களில் காணிக்கையாக்குகின்றோம்.

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை, புவிஅடயங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

**இணுவில் சைவத்**
**திருநெறிக் கழகத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



இணுவில் கிராமம் தொன்மையானது. முத்தமிழும் சைவமும் செழித்து வளர்வது. பல கோயில்களும் சிவயோகிகளும், அருளாளரும், பலகலைகளும் மலிந்த ஊர். ஏறக்குறைய 300 ஆண்டுகளாகப் பலசீரும் மேலோங்கியதால் இவ்வூர் மக்கள் நல்ல அரிய வாழ்க்கைநெறியைப் பின்பற்றி வருகின்றனர். இம்மக்கள் அறம் பொலிந்த தருமம் சிறந்ததால் வந்தோரை வரவேற்று ஆதரித்தனர். நல்லறிஞர்களும், சிறந்த உலகப்புகழ் பெற்ற கலைஞர்களும், நெறியாளர்களும், தெய்வீகத்தைப் பொலிவித்து உள்ளனர். பெருமையைத் தேடிக்குவித்தனர். முத்தமிழையும் ஆன்மீக நெறியையும் பரப்பிய அறிஞர்கள் தோன்றினர்.

விஞ்ஞான ஆர்வம் புயல்வேகத்தில் வீசிச் சகல பழைமை களையும் நிராகரிக்கும் நிலையும் வரத்தொடங்குகிறது. இன்றைய நிலையையாவது பதிவுசெய்து எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துக்காட்ட ஆவணங்களும் இல்லை. பழைய நிலையை உதறி எறிய விடாது சிறிது சிந்தித்துச் செயலாற்ற வைக்க வேண்டும். இச் சிந்தனை எழுந்து எமது கிராமத்தைச் சேர்ந்த வெளிநாடுகளில் வசிக்கும் நன்மக்கள் சிலர் இணுவையூரின் சிறப்பை நூல் வடிவில் காண விரும்பினர். ஆயினும் செயல்படுத்த எவரும் முன்வரவில்லை.

இணுவில் சைவத்திருநெறிக் கழகம் தனது ஆதரவில் இயங்கும் சிவகாமி அறநெறிப்பாடசாலையின் ஆறாவது ஆண்டு நிறைவுவிழாவில் "அறநெறிக்களஞ்சியம்" என்னும் நூலை 2003 ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியிட்டது. இந்நூலைக் கழகத்தின் அனுசரணையாளரும் இம்மண்ணின் மைந்தருமான ஆறு.திருமுருகன் அவர்கள் தொகுத்துப் பெருமையடையச் செய்தார். இதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு வியந்தவர்களிற் சிலரும் இணுவிலின் கோயில்கள், கலைகள் ஆகியவற்றில் ஆர்வமுடையவர்கள் பலரும் எம்மிடம் அணுகி இவற்றை எழுதி ஆவணப்படுத்தித் தக்கோர் மூலம் நிறைவேற்றித்தரும்படி கோரினர். இவர்களது கோரிக்கையின் மதிப்பை உணர்ந்து பலரை அணுகியபோது இக்காரியம் கடினமானது எனக்கூறி மறுத்தனர்.

எவரும் இப்பணிக்கு முன்வராமைக்குரிய காரணம் இந்த அவசரமான உலகில் அவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட வேலைப் பளுதான் என அறிந்தோம். இக்கோரிக்கையையிட்டு வாடிய நிலையில் அன்னை சிவகாமி அம்பாளிடம் பிரார்த்தித்தோம். ஒரு நாள் மாலைநேரப் பூசையின்போது அன்னையிடம் கவலையை வெளியிட்டோம். அன்னையின் திருவுளப்படி அயலில் நின்ற இருவர் தமது உரையாடலின்போது "எண்ணித் துணிக கருமம்" என்ற சொற்கள் ஒலித்தன. இதையே திருவாக்காக உணர்ந்தோம். இது விடயம் பற்றி எங்கள் கழக அனுசரணையாளர் ஆறு.திருமுருகன் அவர்களிடம் கூறியபோது அவர் எம்மை உற்சாகப்படுத்தித் தாமும் வேண்டிய உதவிகள் தருவதாகக் கூறினார். அன்னையின் பெயரால் அவருக்கு நன்றி உரித்தாகட்டும்.

தொடர்ந்து முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம், பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், இ.க.கந்தசாமி (தமிழவேள்), கோண்டாவில் செல்லப்பா நடராசா, பேராசிரியர் சபா.ஜெயராசா, கு.சண்முகநாதன் (அதிபர்) மற்றும் பல அறிஞர்களிடம் ஆலோசனை கோரியபோது அவர்கள் தாம் வேண்டிய உதவிபுரிவதாகவும் கூறி உற்சாகப்படுத்தியது மட்டுமன்றி இவ்வாக்கத்திற்குப் பூரணமான செயல் வடிவமும் தந்தனர். அவர்கள் அனைவருக்கும் அன்னையின் அருள் கிடைக்கும்.

இணுவில் சைவத்திருநெறிக் கழகம் நடாத்தும் சிவகாமி அறநெறிப் பாடசாலையில் வளர்ச்சியே பொது நோக்காகக் கொண்ட அடியேனைப் பல சக்திகளும் செயற்படவைத்தன. போதிய கல்வியறிவற்றவன். நூலுருவாக்கம் பற்றி ஏதும் அனுபவம் இல்லாதவன். இப்பாரிய பொறுப்பை ஏற்றவனுக்கு அன்னை உதவுகிறாள். குறைகுற்றம் வரலாம். இம்மலரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கும் கண்ணியம் வாய்ந்த நீங்கள் குற்றம் நீக்கி, இதில் குணங்கள் இருந்தால் அவற்றை அனுபவிக்கும்படியும் முதற்கண் அன்னை சிவகாமியின் பெயரால் வேண்டுகின்றேன்.

இம்மலரின் பல ஆக்கங்களைத் தமது தள்ளாத வயதிலும் எழுதி வழங்கியதோடு புன்முறுவலுடன் ஆசியும் வழங்கி யாவரும் இன்புற வேண்டுமெனத் தூய சிந்தனையோடு செயலாற்றிய எழுத்தறிவித்த கலாபூஷணம் வை.க.சிற்றம்பலம் அவர்கள் தெய்வங்களை முன்னிறுத்தி வழங்கியுள்ளார். இந்த மலரில் வெளிவரும் சிறப்பான செய்திகளுக்காக அன்னை சிவகாமி அவருக்குச் சகல பாக்கியங்களையும் வழங்க வேண்டுமென்று கூறி நன்றியைத் தெரிவிக்கிறேன்.

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களிடம் ஆலோசித்த போது ஓய்வுபெற்றும் தமிழ்ப்பணி அவரை விட்டு விலகாததால் முன் கூறியபடி பல ஆரிய ஆக்கங்களைத் தந்ததுடன் எல்லா வற்றையும் முதலில் இலக்கணப் பிழைகள் திருத்தியும் இரு முறை ஒப்புநோக்கியும் மலர் அமைய வேண்டிய மதிநுட்பங்களைக் கூறியும் உதவினார். இவர் தமது மரபுப்படி பல வகையான உதவிகளைச் செய்ததுடன் நல்வாழ்த்தும் தெரிவித்தார். அவருக்கு அன்னை சிவகாமியின் அருள்கிடைக்கட்டும் என்று வேண்டி நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

இணுவையூரின் சிறப்பைத் தமிழர் வாழுமிடமெல்லாஞ் சென்று பிரகாசிக்க வைத்து இனிமையும் அன்பும் பண்பும் நிறைந்த சமயச் சொற்பொழிவால் சைவத்தமிழ் உலகினைத் தம்பால் ஈர்த்த செஞ்சொற்செல்வர் இம்மலைரை நெறிப்படுத்தி உதவினார். இவர் கிடைக்கும் தமது புகழைத் தெய்வங்களுக்குக் காணிக்கையாக்குகிறார். இம்மலருக்கேற்ற "சீரிணுவைத் திருவூர்" என்ற நாமத்தைச் சூட்டிப் பெருமையுடன் வெளியிட மதிப்புரை யையும் ஆசியுரையையும் தமது ஆழ்ந்த இதயத்திலிருந்து வரைந்துள்ளார்.

இம்மலருக்கு வேண்டிய ஆக்கங்களைத் தந்துதவியவர்கள், ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள், அணிந்துரை மற்றும் நூலில் அமைந்துள்ளவற்றை ஓர் கணிப்பீடாக மதிப்பீட்டுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனங்கள் தந்த யாவருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். இம்மலர் நல்ல முறையில் வெளிவரவேண்டிய சகல அமைப்புகளையும் கணனி அச்சுப்பொறி மூலம் சிறப்படையச் செய்த சண்சைன் கிரபிக்ஸ் நிறுவனத்தாருக்கும் குறிப்பாக கணனியில் இம்மலரை வடிவமைத்த திரு.வே.செந்தில்வேல் அவர்களுக்கும், மலரின் முகப்பு அட்டையை வடிவமைத்த திரு.தி.கேசவன், கா.சதீஸ்காந் ஆகியோருக்கும், அச்சிட்ட யோகநாதன் கிரபிக்ஸ் உரிமையாளர் யோ.சுதந்திரன் சகோதரர்களுக்கும், இம் மலருக்குத் தேவையான புகைப்படங்களைத் தந்துதவிய புகைப்படப்பிடிப்பாளர்கள் திரு.ச.பிரதீபன், ஸ்கை போட்டோ உரிமையாளர் திரு.சி.சிவசத்தியநாதன் (தம்பி) ஆகியோருக்கும் நன்றிகள் உரித்தாகுக.

இணுவில் சைவத்திருநெறிக்கழகம் தனது ஆதரவில் இயங்கும் அறநெறிப்பாடசாலையின் ஏழாவது ஆண்டு நிறைவில் "சீரிணுவைத் திருவூர்" என்னும் அரிய நூலை வெளியிட்டுப் பாடசாலையின் வளர்ச்சியில் போதிய கவனம் எடுப்பதனைத் தனது கடைக்கண் பார்வையால் பார்த்துக் கருணை புரியும் அன்னை சிவகாமி அம்பாளுக்கும் இணுவிலில் உறைந்துள்ள எல்லா மூர்த்திகளுக்கும் இம்மலரைச் சமர்ப்பிப்பதில் என் பணியை நிறைவு செய்கிறேன்.

"சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா
லவனருளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பணியான்"

- மணிவாசகர் -

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

உங்கள் அனைவரதும்
தாள் பணியும்
மு.சிவலிங்கம்
சிவகாமி அறநெறிப்பாடசாலைப்
பொறுப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் தம் உயிரென மதிக்கும் மாண்புடைய மக்கள் வாழும் திருப்பதி இணுவில். இத் திருப்பதியின் சிறப்பினை வரலாற்று ஆவணமாக்கும் நோக்கில் உருவாக்கியுள்ள "சீரிணுவைத்திருவூர்" என்னும் இந்நூலுக்கு ஆசி வழங்குவதில் ஆனந்தமடைகிறோம். புனிதமான திருக் கோயில்கள். புனிதமகான்கள் அவதரித்த புண்ணிய பூமி இணுவில். கலைஞானம், கலைஞர் பெருமக்கள் வாழும் வித்தகத் திருவூர் இணுவில். இவ்வூரில் வாழ்ந்த தொண்டர்கள் பெருங் கல்விமான்கள், வைத்தியர்கள், கலைஞர்கள், கொடை வள்ளல்கள் அனைவரையும் இந்நூல் ஞாபகமூட்டுவது சிறப்பு அம்சமாகும். காலத்தின் தேவை கருதி இப் பணியில் ஈடுபட்டுள்ள இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தின் சீரிய பணியினை வாழ்த்த வேண்டியது எல்லோரதும் கடமையாகும். இறையருளால் இப்பணி சிறக்கவும் இணுவைத் திருவூர் மேலும் சிறப்புற்று மிளிரவும் இறைஞ்சி நல்லாசி வழங்கி அமைகின்றோம்.

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய
சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் ஆசிச்செய்தி

சைவமும் தமிழ்நெறியும் தழைத்தோங்கும் புண்ணிய பூமி இணுவில். இறைபக்திக்கு முதன்மை கொடுக்கின்ற இனிய பண்பாளர்கள் நிறைந்த இணுவில் கிராமத்தை யான் நன்கு அறிவேன். இணுவில் கிராமத்தில் நடைபெற்ற விழாக்களில் கலந்துகொண்டு உரையாற்றுகின்ற பேறு என் வாழ்வில் பலதடவை பெற்றேன். அறிவுநிறைந்த கொள்கைச் சான்றோர்கள் காலத்துக்குக்காலம் இவ்வூரில் தோன்றி நற் கருமங்கள் ஆற்றியுள்ளார்கள். கலைஞர் பெருமக்கள் இவ்வூரில் தோன்றி எம்தேசத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். இவர்களை எல்லாம் நாம் நன்றியோடு நினைவுகூரக் கடமைப் பட்டுள்ளோம். அவ்வகையில் இணுவில் கிராமத்தின் சிறப்பினை ஆவணப்படுத்துவதற்கு இணுவில் சைவத் திருநெறிக்கழகம் முனைந்திருப்பது வரவேற்கத்தக்கது. இம்மலர் பயன்தக்க மலராக விளங்க எல்லாம்வல்ல அன்னை துர்க்கை அம்பாளை வேண்டி வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுலம்
அதிபர்,
" சிவாகமஞான பாஸ்கரன்"
சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்.

T.MAHADEVAKURUKKAL,
DHARMASASTA KURUKULAM,
INUVIL, CHUNNAKAM.
T.P: 021 222 2660.

ஸ்ரீ கண்ணகாபரமேஸ்வரி தேவ்யாலயம்,
இணுவில்,
சுன்னாகம்.
திகதி: 15.03.2004

# ஆசிச்செய்தி

இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தின் ஆதரவில் இயங்கும் சிவகாமி அறநெறிப்பாடசாலை தனது ஏழாவது ஆண்டு நிறைவில் "சீரிணுவைத்திருவூர்" என்னும் நூலை வெளியிடத் தீர்மானித்திருப்பதை அறிந்து மிகச் சந்தோஷம் அடைகின்றோம்.

இணுவை நாமத்தின் முன் "சீர்" என்னும் சிறப்பு அடைமொழியும் ஊர் எனும் நாமத்தின் முன் "திரு" என்னும் அடைமொழியும் கொண்டு நூலின் பெயரே இணுவிலின் சிறப்பைப் பறைசாற்றுகின்றது. இணுவில் கிராமம் பல ஆலயங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு கிராமம். இங்கு வசந்த காலத்தில் ஏதோவொரு ஆலயத்தில் மஹோற்சவம் நடந்துகொண்டேயிருக்கும். ஆலயத்தில் சேவை செய்யும் அந்தணர்கள், இன்னிசைக் கலைஞர்கள், பூமாலை தொடுப்பவர்கள் நிறைந்த நிறைவான ஊர் இணுவையம்பதியாகும். அதேபோல் சமயப்பற்றுமிக்க சைவ அபிமானிகளை நிரம்பக்கொண்டு பிரகாசிப்பதும் இதுவேயாகும். ஆலயங்களில் பூஜைகள் செய்விக்க எவரும் பின்னிற்பதில்லை. சமயத்தை வளர்க்கும் பலவிதமான கைங்கரியங்கள் இணுவில் கிராமத்தின் பலபாகங்களிலும் நடந்து வருவதை நாம் அவதானிக்கலாம். சிவகாமி அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாளர் திரு.மு.சிவலிங்கம் எடுத்திருக்கும் இம்முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது. நமது வருங்காலச் சந்ததியினர் நமது கிராமத்தில் வாழ்ந்த, வாழ்ந்துகொண்டிருக்கின்ற சித்தர்கள், அருளாளர்கள், தமிழறிஞர்கள், கலைஞர்கள், சிவாச்சாரியார்கள் என்பவர்களைப் பற்றிய சிறப்புக்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பை உருவாக்கியிருக்கும் திரு.மு.சிவலிங்கம் அவர்களும் பலவகையிலும் உதவிய செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களும் சிறப்பாக வாழவும், இந்நூல் சிறப்பாக அமையவும் இறைவன் துணைநிற்க ஆசீர்வதிக்கின்றேன்.

சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் J.P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் சிவகாமி அம்மன் கோயில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சாம்பசிவசோமசபேசக் குருக்கள் வழங்கும்

# ஆசிச்செய்தி

எல்லாம்வல்ல சிவகாமி அம்பாளின் திருவருளால் கோவில் வாசலில் அமைந்து சிறப்புடன் செயலாற்றும் இணுவில் சைவத் திருநெறிக்கழகம் வழிப்படுத்தும் சிவகாமி அறநெறிப்பாடசாலை கடந்த ஏழு வருடகாலமாகச் சமய நெறியை ஊட்டிவருவது யாவரும் அறிந்ததே. இந்த அறநெறிப்பாடசாலையில் சமயக்கல்வி, பண்ணிசை போதிப்பதுடன் சமயச் சொற்பொழிவுகள், சமயவிழாக்கள் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. இப்பாடசாலை வளர்ச்சியை மேலும் விரிவுபடுத்த எண்ணித் தமது கழகத்தின் பெருமுயற்சியாக இணுவில் கிராமத்தில் உள்ள எல்லாக் கோவில்கள், அந்தணப் பெருமக்கள், வாழ்ந்த சித்தர்கள், அருளாளர்கள், கல்வியறிவினால் சிறப்பித்த பெரியோர்கள், கலைஞர்கள், கல்விச்சாலைகள் போன்ற சகல வளங்களையும் உள்ளடக்கிய "சீரிணுவைத்திருவூர்" என்னும் நூலை வெளியிடுகின்றனர். இந்த மலர் இக்கிராமத்தின் சிறப்புகளை எதிர்காலத்தவர் அறிந்து பின்பற்றவும், இக்கிராமத்தின் நற்பண்பு, வாழக்கை நெறி, கலை யாவற்றையும் தொடர்ந்து பேணவும் ஏதுவாகலாம். இச்சிறப்பான நூலை இவர்கள் வெளியிடத் தூண்டிய அன்னை சிவகாமி மேன்மேலும் பல சிறப்புக்களையும் அருளவேண்டி நாம் அனைவரும் வணங்குவோமாக.

சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களின் ஆசிச்செய்தி



இணுவில் திருவூர் இறையருள் நிறைந்த பெருவூர். கல்வியாலும் செல்வத்தாலும் குறை யில்லாப் பெரும்பதி. இவ்வரலாற்றுப் பதியின் சிறப் பினை அனைவரும் அறியும் பொருட்டு ஆவணப் படுத்தப் பெரியார் உயர்திரு மூ.சிவலிங்கம் அவர்கள் பலகாலமாக எடுத்த முயற்சி இன்று பயனாகியுள்ளது. எமது கிராமத்தில் உள்ள ஆலயங்கள், எமது கிராமத்தை வாழ்வித்த அறிஞர்கள், கலைவளர்த்த கலைஞர் பெருமக்கள், நிறுவனங்கள், இன்றும் புகழோடு வாழும் சான்றோர்கள் அனைவரது சிறப்பினையும் ஒன்றாகத் தொகுத்து இந்நூல் தோற்றம் பெற்றுள்ளது. வரலாறுகளைத் தொகுப்பது என்பது மிகவும் கடினமான பணி. கற்பனைப் படைப்புக்ககளைப் படைப்பது கற்பனையாளரின் சிந்தையில் எழுவது. ஆனால் வரலாற்றை ஆவணப்படுத்தி நூலாக்குதல் என்பது கடினமான பணியாகும். ஆதாரபூர்வமான தகவல்களைச் சேகரித்து மிக நிதானமாகத் தொகுக்க வேண்டியுள்ளது வரலாற்றுநூல், வயதிலே மூத்த அனுபவமானவர்களைச் சந்தித்துத் தகவல்களைத் திரட்ட வேண்டும். அவ்வகையில் இந்நூலை வெளியிடும் ஸ்ரீமான் மூ.சிவலிங்கம் ஐயா அவர்கள் பலருடன் தொடர்புகொண்டு மிகவும் நிதானமாக இந்நூலைத் தொகுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வரலாற்று நூல்களில் தவறுகள் ஏற்பட இடமுண்டு. அவற்றினைச் சுட்டிக்காட்டுகின்ற போது மறுபதிப்புச் செய்யப்படுகின்ற வேளை அவற்றினைக் கருத்திற்கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்நூல் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட புலம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழ்பவர்களுக்குப் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. காரணம் தம் பிள்ளைகளுக்கு தங்கள் குலதெய்வம் பற்றி, கற்ற பாடசாலை பற்றி விளக்க விரும்புபவர்களுக்கு இந்நூல் பெரிதும் துணையாக அமையும். இந்நூல் ஆக்கப் பணிக்கு உழைத்த அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறி நிறைவு செய்கிறேன்.

செஞ்சொற்செல்வர்
ஆறு.திருமுருகன்
உப அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெக்ஸ் தொலைநகல் Fax : 2554803
දුරකථන தொலைபேசி Telephone
අමාත්‍ය அமைச்சர் Minister 2554801 2554802
ලේකම් செயலாளர் Secretary 2554804
සාමාන්‍ය பொது General 2552641

හින්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍යාංශය
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு
MINISTRY OF HINDU RELIGIOUS AFFAIRS

248, 2/1, ගාලු පාර, කොළඹ-04.
248, 2/1, காலி வீதி, கொழும்பு-04.
248, 2/1, Galle Road, Colombo-04.

මගේ අංකය எனது இல. My No. } ......................
ඔබේ අංකය உமது இல. Your No. } ......................
දිනය திகதி Date } 15.03.2004

# சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் விடுக்கும் வாழ்த்துச் செய்தி



சிவபூமியாகிய இலங்கையில் ஞானபூமியாகத் திகழும் கிராமம் இணுவில்பதி ஆகும். பிற சமயப் பிடிக்குள் அகப்படாது இன்றுவரை சிவமணம் கமழும் தனித் தமிழ் சைவக் கிராமமாக இணுவில் திகழ் வதையிட்டு நாம் அனைவரும் பெருமை அடை கிறோம். இக்கிராமத்திலே அறிஞர்கள், அருளாளர்கள், சித்தபுருஷர்கள், சித்தவைத்தியர்கள், தமிழ்ப் பண்டிதர்கள், சைவசித்தாந்த அறிஞர்கள், ஓதுவார்கள் எனப் பலதரப்பட்டவர்களும் வாழ்ந்து வந்தார்கள். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதுதான் முதுமொழி ஆகும். ஆனால் "கோயில் இல்லாக் குறிச்சியில் குடியிருக்க வேண்டாம்" என்ற வாக்கினை உறுதிப்படுத்துவது போல இணுவில் கிராமம் முழுவதும் இருபத்தியொரு கோயில்கள் இருந்து அருளாட்சி செய்துவருகின்றன.

ஒரு தேசத்தின் இதயம் கிராமங்களிலேதான் உள்ளது என்பதே பாரத நாட்டின் தேசபிதா மகாத்மாகாந்தி அவர்களின் கருத்தும் ஆகும். தர்மத்தைப் பேணி அறநெறி பிசகாது மனித விழுமியங்களை மதித்து வாழ்வோர் கிராமங்களிலேதான் வாழ்கிறார்கள். இன்று மனித சமுதாயத்தில் பலர் நன்றாக நடிக்கப் பழகி உள்ளார்கள். அவர்களுடைய வாக்கிற்கும் வாழ்விற்குமிடையே பாரிய இடைவெளி காணப்படுகின்றது. நகரங்களிலும் நகரமயமாகும் கிராமங்களிலும் வாழ்பவர்களில் பலர் இன்று நடிப்புச் சுதேசிகளாகவே மாறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார்கள். மனித உறவுகளைக்கூட வியாபார பாசையிலேதான் வைத்துக் கொள்ள முயல்கிறார்கள். பணத்தாலும் பதவிகளாலும் யாரையும் விலைக்கு வாங்கலாம் என நினைக்கிறார்கள். ஆனால் கிராமத்து மக்களிடம் இத்தகைய நடிப்புகள் இல்லை. அவர்கள் தெய்வ நம்பிக்கை உடையவர்களாக இருப்பதால் தர்மத்திற்கு மாறானவற்றைச் செய்யக் கூசுகிறார்கள்.

"தர்மத்தைக் காத்தவனை அது காக்கும் கொன்றவனை அது கொல்லும்" என்றே இந்துதர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. தர்மத்தின் வலிமையை அடுத்த சந்ததியினருக்குத் தெளிவாக உணர்த்திவைக்க வேண்டும் என்ற பெருவிருப்போடு அறநெறிப்பாடசாலைகள் நமது நாட்டில் செயற்பட்டு வருகின்றன.

அகிலாண்டேஸ்வரியாக அன்னை பராசக்தியாக நின்று அருள்பாலிக்கும் சிவகாமி அம்பாள் அறநெறிப் பாடசாலையின் ஏழாவது ஆண்டு நிறைவையொட்டிச் "சீரிணுவைத் திருவூர்" என்னும் அரிய நூலினை அது வெளியிடுவதையிட்டுப் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இணுவில் சைவத் திருநெறிக்கழகத்தின் சீரிய இப்பணியினை இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன்.

சிவ.மகாலிங்கம்

சிவ.மகாலிங்கம்

உதவிப் பணிப்பாளர்

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு.

Siva. Mahalingam
ASST. DIRECTOR
Ministry of Hindu Relig... ...
REGIONAL ... E
DISTRICT SEC... ...AT
JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே. - (திருமூலர்)

# தமிழ்க்காவலர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி விடுக்கும் வாழ்த்துச் செய்தி

முன்னாளில் இணுவில் ஊர் நிலவளமும், நீர்வளமும் உள்ளதாகப் பெரும் சீரும்சிறப்பும் பெறும் பேரூராக விளங்கியது. சோழப்பேரரசுப் படைத் தலைவன் கருணாகரத்தொண்டமான் பாதுகாப்புக்காக இங்கு தங்கியிருந்த பெருமை இவ்வூருக்கு உண்டு. தமிழகத்திலிருந்து வந்த காலிங்கராயன் என்னும் அரசன் இவ்வூரிலிருந்து ஆட்சிசெய்த பெருமையும் இவ்வூருக்கு உண்டு. முத்தமிழ்ப் புலமையும் சைவப்பற்றும் மிக்கவர்களாக மக்கள் விளங்கினர். அருள்மிகு ஆலயங்கள் அமைந்து இவ்வூரை வளம்படுத்தின. சித்தர்களும் அறிஞர்களும் கலைஞர்களும் பலர் இங்கு வாழ்ந்து புகழ்பரப்பினர். சிவகாமி அன்னை இந்நாட்டில் அருளாட்சி செய்வதாக அருளாளர்கள் தெரிவித்துள்ளனர். பண்டைத்தமிழர் வழியில் கைலாயநாதன் வழிபாடு இங்கு நிலைபெற்று விளங்குகிறது.

இத்துணைப் பெருமைகளை அனைவரும் அறியும் வண்ணம் பயன்தரு கட்டுரைகள் உள்ளதாகச் "சீரிணுவைத் திருவூர்" என்னும் நூல் சிவகாமி அறநெறிக்கல்விநிலைய ஏழாவது ஆண்டு நிறைவு குறித்து வெளிவருவது பெரிதும் பாராட்டுதற்குரியது. இந்நூல் உருவாவதற்கு உழைத்த இணுவில் சைவத் திருநெறிக்கழகப் பொருளாளர், முன்னாள் கிராம உத்தியோகத்தர் திரு.மூ.சிவலிங்கம் அவர்களும், சிவநெறித் தவமகன் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களும், இந்நூலை வெளியிடும் சைவத்திருநெறிக்கழகத்தினரும் தமிழுலகின் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

தங்கள் அனைவருக்கும் அருள்மிகு சிவகாமி அன்னையின் அருள் என்றும் உரியதாகும்.

உருத்திரா மாவத்தை,
கொழும்பு - 06.

தமிழவேள் இ.க.கந்தசுவாமி
ஓய்வுபெற்ற ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலாளர் சிவகுருநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் பெருமைமிக்க கிராமங்களில் ஒன்று இணுவில். இணை இல்லாத கிராமம் என்ற பெயரே இணுவில் எனத் திரிபடைந்து வந்ததாகப் பகர்வோரும் உண்டு.

அறநெறி வளர்க்கும் பள்ளிக்கூடங்களும், அருள்நெறி வளர்க்கும் ஆலயங்களும் இலங்க இயற்கை அழகுடன் திகழும் இவ்வூரின் மாண்பு இதனைச் சார்ந்தோருக்குப் பெருமை சேர்ப்பதாகவே உள்ளது.

எம்முன்னோர் எமக்களித்த அருஞ்செல்வமான நற்பண்புகளும் வாழ்க்கை நெறிமுறைகளும் கேள்விக்குறியாகிவிடுமோ என அச்சம் வெளியிடப்படும் வேளையிது. இப்பொருத்தமான தறுவாயில் தூய தமிழும் சமய முறைகளும் தொடர்ச்சியாகப் பேணப்பட வேண்டியவை என்ற சமூகக்கடப்பாட்டுடன் இணுவில் சைவத்திருநெறிக்கழகமும் சிவகாமி அறநெறிப்பாடசாலையும் இணைந்து வெளியிடும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கக் கிடைத்த வாய்ப்பினையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வாழ்க இணுவையின் பெருமை
வளர்க சைவமும் தமிழும்

**சிவகுருநாதன் திருவாகரன்**
பிரதேச செயலாளர்
வலிகாமம் தெற்குப் பிரதேசம்,
உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவை மக்கள் ஐக்கிய ஒன்றியம் பெரிய பிரித்தானியா.
THE UNITED SOCIETY OF INUVIL - Gt. BRITAIN.
www.inuvil.co.uk
inuvil@inuvil.co.uk

*President*
18, Millais Garden,
Edgware, Middx
HA8 5SY
020 8951 5042

*Secretary*
30, Hazel Garden,
Edgware, Middx
HA8 0PB
020 8958 8883

*Treasurer*
5-7, Fox Hill North,
Watford, Herts
WD24 6RX
019 2322 5259

## இணுவை மக்கள் ஐக்கிய ஒன்றியத் தலைவர் விடுக்கும் வாழ்த்துச் செய்தி

இணுவையுறை அனைத்துத் தெய்வங்களின் அருளாட்சி மலரச் "சீரிணுவைத்திருவூர்" என்னும் மலரை இணுவில் சைவத திருநெறிக்கழகம் வெளியிடுவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைவதோடு எம்மிணுவை மண்ணின் இந்து, கலை, கலாசார கல்விப் பாரம்பரியங் களையும் அவற்றிற்கு உறுதுணையாய் இருந்த ஆசான்களையும், போற்றி வெளிவருவதால் எம் வருங்காலச் சந்ததியினர் எம்மிணுவை மண்ணைப் பற்றிய வரலாற்றுப் பதிவுகளை அறிவதற்குப் பெருந் துணையாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தோடு இது போன்ற பல ஆக்கங்கள் வெளிவரவேண்டும். வெளிநாடுகளில் வாழும் எம்மிணுவை உறவுகள் அதற்கு உதவி செய்ய வேண்டும் என்பதைத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்வதுடன் இம்மலரை உருவாக்கிய ஆசானுக்கும் அவருக்கு உதவிபுரிந்த மலர்க்குழு அங்கத்தவர்களுக்கும் எமது ஒன்றிய சார்பிலும் லண்டன் வாழ் இணுவை மக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்து இவர்கள் பணி தொடர வாழ்த்தி அன்புடன் விடைபெறுகிறேன்.

என்றும் அன்பின்

**ஆ.க.விவேகானந்தன்**

தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார உத்தியோகத்தர் சத்தியவாணி சுகுணன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தின் ஆதரவில் இயங்கும் சிவகாமி அறநெறிப்பாடசாலை தனது ஏழாவது ஆண்டு நிறைவை ஒட்டிச் "சீரிணுவைத்திருவூர்" என்னும் அரிய நூலை வெளியிட இருப்பதையறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

சிவகாமி அறநெறிப்பாடசாலையும் சைவத்திருநெறிக்கழகமும் இணுவையம்பதியில் தெய்வீகத்தையும், கலைகளையும், சைவப் பண்பாட்டையும் வளர்ப்பதில் அரும்பணியாற்றி வருகின்ற இந்து நிறுவனங்களாகும்.

இந்நிறுவனங்கள் தொடர்ந்தும் சிறந்த இந்து நிறுவனங் களாகத் திகழ்ந்து, தம்பணியை ஆற்றிப் பொறுப்பாளர் மூ.சிவலிங்கம் அவர்களுக்குப் பக்கபலமாக உள்ள பல பெரியார் களும் தமது இவ்வரிய பணியைத் தொடரவும் இறைவனின் நல்லருள் கிட்டவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**சத்தியவாணி சுகுணன்**
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் சைவத்திருநெறிக்கழகத் தலைவர் அவர்களின் செய்தி

இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தின் பொருளாளரும், இக்கழகத்தினால் நடாத்தப்படும் சிவகாமி அறநெறிப்பாடசாலையின் பொறுப்பாளருமான ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர் மூ.சிவலிங்கம் அவர்கள் தனது சமூகசேவையில் ஒரு முத்தாய்ப்பாகத் தொகுத்துள்ள "சீரிணுவைத்திருவூர்" எனும் இந்நூலினை இணுவில் சைவத்திருநெறிக்கழகம் வெளியிடுவதில் பெருமகிழ்வடைகிறோம்.

கலாசாரச்சீரழிவு பெருகிவரும் இக்காலகட்டத்தில் வளர்ந்து வரும் சமுதாயத்துக்குச் சிறுவயது தொடக்கமே அறநெறியையும், நற்பண்புகளையும் போதிக்கவேண்டியது மிக அவசியமாகும். இதனால் இப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ள திரு.மூ.சிவலிங்கம் அவர்களால் எழுதப்பட்டும் சம்பந்தப்பட்டவர்கள் மூலம் எழுதுவித்துத் தொகுக்கப்பட்டும் உள்ள இந்நூலானது இணுவில் ஆலயங்கள் பற்றியும், இணுவிலில் வாழ்ந்த, வாழுகின்ற பெரியோர்களைப் பற்றியும் எடுத்துக் கூறுகின்றமையால் இணுவில் வாழ் மக்களுக்கும், ஆலயங்களினதும் பெரியோர்களதும் வரலாறு களை ஆராய்பவர்களுக்கும் சிறப்பாக மாணவ சமுதாயத்துக்கும் தேவையான ஒன்றாக அமைந்துள்ளது.

இந்நூலின் தொகுப்பாசிரியர் திரு.மூ.சிவலிங்கம் அவர்கள் சமய, சமூகசேவையில் அதனைத் தொடர்ந்து அர்ப்பணித்துத் தொண்டாற்றுவதற்கு எல்லாம்வல்ல சிவகாமி அம்பாள் அருள் பாலிக்க வேண்டும் என இறைஞ்சி அமைகின்றேன்.

**கெ.தவராசா**

தலைவர்

இணுவில்

சைவத்திருநெறிக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் சைவத்திருநெறிக்கழகத் செயலாளர் அவர்களின் செய்தி

இணுவில் கிராமம் பல திருக்கோயில்களைக் கொண்ட தெய்வீகம் நிறைந்த ஞானபூமியாகும். இங்கு வாழ்ந்த தவசீலர்கள், சித்தர்கள், அருளாளர்கள், அறிஞர்கள், பிற ஊர்களில் இருந்து இக்கிராமத்தின் தெய்வீக சக்தியால் ஈர்க்கப்பட்ட ஞானிகள், பெரியார்களின் நடமாட்டத்தாலும் மேலும் புனிதமடைந்துள்ளது.

இவ்வூர்ச் சிறப்பினைத் தொடர்ந்து நிலைநிறுத்துவதன் பேரில், சமய நிறுவனங்கள், அறநெறிப்பாடசாலைகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், இளைஞர் கழகங்கள், மாதர் சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், லயன்ஸ் கழகம் என்பன சிறப்பாகச் செயற்படுகின்றன. எங்கள் சைவத் திருநெறிக்கழகம் சிவகாமி அறநெறிப்பாடசாலையை நடாத்தி வருகின்றது. இப்பாடசாலை தனது ஏழாவது ஆண்டு நிறைவு கண்டு மகிழ்ச்சியடைகின்றது. எமது கழகப் பொறுப்பாளரும், அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாளரும், ஓய்வுபெற்ற கிராம அலுவலருமான திரு.மூ.சிவலிங்கம் அவர்கள் தம் அயராத முயற்சியால் "சீரிணுவைத் திருவூர்" என்ற எமது கிராமம் பற்றிய நூலினை உருவாக்கியுள்ளார். எங்கள் கழக ஆலோசகர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் மலரினை நெறிப் படுத்தி மலரவிட்டுள்ளார். இம்மலர் கூடியளவு இணுவில் கிராமம் பற்றிய விடயங்களை எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளது.


இம்மலரானது எமது கிராம மக்கள், ஏனைய பொதுமக்கள், பாடசாலை மாணவர்களுக்கும், ஏனைய பிரதேசங்கள், வெளி நாடுகளில் வசிக்கும் எமது மக்களுக்கும் பலவழிகளிலும் எமது கிராமம் பற்றிய சிறப்பினை அறிய உதவுமென நம்புகிறேன். எமது கழகத்தின் மூலம் இம்மலர் வெளிவர அன்னை சிவகாமியின் அருளாசி கிடைப்பதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றேன்.

**ந.காசிவேந்தன்**
செயலாளர்
இணுவில் சைவத்திருநெறிக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



முற்றத்து முல்லைமணம்
மூக்குணரா தென்பார்கள்!
பெற்றியரைப் பிறந்தவூர்
பெருமையுறுத்தா வழமை
பூண்ட திணுவிலன்றிப்
பொதுவாகத் தமிழினமே!
மாண்டதின வரலாறும்
எழுத்து வடிவிலில்லை!

சிந்துவெளி நாகரிகச்
சிறப்புக்கள் முதலான
முந்தைநம் சரிதம் மண
மூடிப்போய் விட்டதுயர்!
'தொன்மை பேணிடுவீர்!
சுவடிப் படுத்தும்' என்று
சொன்னஔவை சொல்லும்
சுவறாதாம் தமிழர்க்கு!

கலைப்பெருமை, கவிப்பீடு,
கல்விப் பெருமையுடன்
நிலைத்தஇறை நெறிவாழ்வால்
நெஞ்சுநிமிர் நம்மிணுவிற்
தலைவிதியும் இவ்விதியாய்த்
தலைமுறைகள் பலவாக
நிலவிவரு கின்ற இந்த
நேரத்தில், சிவகாமி
அன்னை சிலிர்த்தாள்,
அருள்கொண்டாள்! சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அடியான்மேல்
ஏறிநின் றுந்திட்டாள்!
தள்ளாத வயதினிலும்
தளராத தனியிளமை
அள்ளி வழங்கிட்டாள்!
அனைத்தினுவைப் பீடுகளும்
பொய்கலவா மெய்ம்மைப்
புனிதச் சுடர்ப்பதிவாய்,
வையகமே ஏற்கும்
வாய்மை வரலாறாய்,
பொன்னெழுத்துப் பொறிப்பாய்ப்
பூப்பிக்கச் சிவலிங்கம்
இந்நாள் வரையுந்தான்
இரவுபகல் பாராமல்
பலவீட்டுப் படலை
பலதடவை திறந்தலைந்து,
கலைஞர்கள், ஊர்ப்பழைய
கதைகள், ரசிகர்கள்,
அறிஞர்கள், மூத்தோர்
ஆவணங்கள் தருந்தகவல்
நிறையத் திரட்டிவந்து,
நீண்டபல நூற்றாண்டு
இணுவை வரலாற்றை
இயன்றவரை தொகுத்துள்ளார்!
இணையிலியாம் இவ்வூரின்
எழிலார்ந்த கோவில்களை,
பண்டிருந்து வாழ்ந்தகன்ற
பலதுறையில் வல்லவரை,
கண்முன்னே வாழுஞ்சம
காலத்து மேதைகளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்கள், இசையாளர்,
திருத்தொண்டர் கள்,சீவன்
முத்தர்கள்; தொழில்துறைகள்,
முத்தமிழார் பள்ளிகளை,
பொதுத்தொண்டு நிறுவனங்கள்
புகலிடங்கள், இயற்கைவளம்,
முதலான வற்றையெல்லாம்
முனைப்போடு கண்டறிந்தே
எம்பின்னைச் சந்ததிகள்
இணுவைப் புகழ்பேணித்
தம்போக்கை வடிவமைத்துத்
தக்கபடி வாழவைக்கும்
மேலான வேட்கையுடன்
விளக்கியுள்ளார் இந்நூலில்!

காலாதி காலங்கள்
கருத்தோடூர்க் குடிமக்கள்
உயிரினும் மேலாக
ஓம்பிவரும் பண்பாட்டின்
உயர்கூர்ப்பு விழுமியங்கள்
ஓம்புதற்காம் கடப்பாட்டை
எம்மிணுவைத் தலைமுறைகள்
இனிதறிந் தினிமேலும்
செம்மையுறப் பேணிவரச்
"சீரிணுவைத் திருவூர்" ஆம்
இச்சிறந்த நூல்உதவும்;
ஈந்துவரும் நெஞ்சுரத்தை;
நிச்சயமாய் வாழும் நிலைத்து!

இணுவில் மேற்கு,
இணுவில்.

பண்டிதர்
ச.வே.பஞ்சாட்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவைத் திருவூரின் பன்முகப் பரிமாணங்கள்



தெய்வீகத் திருத்தலங்களால், சிவநெறி தழுவிய சான்றோரால், நித்தம் இறைவனுடன் பேசும் சித்தர் பரம்பரையினரால், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்தை அண்மித்த சிவநெறித் தொண்டர்களினால், சைவமும் தமிழும் தீந்தமிழ்க் கலைகளும் வளர்த்த திருநெறிய தமிழ் மன்றங்களினால், கல்விப்பெரும் செல்வப் பெருக்கை அள்ளி வழங்கிய அருந்தமிழ்ப்புலவர் அவையினரால், கலைமரபும், இசைமரபும், புலமை மரபும் நிரம்பிய சான்றோர் திருக்கூடலினால், நவீன புலமைத்துவமும் புத்தாக்கத் தொழில்களும் நிரம்பிய பொருண்மியச் சூழலினால், தென்பொதிகைச் சந்தனமாய் மணம்வீசும் பெரும்பேறுபெற்ற பொற்கமலத்திருவூராக விளங்குவது இணுவை என்னும் அழகுப் பேரூர்.

இப் பெரும்பதியின் பன்முகச் சால்பினை விளக்கும் அடையாளங்களையும், அகல்விளக்காய் ஒளிவீசும் சான்றோர்களையும், முன்னைப் பழைமைக்கும் பின்னைப் புதுமைக்கும் முத்திரைகளாக விளங்கிப் புத்தொளி வீசிப் பிரகாசிக்கும் நிறுவனங்களையும், தொகுத்துப் பட்டியலிட்டு வரன்முறைப்படுத்தித் தருவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

பேராசிரியர்
சபா.ஜெயராசா
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சீர்னுவைத்திருவூரை அலங்கரிக்கும் ஆலயங்கள்



திருக்கோவில் இல்லாததிருவில் ஊரும் திருவெண்ணீ
றணியாத திருவில்ஊரும்
பருக்கோடிப் பக்திமையாற் பாடாஊரும் பாங்கினொடு
பலதளிகள் இல்லாஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாஊரும் விதானமும்
வெண்கொடியும் இல்லாஊரும்
அருப்போடு மலர்பறித்திட்டுண்ணா ஊரும் அவையெல்லாம்
ஊரல்ல அடவி காடே.


-திருத்தாண்டகம் -
திருநாவுக்கரசநாயனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இணுவில்
# ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் கோவில்



கரும்பும் இளநீரும் காரெள்ளும் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் – அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

- விநாயகர் புராணம் -

அணுவில் மதத்தை யடக்கியெந் நாளும்
இணுவில் இலகியெமை யாளும் குணமணி ஓம்
சீரார் பரராசசேகரப் பிள்ளையார்
பேரார் பெருமைகளைப் பேசு

- கவியோகி சுத்தானந்த பாரதியார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரார் இணுவில்வாழ் எந்தை கணபதியின்
தாரார் திருவடியைத் தாள்பணிவோர் ~ ஆரா
அமிர்தம்போல் வாழ்வர் அருட்செல்வம் சூழ்வர்
தமிழுள் ளவுந் தழைத்து.

- திருமுருக கிருபானந்த வாரியார்.

சிவபூமியாம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பெருந் தெருவின் வடக்கே நாலுகல் தொலைவில் அமைந்த திருவூராம் இணுவில் கோயில் வாசல் சந்தி எனப்படும் புனிதமான இடத்திலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் மானிப்பாய் வீதியில் இருநூறு மீற்றர் தொலைவின் தென்பால் இணுவில் கந்தசுவாமி கோயிலை அடுத்து வானுயர் கோபுரத்துடன் வனப்புமிக்க கோயிலாக அமைந்துள்ளது. இணுவில் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் கோயில்.

இலங்கையின் வடபுலத்தில் கி.பி 12 - 17 ஆம் நூற்றாண்டு காலத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளாகிய தமிழ் மன்னர்கள் அரசாண்டனர். இப்பரம்பரையில் பதினொராவது மன்னனாக அரசாண்டவன் பரராசசேகர மன்னன். இவனுடன் தம்பி செகராசசேகரனும் பின் ஆட்சிபுரிந்தானெனப் பல சான்றுகள் கூறுகின்றன.

பரராசசேகர மன்னன் பல வளங்களும் மலிந்த வனப்பு மிக்க நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டான். இவன் வீரமும், நிர்வாகத் திறமையும், மக்களிடம் அன்பும், கருணையும், ஆன்மீகச் சிந்தனையும் மிக்கவனாக இருந்ததால் ஆங்காங்கே பல விநாயகர் ஆலயங்களை அமைத்தான். பக்தி மேலீட்டினால் வீதியுலா வரும்போது பல சீரும், சிறப்பும், இயற்கை வனப்பும் கூடிய இணுவில் பகுதியும் இவனைக் கவர்ந்தது. பரராசசேகரப்பிள்ளையார் கோயிலின் கீழ்த் திசையில் இரு குளங்கள் காணப்பட்டன. தென்திசையில் செந்நெல்லும் கரும்பும் வடபகுதியில் பருத்தியும் கூடுதலாகப் பரியிடப் பட்டிருந்தன. இப்பயிர் வகைகளுடன் முக்கனி மரங்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறுமணங் கமழும் மலர்ச் செடிகொடிகளும், கமுகு, தென்னை, மூங்கில், பனை ஆகியனவும் செழித்து வளர்ந்திருந்தன. (இன்றும் குளக்கரை, பருத்தியடைப்பு என்ற பெயர்கள் எமது பேச்சு வழக்கில் பேசப்படுவது இதற்குச் சான்றாகும்.)

திருவருள் கைகூடவும் விநாயகப் பெருமானின் அமைவிடம் அரசனால் பேருவகையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டது. தெரிவு செய்த இடத்தில் பரராசசேகர மன்னனின் ஆணையில் அவனது பணியாளர்களினால் கட்டுவிக்கப்பட்டதே இவ்வாலயம். பொது மக்கள் தமது பக்திமேலீட்டினால் இறைவழிபாடு செய்யவும், இறைபணியாற்றவும் துதிபாடவும் தலைப்பட்டனர். ஆலயம் பூசகர்களால் ஆகமவிதிப்படி பூசைகள் செய்து அருள் பொலிவிக்கப்பட்டது. பரராசசேகரனால் கட்டப்பட்டதால் இவ் ஆலயம் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் என வழங்கப்பட்டுள்ளது. பரராசசேகரமன்னன் கோயில் அமைத்ததுடன் தனது மந்திரி, பிரதானிகளுடன் அடிக்கடி வந்து வணங்கினானெனச் சான்றுகள் கூறுகின்றன. மன்னன் பிரதானிகளுடன் இங்கு வந்து வணங்கியதால் பெருமையடைந்த மக்கள் அதனைக் குறிக்கக் கோயிலின் உள்வீதியில் ஓவியமாக வரைந்துள்ளமை இதற்குச் சான்றாகும். சிங்கைப் பரராசசேகரன் கி.பி 1475 ஆம் ஆண்டளவில் ஆட்சிக்கு வந்தவனெனவும் இக்கோயிலைக் கட்டுவித்தானெனவும் அறியமுடிகிறது. ஏறக்குறைய 525 ஆண்டுகள் தொன்மை வாய்ந்ததும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான இவ்வாலயம் பலராலும் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கோயில் அமைக்கப்பட்டதும் மூலமூர்த்தியாக அமைந்துள்ள விநாயகப் பெருமானின் திருவுருவச்சிலை தென்னிந்திய சிற்ப வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்டு இங்கு எடுத்துவந்து பிரதிஷ்டை செய்யப்பட்டதென்று கூறுவர். சிறந்த அருட்பொலிவோடு அமைந்த திருமுகத்தைக் கொண்ட இத் திருவுருவம் இப்பதியில் அருட்பார்வை செலுத்துகிறது. அக் காலந்தொட்டு கர்ப்பக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்த மூல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியைப் பக்தியோடு மஞ்சணமாட்டி உள்ளன்போடு மக்கள் வழிபட்டனர். மக்களின் அளவற்ற பக்தியால் மகிழ்ந்த எம்பெருமான் அருள்மாரி பொழிகின்றார்.

இப்பெருந்தலத்தில் ஒரு பெரிய மடம் இருந்தது. கோயிலுக்கு வரும் அடியார்கள் இளைப்பாறவும், தமது நேர்த்திக்கான பொங்கல் போன்ற கடமைகளைச் செய்யவுமே மடம் அமைந்தது. பொதுமக்களின் இறைவழிபாட்டிற்கு இந்த மடம் பெரிய பங்காற்றியது. 17 ஆம் நூற்றாண்டின் மத்தியில் யாழ்ப்பாண மண் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டபோது இந்து சமயக் கோயில்கள் யாவும் இடித்துச் சேதமாக்கப்பட்டன. பரராசசேகரப்பிள்ளையார் கோயிலை இடிக்க வந்த அணியினருக்கு இவ்வூர் மக்கள் இது கோயிலன்று மடம் என்று கூறியதால் கோயில் காப்பாற்றப்பட்டது. இப்போது மாலையில் உள்வீதியுலா வரும் சிறிய விநாயகர் உருவச்சிலையை மடத்தின் வாசலில் மறைத்துப் புதைத்து வைத்தனர். கோயிலும் முற்றாக இடிக்கப்படாது காப்பாற்றப்பட்டது என முன்னோர் கூறிவந்தனர்.

போர்த்துக்கேய, ஒல்லாந்த நாடுகளின் அரசாட்சியின் பின் யாழ்ப்பாணத்தை அரசாண்ட ஆங்கிலேயரின் காலத்தில் சமய அழிப்பு கடினமாகக் கையாளப்படாததால் இவ்வூரின் சமய வழிபாடும் நெறிமுறையும் சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கின.

பெரிய சந்நியாசியார் அவதரித்துச் சமயமரபு பேணியதால் இணுவில் கந்தசுவாமி கோயில், காரைக்கால் சிவன் கோயில் ஆகியன அந்நியராட்சியின் அநியாயத்தில் அழிவுற்றும் புத்துயிர் பெற்றுத் திருப்பணிகள் ஆரம்பித்தன. இப்பகுதியைச் சேர்ந்த பரராசசேகரப்பிள்ளையார் கோயிலை இடையறாது வணங்கிய அடியார்களும் தமது குலதெய்வத்தின் திருப்பணியைத் தொடர முற்பட்டனர்.

இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் ஆலயம் முன்னர் சுண்ணச்சாந்துக் கட்டடமாக இருந்ததனால் கோவில் விக்கிரகங்களை ஆகமவிதிப்படி சிறுகுடிசையில் பாலஸ்தாபனஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த பின் இக்குடிசையிலேயே இறைவனை வழிபட்டனர். கற்கோயிலாகக் கட்டவே எண்ணினர். நிதிநிலையும் வலுவின்றியே இருந்தது. ஊரிலுள்ளோர் கோயில் வழிபாடு செய்வதற்காகச் சென்றால் கோயில் பூசைகள் ஒழுங்கீனமாகக் காணப்பட்டன. இவ்வாலயத்தைச் சூழவுள்ள நற்சிந்தனையுடைய இருவர் அக்காலச் சிவாச்சாரியாராகிய சிவஸ்ரீ சி.சதாசிவக் குருக்களை அணுகி நேரக்கிரமப்படி விநாயகரின் பூசையை நடாத்தும்படி விநயமாகக் கேட்டனர். அப்போது குருக்கள் "மக்காள் ஒருரூபா கொடுத்து ஒரு அர்ச்சனை செய்ய முன்வர எவரும் இல்லாத நிலையில் எப்படிப் பூசைசெய்வது. நாங்களும் சீவிக்க முடியாத வறியநிலையிலேயே இருக்கிறோம். நீங்கள் பூசைக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து தந்தால் பூசை செய்யலாம்" என்றார். இந்த அவலநிலையை உணர்ந்த அடியவர் இருவரும் அயலிலுள்ள வேறு சிலருடன் ஆலோசனை நடத்தியதன் பயனாகக் கோயில் கிரமமாகப் பூசை செய்யவெனக் கூறி வீடுவீடாகச் சென்று பிடியரிசி எடுக்கத் தீர்மானித்தனர். இறைசிந்தனையுடன் சிவாச்சாரியாரிடஞ் சென்றபோது அவரின் வாக்கைத் தேவவாக்காகக் கருதினர். வேண்டுவார் வேண்டுவற்றை வாரிவழங்கும் வள்ளல்பிரான் தனது ஆலயம் சிறப்படைவதற்குக் குருக்களின் மூலமாகத் தன் அடியார்களைத் துணிந்து செயற்பட வைக்க எண்ணினார் போலும். அடியார்கள் வீடுவீடாகச் சென்று அன்றாடம் சமையல் செய்யும் அரிசியில் ஒரு பிடி அரிசி சேமித்துத் தரும்படி கேட்டிருந்தனர். இயற்கையாகவே இறைபக்தி மிகுந்த இல்லத்தரசிகள் பரராசசேகரப்பிள்ளையாரை உள்ளன்போடு வணங்கித் தமது அன்றாட சமையலுக்காக உலையிலிடும் அரிசியில் ஒரு கைப்பிடி அரிசி எடுத்து வைப்பர். இவ்வாறு நாளாந்தம் சேமிக்கப்படும் அரிசியைப் பிடியரிசி சேகரிக்கும் அடியார்கள் முறைப்படி எடுத்து வந்தனர். ஒரு மாதத்தில் 40 கொத்து அரிசி கிடைத்தது. யாவருக்கும் மனநிறைவு. இந்த அரிசியில் ஆலயக் குருக்களிடம் பூசைக்கென இருபது கொத்து அரிசியைப் பயபக்தியுடன் கொடுத்து ஆனந்தமடைந்தனர். சிவாச்சாரியாரும் அடியார்களின் செயற்றிறனை மெச்சி வாழ்த்தினார். மிகுதி இருபது கொத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசியை நாலு பேரறிய விற்றுத் திருப்பணி நிதிக்காகப் பெருநிதி சேகரிப்பவரிடம் வழங்கவும் சிறுதுளி பெரு வெள்ளமாவதைப் போல திருப்பணி நிதி பெருகியது. இறைவனின் பூசையும் கிரமமாக நடைபெற்றது. நித்தியபூசை நடைபெற நிதி நெருக்கடியை நீக்கும் வண்ணம் கோயில் வடக்கு வீதியில் அடியார்களின் பேருதவியால் ஒரு கடை அமைக்கப்பட்டு கூட்டுறவுப் பண்டகசாலைக்கு வாடகைக்குக் கொடுத்து வரும் பணம் பூசைச் செலவை நிறைவுசெய்ய உதவியது.

முன்னொரு காலத்தில் எல்லாம் வல்லவன் நானே என்று கர்வமுற்ற ஜனகமகாராசனின் செருக்கையடக்க எண்ணிய விநாயகப் பெருமான் குஷ்டரோகியான யாரும் வெறுக்கக்கூடிய கோலத்தில் அரசனிடம் சென்று பசிதீர்க்கும்படி கேட்டபோது அவனும் ஏவலாளரிடம் அலட்சியமாகவே உணவு கொடுக்கும்படி கூறினான். ஏவலாளர் கொடுத்த அரண்மனையிலுள்ள சமைத்த, சமைக்காத சகலவற்றையும் சாப்பிட்டும் பசியெனக் கூறி அரசனைத் தடுமாற வைத்து மமதை அடக்கிவிட்டுப் பசித்தவர் போல அந்த நகர் வீதிவழியே சென்றார். நேரே திரிசுரன் என்னும் ஏழைப் பிராமணர் வீடு சென்று தனது பசியைப் போக்கும்படி கூறினார். இதேசமயம் மனைவி விரோசனை என்பவர் பணிவிடை செய்யவும் மறையவர் விநாயகப் பெருமானுக்கு பூசை செய்து கொண்டிருந்தார். உணவு கோரி வந்த வேடதாரியிடம் சென்று அவரை வணங்கி உபசரித்த பின் தமது வறிய நிலையில் தானியங்கள் ஏதுமில்லையென்றும் விநாயகப் பெருமானுக்கு பூசைக்குதவிய அறுகம்புல்லில் எஞ்சிய ஒரு அறுகம்புல்லை மட்டும் தட்டில் வைத்துக்கொண்டு வந்து தமது நிலையில் இதுதான் கிடைத்தது என்று ஏற்றுக்கொள்ளுமாறு உள்ளத் தூய்மையுடன் பணிவாக வழங்கினார். வேதியர் கொடுத்த அறுகம்புல்லை வாயில் போட்டு மென்று விழுங்கியதும் இறைவனது பசி அடங்கியது. பக்தர்களின் அன்புக்கு அடக்கமான எம்பெருமானின் பசியடங்கியது. தமது சொந்த உருவத்தில் விநாயகப் பெருமான் காட்சி கொடுத்து மறையவரின் பக்தியை மெச்சி இருவருக்கும் நல்லாசி கொடுத்ததுடன் முத்திக்கும் வழிகாட்டி மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைக் கண்ட களிப்பில் இருந்த தம்பதியரின் குடிசை மாடமாளிகையானது. பற்பல செல்வங்களும் எங்கும் பல்கிப்பெருகின. உளத்தூய்மையுடன் தமது வறிய நிலையிலும் ஒருபிடியரிசியுடன் தமது கறைபடியாத தூய உள்ளத்தையும் கொடுத்த அடியார்களின் வீடுகள் யாவும் சிறப்படைந்தன. விவசாயிகளின் பயிர்கள் செழிப்புற்றன. விளைச்சல் பெருகியது. கைத்தொழில் விருத்தியடைந்தது. வர்த்தகம் ஓங்கியது. கலைமகளும் அலை மகளும் குடிகொண்டனர். கல்வி மேம்பட்டது. அரச, அரச சார்பற்ற தனியார் நிறுவனங்களில் உயர்பதவிகள் மக்களுக்குக் கிடைத்தன. ஆலைகளும் தொழிற் சாலைகளும் மலிந்தன. வேலையற்ற சோம்பேறியென எவருமில்லை. யாவரும் மிகச் சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் செயற்பட்டனர். மக்களின் புனிதமான பக்திக்கும் பெரு முயற்சிக்கும் இறைவன் இவர்களை வாழவைக்க எண்ணினார். இவ்விடத்தில் இறைவனுக்கெனச் சிறிதாகக் கிள்ளிக் கொடுத்தவர்களுக்கெல்லாம் அள்ளிக் கொடுத்த வள்ளல் விநாயகப்பெருமான். கோயிலில் மட்டுமல்ல எல்லா வீடுகளிலும் திருவுலாவினால் தெய்வப்பொலிவை ஏற்படுத்தியவர் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டுப் பணச் செருக்கை மட்டும் கொடுக்கவில்லை.

பரராசசேகரப்பிள்ளையாரது கருணையால் வீட்டில் பெண்கள் பிடியரிசி கொடுத்தனர். தொழிலாளர் தமது நாளாந்தம் செய்யும் சுருட்டுக்கூலியில் பத்துச் சுருட்டுக் கொண்ட ஒரு கட்டின் கூலி அரைச் சதத்தை கோயில் திருப்பணிக்கென ஒதுக்கி வைத்தனர். இவ்வாறு சேரும் பல தொழிலாளரின் கூலிப் பணமாக மாதம் கூடிய தொகை சேருமிடத்து கட்டட வேலைகளுக்கென உரியவரிடம் சேர்க்கப்படும். இதர தொழில் செய்வோர், வர்த்தகப் பிரமுகர்கள், அரச பணியாளரெனப் பேதமின்றி வழங்கிய பெருநிதி பலவாறு பெருகியது. ஏழையின் அரைச்சதம் முதல் தனவந்தரின் லட்சரூபா வரை தத்தமது இயல்புக்கேற்றபடி உள்ளன்போடு வழங்கியதால் பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டு பத்து வருடங்களில் சிறந்த பொழிகல்லினால் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டப வேலைகள் யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவு கண்டது. கும்பாபிஷேகம் செய்யவேண்டிய காலம் கிட்டியது. அடியார்கள் இருபகுதியாக இருந்து தாம் தாமே நிர்வாக அந்தஸ்தடைய விரும்பினர்.

விநாயகப் பெருமான் தந்தையிடமிருந்த மாம்பழத்தைத் தானே வாங்கவேண்டிய விருப்பால் தந்தையும் தாயும் தான் முழு உலகமும் என்ற தத்துவப்பொருள் உணர்ந்து இருவரையும் வலம்வந்து மாம்பழத்தைப் பெற குறுக்கு வழி கண்டார். இதேபோல யாவரையும் ஒரே அணியாகச் சேர்ப்பதன் பேரில் சமாதானம் அமைதி காணும் நோக்குடன் ஒரு சிலருக்கு யோசனை வரச்செய்து இரவோடிரவாக மிக அமைதியாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. மறுநாட்காலை இதனையறிந்த சிலர் அபிப்பிராய பேதம் கொண்டபோது மேலும் சில சமரசவாதிகள் தகுந்த நீதியான விளக்கங்களைக் கூற முற்பட்டனர். ஆண்டவன் சந்நிதியில் எல்லோரும் சமம் என்றும் இக்கோயிலில் யாரும் சிறப்பான பணிகள் செய்யும்போது எல்லோரும் பூரண ஆதரவு வழங்குவது, நிர்வாக அமைப்போ, குழுநிலையோ, சபையோ தேவையில்லையென்ற சமரச முடிவுக்கு யாவரும் சம்மதித்து இறைவனை வாயாரப் புகழ்ந்து பாடிப் பலவாறு வழிபட்டனர். யாவும் பரராசசேகரனின் செயலன்றோ.

முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்று முடிந்த பின்னரும் தொடர்ந்து திருப்பணி நிதி சேர்ந்தது. சிறந்த ஒழுக்கமும் கறை படியாத உள்ளமும் இச்சொத்து சிவச்சொத்து என விளங்கி, இச்சொத்திற்குத் தாமும் பங்களித்து முன்னேற்றப் பாதையில் செல்லும் ஒரு சில அடியார்களிடம் திருப்பணி நிதி சேர அவர்களும் அப்பணத்தைச் சேமிப்பாக வங்கியிலிட்டனர். அவரிடம் நம்பிக்கை மிகுந்தோர் தேவைக்கு மிஞ்சிய நிதியினை வாரிவழங்கினர். பலரின் ஆலோசனையின் பேரில் கோயில் வசந்தமண்டபத்தைப் புதுப்பித்தனர். மேலும் பல திருத்தங்கள் ஏற்படவும் புதுப்புது அமைப்புக்கள் தோன்றவும் எம்பெருமான் கருணைகூர்ந்தார். முதலாவது கும்பாபிஷேகத்தின் பின் 1961, 1972, 1984, 1997 ஆம் ஆண்டுகளில் கும்பாபிஷேகங்கள் சிறப்பாகப் பல அடியார்களின் பேருதவிகளுடன் நிறைவுகண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்கு முன்பே பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டு ஆக்கவேலைகள் பெரும் பகுதி நிறைவுபெற்றிருந்தன. 1995 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31.10.1995 அன்று வலிகாமம் பகுதியைச் சேர்ந்த அனைவரும் இரவோடிரவாக யுத்தநெருக்கடி காரணமாக இடம்பெயர நேரிட்டது. எம்மக்கள் வடமராட்சி, தென்மராட்சி, வன்னி போன்ற பல திசைகளுக்கும் சென்றடைய நேர்ந்தது. ஏறக்குறைய மூன்று மாதத்துக்குள் இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற இருந்தது. பிரதம சிவாச்சாரியார் இப்பிள்ளையார் மீது அளவற்ற பயபக்தி மிகுந்தவர். பூசைக்குரிய பணிகள் அவ்வப்போது நடைபெறவில்லையே என மனம்வருந்தி எம்பெருமானைச் சிந்தையில் வைத்துப் பூசித்தார். தமது பக்தி மேலீட்டினால் முகச்சவரஞ் செய்யாது கட்டாந்தரையில் படுத்துறங்கிக் கடும் விரதம் அனுஷ்டித்தார். இறைவன் திருவருளால் நாம் 1996 ஆம் ஆண்டு சித்திரை மாதம் சொந்த இடங்களில் மீண்டும் குடியமரும் வாய்ப்புக் கிடைத்தது. விநாயகப் பெருமானின் அடியார்கள் யாவரும் தத்தமது பணிகளுடன் கோயில் திருப் பணிகளையும் சுறுசுறுப்புடன் நிறைவேற்றத் தொடங்கினர். கும்பாபிஷேகத்திற்கான நிதியை இவ்வூர்ப் பொதுமக்களும் விநாயகரருளால் வெளிநாடுகளில் வதியும் இவ்வூர் அன்பர்களும் தாராளமாக வழங்கினர். இக்கும்பாபிஷேகத்தைச் சிறப்பிப்பதன் பேரில் ஆலயத்தில் உள்ளும் புறமும் பல புதிய சந்நிதிகளும், அலங்கரிப்புக்களும் புதுப்புது வர்ணப்பூச்சு வேலைகளும், சலவைக் கற்களால் நிலவேலையும் சிறப்பாக அமைக்கப்பட்டன. விநாயகப் பெருமானின் திருவிளையாடல்களை உள்வீதிச் சுவரில் வர்ண ஓவியங்களாக அமைத்தும் மனநிறைவு கண்டனர்.

1997 ஆம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் நடைபெற இருந்த அன்று யுத்தகால நெருக்கடி காரணமாக மக்கள் வெளியில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டபோதும் ஏற்கனவே 33 ஓமகுண்டம் அமைத்து ஆகமவிதிப்படி கிரியைகள் யாவும் நிறைவேறியிருந்ததால் பிள்ளையார் துணையை நம்பி அடியார்கள் நிகழ்ச்சிகளை அமைதியாகவும் மனச்சாந்தமாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் துணிந்தனர். வழமையாக இக் கும்பாபிஷேகத்தையொட்டி இணுவில் மருதனார்மடம் பல்லப்பை வைரவர் ஆலயத்திலிருந்து 108 காவடிகள் பக்தர்களினால் எடுத்துவரப்படுவது சிறப்புடையது. ஆனால் பீதி காரணமாக அயலிலுள்ள இணுவில் கந்தசுவாமி கோயிலிலிருந்து 108 காவடிகள் கும்பாபிஷேக நேர்த்தியாக எடுத்துவரப்பட்டன. ஏனைய கும்பாபிஷேக வேலைகள் யாவும் சிறப்பாக நடைபெற்றன. அன்றிரவு எம்பெருமான் வீதியுலாவும் இனிது நடைபெற்றது. விழாக்களைச் சிறப்பிக்க பிரபல தவில், நாதஸ்வர மேதைகள் தமது கலையை அர்ப்பணித்தனர். தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகங்களும் வெகுசிறப்பாக நடைபெற்று இறுதிநாள் அதிஅற்புதமாகியது. இத்தினம் 10008 சங்குகள் பூசிக்கப்பட்டு அதிசிறந்த சங்காபிஷேகம் நடைபெற்றது. 1008 இளநீருடனும் 108 குடம் பாலுடனும் இதர கும்பாபிஷேகத் திரவியங்களுடனும் அபிஷேகத்தில் சிறப்பிடம் பெற்றன. பல மணிநேரம் எடுத்த கும்பாபிஷேகத்தையொட்டிய அந்தணர்களின் வாழ்த்துக்களும் சிறந்த சொற்பொழிவுகளும் இசை நிகழ்வுகளும் விழாவைச் சிறப்பித்தன.

பரராசசேகரப்பிள்ளையாரின் மீளா அடியார்கள் பலரின் வேண்டுகோளுக்கமைய அடியார்களின் பொதுநிதியமும் அநேக அடியார்களினால் மனமுவந்தளிக்கப்பட்ட பஞ்சலோக வகைகளும் ஆலயவாசலில் இதற்கென உருவாக்கப்பட்ட உருக்கும் உலையில் இட்டு பக்திபூர்வமாக ஸ்தபதியால் ஒரு குறித்த நன்னாளில் பஞ்சமுக விநாயகர் சிலையும் வார்க்கப் பட்டுள்ளது. ஆகமவிதிப்படி உரிய காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பஞ்சமுக விநாயகப் பெருமான் அதிவிசேட விழாக்களில் வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருட் காட்சியளிப்பார்.

## பூசைகள் விழாக்கள்

சின்னையாக் குருக்கள் பரம்பரையில் அமைந்த அந்தண சிரேஷ்டர்கள் தொடர்ந்து பூசை வழிபாட்டுப் பணியை நிறைவேற்றினர். இவர்களின் வரிசையில் தற்போதைய பிரதம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவாகிய சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்களும் உதவியாக இவரது புத்திரர்கள் சிவஸ்ரீ அரவிந்தக்குருக்களும், பிரசன்னாசர்மா ஆகியோரும் சிறப்பாகப் பணியாற்றுகின்றனர். நித்திய பூசையாகக் காலை 6.30 மணிக்கு முதற்பூசை இறைவனின் ஆலயமணி ஓம் என்று ஒலிக்கவும் பக்தர்கள் வந்து பூசையில் பங்குபற்றி பரவசமடையும்படி நிகழும். எக்காரியம் செய்யப் புகினும் காலை விநாயகர் வழிபாடு செய்தே தமது காலையுணவு, தொழில் யாவற்றையும் அடியார்கள் கைக் கொள்வர். காலைப்பூசைக்கு வருவோர் யாவரையும் இங்கு தெய்வீக ஒளிவீசி மெய்சிலிர்க்க வைக்கிறது.

காலை 7.30 மணியளவில் விநாயகப்பெருமானின் மகா மண்டபத்தில் ஓமக்கிடங்கில் நித்தியாக்கினி மூட்டி இதர சேவைகளையும் செய்து 8 மணிக்கு காலைச்சாந்தி பூசை இடம்பெறும். மதியகாலப் பூசை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 5.30 மணியளவில் சாயரட்சைப் பூசை நடைபெறும். இப்பூசையின் போது தினமும் மங்கலவாத்தியம் ஒலிக்கப் பூசைகள் நிறைவு பெற்றதும் பிள்ளையார் உள்வீதியுலா வந்து பக்தர்களுக்குக் காட்சிகொடுப்பார். இவ் வீதியுலா வரும் விநாயகர் சிலை ஐந்நூறு வருடங்களுக்கு முந்தியது. அந்நியராட்சியில் பாதுகாப்புக் கருதி மடத்துவாசலில் மண்ணுள் மறைத்துவைக்கப்பட்ட (ஐம்பொன்னாலானது) இவ் விக்கிரகம் பழமையும் புதுமையும் கொண்டது. மாலை 6.30 மணிக்கு அர்த்தசாமப் பூசையுடன் நாளாந்தப் பணிகள் நிறைவு பெறும்.

## தேர் மற்றும் ஊர்திகள்

விநாயகப் பெருமானின் பக்திமேலிட்ட தேர்த்திருவிழா உபயகாரரின் பெருமுயற்சியால் பஞ்சமுக விநாயகப் பெருமான் வீதியுலா வருவதற்கான ஒரு சித்திரத்தேர் உபயகாரரின் ஏனைய குடும்ப உறுப்பினரும் உதவிசெய்து உருவாக்கப்பட்டு தேர்த்திருவிழாவில் வீதியுலாவந்து சிறப்பிக்கிறது. 1966 ஆம் ஆண்டு இத்தேர் உருவானது. முருகப்பெருமானுக்கொரு தேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1975 ஆம் ஆண்டு), சண்டேசுவரருக்கு ஒரு தேரும் (1976 ஆம் ஆண்டு) விநாயகர் அடியார்களினால் தனி உபயமாக வழங்கப்பட்டது. மூன்று தேரும் தேர்த்திருவிழாவின் போது பவனிவருவது சிறப்பாகும்.

இரண்டாம் திருவிழா உபயகாரர்களின் சொந்த (குடும்ப) உறவினரின் முயற்சியால் 1982 ஆம் ஆண்டு சிறப்பான கைலாய வாகனம் உருவாக்கப்பட்டது. சிறந்த சித்திர வேலைப்பாட்டுடன் கவர்ச்சிகரமாகப் பவனி வருவது அடியார்களின் பெரும்பேறு எனலாம்.

ஆறாம் திருவிழா உபயகாரர் தமது சொந்தத் திருப்பணியாக ஓர் சித்திரத்திருமஞ்சத்தை உருவாக்கி உதவினார். இத்திருமஞ்சம் தைப்பூசத்திருவிழாவிலும் பவனி வருவது சிறப்பானதாகும். ஒன்பதாந் திருவிழா உபயகாரரும் தமது சப்பறத் திருவிழாவின் போது ஒரு அழகிய திருச் சப்பறத்தைத் தமது குடும்ப உபயமாக அமைத்துள்ளனர். அது வருடா வருடம் அழகாகப் பவனி வருகிறது. இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட எலி வாகனம் திருத்தஞ்செய்யப்பட்டு உரிய காலத்தில் வர்ணம் பூசப்பட்டு மிகக் கவர்ச்சியாகக் காணப் படுகிறது. மேலும் ஒரு வெள்ளியினாலான எலி வாகனம் உட்பட 23 வாகனங்களும் விநாயகர் பக்தர்களினால் உபயஞ் செய்யப்பட்டவை. இவை யாவும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. விநாயகர் கதை முடிவு தினத்தில் கஜமுகாசுரன் போர் நடைபெறுவதற்கான கஜமுகாசூரன் ஒன்றும் அடியார்களின் உபயமாகச் செய்விக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

## வருடாந்த மஹோற்சவம்

இணுவில் ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் வைகாசி மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்தில் கொடியேற்றத் திருவிழாவும், பதினொராந் திருவிழாவன்று புனர்பூச நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையாகவே கோயில்களில் மஹோற்சவம் தொடங்கும் போது சமயப் பற்றுக்காரணமாக ஒவ்வொரு கோயிலையும் சார்ந்த பாலகர் முதல் பாட்டன், பாட்டிகள் வரை மஹோற்சவம் தொடங்கும் நாட்களை எண்ணித் தம்மை எவ்வாறு அர்ப்பணிக்கலாம் என்ற பேருவகையில் மிதப்பார்கள். அவர்கள் கோயிலின் உள்ளும் புறமும் கூட்டிப் பெருக்கி வேண்டிய இடங்களில் சிறந்த அலங்காரங்களும் செய்யத் தவறுவதில்லை. தண்ணீர்ப் பந்தல்களும், வெளிவீதிகளில் நாற்புறமும் எல்லை மானப் பந்தல்களும் உற்சாகத்துடன் வைக்கப்பட்டு அயலிலுள்ள எல்லா வீடுகளிலுமுள்ள கிணறுகளும் கலக்கி இறைத்துச் சுத்தப் படுத்தப்படும். முழுக் கிராமமுமே விழாக் கோலம் பூண்டிருக்கும். இயற்கையான அழகுடன் மேலதிகமான வாழை, தோரணங்களாலும் அலங்கார மின்விளக்குகளாலும் ஆலயத்தை அலங்கரிப்பர். புனிதமும் தெய்வீகமும் நிறைந்த பிரதேசமாகக் காணப்படும் சகலவிதமான கைங்கரியங்களிலும் இக் கிராமத்திலுள்ள சகல அடியார்களின் சார்பில் இளைஞர்களே முன்வந்து பணியாற்றுவர். இவ்வாலயத்தைச் சூழவுள்ளவர்களும் வெளியிடங்களில் வேலை செய்பவர்களும் மஹோற்சவ காலத்தில் இங்குவந்து தொண்டாற்றி இறைவனின் திருப்பணிக்கும் அரும்பணியாற்றுவது சிறப்பம்சமாகும். விசேட அபிசேகங்களின் பின் கொடியேற்ற வைபவம் தொடரும். கொடியேற்றத்தில் ஆகமவிதிகளுக்கமைய அந்தணப் பெருமக்களின் மறையொலியும், கலைஞர்களின் தவில், நாதஸ்வர ஓசையும், பக்தர்களின் பண்ணிசையொலியும், அடியார்களின் ஆரவார ஒலியும், இறைவனின் தெய்வீக ஒளியும் மிகக் கோலாகலமாகக் காணப்படும். பகல் திருவிழாக்கள் நண்பகலுடன் நிறைவுபெறும். சிறுவர் முதல் முதியோர் வரை புனிதமாக விரதமிருந்து இறைவன் திருவடியை வணங்கி நடைபெறும் விழாக்களில் பங்குபற்றியே வீடுசெல்வர். இரவு உற்சவம் மாலை வேளைப் பூசையினைத் தொடர்ந்து சுவாமி உள்வீதியுலா வந்து யாக பூசையும் நிறைவு கண்டதும் கணபதியும், கந்தனும் விசேட ஊர்திகளில் வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பர். இது கண்கொள்ளக் காட்சியாகும். இவ்வாலயத்தில் சுவாமி காவுதல் போன்ற பல தொண்டுகளும் இளைஞர்களின் பங்களிப்பாகும். வெளிவீதியுலாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலவாத்தியங்கள் பிரபல கலைஞர்களால் நிகழ்த்தப்படும். விசேட விழாக்களில் பஜனை பாடும் அடியார்கள் சிறியோர் முதல் முதியோர் வரை மஹோற்சவ காலத்தில் அனுபவமும் முதிர்ச்சியும் மிகுந்த பண்ணிசை பாடுவோரின் வழிகாட்டலில் யாவரையும் பரவசப்படுத்தும் அருட்பாக்கள் பாடி மகிழ்விப்பர். விழா நிறைவுற்ற பின் விசேட சமயச் சொற்பொழிவு அனைவருக்கும் புத்துயிரூட்டுவதுடன் அவர்கள் சிவநெறியின் மெய்ப்பொருளையும் உணரவும் ஏதுவாகும்.

இரண்டாம் திருவிழா நன்கு அலங்கரிக்கப்பட்ட கைலாய வாகனத் திருவிழாவும், ஆறாம் திருவிழா சிறந்த சித்திர வேலைப்பாடுடைய திருமஞ்சத் திருவிழாவும், ஒன்பதாந் திருவிழா நெடிய திருச்சப்பறத் திருவிழாவும், இரவுத் திருவிழாக்களில் இறைவனின் விசேட வெளிவீதியுலா ஊர்திகளாகும். பத்தாந் திருவிழாவன்று பஞ்சமுக விநாயகப் பெருமானும் முருகப்பெருமானும் சண்டேசுவரரும் தனித்தனி அலங்கார சார்த்துப்படியில் தெய்வீக ஒளிவீசத் தமக்கென உரிய பெருமைமிக்க தேர்களில் எண்ணற்ற அடியார்கள் புடைசூழவும் வீதியுலா வருவது சிறப்பாகும். ஆண் அடியார்கள் அங்கப் பிரதட்சணம் செய்வர். பெண் அடியார்கள் பின்னே அடியழித்துச் செல்வர். இருமருங்கும் கற்பூரச்சட்டிகள் ஏந்துவோரையும் அதிகமாகக் காணலாம். காலையில் வீதியுலா வரும் சுவாமிகளுக்குத் தேரில் அர்ச்சனைகள் செய்யப்பட்டு மாலையில் தேரிலிருந்து தெய்வங்கள் பச்சை சாத்தப்பட்டு எழுந்தருளிப் புதிதாக அமைந்த மணிமண்டபத்தில் இளைப்பாறுவர். பூசைவழிபாடுகள் செய்த பின் சுவாமிகள் ஆனந்த நடனமாடிய வண்ணம் கோயிலினுள் எழுந்தருளுவர். பெரிய உருண்டோடும் ஊர்திகள் பயன்படும் நான்கு விழாக்களை விட ஏனைய விழாக்களில் தோளில் காவும் இதர வாகனங்களில் சுவாமி வெளிவீதியுலா வருவார். தீர்த்த உற்சவத்திற்கு வெளிவரும் பஞ்சமூர்த்திகளும் இவ்வாகனங்களில் சிறப்பாக வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது. பகல் விசேட அபிஷேகம், பூசை மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட வைபவங்களின் பின் பஞ்சமூர்த்திகள் வாசலில் அமைந்துள்ள தீர்த்தமாடும் கிணற்றின் அண்மையில் அமைக்கப்பட்ட மணிமண்டபத்தில் மூர்த்தங்கள் எழுந்தருளியிருக்க தீர்த்தோற்சவம் நிறைவுபெறும். மறுநாள் பூங்காவன உற்சவமும் சிறப்பாக நடைபெறும். இரு நாட்களின் பின் வைரவர் பொங்கலும் நடைபெறும். நித்திய பூசைகளில் நிகழ்ந்த குறைபாடுகள் இந்த மஹோற்சவ காலத்தில் தீர்க்கப்பட்டு நாடு நலம்பெறும் சுமூக நிலை ஏற்படும்.

## இதர விழாக்கள்

வருடாந்த மஹோற்சவங்களை விட ஏனைய விழாக்களாக பிரதோஷ பூசைகள், சித்திரா பூரணை, நடேசர் அபிஷேகம், சமய குரவர்களின் குருபூசைகள், ஆடிப்பூரம், சதுர்த்தி (ஆவணி), ஆவணி மூலம், நவராத்திரி விழாக்கள், விநாயகர் விரதகாலம் 21 நாட்கள் இறுதி நாளில் கஜமுக சூரசங்காரம், விநாயகர் சஷ்டி, திருவெம்பாவை, மகா சிவராத்திரி, பிரதி மாதமும் மாதப்பிறப்பன்று காலை சங்கராந்தி அபிஷேகம், கார்த்திகை உற்சவம், சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி என்பனவும் நடைபெறும். இக்காலங்களில் அடியார்கள் மிக ஆசாரமாகவும் பக்திபூர்வமாகவும் வழிபடுவர்.

## பஜனை பாடற்பணி

இக்கலிகாலத்தில் இறைவனைப் பாடிப் பணிசெய்தே முத்தியடையலாமென்ற மெய்யுணர்வை நோக்கிய பாலர் முதல் வயோதிபர் வரை ஆண், பெண் வேறுபாடின்றி வெள்ளிக்கிழமைகள் தோறும், சிறந்த விழாக்காலம் போன்றவற்றில் தமது ஆன்மீகச் சிந்தனை மேலீட்டினால் மாலைநேரங்களில் பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் செய்வர். வயதுசென்ற பெரியோர்களுடன் இளைஞர் யுவதிகளும் திருநெறிய தமிழ் மறைக்கழக அறநெறிப் பாடசாலை மாணவர்களும், கழக உறுப்பினருடன் சேர்ந்து சிறப்பிக்கின்றனர். இவர்களது பணி மெச்சத்தக்கது.

## புராண படனம்

இத்திருக்கோயிலில் நெடுங்காலம் தொட்டு கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணம், விநாயகர் புராணம் போன்ற ஆன்மீக நூல்கள் வாசித்துப் பயன் சொல்வதை யாவரும் அறிவர். திருக்கோயிலின் அருளாட்சிக்கு இப்புராணபடனங்களும் மெருகூட்டுகின்றன.

## இதர கட்டுமானப்பணிகள்

1972 ஆம் ஆண்டு இப்பகுதி மெய்யடியார்களினால் நெடியதோர் இராசகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இக் கோபுரத்தில் அநேக புராண காவியச் சான்றுகளை வடிக்கும் அமைப்பில் உருவான உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது ஆலயத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. இராசகோபுரத்தின் வடபால் ஒரு நெடிய மணிக்கோபுரமும் காண்டாமணியும் ஊர் மக்கள் அனைவருக்கும் இறைவன் சந்நிதியின் விசேட நேரங்களை அறிவிக்கின்றன. இத்திருப்பணி இப்பகுதி வாழ் வர்த்தகரின் பேருதவியுடன் அமைக்கப்பட்டது. தீர்த்தக் கேணியின் அருகேயுள்ள சுவாமி இளைப்பாறும் மணி மண்டபமும் அடியார்களின் ஒத்துழைப்பால் இரு வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டுள்ளது. எழில்மிகு சித்திரவேலைகள் அடங்கிய இந்துசமய கலாசார விதிகளுக்கமைவாக இது அமைக்கப்பட்டுள்ளது.

## கல்யாண மண்டபம்

இணுவில் ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் ஆலயத்தின் தென்கிழக்கு மூலையில் ஆதியில் இடிந்த கேணி இருந்ததாகவும் இக்கேணியை மூடிய நிலத்தில் கணேச நூலகம் ஒன்று செயற் பட்டதாகவும் இதன் மேற்திசையில் சைவப்பிரகாச வித்தியாலயம் (இணுவில் இந்துக் கல்லூரி) ஆரம்பப்பிரிவு இருந்ததாகவும் முன்னோர் கூறுவர். பரராசசேகரப்பிள்ளையாரின் அருகில் ஓர் கல்யாண மண்டபம் அமைக்கத் திருவருள் கைகூடியது. பல பிரமுகர்கள் முன்வந்து பாடசாலையைக் கோயிலின் வடக்கேயுள்ள இணுவில் இந்துக்கல்லூரி வளாகத்தில் ஒரு பெரிய புதிய மண்டபத்தை அமைத்துப் பாடசாலையை இடம்மாற்றினர். பாடசாலை முன்னிருந்த கட்டடத்தைத் தரைமட்டமாக்கியும் நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தை இடம்மாற்றியும் கிடைத்த இடத்தில் பல இலட்ச ரூபா செலவில் புதியதோர் அழகிய மண்டபத்தை 1984 ஆம் ஆண்டு நிறுவினர். இதற்கான நிதிவளம் இணுவில் அடியார்களினால் வழங்கப்பட்டது. இணுவில் கிராமத்தில் இது போன்ற வசதியான கல்யாண மண்டபம் அமைந்தது இறையருளே. இணுவில் கிராமத்தில் வசதிகொண்ட ஒரேயொரு கல்யாண மண்டபம் எனப் பெயர்கொண்டது. இந்த மண்டபத்தில் திருமணங்கள், விழாக்கள், பொது வைபவங்கள், சமய மாநாடுகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை செயற்பட உதவுகிறது. அண்மையில் வெளிநாட்டு இணுவை மக்களின் அன்பளிப்பால் அலங்காரமான திருத்தவேலைகள் செய்யப்பட்டு அதியற்புதமான கோலத்தில் விநாயகராலயச் சூழலை அழகுறச் செய்கிறது. இந்த மண்டபத்தில் திருமண வைபவம் சார்பான உணவு பரிமாறுவதற்கென வெளிநாட்டிலுள்ள பக்தர்கள் நலன் விரும்பிகள் சிலரின் உபயத்தினால் கோயிலின் மேற்குப் புறத்தே இருபரப்பு நிலம் கொள்வனவு செய்யப்பட்டு இருமாடிக் கட்டடம் சிறப்பாகப் பூர்த்தியாகும் நிலையில் இருக்கிறது. வேலைகள் யாவும் பூர்த்தியானதும் அது பாரிய அன்னசாலையாக மாறி அருஞ்சேவை புரியும் அருள் நிலையமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## ஆலய நிதிநிலைமை

ஆலயப் பிரதம சிவாச்சாரியார் தமது முன்னோர் தொடர்ச்சியாக உரிமையுடைய பூசகராக அரும்பணியாற்றுகிறார். கோயில் அபிசேகம், பூசை, அர்ச்சனை போன்றவற்றை அவரே நிர்வகிக்கிறார். விநாயகப் பெருமானைத் தனது உள்ளத்தே இருத்தியதால் காலத்துக்காலம் திருப்பணிகளையும் செய்ய ஆவன செய்கிறார். உண்டியலில் சேரும் பணம் ஒரு வயோதிபரான விநாயகர் பக்தர் காலத்துக்காலம் சேகரித்து இதற்கென நிதிசேகரிப்பவர் ஒருவரிடம் ஒப்படைப்பார். தாராள சிந்தையுள்ள நிதிசேகரிப்பவர் இச்சொத்துச் சிவச்சொத்து எனப் பேணி வேறு அடியார்கள் மூலமும் கிடைக்கும் நிதியையும் அவ்வப்போது வங்கியில் வைப்பிலிடுவார். குறிப்பிட்ட ஏதாவது திருப்பணி செய்யவிருந்தால் அந்த வங்கியிலுள்ள நிதியில் திருப்பணி நிறைவு பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணபதியும் கந்தனும்

அருள்மிகு சகோதரர்கள் அருகருகே இருந்து அருள் பாலிக்கும் பெருமை வேறு எங்கும் காணமுடியாது. பரராச சேகரப்பிள்ளையார் வாசலில் கல்விக்குதவும் அரிய நூலகம், தெற்கில் கல்யாண மண்டபம், பின்புறம் அன்னசாலை, கல்வியாளர் வாழ்ந்த மண், முத்தமிழ் வல்லோன் இயலிசை வாரிதி கலைமணம் பரப்பிய பேராசான் வாழ்ந்த கலைக்கூடம், வடக்கே முதுபெரும் கல்விக்கூடம், இதன் கிழக்கே எம் பெருமானைப் பூசிக்கும் அந்தணப் பெருந்தகையின் இல்லம் யாவும் சூழவுள்ளன. அந்தணப் பெருந்தகையின் இல்லத்தின் வடக்கே கிழக்கு நோக்கியமைந்த இணுவில் கந்தனின் பரம்பரைப் பூசகர்களின் இல்லங்கள் சிலவற்றின் வடக்கே இணுவில் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ளது. இரு கோயில்களுக்கும் பிரமாண்டமான கட்டடங்களும் தனித்தனியே தேரோடும் வீதிகளும் சூழலில் கல்விச்சாலை, அறநிலையங்களும் இவ்விரு கோயில்களையும் இணைக்கும் அந்தணப் பெரு மக்களின் இல்லங்களும் அமைந்துள்ளன. சைவ மரபுப்படி சமயாசாரம், புனிதம், தெய்வீகம், அருளொளி, கருணை வெள்ளம் யாவும் மிகச்சிறப்புடன் காட்சியளிக்கின்றன. கோயில் மங்கல வாத்தியங்களை உவகையுடன் செயற்படுத்தும் இசை வேளாளர் குடும்பங்கள் கிழக்கே அமைந்துள்ளன. மேற்கே பூவேலை செய்யும் வீரசைவர்களும் வாழ்ந்து இறைபணி செய்வது இவ்வூரின் தனிச்சிறப்பாகும். பங்குனி மாதப் பின் பகுதி சித்திரை மாதங்களில் கடும் வெயில் வெம்மையால் தொற்றுநோய்கள் பரவி மக்களை வருத்தின. இவ்வூர் மக்கள் அன்றுதொட்டு தெய்வநம்பிக்கையும் அபார பக்தியும் கொண்ட காரணத்தால் குறிப்பிட்ட தொற்றுநோய்களை தெய்வங்களைச் சிந்தைகுளிர வைப்பதால் நிறைவுகண்டனர். இதனால் வருடாவருடம் முற்காலத்தில் நீர்க்கஞ்சி கோயிலின் வாசலில் தயாரிக்கப்பட்டு விசேட பூசைகள், படையல்கள், நடாத்தி அடியார்களுக்கு நீர்க் கஞ்சி வழங்கப்படும். அடியார்கள் கோயில்களின் பிரசாதத்தைப் பக்திபூர்வமாக ஏற்று அனுபவித்து நோய்களின் வெம்மையில் இருந்து காப்பாற்றப்பட்டனர். இக்குளிர்த்தி வைபவம் பல அரிசி ஆலை உரிமையாளர்கள், வர்த்தகப்பிரமுகர்களின் ஒத்துழைப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ வருடாவருடம் பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திரத்தை அடுத்த நாட்களில் அன்னதானமாகவே நடைபெறுகிறது. இப்பெரிய அன்னதானத்தில் அயலவர்கள், அடியார்கள் யாவரும் உயர்வு தாழ்வின்றி மிக உற்சாகத்துடன் பங்குபற்றுவது இவ்வூரின் தனிச்சிறப்பாகும். மஹோற்சவ காலங்களிலும் விசேட பெருவிழாக்களிலும் அன்னதானம் பெரும் பங்காற்றுகிறது.

இவ்வாலயத்தின் மூலமூர்த்தியின் நாற்புறமும் உள் வீதியிலும் ஆலய முன் பக்கத்திலும் அநேக பரிவார மூர்த்தங்கள் அருட்காட்சி தருகின்றன. பாலவிநாயகர், பாலமுருகன், சூரிய சந்திரர், நான்முக விநாயகர், பஞ்சமுக விநாயகர், தெட்சணா மூர்த்தி, சந்திரசேகரர், அம்பாள், இராஜேஸ்வரி அம்பாள், சந்தான கோபாலர், வைரவர், வள்ளி தெய்வயானையுடன் முருகன், வரலட்சுமி, நடராசப்பெருமான், சமயகுரவர்கள் நால்வர், நவகோள் நாயகர்கள், சண்டேசுவரர், கொடித்தம்ப விநாயகர் போன்ற பல மூர்த்தங்கள் தனித்தனியே அமைக்கப் பட்டு நன்கு பரிபாலிக்கப்படுகின்றன. வசந்த மண்டபத்தில் விலை மதிப்புமிக்க எழுந்தருளி விக்கிரகங்கள் நல்ல பாதுகாப்பாகவும் புனிதமாகவும் பேணப்படுகின்றன.


உயர்ந்த உள்ளம் கொண்ட அடியார்களின் எண்ணம் போல உயர்ந்த அழகிய கோயிலாகவும் சிறந்த அமைப்பும் அலங்காரமும் கொண்ட மண்டபங்களும் அருள்பொலியும் இணுவில் ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் கோயில் எல்லோரும் கீர்த்திமிக்க பயபக்தியுடன் தம்மை அர்ப்பணிப்பதால் எம் பெருமான் தமது அருளாட்சியுடனும் பெரும் கருணையுடனும் ஆசீர்வதிப்பது இயற்கையாகவே சிறப்பாகும். இதனால் நற் செயல்களும், நற்பண்பும், பலசீர்களும் நிரம்பிய முழு மனிதர்களாக இணுவையூர் மக்கள் வாழ்வது தெய்வீகமே.

மூ.சிவலிங்கம்
இளைப்பாறிய கிராம அலுவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்
# சிவகாமி அம்பாள் திருத்தலம்



வட இலங்கை யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ் - காங்கேசன்துறை பிரதான வீதியில் வடபால் நான்குமைல் தொலைவில் நீர்வளமும், நிலவளமும், இசையோசையும், மணியோசையும் நிறைந்து பாவலரும், நாவலரும் போற்றும் பக்தி குன்றாத திருவூர் இணுவில் என்னும் பேரூராகும்.

இங்கு கீழ்த் திசையில் பிரசித்திவாய்ந்த சிவகாமி அம்பாள் ஆலயமும், விநாயகர், முருகன், சிவன், வைரவர் ஆலயங்களுடன் இளந்தாரி அண்ணமார் (தற்போது வேணுகோபால் ஆலயமாகப் புனருத்தாரணம் செய்யப்பட்டது.) ஆஞ்சநேயர் முதலிய தெய்வங்களின் வழிபாட்டுத் தலங்களும் அமைந்து இப்பகுதியை அலங்கரிப்பதுடன் யாவரையும் பக்தியால் பரவசமடையச் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவையூர் மக்கள் இங்குள்ள ஆலயங்களின் மணியோசையைக் கேட்டே அதிகாலையில் துயிலெழுவது வழக்கம். இவர்களின் செவிகளில் கேட்கும் சங்கீதம், பண்ணிசை, நாதஸ்வரம், வயலின் போன்ற இசையொலியும் இவர்களை உற்சாகத்துடன் தமது நாளாந்தக் கடமைகளைச் செய்யத் தூண்டும். காலையில் எழுந்து தமது கடமைகளில் ஈடுபடுமுன் இறைவனை நினைந்து பக்திப் பாடல்கள், திருமுறைகள் ஓதிக்கொண்டு தம் அயற் கோவில்களுக்குச் சென்று வணங்குவர். தொண்டு மனப்பான்மையுடைய இவர்கள் கோவிலின் உள்வீதி, வெளிவீதி பெருக்கிச் சுத்தஞ் செய்தல், நறுமலர்களைத் தேன் சொட்டச் சொட்டக் கொய்து கோவிலில் காணிக்கையாக்குதல் போன்ற நற்பணிகளைச் செய்து நாளாந்தம் இறையருளைச் சிறிது சிறிதாகச் சேர்ப்பர்.

இவ்விடத்தில் வெகுசிறப்புக்களுடன் கூடிய ஒரே சக்தி பீடமாக விளங்குவது இணுவில் சிவகாமி அம்பாள் திருத் தலமாகும். இவ் வன்னையை உள்ளன்போடு வழிபடும் அடியார்கள் யாவரும் அன்னையின் தெய்வீகப் பேரருளைப் பெறுகின்றனர். இவ்வற்புதமான திருக்கோவிலின் வரலாற்றை நோக்குவோம்.

யாழ்ப்பாணத் தமிழரசர்கள் அரசாண்ட காலத்தில் யாழ்ப்பாண மன்னன் இந்நாட்டைச் சிறுபிரிவுகளாகப் பிரித்து ஒவ்வோர் பிரிவுக்கும் ஒவ்வோர் அதிகாரியைத் தலைவராக நியமித்தான். இணுவில் பிரிவுக்கு தமிழகத்து நடுநாட்டுத் திருக்கோவலூர் பேராயிரவன் என்பவன் நியமிக்கப்பட்டான். பேராயிரவன் சிதம்பரத்தில் அம்பலக்கூத்தனின் தேவி சிவகாமி அம்மனின் திருக்கோலத்திலமைந்த கருங்கல் விக்கிரகத்தை வரவழைத்து இவ்விடத்தில் ஓர் கோவிலமைத்து நாளிலும் பொழுதிலும் வழிபட்டுவந்தான். இக்கோவில் அமைந்த இடத்தைச் "சிதம்பரவளவு" எனப் பெயரிட்டான் எனச் செவிவழிச் செய்திகள் செப்புகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராயிரவனின் பின் இப்பிரிவின் ஆட்சித் தலைவனாக வந்த காலிங்கராயன் என்பவனும் சிறந்த சமயபக்தன். தனது அன்றாட அரச கடமைகளுக்குச் செல்லமுன் சிவகாமி அம்பாளை உள்ளன்போடு வழிபட்டே கருமமாற்றினான். காலிங்கராயனின் மகன் கைலாயநாதன் என்னும் வாலிபன் தந்தையின் கடமையில் உறுதுணையாக இருந்தான். கைலாயநாதன் தெருவீதியுலா வரும்போது அன்னை சிவகாமியின் உருவமும் முன்னே சென்று வருவது வழக்கம் என்று "பஞ்சவர்ணத் தூது" என்னும் நூல் செப்புகிறது.

போர்த்துக்கேயர் நாட்டை ஆண்ட காலத்தில் இத் திருக்கோவில் இடிக்கப்பட்டு அழிவுற்றது. பின்னர் வந்த ஒல்லாந்தர் காலத்தில் பொதுமக்கள் மீண்டும் இவ்வாலயத்தைச் சிறுகுடிசையாக அமைத்து வழிபட்டனர். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தோம்பு எழுதும் பணியில் ஈடுபட்டிருந்த இவ்வூரைச் சேர்ந்த சின்னத்தம்பிப்புலவர் சிவகாமியம்மையை இடையறாது வணங்கி வந்தார். யாரோ கொடுத்த பொய்த்தகவலின் காரணமாக இப்புலவர் ஒல்லாந்தரது சிறையில் அடைக்கப்பட்டார்.

சின்னத்தம்பிப்புலவர் சிறையிலிருந்து அடைந்த தீராத மன வேதனையால் வருந்தித் தான் வழிபட்ட அன்னை சிவகாமியை வேண்டிப் பாடினார். அம்பாள் தனது பக்தனின் மனக்கவலையை அகற்றச் சித்தங்கொண்டாள். சின்னத்தம்பிப் புலவரின் உள்ளமுருகிய பாடல் கேட்ட அன்னையின் அருளால் சிறைக்கதவு தானாகத் திறந்தது. இதனைக் கண்ணுற்ற சிறைக்காவலன் ஓடோடிச்சென்று தமது அதிகாரிக்கு முறையிட்டான். அவ்வதிகாரி புலவரின் பக்திநிலை கண்டு அவரை வணங்கிச் சிறையிலிருந்து விடுவித்தான். அத்துடன் பொய்த்தகவல் கொடுத்தவனை அச்சிறையிலிட்டான். இதனால் சின்னத்தம்பிப்புலவரின் பாடலின் மதிப்பும், தனது பக்தனைச் சிறையுடைத்து விடுவித்த அன்னை சிவகாமியின் அருளின் மகிமையும் பலவாறாகப் பரவின. அன்னை சிவகாமியின் அருள்வளம் இவ்வூருக்கே பெருமைதேடித் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருத்தலம் நல்ல தெய்வீகச்சூழலில், அமைதியான இடத்தில் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தின் மேற்குவீதியில் பண்டைய தமிழ் மன்னரால் தங்களது வீரத்தைப் பேணிக் காப்பாற்ற அமைத்த காவல் தெய்வமான மாணிக்கவைரவரும், பத்திரகாளி அம்மனும் ஒருங்கமைந்த திருக்கோவில் அமைந்துள்ளது. கிழக்கே சோழமன்னரின் ஆட்சிக்காலத்தில் தொடர்புடைய காரைக்கால் சிவன் என்றழைக்கப்படும் விசாலாட்சி அம்பாள் சமேத விசுவநாதப் பெருமான் ஆலயமும் அமைந்துள்ளது. தென்மேற்கே இவ்வூர்ப் பெரும் சித்தரான பெரியசந்நியாசியாரின் அடக்கஸ்தலத்தில் அமைந்து அருள்பாலிக்கும் அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலும் (மடாலயம்) காட்சி தருகின்றன. வடமேல் திசையில் இணுவில் பகுதியை ஆண்ட அரசன் கைலாசநாதன் இளமையில் இளந்தாரி என அழைக்கப்பட்டதால் அவனின் நினைவாக எழுப்பிய இளந்தாரி கோவிலும் அன்னை சிவகாமியின் திருக்கோவிலின் அழகை மிகைப்படுத்துகின்றன. இதற்குத் தமிழவேள் எழுதிய "பஞ்சவர்ணத்தூது" நூல் சான்று பகர்கின்றது.

## திருப்பணிகளின் வரலாறு

இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன் இத் திருக்கோவில் சிறுகுடிசையாகவும் மண் நிலமுமாக இருந்தது. தொண்டுள்ளமும் பக்தியும் நிரம்பிய அயலில் வாழ்ந்த பெண்கள் கோவிலைப் பெருக்கிச் சுத்தம் செய்து வந்தனர். இத் தொண்டர்களில் இவ்வூரைச் சேர்ந்த திருமதி கனகர் சின்னம்மா என்பவர் குறிப்பிடத்தக்கவர். தினந்தோறும் அன்னையின் அருள்மனையை மிகத்தூய எண்ணத்துடன் பசுஞ்சாணி எடுத்துத் தரை மெழுகிய பணியைத் தொடர்ந்து தொண்டாற்றியவர்கள் சின்னம்மாவின் அரும்பெரும் புதல்வன் சங்கரலிங்கம் என்பவரும் தனது இளம்வயதில் தூயபணியை நாடியவரும் சின்னத்தம்பிச் சட்டம்பியாரின் ஏகபுத்திரன் பேராயிரம் உடையார் (பிற்காலத்தில் இவர் தவக்கோலம் பூண்டு சச்சிதானந்தம் சுவாமியார் என்னும் நாமத்தில் தவசீலரானார்) என்பவரும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இப்பணியுடன் நில்லாது அயலிலுள்ள தமது நண்பர் களையும் அழைத்து வந்து அன்னையின் திருக்கோவிலில் சிறந்த பண்ணோடு இசைபாடித் தங்கள் பக்தியை வெளிப்படுத்தினர்.

இத்திருக்கோவிலின் வடபால் வாழ்ந்த கற்பகம் எனும் மூதாட்டி அன்னை சிவகாமியின் அருளால் தஞ்சமெனக் கவலையுடன் வருவோருக்கு அன்னை சிவகாமியின் திருவாக்கு வசீகரமாகக் குறிப்புகள் சொல்லி மனச்சாந்தியடையச் செய்வார். அவர்கள் தாம் மன நிறைவு பெறுவதுடன் திருக்கோவில் திருப்பணிக்கென ஒருபணம் (ஆறு சதம்) வழங்குவர். இச்சிறுதொகைப் பணத்துடன் கற்பகப் பிராட்டியார் அன்னையின் திருப்பணி வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார். கற்பக அம்மையாரின் உடல்நிலை குன்றியதால் இவரது இளைய புதல்வி திருமதி சிவகாமசுந்தரி என்பவர் தம் தாய்விட்ட பணியைத் தொடர அன்னை சிவகாமியின் அருளால் வாக்குச் சொல்லத் தலைப்பட்டார்.

சிவகாமசுந்தரி என்பவர் மிக வசீகரமாகவும் அன்னை சிவகாமியின் திருவருள் நன்கு கைகூடவும் தன்னை மறந்த நிலையில் தேடி வருவோருக்குத் தகுந்த குறிப்புகள் கூறி அமைதியையும் மனச்சாந்தியையும் ஏற்படுத்தினார். இவரது புகழ் நன்கு பரவியதால் பிற ஊர்களிலிருந்தும் திருவாக்குக் கேட்கவருவோரின் தொகையும் கூடியது. திருப்பணி நிதியும் பெருகியது. இவர் திருப்பணி வேலைகளை விரிவுபடுத்தினார். வாக்குச் சொல்லியபின் அயல் வீடுகளுக்குச் சென்று பிடி அரிசி எடுத்துவந்து பக்தர்களினால் திருப்பணிக்கென வழங்கப்படும் சிறுதொகைப் பணத்தையும் சேர்த்து திருப்பணிக்கே செலவிட்டார். இவர் திருவாக்குச் சொல்வதைச் சாத்திரம் சொல்வதாக எண்ணிய இவ்வூரார் இவரைச் சாத்திரம்மா என அன்புடன் அழைத்தனர்.

1940 ஆம் ஆண்டளவில், அன்னை சிவகாமியின் திருக்கோவிற் கருவறையும் தொடர்ந்து அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பனவும் சிறந்த கருங்கற்களாலும், வெள்ளை வைரக்கற்களாலும் கட்டி முடிந்தும் அவர் ஓயவில்லை. இவ் வேலைகள் பூர்த்தியாகப் பல வருடங்கள் சென்றன. திருப்பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகள் மிகச் சிறப்பாகச் செய்தமையால் பக்திமிக்கவர்கள் பிடியரிசியுடன் தாராளமாக நிதியுதவியும் செய்தனர். மேலும் பல ஆண்டுகளாக வேண்டிய அளவில் கற்கள் சுத்தம் செய்யப்பட்டு மீண்டும் கோபுரம், மணி மண்டபம் ஆகிய திருப்பணி வேலைகள் ஆரம்பமாகின.

சமய சாத்திர விதிப்படி நிலையம் எடுத்து வரைபடம் அமைத்துப் பஞ்சதள வாயிற்கோபுர வேலை தொடர்ந்து நடைபெற்றது. கருவறை தொடக்கம் கோபுரம் வரையான திருப்பணி வேலைகள் அராலியைச் சேர்ந்த சிற்பாசாரியார் திரு.நாகமுத்து அவர்களால் நிறைவேற்றப்பட்டன. 1974 ஆம் ஆண்டு பஞ்சதள கோபுரவேலை பூர்த்தியடைந்ததும் திருக்கோவிலில் பெருஞ்சாந்தி விழாவும் நடைபெற்றது. மணிமண்டபத்தின் நெடிய தூண்கள் யாவும் கருங்கற்களால் ஆக்கப்பட்டுச் சிற்ப வேலைகளுடன் காணப்படுகின்றன. மணிமண்டபவேலை மிக அழகாகவும் உறுதியாகவும் அமைந்தது அன்னை சிவகாமியின் அருட்பேறாகும்.

இறுதிக் காலத்தில் வயது முதிர்ந்து தள்ளாத வயதிலும் தான் ஒருத்தியாக நின்று சிறுகச் சேர்த்த நிதியால் அன்னை சிவகாமியின் மகிமையும் பொதுமக்களின் பங்களிப்பும் இருந்தபோதும் திருப்பணிகளை நிறைவேற்றிய பெருமாட்டி, இன்று அமரரானாலும் திருக்கோவில் வாசலில் நின்று உயரப் பார்த்தால் இந்தச் சாத்திரம்மாவின் சேவை நன்கு புலப்படும். உள்ளத்திலே நல்ல உள்ளம் உறங்காது என்ற வாக்குப்படி திருப்பணி வேலைக்கென்றே தன்னை அர்ப்பணித்த மூதாட்டி சாத்திரம்மாவின் பணியினால் அவருக்கு மட்டுமன்றி இணுவை ஊருக்கே பெருமை கிடைத்தமை அன்னை சிவகாமியின் கடைக்கண் பார்வையினாலேயாகும்.

## நந்தவனம்

இணுவிலில் வாழ்ந்த தொண்டர்கள் பலர் அம்பாளின் பூசைக்கேற்ற நறுமலர்களைப் பெற ஒரு நந்தவனத்தையும் நந்தவனத்துக்கென நீர் பாய்ச்சவும், கோவிலுக்கு வருவோர் கை, கால் அலம்பும் தண்ணீர்த் தேவைக்காக கோவிலின் வட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்த் திசையில் கோபுரவாசல் அருகே ஒரு கிணற்றையும் அமைத்தனர். நந்தவனத்தில் அன்னை சிவகாமிக்கு உகந்த நறுமலர்கள் தரும் பிச்சி, மல்லிகை, முல்லை, பவளமல்லிகை, பூமாதுளை, வெள்ளை மந்தாரை, நந்தியாவட்டை போன்ற பல்லின மலர்ச்செடிகளை நட்டுப் பராமரித்து வருகின்றனர். இத்திருப்பணிகளில் சிரமதானப் பணியும் பொது மக்களின் அன்பளிப்பு நிதியும் கூடுதலாக இருந்ததால் மிகச் சிறப்புடன் அமைந்தது குறிப்பிடத்தக்கது. சிரமதானப் பணிகளில் கூடுதலாக ஈடுபட்டவர்களில் பரமர், நாகலிங்கம், வி.ஆறுமுகம், இ.செல்லையா, க.முருகேசு, அ.ஐயாத்துரை, ஆறுப்பிள்ளை, வேலுப்பிள்ளை ஆகியோரும் வேறு சிலரும் அடங்குவர். தொடர்ந்து இந்த நந்தவனப் பணியில் இப்போதும் ப.பூபாலசிங்கம், ஆ.கணேசு ஆகியோர் சிறப்பாகத் தொண்டாற்றுகின்றனர்.

## இளைஞர் சங்கம்

அறுபது வருடங்களுக்கு முன் திருக்கோவிலின் முன்னேற்றம் நோக்கமாக அயலிலுள்ள இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி வெள்ளிக் கிழமைகளில் பஜனை பாடி வந்தனர். இவர்கள் இவ்வூர்ப் பெரியவர்களான வ.கா.சிவக்கொழுந்து, பரமர் ஆகியோரது வேண்டுகோளின் பேரில் தவத்திரு வடிவேல் சாமியார், பண்டிதர் சபா.ஆனந்தர் தலைமையில் வாராந்தம் சமயச் சொற்பொழிவுகளும், சின்னத்தம்பிப்புலவரின் பாடல்கள், நந்தனார் சரித்திரம் போன்ற புராண படனங்களும் பண்ணிசை, திருமுறை ஓதுதல் போன்ற நிகழ்ச்சிகளும் நடாத்திப் பிரபலம் அடைந்தனர். இச்சங்கத்தில் பெரியார் சிவக்கொழுந்து, பரமர், தவத்திரு வடிவேல்சுவாமியார், பண்டிதர் சபா.ஆனந்தர், தமிழவேள் க.இ.க.கந்தசாமி, த.கந்தையா ஆசிரியர், த.இரத்தினசபாபதி, சாம்பசிவ ஐயர், சங்கரலிங்கம் சாமியார், க.முருகேசு, தியாகராசச் சுவாமிகள், அம்பலம், வைரவிப்பிள்ளை, ஆறுப்பிள்ளை ஆகியோர் கூடுதலாகப் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்புரவி, மகிடாசூரன், சிங்கம் ஆகியன

பற்பல சிறப்பான பணியாற்றிய மேற்குறிப்பிட்ட தொண்டர்கள் மகிடாசூரன் போர் நிகழ்ச்சியின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்தனர். இப்பணிக்காக ஏற்கனவே தீர்மானித்தபடி வீடுகள் தோறும் சென்று பிடியரிசி சேகரித்து, சுருட்டுவேலைத் தொழிலாளரிடம் நாளாந்தம் அரைச்சதம் பெறுமதியான ஒரு கட்டுச் சுருட்டின் கூலியும் பெற்றுச் சேர்த்து மானம்பூத் திருவிழாவிற்கென ஒரு வெண்புரவியும், மகிடாசூரன் (அப்போது ஐந்து தலைகளுடன், தற்போது 11 தலைகளுடன்) அம்பாள் சூரன்போருக்காக உலாவருவதற்கான சிங்கவாகனம் ஆகியவற்றைச் செய்வித்தனர். இவற்றின் வெள்ளோட்டம் 1931 ஆம் ஆண்டு நடைபெற்றது. நவராத்திரி இறுதிநாளில் சூரன்போரில் சூரனையும், விஜயதசமியன்று அம்பாள் வாழைவெட்ட இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு வீதியுலா வருவதற்கு வெண்புரவியையும் உபயோகப் படுத்தினர். மிகச்சிறந்த தொழில்நுட்பத்துடன் சிறப்பான முறையில் சூரனையும் வாகனத்தையும் செய்து கொடுத்தவர் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு.ஆறுமுகம் அவர்கள். திரு.ஆறுமுகம் அவர்களது கைத்திறனும் மதிநுட்பமும் அமைந்த வேலைகளை இணுவில் சிவகாமி அம்மன் கோவில் நவராத்திரி உற்சவத்தின் இறுதி நாட்களில் நேரில் பார்த்து அனுபவிப்பது சாலச்சிறந்தது. இவற்றை எழுதவும், சொல்லவும் சிறப்பாக விபரிக்கவும் வார்த்தைகள் வரா. இவை எவ்விடத்திலும் காணமுடியாத கலைக் களஞ்சியமாகும்.

## சித்திரத்தேர்த் திருப்பணி

1970 ஆம் ஆண்டளவில் இணுவில் தியாகராசா சுவாமிகள் தலைமையில் பஜனை பாடியவர்களான அம்பலம், அருளையா, கயிலாயபிள்ளை, இரத்தினம், பூபாலசிங்கம், சுந்தரலிங்கம், செல்வரத்தினம் மற்றும் சிலரும் சிவகாமி அம்மன் கோவிலில் பஜனை பாடுவதுடன் வெளியூர்களிலுள்ள சிறந்த கோவில்களிலும் பஜனை படிக்கச் சென்றனர். அவர்கள் கண்ட காட்சிகளில் அக் கோவில்களிலுள்ள திருத்தேரின் அழகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமைப்பும் அவர்களைக் கவர்ந்தன. அன்னை சிவகாமிக்கும் ஒரு சிறந்த சித்திரத்தேர் செய்ய வேண்டுமென்ற மனவெழுச்சியை அன்னை சிவகாமி தியாகராசாச் சுவாமிகளின் சித்தத்தில் ஏற்படுத்தினார்.

இக்குழுவினர் தேர்த்திருப்பணி செய்வதற்கு அன்னையின் அருள்வேண்டி ஒரு மாத காலமாகத் திருக்கோவில் வாசலில் மனமுருகிப் பாடினர். சித்தமுருகிய அன்னை இவர்களை வீடு வீடாகச் சென்று பஜனை பாடி நிதியையும் தேர்வேலைக்கான முதிய மரங்களையும் சேர்ப்பதற்கான அருளை நல்கினாள். அன்னையின் அருளால் அயல் வீடுகளுக்கும் தொடர்ந்து ஏனைய வீடுகளுக்கும் செல்வதற்கு ஆயத்தமாகினர். இரவுநேரங்களில் பெற்றோமாக்ஸ் வெளிச்சத்துடன் தாளம் தட்டியும், மிருதங்கம் அடித்தும் பஜனை பாடும்போது வீடுகளில் உள்ளவர்கள் தங்களால் இயன்ற நிதியை வழங்கினர். இவர்களின் நன்மை கருதி வசதியுடையோர் சிற்றுண்டி வகைகளும், தேநீரும் கொடுத்துக் கூடிய நிதியையும் தமது காணிகளில் நின்ற தேர்வேலைகளுக்கு உகந்த மரங்களையும் வழங்கினர். கிடைக்கும் மரங்கள் முதலில் தறிக்கப்பட்டு உடனுக்குடன் திருக்கோவிலில் சேர்க்கப்பட்டன. வேண்டிய மரங்கள் கிடைத்ததும் தேர்வேலை செய்ய நாள்கோள் எடுத்துத் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய அதிபர் ஆறுமுகம் சீவரத்தினம் அவர்களின் தலைமையில் வேலைகளைச் சிறப்பாகத் தொடங்கினர். தேர்த்திருப்பணி ஆரம்பித்து வேலை வளர்ந்து வரும்போது தியாகர்சுவாமிகள் நோய்வாய்ப்பட்டதால் வேலைகள் தடைப்பட்டன. தியாகராசாச்சுவாமிகளின் விருப்பப்படி 7 பேர் கொண்ட தேர்த்திருப்பணிச் சபை அமைத்து வேலைகள் தொடர்ந்தன. தேர்த்திருப்பணிச் சபையினரின் பெருமுயற்சியால் தேரோடும் வீதி சிறந்த முறையில் செப்பனிடப்பட்டது. தேர்த்திருப்பணிச் சபை காரைக்கால் சாமியாரின் ஆசியினால் சிறப்பாக இயங்கியது. சிறந்த சித்திர வேலைகளுடன் தேர் வேலைகள் யாவும் நிறைவாகி 1977 ஆம் ஆண்டு வெள்ளோட்டமும் ஆடி மாதத்தில் தேர் உற்சவமும் சிறப்பாக நடைபெற்றமை அன்னையின் திருவருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து விநாயகருக்கு ஒரு தேரும், முருகனுக்கு ஒரு தேரும் புதிதாகச் செய்விக்கப்பட்டன. இந்து மகா சபையினர் தமது திருப்பணியாக நவகோணம் கொண்ட தங்கரதம் ஒன்றைச் சிறந்த அமைப்பிலும் அழகாகவும் அமைத்தனர்.

## மிகுதியான கட்டுமானப் பணிகள்

சாத்திரம்மா பிரதான வேலைகளைச் செய்ய, மிகுதி ஒரு சில வேலைகளைப் பக்தர்களும் தொண்டர்களும் பொதுமக்களின் உதவியுடன் செய்தனர். இவ்வேலைகளை முதலில் வ.கா.வயிரவப்பிள்ளை என்பவர் தனது சுருட்டுத் தொழிற்சாலை வேலையாட்களின் உதவியுடனும் தனது பெருநிதியுடனும் ஆலயத் தெற்குப்பகுதி உள் அறைகள், மடைப்பள்ளி போன்றவற்றில் நிறைவான வேலைகளைச் செய்தார். அவரைத் தொடர்ந்து செ.மதியாபரணம் அவர்கள் உள்வீதி நாலு பக்கமும் கூரை வேலைக்கான தூண்கள் அமைத்துத் தென் உள் வீதியையும் பூர்த்தி செய்தார். பின்னர் இவர் திருப்பணிக் குழுவினருடன் இணைந்து உள்ளக மேற்கு, வடக்கு வீதிகளின் கூரை வேலைகளை நிறைவாக்கினார். திருப்பணிக் குழுவினர் உள்வீதியில் நவக்கிரக மேற்கூரை வேலை, உள்வீதி நிலவேலை, படிக்கட்டுக்களுடன் கூடிய தேர்முட்டிப் பகுதி, தண்ணீர்த்தாங்கி ஆகிய வேலைகளைப் பொதுமக்களின் ஆதரவில் நிறைவேற்றினர். இதே நேரத்தில் அன்னதான மண்டபமும் நிறைவேற்றப்பட்டது. திருப்பணிக் குழுவில் அங்கம் வகித்த மு.இராசையா ஆசிரியரின் பெரு முயற்சி சிறப்பானது.

## திருச்சப்பறம், திருமஞ்சத் திருப்பணி

1989 ஆம் ஆண்டு உயர்கல்விப் படிப்பை நிறைவு செய்யாத 12 இளைஞர்கள் ஒன்றுகூடி அன்னை சிவகாமிக்கு ஒரு திருச்சப்பறம் செய்ய எண்ணிப் பல பெரியார்களுடன் ஆலோசனை செய்தனர். அவர்களின் ஆலோசனையுடன் அன்னையின் திருப்பணிக்கெனத் தாராளமாக நிதியும் வழங்கிய ஊர்மக்களும் வெளிநாடுகளில் வேலை செய்யும் அன்பர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சபையினருக்கு வேண்டிய சகல உதவிகளைச் செய்து ஊக்கமும் கொடுத்தனர். இவர்கள் தம் கருமமே கண்ணாயிருந்ததால் வேலைகள் துரிதகதியில் நிறைவு கண்டன. ஒரு வருட காலத்துக்குள் திருக்கோபுரத்தின் அமைப்பாகச் சித்திர வேலைப்பாட்டுடன் இத்திருச்சப்பறத்தை நடமாடும் கோபுரமோ எனப் பலரும் வியந்து போற்றும்படி நிறைவேற்றினர்.

இந்த இளைஞர்கள் தங்கள் பணியை மேலும் விரிவு படுத்த எண்ணி அன்னைக்கு ஒரு மஞ்சமும் செய்யத் தொடங்கினர். வழமைபோல் நிதிசேகரித்துத் திருமஞ்ச வேலைகள் தொடங்கிய பின் திருப்பணி இடைநிறுத்தப்பட்டது. தமது பொன்னான வளரும் பொழுதை வீணே கழிப்பதா என்று அவர்கள் கவலையுற்றுப் படிப்பிலும் நாட்டமின்றி நடைப் பிணமாயிருந்தனர். தனது திருப்பணியை உள்ளன்போடு செய்த பிஞ்சு நெஞ்சங்கள் வாடவிடுவாளா அன்னை சிவகாமி. இவர்கள் வாட்டமுறுவதை நோக்கிய இவ்வூர்ப்பெரியார்கள் அன்னையிடம் இவர்களது திருப்பணி தொடர்ந்து நடைபெற்றுப் பூர்த்தியாக வேண்டிப் பிரார்த்தித்தனர். அவர்களது பிரார்த்தனையின் பயனாக அம்பாள் கணபதி, முருகன் புடைசூழ வீதியுலா வருவதற்கான அழகிய சித்திரவேலைப்பாடுடைய திருமஞ்சத் திருப்பணி மீண்டும் ஆரம்பமாகியது. முன்னர் திருச்சப்பறம், திருமஞ்சம் ஆகிய இரு வேலைகளையும் யாவரும் மெச்சக்கூடிய வகையில் திருநெல்வேலி சிற்பாலய அதிபர் ஆறுமுகம் சீவரத்தினம் தனது சகோதரர் உட்பட மிகக் கைதேர்ந்த சிற்பவேலைத் திறமை வாய்ந்தவர்களினால் பூர்த்தி செய்தமை அன்னை சிவகாமியின் அருள்வளமாகும். தடைப்பட்ட பின் ஆறுமாத காலத்திற்குள் திருப்பணி நிறைவு காணவைத்தது அன்னை சிவகாமியின் அருட்கடாட்சமே. அவதியுற்ற இளைஞர்கள் அனைவரும் இன்று நல்ல பட்டம் பதவியில் அமர்ந்துள்ளனர். அவர்கள் பெருமையுடன் மேலும் பல பணிகளும் செய்து புதுப் பொலிவு கண்டுள்ளனர். அவளருளாலே அவளடி பணிந்து உள்ளன்போடு செயற்பட்டதால் நற்பேறு பெற்றனர்.

"வாழ்க ஆன்மீக இளைஞர் தொண்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருக்கோவிலில் வீதியுலாவுக்கெனப் பக்தர்களால் செய்து கொடுக்கப்பட்ட 18 வாகனங்கள் (மிருகங்கள், பறவைகள், ஊர்வன அடங்கலாக) தண்டிகை, கேடகங்கள், சிம்மாசனம், பத்மாசனம் என்பனவும் பாவனையில் உண்டு.

## பரிபாலனம், பூசை முறைகள்

இத்திருக்கோவிலின் பரம்பரைத் தர்மகர்த்தாக்களின் காணியில் அமைந்த கோவிலுக்குப் பக்தர்கள், கூடுதலாக வந்து வழிபடுவதாலும், விழாக்கள் சிறப்பாக நடைபெறுவதாலும் தேவைக்கேற்ற காணிகளை வெளிவீதியில் பொதுமக்கள் நன்கொடையாக விட்டுள்ளனர். தற்போது கோவிலைப் பரிபாலிப்பவர் திரு.முதலித்தம்பி சிவலிங்கம் அவர்கள். பொது மக்களின் உதவியுடன் திக்கோவிலை நன்கு பராமரித்து வருகின்றார்.

எழுபது வருடங்களுக்கு முன் இத்திருக்கோவிலில் பூசகராக இருந்த சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் சிறந்த முறையில் நல்ல பயபக்தியுடன் பூசைசெய்து வந்தபோது கோவில் தேவைக்கேற்ற நறுமலர்களை நல்கும் நந்தவனம் அமைத்துப் பூ எடுக்கவும் அயல் தொண்டர்களுக்கு நல்ல உதவியும் உற்சாகமும் கொடுத்து வெற்றி கண்டார். நெடுங்காலம் பூசைசெய்த பின் உடல்நலக் குறைவினால் அவர் விலகியதும் உரும்பிராயைச் சேர்ந்த சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் பூசையைப் பொறுப்பேற்றார். இவரும் இவரைத் தொடர்ந்து மகன் பரமேஸ்வரக் குருக்களும் நெறி தவறாது பயபக்தியுடன் பூசையும் சிறப்புடன் மகோற்சவங்களும் நடாத்தினர். பரமேஸ்வரக்குருக்கள் வெளிநாடு செல்ல விரும்பித் தனது மாமனாரைப் பூசைசெய்ய ஏற்பாடு செய்தார். அவரும் குறுகிய காலம் பூசை செய்தபின் விலகிச் சென்றார்.

தற்போது இத்திருக்கோவிலின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சாம்பசிவசோமசபேசக்குருக்கள் அவர்கள் நல்ல சிறப்பாகவும் நேரம் தவறாமலும் பக்தியுடனும் பூசை செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார். தினந்தோறும் நான்குநேரப் பூசைகள் நடைபெறுகின்றன. வழிபடுவோரும் மிகக் கூடுதலாக வந்து விழாக்களைச் சிறப்பிக்கின்றனர். அன்னை சிவகாமியின் பேரருளால் எல்லாவிதச் சிறப்புக்களயும் தன்னகத்தே கொண்டது இத்திருக்கோவிலாகும்.

## மகோற்சவங்கள்

இத்திருக்கோவிலில் வருடாந்த மகோற்சவங்கள் பங்குனி உத்தரத் திருநாளில் தீர்த்தோற்சவம் வரை 12 நாட்கள் நடைபெறுகின்றன. ஆறாம் திருவிழாவன்று திருமஞ்சத்தில் அன்னை பவனி வருவாள். எட்டாம் திருவிழா கைலாய வாகனமும், ஒன்பதாம் திருவிழா குதிரை வாகனத் திருவிழாவும், பத்தாம் திருவிழா திருச்சப்பறமும், பதினொராம் திருவிழா தேர்த் திருவிழாவும், பன்னிரண்டாம் திருவிழா தீர்த்தத் திருவிழாவும் ஆகும். அன்னைக்கேற்ப நல்ல அமைப்புடன் செய்த ஊர்திகள் மகோற்சவ காலத்தில் வெகுசிறப்பையும் பரவசத்தையும் கொடுக்கின்றன.

தொடர்ந்து 12 மாதப்பிறப்பு நாட்கள் தோறும், வெள்ளிக் கிழமை தோறும் அம்பாள் உள்வீதியுலா வருதலும், ஆடிப்பூரத் திருவிழா அன்று மாலை அன்னைக்கு ருதுசாந்தி, குங்கும அர்ச்சனை நிறைவுடன், பூந்தண்டிகையில் அன்னை வெளி வீதியுலா வரும்போது நூற்றுக் கணக்கான கற்பூரச் சட்டிகளில் கற்பூர தீபமேந்திய அடியார்கள் புடைசூழ அன்னை சிவகாமி வீதியுலா வருவதும் தனிச்சிறப்பாகும்.

ஆடி மாதத்தில் செவ்வாய்க்கிழமைகள் அம்பாளின் சிறப்பான திருநாட்களாகும். விசேட விழாக்களான ஐப்பசி வெள்ளி, கார்த்திகைச் சோமவாரம், திருவெம்பாவை, தைப்பூசம், தை அமாவாசைத் தினம், மகாசிவராத்திரி ஆகியனவும் உற்சவங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி காலம்

இத்திருக்கோவிலில் நவராத்திரி காலத்தில் இணுவையூரில் உள்ள பெரும்பாலான வழிபடுவோர் இங்குவந்து பூசை விழாக்களில் கலந்துகொள்வர். நவராத்திரிக் காலங்கள் அன்னை சிவகாமி கொலு (தவம்) இருப்பாள். விசேட பூசை வழிபாடு, யந்திர பூசை குங்கும அர்ச்சனை யாவும் சிறப்பாக இடம்பெறும். மகாநவமியன்று மகிடாசூரன் போர். இத்திருக்கோவிலில் அழகிய மகிடாசூரன் பதினொரு தலைகளுடன் போரிட வருவதும் அன்னை சிவகாமி பிரத்தியேகமான அழகிய சிங்கவாகனத்தில் பவனி வருவதும் மிக கவர்ச்சியான காட்சியாகும். சூரனின் பதினொரு தலைகளும் வெட்டி வீழ்த்தப்பட்ட பின் சூரனின் வயிறு பிரிந்து சிவலிங்கம் வெளிவருவதும் கண்கொள்ளாக் காட்சியாகும். அயல் கிராமங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து கலந்துகொள்வது தனிச்சிறப்பாகும்.

மறுநாள் விஜயதசமியன்று அம்பாள் வாழை வெட்டுவதற்காகச் சிறந்த அமைப்புள்ள வெண்புரவியில் பக்தர்கள் புடைசூழ இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு முன்னிரவு வேளை வீதியுலா வருவாள். முகமூடி அணிந்த வேடதாரிகளும், மங்கல இசையும் முன்செல்ல, திருமுறை ஓதுவோர் பின்தொடர அம்பாள் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். வீதியின் இருமருங்கும் அமைந்திருக்கும் எல்லைமானப் பந்தலில் அம்பாளின் அர்ச்சனையைத் தொடர்ந்து அவல், கடலை, பழம், தேநீர் போன்றவை அம்பாளின் வாகனம் காவுவோர் உட்பட இதர தொண்டர்களுக்கு வழங்கப்படும். அம்பாள் இணுவில் கந்தசுவாமி கோவிலில் வாழைவெட்டி முடிந்ததும் கோவிற் பூசை முடிய தனது கோவிலுக்கு எழுந்தருளுவாள். இந்த உற்சவமும் அயல் கிராமத்தவர்கள் பலர் ஒன்றுகூடும் சிறப்புடையது. விஜயதசமியன்று ஆரம்பமாகும் அப்பாளது கௌரிவிரதம் அனுட்டிப்போர் ஆண், பெண் உட்படக் குறிப்பிட்ட விரதக்காப்பாக அன்னை சிவகாமி அம்பாள் திருக்கோவில் பிரதம சிவாச்சாரியாரிடம் தமது பெயரைப் பதிந்து விரதம் ஆரம்பிப்பார்கள். இவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் பூசையில் குறிப்பிட்ட பெயர் பதிவு செய்தவர்களுக்கு நூல் ஐப்பசிமாத அமாவாசை தினத்தன்று காப்புநூல் கட்டப்படும். கடந்த வருடம் (2003) ஐநூறுக்கும் மேற்பட்ட பக்தர்கள் விரதம் அனுட்டித்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இதே மாதத்தில் அம்பாளுக்கு நவகுண்ட ஹோமம், நவசக்தி அர்ச்சனை, இதன் தொடரில் நவகோண தங்கரத வீதியுலாவும் சிறப்பாக நடைபெறுகின்றன. அடுத்து வரும் பூரணை தினத்தன்று திருவிளக்குப் பூசையும், தை மாதத்தில் கும்பாபிஷேக தினங்களுக்கான விசேட அபிஷேகங் களும், தொடர்ந்து இலட்சார்ச்சனையும் நிறைவுகண்டு அடுத்த மஹோற்சவ காலம் தொடங்கும். இணுவில் கிராமத்தில் இவ்வளவு கூடுதலான பக்தர்கள் அக, புறத்தூய்மையாகவும் பக்திபூர்வமாகவும் இவ்விரதத்தை கைக்கொள்வது மக்களின் இறைநாட்டத்தை வெளிப் படுத்துகிறது.

## பக்தர்களின் காவடி

மகோற்சவ காலத்தில் சப்பறத் திருவிழாவன்று இணுவில் மருதனார்மடத்தில் உள்ள பல்லப்ப வைரவர் கோவிலிலிருந்து சப்பறத் திருப்பணிச் சபையினரும், நண்பர்களும், உறவினர்களுமாக இளஞ் சிறார்கள் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்டோர் எடுக்கும் காவடிகளும் பாற்குடம் ஏந்திவரும் வனிதையர் கூட்டமும் இத்திருவூரின் பக்தியின் பொலிவைக் காண்பிப்பர்.

தீர்த்தத் திருவிழா அன்றும் அனேக இளைஞர்கள் கூடிப் பல்லப்ப வைரவர் கோவிலிலிருந்து திரளான மக்களின் அணி வகுப்புடனும் பெண்களின் பாற்குடப் பவனியுடனும் காவடி ஆடி வருவது ஒரு தனிச் சிறப்பாகும். மற்றும் பக்தர்கள் பல்வேறு காவடிகளை தனித்தும் ஒருமித்தும் எடுத்துவந்து அன்னையை மகிழ்விப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னதானம்

மகோற்சவ காலத்தில் முதல் பத்து நாட்களும் திருவிழா உபயகாரர் அல்லது வேறு பக்தர்கள் தமது பொறுப்பில் அன்னதானம் செய்வர். தேர்த்திருவிழா அன்று பொது உபயமாகப் பலரின் உதவியுடன் சிறப்பாக நடைபெறும். தீர்த்தத் திருவிழா அன்றும் விசேடமாக வர்த்தகப் பிரமுகர்கள் தமது குடும்பத்தவரின் உபயமாகச் செய்வர். வெள்ளிக்கிழமை தோறும் பொதுமக்களின் உதவியுடன் சர்க்கரைப் பொங்கல் செய்து அங்கு வழிபடும் அடியவர்க்கு வழங்கப்படும்.

## சிரமதானம்

இத்திருக்கோவிலின் ஆரம்பகாலத்தில் பக்தி மேலீட்டினால் தொடங்கிய சிரமதானப்பணி தொடர்ந்து பெரியவர்களாலும் இளைஞர் களாலும் மாணவர்களாலும் உள்வீதி கூட்டிப் பெருக்குதல், கழுவிச் சுத்தம் செய்தல், நந்தவனத்தில் பூக்கள் கொய்து கோவிலில் சமர்ப்பித்தல், வெளிவீதியில் புல், பூண்டுகளை வெட்டிச் சுத்தம் செய்தல், மகோற்சவ காலத்தில் வெளிவீதியில் நீர்தெளித்தல், வாகனங்கள் தூசிதட்டிச் சுத்தம் செய்தல், சுவாமி காவுதல், அன்னதானத்தில் பணிசெய்தல் போன்ற சகல வேலைகளும், யாவராலும் போற்றப்படும் விதத்தில், உள்ளன்போடு செய்யப்படுவது இக்கிராம இளைஞரின் பக்திமேலீட்டினால் என்றால் மிகையாகாது.

## பஜனை பாடுதல்

இக்கலிகாலத்தில் இறைவனைப் புகழ்ந்து பாடிப் பரவசம் அடைந்தாலே சிறப்படையலாம் என்ற நோக்கோடு 100 வருடங்களுக்கு முன் பல தொண்டர்கள் பாடி மகிழ்ந்த பண்ணிசைப் பக்திப் பாடல்கள், பன்னிரு திருமுறைத்திரட்டில் உள்ளவாறு ஓதப்பட்டு வந்தன. வாழையடி வாழையாகச் சிலர் பாடுவதிலிருந்து விலகும்போது பல இளைஞர்கள் கூடிப் பாடி வருகின்றனர். அறநெறிப்பாடசாலைச் சிறுவர்கள் மகோற்சவ காலங்களில் தேவி வெளிவீதியுலா வரும்போதும், வெள்ளிக்கிழமை மாலை நேரத்திலும் நல்ல சிறப்பான முறையில் நல்ல இசையுடன் பஜனை பாடி மகிழ்விக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிவாரமூர்த்தங்கள்

அன்னை சிவகாமியின் திருக்கோவிலில் பரிவார மூர்த்தமாக கொடித்தம்பத்தின் கீழும், தென்மேற்திசையிலும் விநாயகரும், வடமேல் திசையில் வள்ளி தெய்வானையுடன் முருகப்பெருமானும், கீழ்த்திசையில் வைரவரும், இதன் மேற்கே நவகோள் நாயகர்களும், தெற்குவீதியில் சமயகுரவர் நால்வரின் சிலைகளும், கருவறையின் வடபால் உள்வீதியில் சண்டேஸ்வரியும் கருங்கல் உருவமாகக் காட்சிதருகின்றனர். உள்வீதியின் வடபால் சிவகாமி அம்பாளுடன் நடராசப் பெருமானும் (ஐம்பொன்), வசந்த மண்டபத்தில் எழுந்தருளிக் காட்சிதரும் விநாயகர், முருகன், சிவகாமி அம்மன், மாணிக்கவாசகர் ஆகியவையும் (ஐம்பொன்), அர்த்த மண்டபத்தில் வடபால் (ஐம்பொன்) அம்பாளும், நடுவே ஸ்ரீசக்ரமும் சண்டேஸ்வரியும் அமர்ந்துள்ளனர். இத்திருத்தலத்தின் தெற்கு உள்வீதிச் சுவரில் சிறப்பாக அன்னை நவசக்தியை யாவரும் மனதில் பதியவைக்கும் நோக்கில் ஒன்பது சக்திகளின் உருவங்களும் மிகப் பிரமாண்டமாகச் சிறந்த வர்ணங்களால் சித்திரிக்கப்பட்டுள்ளன. இதுவும் ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

## மகாகும்பாபிஷேகம்

சிவகாமி அம்பாளின் திருக்கோவிலில் 1974 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின் கும்பாபிஷேகம் செய்ய முடியவில்லை. நாட்டின் யுத்த நெருக்கடிகள், இடப்பெயர்வுகள் காரணமாக காலங்கள் கடந்தன. இவ்வூர்ப் பொதுமக்களின் தாராள நிதிவழங்கலில் முப்பது இலட்சம் ரூபாவுக்கு மேல் கும்பாபிஷேக நிதி கிடைத்ததால் கோவிலின் அவசியத் திருத்த வேலைகள் முடித்துக் கோபுரங்கள், பண்டிகைகள், ஊர்திகள் யாவும் அழகிய வண்ண நிறங்களால் பூசப்பட்டு 27.01.1999 அன்று மகாகும்பாபிஷேக குடமுழுக்கு நிறைவுபெற்றது. இக்கும்பாபிஷேக ஏற்பாடுகள் 10 நாட்களுக்கு முன் ஆயத்தமாகி 18.01.1999 தொடக்கம் பத்து நாட்களுக்குக் கிரியைகள் நடைபெற்றன. அருள்மயமாக நடைபெற்ற இக்கும்பாபிஷேக நிகழ்வில் பத்து நாட்களிலும் பண்ணிசைப் பக்திப் பாடல், நாட்டியம், விசேட சொற்பொழிவுகள், விசேட மங்கல வாத்திய இசைநிகழ்வு ஆகியன வெகுசிறப்பாக நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை சிவகாமியின் திருவருளால் பல பாதிப்புக்களின் மத்தியிலும் போர்க்காலத்திலும் இச்சூழலில் எவ்வித சேதமும் அழிவும் ஏற்படவில்லை. தெய்வபக்தி, நம்பிக்கை, பிறர்சொத்தை அபகரிக்கும் நோக்கமற்ற செயல், பிறரை அன்பால், பண்பால் உபசரித்து ஆதரவு நல்கும் முறை இவை யாவும் சீர் இணுவைத் திருவூரின் தவப்பேறாகும்.

"நம்பினார் கெடுவதில்லை. இது நான்குமறை தீர்ப்பு" என்ற முன்னோர் காட்டியபடி சகல ஆன்மாக்களையும் தெய்வமாக மதித்து வாழ்ந்து நற்பயன் பெறுவோமாக.


"சீரிணுவை நாயகிக்குத் திருமங்களம்"

**மு.சிவலிங்கம்**
இளைப்பாறிய கிராம அலுவலர்

---

**உசாத்துணை நூல்கள்.**

(1) சிவகாமி பிள்ளைத்தமிழ் (2) பஞ்சவர்ணத்தூது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியகோயில் எனப்படும்

# இணுவில் கந்தசுவாமி கோவில்



யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்தியில் விளங்கும் இணுவில் கிராமம் சைவப் பண்பாட்டிற்கும் தமிழ், இயல், இசை, நாடகத் துறைக்கும் பெயர்பெற்ற கிராமமாக இன்றும் திகழ்கின்றது. இதற்கான காரணம் இக்கிராமத்தின் தொன்மையே ஆகும். அன்று இணையிலி என அழைக்கப்பட்ட இந்நிலப் பரப்பின் பெயர் மருவி இணுவில் என வந்ததாக ஆய்வாளர் கூறுவர். இக் கிராமத்தின் சைவப் பண்பாட்டிற்கு, இவ்வூரில் காணப்படும் வரலாற்றுப் புகழ்பெற்ற ஆலயங்களும் இயல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை நாடகத் துறை வளர்ச்சியும், முன்பே ஆரம்பிக்கப் பட்ட தமிழ்ச் சங்கமும் அதனைத் தொடர்ந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களுமே காரணம் என்றால் மிகையாகாது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற ஆலயமாக இணுவில் மத்தியில் எழில் கொஞ்சும் இயற்கை வனப்புடன் திகழும் இணுவில் கந்தசுவாமி கோவில் காலத்தால் முற்பட்ட வரலாற்றுப் பெருமையைத் தன்னகத்தே கொண்டது.

இதற்கோர் எடுத்துக்காட்டாக அன்று செகராசசேகர மன்னரின் மைத்துனர் அரசகேசரி தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவினார் என்றும், அந்தத் தமிழ்ச்சங்கத்திற்குச் சங்குவேலி என்னும் வயற்பரப்புத் தானமாக வழங்கப்பட்டதாகவும் யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. ஆனால் இன்று அத் தமிழ்ச்சங்கம் அழிவுற்றாலும் முதல் தமிழ்சங்கத்தில் தமிழ் வளர்த்த தெய்வமான முருகப்பெருமானுக்கு, இணுவைக் கந்தப் பெருமானுக்கு இச்சங்குவேலி வயற்பரப்பிலிருந்து நெல்லுத் தானமாக வருடாவருடம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாலயம் அரசகேசரி காலத்திலமைந்த தமிழ்ச்சங்கத்துடன் தொடர்புள்ளது எனக் குறிப்பிடுவதற்குத் தக்க சான்று இவ்வாலயத்திற்குரிய சங்குவேலி வயற்பரப்பும் அங்கிருந்து இவ்வாலயத்திற்கு வழங்கப்பட்டு வரும் நெல்லும் அமைகின்றன

இவ்வூரின் வரலாறாக யாழ்ப்பாண வைபவமாலையில் செங்கரும்பும், செந்நெல்லும், கமுகும் தழைத்தோங்கும் இணுவிலில் மேழிக்கொடியுடையவனும் திரண்ட தோள்களையும் விரிந்த மார்பினையும் உடையவனும், குவளை மலர் மாலையை அணிந்த திருக்கோவிலூர் பேராயிரமுடையோன் முதலி ஆட்சித்தலைவனாக விளங்கினான் எனக் கூறப்படுகின்றது. இவனது காலம் கி.பி. 1365 என முதலியார் செ.இராசநாயகம் அவர்கள் யாழ்ப்பாணச் சரித்திரத்தில் எழுதியுள்ளார். அவன் மரபில் வந்த கனகராச முதலிகாலத்து ஆலயமாக இணுவைக் கந்தன் ஆலயம் கருதப்படுகிறது. இதற்கான கர்ணபரம்பரைக் கதை ஒன்று உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையிலி என அழைக்கப்பட்ட இணுவிற் கிராமம் மயிலங்காடு தொடக்கம் ஆனைக்கோட்டை வரை எல்லைகள் பரவியிருந்த காலம். முதலிக்குளம், காக்கைக்குளம் என்னும் இரு குளங்கள் மூலம் நீர் பாய்ச்சி வடக்குப்புறத்தே பருத்தியும் கரும்பும், கமுகும், தெற்குப்புறத்தே செந்நெல்லும் தழைத் தோங்கிய காலம். கனகராச முதலியினால் ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் சீரும்சிறப்பும் பெற்ற இப்பொற்காலத்தில் ஒருநாள் இரவு ஓர் ஒளிப்பிழம்பு தெரிவதை மக்கள் கண்டனர். அதனைக் கண்ணுற்றவர்கள் ஒளிப்பிழம்பு தெரியும் இடம் முதலியாரின் வீடு இருந்த திசையே என உணர்ந்து முதலியார் வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெற்போர் தீப்பிடித்து விட்டது எனக்கருதி நாலாபுறத்திலிருந்தும் முதலியார் வீடு நோக்கி ஓடி வந்தனர். முதலியார் வீட்டு முற்றத்தை அடைந்த மக்கள், அங்கு எவ்வித அனர்த்தங்களுமின்றி யாவும் வழமைபோல் இருப்பதைக் கண்டு அதிசயித்தனர். முதலியாரிடம் தாம் வந்த காரணத்தை விளக்கினர். முதலியார் அதற்குத் தான் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் வேளையில் இரு பிராமணச் சிறுவர்கள் தன்னை அணுகித் தாம் காஞ்சியிலிருந்து வந்ததாகவும், தம்மை ஆதரிக்குமாறும் கூறி மறைந்துவிட்டனர் என்று கூறினார். தனது குலதெய்வமாகிய காஞ்சியம்பதி குமரகோட்டக் கந்தப்பெருமானே தனக்கும் தனது குடிமக்களுக்கும் நல்லருள் பாலிக்கும் பொருட்டுக் காட்சிகொடுத்துள்ளாரென மனம்நெகிழ்ந்து இறைவனின் திருவருளை வியந்து ஆனந்தத்தில் சிலிர்த்தார். முதலியார் சித்தத்திற்கிணங்க முருகப்பெருமானையும் , வைரவப் பெருமானையும் இல்லத்தில் குடிலமைத்து வழிபட்டு வந்தாரெனக் கர்ண பரம்பரைக்கதை ஒன்றுள்ளது.

இக்கனகராச முதலிக்கு மக்கள் நினைவுக்கல் நாட்டி வழிபட்ட இடமே இன்று இவ்வாலயத்திற்கு முன்பாகக் காணப்படும் "முதலியாரடி" எனப்படும் சிறு ஆலயமாகும்.

1620 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் வருகையால் கிறிஸ்தவ சமயம் மேலோங்கி ஏனைய மதங்களும் சுதேச மக்களது பண்பாடு பழக்க வழக்கங்களும் அதற்கிரையாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகின. அதற்கமைவாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயரால் பல ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டன. சமய அனுட்டானங்களைப் பேணியோர் தண்டிக்கப்பட்டார்கள். அக்காலத்தில் அந்த அன்னியரால் அழிவுக்குட்பட்டு அழிந்து போன இத்தலம் மீண்டும் 1661 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்டுத் தோற்றம் பெற்றதே தற்போதுள்ள கந்தசுவாமி கோவிலாகும். அக்காலத்தில் வாழ்ந்த குழந்தையர் வேலாயுதர் என்பவரது கனவில் கந்தக் கடவுள் தோன்றித் தம்மை ஆதரிக்கும் படியும், தான் காஞ்சியிலிருந்து வந்ததாகவும் கூறி "உனது வெற்றிலைத் தோட்டத்தில் நாட்டப்பட்டுள்ள நொச்சி மரத்தடியில் காலால் மிதித்து அடையாளம் இட்டிருப்பேன்" அவ்விடமே எனது இருப்பிடம் எனக்கூறி மறைந்தார். அதிகாலை எழுந்த வேலாயுதர் தான் கண்ட கனவை எண்ணியவாறு வெற்றிலைத் தோட்டத்திற்குச் சென்றார். இது என்ன அதிசயம் கண்டது கனவல்ல நனவுதான் என உணர்ந்தார். பெருமான் உரைத்ததற்கிணங்கப் புதிதாக ஓர் நொச்சிமரம் நாட்டப்பட்டு அருகில் பாதச்சுவடும் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினார். அவ்விடத்தில் குடிலமைத்து வேற்பெருமானை வணங்கி வந்தார்.

மேலே கூறிய சம்பவத்திற்கிணங்க ஆலயம் அமைந்துள்ள காணியின் பெயர் நொச்சியொல்லை மிதியன் என வழங்கப் படுகிறது. இவ்வாலயத்தின் தலவிருட்சமாக இன்றும் அந்த நொச்சி மரம் கருவறைக்கருகில் நிற்பதைக்காணலாம்.

இறைவனது அருளாட்சியில் இவ்வூர் மக்கள் கவரப்படப் பக்தர்களின் வருகை அதிகரிக்கத் தொடங்கியது. ஆலயத்தின் பூசைவழிபாடுகளை வேலாயுதரின் மகன்மாரில் ஒருவரான அருணாசலம் என்பவர் நடத்தி அருட்கடாட்சத்திற்குட்பட்டு வாக்குச் சித்தி பெற்றதுடன் விபூதிப்பிரசாதத்தின் மூலம் தீராத நோய்களைக் குணப்படுத்தும் அருளாளராகவும் காணப்பட்டார்.

முருகப்பெருமானை நாடிவந்து பிணி தீரப்பெற்று அருள் வாக்குப் பெற்றுச் செல்லும் அடியவர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து, குடிலாக அமையப்பெற்ற ஆலயம் வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுச் செங்கற் கோயிலாக மாற்றமடைந்தது. செங்கற் கோயிலில் வேற்பெருமானைப் பிரதிஷ்டை செய்து குட முழுக்கும் நிகழ்த்தப்பட்டது. கூட்டுப்பிரார்த்தனை, கந்தபுராணபடனம் என்பன அடியவர்களால் நிகழ்த்தப்பட்டன. இந்த அருட் செயற்பாடுகளால் அயற்கிராமங்கள் மட்டுமன்றி தூரவுள்ள கிராமங்களும் கவரப்பட்டன. எம்பெருமானை நாடி வந்த மக்கட் தொகைக்கேற்ப செங்கற் கோயிலை வெள்ளைக் கற்கோயிலாகக் கட்டுவதற்கு முருகன் அடியவர்கள் சித்தம் கொண்டனர். அதற்கிணங்க அருணாசலத்தின் மகன் சுப்பிரமணியத்தினது காலத்தில் தொடங்கப்பட்ட வெள்ளைக்கல் வேலைகள் அவரது மகன் ஆறுமுகத்தின் காலத்தில் 1840 ஆம் ஆண்டளவில் நிறைவு பெற்றது.

ஆண்டவனுக்கு வெள்ளைக்கல்லால் ஆலயம் அமைக்கும் பணியை ஆறுமுகம் மேற்கொண்டு வரும் காலத்தில் ஆலயம் அமைப்பதற்குப் பெரும் பொருட் செலவு ஏற்படுவது கண்டு செலவினை எப்படி ஈடு செய்வேன் என்று எண்ணி ஆறுமுகம் எம் பெருமானைத் துதித்தார். எம்பெருமான அவரின் கனவில் தோன்றி அயலூரான தாவடியில் வசிக்கும் கோமேசு முதலியாரிடம் செல்வாயாக எனப் பணித்தருளினார். அதேபோன்று கோமேசு முதலியாரின் கனவிலும் தோன்றி எனது அடியவன் ஆறுமுகம் என்பால் கொண்ட அன்பினால் எனக்கு ஆலயம் அமைக்க உன்னை நாடிவருவான் ஆவனசெய்வாய் எனக்கூறியருளினார். மறுநாட்காலை ஆறுமுகம் முதலியார் வீட்டை அடையவும் முதலியார் ஆறுமுகத்தை எதிர்கொண்டு வரவேற்று ஆண்டவன் திருவிளையாடலை எண்ணிக் கண்ணீர் மல்கி நின்றார். கோமேசு முதலியார் தன் தம்பியாரின் உதவியுடன் இத்திருப்பணியைச் செய்துதவினார்.

இத்திருப்பணியின் போது சிலர் வெள்ளைக்கற்களைப் பொளியவும் சிலர் கற்களை வைத்துக்கட்டவும் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. கட்டிட வேலையாள் கோறைக்கல் ஒன்றை ஆலயச்சுவர் ஒன்றில் வைத்துக் கட்டிவிட்டார். அக்கல் கோறை என்பதனை உணர்த்துவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமான் அணில் வடிவில் அக்கல்லின் மேல் ஏறி விளையாடியதாகவும் அணிலின் குறிப்பை உணராத சிற்பி அணிலைக் கல்லால் எறிந்து துரத்திவிட, இறைவன் இரவு கோமேசு முதலியின் கனவில் தோன்றி, தான் அணில்வடிவில் இருந்த கல்லை அகற்றுமாறு பணித்ததாகவும் அகற்றிய அக்கல்லில் கோறை இருப்பதைக் கண்டு யாவரும் அதிசயித்து முருகப் பெருமானுடைய அருட்சாந்நித்தியம் ஆலயத்தின் மேல் இருப்பதை உணர்ந்து கண்ணுங்கருத்துமாக திருப்பணியைச் செய்துமுடித்ததாகவும் இவ்வூரார்கள் கூறுவர்.

1840 ஆம் ஆண்டளவில் கட்டிமுடிக்கப்பட்டுக் குடமுழுக்குச் செய்யப்பட்டு, ஆலயத்திற்கு நித்திய நைமித்திய பூசைகளைக் கவனிப்பதற்கென, காஞ்சியிலிருந்து வரவழைக்கப்பட்ட திம்மசேனர் என்னும் பிராமண உத்தமர் நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து புங்குடுதீவிலிருந்து வந்து அராலியில் குடியேறிய சரவணைஐயர் என்பவர் பூசைகளைக் கவனித்து வந்தார் என்று அறியக்கிடக்கின்றது.

இவ்வாலயத்தின் பூசைகளை இனிது செய்துகொண்டிருந்த செல்லையா சின்னையா என்பவருக்குப் புத்திரப்பேறின்மையால் எம்பெருமானை வேண்டி ஆறுமுகப்பெருமானின் திருவுருவைத் தான் அமைப்பதாக நேர்த்தி வைத்துத் தமக்கு புத்திரர்களைத் தந்துதவுமாறு வேண்டினார். தனது சித்தப்படி ஆறுமுகப் பெருமானை வள்ளி தெய்வயானை சமேதராய் மயில்மேல் இருந்த பாவனையில் உருவாக்க எண்ணினார் ஐயர். அதன்படி ஆலயத்தில் எம்பெருமானை ஐம்பொன்னில் வார்க்க எடுத்த முயற்சி இருமுறை கைகூடவில்லை. இதனைக்கண்ட ஐயர் மனம்நொந்து எம்பெருமானை வேண்டிநின்றார். ஐயரது கனவில் தோன்றிய எம்பெருமான் தான் நின்ற பாவனையில் திருச்செந்தூரில் இருப்பதைப் போன்ற தோற்றத்தில் வண்ணார்பண்ணையில் ஸ்தபதி வீட்டில் அமையப்போவதாகக் கூறியருளினார். ஆண்டவனது அருள்வாக்கைச் சிரமேற்கொண்ட சின்னையர் பஞ்சலோகங்களையும் ஏனைய உலோகங்களையும் எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஸ்தபதியின் இல்லம் சென்று நடந்தவற்றைக் கூறினார். இவற்றைக்கேட்டு உவகையடைந்த ஸ்தபதி விக்கிரகம் அமைக்க வேண்டிய அளவுப்பிரமாணத்தை எம்பெருமானிடம் கேட்டுரைக்கும் படி வேண்டினார். ஆலயத்தை அடைந்த ஐயர் விக்கிரகத்தின் அளவுப்பிரமாணத்தை வேண்டி இறைவனிடம் விண்ணப்பம் செய்தார். ஐயரின் கனவில் தோன்றிய எம்பெருமான் நீர் குக்கட ஆசனமாக இருப்பீரானால் எவ்வளவுஉயரம் தோன்றுகிறதோ அதுவே எனக்குரிய அளவுப்பிரமாணம் எனக்கூறியருளினார். அதற்கிணங்கச் சின்னையா ஐயரது குக்குடாசனத்தின் உயரத்திற்கேற்ப வார்க்கப்பட்ட ஆறுமுகப்பெருமான் திருவுருவமே இன்றும் இங்கு நாம் தரிசிக்கும் ஆறுமுகப்பெருமானாவார். இது 1886 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்ததெனக் கூறுவர். தமிழ் நாட்டில் இருந்து வந்த கலைஞர்கள் கூட எம்பெருமானது திருவுருவம் போன்று இந்தியாவிற் கூடப் பார்த்ததில்லை என வியந்து கூறுகின்றமை ஆறுமுகப்பெருமானது திவ்விய மூர்த்திகரத்துக்கு எடுத்துக்காட்டாகும்.

அருள் மலிந்தோங்கி அடியவர்களை மெய்யுருகச் செய்யும் எம்பெருமானாம் கல்யாணவேலரின் பெரும்பதியான இணுவைக் கந்தகோட்டத்திற்கு அருளாளர் பெரிய சன்னியாசியார் எனப் போற்றப்படும் ஆறுமுகம் சந்நியாசியாரது அருள்தொண்டு 1891 ஆம் ஆண்டளவில் கிடைக்கப்பெற்றது. கந்தவேள் பெருமானது கருணையும் அருள்வாக்கும் சந்நியாசியார் மூலமாக அடியவர்களுக்கு அனுக்கிரகிக்கப்பட்டன. அடியவர்கள் யாவரும் அன்னாரின் வாக்கு அருள்வாக்கு எனவும் அவரது கட்டளை ஆண்டவனது கட்டளை எனவும் எண்ணித் தம்பணிகயை இயற்றி வந்தனர். அருளாளர் எம்பெருமானுக்கோர் திருமஞ்சம் அமைப்பதற்குத் திருவுளம்கொண்டார். திருமஞ்சத்தினைச் செவ்வனே செய்துமுடிக்கக்கூடிய சிற்பவல்லுநர்களைத் தேடியபோது எம்பெருமானே வழிகாட்டினார். தமிழ்நாட்டிலே தாம் கற்ற கலையாற்றலை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் காத்திருந்த சிற்பவல்லுநர்களிடம் எம்பெருமான் சந்நியாசியார் வடிவில் சென்று இணுவில் கந்தசாமி கோவிலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சம் செய்யவரும்படி கூறியருளினார். அதேபோன்று சந்நியாசியாரின் கனவில் தோன்றி உனது மஞ்சத்திருப்பணிக்கான ஆசாரிமார்கள் ஊர்காவற்றுறைக் கரையை அடைந்துள்ளார்கள் அழைத்துவா எனப்பணித்தார். அதற்கிணங்கி அருளாளரும் சிற்பாசாரிகளும் சேர்ந்து உருவாக்கிய இக்கலைக்கூடம் சைவ உலகின் முதல் மஞ்சம் என்னும் பெருமையைப் பெற்றுள்ளது. இம்மஞ்சத்தின் ஆரம்பவேலைகள் பெரிய சந்நியாசியார் சஞ்சரித்த இடத்திலே அவரின் மேற்பார்வையின் கீழ் 1910 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1912 ஆம் ஆண்டு மஞ்சம் வெள்ளோட்டத்திற்கு விடப்பட்டது. அன்னாரது கண்காணிப்பில் மஞ்சவேலைகள் ஆரம்பமான இடமும் காரணப்பெயர் கொண்டு இன்றும் மஞ்சத்தடி என அழைக்கப்படுகின்றது. அன்னாரது சமாதியே மஞ்சத்தடி அருணகிரிநாத கந்தசுவாமி கோவிலாகும். அன்னாரது காலத்தில் எம்பெருமானால் நிகழ்த்தப்பட்ட அற்புத லீலைகள் பல. அவற்றை இன்னும் இவ்வூர் மக்கள் எண்ணி மனம் நெகிழ்வர்.

அன்னாரது காலத்திலே அவரது வேண்டுகோளிற்கிணங்க வேலாயுதர் ஆறுமுகம் என்பவரால் ஆலயத்திற்கு ஓர் கேணி உருவாக்கப்பட்டது. அக்கேணி காலப்போக்கில் தூர்ந்துவிட வேலாயுதம் ஆறுமுகம் மரபில் வந்தவர்களால் கேணிக்குரிய நீரூற்றுப் பாதுகாக்கப்படும் பொருட்டுத் தற்போது கிணறாக வடிவமைக்கப்பட்டுக் காட்சியளிக்கிறது. ஆலயத்தின் மேற்குப் புறமாகக் காணப்படும் இக்கிணறும், கிணற்றிற்கு வடக்கே காணப்படும் ஆவுரஞ்சிக்கல்லும் கேணி இருந்த இடத்தை உறுதி செய்வனவாக உள்ளன.

இவ்வாலயத்திற்குச் சுதுமலையைச் சேர்ந்த முத்து நாகலிங்கம் என்பவரால் 1905 - 1909 காலப்பகுதிகளில் மூன்று தளங்களைக் கொண்ட கோபுரம் ஒன்று சோழர்காலச் சிற்பமரபை ஒட்டி அமைக்கப்பெற்றது. அக்கோபுரம்இப்போது ஐந்து மாடிகளைக் கொண்டதாக மாற்றியமைக்கப்பட்டது. ஆலயத்தின் முன்பாகத்திலுள்ள ஊஞ்சல் மடமும் அன்னாராலேயே கட்டப்பட்டது. ஆலயத்தின் கண்டாமணியும் மணிக்கூட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபுரமும் 1946 ஆம் ஆண்டு சிதம்பரநாதர் பொன்னையா என்பவரால் பொதுமக்களின் அனுசரணையுடன் உருவாக்கப் பட்டது. இறையருள் பொங்கித் ததும்பும் இவ்வாலயத்தின் முகாமைத்துவ மாற்றங்களால் சிறுதடங்கல்கள் ஏற்பட்டமை வருந்தத்தக்க விடயமே. இருப்பினும் 1953 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ஆம் தேதி உயர்நீதிமன்றத் தீர்ப்பு இவ்வாலயம் பொதுக் கோவில் எனவும் பொதுமக்களால் தெரிவுசெய்யப்படும் நிர்வாகிகளே இவ்வாலயத்தை வழிநடத்த வேண்டும் எனவும் பிரகடனம் செய்கிறது. 28 ஆதனங்களைக் கொண்ட - ஏறக்குறைய 600 பரப்புக் காணிகளை அயற் கிராமங்கள் உட்படத் தர்ம சாதனமாகப் பெற்ற இவ்வாலயம் பெரிய கோவில் என அழைக்கப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றே. 1967 ஆம் ஆண்டு இவ்வாலயம், இருதள விமானங்களைக் கொண்ட கருவறை அமைக்கப்பட்டுப் புனருத்தாரனம் செய்யப்பட்டு மூலவராக இருந்த வேற் பெருமானுக்குப் பதிலாக வள்ளி தெய்வயானை சமேத முத்துக் குமாரசாமி பிரதிஷ்டை செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து நித்திய நைமித்திய பூசைகள் காலக்கிரமமாகப் பேணப்பட்டு வருகின்றன. 25 நாட்கள் பிரமோற்சவத்தைத் தன்னகத்தே கொண்ட இவ்வாலயம் ஆனிமாத அமாவாசைத் தினத்தன்று தீர்த்தோற்சவத்தைக் காண்கிறது. தீராத வினைகள் தீர்க்கவல்ல நீர்ச்சுனைகளைத் தன்னகத்தே கொண்டு அருள் பொழிகின்றது. சாந்தியடியான் - விளாத்தியடியான் எனப் போற்றப்படும் வைரவர் ஆலயத்திறகு முன்பாக அமையப்பெற்ற தீர்த்தம் அடியவர்களுக்கோர் வரப்பிரசாதம் எனலாம். இத்தீர்த்தத்தில் நீராடித் தமது தீராத வினைகள், பிணிகள் தீர்க்கப்பட்ட அடியவர்கள் பலர்.

இவ்வாலயத்தின் கந்தசஷ்டித் திருவிழா வெகு சிறப்புப் பொருந்திய திருவிழாவாகக் காணப்படுகிறது. மஹோற்சவத்தினைப் போன்று யாகம் அமைக்கப்பட்டு 6 நாட்களும் யாக பூசை செய்யப்படுகிறது. உற்சவ மூர்த்தியாக ஆறுமுகப்பெருமானே எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். 6 நாட்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராணத்தில் வரும் சூரபதுமன் வதைப்படலம் படிக்கப்பட்டு உரை சொல்லப்படுகிறது. இக்கைங்கரியம் இவ்வாலயத்தில் தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் ஒரு சம்பவமாகும். சூர சங்காரத்தின் போது ஆறுமுகப்பெருமான் கடாவாகனத்தில் எழுந்தருளிச் சூரபத்மனுடன் போர் புரியும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். பக்தர்களைப் பரவசமூட்டும் இச்சூரன் போரினைக் கண்டுகளிக்க ஆயிரக்கணக்கான பலவூர் அடியார் கூட்டம் ஆலயத்தில் அலைமோதும். சூரசங்காரத்தின் மறுநாள் காலை சூரிய உதயத்தின்போது ஆறுமுகப்பெருமான் கோவில் வாயிலிலுள்ள கந்தபுட்கரணி என்னும் தீர்த்தத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறும். அன்று மாலை திருக்கல்யாண வைபவம் நடைபெறும். ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராய் வீதியுலா வந்து பக்தகோடிகளுக்கு அருட்காட்சி கொடுப்பார். தொன்றுதொட்டே மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் முறையாக அமையப்பெற்ற இத்தலம் போற்றுதற்குரியதொன்றே. மூர்த்தியாக ஆறுமுகப்பெருமானும் தலவிருட்சமாக நொச்சிமரமும் தீர்த்தமாக வைரவ தீர்த்தமும் காணப்படுகின்றன. இந்தியாவில் பல கோவில்கள் இருந்தும் கோவில் என்னும் பெயர் சிதம்பரத்திற்கே உரித்துடையதாகக் கருதப்படுகிறது. அது போன்று இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியைப் பார்வையாகக் கொண்ட பல கோவில்கள் இருந்தும் இன்றும் கோவில்வாசல் என்று காரணப்பெயர் கொண்டு அழைக்கப்படுவது முருகன் பார்வையிலுள்ள இணுவில் சந்தியே ஆகும். இவ்வாலயத்தின் தொன்றுதொட்ட பெருமைக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

இவ்வாலயத்தின் ஆறுமுகப்பெருமானுக்கு 1976 ஆம் ஆண்டளவில் சித்திரத்தேர் ஒன்று திரு. வல்லிபுரம் சுப்பையா என்பவரால் ஊர்மக்களின் உதவியுடன் இனிதாக அமைக்கப் பட்டுள்ளது. ஆலயத்தின் இளந்தொண்டர்சபையினரால் 1977 ஆம் ஆண்டளவில் ஊர்மக்களின் பேருதவியுடன் அரிய சப்பறமும் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் வேட்டைத் திருவிழாவின்போது எம்பெருமான் பவனிவரும் சிவப்புக் குதிரைவாகனம் ஏறத்தாழ 100 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. கலைநுணுக்கங்கள் நிறைந்து கம்பீரமாகக் காட்சி தரும் குதிரைவாகனம் வேலாயுதர் செல்லையா என்பாரின் முன்னோர்களால் வட்டுக்கோட்டையில் இருந்த சிற்பவல்லுநர்களைக் கொண்டு உருவாக்கப்பெற்றதாகும்.

இதே போன்ற அமைப்பை உடையதே எம்பெருமான் சூரசங்காரத்தின் போது பவனி வரும் கடாவாகனமும் ஆகும். இதனுடைய காலமும் 100 ஆண்டுகள் கடந்ததே. சாத்திரி சின்னையா என்னும் அடியவருக்கு எம்பெருமான கனவில் தோன்றித் தனக்குக் கடாவாகனம் அமைக்கும் படி கூறினார். இதற்கேற்ப அமைக்கப்பட்ட கடாவாகனத்திற்குக் கொம்பினைச் சரியான முறையில் அமைப்பதற்குச் சிற்பி பெருமுயற்சி எடுத்தார். சிற்பியின் முயற்சி கைகூடவில்லை. சாத்திரி சின்னையாவின் கனவில் முருகப்பெருமான் தோன்றிக் கடா ஆட்டிற்குக் கொம்பு எப்படி இருக்குமோ அதே போன்ற தோற்றத்தில் ஒரு பற்றைக்குள் கொடியொன்று திரண்டு முறுகி இருப்பதை இடக்குறிப்போடு உணர்த்தி அருளினார். ஆண்டவனால் உணர்த்தப்பட்ட கொடியே இன்றும் இவ்வாகனத்தின் கொம்பாகப் பரிமளிக்கிறது. ஆண்டவனின் சித்தப்படி அமைக்கப்பெற்ற ஆறுமுகசுவாமியையும், கடாவாகனத்தையும் சூரசங்காரத்தின் போது தரிசிப்பதற்காக அயல் நாடான இந்தியத்தமிழகத்தில் உள்ள வேதாரணியத்தில் இருந்து கூட அன்றைய நாட்களில் அடியவர்கள் வந்து சென்றதாகக் கூறப்படுகிறது.

இவ்வாலயத்தில் காணப்படும் விக்கிரகங்கள் இறையருள் ததும்பும் முகபாவனையும் உடல்வாகும் கொண்டு அமையப் பெற்றுள்ளன. இவ்வாலயத்தின் சிலவிக்கிரகங்கள் காலத்தால் முந்தியவை. ஆராய்ச்சிக்குரியவை. இவ்வாலயத்தில் காணப்படும் முருகக்கடவுளுக்குரிய விக்கிரகங்களாகக் கருதப்படுபவை ஆறுமுகப்பெருமான், கல்யாணவேலவர், முத்துக்குமாரசாமி, தண்டாயுதபாணி, சத்துருசங்கார வேற்பெருமான் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவங்களாகும். இவற்றில் சத்துருசங்கார வேற் பெருமானது உருவம் காலத்தால் முற்பட்டது. ஆராய்வுக்குரியது. இரண்டு கைகளிலும் அபயவரத அம்சங்களைக் காட்டும் நாலு கைப்பதங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு அமையப்பெற்ற அபயகரபாதங்கள் நுனியில் வேலைத்தாங்கிய வண்ணமும் அமையப்பெற்றிருக்கும் இத் திருவுருவம் ஆராய்ச்சிக்குரியதாகக் காணப்படுகிறது. இத்தகைய திருவுருவம் இந்தியாவிலும் எந்த ஆலயத்திலும் காணப்படவில்லை. தமிழ்நாட்டில் உள்ள திருப்பரங்குன்றத்தில் நின்றும் ஆறுமைல்கல் தொலைவில் "பாகை" என்னும் கிராமம் உள்ளது. அக்கிராமத்தில் வில்வ மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதியில் ஆறடி உயரங்கொண்ட கற்சிலை ஒன்று இதே அமைப்பை எடுத்துக் காட்டுகிறது. அவ்வூர் மக்களின் விருப்பத்திற்குரிய பெருந்தெய்வமாக சத்துருசங்காரவேற் பெருமான விளங்குகிறார்.

ஆலயத்தின் சிவமூர்த்தங்களாகச் சோமஸ்கந்த முகூர்த்தம், சிவலிங்கம், நடேசர், சந்திரசேகரர், போன்றன காணப்படுகின்றன. இவற்றுள் சிவலிங்கம் ஆராய்வதற்குரியதொன்றே! இது இரண்டு கோமுகைகளைக் கொண்ட ஆவுடையாரும் லிங்கமும் ஐம்பொன்கலந்த தாமிர விக்கிரகமாக உருவாக்கப் பட்டுள்ளது. பிரமாணத்திற்கு அப்பாற்பட்டது எனவும் பிராமணர் அல்லாத ஏனைய வருணத்தார் வணங்கிப் பூசிப்பதற்கு ஏற்றது எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.

பரிவாரமூர்த்தங்களாகப் பிள்ளையார், சோமஸ்கந்தர், வேணுகோபாலர், மகாலட்சுமி, தண்டாயுதபாணி, வைரவர், நாகதம்பிரான், சூரியசந்திரர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் என்பன அமைக்கப்பட்டுள்ளன. இப் பரிவாரமூர்த்தங்களில் ஒன்றாகக் கருதப்படும் வைரவப்பெருமான் விளாத்தியடியான் என அழைக்கப்படும் இச்சந்நிதி தனிச்சிறப்புப் பெற்றது. வேண்டும் அடியார்களது வெவ்வினை போக்கவல்லவர் இவ்வைரவப் பெருமான். எம்பெருமான் காட்டிய அருட்திருவிளையாடல்கள் பல. அவற்றை எழுதமுற்படின் அது தனிப்புத்தகமாகவே அமைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரந்தோறும் வருகின்ற வெள்ளிக்கிழமைகளில் கல்யாணவேலவரும், மாதம் தோறும் வருகின்ற கார்த்திகைத் திருவிழா, மாதப்பிறப்பு மற்றும் ஏனைய விசேட திருவிழாக்களின் போது முத்துக்குமாரசாமியும் வீதியுலா எழுந்தருளி அருட்காட்சி கொடுப்பர்.

மஹோற்சவத்தில் காணப்படும் 12 ஆம் திருவிழாவும், தைப்பூசத் திருவிழாவும் மஞ்சத் திருவிழாவாகக் காணப் படுகின்றன. சந்நியாசியார் காலத்தில் தைப்பூச மஞ்சத் திருவிழாவிற்கு இலங்கையின் பலபாகத்திலிருந்தும் இந்தியத் தமிழ்நாட்டில் இருந்துங்கூட அடியவர்கள் வந்து சென்றதாகக் கருதுவதற்கு ஏதுகள் பல உள. இணுவை மஞ்சம் பற்றிய ஆய்வுக்கட்டுரையில் தொல்பொருள் துறைப் பிரதேச அதிகாரி மா.பொ.செல்வரத்தினம் பின்வருமாறு கூறுகிறார். "1912 அளவில் மஞ்சம் வெள்ளோட்டம் காணப்பெற்றது. கிழக்கு வீதியருகே நிழல்தரு மரமாக அன்று நின்று, இன்று பெருவிருட்சமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கும் மருதமரத்திற்கருகே மஞ்சக் கொட்டகை அமைக்கப்பெற்றது. கூரையைக் கழற்றி மஞ்ச ஓட்டத்தைக் கவனிப்பதற்கு வல்வெட்டித்துறையில் இருந்து பெரிய கப்பிகள், பெரிய கப்பல் வடக்கயிறுகள் ஆகியவற்றோடு பலம்வாய்ந்த மக்கட்கூட்டமும் வரும். இத்திருவிழாவைப் பார்ப்பதற்கு நாலாதிக்கும் இருந்தும் மாட்டுவண்டிகள் மூலமாகவும் கால்நடையாகவும் மக்கள் வந்து கூடுவர். யாழ்ப்பாணப் பிரதான வீதியான காங்கேசன்துறை வீதியின் வடக்கே மருதனார்மடம் தொடக்கமாகவும் தெற்கே தாவடிச் சந்தி வரையும் கிழக்கே கோண்டாவில் தொடக்கம் மேற்கே சுதுமலை வரையும் சனக்கூட்டமாக இருக்கும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

1912 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் கண்ட மஞ்சம் பழுதடைந்த நிலையில் சிறிது காலம் பயன்படுத்தப்படாமல் நிற்பது கண்டு அடியவர்கள் எடுத்த முயற்சியால் திருமஞ்சமானது தொழிலதிபர் கல்கி சின்னத்துரை அவர்களாலும் அவருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளோடு தோள்நின்று கண்ணும்கருத்துமாகத் திருத்த வேலைகளைக் கவனித்து வந்த அப்பையா இராசநாயகத்தாலும் மீண்டும் புதுப்பொலிவு பெற்றது. 40 அடி உயரமுள்ள மஞ்சக் கொட்டகையும் பாதுகாப்பாக 1983 இல் அமைக்கப்பட்டது. திருமஞ்சத்தில் ஆண்டு தோறும் 2 தடவை எம்பெருமான் பவனி வந்து அருள்பாலிப்பது இவ்வாலயத்திற்கும் இணுவை வாழ் அடியார்களுக்கும் கிடைத்த பெரும்பேறே எனலாம்.

மார்கழி மாதத் திருவெம்பாவைத் தினத்தில் மணிவாசகப் பெருமான் வீதியுலாவந்து திருவெம்பாவை பாடி அமைவதாக திருவிழாக்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. இறுதி நாளான திருவாதிரையின் போது அடியார்கள் பசனைக்கேற்ப நடராஜப்பெருமான் நடனமாடி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உட்பிரகாரக் கோவில்கள் ஐந்தும் (சோமாஸ்கந்தர், சந்தான கோபாலர், இலக்குமி, நாகதம்பிரான், மணிக்கூட்டு வைரவர், சந்திர சூரியர் கோவில்கள்), வசந்தமண்டபம், யாகசாலை என்பனவும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. யாவும் பொதுமக்களின் உதவியுடன் மாத்திரம் கட்டப்பட்டுள்ளன. 80 அடி நீளமும், 48 அடி அகலமும் கொண்ட மணிமண்டபமும் பூர்த்தியாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இவ்வாலயத்திற்கு இரண்டாவது கண்டாமணி வெளி நாட்டு அன்பர்களின் உதவியுடன் திரு.செ.சோதிப்பெருமாள் ஆசிரியரது பெருமுயற்சியால் இலண்டனிலிருந்து வருவிக்கப் பட்டு 2001 ஆம் ஆண்டளவில் புதிதாக அமைக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏற்றப்பெற்று ஓங்கி ஒலிக்கிறது. தற்போது இவ்வாலயம் 2 மணிக்கோபுரங்களையும் 5 தளங்களைக் கொண்ட இராச கோபுரத்தையும் கொண்டு புதியதோர் பரிமாணத்தில் காட்சியளிக்கிறது. ஆறுமுகசுவாமி வாசலிலும் புதியதோர் கோபுரம் விரிவுரையாளர் கலாநிதி இ.விக்கினேஸ்வரன் அவர்களின் பெருமுயற்சியால் அமைக்கப்பட்டுக் குடமுழுக்காட்டப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானாம் சுப்பிரமணியச்செவ்வேளுக்கு அன்று தொடக்கம் இன்றுவரை பாவலர்கள் பாமாலை புனைந்த வண்ணமும், ஆடல்வல்லோர் எம்பெருமானுக்குக் காவடி எடுத்து ஆடிய வண்ணமும், இசையாளர் எம்பெருமான் புகழை இனிமை ததும்ப இங்கிதமாகப் பாடியவண்ணமும் உள்ளனர்.

அந்தவகைப் பாமாலை புனைந்த பாவலர்களையும் பாடல்களையும் எண்ணுமிடத்து, வறுத்தலைவிளான் மயில்வாகனப் புலவரின் இணுவைப்பதிகமும், இணுவைச் சின்னத்தம்பிப் புலவரின் கல்யாணவேலர் திருவூஞ்சலும், கணபதிதாசனின் இணுவை முருகன் பக்தி ரசக்கீர்த்தனையும், முதுபெரும்புலவர் திரு.சிற்றம்பலம் ஆசிரியரின் இணுவை அந்தாதியும், பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் இணுவை முருகன் பிள்ளைத்தமிழும் நூல் வடிவில் உள்ளன. மேலும் தவத்திரு வடிவேற்சுவாமிகள், இணுவை அம்பிகைபாகன், வீரமணி ஐயர், பண்டிதர் இ.திருநாவுக்கரசு, பண்டிதர் இ.இராசலிங்கம், திரு.அ.க.வைத்திலிங்கச் சட்டம்பியார் போன்றோராலும் இணுவைக் கந்தப்பெருமானுக்குப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

ஆண்டவருக்குக் காவடி எடுத்து ஆடுபவர்களான அனுமான் கதிர்காமர், தாமோதரம்பிள்ளை, புளியடி முருகேசு, வேலாயுதர் செல்லையா, காசியர் கணேசு, ஆசிரியர் இராசையா போன்றவர்களது காவடிகள் வருடாவருடம் குறித்த தினங்களுக்கு நேர்த்தியாக எடுக்கப்பட்டு வந்தன. தொடர்ந்தும் எடுக்கப்பட்டு வருகின்றன. இளந்தொண்டர்சபையினரின் காவடி தீர்த்தத் திருவிழாவின்போது அன்னை சிவகாமி அம்பாள் ஆலயத்தினின்றும் எடுக்கப்பட்டு இவ்வாலயத்தை வந்தடைகிறது.

ஆலயத்தில் எம்பெருமான் புகழ்பாடும் இசையாளர் வரிசையில் சேதர்ச் சட்டம்பியார், தவத்திருவடிவேல் சுவாமிகள், பண்டிதர் இ.திருநாவுக்கரசு, வை.ஆறுமுகதாசர், குமாரசுவாமி, குமாரு அப்பா, பெரியதம்பி கந்தையா, போன்றோரும் தற்போது சி.அழகேசன், மா.நாகையா ஆசிரியர், சி.சிவபாதசுந்தரம், க.இராசேந்திரம், சுப்பிரமணியம், ந.பரமேஸ்வரன், இ.பாலராசன், முதலியோரும் இளந்தொண்டர் சபையினரும் அடங்குவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் பழமையும், சைவஉலகிற்கு எம்முன்னோர் விட்டுச்சென்ற ஆன்மீகப்பொக்கிசமான கலைப்பொருட்களும் முருகக்கடவுளின் அருளை நினைவூட்டக்கூடியவையாக அவனால் வழிகாட்டப்பட்டு அமைக்கப்பட்ட கட்டடங்கள், வாகனங்கள், திருவுருவங்கள் என்பனவும் தெய்வப்பொலிவைக் கொண்டனவே. இவ்வாறான அருள்வளங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு இவ்வாலயம் விளங்குகின்றது.

**பிற்குறிப்பு:**

இவ்வாலயச் சூழலில் அருள்மிகு மரங்களாக மருதமரம், அரசு, வேம்பு, ஆல், பலா, நெல்லி, இத்தி, கடம்பு, வன்னி, பன்னீர், நொச்சி, செண்பகம், சிவலிங்க மரம், உருத்திராட்சம், வில்வை, புளி, சந்த சாம்பிராணி, மகிழமரங்கள் என்பனவும் மற்றும் சிலமரங்களும் உள்ளன.


**நவரத்தினம். பரமேஸ்வரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்
# செகராசசேகரப்பிள்ளையார் கோவில்



ஆரியச் சக்கரவர்த்திகள் எனப்படும் தமிழரசர்கள் ஈழத்தில் ஆட்சிபுரிந்த காலத்தில், அவர்களுள் சிங்கைநகரில் (வல்லிபுரத்தில்) இருந்து ஆட்சிபுரிந்த செகராசசேகரன் என்னும் மன்னனால் இற்றைக்கு 700 ஆண்டுகளுக்கு முன், ஈழத்தில் பல ஊர்களில் விநாயகர் ஆலயங்கள் நிறுவப்பட்டன. அவ்வாறு இணுவில் மேற்குப்பகுதியில் செகராசசேகரனால் நிறுவப்பட்டு வழிபடப்பட்ட கோவில்தான் இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் ஆலயம் என்பது வரலாறு.

இவ்வாலயத்தைப் பருத்திஅடைப்புப் பிள்ளையார் கோவில் எனவும் அழைப்பர். இணுவிலில் குளக்கரை என இன்றும் அழைக்கப்படும், கந்தசுவாமி கோயிலை அண்டிய ஒரு குளமும், அதன் தென்கிழக்குப் பகுதியில் இன்றைய நாலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டையடியில் இன்னொரு குளமும் இருந்தன என்றும், இதனால் இந்த இணை "வில்கள்" (குளங்கள்) அமைந்திருந்த காரணத்தால் இவ்வூர் இணைவில் என அழைக்கப்பட்டு இணுவில் என மரூஉப் பெயர் பெற்றதென்றும் செவிவழிக் கதைகள் கூறுகின்றன. இக்குளங்களில் ஒன்றிலிருந்து தெற்கே அமைந்த வயல்களுக்கு நீர்ப்பாசனம் நடந்ததென்றும், மறு குளத்திலிருந்து வடக்கே இருந்த பருத்தித் தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டது என்றும் வாய்மொழி வரலாறுகள் மூலம் அறியப்படுகின்றது. இக்கூற்றை மெய்ப்பிக்கும் புறச்சான்றாக இன்றும் பரமானந்தவல்லி அம்மன் ஆலயம் முன்பாக வீதியில் மதகு ஒன்று (பருத்தித் தோட்டங்களுக்கு நீர்பாய்ச்சிய மதகு) மண்ணுள் புதைந்து காணப்படுகிறது. இதிலிருந்து அறியப்படுவன அன்று பருத்திச் செய்கை பண்ணப்பட்டிருந்த ஒரு பிரதேசத்தில்தான் இப்பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்தது என்பதும், அதனாலேயே பருத்தியடைப்புப் பிள்ளையார் என இவ்வாலயம் பெயர்பெற்றது என்பதும் ஆகும். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் பருத்திப்பயிரச் செய்கை நடந்தமைக்குச் சான்றாக இன்றும் குடாநாட்டு ஊர்கள் பலவற்றில் பருத்தியடைப்பு என்ற பெயரால் பலகுறிச்சிகள் அழைக்கப்படுகின்றன.

"**இணுவில் செகராசப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ் நூலின் முன்னுரையில்** சைவத்தைத் தூயநெறியில் வளர்த்துப் பேணிய கிராமங்களில் இணுவில் சிறப்புப் பெறுவதாகும். இங்கு செகராச சேகரப் பிள்ளையார், கருணாகரப்பிள்ளையார் (உரும்பிராய் இணுவில் கிழக்கு எல்லையில்) என்ற பழமைமிக்க இரு பிள்ளையார் கோயில்கள் உள்ளன. இச்செகராசசேகரப் பிள்ளையார் தலத்தில் பல அற்புதங்கள் நிகழ்ந்தனவென ஆன்றோர் கூறுவர். சிங்கைச் செகராசசேகர மன்னனின் ஆணைப்படி இக்கோயில் கட்டப்பட்டதென அறியப்படுகிறது" என்று கலாநிதி இ.பாலசுந்தரம் (சிரேஸ்ட தமிழ் விரிவுரையாளர்) குறிப்பிட்டமை நோக்கற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய போர்த்துக்கேயர் ஆக்கிரமித்து ஆண்ட காலங்களில் இலங்கைச் சைவக்கோவில்கள் அழிக்கப்பட்ட வரலாறுகளும் அச் சந்தர்ப்பங்களில் அவர்களே அழிக்கப்பட்டதும் தோற்கடிக்கப்பட்டதுமான வரலாறுகளும் நாமறிந்தவை. அந்த நிகழ்வுகள் அணுகக்கூட முடியாதபடி. அருள் பொலிந்த இவ்வாலயம் சைவத்தமிழ் வளர்க்கும் நிறுவனமாக விளங்கி வந்துள்ளது. போர்த்துக்கேயராட்சி மறைந்து, ஒல்லாந்தர் ஆட்சி மறைந்து ஆங்கிலேயராட்சி நிலவிய காலத்தில் கிறிஸ்தவ மதத்தின் வேகமான பரம்பலையும் ஆங்கிலக் கல்விச் செல்வாக்கையும் தடுத்து நிறுத்தித் தமிழகத்திலும் ஈழத்திலும் தமிழ், சைவக்கல்வியைப் புயல்வேகத்தில் பரப்பிய தமிழ் சைவக் காவலன், தேசபிதா ஆறுமுகநாவலரின் வேண்டுதலுக்குச் செவிசாய்த்துத் தேசமெங்கும் தமிழ், சைவம் இலவசமாகக் கற்பிக்கும் திண்ணைப்பள்ளிகள் நடத்தியவர்களில் ஒருவர் நாவலரின் மாணாக்கர் இணுவில் சுப்பிரமணியச் சட்டம்பியார் என்பவர். செகராசசேகரப் பிள்ளையார் ஆலயப் பராமரிப்புடன் ஆலயத் தெற்கு வீதியிலுள்ள தம் வீட்டில் திண்ணைப் பள்ளியும் நடத்தியவர் இவர். இவரின் மகளின் கணவர் சங்கரப்பிள்ளையும் அவரைத்தொடர்ந்து மகன் சின்னத்துரையும் இப்பொழுது மகன் சி.சுந்தரலிங்கமும் பரிபாலித்துவர ஆலயம் வளர்ச்சியடைந்து வருகிறது.

அமரர் சங்கரப்பிள்ளை அவர்கள் ஊரில் வீடுதோறும் பிடியரிசி தண்டி, சாந்துக்கட்டடமாக இருந்த ஆலயக்கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பவற்றைப் பொளி கற்களால் மீள் ஆக்கஞ் செய்து வைத்தார். மகன் சின்னத்துரை தொடர்ந்து செய்த முயற்சியால் ஊர் மக்களின் உதவியுடன் வசந்தமண்டபம் முதலான மண்டபங்கள் அமைந்தன. இப்பொழுது அவர் மகன் சுந்தரலிங்கம் மூலமூர்த்தியைப் பாலஸ்தாபனஞ் செய்து, அடியார்களின் நிதியுதவியைப் பெற்று மண்டபங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனருத்தாரணஞ் செய்து திருப்பணிகளை நிறைவேற்றியதை அடுத்து, 11.02.2004 இல் மங்கலகரமாகக் கும்பாபிஷேகமும் நிகழ்ந்துள்ளது.

இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் சித்திரா பௌர்ணமியன்று தீர்த்த உற்சவம் நிகழும் மகோற்சவமும், மாதந்தோறுமான விநாயகர் சதுர்த்தி விழாவும் 21 நாட்கள் நிகழும் விநாயகசட்டி விழாவும் ஆண்டுதோறும் நிகழ்கின்றன. அத்துடன் மாதாந்தக் கார்த்திகைத் திருவிழா, நவராத்திரி விழாக்கள், திருவெம்பாவை விழாக்கள் முதலியவையும் பக்திபூர்வமாக நடைபெறுகின்றன.

இவ்வாலயத்துக்குப் புதிய சித்திரத்தேரும், சப்பறமும், வாகனங்களும், கண்டாமணியும் செய்து வழங்கப்பட்டுள்ளன. இவ்வாலயப் பரிவாரமூர்த்தங்களாகச் சந்தானகோபாலரும், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியரும் வைரவரும் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர். பஞ்சமுக விநாயகரும், இலக்குமியும், நடராஜரும் இங்கு வழிபடப்பெறும் பிற மூர்த்தங்கள் ஆகும்.

இவ்வாலயத்தில் குறிப்பிடப்பட வேண்டியதொரு மகிமை எதுவெனில் இங்கு மாதப்பிறப்பு நாட்களில் விநாயகர் அடியார்கள் நடத்தும் பொங்கல் வழிபாடாகும்.

இவ்வாலயத்தின் திருவூஞ்சற் பாடலைத் தேர்த்திருவிழா உபயகார குடும்பத்தைச் சேர்ந்த பண்டிதர் வித்துவான் சைவப்புலவர் இ.திருநாவுக்கரசு பாடியுள்ளார். நான் (ச.வே.பஞ்சாட்சரம்) பாடிய செகராசப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ் நூலை இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர்சபை வெளியிட்டுச் சேர்த்த நிதியைத் தேர்த்திருப்பணிக்கு வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் மூன்றுகால நித்திய பூசைகள் நிகழ்ந்து வருகின்றன. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் அமைந்த பழம்பெரும் வரலாற்றுப்பெருமை மிக்க இந்த ஆலயம் மூர்த்தி சிறிதாயினும் வேண்டுவார் வேண்டுவன ஈந்தருளும் அருட்கீர்த்தி மிக்கது.

இவ்வாலய மகோற்சவத் தொடர் பிரசங்கங்களை திருப்பணியாளர் இ.பொன்னம்பலம் அவர்களின் ஏற்பாட்டில் பேராசிரியர் சபா.ஜெயராசா தலைமையில் திருமதி வசந்தா வைத்தியநாதன், அதிபர் கு.சண்முகநாதன், சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம், கவிஞர் சோ.பத்மநாதன், செஞ்சொற்செல்வர் சிவநெறித்திருமகன் ஆறு.திருமுருகன் அவர் மாணவன் ச.பாலசண்முகன் முதலியோர் இதுவரை நிகழ்த்தியுள்ளனர்.


இத்திருத்தலம் அயலிலுள்ள அடியார்களின் குறிப்பாக இளைஞர்களின் பேராதரவில் மிகப் புனிதமாகப் பேணப்படுவதுடன், மகோற்சவகாலங்களில் கோவில் உள்வீதி, வெளிவீதி பெருக்கல், சுவாமி காவுதல், பண்ணிசை பாடல் போன்ற பல தொண்டுகளும் நிகழ்கின்றன. பெருவிழாக் காலங்களில் தேர், தீர்த்த நாட்களில் தண்ணீர்ப் பந்தல்களும், அன்னதானங்களும் தொண்டிளைஞர்களால் நடாத்தப் படுகின்றன. விநாயகப் பெருமானின் அருள்வேண்டி நாடிவரும் அனைவரைருக்கும் எம்பெருமான் இன்னருள் பாலித்து நற்பேறு வழங்குகிறார்.

**பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் - கோண்டாவில்
# விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் ஆலயம் (காரைக்கால்)



## ஆலய வரலாறு

வரலாற்று ஆசிரியர்களால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறப்பாகக் குறிப்பிடப்படும் பதிகளில் காரைக்காலும் ஒன்று.

முதலாம் குலோத்துங்க சோழனின் படைத் தளபதி கருணாகரத் தொண்டைமான் இலங்கை வந்தபோது காரைக்கால் பகுதியில் தங்கியிருந்தான் என திரு.செ.இராசநாயகமுதலியார் தமது யாழ்ப்பாணச் சரித்திர நூலில் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணக் குடியேற்றம் எனும் தமது நூலில் திரு. முத்துக் குமாரசாமிப்பிள்ளையும் காரைக்காலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரித்திர காலத்தில்

முதலியார் செ.இராசநாயகம் குறிப்பிடும் சரித்திர காலத்தில் இணுவில், உரும்பராய், கோண்டாவில் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்பே பொதுப் பெயரால் காரைக்கால் என அழைக்கப்பட்டிருக்கலாம் என இன்று ஊகிக்க இடமுண்டு. ஏனெனில் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் கோயிலை உள்ளடக்கிய மிகச் சிறிய நிலப்பரப்பே இன்று காரைக்கால் என அழைக்கப் படுகின்றது. இவ்வளவு சிறிய பிரதேசமாக அன்றைய காரைக்கால் இருந்திருக்க முடியாதென்பது எனது கருத்தாகும்.

காரைக்கால் என்றதும் முதலில் எல்லோரதும் ஞாபகத்திற்கு வருவது சிவன் கோவிலேயாகும். காரைக்காலிலுள்ள மாரியம்மன் கோவிலும் பைரவர் கோவிலும் சிவனார் நடனம் புரியும் உருத்திர பூமியும் மிகப் பழைமை வாய்ந்தவை.

கடந்த நூற்றாண்டில் காரைக்கால் ஆயுள்வேத வைத்தியத்திற்குப் பெயர்பெற்ற இடமாக விளங்கியது. தவத்திரு அ.க.அம்பலவாணர் சுவாமிகள் காலத்தில் ஆயுள்வேத மணிமந்திர வைத்தியத்தில் காரைக்கால் புகழின் உச்சியில் இருந்தது. இவரது காலம் 1920 - 1979 ஆகும்.

தவத்திரு அம்பலவாணர் சுவாமிகளுக்கு முன்னர் இணுவை அப்பர் எனப் போற்றப்படும் சித்தர் தவஞானி பெரிய சந்நியாசியார் காலத்திலும் (1860 - 1917) காரைக்கால் மணிமந்திர வைத்தியத்திற்குப் புகழ்பூத்த இடமாகத் திகழ்ந்தது. பெரிய சந்நியாசியாரின் இயற்பெயர் சுப்பிரமணியம் என்பதாகும். காரைக்காலில் மாரியம்மன், சிவன், பைரவர் கோவில்களைத் தாபித்தவர் பெரிய சந்நியாசியாரே என்பது தலவரலாறு.

## மூலிகை விருட்சங்கள்

காரைக்காலில் ஆயிரத்தெட்டு விருட்சங்களைப் பெரிய சந்நியாசியார் நட்டு வளர்த்துவிட்டார். இவரது காலத்தில் ஏழு தீர்த்தக் கேணிகள் இருந்தன. தீர்த்தக்கேணிகள் அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூற்றுக் கணக்கான மூலிகை விருட்சங்களால் சூழப் பட்டிருந்தன. காரைக்கால் தீர்த்தங்களைப் பருகியவர்கள் பிணிநீங்கப் பெற்றனர் என்பது செவிவழி வந்த செய்தியாகும். அன்றைய காரைக்கால் சூரியன் தலைகாட்டாத அடவியாக இருந்ததென்பர் முதியோர்.

திருஞானசம்பந்தப் பெருமானுக்கு உமையம்மையே ஞானப் பால் ஊட்டியது போலப் பெரிய சந்நியாசியாருக்கும் காரைக்கால் பதியுறை மாரியம்மையே தாயாக வந்து திருவமுது செய்வித்து மறைந்தாள் என்பதும் வரலாற்று உண்மையாகும். பெரிய சந்நியாசியாரது மரபில் பின்நாளில் வந்தவரே தவத்திரு அம்பலவாண சுவாமிகள். இருவரும் ஒத்த இயல்புகள் பல நிறையப்பெற்றவர்கள்.

## ஒத்த இயல்பினர்

பெரிய கோவில் என வரலாற்றில் இடம்பெற்றுள்ள இணுவில் கந்தசுவாமி கோவில் பெரிய சந்நியாசியாரால் வளங்கள் பல கண்டது. காரைக்கால் சிவன்கோவிலும் அப்படியே. அம்பலவாண சுவாமிகளும் இவ்விரு கோவில்களும் வளம்பெறத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். பெரிய சந்நியாசியார் புகழ்பூத்த ஆயுள்வேத மணிமந்திர வைத்தியர். அம்பலவாண சுவாமிகளும் அவரைப் போன்றவரே. இருவரும் மக்களின் நோய்நொடி, பயங்களைப் போக்க விபூதியைப் பூசித்துச் செயற்பட்டவர்கள். இருவருமே விஷகடி வைத்திய நிபுணர்கள். பெரிய சந்நியாசியார் காரைக்காலில் வளர்த்துவிட்ட ஆயிரத்தெட்டு விருட்சங்களையும் அம்பலவாண சுவாமிகள் மிகமிகப் பயபக்தியுடன் தமது கண்களைப்போலப் பேணிப்பாதுகாத்த பெருமைக்குரியவர். அருளாளர்களாய் முன்கூட்டியே செய்திகளை உணர்த்தும் தெய்வீகம் இருவருக்கும் பொதுச்சொத்து.

அன்னதானப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டவர் முன்னையவர். பின்னையவரும் தமது வாழ்நாள் முழுவதும் காரைக்காலில் அவ்விதமே விளங்கி வாழ்ந்து காட்டியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் பசுமந்தைகளை மேய்த்து வாழ்ந்த வாழ்வியல்புகளைக் கொண்டவர்கள். மூலிகைகளின் மகிமைகளை மக்களுக்கு எடுத்தியம்பியவர்கள். மனநோயாளரது பிணிகளைப் போக்குவதில் பிரசித்தி பெற்று விளங்கியவர்கள். மூத்தவர் காரைக்கால் பதியுறை மாரியம்மனைத் தாயாகக் கண்டவர். இளையவருக்கும் மாரியே தாயானாள். தாடி, சடாமுடியுடன் கூடிய தவவேடங்களிலும் பெரியவரும் சின்னவரும் ஒன்றுபட்ட காட்சியினர். இருவரும் மாபெரும் சமரசவாதிகள். இருவரும் குலவேறுபாடுகளை அறவே வெறுத்தவர்கள். பெரியவர் வழி எதுவோ அதுவே சின்னவர் வழியுமாயிற்று.

பெரிய சந்நியாசியார் காலத்தில் இணுவில் கந்தசுவாமி கோவில் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு காரைக்காலுக்கு ஏழு தேர்களில் சுவாமிகள் எழுந்தருளினர் என்பது வரலாறு. இதற்கென இரு தலங்களுக்குமிடையில் முப்பத்தாறு அடி அகலமான பாதையும் பெரிய சந்நியாசியாரால் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

பிரபல எழுத்தாளர் இணுவையூர் திரு.கே.எஸ்.ஆனந்தன் "அவரே இவராய்" எனும் தமது நூலில் காரைக்காலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

## சமரசபதி

பெரிய சந்நியாசியாரும் தவத்திரு அம்பலவாண சுவாமிகளும் சமரசவாதிகள். அதுபோலக் காரைக்காலும் ஒரு சமரசபதியாகும்.

ஞானபூமியாக விளங்கும் காரைக்கால் தலம் இணுவில் கோண்டாவில் உரும்பராய்க் கிராமங்களின் நடுவே அமைந்து, முக்கிராம மக்களும் ஏத்திப் போற்றி வணங்கும் நிலையில் உள்ளமை அதன் தனிச் சிறப்பாகும். எனினும் இணுவிலின் கலை, கலாசார, சைவ சமய, தமிழ் வளர்ச்சிக்கும் காரைக்காலுக்கும் உள்ள தொடர்புகள் பாரம்பரியங்களே மிகவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சந்நியாசியார், தவத்திரு அம்பலவாணச் சுவாமிகளது வரலாறுகள் மாண்புகள் மகிமைகளையும் அவர்கள் செய்த அற்புதங்களையும் தனியாக இன்றைய இளைய தலை முறையினர் ஆய்வுகள் பல செய்து, அவற்றை நூலுருப்பெறச் செய்யவேண்டும் என்பது எனது பேரவாவாகும்.

## அற்புத நிகழ்வுகள்

பெரிய சந்நியாசிபார் தாம் சமாதியடையும் தினத்தை முன் கூட்டியே அறிவித்து அத்தினத்தில் தாமும் முன்னின்று சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டுத் தாமே குறிப்பிட்ட நேரத்தில் அடங்கிய பெருமைக்குரியவர். இது ஓர் அற்புத நிகழ்வாகும்.

தவத்திரு அம்பலவாணச் சுவாமிகள் அரவந் தீண்டப் பெற்றவர்களுக்கும் நண்பகற்பொழுதில் பார்வை பார்க்கையில் கருடன் வானத்தில் வட்டமிடுவதைப் பலர் அவதானித்திருக்கின்றனர். விஷகடிக்குள்ளானவரின் உடலில் நிழல் படும்படியாகக் கருடன் பறக்கவும் விஷம் இறங்கி நோயாளியின் உபாதைகள் குறையவும் சக்தி மிக்கதாக அம்பலவாண சுவாமிகளின் மணிமந்திர வைத்தியமுறை அமைந்ததை யானே நேரில் அவதானித்து அதிசயித்ததுண்டு. பெரிய சந்நியாசியார், அம்பலவாணர் சுவாமிகளுடன் தொடர்புள்ள பல அற்புதங்களை அறிந்த முதியவர்கள் பலர் எம்மிடையே வாழ்கின்றனர். இவர்கள் காலத்திலேயே சகல ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் எனது வேண்டுதலாகும்.

பெரிய சந்நியாசியாரின் மிகமிக நெருங்கிய தொண்டர்களுள் ஒருவராக விளங்கியவர் இசைவேளாளர் பரம்பரையில் பிரகாசித்த தவில் வாத்தியக் கலைஞரான விசுவலிங்கம் என்பவர். பெரிய சந்நியாசியாரின் சமாதிச் சடங்குகளை நடாத்தியவர்களுள் முக்கியமானவர். இவர் பெற்ற அருளாசி தவில் மேதை லயஞான குபேரபூபதி தெட்சணாமூர்த்தியைத் தனது பிள்ளையாகப் பெற்றமையாகும். சந்நியாசியாரின் அருள்ஆசிர்வாதம் இருந்தவாறு என்னே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்காலில் அமைந்துள்ள சிவலிங்கம் இலங்கை எங்கணும் காணக் கிடைக்கப்பெறாத அற்புதமான சிவலிங்கமாகும். பஞ்சலிங்கம் எனப் பெயர்பெறும் இச்சிவலிங்கம் சுமார் ஆறடி உயரம் கொண்டது. மிகப் பழைமைவாய்ந்த இச்சிவலிங்கத்திற்கு இன்றைய அமைப்பைக் கொடுத்தவர் கணபதியாபிள்ளை எனும் தமிழகச் சிற்பியாவார். இணுவில் இராமநாதன் கல்லூரியில் இராமநாதேஸ்வரர் கோவிலைக் கட்டவந்த சிற்பியான இவரே காரைக்காலிலும் 1939 - 1940 ஆம் ஆண்டளவில் பணிகள் பல செய்தவர். இன்றைய சிவலிங்கம் புலித்தோல் ஆசனத்தைப் பெற்றமை இவரது கைவண்ணமே என்பதை அடியேனைப் போன்றோர் நேரடியாகவே அறிவர். சிவன்கோவிலின் இன்றைய நந்தியைச் செதுக்கியவரும் இவரே. ஒரு கோவில் அமைந்துள்ள இடத்தைச் சரியாக எதுவென்று சொல்ல முடியாதவர்கள் எழுதும் கற்பனை முடிபுகள் காரைக்காலைப் பொறுத்தவரை ஏற்கத் தக்கவை அல்ல என்பது எனது கருத்தாகும்.

பெரிய சந்நியாசியாரின் காலத்தில் பெரும் அற்புதத் தலமாக விளங்கிய காரைக்கால் அவர் சமாதியடைந்த பின்னர் சிறிது தாழ்வுற்றது. மீண்டும் தவத்திரு அம்பலவாணச் சுவாமிகள் காலத்தில் மேன்மையடையலாயிற்று. அந்த வரலாறுகளை இவ்விடத்தில் நோக்குவது சாலச் சிறந்ததாகும்.

தவத்திரு வடிவேற்சுவாமிகள் மலரில் (1993) கட்டுரையாளர் பின்வருமாறு கூறுகின்றார்.

"எனது தந்தையார், அமரர் இளையதம்பி செல்லப்பா, இற்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் காரைக்கால் சிவன் கோவிற் திருப்பணிகளில் முன்னின்றுழைத்தவர். தந்தையார் இத் திருப்பணி வேலைகளில் ஈடுபடக் காரணமாயிருந்தவர் கொக்குவிலில் புகழ்பூத்த ஆயுள்வேத வைத்தியராக விளங்கிய திரு.கோ.க.நடராச பிள்ளை அவர்கள். நடராசபிள்ளையும் செல்லப்பரும் ஒருவர் மேல் ஒருவர் அளவிலா அன்புடையவர்கள். நான் பத்துவயத்துக்குட்பட்ட சிறுவனாக இருந்த காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தந்தையார், நடராசபிள்ளையின் இல்லத்துக்கு என்னை அழைத்துச் செல்வதுண்டு. நாங்கள் அங்கு அமுது கொள்ளாமல் வீடுதிரும்ப முடியாது. அன்னாரது அன்பும் பண்பும் அத்தகையது. பிற்காலத்தில் எனது தந்தையாரைப் போலவே நானும் நடராசபிள்ளையுடைய அன்புக்குரியவர்களில் ஒருவனானேன்.

## அற்புதம்

திரு. நடராசபிள்ளை அவர்கள் ஏதோ ஒருவித உபாதையால் மிக நீண்டகாலம் துன்பப்பட்டதாகவும் காரைக்கால் வயிரவரின் அற்புதத்தால் அவரின் அவ்வுபாதை நீங்கப் பெற்றதாகவும், எனது தந்தையார் கூற நான் கேட்டதுண்டு.

## தெய்வீக அருள்

ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் 1935 - 1940 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் என நினைக்கிறேன். மாடுகள் மேய்த்துக் கொண்டிருக்கும் சிறுவன் ஒருவனைக் காரைக்காலில் குடிகொண்டுள்ள இறை அருள் நடரசாபிள்ளைக்குக் கனவில் காட்சியாக்கியதுடன் அடுத்துச் செய்யவேண்டிய சில பணிகளைப் பற்றியும் தெய்வீகமாக உணர்த்தியது. அக்கனவின் மெய்ப்பொருளை உணர்ந்து கொண்ட நடராசபிள்ளை அந்தக் கணத்திலிருந்தே செயற்படத் தொடங்கினார்.

இந்தக் காலத்தில்தான் எனது தந்தையார் நடராசபிள்ளையுடன் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். நடராசபிள்ளை தனது கனவிற் காண்பிக்கப்பட்ட அங்க அடையாளங்கள், முகபாவங்களை விளக்கி அச்சிறுவனை இணுவிலில் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு என் தந்தையாரிடமும் அவர்தம் சகாக்களிடமும் கூறியதை யான் அறிவேன். அவரது வாக்கை நிறைவேற்றுவான் வேண்டித் தந்தையார் இணுவிலில் அச்சிறுவனைத் தேடியபோது இக்கிரிப்பற்றைகள் நிறைந்த பனங்கூடல் ஒன்றில் அவர் மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்கக் கண்டுபிடித்தார். எனது தந்தையாரும் நடராசபிள்ளையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய சீடர்களும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அச்சிறுவனை அண்மித்துத் தந்தையார் கதைக்க முற்பட்ட போது, அவர் மிகவும் பயந்து அழும் நிலையில் நின்றதாகவும் அத்தருணம் அவரது பீதியைப் போக்குவான் வேண்டித் தந்தையார் பலவித இன்மொழிகளைப் பேசி அவர்தம் பீதியைப் போக்கிய -தாகவும் அதன்பின்பே அச்சிறுவன் எனது தந்தையாருடன் நடராசபிள்ளை வீட்டிற்குச் சென்றதாகவும் தந்தையார் கூற நான் கேட்டிருக்கிறேன். தந்தையாரால் அழைத்துச் செல்லப்பட்ட சிறுவனைக் கண்டதும் நடராசபிள்ள அவர்கள் தமக்குத் தெய்வீக அருளால் கனவில் காண்பிக்கப்பட்ட சிறுவன் வேறு யாருமல்லன் இவனே என்று பரவசம் அடைந்தார்.

எனது தந்தையாரும் பேரனாரும் இணுவிலைச் சேர்ந்தவர்களே. இதன் காரணமாக நடராசபிள்ளையின் கனவில் தோற்றமளித்த சிறுவனே காரைக்கால் சிவன் கோயிலின் வாரிசு என்பதை உணர்ந்து கொண்ட எனது தந்தையார் மிக இலகுவாக நடராசபிள்ளையின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்துவிட்டார்.

## யோகர் சுவாமிகள்

நடராசபிள்ளை அவர்களிடம் சிறுவனாகச் சென்றடைந்த அம்பலவாணர், ஆயுள்வேத வைத்தியத்தையும் மணிமந்திர சிகிச்சை முறைகளையும் கற்றுத் தேர்ந்தார். இவரைச் சிறுவயதில் “மணியப் பெடியன்” என்றே எனது தந்தையை ஒத்தோர் அழைத்தனர். நடராச பிள்ளையின் இல்லத்துக்குச் சென்றுவரும் காலகட்டத்தில் காரைக்காலுக்கும் தந்தையார் என்னைக் கூட்டிச் செல்வது வழக்கம். 1940 ஆம் ஆண்டளவில் இது நடைபெற்றதாகக் கணிப்பு. மணியப் பெடியனை நடராசபிள்ளையின் அறிவுறுத்தல்களுக்கிணங்க எனது தந்தையாருடன் இணுவையூர் சித்தர் செல்லர் போன்றோரும் சேர்ந்து அவர் பிற்காலத்தில் அம்பலவாண சுவாமிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாகும்வரை அவருக்குப் பக்கபலமாக இருந்து கோவிற் பணிகள் அனைத்தும் செவ்வனே நடைபெற உதவினார்கள். காலம் செல்லச் செல்லத் திருப்பணி வேலைகளும், பாரிய முன்னேற்றங்களைக் கண்டன. நடராசபிள்ளை, இளையதம்பி செல்லப்பா, சித்தர் செல்லர் ஆகியோருக்கு யோகர்சுவாமிகளுடனும் தொடர்பிருந்தது. காரைக்கால் பிரசித்தியடைய இவர்கள் அனைவரும் மூலகாரணமாயிருந்தனர். இங்குள்ள சூழல் யோகர் சுவாமிகளைக் கவர்ந்திருந்ததாலேயே அவர் அங்கு வந்து சென்றதாகக் கூறுவர்.

## குழைசாதம்

காரைக்கால் சிவன் கோயிலில் வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை வேளைகளில் நடைபெறும் பூசை வழிபாடுகள் அன்று பிரசித்தமானவை. பல நூற்றுக்கணக்கில் மக்கள் கூடுவதுண்டு. வயிரவக் கடவுளுக்குப் பிடித்தமான முரசு முழங்கும். பலர் கலை வந்து ஆடுவர். எல்லாவற்றிற்கும் நடு நாயகமாக அம்பலவாண சுவாமிகள் செயற்படுவார். இவையெல்லாம் சிறுவனாக இருந்த என்னை மிகவும் கவர்ந்தன. பொய்க்கால் குதிரை, கரக ஆட்டங்களுக்கும் காரைக்காலில் குறைவில்லை.

இக்காலத்தில் புதுமை ஒன்றைப் புகுத்திய பெருமை சித்தர் செல்லருக்குண்டு. 1942 ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னரும் பின்னரும் நாட்டில் உணவுப் பஞ்சம் நிலவியது. அந் நாட்களில் சித்தர் செல்லரின் முயற்சியால் வயிரவர் சுவாமிக்கு நிவேதிக்கப்படும் குழைசாதம் அடியார்களுக்கு விநியோகிக்கப்படும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்ற வள்ளுவன் குறளுக்குச் சித்தர் செல்லர் காரைக்காலில் இலக்கியம் வகுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடிவேல் சுவாமிகள்

நயினாதீவுச் சுவாமிகள் போன்ற சித்தர்களின் நடமாட்டம் காரைக்காலில் அதிகரித்தது. உடுக்குகள், மத்தளங்கள் முழங்கப் பஜனைக் கோஷ்டிகள் காரைக்காலைப் பரிமளிக்கச் செய்தன. இக் காலப் பகுதியிலேயே வடிவேல் சுவாமிகளின் தரிசனம் எனக்கு இங்கே கிடைத்தது. இவரது கதாப்பிரசங்கங்கள் காரைக்காலில் அடிக்கடி நடைபெறுவது வழக்கம். அப்பொழுது அவரது தோற்றப் பொலிவும், தேவார திருவாசகங்களும், இசையும் என்னைப் பெரிதும் பரவசப்படுத்தின.

## சுவாமிகள் சமைத்த கூழ்

பிரபல ஆயுள்வேத வாத வைத்திய நிபுணரான இணுவையூர் வைத்திய பூபதி சு.இராமலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டதும் இணுவையூர் தந்த நல்லாசிரியர் திரு.கா.செ.நடராசா அவர்களால் 1977 ஆம் ஆண்டு ஆக்கப்பெற்றதுமான "இணுவை அப்பர்" என்னும் நூல் பின்வருமாறு தெரிவிக்கின்றது.

"பெரிய சந்நியாசியார் சமாதி நிலையடைந்த பின் காரைக்கால் கோயில் அதன் பின் வந்தோரால் நடத்த முடியாது போகவே, பூசை மட்டும் சிறிதுகாலம் நடைபெற்றது. பின் எதுவும் நடைபெறாது தடைப் பட்டதனால் காடு மண்டியது. காரைக்கால் சிவன்கோயில் சிதைவடைந்திருந்த காலத்தில் அருள் முனிவர் யோகர் சுவாமிகளும், நல்லருளாளர் நயினாதீவுச் சுவாமிகளும், கொக்குவில் வைத்தியர் ஞானபண்டிதர் நடராசனாரும் இங்கு வந்து தங்கிச் சென்றவர்களுள் முக்கியமானவர்கள். இவர்களின் ஆத்மீக சிந்தனையினால் மீண்டும் காரைக்கால் உயர்நிலை அடைந்தது. இவை யாவற்றுக்கும் வழிவகுத்தவர் இணுவை ஞானக்குழந்தை வடிவேற் சுவாமிகளாவார். 1937 ஆம் ஆண்டளவில் சித்திரை நிறை நிலாத் தினத்தன்று காரைக்கால் கோயிலில் கூழ் உணவு சமைக்கப்பட்டது. இதனைச் சித்தர் நயினாதீவுச் சுவாமிகளும், தவத்திரு வடிவேற்சுவாமிகளும் செயற்படுத்தினர். ஞானபண்டிதர் நடராசனார் இக்கோயிலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்குத் துணைபுரிந்த செயல்கள் பலவுண்டு. அவரின் தொடர்பினாலே இணுவையூர்ச் சித்தர் செல்லர், கோண்டாவில் இ.செல்லப்பா ஆகியோர் காரைக்காலின் ஆக்கத்துக்கு அரும்பணி பல செய்தனர். அவர் வழிவந்தோர் இன்றும் அதனைச் செய்து வருகின்றனர்."

## பொற்காலம்

காரைக்காலில் வடிவேல் சுவாமிகள் கதாப் பிரசங்கங்கள், பஜனைகள், கூட்டுவழிபாடுகள் செய்து மக்களைப் பரவசப் படுத்திய காலம் காரைக்காலின் பொற்காலம் எனலாம். பூட்டப்பட்டிருந்த கோவிற் பூசைகளை திரு.வ.அல்லமாப்பிரபு என்ற சைவக் குருக்கள் ஆரம்பத்தில் நடாத்தி வந்தார். இவர் ஒரு வேதாந்த விற்பன்னர்; வடிவேல் சுவாமிகளுடன் ஒத்த கருத்துடையவர். மிக எளிமையான கம்பீரத் தோற்றம் உடையவர்; ஆசாரசீலர். வடிவேல் சுவாமிகளுடன் சேர்ந்து இவரும் காரைக்காலில் தொண்டாற்ற வந்ததில் வியப்பில்லை. காரைக்காலில் அல்லமாப்பிரபுவும் அவரது பெறாமகன் சோ.பரமசாமி அவர்களும் பூசை வழிபாடுகளைச் செய்த காலம் முதல்தான் நானும் காரைக்காலுக்குப் போகத் தலைப்பட்டேன். நயினாதீவுச் சுவாமிகள், நடராசபிள்ளை, வடிவேல் சுவாமிகள் முதலான பெரியோர்கள் இவர்களது பூசையை மிகவும் நயந்தனர். திரு.சோ.பரமசாமி ஐயர் இன்று நல்ல நிலையில் இருப்பதற்கு மேற்குறித்த பெரியோர்களின் நல்லாசியே காரணம் எனலாம். காரைக்கால் பூசை வழிபாடு பக்திபூர்வமாக முன்னேறிக்கொண்டிருந்த அந்தக் காலத்தில் அங்கு நடைபெறும் அன்னதானங்கள் பிரசித்தியானவை. இன்று வருடாந்த உற்சவ காலங்களில் மாத்திரம் நடைபெறும் இந்தப்பணி, வடிவேல் சுவாமிகள், சித்தர் செல்லர், இ.செல்லப்பர், ஞானபண்டிதர் நடராசபிள்ளை ஆகியோர் காலத்தில் ஒரே வாரத்திற் பல தினங்கள் கூட அடுத்தடுத்து நடைபெறுவதுமுண்டு. ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கோர் அமுதசுரபியாக அன்று காரைக்கால் விளங்கியது. இந்த அமுத ஊற்றுக்கு வடிவேல் சுவாமிகளும் நயினாதீவுச்சுவாமிகளும் சமைத்த கூழ் உணவுதான் காரணமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஞானபண்டிதர் நடராசபிள்ளை தம்மிடம் வரும் தீராத நோயாளர்களிடம் "கர்மவினை தீரக் காரைக்காலில் அவித்துப் போடு; எல்லாம் குணமாகும்" என்று இட்ட கட்டளைகள்தான் காரணமோ? எதுவென்று யான் அறியேன். எல்லாச் சித்தர்களும் சேர்ந்து செய்த சித்து விளையாட்டின் மகிமையே இதுவன்றி வேறெதுவுமன்று.

## சமாதி நிலைகள்

நடராசாபிள்ளை அவர்களின் காரைக்கால் சீடர்களில் ஒருவரான இளையதம்பி செல்லப்பா 1963 ஆம் ஆண்டு பிற்பகுதியில் அமரர் ஆனார். யோகர் சுவாமிகள் 1964 இல் சமாதிநிலை எய்தினார். இவர்களுடன் இணைந்து செயற்பட்ட இணுவையூர் சித்தர் செல்லர் 1967 ஆம் ஆண்டு தையில் சிவபதம் அடைந்தார். 1893 ஆம் ஆண்டு தோற்றியவரான நடராசபிள்ளை 1967 ஆம் ஆண்டு புரட்டாதியில் சமாதி ஆனார். இவரின் சமாதியைக் காரைக்கால் சிவன் கோயிலின் தெற்கெல்லையில் காணலாம். காரைக்கால் ஆதீன கர்த்தரும் விஷகடி நிபுணரும் காரைக்கால் வைத்தியத்தின் தந்தையுமான அ.க.அம்பலவாண சுவாமிகள் 1979 ஆம் ஆண்டு சமாதி நிலையில் அடங்கினார். கடந்த பிரமோதூத ஆண்டு (26.06.1990) ஆனி ஆயிலிய நாள் அன்று வடிவேல் சுவாமிகள் சமாதியானார்.

அம்பலவாண சுவாமிகளது காலத்தில் பல நூற்றுக் கணக்கான தீராத - நாட்பட்ட - பிணியாளர்கள் காரைக்காலிலே குடில்களில் பல தினங்கள் தங்கிச் சிகிச்சை பெற்றுக் குணமடைந்தேகினர். அந்தப் புகழ்பூத்த காரைக்கால் வைத்தியத்துக்குரிய பரம்பரை இன்று செயற்படாதுள்ளது. இருப்பினும் காரைக்கால் சிவாலயம் தொடர்ந்தும் பெருமையுடன் இயங்கி வருகின்றது.

## சித்தர்களின் கோட்டம்

ஞானபண்டிதர் நடராசனார், நயினாதீவுச் சுவாமிகள், வடிவேல் சுவாமிகள் உலாவிய அந்தக் காலத்தில் யார் யார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவர் எவர் என்று சொல்லமுடியாத அளவுக்கு நூற்றுக்கணக்கான சித்தர்கள், ஞானிகள் கூடுகின்ற பாசறையாகவும், கோட்டமாகவும், குகையாகவும், சரணாலயமாகவும் காரைக்கால் விளங்கியது. வரலாற்றில் ஏற்றம் மிகுந்த அக்காலத்தில் காரைக்காலில் ஓங்கியுயர்ந்த ஆல், அரசு, இலுப்பை, வேம்பு, ஆதியாம் மர நிழல்களில் பல சித்தர்களும் வேதாந்திகளும், கூட்டம் கூட்டமாகக்கூடி, அமர்ந்திருந்து திருமுறைகள் ஓதுவதும் கந்தபுராண, மகாபாரத, இராமாயண சர்ச்சைகள் செய்வதும் தெய்வீகக் காட்சி. இவை கேட்போருக்கும் சிந்தைனக்குப் பெரிய விருந்தாகும். காரைக்கால் வளர்ச்சியை நன்கு அறிந்தவர்கள் வடிவேல் சுவாமிகளையும் நன்கு அறிந்தவர்களாவர். காரைக்கால் உள்ளவரை அதன் வரலாற்றில் பெரிய சந்நியாசியாரது நாமமும், அம்பலவாணர் சுவாமிகளது நாமமும் என்றும் நிலைபெற்றிருக்கும்.

பண்டைக் காலத்தில் சோழமன்னர் காலத்தில் ஆரம்பிக்கப் பட்டதும் சரித்திரப் பிரசித்தி பெற்றதுமான இவ்வாலயம் அரசர்கள் ஆட்சிமாற்றங்கள், காலநிலை மாற்றங்கள், அயலில் பொதுமக்கள் அருகியமை போன்ற சூழ்நிலைகளால் ஆதரிப்போரற்றுச் சிதைந்தும் காணப்பட்டது, செடிகொடிகள் மரங்கள் ஓங்கி வளர்ந்தமை, பாம்பு இனங்கள் குடியேறிப் புற்றுக்கள் மூடியமை முதலான பல காரணங்களால் அநேக வருடங்களாக எவரும் கோயில் பக்கமே வருவதில்லை.

இப்பகுதியில் உறைந்த விஸ்வநாதப்பெருமானின் கருணையும் தெய்வீகமும் ஆன்மீகச் சிந்தனையாளர்களுக்கு இவ்விடத்தை அணுகிச் செயற்பட உற்சாகப்படுத்தின. இணுவைச் சித்தர் பெரிய சந்நியாசியார் அபிவிருத்திசெய்து கோயிலை முறைப்படி பூசை செய்ய விரும்பினார். இவ்வருளாளரின் வருகையையும் செயல்களையும் கண்ட அயலவர்களும் இவர்களுடன் சேர்ந்து அதனை முன்னேற்றும் முயற்சியில் அடியெடுத்து வைத்தனர்.

பெரிய சந்நியாசியார் இப்பகுதியில் ஆநிரைகளை மேய்ப்பதுடன் தம்முடன் கூடிய பக்தர்களின் உதவியுடன் ஏழு திருக்குளங்ளை வெட்டினர். தொடர்ந்து 1008 பயன்தரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களில் சித்தவைத்தியத்துக்குத் தேவையான மூலிகை மரங்களையும் நடுவித்தார். கோயில் திருப்பணி வேலைகளைச் செய்தார். சந்நியாசியார் முத்தியடைந்ததும் மீண்டும் கோயில் பூசைகள் தடைப்பட்டன. இவை நடந்தது இற்றைக்கு 120 ஆண்டுகளின் முன்பாகும். இதேகாலத்தில் காரைக்காலின் மகிமையையும் இணுவில் கந்தசுவாமி கோயில் பெருமையையும் கருதிய சந்நியாசியார் காரைக்காலுக்கு வர இணுவில் கந்தசுவாமி கோயிலிலிருந்து 36 அடி அகலப் பாதை எடுத்து இவ்வீதியால் ஏழுதேர் வந்து காரைக்காலில் தீர்த்தம் ஆடிச் செல்வது வழக்கம். அத்துடன் இணுவில் கந்தன் இக்காரைக்காலின் தென்புறத்தே 100 யார் தொலைவில் பெருநிலப் பரப்புடைய வெளியில் சூரன்போர் நடாத்திச் செல்வது வழக்கம் என்பது ஆன்றோரது வாய்மொழிக் கதையாகும்.

பெரிய சந்நியாசியாருக்கு 30 வருடங்களின் பின் வந்த அம்பலவாணச் சுவாமியார் காலத்தின் சில ஆண்டுகளுக்கு முன் தெய்வத்தின் திருவருளை நாடிவந்த நயினை முத்துச் சாமியார். வடிவேற்சுவாமியார், கொக்குவில் நடராசபிள்ளை போன்ற பல பெரியார்கள் இக்கோயிலைப் புனரமைப்புச் செய்து பூசை செய்ய வகைசெய்தனர். சிவனருளால் வந்த காரைக்கால் அம்பலவாணச் சாமியார் வழிபட்டுக் கோயிலின் திருப்பணிகளைச் செய்து பல முன்னேற்றங்களைச் செய்துள்ளார். இக்காலத்தில் சாமியாரிடம் வைத்தியம், மணிமந்திரம் மூலம் உடல் உள நோய்கள் தீர்க்கப்பட்ட வசதிபடைத்தோராலும் சிவனருள் பெறும் பக்தர்கள் அயலவர்களாலும் வழங்கப்பட்ட நிதி, பொருள் உதவியுடன் கோயில் சிறப்பாகக் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகமும் நடாத்தப்பட்டது. சுவாமி வீதியுலா வருவதற்கான இடபம், மயில், எலி போன்ற ஊர்திகள் செய்யப்பட்டன.

கொடியேற்றமும் 12 நாட்கள் மகோற்சவமும் தொடங்கப் பட்டு இதுவரை விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. முன்பு கட்டுத்தேரில் விஸ்வநாதப் பெருமான் வீதியுலா வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலவர்கள், பக்தர்களின் உதவியால் மாரியம்மன் வாசல் மண்டபம் அமைக்கப்பட்டது. வைரவர் கோவில் தெற்கு நோக்கி எழுந்தருளி வாசல் விட்டு மறுசீரமைக்கப்பட்டது. மடைப்பள்ளி திருத்தஞ்செய்யப்பட்டது. நோயாளர், அடியார்கள் தங்குவதற்காக வயிரவகோயிலின் அண்மையில் 60 அடி நீள மடம் அமைக்கப்பட்டது. புதிய மணிக் கோபுரமும் கும்பாபிஷேகம் செய்த காலத்தில் அமைக்கப்பட்டது. நாகதம்பிரானுக்கான சிறுகோயிலும் அமைக்கப்பட்டது. குறுகிய காலத்தில ஆஞ்சநேயருக்கெனத் தனியான சிறுகட்டடமும் அமைக்கப்பட்டுள்ளது. வயிரவர் கோயிலின் வடக்கே இருந்த திருக்குளம் தீர்த்தக்கிணறாக 50,000 ரூபா செலவில் வைரக் கற்களால் கட்டப்பட்டது. சதுப்பு (கருஞ்சேற்று) நிலமாதலால் இக்கட்டுமானமுடைய கிணறு இடிந்து மண்ணால் மூடப்பட்டது.

ஏறக்குறைய 5 வருடங்களுக்கு முன் பல இலட்சம் ரூபா செலவில் ஒரு சித்திரத்தேர் பொதுமக்களின் அன்பளிப்பினால் உருவானது. இதை உருவாக்கிய சிற்பக்கலைஞர் திருநெல்வேலியைச் சேர்ந்த கலாபூசணம் இராசரத்தினம் ஆசாரியாராவார். உள்வீதி முழுவதும் கூரை போடப்பட்டுள்ளது. வாகனங்கள் பழுதடைந்துள்ளன. பொதுமக்களின் அன்பளிப்பினால் உள்வீதித் தரை சீமெந்தினால் செப்பனிட வேண்டிய மூலப்பொருட்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. வேலைகள் மழைக்காலம் முடிவடைந்ததும் செய்யப்படவுள்ளன. இக்கிராமத்திலிருந்து வெளிநாடுகளில் வசிக்கும் அன்பர்களால் இறைவன்மீது கொண்ட பக்தி காரணமாகத் திருப்பணிகள் யாவும் தொடருகின்றன. ஒரு பக்தர் கருவறையின் அண்மையில் ஒரு குழாய்க்கிணறு அமைத்துக் கொடுத்துள்ளார். விஸ்வநாதப் பெருமான் வீதியுலா வருவதற்கான எழுந்தருளிச் சிவன் அம்மன் விக்கிரகம் ஏறக்குறைய ஒரு இலட்சம் ரூபா செலவில் செய்வித்து வழங்கப்பட்டுள்ளது. இதேபோலப் பல அடியார்கள் இறைவனுக்கு வேண்டியனவற்றைத் தமது மனமுவந்து செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வருடத்தின் எல்லா மாதங்களிலும் பிரதோஷ, காலங்களில் எம்பெருமானுக்கு விசேட விழாக்கள் நடைபெறு கின்றன. விழா முடிவில் காப்பரிசிப் பிரசாதம் வழங்கப் படுகிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் குழைசாதப் பிரசாதம் வழங்கல அம்பலவாணச் சுவாமியாரின் அடியொற்றி வெகு சிறப்பாக நடைபெறுகிறது. மகோற்சவ காலங்கள் 12 நாட்களிலும் அன்னதானம் வெகுசிறப்பாக நடைபெறுகிறது. இத்திருப்பதியிலுள்ள மூலமூர்த்தியான சிவலிங்கம் (பஞ்சலிங்கம்) பெருமை வாய்ந்தது. அதேபோல ஞானிகளையும் சித்தர்களையும் திருவமுது கொடுத்து உருவாக்கிய மாரியம்மனுக்கு ஒவ்வொரு பங்குனித் திங்கள் நாளிலும் நூற்றுக்கணக்கான அடியார்களால் மோதகம், சர்க்கரை அமுது ஆகியன தயாரித்துப் படைக்கப்பட்டு வருதல் பெருஞ் சிறப்பாகும். நாகதம்பிரான் ஆலயம் ஆரம்பத்தில் கட்டப்பட்ட இடம் முழுவதும் ஆறடி உயரத்துக்கு மேல் கட்டடம் நிறைந்த புற்றாகக் காணப்படுகிறது. இதற்கு முன்பாகப் பிறிதொரு கட்டடம் அமைத்துப் பூசை வழிபாடு நடைபெறுகிறது. வைரவர் ஆலயம் மிகப் பிரசித்தமும் புதுமையும் ஆனது. இது சாமியாருக்கு ஞானம் கொடுத்த திருநிலையம். இவ்விடத்தில் தினம் நூற்றுக்கணக்கில் அடியார்கள் வழிபடுகின்றனர். குறுகிய காலத்தில் அமைத்த ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஆஞ்சநேயருக்கு அநேக பக்தர்கள் தமது இஷ்டசித்திகளைப் பெறுவதன் பேரில் நேர்ந்து தமது குறிக்கோள் நிறைவேறும்போது வடைமாலை, வெற்றிலை மாலை, தேனபிஷேகம் ஆகியன செய்து இன்புறுகின்றனர்.

இத்திருக்கோயில் இயற்கையாகவே பல சிறப்புக்களைக் கொண்டது. கருவறை தொடக்கம் சகல பரிவாரமூர்த்தங்களும் தனித்தனி புதுமையானவை. இத்திருத்தல வாசலில் வேம்பும் அரசும் ஒரே இடத்தில் இணைந்து ஓங்கி வளர்ந்துள்ளன. அரசு சிவனாகவும், வேம்பு அம்மனாகவும் கொள்வது சைவமரபாகும். சிவன் ஆலயத்தில் இப்படியாக வேம்பும் அரசும் இணைந்து வளருவது உமா - சிவன் அர்த்தநாரீஸ்வரர் மூர்த்தத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பதாகும். இதனால் இவ்விரு மரங்களையும் சுற்றி ஓர் 4 அடி உரயக் கட்டடம் கட்டப்பட்டு மரத்தினடியில் ஒரு சிவலிங்கம் அமைக்கப்பட்டுத் தினமும் முக்காலப் பூசை வழிபாடு நடைபெறுகின்றன. சிவராத்திரி அன்று இரவு முழுவதும் விழித்திருந்து எம்பெருமானின் பூசைகள், சமயச்சொற்பெருக்கு, ஆன்மீகக் கலை நிகழ்வுகளைக் கண்ட அடியார்கள் அதிகாலை அன்னை சிவகாமி அம்பாளின் வாசலிலுள்ள திருக்கிணற்றில் நீராடியதும் ஒவ்வொருவரும் தீர்த்தம் குடங்களில் எடுத்துத் தலையில் வைத்துத் திருமுறைகளை ஓதிக்கொண்டு ஊர்வலமாக வந்து வேம்பு அரசடியில் அமர்ந்த சிவனுக்கு அபிசேகம் செய்து வழிபடுவது கண்கொள்ளாக் காட்சியாகும். இதன்பின் எம் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை பூசை வழிபாடு செய்து வீதியுலாக் காட்சியும் நடைபெறுவது மிகவும் சிறப்பாகும்.

சிவன் கோயிலில் யமசங்கார விழா நடப்பதன் சிறப்பை உணர்ந்த ஒருசிலர் விரைவில் யமசங்காரத்துக்கு வேண்டிய வாகனமாக எருமையும் யமனும் செய்ய முயற்சிக்கின்றனர். இதுவும் இக்கோயிலின் பெருமையையும் சிறப்பையும் உணர்த்துவதாகும். இவையெல்லாம் சீரிணுவைத் திருவூரின் விசாலாட்சியம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமானின் பேரருளாகும்.

"ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி சிவன்சேவடி போற்றி"

- இ.செ.நடராசா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் - மஞ்சத்தடி
# அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் திருக்கோவில்



இந்தத் திருக்கோவில் இணுவிற் கிராமத்தின் கிழக்கின் தெற்கெல்லையாகவும் கோண்டாவிற் கிராமத்தின் வடமேற்குப் பகுதியில் அதன் இறைமையுடையதாகவும் அமைந்துள்ளது.

கி.பி 1902 ஆம் ஆண்டில் இப்போது இணுவில் பெரிய கந்தசுவாமி கோயிலில் நிற்கும் திருமஞ்சத்தின் அடித்தளம் இவ்விடத்திலேயே காலஞ்சென்ற சந்நியாசியாரால் கட்டுவிக்கப் பட்டதால் மஞ்சத்தடி என்னும் காரணப்பெயரால் இது அழைக்கப் படுகிறது. தனக்கென ஒரு கிராமசேவகரைக் கொண்ட இந்த மஞ்சத்தடிப் பகுதியில் வசிக்கும் மக்கள் தங்களை இணுவிலார் என அழைப்பதில் பெருமைப்படுவார்கள். மஞ்சத்தடியின் சிறப்புக்கு உச்சமான காரணமாக இருந்தவர்கள் இந்தச் சந்நியாசியாரும் அவர் பரம்பரையினருமென்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நியாசியாரைப், பெரிய கோயில் முருகன் மீதான அவரது அன்பு கிழக்கே வரவிடாது தடுத்தது. மிகுதி உள்ளக் கிடக்கையை அறிந்த முருகன், ஒருநாள் அவரது சொப்பனத்தில் தோன்றி "நான் அருணகிரிக்கு உபதேசித்தவன். என்னை நினைத்து இங்கே எனது வடிவேலை வைத்து வணங்கு" என்று சொல்லி மறைந்தருளினார்.

துன்பமடைந்திருந்த சந்நியாசியார், முருகப்பெருமானின் உரையைக் கனவிற் கேட்டுப் பெரும் மகிழ்ச்சியோடு அன்றைய தினமே தான் வசிக்கும் அரசோலை வளவில் வடிவேலை வைத்துப் பூசித்து வந்தார். அவ்வளவின் பக்கலில் உள்ள கப்பனைப் பிள்ளையாரை அன்றி அதனருகே மணியகாரன் கதிரித்தம்பியின் நாற்சார் வீட்டில் எழுந்தருளியிருந்த மாரியம்மனையும் வணங்கி வந்தார். வடிவேல் பிரதிஷ்டை செய்த இடத்தில் ஒரு சிறுகுடிலும் அமைத்துத் தானே விளக்கேற்றி அவ்வடிவேலுக்கு அபிஷேகம் முதலியன செய்தும், மலர்மாலை, பட்டுச்சார்த்தியும், அமுது படைத்தும், தூபமிட்டுத் தீபம் காட்டியும் வழிபட்டு வந்தார்.

இவ்வாறு வாழ்ந்த பெரிய சந்நியாசியார் 1917 ஆம் ஆண்டு தமிழ்ச் சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்தில் சமாதியடைந்தார். பெரிய சந்நியாசியார் சமாதியடையவும் அவரால் வெட்டப்பட்ட சமாதிக்கான இடத்தில் அன்னாரது சமாதியமைத்த போது அவரது பிரதான சீடரும் இசை வேளாளருமான விசுவலிங்கம் உடனிருந்து சகல நிகழ்விலும் தொண்டாற்றினார். சமாதி வைத்த இடத்தில் 16 ஆம் நாள் பெரியவரால் வணங்கப்பட்ட வேலாயுதத்தைச் சகோதரர் வேலாயுதர் மற்றும் உறவினர், அடியார்கள் யாவரும் கூடி வேண்டிய அபிசேகம் பூசைகள் யாவும் செய்து வழிபட்டனர். அதைப் பெரிதாகக் கட்டினர். வேலாயுதர் அப்பாவும் பெரிய சந்நியாசியார் போலத் திருவாக்குச் சொல்லியும், விபூதி கொண்டு மக்களின் நோயைக் குணப்படுத்தியும் வந்தார். இவர் காலத்திலிருந்தே கப்பனைப் பிள்ளையாருக்கும் அருணகிரிநாத சிவசுப்பிரமணியருக்கும் ஒன்றாகப் பூசைகள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது அப்பர் வேலாயுதர் சமாதியடைய, அவரது இளைய மகன் ஆறுமுகம் அருளாட்சிக்கு வந்தார். கோயிற் பூசை, திருவிழா மகோற்சவம் யாவும் முன்போல் நடைபெறச் செய்தார்.

வேலாயுதர் காலம் போல ஆறுமுகத்தார் காலத்திலும் திரு.வடிவேற்சுவாமியார் தமது அடியார் கூட்டத்துடன் கோயிற் பசனையும் பெரியவரின் திருவோணக் குருபூசையும் நடாத்துவித்தார். ஆறுமுகம் மக்களுக்கு மணிமந்திரம் சொல்லி விபூதி இட்டு நோய்களைக் குணப்படுத்த வீடுகளுக்குச் சென்று பில்லி சூனியம் எடுத்து சுகமடையச் செய்தார். இவரது உலாவின் போது பறைமேளம், உடுக்கு, சேமக்கல இசையுடன் வேடதாரிகளும் பக்தர்களும் உடன்செல்வர்.

வேலாயுதர் மகன் ஆறுமுகம் சந்நியாசியார் சமாதியான பின் அவரின் மகன் கந்தையா (நடராசா) என்பவர் வாரிசானார். அவர் முன்னோரைப் போன்ற விவேகமும் ஆற்றலும் குன்றியதால் கோயில் பரிபாலனத்தில் தொய்வனவு ஏற்பட்டது. சிறப்பாக அருள் பாலித்த கோயில் செயல் குறுகிப்போவதை விரும்பாத ஒருசில அடியார்களும் அயலவர்களும் ஒரு சபை அமைத்துச் செயற்பட்டு வழிபட ஏற்ற பூசை திருப்பணிகளை நிறைவேற்றி வந்தனர். இந்தச் சபையினரின் செயலில் போதிய முன்னேற்றங் காணாத நிலையில், கோயிலின் வாரிசான கந்தையா அவர்களைத் தலைவராகக் கொண்டு பிறிதொரு அறங்காவற் குழு செயற்படத் தொடங்கியது. அடியார்களிடமும் பக்தர்களிடமும் கூடிய நிதி சேகரித்துக் கோயிலின் கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றை நல்ல வைரவேலையாகக் கட்டுவித்தனர். இவ்வறங்காவற்குழுவில் அங்கம் வகித்தவர்களுட் சிலர் மஞ்சத்தடி கிராம முன்னேற்றச்சங்க உறுப்பினராகவும் இருந்து திறமையுடன் செயற்பட்டனர்.

திருப்பணிச் செலவைக் குறைக்கும் நோக்கில் விவேகானந்தா கிராம முன்னேற்றச்சங்க நிர்வாக உறுப்பினர்களின் சிரமதானம் மூலம் பல தொண்டுகள் நிறைவேறின. சிரமதானத் தொண்டர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலில் தமது சொந்த வேலைகளைக் கவனித்த பின், இரவு ஏழுமணி முதல் நள்ளிரவு வரை சிரமதானம் செய்தனர். இவர்களது உதவியால் புதிய அத்திவாரம் ஆறடி ஆழத்துக்கு வெட்டப் பட்டுக் கற்கள், மண் போன்றவையும் தகுந்த இடங்களில் சேமிக்கப்பட்டன. தொடர்ந்து இவ்வாலயத்தின் உள்வீதியின் புறமதில் வெகுசிறப்பாக அமைக்கப் பட்டது. இச்சிரமதானத்தால் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் சேமிக்கப்பட்டன.

சிறிதுகாலஞ் செல்ல இவ்வறங்காவற்குழுவில் புதியவர் களும் சேர்க்கப்பட்டு உள்வீதி முழுவதும் மேற்கூரை வேலையும் அமைந்தன. இக்காலத்தில் அடுத்தடுத்து இரு சித்திரத் தேர்களும் வாகனங்களும் திறம்படச் செய்யப்பட்டன. யுத்தகால நெருக்கடி காரணமாகவும் அறங்காவற்குழுவில் ஒருவர் மறுமை எய்தியமையாலும் சிலர் விலகிச் சென்றதாலும் தடைப்பட்டிருந்த திருப்பணி வேலைகளை முருகன் செய்விக்கத் திருவருள் கொடுத்தார்.

சென்ற வருடம் அயலில் இருந்த பல அடியார்களின் உதவியால் வசந்த மண்டபத்தையும் இணைந்த மண்டபங் களையும் வடிவமைத்தனர். வாசற்கோபுரம் அமைக்கவும் முருகப்பெருமான் அருள்புரிந்ததால் அடித்தளம் அமைத்துக் கட்டட மேல்மட்டம் பஞ்ச தளத்தின் அடிப்பகுதித் தட்டுவேலை மட்டத்தில் நிறைவுபெற்றுள்ளது. இவ்வேலைகளுக்கு முருகன் அருளும் திருப்பணி செய்ய விரும்பிய முருகன் அடியார்களின் பெரும்பங்கும் துணைசெய்யத் திருப்பணி வேலைகள் தொடர்கின்றன.

இவ்வருடம் நவக்கிரக மண்டபமும் பூர்த்தியாகி மூர்த்தி களுக்கான குடமுழுக்கும் அபிஷேகங்களும் குறிப்பிட்ட காலத்தில் நடந்து நிறைவுபெற்றுள்ளன. இவ்வாலயத்தில் (மடாலயம்) மூலமூர்த்தியாக வடிவேலும், பரிவார மூர்த்தங்களாக ஆறுமுகப்பெருமானும், நடேசப் பெருமானும், தனித்தனியாக அர்த்தமண்டப அமைப்புக்களிலும் மேலும் விநாயகர், அம்பாள், சந்தானகோபாலர், வைரவர், நவக்கிரக மண்டலம் ஆகியனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. வசந்த மண்டபத்தில் வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான், விநாயகர், எழுந்தருளி விக்கிரகங்கள் (ஐம்பொன்) உள்ளன.

பெருவிழாக்களாகச் சித்திரைத் திருவோணம் தீர்த்தத் திருவிழாவாக அமைய 12 திருவிழாக்களும், ஆறுமுகப் பெருமானுக்கு வள்ளி தெய்வானை திருக்கல்யாணத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன. தொடர்ந்து, கார்த்திகை (மாதந் தோறும்), நவராத்திரியும், கந்தசட்டியும் நிறைவில் சூரன் போர், திருக்கார்த்திகையும், திருவெம்பாவை போன்றவையும் வெகுசிறப்பாக நடைபெற்றுவருகின்றன. சகல கோயில் தொண்டுகளையும் அடியார்களும் இளைஞர்களும் மிகத் தூய உள்ளத்துடன் சிறப்புறச் செய்து முருகப்பெருமானின் அருளைப் பெற்று இன்பமுடன் வாழ்கின்றனர்.


இக்கோயிலில் குறித்தகாலத்தில் புராணபடனமும் மகோற்சவ காலங்களில் பசனையும் சிறப்புடன் நடை பெறுகின்றன. பெரிய சந்நியாசியாரின் சீடர்களில் பிரபலமானவரும் தவில் மேதையுமான விசுவலிங்கம் அவர்கள் இத்திருத்தலம் அமைய முழுவீச்சாகச் செயற்பட்டவர். அவரின் மூத்தமகன் உருத்திராபதியும் பெருந்தொண்டும் ஒத்துழைப்பும் கொடுத்தார். பின் விசுவலிங்கத்தின் பேரன் திரு.சுந்தரமூர்த்தி அவர்கள் அக்கறையுடன் பேருதவி செய்தும் அறங்காவற் குழுவில் அங்கம் வகித்தும் அரிய பணியாற்றுகின்றார். இவர்கள் அனைவருக்கும் முருகன் அருள் உண்டு.

**வை.க.சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்
# ஸ்ரீவிசாலாட்சி சமேத விஸ்வேஸ்வர சுவாமி கோவில்
# (சிவன் கோவில்)



"சைவத்தார் கோவில்" எனவும், சிவன் கோவில் எனவும் அழைக்கப்படும் இணுவில் ஸ்ரீவிசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வேஸ்வர சுவாமி கோவிலின் வரலாற்றினைச் "சீரிணுவைத் திருவூர்" எனும் இந்நூலில் இடம்பெறச் செய்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

சைவமும், தமிழும், இசைக்கலையும் சிறந்தோங்கும் இணுவில் கிராமத்தின் மத்தியிலே காங்கேசன்துறை வீதியில் இணுவில் மத்திய கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள இவ்வாலயம் நூறு வருடங்களுக்கு முன்னர் குருபூசை மடமாக இயங்கி வந்தது. "சைவச் சின்னப்பிள்ளை" என அழைக்கப்பட்ட திரு.வே.சின்னத்தம்பி அவர்கள் இச்சிவபூசை மடத்தில் சிவபூசை செய்து வந்த காலத்தில் இங்கு குருபூசைகளும் சமய நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.சின்னத்தம்பி அவர்கள் தலயாத்திரை மேற்கொண்டு இந்தியாவிலுள்ள காசியில் கங்காநதியில் ஸ்நானம் செய்தபோது கண்டெடுத்த சிவலிங்கத்தைக் கொண்டுவந்து இம்மடத்தில் 1912 ஆம் ஆண்டு வைகாசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகம் செய்வித்தார். அன்று தொடக்கம் பிராமணர்களால் இவ்வாலயத்தில் காலையும் மாலையுமாக இருநேரப் பூசை செய்யப்பட்டு வருகிறது. இக் கும்பாபிஷேகத்தின் போது சிவனுடைய கர்ப்பக்கிரகத்தினுள்ளேயே அம்பாளையும் பிரதிஷ்டை செய்தார்கள். கர்ப்பக்கிரகத்துக்கு நான்கு பக்கங்களிலும் வாசல்கள் விடப்பட்டிருந்தன.

1927 ஆம் ஆண்டில் திரு.வே.சின்னத்தம்பி அவர்களின் மகனான திரு.சி.சபாபதிப்பிள்ளை அவர்கள் அம்பாளுக்குத் தனியாகக் கர்ப்பக்கிரகம் அமைத்து 1927 ஆம் ஆண்டு (பிரபவ வருடம்) ஐப்பசி மாதம் 22 ஆம் நாள் மகா கும்பாபிஷேகம் செய்வித்தார். இதன்போது சிவனது கர்ப்பக்கிரகம் ஒரு வாசல் உடையதாக்கப்பட்டது. அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டு, விநாயகர், சுப்பிரமணியர், வைரவர் ஆகிய பரிவாரமூர்த்தங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. சிவபூசை மடம் இவ்வாறு சிவாலயமாகியது.

திரு.சபாபதிப்பிள்ளை அவர்களின் மறைவுக்குப் பின்னர் அவரது மக்களாகிய திரு.ச.சீவரத்தினம் அவர்களும் திரு.ச.இராமநாதன் அவர்களும் இவ்வாலயத்தைப் பரிபாலனம் செய்து வந்தனர். இக்காலத்தில் 1958ஆம் ஆண்டு திரு.கந்தவனம் செல்லத்துரை என்பவரால் இவ்வாலயத்திற்கு மணிக்கோபுரம் கட்டப்பட்டுக் கண்டாமணியும் வழங்கப்பட்டது. இம்மணியே அன்று தொடக்கம் இன்றுவரை ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

திரு.ச.சீவரத்தினம் அவர்களதும், திரு.ச.இராமநாதன் அவர்களதும் பரிபாலன காலத்தில் 1977ஆம் ஆண்டு தைமாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருத்தவேலைகள் செய்யப்பட்டு 1978ஆம் ஆண்டு (காலயுக்தி வருடம்) வைகாசி மாதம் 12 ஆம் நாள் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கும்பாபிஷேக தினத்தைப் பூர்த்தி நாளாக வைத்து வருடாவருடம் 25 நாட்கள் அலங்கார உற்சவம் நடாத்தப்பட்டு வந்தது. பூர்த்தி நாளன்று சிறப்பான முறையில் சங்காபிஷேகம் இடம்பெற்று வந்தது. எனது தந்தையாராகிய திரு.ச.சீவரத்தினம் அவர்களின் மறைவின் பின்னர், சிறிய தகப்பனாராகிய திரு.சஇராமநாதன் அவர்களுடன் சேர்ந்து இவ்வாலய நிர்வாகத்தைக் கவனிக்கின்ற பொறுப்பும், பாக்கியமும் எனக்குக் கிடைத்தன.

1987 ஆம் ஆண்டில் இவ்வாலயத்தில் பிரதோஷமூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பிரதோஷ பூசை சிறப்பாக நடைபெற்று வருகின்றனது.

திரு.ச.இராமநாதன் அவர்களது மறைவின் பின் இவரது மகன் ஸ்ரீஸ்கந்தன் அவர்களும், எனது சகோதரியின் குடும்பத்தினரும் என்னுடன் சேர்ந்து தற்போது இவ்வாலயத்தைப் பரிபாலித்து வருகின்றனர்.

1995 ஆம் ஆண்டில் இவ்வாலய பக்தர் ஒருவரது கனவிலே சிவனின் பெயரைக்கொண்ட ஒருவர் இக்கோவிலைக் காட்டி, தீர்த்தம் சரியில்லை. நல்ல தீர்த்தம் வேண்டும் என்று கூறியதால் இது "சிவனின் வாக்கே" என அவர் ஏற்று என்னுடன் கலந்தாலோசித்து பாலஸ்தாபனம் செய்து கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்றார். தனது பொறுப்பிலே தீர்த்தக்கிணறு அமைத்துத்தர முன்வந்தார். இந்நிலையில் இடப்பெயர்வும் ஏற்பட்டதால் 1997 ஆம் ஆண்டிலேயே பாலஸ்தாபனம் செய்யப் பட்டு, மகாமண்டபம், அர்த்தமண்டபம், ஸ்நபன மண்டபம் என்பன புனரமைக்கப்பட்டதுடன் வசந்தமண்டபம், தம்பமண்டபம் என்பனவும் புதிதாக அமைக்கப்பட்டுத் தீர்த்தக்கிணறும் அமைக்கப்பட்டு அழகிய கோவிலாக உருவாக்கப்பட்டு 1998 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 18 ஆம் நாள் (01.05.1998 இல்) மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இவ்வாலயத்தில் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் வைகாசி அமாவாசைத் திதியைத் தீர்த்தத்தினமாகக் கொண்டு சிவனுக்கு 15 நாட்களும், ஆவணிப் பௌர்ணமியைத் தீர்த்த்தினமாகக் கொண்டு அம்பாளுக்கு 10 நாட்களும் அலங்கார உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதைவிட ஒவ்வோர் வருடமும் மாசி மாதத்தில் இலட்சார்ச்சனை இடம்பெறுகிறது.

1999 ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் தைப்பூசத் தினத்தில் பன்னிருதிருமுறை முற்றோதல் ஆரம்பிக்கப்பட்டுச் சித்திரைச் சதயத்தன்று நிறைவுபெறுகின்றது. மேலும் அபிராமிப் பட்டர் விழா, சிவராத்திரி விழா என்பன மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்று வருகின்றன.

நயினாதீவு கைலாசநாதக் குருக்கள் அவர்கள் இணுவில் கந்தசுவாமி கோவில் திருவிழாவிற்கு வருகைதரும்போதெல்லாம் இவ்வாலயத்துக்கும் வருகைதந்து பூசை செய்வார். இவர் போன்று வேறும் பிரபல்யமான அந்தணர்களும் இவ்வாலயத்துக்கு வருகை தந்து பூசைசெய்து மகிழ்ந்தனர்.

1997 ஆம் ஆண்டிலிருந்து இவ்வாலயத்தின் பூசைப் பொறுப்பினை பிரம்மஸ்ரீ தாணு.வாசுதேவக்குருக்கள் ஏற்றுக் கொண்டார். இவரும் இவரது புத்திரர்களும் இவ்வாலயத்தின் அனைத்துப் பூசைகளையும் சிறப்பாக ஆற்றிவருகின்றனர்.

சைவப்பெருங்குடி மக்களது ஆதரவுடனும் இவ்வாலயத்துக்குச் சொந்தமான இணுவில் வைத்தியசாலைக்கு அருகேயுள்ள கட்டடங்களின் வாடகை நிதியுடனும் நிர்வகிக்கப்படும் இவ்வாலயம் மேலும் சிறந்தோங்கிடச் சிவன்தாள் பணிகின்றேன்.

**சீ.பரமேஸ்வரன்**
பரிபாலகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில்

# கன்னகா பரமேஸ்வரி ஆலயமும் தர்மசாஸ்தா குருகுலமும்



திருமலியும் சிறவள யாழ்ப்பாணத்தில்
திகழ்ந்திடு முத்தமிழ் ஓங்கும் இணுவையம்பதியில்
அருள்மலியும் தேவியவள் கன்னகித்தாய்
அன்னை பரமேஸ்வரி தாள் பணிகுவோமே!

எல்லாம் வல்ல கன்னகா பரமேஸ்வரி ஆலயம் இணுவில் மேற்கு வட்டுவினிக் குறிச்சியில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் இவ்வாலயம் செல்லப்பா என்பவரால் அமைக்கப்பட்டுப் பூஜிக்கப்பட்டு வந்தது. பின்னர் இவ்வாலயம் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்களினால் நித்திய, நைமித்தியக் கிரியைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. அக்காலத்தில் செல்லப்பா அவர்கள் இறக்க அவருடைய மகன் திரு.திருவிளங்கம் இப்பொழுது ஆலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்து ஆலயத்தைப் பரிபாலித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார். இவ்வாலயத்தில் 1985 ஆம் ஆண்டு மகாதேவக் குருக்களின் தலைமையில் நயினாதீவு பிரதமகுரு திரு.பரமேஸ்வரக் குருக்களால் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்கும்பாபிஷேகத்துக்கு உபயகாரரான இணுவிலைச் சேர்ந்த திரு.து.சிவராசா அவர்களும் கிராம மக்களும் உதவிபுரிந்தார்கள். ஆலயக் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மாசி மாதத்தில் 12 தினங்கள் திருவிழாக்களும், சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனிப்பூரம், ஆடிப்பிறப்பு, ஆடிப்பூரம், ஆடிச் செவ்வாய், வரலட்சுமி விரதம் என்பனவும் இலட்சார்ச்சனை ஆவணி மாதத்தில் 10 தினங்களும், புரட்டாதி மாதத்தில் நவராத்திரியும், ஐப்பசி வெள்ளி, கார்த்திகை மாதம் ஸ்ரீசக்ர பிரதிஷ்டையும், திருக்கார்த்திகை புனர்பூச உற்சவமும், மார்கழித் திருவெம்பாவையும், விஷ்ணுவுக்குரிய ஏகாதசி விரதமும் வெறுசிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தில் சிறப்பாக நடைபெறும் நவராத்திரி தினத்தில் அதிகாலையில் நடைபெறும் ஸ்ரீசக்ர நவமாவரண பூஜையில் நாதஸ்வரக் கலைஞர்களும், தவில் வித்வான்களும், இசைக் கலைஞர்களும் கலந்துகொண்டு தங்களுடைய கலையை அர்ப்பணித்து வருவதும் இங்கு காணக்கூடியதாக உள்ளது. அதிலும் சிறப்பாக நாட்டியாஞ்சலி, சாந்தினி சிவநேசன், திரு.அருள்மோகன், மிருதங்க வித்வான் சி.மகேந்திரனின் மகன் தபேந்திரன் ஆகியோரால் நிகழ்த்தப்பட்டு வருவது இவ் வாலயத்திற்கேயுரிய தனிச்சிறப்பாகும்.

இவ்வாலயத்தைச் சிறப்பாக நடாத்திவருகின்ற மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் அவர்கள் ஆலயத்துக்கு அருகிலே 1967 ஆம் ஆண்டளவில் "தர்மசாஸ்தா குருகுலம்" எனும் வேத ஆகம பாடசாலையை நிறுவிப் பிராமண இளைஞர்களுக்கு வேத ஆகமங்களையும் கற்பித்து அவர்களுக்குச் சிவாச்சாரிய அபிஷேகம் செய்து "சிவாகமதத்வநிதி" எனும் பட்டமளித்து அவர்களை இலங்கையில் மட்டுமன்றி வேறுபல நாடுகளுக்கும் சென்று நித்திய, நைமித்திய பூசைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம், மகோற்சவங்களையும் நடாத்திவைப்பதற்கு உருவாக்கியுள்ளார். இக்குருகுலத்தில் மகாதேவக்குருக்கள் அவர்களின் மகனான ம.சோமசுந்தரசர்மாவினால் வீணை வகுப்பும், இசைக்கலைஞர் சிவஞானசேகரத்தினால் பண்ணிசை வகுப்பும் நடாத்தப்பட்டு வருகின்றன. திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய தர்மகர்த்தாவும் ஆலய அர்ச்சகருமான பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்களினால் புதிய குருகுலக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு அங்கிருந்து பிராமண இளைஞர்கள் கல்விகற்று வருகின்றனர். இதைவிட இவ்வூரில் வாழ்ந்து அமரராகிய பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அவர்கள் இவ்வாலயத்தின் ஊஞ்சற் பாட்டை இயற்றிப் பாடியுள்ளார்.

மேலும் 1989 ஆம் ஆண்டு இவ்வாலய மண்டபத்தில் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களால் வட்டுவினிக் கண்ணகை அம்மன் மீது பாடப்பெற்ற விண்ணப்ப வெண்பாக்கள் உள்ளிட்ட "அன்னை நாச்சி அருள்மஞ்சரி"என்னும் நூலை அருளன்னை தங்கம்மா அப்பாக்குட்டி, இந்துசாதனம் நமசிவப்பிரகாசம் ஆகியோர் சேர்ந்து வெளியிட்டு வைத்தனர். இவையெல்லாம் இவ்விணுவை ஊருக்கேயுரிய தனிச்சிறப்புகளாகும்.

மேலும் கண்ணகா பரமேஸ்வரி ஆலயத்தின் தனிச் சிறப்பாக அமைவது திரு.க.வீரமணிஐயர் அவர்களினால் சௌந்தர்யலகரி எனும் சுலோகம் கீர்த்தனை வடிவில் அம்பிகையின் நாமத்தில் பாடப்பட்டமை ஆகும். இவ்வாறாக இவ்வாலயத்தில் வருடாவருடம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சந்திரசேகரேந்திரசரஸ்வதி சுவாமிகளின் ஆசியுடன் புரட்டாதி மாதத்தில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தா.மகாதேவக் குருக்களினாலும் அவர்களின் மாணவர்களினாலும் காயத்ரி ஹோமம் வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றது என்பதும் ஒரு சிறப்பாகும்.

**ம.சோமசுந்தரசர்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில்
# பரமானந்தவல்லி அம்மன் கோவில்



### சைவப் பாரம்பரியம்

**சை**வப்பாரம்பரியத்தைப் பொன்னேபோல் போற்றும் பழக்கத்தை இன்றுவரை பேணிவருவது யாழ்ப்பாணமாகும். இதனைக் காக்கும் இயல்புடையோர் தமது குடியிருப்புக்களுக்கு அருகே பிறசயமத்தவர்கள் நுழையாமற் பார்த்துக்கொள்வதிலும் வல்லவர்களாய் இருப்பர். சைவ சமயத்தவர்களுக்கன்றி வேறு சமயத்தவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்பு எதுவுமே இல்லாத ஊர் இணுவையம்பதியாகும். இவ்வூரின் மூலைமுடுக்குகள் எங்கும் பெருங்கோயில்களும் சிறுகோயில்களும் நெருங்கி உள்ளன. இவை இவ்வூரார்களுக்குச் சைவத்தின் மேலுள்ள பற்றினை வெளிப்படக்காட்டுகின்றன. முன்னாளில் குடியிருப்பு வீடுகளுக்குள் தெய்வப்படமோ வேறு ஏதேனும் சின்னமோ இன்றி தமது விருப்பத்துக்குரிய தெய்வத்தை மானசீகமாக நினைந்து வழிபட்ட முறையும் இவ்வூரில் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்நிலைகளுக்கு அருகே கோயில்கள்

மேலும் நீர்நிலைகளை அடுத்துள்ள இடங்களிலும் தெய்வ வழிபாடு இருந்துள்ளது. இணுவைப் பெரும்பகுதி பத்துக் கிணற்றடிகளைக் கொண்ட பேரூர் என்று புகழப்பெற்றது. ஆற்று வளமற்ற யாழ்ப்பாணக் குடாநாட்டில் வற்றாத நன்னீர் மட்டம் நிலத்தின் கீழ் ஆழப்பதிந்து விரிந்துள்ளது.

நன்னீரானது பருகுவதற்கு மாத்திரமன்றி, பாசனத்துக்கும் உகந்தது. இந்நீர் ஆழவெட்டிய கிணற்றிலிருந்தே பெறப்படுகின்றது. ஆழ்ந்த கிணற்றிலிருந்து நீரைப் பெறுதல் இலகுவான காரியமன்று. இதற்குப் பெருமளவு மனிதசக்தி வேண்டப்படுகிறது. குறித்தவோர் இடத்தில் நிலத்தைத் தோண்டும்பொழுது, இடையிடையே பாரிய கற்கள் வெளிப்படும். அவற்றைக் கொத்திப் பிளப்பது மிகவும் கடினம். அவ்வாறான கற்களைப் பிளப்பதற்கு வெடிப்பொருட்கள் வேண்டும். பணப்புழக்கம் அரிதாய் இருந்த அக்காலத்தில் மனித சக்தியே கூடுதலாகப் பயன்பட்டது. இதனால் கிணறு வெட்டுவதற்கு நீண்ட நாட்கள் செலவானதுடன் பெருந்தொல்லைகளையும் எதிர் கொள்ள நேர்ந்தது.

பெருஞ்சிரமங்களைச் சகித்துக்கொண்டு வெட்டிய கிணறு இறையருள் பெற்றதென அக்கால மக்கள் நம்பினர். அதன் அடையாளமாகக் கிணற்றுக்கு அருகே கோயில் அமைத்தனர். அக்கோயிலைச் சிறிதாகவோ அன்றிப் பெரிதாகவோ பொருள் வசதிக்கு ஏற்ப அமைப்பர். அவ்வாறு அமைத்த கோவிலில் பிள்ளையார், அம்மன், வைரவர், முதலியாள் போன்ற தெய்வங் களுள் ஒன்றை உருவம் பொறித்தோ, பொறிக்காமலோ வைத்து வழிபட்டு வந்துள்ளனர்.

இந்த வகையிற் பார்க்கும்பொழுது, இணுவைப் பெரும் பதி பத்துக் கிணறுகளைக் கொண்ட பேரூர் எனப் பெருமை பெற்றது. வானம் பார்த்த பூமியான யாழ் குடாநாட்டில் செம்மண் செறிந்த பகுதிகளுள் இணுவில் ஊரும் அடங்கும். விவசாயத்துக்கேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்வளமும் நன்னீர் வளமும் இங்குள்ள மக்களுக்குப் பேருபகாரமாய் உதவுகின்றன. தமது தோட்டத்தில் விளைந்த பொருட்களை இறைவன் தந்த செல்வமெனச் சிந்திக்கும் மனப் பாங்கு இவ்வூரவர்களின் இதயத்தில் ஊறிய நம்பிக்கை.

## கிணற்றடியில் அமைத்த கொட்டிற் கோயில்

இணுவில் மத்தியைச் சேர்ந்த காசிநாதர் என்ற சந்நியாசிக் கந்தர் - சின்னக்குட்டி குடும்பத்தினர் செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருந்த பண்பினர். இவர்கள் இணுவை ஊரை அருளாட்சி செய்த பெரிய சந்நியாசியார் (சுப்பிரமணியம் சந்நியாசியார்) அவர்களின் அணுக்கத் தொண்டராவார். அவர்கள் வாழ்ந்த சிறுகுடிலில் இணுவிலூடே வடக்குத் தெற்காகச் செல்லும் காங்கேசன்துறை வீதியில் கோயில் வாசற் சந்திக்கு மேற்கே ஏறக்குறைய இருபது யார் தூருத்தில் நாம் முன்பு குறிப்பிட்ட பத்துக் கிணற்றடிகளுள் ஒன்று அமைந்துள்ளது.

அதற்கு அருகே குடியிருந்த சந்நியாசிக் கந்தர் தமது வீட்டுக்கும் கிணற்றுக்கும் வடக்கில் இருந்த முருகர் மாணிக்கர் என்பவருக்குச் சொந்தமான பங்குக்காணியை இறைவழிபாட்டுக்குக் கொட்டில் ஒன்று கட்டுதற்பொருட்டுப் பணம் கொடுத்து வாங்கினர். பின்பு தென்னங்கீற்றினால் வேய்த கொட்டில் ஒன்றை அந்நிலத்தில் கட்டுவித்தார். ஏறக்குறைய ஓர் அடி உயரமும் ஒரு முழுச்சுற்றும் கொண்ட வெள்ளைக்கல் பீடம் ஒன்றை அம்பிகையாகப் பாவித்து, அதற்குப் பரமானந்தவல்லி எனப் பெயரிட்டுக் காலை, மாலை இருவேளையும் வழிபட்டுவந்தார். கற்றைச் சடைமுடியுடன் நீண்ட தாடியும் வைத்திருந்த கந்தரின் தோற்றமும் வழிபடும் பாங்கும் காண்போர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன.

சந்நியாசிக்கந்தரை நாடிப் பல மெய்யடியார்கள் வரத் தொடங்கினர். அங்கு வருவோரின் துன்பம், துயர், பிணி ஆகியற்றைத் திருவருள் துணைகொண்டு திருநீறு சார்த்திக் குணப்படுத்தினார். அவரின் அருளாற்றலைக் கண்ட அடியார்கள் அவர்மீது அளவற்ற அன்பும் பக்தியும் வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டவேலையும் குடும்பச் சுமையும் கந்தருக் தப் பெருமளவில் இருந்தன. அவற்றைத் தனியொருவராய் இருந்து சமாளித்தல் அவருக்கு இடர்ப்பாடாய் இருந்தது. அதனால் கோண்டாவில் மேற்கிலே முத்தட்டிமடத்தடியில் இருந்த சின்னையர் என்ற வீரசைவர் பரமானந்தவல்லியின் பூசைப் பணிகளுக்குச் சிலகாலம் உதவினார். ஆயினும் முதுமை காரணமாக அவரால் அவ்வுதவியைத் தொடர்ந்து செய்ய இயலாமற் போயிற்று.

அவ்வேளையில் தம்பிரான் சுவாமி என்ற துறவி ஒருவர் அங்கு வந்தார். அவர் அடுத்த நாளைக்குத் தேவையென்று எதனையும் சேர்த்து வைப்பதில்லை. தமக்குத் தேவையானவற்றை ஊரில் சென்று அன்றாடம் தண்டுவார். தண்டிய பொருட்களை அமுதாகவும் கறியாகவும் ஆக்கி அம்பிகைக்கு நிவேதித்துப் பூசைசெய்வார். பின்பு அப்பிரசாதத்தை ஒருவேளை உண்பார். தம்பிரான் சுவாமிகள் இங்கு தங்கியிருந்த காலத்தில் அம்பிகையின் பூசை தடையின்றி நடைபெற்றது.

ஆயினும் அவர் ஒரு துறவியாய் இருந்ததால் ஓரிடத்தில் நிலைத்திருக்க விரும்பவில்லை. அதனால் வேறிடம் செல்ல விரும்பினார். சுவாமிகளின் குறிப்பறிந்த கந்தர் அவரது மனப் போக்கின்படி நடந்து அன்புடன் விடையளித்தார்.

தம்பிரான் சுவாமிகள் சென்றபின் கோயில்க் கடமைகளைச் செய்வதற்கு இளைஞராய் இருந்த கந்தரின் அருமை மகன் வடிவேல் முன்வந்தார். கோயில்த் தொண்டுகள் மாத்திரமன்றி தந்தையாரின் தோட்ட வேலைகளுக்கும் தம்மாலான உதவிகளைச் செய்தார்.

தெய்வீகநாட்டம் நிரம்பிய வடிவேல் சுவாமிகள் தமது கடமைகளைக் காலையில் எழுந்து விரைவகச் செய்துமுடிப்பார். அதன்பின் தமிழ் இலக்கணம், இலக்கியங்கள், சமய சாத்திரங்கள், தத்துவ நூல்கள் முதலியவற்றைத் தக்காரிடம் சென்று பாடம் கேட்பது அவரது நாளாந்தக் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேல் சுவாமிகளின் எளிமையான தோற்றமும் பக்தியுடன் பூசைசெய்யும் பாங்கும் வழிபடுவோர் மனதைக் கவர்ந்தன. நாளடைவில் அடியார்களின் வருகை கூடத் தொடங்கியது. வழிபடுவோர் நின்று வணங்குவதற்கு இடவசதி போதாதிருந்தது. அதனால் அவ்விடத்தைச் சிறிதளவு பெரிதாக்க வேண்டுமென்று சுவாமிகள் விரும்பினார்.

## தென்னங்கீற்றுக்கோயில் சீமெந்துக் கோயிலானது

புதிய கோயில் கட்டுமாணவேலைக்கான ஆலோசனைகளைச் சாதுக்களும் அம்பிகை அடியார்களும் வடிவேல் சுவாமிகளுக்கு வழங்கினர். ஊரவர்களின் நிதியுதவியுடன் வடிவேல்சுவாமிகளின் மேற்பார்வையில் கட்டட வேலை கால்கொண்டது. கட்டடத்தின் நடுவே உருவம் பொறித்த அம்பிகையைப் பிரதிஷ்டை செய்வதற்கு ஏறக்குறைய ஐந்து முழ உயரமுள்ள கொங்கிறீற்று மாடம் அமைத்ததுடன் பிள்ளையார், முருகன், வைரவர், நாகதம்பிரான் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு வேண்டிய சிறுசிறு மடங்களையும் சுவாமிகள் அமைப்பித்தார்.

கட்டடவேலை நிறைவுற்றதும் புதிய மூர்த்திகள் உரிய இடங்களிற் பிரதிஷ்டை செய்யப்பெற்றுப் பெருஞ்சாந்தியும் பக்திபூர்வமாகச் செய்யப்பெற்றது.

## பக்திபூர்வமான பிரதிட்டையும் பெருஞ்சாந்தியும் (கும்பாபிஷேகம்)

புதிதாய் அமைந்த கோயிலில் மூர்த்திகளுக்குச் செய்யப் பெற்ற பிரதிஷ்டையும் பெருஞ்சாந்தியும் புதுமையானவை. பக்திபூர்வமான இந்நிகழ்வைச் சாதுக்களும் ஞானிகளும் மெய்யடியார்களும் குருமூர்த்திகளாக வருகைதந்து தமிழ் வேதமாகிய திருமுறை ஓதலுடன் செய்துவைத்தமை குறிப்பிடத் தக்கது. சாதுக்களின் கைராசியையும் அருளாற்றலையும் விளங்காமல் இந்நிகழ்வு பற்றிச் சிலர் தம்முள்ளே பலவாறு பேசிக்கொண்டபோதிலும், அன்னையின் அருளாட்சியும் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைகளும் மேலோங்கி வளர்ந்தமை மனங்கொள்ளத் தக்கது. அம்பாளின் பூசை வழிபாடுகள் சீராக நடைபெறுவது கண்டு மனங்குளிர்ந்த வடிவேல் சுவாமிகள் தமது பணிகளை விரிவுபடுத்தினார்.

## பூசைத்தொண்டுகள் கைமாற்றம்

பொதுப்பணியில் விருப்பம்கொண்ட சுவாமிகள் அதன் பொருட்டுப் பிற ஊர்களுக்கு அடிக்கடி செல்லநேர்ந்தது. அவ் வேளையில் சுவாமிகளின் விருப்பத்துக்குரிய வீரசைவ இளைஞரான நான் (சோ.பரமசாமி) பரமானந்தவல்லியின் பூசைப்பணிக்கு உதவினேன்.

சிறுவயது முதல் பரமானந்தவல்லியின் பூசைக்கு உதவி வந்த நான் உயர்கல்வியின் பொருட்டு தமிழகம் செல்ல வேண்டியிருந்தது. அந்நேரத்தில் இணுவில் ஊரவரான திரு.கந்தையா அவர்கள் அம்பாளின் பணிகளில் ஈடுபட்டு இயற்கையெய்தும்வரை அத்தொண்டைச் செய்துவந்தார்.

## ஆகமமுறையில் அமைத்த கருவறை

நல்ல சிந்தனை வீண்போகாதென்பது அனுபவ உண்மை. அதனை மெய்ப்பிக்கும் பாங்கில் அம்பாளின் மடம் முன்பிருந்த இடத்தில் ஆகம முறைப்படி புதிய கருவறை, வசந்தமண்டபம், சந்தானகோபாலருக்கான மாடம் ஆகியவை அமைக்கப்பெற்றன. கருவறையின் புறத்திலே வரிவேலைப்பாடுகளும் கிழக்கு வாயில் தவிர்ந்த ஏனைய திசைகளின் புறச்சுவரில் மூன்று கோட்டங்களும் அவற்றின் மேலே அம்பாள் ஆலயம் எனக் குறிக்கும் வடிவிலான விமானமும் அமைக்கப்பெற்றன.

## பெருஞ்சாந்தி

புறத்திலே வண்ண வண்ண மைதீட்டி எழுப்பிய புதிய கருவறையின் உட்சுவர், தளம், அம்பிகையின் பீடம் ஆகியவற்றுக்குச் சலவைக்கற்கள் பதிக்கப்பெற்றுள்ளன. அழகிய வெள்ளைச் சலவைக்கல் பீடத்தில் வேதபாராயணமும் திருமுறையும் ஒலிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகைக்கு அட்டபந்தனம் செய்து விஷு ஆண்டு சித்திரை மாதம் 14 ஆம் நாள் (27.04.2001) வெள்ளிக்கிழமை காலை வளர்பிறச் சதுர்த்தித் திதி கூடியிருந்த வேளையில் உரும்பிராய் ஞானவைரவர் கோயில் பிரதம வீரசைவக்குரு சிவத்திரு செ.வைரவநாதக்குருக்கள் தலைமையில் பெருஞ்சாந்தி விழா சிறப்பாக நடைபெற திருவருள் கைகூடியமை நினைத்து இன்புறத்தக்கதாகும்.

## நிறைவுரை

பாரோர்புகழும் இணுவில் பரமானந்தவல்லி ஆலயம் ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டு பழைமைவாய்ந்தது. இவ்வாலயம் அமைப்பிலே சிறிதாயினும் அம்பிகையின் அருளாற்றல் மிகப்பெரிது. இங்கு எழுந்தருளி இருந்து அருள் சுரக்கும் அம்பிகையின் பரமானந்தவல்லி என்ற பெயர் புதுமையானதெனச் சிற்பாசாரியர் முதல் அனைவரும் கூறுவர். புதுமையும் அற்புதமும் வாய்ந்த பரமானந்தவல்லி அம்பாள் உலகோர் அனைவருக்கும் ஆனந்தமான தெய்வம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சோ.பரமசாமி B.Sc
இணுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்
# மாணிக்கவைரவர், பத்திரகாளி அம்மன் கோவில்



இத்திருக்கோவில் இணுவில் சிவகாமி அம்மன் திருக் கோவிலின் மேற்கு வீதியில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தை யாழ்ப்பாணத் தமிழ் மன்னனான காலிங்கராயன் என்பவன் இணுவில் பகுதியை அரசாண்ட காலத்தில் அமைத்து வழிபட்டு வந்தான். இவ் வைரவர் இப்பகுதியின் காவல்தெய்வமாக அமைந்ததால் இவன் கடமைக்குச் செல்லும்போது மிக உளத்தூய்மையுடன் வழிபட்டு வந்தான்.

இத்தலத்தின் வாசலில் ஒரு வயது முதிர்ந்த நெடிய வில்வ மரமும், மேற்குப் புறத்தில் ஒரு வயது முதிர்ந்த வேப்ப மரமும் நன்கு நிழல்பரப்பி நிற்கின்றன. தெற்குப் புறத்தே ஒரு பெரிய மாமரமும் இங்கு அழகுசேர்த்துக் கொண்டிருந்தது. மாமர நிழலில், பெரிய சந்நியாசியார் இத்தலத்தை வணங்கிவிட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் உதவியாட்களுடன் தங்கிச் செல்வது வழக்கம். பிற்காலத்தில் மாமரம் தறிக்கப்பட்டாலும் மற்றிரு மரங்களும் இன்றும் சிறந்த நிழலை வாரி வழங்குகின்றன.

காவல் தெய்வங்களான வைரவரும் பத்திரகாளியம்மனும் அருளும் மங்களமும் நிறைந்தவர்கள். இத் திருக்கோவிலில் வைத்தே சாத்திரம்மா திருவாக்குச் சொல்லிவந்ததால் வாக்குக் கேட்க வருவோர் இவ்விரு தெய்வங்களுக்கும் தமது வழிபாட்டுடன் தங்கள் நோய், துன்பம், கஷ்டங்கள் நீங்குவதற்காக நேர்ந்து குறிப்பிட்ட காலத்தில் நேர்த்திக்கடனை முடிப்பர். பொங்கலும் பத்திரகாளிக்குச் சைவ, அசைவக் கறிகளும் சமைத்துப் படைத்து தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றி நலமுடன் வாழ்கின்றனர்.

பழுதடைந்த நிலையிலிருந்த இத்திருக் கோவிலைச் சாத்திரம்மா என்பவர் நல்ல வைரக்கற்களாற் சிறந்த பெரிய கட்டடமாகக் கட்டிக் குடமுழுக்கும் ஆட்டினார். தொடர்ந்து ஒரு மடைப் பள்ளியையும் கட்டுவித்தார். இவரது தொண்டால் இக்கோவில் சிறந்த அமைப்பாக உள்ளது.

இத்திருக்கோவிலில் நெடுங்காலமாகப் பிரம்மஸ்ரீ சதாசிவக் குருக்கள் பூசைசெய்தார். பின் அவரது சகோதரரும் பின் அவரது மகன் சோமாஸ்கந்தக்குருக்களும் பூசை செய்தனர். தற்போதும் சிவாச்சாரியார் வை.சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் காலை, மாலை இரு நேரம் பூசைகளை நல்ல கிரமமாகவும் பய பக்தியுடனும் செய்து வருகிறார். வருடத்தில் இருமுறை 40 நாட்கள் தொடர்ந்து அபிஷேகங்களும் சுவாமி வீதியுலாவும் நவராத்திரி வாழைவெட்டும் வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இத்திருத்தலத்தில் இரவு ஏழுமணிக்குப் பின் சாத்திரம்மாவின் முயற்சியால் அயலிலுள்ள படித்தவர்கள், மகாபாரதம், கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் முதலியவற்றைப் புராணபடனஞ் செய்து இன்பமடைவர். நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்காலச் சூழ்நிலை காரணமாக இப்படிப்பு நிறுத்தப் பட்டுள்ளது.

அயலூரில் உள்ளவர்களும் இக்கோவிலினதும் சிவகாமி அம்மன் கோவிலினதும் புதுமை காரணமாக அடிக்கடி வந்து இத் தெய்வங்களை வணங்கி அருள்பெறுகின்றனர்.

இவ்வாலயம் சு.மாசிலாமணி, சு.செல்லத்துரை ஆகியோரது கூட்டுப் பரிபாலனத்திலும் பின்பு செல்லத்துரை அவர்களின் மறைவின் பின் அவரது ஆண் சந்ததியினரது கூட்டுடனும் இயங்கிய பரிபாலகர்களது அயராமுயற்சியால் ஆலயத் திருப்பணிகள் சிறப்புற்றன வைரவப்பெருமான் உலா வருவதற்கான வாகனங்கள் பலவும் அமைக்கப்பட்டுச் சிறப்பாகக் காணப்படுகின்றன. இங்கு தாங்களாகவே முன்வந்து பணிசெய்து பொதுமக்கள் இன்புற்று வாழ்கின்றனர்.


**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில்

# பல்லப்பை வைரவர் கோவில்




இக்கோவில் இணுவிற் கிராமத்தின் வடதிசையிலுள்ள மருதனார்மடம் என்னும் குறிச்சியில் அமைந்துள்ளதால் மருதனார்மடம் பல்லப்பை வைரவர் கோயில் எனப் பிரபல்யமாக அழைக்கப்படுகிறது.

இவ்வாலயம் மிகவும் தொன்மையும் புதுமையும் கொண்டது. காவல் தெய்வமான வைரவப் பெருமானின் அருள் வளம் மிகச் சிறப்பானது. இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் இணுவிலைச் சேர்ந்த சுப்பர் காசிநாதர் என்ற விவசாயப் பெருங்குடியில் வந்த உத்தமர் தமது பல்லியாப்புலம் என்னும் காணியில் மருதனார்மடம் சந்தியின் தென்கிழக்கு ஓரமாக வைரவர் சூலம் ஒன்றை நிறுவிச் சிறுகோயிலாக அமைத்தார். இக் கோயிலின் ஆரம்பகாலப் பெயர் பல்லியாப்புலம் வைரவர் கோயிலாகும். காசிநாதர் அவர்கள் தமது ஆழ்ந்த பக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இவ்வைரவர் ஆலயத்தைப் பூசித்து வழிபட்டுவந்தார். அப்போது இக்கோயிலில் ஒரு நேரப்பூசை நடைபெற்றது. காசிநாதர் உரிய காலத்தில் இக்கோவிலமைந்த தமது காணியை மகளுக்கும், மகள் தமது பிள்ளைகளுக்குமென மாற்றஞ் செய்தனர். இதே வரிசையில் க.பொன்னையா என்பவரும் சகோதரர்களும் இக்காணியின் வாரிசானார்கள்.

தற்போது உடுவில் மகளிர் கல்லூரி அமைந்த இடத்தில் ஏற்கனவே பல்லப்பை என்ற சுற்றாடலில் வைத்து வணங்கிய வைரவப் பெருமானும் அம்பாளும் இடம்பெயர நேர்ந்தது. பல்லப்பை வைரவர் மருதனாமடத்திலிருந்த பல்லியாப்புலம் காணியிலமைந்த ஆலயத்தில் நாட்டப்பட்டு அவ்வாலயம் பல்லப்பை வைரவர் கோவில் எனப் பிரபலமடைந்தது. அம்பாள் சிலையை இணுவில் கந்தசுவாமி கோவிலின் அண்மையில் வசித்த செல்லப்பாப் பரிகாரியார் இல்லத்திற் கோவில் அமைத்து வழிபட்டார்.

பொன்னையாவும் சகோதரர்களும் தமது சொந்த வேலைகள் காரணமாகக் கோவிலைப் பராமரிக்கும் பணியினை உடுவிலைச் சேர்ந்த அப்பாத்துரை என்பவரிடம் கையளிக்க நேர்ந்தது. சிறந்த பக்தியுடைய அப்பாத்துரை அவர்கள் வைரவர் ஆலய அபிவிருத்தியின் பேரில் நிதிசேகரிக்க எண்ணினார். இக் கோயில் வாசலில் அன்று கூடும் மருதனார்மடம் சந்தையில் விவசாயிகளிடமிருந்து விற்பனைக்கான விளைபொருளில் கோயிலின் பேரில் பொருட்களாகவே சேகரித்து அன்றாடம் அப்பொருட்களை விற்றுச் சேரும் பணத்திலும் அவ்வப்போது அடியார்கள் வழங்கிய பிற உதவிகளுடனும் ஆலயத் திருப்பணிகளை மேற்கொண்டார்.

வைரவர் கோவிலில் பல்லப்பை வைரவர் சூலமும் சேர இக்கோயிலின் பெருமையும் அருளும் சிறப்படைந்தன. நாளடைவில் இக்கோவில் பல்லப்பை வைரவர் என்றே அழைக்கப்படலாயிற்று. இக்கோவில் பிரபல சந்தியில் இருந்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைக்கு வருவோர், இக்கோயிலைக் கடந்து வேறிடஞ் செல்வோர், தூர இடங்களுக்குச் செல்வோர், பிற மாவட்டங்களாகிய தென்னிலங்கை செல்லும் வாகனப் பயணிகளும் இக்கோயிலில் தரித்து வணங்குவதுடன் வைரவப்பெருமான் காவல் தெய்வமாதலால் அவருக்கெனக் காணிக்கை செலுத்தியும் செல்வர். இவ்வாறு பொதுமக்களினால் செலுத்தப்படும் உண்டியல் நிதி உரிய காலத்தில் சேகரிக்கப்பட்டுக் கோயில் பூசகர் வேதனம், கோயிலின் நாளாந்த இதர தேவைகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைப் பணம் செலவினத்திலும் மிகுதிப் பணம் ஊழலற்ற முறையில் வங்கியில் சேமிக்கப்பட்டும் வந்தது. அவ்வப்போது வங்கியிலிடப்பட்ட நிதியுடன் அத்தியாவசியத் திருப்பணிகள் தொடருங்கால் அயலவர்களும் வைரவப்பெருமான் மீது பக்தி கொண்டு மீளா அடிமைகளான பொதுமக்களும் திருப்பணிக்கெனப் போதிய அளவு நிதியை வழங்கினர்.

முன்னிருந்த சிறுகட்டங்கள் மாற்றஞ் செய்யப்பட்டுக் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம் என்பன காலத்துக்குக்காலம் கட்டப்பட்டன. இக்கோயிலின் அண்மையில் ஆரம்ப காலத்தில் ஆடு, கோழிகள் விஜயதசமியன்று பலியிடப்பட்டு வந்தன. காலப்போக்கில் பலியிடல் நிறுத்தப் பட்டது. இக்கோயிலில் மயிலணிக் கந்தசுவாமி கோயில் சுவாமி மாலைவேளை வீதியுலா வந்து மானம்பூ உற்சவத்தின்போது வாழை வெட்டி வந்தார். இவ்வழக்கம் யுத்த காலத்துடன் இடைநிறுத்தப்பட்டது. இக்கோயில் தெய்வீகம் பொருந்தியிருந்ததால் தமது உலாவின்போது மன அமைதி வேண்டி அருளாளர்களான யோகர்சுவாமிகள், வடிவேற்சுவாமிகள், குடைச்சாமியார், சேர்.பொன்.இராமநாதன் போன்ற பலர் கோயில் வாசலில் மர நிழலிலிருந்த கல்லின் மீது இருந்து அருள் வழங்கியதால் இக் கோயில் மேன்மேலும் சிறப்படைந்தது.

இணுவில் மக்கள் மிகப் பக்திபூர்வமாக வழிபட்டதுடன் திருப்பணியிலும் கூடிய பங்களிப்புக்கள் செய்கின்றனர். சென்ற பங்குனி மாத நன்னாளில் இக்கோயில் சிறந்த முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம் செய்யப்பட்டு விசேட அபிஷேகங்களும் செய்யப்பட்டன. வருடப்பிறப்பு, வெள்ளிக்கிழமைகள், நவராத்திரி, திருவெம்பாவை விசேட அலங்கார உற்சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. 1980 ஆம் ஆண்டிலும் ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

எழுந்தருளி வைரவர் சிலையும் வசந்த மண்டபத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. விசேட விழாக்களின்போது வைரவப் பெருமான் வீதியுலா வந்து அருட்காட்சி தருவார். இக்கோயிலின் பிரதான மண்டபங்கள் மிக்க கவர்ச்சியாக வர்ணங்கள் பூசப்பட்டு ஆலயத்தின் அழகை மேம்படுத்துகின்றன. கண்டா மணியொன்று உயர்ந்த மணிக்கோபுரத்திலிருந்து ஒலிக்கிறது. மின்னிணைப்புச் செய்யப்பட்டுள்ளது. இரு நேரப் பூசைகள் காலக்கிரமத்துடன் நடைபெறுகின்றன. விசேட விழாக்களை விட அபிசேகங்களும் விசேட பூசைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆலயம் அடிக்கடி கூட்டிச் சுத்தம் செய்யப்படுகின்றது. இதனால் கோயில் புனிதமாகக் காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் இக்கோயில் பராமரிப்புக் கடமைகளைத் தமது புனிதக் கடமையாக நடாத்திய அப்பாத்துரை அவர்கள் மறுமை எய்தும்வரை இறைபணியாற்றினார். பின் அப்பாத்துரை அவர்களின் மருகர் சுப்பிரமணியம் அவர்கள் மிகவும் சிறப்பாக நிர்வாகப் பணியாற்றிய காலத்திலேயே இக்கோயிலின் திருப்பணிகள் சிறப்படைந்தன. அருஞ்சேவையாற்றிய சுப்பிரமணியம் அவர்களும் மறுமையெய்திய பின் சுப்பிரமணியத்தின் மகன் ஒருவர் தமது தாயாரின் வழிகாட்டலில் மிகச் சிறப்புடன் பணியாற்றுகிறார். இவரது காலத்தில் மேலும் பல திருப்பணிகள் பொலிவுறக் காணலாம். அண்மையில் நடைபெற்ற கும்பாபிஷேகத்துடன் வெகுசிறப்படைந்த இக்கோயிலில் வாசற்கோபுரம் அமைக்கும் பணியும் விரைவில் அமைய இருப்பது வைரவப்பெருமானின் திருவருளாட்சியாகும். தமது பெயரைய வெளியிட விரும்பாமல் பல அடியார்கள் கோயிலில் நாளாந்த, வாராந்தச் செலவினங்கள், அவற்றினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிய திருப்பணிகளுக்கு அமைக்க வேண்டிய நிதியைத் தாமே முன்வந்து ஏற்பாடு செய்துள்ளனர். இவ்வாறான சகல சேவைகளையும் யாவரும் தமது ஆன்ம திருப்திக்காகவே செய்கின்றனர்.


இச்சிறப்பான ஆலயத்திலிருந்து இணுவில் சிவகாமி அம்மன் கோயில், இணுவில் ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் கோயில் ஆகியவற்றின் மஹோற்சவ காலத்தில் காவடி எடுக்கும் பக்தர்கள் வருடாவருடம் இவ்வாலயத்திலிருந்து நூற்றுக் கணக்கான காவடிகள் எடுத்துத் தமது நேர்த்தியை நிறைவேற்றுவர். இதே போன்ற பல பக்திபூர்வமான நிகழ்ச்சிகளாலும் பூசை வழிபாடுகளினாலும் இவ்வாலயம் சிறப்படைவது இணுவில் கிராமத்துக்கே பெருமையைத் தேடித் தருகின்றது என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்

# இராமநாதேஸ்வரம் பரமேஸ்வரன் கோவில்



இணுவிற் கிராமத்தை மையமாக வைத்துக் கல்வி ,கலை, கலாசாரம் வளரத் தமது பிற்காலத்தில் ஆத்ம சிந்தனையில் ஆழ்ந்த சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் மருதனார்மடச் சந்தியின் வடகீழ்ப் பகுதியில் இராமநாதன் கல்லூரியை 1913 ஆம் ஆண்டு நிறுவினார். அத்துடன் இக்கல்.லூரியின் வடமேல் திசையில் தமது உறைவிடமாக ஒரு வீட்டையும் உருவாக்கி அதில் வாழ்ந்து வந்தார். தமது உடல் அடக்கஞ் செய்வதற்கெனக் கல்லூரி வளாகத்திலேயே இடமும் குறித்துத் தமது சமாதியானது கோயில் ரூபத்தில் அமைய வேண்டுமென்று அதற்கென வழிவகைகளையுஞ் செய்தார்.

உரிய காலத்தில் அவர் மறுமையெய்தியதும் அவரது பூதவுடல் மருதனார்மடத்திலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் வீதியின் வடபால் கல்லூரிக் கட்டடத் தொகுதியின் தென்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையில் சமாதி வைக்கப்பட்டது. இச்சமாதியின் மீது ஒரு சிவன் கோயில் நிறுவ உத்தேசித்த பின்னைய உரிமையாளர்கள் வேண்டிய ஒழுங்குகள் செய்ததுடன் இந்தியாவிலிருந்து கலைநுட்பம் மிகுந்த சிற்பாசாரியார் திரு.கணபதியாபிள்ளை அவர்களின் தலைமையில் சிற்பிகள் வந்து, 1938 - 1940 ஆம் ஆண்டுகளில் இக்கோயிலைக் (மடாலயம்) கட்டிமுடித்தனர். இக்கட்டடம் கருங்கல்லினால் மிகச் சிறந்த கட்டடக் கலையம்சத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் பாடசாலை வளாகத்தில் கட்டப்பட்டதன் நோக்கம் கல்விகற்க வரும் பிள்ளைகள் படிப்புத் தொடங்குமுன் தூயசிந்தனையுடன் வணங்கியபின் கல்வி தொடங்கவும், தமது சமயாசாரப்படி ஒழுகவும், நற்பிரசைகளாக வளரவும் உதவுவதற்காகும்.

நித்தியபூசைகள், அபிசேகங்கள், திருவிழாக்கள், குருபூசைகள் மற்றும் சமயவிழாக்கள் மிக விமரிசையாக நடைபெறுகின்றன. பாடசாலைச் சமூகம் இக்கோயிலைப் புனிதமாகவும் சிறப்பாகவும் பராமரித்து வணங்கி நற்பேறு பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்
# நடுவிளாத்தி வைரவர் (விநாயகர்) கோவில்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

இணுவையம்பதி பாரம்பரியத்திலும் சமய நம்பிக்கையிலும் சிறந்த கிராமம். இக்கிராமத்திற் பல ஆலயங்கள் உண்டு. அவை நித்திய, நைமித்திய பூசைகளுடன் சிறப்புற்று வருகின்றன. இதனைப் பின்பற்றி இணுவில் தெற்கிலும் சில சிறிய சுயவழிபாட்டுத் தலங்கள் உருவாயின. உதாரணம் கௌரியம்மன் ஆலயம், நரசிங்கவைரவர் கோயில், நடுவிளாத்தி வைரவர் ஆலயம் என்பனவாகும். இவற்றில் முற்காலத்தில் பல விளாத்தி மரங்களுக்கு மத்தியில் இவ்வாலயம் இருந்தமையால் இக்காரணப்பெயர் வழங்கலாயிற்று. சுமார் 1750 ஆம் ஆண்டளவில் வயிரவப்பிள்ளை என்பவர் ஒரு சாம்பற்பிட்டியாய் இருந்த தமது காணியில் ஒரு கல்லினை வைத்துச் சமய வழிபாடியற்றி வந்தார். அந்த வழிபாட்டுச் சிலையை வேறிடத்தில் வைக்க எண்ணிய அவரும் அவரது வழிவந்தோரும் பக்கத்தில் நின்ற புளியமரத்தைத் தறிப்பித்தனர். அந்நாள் தொடக்கம் அவரும் அவர்மகன் பெரியவர் மற்றும் சகோதரர்கள், குடும்பத்தினர் அனைவரும் நோய்வாய்ப்பட்டு நடமாடமுடியாமல் வருந்தினார்கள். அக்காலத்தில் வாழ்ந்த இறை பக்திலும் அருள்வாக்கிலும் சிறந்த பெரிய சந்நியாசியாரிடம் முறையிட்டனர். அப்பெரியார் நேரில்வந்து பார்வையிட்டு இப்பொழுதுள்ள இடத்தில் சிலையை மீள்நிறுவுகை செய்தார். அதனைத் தொடர்ந்து நோய்வாய்ப்பட்ட அனைவரும் சுகமடைந்து நடமாடத் தொடங்கினர். அன்றுமுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவருக்கு ஒரு கொட்டில் அமைத்து வழிபாடு செய்து வந்தனர். அன்றுதொட்டு வேலுப்பிள்ளை சண்முகம் என்பவர் சுயவழிபாட்டு முறையில் வழிபட்டு வந்தனர். இதற்கு முன் தோண்டிய கிணறு நீர் சுரப்பின்றி இருந்து புனருத்தாரனஞ் செய்யப்பட்டதும் நீர் சுரந்து குளிர்மையடைந்துள்ளது. தொடர்ந்து சண்முகத்தின் மூத்த புத்திரன் கணேசு பூசை செய்துவந்தார். அவர் இறைபதம் அடைந்ததும் அவருடைய சிரேஷ்ட புத்திரன் கந்தசுவாமி பூசைப்பணியை நிறைவேற்றி வந்தார். வேலுப்பிள்ளை அவருடைய புத்திரர் நாகலிங்கம், பேரன் சுந்தரலிங்கம் மற்றும் கணேசரின் குடும்பத்தினர், அயலவர்கள், ச.முத்துலிங்கம் (முன்னாள் கிராமசபைத் தலைவர்), ஒன்றுசேர்ந்து கர்ப்பக்கிரகம் தொடக்கம் வசந்தமண்டபம் மற்றும் வெளிமண்டபங்கள் வரை ஆகமமுறைப்படி அமைத்து மணிக்கோபுரமும் சிறிதாக அமைத்துத் திருப்பணிகள் இயற்றியுள்ளனர். அதனைத் தொடர்ந்து கும்பாபிஷேகம் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்களால் 1982 ஆம் ஆண்டு தைமாதச் சதய நட்சத்திரத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகமாக நிறைவேற்றப்பட்டது. சிவஸ்ரீ சிவஞானக் குருக்களும் அவர்தம் பாரியாரும் மங்கல விளக்கேற்றி வைத்தனர். சிவாச்சாரியர்களோடு சிவஸ்ரீ மகாதேவக்குருக்களின் ஆசிவழங்கலோடு இவ்விழா சிறப்பாக நடைபெற்று வருவதோடு வருடந்தோறும் புண்ணியகாலமாகிய தைமாத அத்த நட்சத்திரத்தில் இருந்து 48 நாட்கள் விசேட அபிஷேகங்கள் நடைபெற்றுவருகின்றன. மேலும் ஒவ்வொரு ஆண்டிலும் ஆவணிமாத அத்தம் தொடக்கம் பத்துநாட்கள் அலங்கார உற்சவமும் பூரணை அன்று தீர்த்தோற்சவமும் நடைபெற்று வருகின்றன. திருப்பணி செய்தோர் மு.சண்முகம் அவர்களின் வழித்தோன்றல்கள் கணேசு, கந்தசாமி, க.பற்பநாதன் முதலானோரும் பெரியவர் வேலுப்பிள்ளை, நாகலிங்கம், மகன் சுந்தரலிங்கம் வரை மற்றும் அயலவர்கள் சு.இராமச்சந்திரன், இ.அருட்செல்வம், ம.உதயன் (ஆசிரியர்), செ.ஜெகசோதிவரதன் (ஆசிரியர்) முதலானவர்களும் அயலவர்களும் வழங்கிய நிதியைக் கொண்டு கர்ப்பக்கிரகம் முதல் வசந்தமண்டபம் வரை ஆறு மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 48 அபிஷேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினங்களும் ஏனைய பத்து உற்சவதினங்களும் அயலவர்கள் அனைவரும் முன்னின்று செய்துவருவதோடு, பரணி, சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை வைபவங்களும் அடியார்களால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அத்துடன் சுவாமி காவுதல், கொடி, குடை, ஆலவட்டம் பிடித்தல், திருவிளக்குத் தொண்டுகள் விநாயகர் ஆலயத் தொணடர்களால் செல்வன் க.பார்த்திபனின் வழி நடாத்தலோடு செயற்படுகின்றன. நித்திய பூசைகள் ச.கணேசு அவர்களால் நடத்தப்பட்டு அவர் மறைவின் பின் அவரது சிரேஷ்ட புத்திரர் க.கந்தசாமி அவர்களால் நடத்தப் படுகின்றது. நைமித்திய பூசைகள் வை.சோமாஸ்கந்தக்குருக்கள், அரவிந்தக்குருக்கள் ஆகியோரால் நடாத்தப்படுகின்றன. விழாக் காலங்களில் நாதஸ்வர தவில் இசையைச் சோ.சிவகரன் குழுவினரும், மற்றும் நாதஸ்வர வித்துவான் என்.ஆர்.கோவிந்த சாமியின் புதல்வர்களும் வழங்கி வருகின்றன.

வழிபாடு ஓங் கச்சைவம் தழைக்க.
வயிரவப் பெருமான் அருள்வானாகுக.

**க.கந்தசாமி**
நித்திய பூசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்
# ஸ்ரீ நரசிங்க வைரவர் வரலாறு

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

## வைரவர் துதி

விரித்தபல் கதிர்கொள்சூலம் வெடிபடுத மருகங்கை
தரித்ததோர் கோலகால பயிரவனாகி வேழம்
உரித்துமை அஞ்சக்கண்டு மொண்டிரும மலர்வாய் மின்னச்
சிரித்தருள் செய்தோர் சேறைச் செந்நெறிச் செல்வனாரே.

**19** ஆம் நூற்றாண்டளவில் அந்தணப் பெரியார்களிடமிருந்து காசிநாதர் இராமுப்பிள்ளை என்பவர் இந்நிலத்தை விலைக்குரிய நிதிகொடுத்து வாங்கினார். அந்நாளில் வைரவப் பெருமானின் திருவிளையாடல் திருவாளர் இராமுப்பிள்ளையைத் தொடர்ந்தது. நன்றியுள்ள பிராணியாகிய நாய் ஒன்று எந்நாளும் வலம்வந்தது. அதுகண்ட இராமுப்பிள்ளை அதன்மீது அன்பு செலுத்திவந்தார். அன்பே உருவான பெருமான் அவரது கனவில் தோன்றி "நான் இந்தப் புளியமரத்தடியில் இருக்கின்றேன். எனக்குப் பத்துப் பானை வைத்துப் பொங்கி நிவேதிக்கவும். அவ்வாறு வழிபட்டு வருவாயாகில் உனக்கு வேண்டிய சகலவிதமான சௌபாக்கியங்களும் உண்டாகும்" எனக் கூறிச் சென்றார். அவ்வாறு தோன்றிய இறைவன் கட்டையான மனிதனாகவும் கறுப்பு வெள்ளை முடியோடு தாடி உள்ளவராகவும் தோன்றியமையால் நரசிங்கவைரவர் என்று திருநாமம் சூட்டப் பட்டதாகவும் தெரியவருகின்றது. அன்றுதொட்டுச் சூலம் அமைத்துப் பொங்கி வழிபட்ட இராமுப்பிள்ளை அவர்கள் சகல செல்வமும் பெற்றுச் சிறப்படைந்தார். பின்பு அவருடைய மருமக்களிடம் அந்நிலத்தைப் பெற்றுக்கொண்ட சங்கரி கந்தையா மகன் செல்லையா அக்காணியில் ஒரு பரப்பை வைரவப்பெருமானுக்கு வழங்கினார். அவருடைய குடும்பத்தினர் இன்றுவரை தொண்டுசெய்து வருகின்றனர். அக்காலத்தில் சுப்பர் ஐயாத்துரை அவர்கள் எம்பெருமான் ஆலயத்திலிருந்து நீண்ட நேரம் வழிபடுவதோடு பல தொண்டுகளும் ஆற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய குடும்பத்தவர்கள் அனைவரும் இன்றுவரை தொண்டாற்றி வருகின்றனர். சுப்பர் பொன்னம்பலமும் எந்நாளும் வைரவப்பெருமானை வழிபாடியற்றி வந்துள்ளார். இங்கு மக்கள் தாம் ஆக்குகின்ற பொங்கல், வடை முதலியவற்றைத் தாமே படைத்து வழிபட்டனர். சிறிதுகாலம் செல்லக் கிரியை வழிபாடாகிய பூஜை முறையில் ந.வல்லிபுரம், நமசிவாயம், த.கந்தசாமி, ஐ.நல்லையா போன்ற அயலவராகிய வீரசைவர்கள் பூஜைப்பணி செய்யும் பெரும்பேற்றைப் பெற்றனர். இவர்களது குடும்பமும் இக்காலம்வரை தொண்டுசெய்து வருகிறது.

அத்துடன் நள்ளிரவுவேளைகளில் தலைப்பாகையும் குமிழ்மிதிதடியும் அணிந்த ஒரு வயோதிபர் கையில் சிறிய தீபத்துடன் இவ்வாலயத்தடியில் இருந்து புறப்பட்டு கிணற்றில் நீர் எடுப்பதையும் சாந்தியடி வைரவர் ஆலயத்திற்கருகில் சென்று வருவதையும் பல அடியார்கள் கண்டுள்ளனர். ஆலயத்தில் பூஜைப் பயனைப் பெறுவதற்கு ஒரு நாகசர்ப்பம் வந்து போவதையும் அக்கால அடியார்கள் கண்டு வழிபட்டுள்ளனர்.

## திருப்பணி செய்த அடியார்கள்

ஆலயம் புதுப்பித்தவர்கள், பரிவாரமூர்த்திகளும், எழுந்தருளி உருவங்களும் வழங்கியவர்கள்:

1991 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் உத்திரட்டாதி நட்சத்திரம் அன்று நரசிங்கவைரவர் எழுந்தருளிச்சிலை திரு.து.சிவராசா, க.பாலசுப்பிரமணியம் மற்றும் ஊரவர்களால் வழங்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு பங்குனி மாதம் பூமிலக்சுமி, மகாலக்சுமி சமேதரான மகாவிஷ்ணு விக்கிரகம் விவேகானந்தன், து.சிவகுமார் என்போரால் நிறுவப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு ஆவணிமாதச் சதய நட்சத்திரத்தில் விநாயகர் எழுந்தருளி க.தங்கராசாவாலும், கார்த்திகை மாத உத்தர நட்சத்திரத்தில் மனோன்மணி அம்மன் விக்கிரகம் திருமதி சரஸ்வதி துரைராசா என்போராலும் நிறுவப்பட்டன. தொடர்ந்து வந்த காலப்பகுதியில் சந்தானகோபாலர், முருகனுடைய வேல், விநாயகர் விக்கிரகம் போன்றவை முறையே த.இராசரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சின்னராசா கடை). சி.பஞ்சாட்சரம். மூ.இராசா ஆகியோரால் வழங்கப்பட்டன. இறுதியாக வைரவர் சிலையைத் திருமதி பூங்கோதை இராசையா வழங்கினார்.

## சிவாச்சாரியார்கள்

இவ்வாலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் சுப்பிரமணியப் பட்டர் கேதீஸ்வரக்குருக்களால் மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து பூஜை வழிபாடு சிவஞானக்குருக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## காணி வழங்கியோர்

திரு.அன்னலிங்கம், கமலாதேவி, சிவபாலசிங்கம், தி.குமாரசாமி என்போர் இவ்வாலயத்திற்குரிய காணியை வழங்கினார்கள். திருமதி செல்வம் இரத்தினசபாபதி, ப.கோப்பெருந்தேவன் (அப்பன்) என்போர் நிலத்திற்குரிய பணம் அறவிட்டபின் காணியை வழங்கினார்கள்.

## பூஜைக் கிரியைகள்

தற்போது இவ்வாலயத்தில் வருடந்தோறும் அலங்கார உற்சவம் நடாத்தப்படுவதோடு நவராத்திரி, கும்பாபிஷேகத் தினம், ஏனைய விரதகாலங்களிலும் நித்திய நைமித்திய பூசைகள் ஊரவர்களால் நடாத்தப்பெற்று வருகின்றன. மேலும் மகோற்சவ காலங்களில் சாந்தி ஓமம் நடைபெற்று வருவது சிறப்பம்சமாகும். அண்மை ஆண்டுகளின் முன் மகோற்சவ காலங்களில் பாடப்படுவதற்கென திருவூஞ்சல்பாட்டு அமரர் மகாவித்துவான் வீரமணிஐயரால் ஆக்கப்பட்டது. மேலும் இக்காலத்தில் மகோற்சவகாலச் சிறப்புரை நிகழ்த்திய இ.ஜெயராஜ். நாதஸ்வர வித்துவான் க.உதயநாதன் என்போர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இணுவில் ஸ்ரீநரசிங்கவைரவப் பெருமான் அனைவருக்கும் நல்லருள் பாலிப்பாராக.


அடியார்கள் சார்பில்

க.தங்கராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் - வட்டுவினி
# விநாயகர் ஆலயம்



இவ்வாலயத்தில் ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன்பிருந்து விநாயகக் கடவுள் எழுந்தருளியிருந்து அருள் பாலித்து வருகிறார். வெள்ளைக் கதிர்காமர் எனப்படும் ஒரு விவசாயி தமது சொந்தக்காணியில் அன்று இந்த ஆலயத்தை நிறுவினார். இன்றுவரை அயலில் வாழும் கதிர்காமர் சந்ததியினரும் ஏனைய குடிமக்களும் இவ்வாலயத்தில் பிள்ளையாரை வழிபட்டுப் பூசைகள், 10 நாள் அலங்கார உற்சவங்களையும் நடத்தி இதனைப் பராமரித்து வருகிறார்கள். காலை, மாலை ஆகிய இரண்டு வேளைகளும் நித்தியபூசை நடைபெறுகிறது. அலங்கார உற்சவத்தோடு 21 நாள் விநாயகர் சட்டித் திருவிழாக்கள் திருவெம்பாவை, நவராத்திரி பூசைகள் என்பன ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்
# ஸ்ரீ கௌரி அம்பாள் ஆலயம்

**விநாயகர் துதி**

அத்தி முகவனை நித்தம் நினைபவர்
சித்த மகிழ்வொடு முத்தி பெறுவரே

**அம்பாள் துதி**

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லிய அண்டடெல்லாம்
ப'த்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.

இணுவில் தெற்கில் 1940 ஆம் ஆண்டளவில் இளம் குடும்பஸ்தராக வாழ்ந்தவர் முருகேசு மயில்வாகனம் அவர்கள். அவருடைய மனையாள் அம்மிணி அம்மையாவார். மயில்வாகனம் எண்ணுவது உயர்வு, ஏறுபோல்நட, அச்சம் தவிர், ஆண்மை தவறேல் என்னும் பாரதியாரின் வாக்கிற்கிணங்க வாழ்ந்தவர். இவர் பிறருக்குதவி செய்வதிலும் உறவினரை ஆதரிப்பதிலும் மூடபக்தியிலும் சிறந்தவராவர். இவருடைய நண்பர் வைத்தியர் சீவரத்தினம் ஆவார். மயில்வாகனத்தின் உறவினரான முதலியார் என்னும் பிரமச்சாரி தனது பிற்காலத்தில் தனது நிலபுலத்தை உறவினருக்குப் பங்கீடு செய்தார். அக்காலத்தில் அரைப் பரப்புக் காணியை அங்கு முன்னோர் வழிபட்டுவந்த வைரவருக்கு என்று எழுதிவைத்தார். அவ்விடத்தில் மயில்வாகனம் ஒரு சிறிய குடிசையை அமைத்து வாழ்ந்துவந்தார். 1950 ஆம் ஆண்டளவில் வைத்தியர் சீவரத்தினம் அவர்களின் ஆலோசனைப்படி சிறிய ஆலயம் ஒன்றை அமைத்து இரு சிலைகளை நிறுவி அவற்றை அம்பாளாகவும், வைரவராகவும் எண்ணி வழிபட்டு வந்தார். சிறிது காலத்தின்பின்பு இரு அம்பாள்களில் பெரிய உருவிலுள்ள அம்பாளை வைத்தியரிடம் ஒப்படைத்துவிட்டுச் சிறிய உருவிலுள்ள அம்பாளை வழிபட்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வருடங்களின் பின்பு ஆலயத்தைப் புனரமைக்கும் பொருட்டு வை.சோமாஸ்கந்தக்குருக்ககள் ஆலயத்திற்கு வந்து மூலமூர்த்தியைப் பார்த்தபோது அச்சிலை ஐயனார் என்றும், அம்பாள் என அனைவரும் எண்ணி வழிபட்டமையால் அம்பாள் உருவஞ்செய்து வைக்கும்படியும் கூறினார். அதன்படி கௌரியம்பாளை மூலமூர்த்தியாகக் கொண்டு விநாயகர், முருகன், நாகதம்பிரான் ஆகிய புதிய விக்கிரகங்களை வைத்து 11.06.1993 (வைகாசி 29) அன்று மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தப் பட்டது. 1994 ஆம் ஆண்டு பங்குனி மாதமளவில் எழுந்தருளி விநாயகரின் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1994 ஆம் ஆண்டு வைகாசி மாதத்திலிருந்து இவ்வாலய அலங்கார உற்சவம் ஆரம்பமாகியது. வருடந்தோறும் வைகாசி மாதத்தில் வருகின்ற அத்த நட்சத்திரம் தொடக்கம் திருவோணம் வரையுள்ள பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம் நிகழ்த்தப் படுகின்றது. அந்த வகையில்,

| | | |
|---|---|---|
| முதலாம் திருவிழா | - | அலங்கார உற்சவ ஆரம்பம் |
| எட்டாம் திருவிழா | - | வேட்டைத் திருவிழா |
| ஒன்பதாம் திருவிழா | - | இரதோற்சவம் |
| பத்தாம் திருவிழா | - | தீர்த்தோற்சவம் |

ஆக இடம்பெறுகின்றன.

அண்மையில் இவ்வாலயத்திற்கான மணிக்கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு இதன் கும்பாபிஷேகம் 20.01.2003 (தை மாதம் 6 ஆம் நாள் நடைபெற்றதுஇ)

இந்த ஆலயத்திற்குரிய கும்பாபிஷேகங்களை சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள் நடாத்தியதோடு நித்திய நைமித்திய பூசைகளையும் செய்துவருகின்றார். இவருக்கு உறுதுணையாக மு.குமாரசாமி அவர்களே இவ்வாலயத்தைப் பொறுப்பேற்று பரிமாரித்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக் காலங்களில் மங்கள இசையை க.உதயநாதன் குழுவினர் வழங்கி வருகின்றனர். இறைவனின் அலங்கார வேலைகளை மா.பரமசாமி (சின்னமணி) குடும்பத்தவர்கள் செய்துவருகின்றனர்.

மேற்கூறிய ஐயனார் சிலை எழுந்தருளி மூர்த்தியாகக் கொள்ளப்பட்டு வசந்த மண்டபத்தில் வைத்துப் பூஜிக்கப்பட்டு வருவதுடன் ஐயப்பன் உற்சவமான தைப்பொங்கல் தினத்தன்று ஐயனார் வீதியுலா வருவது வருடந்தோறும் நிகழப்பெறுகின்றது.

இச்சூழலில் வாழுகின்ற அடியவர்கள், தொண்டர்கள், ஊர்மக்கள் அனைவரும் ஸ்ரீகௌரியம்பாளின் பக்தர்களாய் இருந்து அருட்பணிசெய்ய வேண்டி இறைஞ்சுகின்றோம்.


அடியார்கள் சார்பில்

**மு.குமாரசுவாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் -அரசோலை
# கப்பனைப் பிள்ளையார் ஆலயம்



இக்கோயிலும், இதனுடன் பக்கத்திலுள்ள மாரியம்மன் கோயிலும் காலத்தால் முந்தியன என்பர். வட்டுவினிக் கண்ணகியம்மன் கோயில் (கண்ணகா பரமேஸ்வரி) 13 ஆம் நூற்றாண்டில் தாபிக்கப்பட்டது என்பர். மஞ்சஞ் செய்த பெரிய சந்நியாசியார் சுமார் 1860 - 1917 காலம் வரை வாழ்ந்து சமாதியடைந்தனர். அவர் இந்தக் கப்பனைப் பிள்ளையாரையும், மாரியம்மனையும் வணங்கி அம்மூர்த்திகளின் காட்சிகளைக் கண்டு அதன்படியொழுகிப் பல அற்புதங்களைச் செய்து பெருமை பெற்றவர் என்பர். இதன் காலத்தை நிச்சயமாகச் சொல்ல முடியாது. பெரிய சந்நியாசியாருடன் வாழ்ந்த பண்டாரச் சின்னையர் பூசை செய்ததாகக் கூறுவர். அவரிலும் பார்க்க இக் கோயில் காலத்தால் முற்பட்டதாகக் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிள்ளையாருக்கு மோதகபூசையில் விருப்பமென்று அறிந்து தினமும் பூசைக்கு மோதகம் பிரசாதம் வைத்து வணங்குவர். இப்பிள்ளையாருக்கு வெள்ளிக்கிழமையோ சதுர்த்தியோ அன்றித் தினமும் மக்கள் பொங்கல் பூசை செய்து காரியசித்தியடைந்தனர். ஒரு காலத்தில் அயலூரவர்களும் வந்து பொங்கல் பூசை செய்தார்களாம்.

தாமோதரம்பிள்ளையும் (தாமு) அவர் மனைவி சிதம்பரப் பிள்ளையும் இப்பிள்ளையாருக்கு அளப்பரிய தொண்டாற்றியதாகக் கூறுவர். மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் காணியும் இக்கோயிற் காணியும் ஒன்றாகவே கோயில் ஆதனமாக இருப்பதால் அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் கோயில் அறங்காவற் குழுவினரே இக்கோயிலையும் சேர்த்துப் பராமரிக்கிறார்கள். அண்மையில் இக் கோயில் மேலும் விஸ்தாரமாகக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வித்தவர்கள் மஞ்சத்தடி அறங்காவற் குழுவினராகும். பொதுமக்களின் ஆதரவில் திருப்பணி வேலைகள் சிறப்புடன் நிறைவேறிக் கும்பாபிஷேகமும் தொடர்ந்து அபிஷேகம் பூசைகளும் கிரமமாக நடை பெறுகின்றன. சதுர்த்தி விழாக்களும் மிகச்சிறப்பாக நடை பெறுகின்றன.

**வை.க.சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவைத் திருவூரின் அயற்கிராமங்களிலமைந்த திருக்கோவில்கள்

இணுவில் கிராமத்தில் கோவில்கள் அதிகமாகவுள்ள போதிலும் இக்கிராமத்தின் மிக அண்மையான கோவில்களையும் எமதூர் மக்கள் வணங்குவதுடன் அவற்றின் முன்னேற்றத்திற்கான திருப்பணி உதவி, பூசை விழாக்களில் உபயம், கோயிற் திருத்தொண்டு ஆகியவற்றில் கூடிய பங்குகொண்டுள்ளனர். இவை பற்றி அறிவோம்.

## இணுவில் கொட்டம்பனை வைரவர் ஆலயம்

மஞ்சத்தடிச் சூழலைப் பிறப்பிடமாகக் கொண்ட பெரிய சந்நியாசியாரின் திருவருளால் மஞ்சத்தடி முருகன் ஆலயமும், இணுவில் கந்தசுவாமி ஆலயமும், காரைக்கால் சிவன் ஆலயமும் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்து யாவும் ஒரே தொடரில் அங்கம் வகிப்பதால் இணுவிலின் பெருமையை அளிப்பது மஞ்சத்தடியும் சூழலுமாகும். அன்று தொடக்கம் இன்றுவரை ஒரே குடும்பமாக, இனமாக மக்கள் வாழ்கிறார்கள். அரச நிர்வாகப் பிரிப்பில் வடக்கே காங்கேசன்துறை தொடக்கம் இணுவில் தாவடி வரை வலிகாமம் தெற்கு உட்பட வலி வடக்குப் பிரிவு இருந்ததால் மஞ்சத்தடிப் பகுதியடங்கிய பகுதி யாழ்ப்பாணப் பகுதியுடன் இணைக்கப்பட்டிருந்தது. இப்பகுதி உள்ளூராட்சி மற்றும் அரசதொடர்புகளின் போது இணுவிலைச் சேர்நததாகக் கருதி இப்பகுதி எவ்வித நன்மைகளும் பெறத் தவறிவிடும். இணுவில் மக்களின் உறவுகள், தபால்முகவரி, கலை, கலாசாரத்தொடர்பு, பொது வைபங்களில் ஒன்று சேர்தல் யாவும் இணுவில் என்ற தலைப்பிலிருந்தே ஆரம்பமாகிறது. மேலும் இணுவில் கிராமம் இவ்வளவு சிறப்படைவதற்கு அத்திவாரமிட்டதும் மஞ்சத்தடி (கோண்டாவில் வடமேற்கு கிராமசேவையாளர் பிரிவாகும்) சித்தர் பரம்பரை, கலைஞர் பரம்பரை, கற்றறிந்தோர் பலரின் உறைவிடமுமாகும். கோவில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்கால் சிவன், மஞ்சத்தடி முருகன் ஆலயம், இணுவில் கந்தசுவாமி கோயில் மூன்றும் ஒரே சங்கிலித் தொடரில் வருவதால் மூன்று கோயில்களின் வரலாறும் ஒன்றுடனொன்று தொடர்புடையதாகவே காணப்படுகின்றது.

இவ்வாலயம் இணுவில் கந்தசுவாமி கோயிலுக்குரிய நனமொகாடை ஆதனத்தின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதியிலே வந்து விவாகமாகிய குடும்பஸ்தர் பொ.இராமுப் பிள்ளை ஆரம்பத்தில் இந்த வைரவரை விரும்பி வணங்காது தன்போக்கில் சென்றவர். கடும்நோயினால் பாதிக்கப்பட்டபோது வைரவரைத் தூய சிந்தனையுடன் வணங்கிச் சுகம் கண்டவர். தனக்கு உடல்வலு தந்ததுபோல உள நலமும் வேண்டி இக் கோயிலை அயலில் வாழ்ந்த பக்தர்களிடம் உதவிபெற்று வருடா வருடம் ஒவ்வொரு பகுதிகளாகக் கட்டியதால் இது சிறந்த அமைப்புடன் காணப்படுகிறது. இதற்கென ஒரு மணிக் கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளது. வருடத்தில் ஆனி மாதத்தில் அலங்கார உற்சவம் வெகுசிறப்பாக நடைபெறுகிறது. மூலமூர்த்தியாகிய வைரவர்சூலமும், கருவறையின் வாசற்புறத்தில் சிறியளவில் அமைக்கப்பட்ட விநாயகர், அம்மன், முருகன் சிலைகளும் வணக்கத்திற்குரியனவாகும். அலங்கார உற்சவகாலங்களில் வெளி வீதியுலா வருவதற்கான வைரவப்பெருமானின் ஐம் பொன்னால் அமைக்கப்பட்ட விக்கிரகம் வேறான கட்டட அமைப்பில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. (நந்தி) வைரவருக்குரிய நாயும், பலிபீடமும் வாசலில் அமைக்கப் பட்டுள்ளன. பக்தர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பல விளக்குகளும் ஏனைய பல பொருட்களும் கோயிலை அலங்கரிக்கின்றன. வைரவப்பெருமான் வீதியுலா வருவதற்கென அடியார்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பெரிய நாய் வாகனமும் குதிரை வாகனமும் உற்சவ காலங்களில் சிறப்புடன் பவனி வருகின்றன. அலங்கார உற்சவ காலத்தில் 12 நாட்களும் குழைசாதம் மிகச்சிறப்பாகப் பெரிய அளவில் அடியார்கள் எல்லோருக்கும் வழங்கப்படுகிறது. இவ்வாலயத்தில் மாதத்தில் அநேக நாட்களில் அடியார்கள் பொங்கல் செய்து படைத்து இன்புறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் தேவையின் பேரில் இக்கோயிலின் வடகிழக்கே ஒரு சிறந்த கிணறு தோண்டப்பட்டு வைரக்கற்களினால் கட்டப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு ஆனிமாத அலங்கார உற்சவத்திற்கு முன் கும்பாபிஷேகமும் நடைபெறும் வகையில் அர்த்தமண்டபம், உடைக்கப்பட்டு மேற்கூரை நவீன முறையில் சீமெந்தினால் அமைத்துக் கும்பாபிஷேகச் செலவுகளையும் செய்த அடியார் இவ்வாலய அலங்கார உற்சவமொன்றின் உபயகாரராவார். இக்கோயிலில் வீரசைவ மரபைச் சேர்ந்த ஒருவர் தினந்தோறும் இருநேரப் பூசை செய்கிறார். அலங்கார உற்சவ காலத்தில் வேறு ஆலயங்களில் பிரதமகுருவாக இருக்கும் அந்தணர்கள் இவ்விழாக்களை மிகச் சிறப்பாக நடாத்துகிறார்கள்.

இவ்வாலயத்தில் நவராத்திரி, கந்தசட்டி, திருவெம்பாவை, ஐப்பசிவெள்ளி, கார்த்திகைத் தீபவிழா போன்றவை விசேட விழாக்களாக அமைகின்றன. இக்கோயிலில் வழிபடுவோர் யாவரும் இவ்வயலையும், இணுவிலின் ஏனைய பகுதிகளையும் சேர்ந்தவர்களாவர். வைரவப்பெருமானை உள்ளன்போடு வழிபட்டுச் சகல சௌபாக்கியங்களையும் பெற்று யாவரும் இன்புறுகின்றனர்.

## உடும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில்

இத்திருத்தலம் ஆரம்பித்த தம்பிரசர்கள் இணுவிலிலும் சில கோவில்கள் அமைத்தபோது அரசனும் பரிவாரங்களும் இவ்வெல்லாக் கோவில்களையும் வழிபட்டுவந்தனர். அரசர்கள் மாறினாலும் ஊர் மக்கள் வாழையடி வாழையாக வழிபட்டே வந்தனர். ஆரம்பகாலம் தொட்டே இத்திருக்கோவிலில் உற்சவங்கள், பூசைகள், திருப்பணி நிதி பங்களிப்பு ஆகிய நற்கருமங்களில் எமதூர் மக்கள் பங்குபற்றத் தவறவில்லை. யுத்தகால நெருக்கடியும் பஞ்சகால நெருக்கடியும் இடை நின்றதால் பெருவிழாக்கள் செய்ய முன்வராததால் விழாச் செய்யும் நியதிகளும் மாறிவிட்டன. 4 ஆண்டுகளுக்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாகரப் பிள்ளையார் கோவில் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகச் செலவுகளுக்கு உரும்பிராய் வாசிகளிலும் கூடுதலான பெருநிதியை இணுவில்வாசிகள் வழங்கியுள்ளனர் என்ற சிறப்பான செய்தியைக் கும்பாபிஷேக விழா இறுதியில் முன்னின்று செயற்பட்ட ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்கள் பெருமையுடன் கூறி உண்மையை வெளிப்படுத்தினார். இக்கோவிலைச் சூழ்ந்துள்ள விவசாயிகள் சகல விழாக்களிலும், நாளாந்தப் பூசை நேரங்களிலும் பங்குபற்றத் தவறுதில்லை. கருணாகரப்பிள்ளையாரின் அருளினால் இணுவில்வாசிகள் பலர் நற்பேறு பெற்றுள்ளனர்.

## உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோவில்

இத்திருக்கோவில் பௌதீக அமைப்பில் உடுவில் கிராமத்துடன் சேர்க்கப்பட்டாலும் இணுவில் மேற்குடன் பின்னிப்பிணைந்து எல்லை பிரிக்காத நிலையில் உள்ளது. இத்திருக்கோவிலின் பரிபாலகர் முதல் வழிபடுவோர் வரை இணுவில்வாசிகளும் உளர். சகல திருப்பணிகள், தொண்டுகள் யாவும் இணுவில்வாசிகளின் பங்களிப்புடன் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. பல சிறப்புகளும், புதுமையும் நிறைந்த கற்பகப் பிள்ளையார் கோயிலில் சித்திரத்தேர், சிறப்பான வாகனங்கள் இருப்பதுடன் பூசைகள் விழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. வருடாந்த மகோற்சவங்கள் ஆடிப் பூரணையில் தீர்த்தத் திருவிழா அமையும் 11 திருவிழாக்கள் சிறப்புடன் நடைபெறுகின்றன. கற்பகப் பிள்ளையாரின் பேரருளால் எம்மூரவர்களில் பலர் பெரும்பேறு பெறுகின்றனர்.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்
# இளந்தாரி கோவில்



இலங்கையின் வடபால் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் இணுவைப் பேருரை. சிறந்த ஆளுமையும், பக்தியும், வீரமும், மக்களிடத்தில் இரக்கமும் கொண்ட கைலாயநாதன் எனப் பெயர்கொண்ட இளந்தாரி பரிபாலனஞ் செய்தார். இவரிடத்தில் பேராண்மை, ஆளுமை, உயர் பண்புடைமை போன்ற பல சிறப்புக்களும் இருந்ததால் இவரைத் தெய்வமாகவே ஊர்மக்கள் வழிபடலாயினர். இவ்வழிபாடு வீரமும், அருளும், கலந்த வழிபாடெனலாம். இவ்வாறே பண்டைத்தமிழர்கால வழிபாட்டு முறையும் அமைந்திருந்தது.

இளந்தாரி தாம் இவ்வுலகை நீத்தல் பற்றி முன்பே பலரிடமும் கூறியுள்ளார். அதன்படி இவர் புளிய மரத்திலேறி உடுக்கரந்து வானுலகஞ் சென்றதனால் இணுவை மக்கள் இவரைத் தெய்வமாகத் தொடர்ந்து வழிபட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் "இளந்தாரி" மக்கள் முன்தோன்றி வழிபடும் முறையைச் சொல்லிக்கொடுத்தாரெனவும் செவிவழிச் செய்திகள் செப்புகின்றன.

இளந்தாரி உருக்கரந்த நாள் முதல் இவரது அரண் மனையில் மங்கல விளக்கேற்றி வழிபட்டனர். போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் இவ்வரண்மனை சேதமுற்றது. இணுவில் சிவகாமி அம்மன் கோவிலின் வடமேல் திசையில் இருநூறு யார் தொலைவில் இருந்த அரண்மனை அமைந்த இடத்தில் மக்கள் சிறுகுடிசையில் மீண்டும் வருடாந்தப் பொங்கலுடன் நாளாந்தம் விளக்கேற்றி வழிபட்டும் வந்தனர். அண்மையில் இ.திருச்சிற்றம்பலம் என்பவர் அயலிலுள்ள பொதுமக்களின் உதவியுடன் குடிசையைச் சிறிய கோயிலாகக் கட்டிப் பூசை செய்து வருகிறார்.

இளந்தாரி வாழ்ந்த அரண்மனைக்கு வடதிசையில் இளந்தாரி ஏறி உருக்கரந்த புளியமரத்தின் கீழ் இவ்வூரைச் சேர்ந்த வைத்திலிங்கம் நாகலிங்கம் என்னும் பெரியார் மண்டபம் அமைத்துப் பொங்கல் பூசை செய்து வந்தார். காலப்போக்கில் இக்கட்டடம் பொதுமக்கள் உதவியுடன் சாதாரண சிறிய கோயிலாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதன் கருவறையில் நடுகற்கள் சில நாட்டப்பட்டு அருகில் சிறுதடிகளும் வைக்கப் பட்டுள்ளன. பண்டைய தமிழர் வழிபாட்டில் தெய்வங்களுக்காகத் தடிகளும் கற்களும் வைக்கப்பட்டு வணங்கப்பட்டன. இன்றும் பண்டைய தமிழர் வழிபாட்டை இக்கோயில் எடுத்துக் காட்டுகிறது. இக்கோயிலை ஆரம்பித்தபின் ஆண்டுப் பெருவிழாவும், பொங்கலும், நாளாந்தம் மாலைநேரப் பூசையும் நடைபெறுகின்றன.

புளியமரத்தின் அடியில் அமைந்த கோயிலின் வடக்கே முப்பது யார் தொலைவில் இளந்தாரி வழிபாட்டை வேறொரு சிறுகட்டடத்திலும் நிகழ்த்தி வந்தனர். பின் இவ் வணக்கத்தலம் பராமரிப்பாரின்றி மறைந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளந்தாரி ஏறி மறைந்த புளியமரத்தை மையமாக வைத்துக் கிழக்குநோக்கி அமைந்த இக்கோவிலில் வருடம் ஒரு தடவை தமிழ்ப்புத்தாண்டுக்கு முந்திய செவ்வாய்க்கிழமை வருடாந்த மடை நடைபெறும். இக்கோவிலின் பரிபாலகரும் பூசகருமான நாகலிங்கம் என்பவர் பொங்கல் (மடை) அன்று ஏற்கனவே சேகரித்து வைத்துள்ள அரிசி, காய்கறி வகை, வாழைக்குலை, இளநீர், தேங்காய் முதலியவற்றுடன் மாலை நேரம் பொங்கலை ஆரம்பிப்பார். கோயிலின் முன்றிலில் பந்தல் போட்டு பந்தலை வாழைகள், மகரதோரணங்கள், பூமாலைகள் ஆகியவற்றால் அலங்கரித்துப் பொங்கல் ஏற்பாடுகள் ஆரம்பமாகும். இதேநேரம் கோயிலின் உள் மண்டபத்தில் "பஞ்சவர்ணத்தூது" நூல் ஓதுதல் பயபக்தியுடன் ஏற்ற இராகத் தோடும் நள்ளிரவு வரை நடைபெறும். பூசாரியார் உருவேறிய நிலையில் கையில் பிரம்பும், மறுகையில் எரிகின்ற கர்ப்பூரமும் ஏந்திய வண்ணம் பஞ்சவர்ணத்தூது நூலிலிருந்து சில பாடல்களைப் பாடியும் ஆடியும் வந்து பொங்கல் அடுப்பில் எரியும் கர்ப்பூரத்தை வைத்து விடவும் பொங்கல் தொடரும்.

ஊர்மக்களும் வீதியோரம் அடுப்புகள் மூட்டிப் பொங்கல், கறிவகை, பலகாரவகைகள் தயாரிப்பர். ஆலய முன்றிலில் கிடாரங்களிலும் சோறும் கறிவகைகளும் தயாரானதும் பறை மேளம், சங்கு, சேமக்கலம் ஒலிக்க இளந்தாரியின் பாடல்கள் பாடியபடி கடகத்தில் சோறு, கறிவகைகள், பலகாரவகைகள், பழவகைகள், தேங்காய், கர்ப்பூரம், இளநீர், வாழைக்குலை, காய்கறிகள் யாவற்றையும் அடியார்கள் எடுத்துச் செல்வார்கள். பூசாரியார் ஒரு கையில் பிரம்புடனும் மறுகையில் கத்தியுடனும் உருவேறிய நிலையில் இளந்தாரி ஊர்வலப் பாட்டுப் பாடியும் ஆடியும் சென்று வாழைக்குலை, காய்கறிகளைச் சந்திகளில் வைத்து வெட்டியெறிந்து கர்ப்பூரம் கொளுத்தி, இளநீரும் வெட்டி வைப்பார். தொடர்ந்து சென்று சிவகாமி அம்பாள், வைரவர் பத்திரகாளி அம்மனுக்கும் படையல் வகைகளைப் படைப்பார். பின் சென்று இளந்தாரியின் மெய்க்காப்பாளராக இருந்து, அண்ணமார் என்ற பெயருடன் ஆலமரத்திலேறி மறைந்தவரின் நினைவாக ஆலமரத்தினடியிலும் படையல் செய்து வழிபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் இளந்தாரி கோயில் மண்டபத்தில் பூசாரியார் படையல் படைக்கவும் பொதுமக்களும் தங்கள் பொங்கல் வகைகளைப் படைத்துக் கர்ப்பூரம் கொளுத்தியும் தேங்காய் உடைத்தும் வணங்குவர்.

பூசை முடிந்ததும் படையல் பொருட்கள், பறைமேளம் மற்றும் இசைக்கருவிகள் வாசித்தவர்களுக்கும் உதவியாட்களுக்கும் வழங்கப்படும். இந்நிகழ்வுகள் நள்ளிரவு நேரத்தையும் தாண்டும். பின்னர் பூசாரியார் உருவேறிய நிலையில் நோய், பிணி, துன்பங்களால் அவதியுறுவோருக்குத் திருநீறு வழங்குவதுடன் திருவாக்கும் சொல்லுவார். இவரது திருவாக்கை மக்கள் வேத வாக்காகக் கருதிப் பேணி நடப்பார்கள். இப்பூசை வழிபாட்டைக் கருவூலமாக வைத்தே பஞ்சவர்ணத்தூது நூல் எழுதப்பட்டது எனச் செவிவழிச் செய்திகள் பகருகின்றன. இந்நூல் வெளியான பின்னரே இக்கோயிலின் சிறப்பும் பெருமையும் உலகறியத் தெரிந்தது.

இளந்தாரி கோயிலின் தற்போதைய பரிபாலகரும் பூசகருமாக நாகலிங்கம் ஆறுமுகராசா என்பவர் வாழையடி வாழையாகக் கடமையாற்றுவதுடன் திருப்பணி வேலைகளிலும் ஈடுபட்டுள்ளார்.

இக்கோயிலில் வருடாந்தப் பொங்கல் (மடை) நிகழ்வுகளுடன் எட்டாம் நாள் பொங்கலும் நடைபெறுகிறது. தைப்பொங்கல், தைப்பூசம், ஆடிப்பிறப்பு, நவராத்திரி, திருவெம்பாவை முதலிய காலங்களிலும் விசேட விழாக்கள் நடைபெறுகின்றன.

ஒரு வீரனுக்கு அருளாளனுக்கு, நற்பண்புடையவனுக்குச் செய்யும் நன்றிக் கடனாகவே இவ்வைபவங்களும் வழிபாடும் நடைபெறுகின்றன. இவ்வூர் மக்கள் தொடர்ந்தும் தம் முன்னோரது வழிபாட்டு முறையைப் பின்பற்றுவது மக்களின் அசையாத பக்தியையே எடுத்துக்காட்டுவது வரவேற்கத்தக்கதாகும்.


**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்

# அண்ணமார் கோவில் - வேணுகோபாலர் ஆலயம்



இத்திருத்தலத்தில் முந்நூறு வருடங்களுக்கு முந்திய ஆலமரமொன்று ஓங்கி வளர்ந்திருக்கிறது. பண்டைய தமிழரசன், இணுவில் பகுதியை அரசாண்ட கைலாயநாதன் என்னும் இளந்தாரி என்பவரின் மெய்க்காப்பாளராகத் திகழ்ந்தவர் அண்ணமார். மிக்க சக்தியும் தெய்வீகப் பண்பும் பக்தியும் கொண்டவர். இளந்தாரி புளிய மரத்திலேறி உருக்கரந்து வானுலகஞ் சென்றபோது அண்ணமாரும் புளியமரத்தினயலில் நின்ற இதேயிடத்திலுள்ள ஆலமரத்திலேறி உருக்கரந்து வானுலகஞ் சென்றாரெனச் செவிமொழிச் சான்றும் பஞ்சவர்ணத் தூது நூலும் செப்புகின்றன.

அண்ணமாரும் இளந்தாரியைப் போன்று நற்பண்பும், கடவுள் வழிபாடும், மக்கள் மீது இரக்கமும் கொண்டவர். இதனால் ஆலமரத்திலேறி உருக்கரந்தது முதல் வருடாவருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் வழிபாடும் மக்கள் செய்துவந்தனர். இளந்தாரி கோவில் வருடப் பெரும்பொங்கல் நடைபெற்றுப் படையல் படைக்கும் போது அண்ணமாருக்கும் படையல் படைத்து வழிபட்டு வந்தனர். அண்ணமாரை ஆதரிப்பவர்கள் வருடாந்தப் பொங்கல் செய்த பலகாரவகைகள், அசைவக் கறிவகைகள், பழங்கள் என்பன படைத்து வழிபடுவர். இவர்கள் தொடர்ந்து வழிபட்டு அண்ணமாரின் அருள்பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தனர்.

1998 ஆம் ஆண்டு இவ்வாலமரத்தின் மேற்குச் திசையில் பதினைந்து யார் தூரத்தில் ஆலமரம் தலவிருட்சமாக வரும் நிலையில் அழகியதோர் சிறிய கோயில் அமைத்துக் கருவறையில் வேணுகோபாலரை வைத்துக் கும்பாபிஷேகம் செய்து வருடாவருடம் பதினைந்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெற்றுவருகிறது. 14 ஆம் நாள் தேர் உற்சவமும், 15 ஆம் நாள் தீர்த்த உற்சவமும் நடைபெறுகின்றன. இத் திருக்கோவில் அலங்கார உற்சவத்தின் போது மூலவருக்கு அபிஷேகம், பூசைகள் யாவும் பயபக்தியுடன் நடைபெறுகின்றன. மாலை நிகழ்ச்சியின் போது விசேட பூஜை விழாக்களுடன் சமயத் தொடர்சொற்பொழிவுகளும் நடைபெறும். அலங்கார காலத்தில் நடைபெறும் சொற்பொழிவிலிருந்து மாணவர் களுக்கான சமய அறிவுப்போட்டி நடாத்திச் சிறந்த பரிசில்களும் வழங்கப்படுகின்றன. பதினாறாம் நாள் வேணுகோபாலருக்குத் திருக்கல்யாண வைபவமும் சிறப்புடன் நடைபெறுகின்றன. இவ்வூரில் இத்திருக் கோவில் ஒன்றே வைஷ்ணவ ஆலயமாகையால் யாவரும் பய பக்தியுடன் வந்து வணங்கிச் செல்வர். இறுதியில் மகேஸ்வர பூசையும் நடைபெறும். இக்கோயிலில் தினந்தோறும் இருநேரப் பூசை நடைபெறுகின்றது. யாவரும் இடையறாது வணங்கி அருள்பெறுகின்றனர்.

மூ.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இணுவில்

# சுந்தர ஆஞ்சநேயர் கோயில்



அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் எம்மை அறிந்து காப்பான்.

யாழ்ப்பாண மாவட்ட வடகரை செல்லும் காங்கேசன்துறை வீதியின் ஏழாவது கிலோமீற்றர் தொலைவில் மருதனார்மடம் சந்தியின் அண்மையில் வீதியின் மேற்கே நீர்வளமும் நில வளமும் நிறைந்த விளைபூமியில் கிழக்கு நோக்கிய நெடிய கோபுரத்தில் 18 அடி உயர்ந்த மாருதிதேவன் நின்று அருளாட்சி செய்ய வியாபித்திருப்பது இணுவில் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் திருத்தலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராம பக்த அனுமான் என்னைக் கருவியாகக் கொண்டு இவ்விடத்தில் கோயில் கொண்டருளிக் கோயிலுக்குரிய சகல வசதிகளையும் அவரே செய்வித்து ஆன்மீகச் சிந்தனையுள்ள அனைவருக்கும் அருள்பாலிக்கிறார். 1964 ஆம் ஆண்டு நான் சிறுவனாக இருந்த காலத்தில் எழுதுமட்டுவாள் வடக்கில் அரை மைல் தூரத்திலுள்ள ஆதிசிவன் கோயிலிலே கும்பாபிஷேகம் நடந்தது. அங்குள்ள பரிவார மூர்த்தங்களான ஐயனார், வைரவர், காளி, வீரபத்திரர், முனிபுங்கவர், ஆஞ்சநேயர் ஆகிய சுவாமிகளுக்கு மடைபரப்பிப் பூசைகள் நடைபெற்றன. மக்களோடு நானும் ஒருவனாக மடைபரப்பிப் பூசை நடந்ததை அவதானித்தேன். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சிலர் ஆஞ்சநேயரின் பூசையின்போது உருவேறிக் கூத்தாடியதுடன் அருள்வாக்குச் சொல்லியும் சனங்களின் நிலைகளை வெளிப்படுத்தினர். இந்தப் பரவசநிலையில் ஆஞ்சநேயப் பெருமானை என் மனத்தால் இறுகப் பற்றினேன். அவர் எனக்கு அடிக்கடி கனவில் தோன்றி என்னைத் தன் கருவியாக்கிக் கொண்டார். நானும் தொடர்ந்து அவரை என் உள்ளத்திலிருத்தி மனதினால் பூசித்தேன். ஒரு நாள் கனவில் தோன்றி தனக்கென ஒரு கோயிலமைத்து வழிபடுமாறு தெரிவித்தார். தொடர்ந்து எனது உள்ளம் அவரை இடையறாது பூசிக்கவும் அருள்பாலித்தார்.

மனதில் குற்றஞ் செய்யாமலிருக்க ஏதாவது வழியுண்டா என ஆன்றோர்களும் சான்றோர்களும் ஆராய்ந்து பார்த்தனர். அதற்கு ஒரு வழியும் கண்டனர். ஆம்! எங்கும் எதிலும் எல்லாவற்றிலும் எல்லையில்லாமல் நீக்கமற நிலைத்திருக்கும் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனாக விளங்கும் இறைவன். கடவுளை, தெய்வத்தை, பரம்பொருளை மனதில் இருத்திச் சாட்சியாக இருந்து நம்மைத் தண்டிக்கின்றான். ஆம்! இப்போது தெய்வ நம்பிக்கை, தெய்வ பக்தி ஏற்பட்டு மனம் திருந்திய வாழ்வு ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவின் உடம்பில் பால் இருக்கிறது. ஆனால் பால் அதன் மடியிலுள்ள காம்பிலிருந்துதான் வெளிப்படுகிறது. அதே போல் ஆண்டவன் அருள் எங்கும் வியாபித்திருந்தாலும் அவனுடைய சாந்நித்தியம் அவனுக்கெடுக்கப்பட்ட ஆலயத்தில் இருந்தால்தான் கிடைக்கும். இதற்குப் பல புராணச் சான்றுகள் உள்ளன. இதனால் பெரியோர்கள், முனிவர்கள், மறையோர்கள், செல்வச் சீமான்கள், பழைய அரசர்கள் பலரும் பல இடங்களில் ஆலயங்கள் எழுப்பினர். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழியே உண்டாகியது.

இயற்கையாகவே வணங்கிவந்த மனிதன் வேதங்களையும், சாஸ்திரங்களையும், ஆகமங்களையும் உணர்ந்து பல தெய்வீக உருவங்களைப் படைத்தான். இவ்வாறு பிறவாயாக்கைப் பெரியோன் கோயில் எனச் சிவன்கோயில்களும் நீலமேனி நெடியோன் எனத் திருமால் கோயில்களும், முருகன் ஆலயங்களும் எழுந்தன. தெய்வநம்பிக்கை, பக்தி, வழிபாடு நாட்டில் மிகுந்தன. இந்து சமுத்திரத்தின் முத்து எனப் போற்றப் படும் இலங்கைத்தீவின் வடபால் அமைந்தது. யாழ்ப்பாணம். இங்கு பல சிவஸ்தலங்கள், அம்பாள், விநாயகத் தலங்கள், முருகன் தலங்கள் செறிந்திருக்கின்றன. முக்கோண வடிவில் மூன்று விஷ்ணு தலங்களான யாழ்ப்பாணம் பெருமாள் கோயில், பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில், வல்லிபுர ஆழ்வார் கோயில் என்பனவும் இதனுள் அடங்கிய திருத்தலங்களாகும். இவை ஒல்லாந்தர் காலத்துக்கு முந்தியவையென நூல்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட யாழ்ப்பாணத்தில் பக்த அனுமான் ஆலயம் ஒன்று. எல்லாம் வல்ல அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் என்று சொல்லலாம். இது இராமபக்தன் தரிசனம் கொடுத்துக் கட்டப்பட்ட ஆலயமாம்.

என்னைக் கருவியாக வைத்த ராமதாசன் அஞ்சனை புத்திரனுக்குக் கோயில் கட்டுவதற்குரிய புண்ணியம் முன் பத்து ஆண்டுகள் பணி செய்தமையாகும். மனதளவில் கோயிலைக் கட்டி இத்தனை நாள் பூசை செய்து வந்தேன். எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்கள் எல்லாம் இடம்பெயர்ந்து தென்மராட்சியில் தஞ்சம் அடைந்தோம். துர்க்கா தேவஸ்தானத் தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி துர்க்கா துரந்தரியும் அவர் பராமரித்து வரும் மகளிர் இல்லப் பிள்ளைகளும் உசன் பகுதியில் கோயில் கொண்டிருக்கும் முருகன் தலத்தில் தஞ்சம் அடைந்தோம். முருகன் ஆலயம் எங்கள் ஆலயம். எவ்விதத் தடங்கலுமில்லாது அழைத்தார்கள். நாங்கள் அங்கு சென்றிருந்த காலத்தில் அம்மா அவர்களிடம் என் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்த எண்ணத்தை வெளியிட்டேன். ஆஞ்சநேயப் பெருமானுக்கு ஒரு ஆலயம் கட்ட வேண்டுமென்ற எண்ணத்தைக் கூறினேன். நல்ல சிந்தனைதான் எப்படி இதை முடிக்கப்போகிறீர்கள் என்று கூறி வியந்துகேட்டார். நாட்கள், கிழமைகள் நகர்ந்தன. மாதக்கணக்கில் உசன் பகுதியில் இருந்தோம். ஆறுமாதத்தின் பின் வலிகாமம் வரக் கூடியதாக இருந்தது. தெல்லிப்பளைக்குத் திரும்பி வந்து துர்க்கை அம்மன் கோயில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்று விழாக்களும் நடைபெற்றன. சில மாதங்களில் ஆஞ்சநேயப் பெருமான் திருவருளால் கோயில் கட்டுமானப் பணிக்கு வேண்டிய ஏற்பாட்சைச் செய்ய முயன்று பல இடங்களிலும் கோயில் கட்டுவதற்கான காணி நிலத்தைத் தெரிவுசெய்வதில் ஈடுபட்டேன். அனுமந்தனின் அருளால் இணுவில் மருதனார்மடத்தில் கோயில் கட்டுவதற்குரிய இடம் கிடைத்தது. கடந்த 22.04.1999 பிரமாதி வருடம் சித்திரை மாதம் ஒன்பதாம் திகதி வியாழக்கிழமை பூர்வ சப்தமித் திதி புனர்பூச நட்சத்திரத்தில் ஆலயம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அந்தணர் குழாம் வேதபாராயணஞ் செய்யப் பல சைவப் பெரியார்கள், பல அஞ்சனைசுதன் பக்தர்கள் மலர்மாரி பொழிய மங்கல வாத்தியம் முழங்க கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்களால் அத்திவாரக்கல் நாடப்பட்டது. எம்பெருமானின் கோயில் நாளொரு வண்ணமாக வளர்ந்தது. நிதியுதவிய வர்த்தக அன்பர்கள், செல்வந்தர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள் நன்கொடையால் திருப்பணி நிறைவேற்றப்படுகிறது. மூல விக்கிரகத்தை (ஒன்பது அடி உயரமான ஒரே கருங்கல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ஓர் அன்பர் தமது பெருமுயற்சியால் உதவ இந்தியாவைச் சேர்ந்த பிரபல ஸ்தபதி பத்மபூசணம் திருமூர்த்தி வடித்தார். இவ்விக்கிரகம் கப்பல் மூலம் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. மூலஸ்தானம் திருமூர்த்தியால் கட்டப்பட்டது. இத்திருப்பணிக்கு இணுவில் அன்பர் ஒருவர் உதவினார். பரிவார மூர்த்தங்களான பிள்ளையார் பஞ்சலோகத்தினால் செய்யப் பட்டது. உரும்பிராய் அடியார் ஒருவால் இத்திருப்பணி நிறைவு செய்யப்பட்டது. கோயில் முன் பக்கத்திலுள்ள சனீஸ்வரன் கோயில் இணுவில் அடியவரான தனவந்தரால் நிறைவேற்றப் பட்டது. இவ்விதமாக அன்பர்கள் தங்கள் இயல்பான பணிகளைப் பொறுப்பேற்று வேண்டிய நிதியுதவி செய்தனர். திருப்பணி வேலைகள் வளர்ந்தன.

இந்தக்கோயில் வடிவமைப்பு வேலைகள் சிற்ப சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டதன் பிரகாரம் 10 - 6 பாகை கொண்ட கோயிலாக அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இயற்கை மலை இல்லாதபோதும் செயற்கை மலையாக அமைப்பொன்றை உருவாக்கியதுடன் சிற்பக்கலை நிபுணரினால் 110 அடி நீளமும் 56 அடி அகலமும் கொண்ட உள்ளமைப்பு உருவானது. கீழ் மண்டபம் கல்யாண மண்டபமாகவும், அன்னதான மண்டபமாகவும் உபயோகிக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டது சிறப்பாகும். கடந்த 29.01.2001 தைத் திங்கள் காலை 8.30 - 10.30 வரையுள்ள உத்திரட்டாதி நட்சத்திரமும் பஞ்சமிதிதியும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் பெருமானது கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதிகாலை 6.30 மணியளவில் மூன்று தளங்களைக் கொண்ட வெண்ணீல நிறம் பொருந்திய சுந்தர ஆஞ்சநேயரது குடமுழுக்கு நடைபெற்றது. நாட்டின் நாற்புறங்களிலிருந்தும் மக்கள் வந்து தரிசனஞ் செய்தார்கள்.

ஒருபுறம் மங்கல வாத்தியகாரர்கள் இசைமழை பொழிய புடைசூழ்ந்து நின்ற பக்த வெள்ளத்தில் ராம ராம என்ற மந்திர ஒலியுடன் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் இலங்கை வானொலி

ஒலிபரப்பு நிலையத்தினர் சிறப்பான நிகழ்ச்சியாக ஒலிபரப்பி நிறைவேறியமை மகிழ்ச்சியானது. தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று நிறைவில் சீதா ராமர் திருக்கல்யாணம் நடைபெற்றது. அன்றைய தினத்தில் சங்கீத வித்வான்கள் கோயில் மண்டபத்தில் பெருமானை இசையால் வழிபாடு செய்தனர். அன்பர்கள் பலர் மண்டலாபிசேக உபயஞ் செய்தனர்.

தொடர்ந்து நித்திய பூசைகள் காலை 6 மணி, மதியம் 12 மணி, மாலை 6 மணி நேரங்களில் தினமும் நடைபெறுகின்றன. விசேடமாகச் சனிக்கிழமைகளில் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை திருநடை திறந்திருக்கும். அடியார்கள் நேர்த்தி செய்யக்கூடிய ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் ஏராளமான மக்கள் வந்து தமது நேர்த்தியை நிறைவேற்றுகின்றனர். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பகல் 11.00 மணிக்கு அபிசேகம் நடைபெற்று விசேட பூசை நடைபெறுகிறது. கூட்டு வழிபாடும் நடைபெற்றுக் கோயிலில் இறைவனின் அருளை மிளிரச் செய்கிறார்கள் ஆஞ்சநேயர் அருளைப் பெறுவதற்கு முன்னோர் சொன்ன சுலோகம் என்று ஞாபகத்திற்கு வருகிறது.

"புத்தி பலம் ஐதோ தைரியம் நிர்பயம்
அஷோகதாம் அட்சயம் வக்படுவர் தம்
அனுமந்தம் உபர்துகே"

எவனொருவன் அனுமந்த சுவாமியை வழிபாடு செய்கிறானோ அவனுக்கு நல்லறிவு, பயம் இல்லாத தைரியம், நல்ல பார்வையாற்றல் என்பன எல்லாம் கிடைக்கும். இகபர சுகங்களால் பெறலாம். கருணையுள்ள ஆஞ்சநேய சுவாமியை நினைத்துக்கொள் நவக்கிரகதோசம் விலகி ஓடிவிடும். அனுமாரைக் கும்பிடு கடன்தொல்லையிலிருந்து விடுபடலாம். வீர ஆஞ்சநேயரைக் குடம்பிடு சர்வ பாவமும் நாசமாகிவிடும் என்பர் ஆன்றோர். ஆம்! துயர்துடைப்பதில் முதலிடம் பெற்று

விளங்குபவர் ஸ்ரீஆஞ்சநேய பகவான். ஸ்ரீஇராமச்சந்திர மூர்த்தியின் துயரத்தையே போக்கியவரல்லவா அவர்! ஆஞ்சநேயர் வழிபாடு மிகச் சுலபமானது ஆகும். ராம் ராம் ராம் ராம் என்று நாம் மனதார நினைவு ஒன்றிப் பிரார்த்தித்தால் போதும் அங்கு ஆஞ்சநேயர் பிரத்தியட்சமாகி நம்துயரத்தைப் போக்கிவிடுவார். ஸ்ரீமத் நாராயணத்தில் நடுநாயகமாகச் சர்வ வல்லமை படைத்தவராக கோடி சூரியனைப் போல விளங்கியவராக ஆஞ்சநேயசுவாமி மருதனார்மடத்தில் 9 அடி உயரத்தில் இருந்து அருளாட்சி செய்கிறார். ஆஞ்சநேய அடியார்கள் அவரைத் தரிசனஞ் செய்து மனச்சோகம் நீங்கி, நோயற்ற வாழ்வு வாழ்வாங்கு வாழவும், நாட்டில் சாந்தி சமாதானமும் நிலைத்திடவும் எல்லாம்வல்ல ஆஞ்சநேயர் அருள்புரிய வேண்டி இறைஞ்சுகின்றேன்.

இக்குறுகிய காலத்தில் ஆஞ்சநேய சுவாமியின் அடியார்கள் பலர் அவரின் கடாட்சத்தால் தமக்கு முன்னேற்றமும் பலசீரும் சிறப்பும் கிடைத்த பெருமகிழ்வில் எம்பெருமானின் திருத்தல வாசலில் நெடிய கோபுரமொன்றை நிறுவ எண்ணினர். மாமல்லபுரத்துப் பிரபல சிற்பவல்லுனர் ஞானமூர்த்தி மனதில் ஆஞ்சநேயப் பெருமான் குடிகொண்டார். அவரை அணுகி கோபுரம் அமைய வேண்டிய விபரங்களைக் கூறியபோது தமது பூரணத்திருப்தியுடன் செயற்பட முனைந்தார். நிர்மாண வேலைகள் துரித கதியில் நடைபெற்றன. சிற்ப வல்லுனரும் அவரது உதவியாட்களும் அவருக்குதவியாக உள்ளூர் மேசன் மற்றும் தொழிலாளரும் 64 அடி உயரம் கொண்ட வாசற்கோபுரம் நிர்மாணித்து நிறைவுகண்டனர். கோபுரத்தின் இரு மருங்கிலும் இரு பெரிய காண்டாமணிகளும் அதற்கென உள்ள மணிக் கோபுரத்தில் நிறுவப்பட்டன. கோபுரம் மேல் மாடியிலுள்ள மூல மூர்த்தியின் கோயிலை மறைக்காது அதனிலும் கூடிய உயரத்திலிருந்து மூன்று தளங்களையுடைய கோபுரம் அமைக்கப்பட்டது. கோபுர வாசலில் மிக உயரத்தில் பதினெட்டு அடி உயரமும் சிறந்த அமைப்பும் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஞ்சநேயப் பெருமான் மிகக் கம்பீரத்துடன் அருளாட்சி தருகிறார். கோபுரத்தில் அனேக சிற்பங்கள் சிறந்த கலையழகுடன் அமைந்துள்ளன. இவற்றுக்கான கும்பாபிசேகம் 09.02.2004 அன்று மிகவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து அபிசேகங்கள் நடைபெற்றன. கோபுரத்தின் முன் கீழ்த் திசையில் அமைந்த மாடுகள் மேய்க்கும் கண்ணபிரானும் பார்த்தசாரதியும் சரஸ்வதி, இலக்குமி போன்ற உருவமைந்த சிலைகளும் சிற்பக் கலைஞர் திரு.ஞானமூர்த்தி அவர்களின் கலைவண்ணமே. கும்பாபிசேகம் 5 நாள் கிரியைகளை அடுத்து 09.02.2004 அன்று நண்பகல் கோபுரக் குடமுழுக்கு மறையோரின் மந்திர ஒலியும், தவில், நாதஸ்வர ஓசையும் பக்தர்களின் இராமநாம ஆஞ்சநேயப் பெருமானின் நாத சங்கீர்த்தமும் ஒலிக்க மிகச் சிறப்பாக நடைந்தது. கலைஞர் கௌரவிப்பும் நிகழ்ந்த பின் அடியார்கள் அனைவருக்கும் அன்னதானமும் வெகுசிறப்பாக நடைபெற்றது. சகல திருப்பணிக்கும் உள்ளூர், வெளிநாட்டு அடியார்களின் பங்களிப்புக்கள் பேருதவி புரிந்தது.

இலங்கையின் வடபுலத்தே இதுவொன்றே ஆஞ்சநேயர் ஆலயமாகும். பலசீரும் சிறப்பும் எம்பெருமானின் அருளால் இணுவையூரில் அமைந்து கோயில்களின் எண்ணிக்கையை இவ்வூருக்கு 21 ஆக உயர்த்தியமை இணுவையூரின் சிறப்பாகும். யாவரும் சிறப்புடன் வாழ ஆஞ்சநேயப் பெருமான் நல்லருள் புரியட்டும்.

"லோகசுகினோ பவந்து"
"ஸ்ரீராம ஜெயராம ஜெயராம ராமா"

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்
ஆதினகர்த்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவை அந்தணப்பெரியார்கள்

## பிரம்மஸ்ரீ நடராச ஐயர்

இணுவில் கிராமத்தில் அன்று வாழ்ந்த பெரு மக்களில் நடராசஐயர் பிரசித்தமானவர். இறைவனை உள்ளன்போடு பூசித்துத் தமது பக்தியை மேம்படுத்தியவர். ஆறுமுகநாவலர் காலத்தில் அவரிடம் கற்று அவரது வேண்டுதலின் பேரில் கற்பித்தவர். இவரிடம் பயின்ற அநேகர் சிறந்த அறிவு மிக்கவராக வகை செய்தவர். விஷகடி வைத்தியமும் செய்வதில் வல்லவர். இவர் பற்றிய மேலதிக விபரங்கள் இம்மலரில் பிற கட்டுரைகளிலும் காணப்படுகின்றன.

## சிவஸ்ரீ சதாசிவக் குருக்கள்

இணுவில் கந்தசுவாமி கோயிலின் தென்மேல் வீதியில் வாழ்ந்தவர். "அந்தணர் என்போர் அறவோர்" என்ற வள்ளுவன் கூற்றுக்கமைய வாழ்வாங்கு வாழ்ந்தவர். வேதாகமங்களிற் சிறந்தவர். இவர் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில், இணுவில் சிவகாமி அம்மன் கோயில் ஆகியவற்றில் பிரதம சிவாச்சாரியாராகக் கடமையாற்றியவர். இவர் நாள் தவறாமல் சிவபூசை செய்து தாம் பூசிக்கும் தெய்வங்களின் பூசை முடியப் பலமுறை விழுந்து வணங்கியே மறுகடமை பார்ப்பார். பொதுமக்களுக்குத் தகுந்த நல்லறிவையும் தத்துவங் களையும் எடுத்துக் கூறுவார். இணுவில் சிவகாமி அம்மன் கோயிலின் பூசைக்கான மலர் கிடைக்க வேண்டி நந்தவனம் அமைத்த தொண்டர்களுக்கு அம்பாளின் நைவேத்திய பிரசாதம் நிறைய வழங்கி நல்லுதவி செய்தவர். அவரது சிறப்பை அக்காலம் தொட்டு இன்றுவரை வாழும் முதியோர் இன்றும் கூறுவதைக்கேட்கலாம்.

## சிவஸ்ரீ சி. சாம்பசிவக் குருக்கள்

தமது மரபுவழியான கடமைகளுடன் வைத்தியத் தொழிலிலும் சிறந்து விளங்கியவர். இவர் அரசினர் வைத்தியக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள்

சிவபூமியாம் ஈழத்தில் ஒரு பகுதியாய் விளங்கும் யாழ்ப்பாணத்தில் ஞானபூமியாய் மிளிரும் கல்வி வளமும், கலைநயமும் பொருந்திய இணுவையம்பதியில் வைதிகநெறி பிறழாமல் வாழ்ந்து வந்த அந்தண சிரேஷ்டரான சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களுக்கும் விசக்கடி மாந்திரீக வைத்தியர் நடராஜ ஐயரின் பேர்த்தி நீலாம்பாளுக்கும் பிறந்த மூத்தவரான இராமநாதக்குருக்கள் ஆனந்த வருடம் ஆவணி மாதம் 25 ஆம் நாள் (10.09.1914) மிதுன லக்னமும் ஆவணி மூல நட்சத்திரமும் பொருந்திய புண்ணிய உதயவேளையில் ஜனனமானார்.

இவர் தந்தையின் மறைவின் பின் நயினை சாமிநாதக் குருக்களிடம் வாசம் செய்ய நேரிட்டது. நயினை கைலாசநாதக் குருக்களும் இராமநாதக்குருக்களும் ஒரே காலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கும்பகோணத்தில் பிரபல சிவாச்சாரியார் களிடம் பாடம் கேட்டார்கள். வாலிபப்பருவம் எய்திய இராமநாதக் குருக்கள் அவர்கள் நாரந்தனை நாகலிங்கஐயர் அவர்களின் சிரேஷ்ட புத்திரி இராசம்மா அவர்களைத் திருமணம் புரிந்து இல்லற வாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டார். சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள் இந்தியாவின் தமிழ்நாட்டில் இருபத்தேழு வயதில் ஆச்சாரிய அபிஷேகம் பெற்று ஆலயத் தொண்டுகளையும் தன்வாழ்வோடு இணைத்துக்கொண்டு தன் இறுதிமூச்சுவரை அந்தரங்க சுத்தியுடன் தினமும் சிவபூஜை செய்வதை அவரது வழக்கமாக்கிக் கொண்டார்.

இலங்கைத் திருநாட்டில் பல்வேறு பாகங்களிலும் குறிப்பாக மலையகத்திலும், தலைநகர் கொழும்பிலும் பல்வேறு ஆலய கும்பாபிஷேகங்களையும் உற்சவங்களையும் நடாத்தி இறைதொண்டு புரிந்து வந்தார். அவர் நித்திய, நைமித்திய கிரியைகளில் முழு மனத்துடன் ஈடுபட்டுக் கிரியைகளைச் செய்கின்ற பாங்கு அனைவரின் பாராட்டுக்கும் போற்றுதற்கும் உரியதாய்ச் சைவசமய வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் மெருகேற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957 ஆம் ஆண்டு நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அம்பாளின் ஆலய கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடாத்தி வைத்ததோடு குருக்கள் அவர்களால் அவ்வாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஸ்ரீசக்ரபூஜை இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. குருக்கள் அவர்கள் இணுவில் கந்தசுவாமி கோவிலிலேயே தனது முதலாவது மகோற்சவக் கிரியையை நிகழ்த்தினார். தொடர்ந்து கோயிலின் பரம்பரை அர்ச்சகராகவும், பிரதம குருவாகவும் பணிபுரிந்ததோடு மட்டுமல்லாமல் அடியார்களுக்குள் அடியாராகவும் இருந்து ஆலய வளர்ச்சிக்காக அயராது உழைத்தார்.

கும்பாபிஷேகம் செய்யும் குருமார்கள் அத்துறையில் பல நூல்களை ஆராய்ந்து கும்பாபிஷேகக் கிரியைகளைச் செய்கின்றபோதும் குருக்கள் அவர்களின் ஆலோசனைகளையும், விளக்கங்களையுமே முடிந்த முடிவாகக் கொண்டு செயற்படும் அளவிற்குக் குருக்கள் அவர்கள் பல நூல்கள் கற்ற அறிஞராகவும், ஆகம ஆலோசகராகவும் விளங்கி ஆலயங்களின் அமைவுக்கேற்ப ஆகம விதிகளைக் கூறிக் கிரியைகளை நெறிப்படுத்தி வந்தமை குறிப்பிடத் தக்கது.

குருக்கள் அவர்கள் தன் இல்லற வாழ்வின் பயனாக நான்கு ஆண் மகவுகளையும், ஐந்து பெண் செல்வங்களையும் பெற்று அவர்களைச் சீரோடும் சிறப்போடும் வளர்த்துக் கல்வி கேள்விகளில் அவர்களை உரிய முறையில் பயிற்றுவித்து அவரவர்க்கு ஏற்றவகையில் இல்லற வாழ்க்கையையும் அமைத்துக் கொடுத்தார்கள்.

இலங்கைத் திருநாட்டில் தலைசிறந்த கலைநுணுக்கங் கொண்ட மஞ்சம் என உலகத்தோர் போற்றும் திருமஞ்சத் திருவிழாவை 27.06.1983 அன்று தலைமையேற்று நடாத்தி வைத்த பெருமையும் குருக்களையே சாரும். நாரந்தனை தான்தோன்றி அம்மன் ஆலயம், இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் கோயில், புளியங்கூடல் மஹாமாரி அம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் போன்ற பல ஆலயங்களில் மஹோற்சவ குருவாக விளங்கிக் கிரியைகளைச் சிறப்பாக நடாத்தி மெய்யடியார்களின் போற்றுதல்களையும், பாராட்டுதல்களையும் அமோகமாகப் பெற்றிருந்தார். அகில இலங்கையிலுள்ள பல பொது ஸ்தாபனங்களும், தேவஸ்தானங்களும் இவரது ஆகம அறிவையும், இறைதொண்டுகளையும் பாராட்டியும் கௌரவித்தும் வழங்கிய பட்டங்கள் பல.

குருக்கள் அவர்கள் தன் சமூகப்பணியாக குருமார்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கியதோடு மட்டுமல்லாமல் பல அந்தண சிரேஷ்டர்களுக்கு ஆச்சாரிய அபிஷேகம் செய்து வைத்து அவர்களையும் இறைபணியில் இணையவைத்தார். பல கும்பாபிஷேக வைபவங்களையும் சங்காபிஷேக வைபவங் களையும், மகோற்சவங்களையும், திருமண வைபவங்களையும் இன்னும்பல அபரக் கிரியைகளையும் செய்துவைத்து இம்மையிலுள்ளோர்களுக்கும் மறுமையிலுள்ளோர்களுக்கும் சேவைபுரிந்த குருக்கள் தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன் ஆலயத்தில் 03.07.1983 அன்று நடைபெற்ற சண்டிஹோம மஹாயஞ்ஞத்தை தலைமையேற்று வழிநடாத்திச் சிறப்பித்து அந்தச் சிறப்புடனேயே ருதிரோற்காரி வருஷம் ஆனித் திங்கள் 20 ஆம் நாள் (04.07.1983) அபரபக்க நவமித்திதியில் சிவபதமடைந்தார்.

இவ்வுலகில் ஒருவர் எப்படி வாழ்ந்தார் என்பதும் அவர் இவ்வுலகிற்கு என்ன செய்தார் என்பதும்தான் அவருடைய சிறப்பை வெளிப்படுத்தி நிற்கும். அந்த வகையில் சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள் அவர்கள் தன்பிறவியைப் பிறருக்குப் பயனுள்ளவகையில் நெறிப்படுத்தி வாழ்ந்ததை இன்றும் நாம் சந்திக்கும் பல்தேச மக்களிடமும், குறிப்பாக இணுவில் கிராம மக்களிடம் அறியக்கூடியதாக உள்ளது. குருக்கள் அவர்கள் தம் வாழ்க்கைச் சிறப்பால் சைவ மக்கள் அனைவரது நெஞ்சங்களிலும் வாழ்வார் என்பது திண்ணம்.

திருமதி நிரஜா B.A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவஸ்ரீ சி.வைத்தீஸ்வரக் குருக்கள்**

இவர் தமது குல ஆசாரப்படி கோயில் பூசை முறைகளையும் கையாண்டவர். சங்கீதம், பண்ணிசை, கதாப்பிரசங்கம் ஆகியவற்றுடன் திருமுறைகளை இராகத்தோடு சிறப்பாகப் பாடிச் சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தியவர்.

**பிரம்மஸ்ரீ நடராச ஐயர்**

புகழ்பெற்ற இயல், இசை, நடன வித்தகர் வீரமணி ஐயரை இவ்வுலகத்திற்களித்த மேதை. இவர் பிரபல வயலின் இசையாளர்.

**சிவஸ்ரீ சிவஞானக் குருக்கள்**

இவர் சிறந்த ஆசாரமும் பக்தியும் தற்பெருமையற்ற சிறப்பும் மிக்கவர். வைத்தீஸ்வரக்குருக்களின் மருமகன். உள்ளன்போடு கடமை தவறாது பூசிப்பவர். பரராசசேகரப் பிள்யைார் கோவிலின் பிரதம சிவாச்சாரியாராகச் சேவைசெய்து வாழ்ந்தவர்.

**சிவஸ்ரீ சின்னையாக் குருக்கள்**

இணுவில் கந்தசுவாமி கோயிலின் பிரதம குருவாக வாழ்ந்தவர். மிகச் சிறப்பாகப் பூசை செய்தவர். இவரது குடும்பத்திலுதித்த இராமையரும் அடக்கமாகவும் ஒழுக்கமாகவும் நெடுங்காலமாக இணுவில் கந்தசுவாமி கோயிலில் பூசை செய்தவர்.

**சிவஸ்ரீ நடராச ஐயர்**

இணுவில் கந்தசுவாமி கோயிலின் பிரதம குருவாக வாழ்ந்தவர். இராமநாதக் குருக்களின் தம்பியாவார். தொடர்ந்து நெடுங்காலமாக இணுவில் கந்தசுவாமி கோயிலில் அர்ச்சகராகப் பணியாற்றியவர். இவர் இணுவில் கந்தசுவாமி கோவில் கொடியேற்றும் ஆண்டுகளில் மழை வளம் சிறந்து விளங்கியது. இவரின் பக்தியின் ஆற்றலை இன்றும் மக்கள்கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்கால அந்தணப் பெரியார்கள்

## சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள்

இவர் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் வாசலில் வசிக்கிறார். வைத்தீஸ்வரக் குருக்களின் மகனாவார். 1993 வரை பரராசசேகரப் பிள்ளையார் கோயில் பிரதமகுருவான சிவஸ்ரீ சிவஞானக்குருக்களின் மறைவின் பின் இக் கோயிலின் சகல பொறுப்புக்களையும் கையேற்றுத் திறம்பட நடாத்தி வருகிறார். சிறந்த பண்பும் ஆசாரமும் நிறைந்த இவர் நேரம் தவறாது பூசை செய்வதுடன் யாவரையும் அன்புடன் அரவணைத்தே தமது கடமைகளைச் செய்கிறார். இவரது பக்திநெறி தவறாத அர்ப்பணிப்பினால் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம் துரிதகதியில் முன்னேறவும் காணலாம். இவர் இக் கோவிலின் பல திருப்பணிகளுக்கு வேண்டிய உதவி புரிகிறார். இவரது புத்திரர்களான சிவஸ்ரீ அரவிந்தக் குருக்கள், பிரசன்னா சர்மா ஆகியோரும் மிகத்துடிப்புடன் தந்தைக்கு வேண்டிய உதவிகளுடன் பூசையும் செய்து வருகின்றனர்.

## சிவஸ்ரீ இ. சத்தியமூர்த்திக் குருக்கள்

இவர் இணுவில் கந்தசுவாமி கோயில் பிரதமகுரு இராமநாதக் குருக்களின் மூத்த மகனாவார். இவர் வெற்றிலையில் மை பூசி அதன் ஒளியில் சோதிடஞ் சொல்வதில் வல்லவர். நுவரெலியாவிலுள்ள ஒரு கோயிலின் பிரதம குருவாக இருந்து பூசை க்ரமாகச் செய்வதுடன் சோதிடமும் பார்ப்பவர். இதனால் இவரது புகழ் மலையகமெங்கும் பிரசித்தமாகியுள்ளது. இவரது மகனொருவர் பொறியியலாளர். ஏனையோர் தந்தைக்கு உதவியாக இருந்து பூசைவழிபாடுகளிற் செயற்படுகின்றனர்.

## சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள்

இவர் இராமநாதக்குருக்களின் மருமகன். இவர் இணுவில் கந்தசுவாமி கோயிலின் நித்திய, நைமித்திய பூசைக் கடமைகளில் ஈடுபடுபவர். மற்றும் சில கோயில்களிலும் பூசை செய்கிறார். இவரது மூத்த மகள் நிரஜா என்பவர் பல்கலைக்கழகப் பட்டதாரியாவார். அடுத்த மகளொருவர் நுண்கலைப் பட்டதாரி ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி பீடாதிபதி சிவஸ்ரீ தாணு.மகாதேவக்குருக்கள்

இலங்கைத் திருநாட்டில் வேதவிற்பன்னர்களாகப் போற்றப்படும் ஒருசிலருள் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் முதன்மைபெற்று விளங்குகிறார். பொதுவாக நோக்குமிடத்து இலங்கைத் திருநாட்டில் தற்போது வாழும் அந்தணப் பெருமக்களின் பூர்வீகம் இந்தியாவே. மாவிட்டபுரம் கந்தனுக்கு சேவைசெய்யும் நோக்குடன் இந்தியாவிலிருந்து தாணுநாதஐயர் - இராசலட்சுமி அம்மா ஆகியோரை உடுவிலைச் சேர்ந்த முத்துசாமிக்குருக்கள் இங்கு அழைத்து வந்தார்கள். தாணுநாத ஐயர் தம்பதியினருக்கு 07.12.1937 இல் மாவிட்டபுரப் புண்ணிய பூமியில் மகாதேவக் குருக்கள் அவர்கள் பிறந்தார்கள். தென்னிந்தியா நாகர்கோயில் வாசுதேவ வாத்தியார் அவர்களால் 9 ஆவது வயதில் உபநயனம் பெற்று நித்திய கர்மாக்களைச் செய்வதில் சிரத்தையாக இருந்தார். பல சகோதர. சகோதரிகளுடன் கூடிவாழ்ந்து ஆரம்பக் கல்வியைப் பளை வீமன்காமம் தமிழக்கலவன் பாடசாலையிலும் உயர்கல்வியைச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும். காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் பெற்றார்கள்.

சிறுவயது முதலே கல்வியில் சிறந்து விளங்கியதோடு தெய்வீகப் பணியான கோவில் பூஜைகளிலும் குறிப்பாக பத்ததி வாசித்தலிலும் சிறந்து விளங்கினார். மேற்படிப்பாக லண்டன் பி.ஏ பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு அத்துறையில் கல்வி கற்றபோதும் தமது தங்கையின் திருமணவைபவத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு இந்தியா சென்றமையினால் அத் தேர்வுக்குத் தோற்றமுடியாது போனதுடன் அவரின் கலாசாலைக் கல்வி நிறைவுபெற்றது. தற்போது இவரிடம் காணப்படும் ஆங்கிலமொழிச் சிறப்பு லண்டன் பி.ஏ பரீட்சைக்காகப் படித்ததன் பேறே எனலாம்.

வேத ஆகமக்கல்வியில் தம் முழுமுயற்சியையும் ஈடுபடுத்திய குருக்கள் கி.சீதாராம சாஸ்திரிகள், தென்னிந்தியா நாகர்கோயில் வாசுதேவ வாத்தியார், கி.சுப்பிரமணிய சாஸ்திரிகள், கி.நாராயண சாஸ்திரிகள், கீரிமலை ப.ராமையர், மாவிட்டபுரம் கு.பாலசுந்தரக் குருக்கள் போன்ற கல்விமான்களிடம் வேத ஆகமங்களையும் இன்னும் பல சாஸ்திர நூல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்று அனைவரும் வியக்கும் வண்ணம் முதன் மாணாக்கனாகத் திகழ்ந்தார். தெய்வீகப் பணியின் பொருட்டு 1960 ஆம் ஆண்டு இணுவில் கண்ணகை அம்மன் கோவில் குருவாசத்தில் வசித்துவரும்வேளை இவரின் திறமையையும் சிறப்பையும் அறிந்து மட்டக்களப்பில் இவரின் மாமன்மகளான புவனாம்பிகை அம்மாளை 1962 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி கன்னிகாதானம் செய்வித்து இல்லறத்தில் இணைத்தார்கள்.

இல்லறத்தின் கொடையாக மூன்று ஆண் குழந்தை களையும் ஒரு பெண் மகவையும் பெற்று வாழ்ந்துவரும்வேளை தாம் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் என்பதற்கிணங்கத் தன்னை அந்தண குலத்தோர்க்கு ஓர் ஆசிரியனாக அர்ப்பணித்துப் பிரதிபலன் பாராது யார் எவர் என்ற பேதமின்றித் தம்மை நாடிவரும் அனைத்து அந்தணர்க்கும் உணவளித்து உபசரித்துத் தான்பெற்ற கல்விச் செல்வத்தையும் ஊட்டினார். 1964 ஆம் ஆண்டு அகில இலங்கை சிவப் பிராமணர் சங்கத்தின் நெறிப்படுத்தலில் இயங்கிய சுன்னாகம் சதாசிவபிராசீன பாடசாலையிலும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மடத்திலும் வேத ஆகம ஆசிரியராக நியமிக்கப்பட்டு சிஷ்யர்கள் போற்றும் வகையில் சிறந்த முறையில் பாடங்களைக் கற்பித்தார்.

மேலும் தன் சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் 1966 ஆம் ஆண்டு இணுவில் கண்ணகை அம்மன் ஆலய மடத்தில் "தர்மசாஸ்தா குருகுலம்" என்ற வேத ஆகம பாடசாலையை நிறுவித் தலைமை ஆசிரியராக இருந்து பல சிவாச்சாரியார்களை அதன் மூலம் உருவாக்கித் தந்தார்கள். ஆசிரியப் பணியுடன் பல ஆலயங்களிலும் நடைபெறும் கும்பாபிஷேகங்கள், சங்காபிஷேகங்கள், இலட்சார்ச்சனை விழாக்கள், பிரம்மோற்சவ விழாக்கள் போன்ற பல கோவில் கிரியைகளைப் பொறுப்பேற்றுத் தலைமையேற்று நெறிப்படுத்தி வழிநடாத்தும் பாங்கை வியந்து போற்றிய பல மூத்த சிவாச்சாரியார்கள் இவருக்கு இணுவில் இராமநாதக் குருக்களைத் தீட்சாகுருவாக நியமித்து 1977 ஆம் ஆண்டு சிவச்சார்யாபிஷேகம் செய்து இவரின் சேவைக்கு மேலும் வலுவூட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மசாஸ்தா குருகுலம் மூலம் பல சிவாச்சாரியார்கள் வேத, ஆகம சாஸ்திரங்களைக் கற்று உலகெங்கிலும் உள்ள பல ஆலயங்களில் சிவாச்சாரியத்தொண்டு செய்து வருகிறார்கள். அண்மைக்காலமாக, குறிப்பாக லண்டன், கனடா, சுவிஸ், ஜேர்மனி, ஹொலண்ட், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளில் சிறந்து விளங்கும் ஆலயங்களில் தலைமைக்குருவாக விளங்கும் பலர் இவரிடம் வேதஅத்யயனம் பெற்ற சிஷ்யர்கள் என்பது இங்கு நோக்கத்தக்கது. மேலும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் கடந்த பத்து வருடங்களாக மகோற்சவகுருவாக விளங்கும் சிவாச்சாரியாரும் இவரின் முதன்மாணாக்கரில் ஒருவர்.

இவரின் ஆன்மீகப் பணியைப் பாராட்டிப் பல ஆலயங்களும், பல சைவக் கழகங்களும் பல்வேறு சிறப்புப் பட்டங்களையும் பாராட்டுக்களையும் வழங்கியுள்ளபோதும் புங்குடுதீவு ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் 33 குண்டங் களுடன் கூடிய உத்தமோத்தமபக்ஷ மஹாகும்பாபிஷேகத்தைப் பொறுப்பேற்று சர்வசாதகராக விளங்கி சிறப்புற நடாத்தி வைத்தமையைப் பாராட்டி வழங்கப்பட்ட "சிவாகம ஞானபாஸ்கரன்" என்னும் சிறப்புப் பட்டமே இவரின் பெயரை அணிசெய்து வருகின்றது. உலகெங்கணுமுள்ள பல்வேறு ஆலயங்களில் பல்லாயிரம் கும்பாபிஷேகங்களை நெறிப்படுத்தி ஆகம முறையில் அவற்றைச் செய்வித்த பெருமையும் இவருக்குண்டு. அண்மையில் இந்து கலாசார அமைச்சும் இவரின் சைவப் பணிகளைப் பாராட்டி சிறப்புக்கௌரவம் செய்தது.

தர்மசாஸ்தாவைக் குலதெய்வமாகவும், கண்ணகா பரமேஸ்வரியை இஷ்ட தெய்வமாகவும் போற்றி வழிபடும் இவர் தமது ஆலயத்தில் பல ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீசக்ர பிரதிஷ்டை செய்து உலகக்ஷேமத்திற்காக பூஜை வழிபாடுகளை இயற்றி வருகிறார். இயற்கையிலேயே சங்கீத ஞானம் பொருந்திய இவர் தம் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு இசைத்துறையில் சிறப்புறக் கற்க ஊக்குவித்ததோடு ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கலைஞர்களையும் பாராட்டிக் கௌரவித்து இசைத் துறையையும் வளர்த்து வருகிறார். தமது ஆலயத்தில் காயத்ரி பீடத்தை நிறுவி வருடாவருடம் மந்திரங்களின் மாதாவாகிய காயத்ரி மந்திர ஹோமம் செய்வதோடு சிவாச்சாரியார்களை அவர் தம்பணியில் ஊக்குவிக்கும் பொருட்டுச் சிறப்பு விருதுகளையும் வழங்கி வருகின்றார். பிள்ளைகளுடன் பல பேரப்பிள்ளைகளும் கூடி மகிழ 1997 ஆம் ஆண்டு தமது ஷஷ்டியப்தபூர்த்தி மங்கள நிகழ்வும் பெற்றார்கள்.

இவரின் கற்பித்தற் சிறப்பை அறிந்து இலங்கைத் தீவில் பல மாவட்டங்களிலிருந்தும் பல பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இவரின் குருகுலத்தில் இணைத்துக் கொண்டுள்ளனர். இதன்வழி இவர் குருகுலப் பாரம்பரியத்தையும் பேணிவருவது இங்கு நோக்கத்தக்கது. தம் ஆலயப்பணி தவிர்ந்த ஏனைய நேரங்களை தன் அறிவுத்தேடலுக்கும் பிறருக்கு கல்வி போதிப்பதற்கும் செலவிடும் இவர் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து இயங்கிவரும் குருகுலத்தின் அதிபர் என்னும் பெருமையையும் பெறுகிறார். இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் நடாத்தும் குருகுலத்திலும் வேதவாத்தியாராகவும், கௌரவ ஆலோசகராகவும் விளங்கிவருகிறார். ஆகமத் துறையுடன் வைதீகத்துறையையும் ஆராய்ந்து அண்மைக்காலத்தில் பல வைதீக நூல்களையும் தொகுத்து அந்தண சமூகத்திற்குப் பேருதவி புரிந்துள்ளார்.

இப்படிப்பட்ட சிறப்புக்கள் பொருந்திய இப்பெரியார் இக் கிராமத்தில் வாழ்வதால் இணுவிலே பெருமைபெறுகிறது எனக் கூறலாம். என்கடன் பணிசெய்து கிடப்பதே எனத் தன்மனத்திற் சங்கற்பங் கொண்டு சைவப்பேருலகிற்குத் தன்னாலான அனைத்துப் பணிகளையும் செய்துவரும் சிவஸ்ரீ தாணு.மகாதேவக்குருக்கள் அவர்களிடம் பாடங்கற்ற சிஷ்யனாகவும், அவர் வாழும் காலத்தில் அவரால் வேத, ஆகம முறைக்கமைய நெறிப்படுத்தப்படும் குருவாகவும் நான் விளங்குவதையிட்டுப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

**சிவஸ்ரீ குமார சரவணபவகுரு**

இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள்

இவர் இணுவில் கந்தசுவாமி கோயில் பரம்பரைப் பூசகர் வழிவந்த நடராசாக் குருக்களின் மூத்தமகன். இப்போதுள்ள இணுவில் கந்தசுவாமி கோயில் குருக்களில் வயது, அறிவு, விவேகம், தொழில்நுட்பம் கூடிய அந்தணப் பெருமகனாவார். சகல கிரியைகளிலும் சிறந்து விளங்கும் இவர் ஊர்மக்களால் பெரிதும் மதிக்கப்படுகிறார். இணுவில் கந்த சுவாமியாரின் பூசைப்பணியில் மிகச் சிறப்புடனும் துடிப்புடனும் சேவைபாற்றும் அபராஜிதக் குருக்கள் இவரது தவப்புதல்வராவார்.

## குமாரசுவாமிசர்மா சுவாமிநாதசர்மா

இவர் தற்போது இணுவில் சிவகாமி அம்பாளின் பூசகரான குமாரசாமிசர்மாவின் இரண்டாவது புதல்வராவார். இவர் நாட்டுநிலை காரணமாக மண்மீட்புப் பணியில் ஈடுபட்டவர். இதே காலத்தில் இவர் "வீரா" என்ற புனைபெயருடன் தேச விடுதலைக் கீதங்களையும் தேசவிடுதலை வேட்கைக் காவியங் களையும் இயற்றியவர். இவரது தொகுப்பு நூலொன்று வெளிவர உள்ளது. அண்மையில் வெளிவந்த அம்மா நலமா என்ற திரைப்படத்தின் பாடல்களை எழுதியவர். அப்படத்தில் நடித்தும் உள்ளார்.

## சிவஸ்ரீ சாம்பசிவ சோமசுபேசசர்மா

இணுவில் சிவகாமி அம்மன் கோயிலின் பிரதம சிவாச்சாரியராகப் பணியாற்றும் இவர் 15 வருடங்களுக்கு மேலாக இக்கோயிலில் மிகச் சிறப்பாகச் சேவையாற்றுகிறார். கடமையைச் சரிவரச் செய்வதன் நோக்கில் பூசைநேரக் குறித்த வேளைகளில் அபிசேகம், பூசை, மகோங்சவங்கள் மற்றும் விழாக்களைச் சிறப்பாகச் செய்கிறார். இக்கோயில் சிறப்புறவும் தெய்வீகம் நிறைந்திருக்கவும் இவர் விவேகத்தோடு கடமைகளை நிறைவேற்றுகிறார். இவர் லண்டன், கனடா, சுவிஸ் போன்ற வெளிநாடுகளுக்கு அவ்வப்போது சென்று விழாக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகோற்சவங்கள், திருமணங்கள் போன்றவற்றையும் சிறப்புற நடாத்திவருகிறார்.

## சிவஸ்ரீ சோ. குமாரசாமிக் குருக்கள்

இவர் இணுவில் சிவகாமி அம்பாளின் பக்திமிகுந்த பூசகராகப் பணியாற்றுகிறார். இணுவில் மத்திய கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர் மிகவும் அமைதியாகவும், சிறப்பாகவும் கடமையாற்றுவதால் யாவராலும் நன்கு மதிக்கப்படுகிறார்.

## சிவஸ்ரீ குமாரசாமி சரவணபவக்குரு

இவர் இணுவில் சிவகாமி அம்மன் கோயில் குமாரசாமிக் குருக்களின் மூத்த மகனும், இணுவில் கந்தசுவாமி கோவில் பாஸ்கரக்குருக்களின் மருமகனும் ஆவார். இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்களின் குருகுலத்தில் வேதாகமங்களைப் பயின்று குருத்துவம் அடைந்தவர். இவர் தமது திறமையால் விழாக்கள், மகோற்சவங்கள், கும்பாபிஷேகங்கள், திருமணவிழாக்களில் பிரதமகுருவாக யாவற்றையும் சிறப்புற நிறைவுசெய்வதால் குடாநாட்டில் பல்வேறு கோவில்களுக்கும் சென்று சிறப்பான பணியாற்றி நன்கு பாராட்டப்பட்டவர். இவரது அரிய துணைவியார் திருமதி நிரஜா அவர்கள் B.A பட்டதாரி ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் அதிசிறப்புவாய்ந்த உயர்ந்த திருமஞ்சத்தைச் செய்த

# இணுவில் பெரிய சந்நாசியார் காவியம்

## (சுப்பிரமணியம்)

### காப்பு / கலிவிருத்தம்

இணுவி லிற்பெரி தாகிய மஞ்சத்தைப்
பிணையு மன்பினிற் பேணியே செய்வித்த
இணையி லாப் பெருஞ்சந்நாசி யார் பற்றிக்
கணபதி வந்து கைதரப் பாடுவேன்.

### சந்நாசியார் கழல் சூடிப் பாடுவேன்

ஆறு மாமுகப் பிள்ளை விரும்பிடக்
கூறு மஞ்சம் குலவிடச் செய்வித்த
ஈறி லாப்புக ழெய்துசந் நாசியார்
நாறு பூங்கழல் நன்கேத்திப் பாடுவேன்.

### முருகன் துதி

பெரிய கந்த சுவாமியார் கோயிலில்
அரிய வேலுட னாளும் முருகனை
உரிய குஞ்சரி வள்ளியோ டேத்தியே
புரிச டையுடைப் போதனைப் பாடுவேன்.

### சிவகாமி அம்மை துதி

கதவுடைத்துப் புலவரை மீட்பித்தே
உதவி யசிவ காமியை யேத்தியே
முதல்வர் சந்நாசி யார்வர லாற்றினை
இத முறக்கவி யாற்புனைந் தேத்துவேன்.

### காரணம்

மறைமு றைசிவ காமி யருளினால்
அறநெறிப் பாடசாலை நடத்திடும்
திறமை சான்ற திருத்தொண்டர் கேட்டிட
முறைமை யென்று முழுவதும் பாடினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவையடக்கம்

அந்த ணர்மறை ஆற்றவும் கேட்பவர்
சிந்தை நல்லவர் செய்தொண்டும் காண்பவர்
இந்த நூற்பதம் ஏதும் குறையினும்
எந்தை சந்நாசி யாரதென் றேற்பரே.

# நூல்

## இணுவில்

(01) தொன்மை யான சரித்திரம் கொண்டது
நன்மை யேசெயும் நாட்டிற் சிறந்தது
பொன்ன கரின் பொலிபுகழ் செல்வத்தால்
மன்னவர் போல்மக்கள் வைகும் இணையிலி.

## இளந்தாரி முத்தியடைந்த ஊர்

(02) காலிங்க ராயன் மகனிளந் தாரியாம்
வாலி பன்கயி லாயன் சிவகாமி
பாலி னன்பிற் பழம்புளி ஏறிப்போய்
மூலக் கூட்டுடன் முத்திய டைந்தவூர்.

## பேராயிரவன்

(03) பிறந்த கோவலூர்ப் பேரா யிரவனாம்
அறம்நி ரம்பிய ஆதிக்க வேளாளன்
நிறைந்த நற்கலை நேர்ந்த இணையிலி
சிறந்த வூரென தேர்ந்திருந் தாண்டர்.

## கந்தர் + தெய்வானை

(04) அன்ன பற்பல அற்புதம் மேவியே
மன்னும் நல்ல இணுவையி லோர்குடி
அன்னை தெய்வானை அண்ணலாம் கந்தர்தம்
முன்னை நல்வினை யால்முகிழ்த் தார்மக்கள்!

## சகோதரர்

(05) அண்ணர்வே லாயுதர் சுப்பிர மணியமும்
எண்ண ரும்பெரும் சந்நாசி யாருடன்
கண்ணெ னானந்திப் பிள்ளைகா சிநாதர்
நண்ணி வாழ்ந்தது நல்ல இணுவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்

(06) வான்ப யிருடன் செய்பயி ரண்ணரும்
ஆன்ப சுநிரை யவ்வெளி யிலேவி
தான்ப ரிந்துமே மேய்த்துச்சந் நாசியார்
வான்வெ ளிதிகழ் காரைக்கா லேசெல்வார்.

## வழக்கம்

(07) மத்தி யானம் மரங்களின் நீழலில்
முத்தி சேர்பவர் போலச்சந் நாசியார்
வத்தி ரத்தை விரித்துத் துயின்றிட
நத்தி யன்னையும் நல்லுறை வீவரால்.

## சேர்வினை

(08) வழக்க மாக வருமுண வுமின்றிக்
களைத்துச் சந்நாசி யார்துயில் கொள்ளுங்கால்
தழைத்த அன்புடன் தாயார் பராசத்தி
குழைத்த சோறுண்டு கும்பிட்டார் கூத்தாடி.

## தாயார் ஓடிவருதல்

(09) தாயார் தெய்வானை தன்கை யுணவுடன்
சாயா வன்புடன் சார்ந்துஅக் காரைக்கால்
மேய தன்மகன் மேவுமி டத்திற்போய்ச்
சேயே நித்திரை யாற்பிந்தி னேனென,

## அற்புதம்

(10) கேட்ட மைந்தன் கிளர்ந்தோடி யன்னைபால்
நாட்ட முற்று நடந்தன கூறலும்
வாட்ட மின்றி மகிழ்ந்தன்னை மைந்தனை
ஆட்டு மெம்மம்மை யாடலீ தென்றார்த்தார்.

## கோயில் விவகாரம்

(11) கோயி லந்தணர் கோயில் முகாமைமார்
வாயில் தோறுமே வாதிடத் தான்விட்டுத்
தூய மாமுரு கேசன் தொடர்பினால்
ஆய தொண்டில்நின் றாட்பட்டார் அப்பரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபூதி

(12) அன்று ஞானப்பா லுண்டபு கலியார்
நன்று பாண்டிய னாரின் சுரத்தினை
வென்ற பூதியி னால்விலக் கல்போல
சென்ற மக்கட்கும் செய்தார்சந் நாசியார்.

## II

(13) துன்பம் யாவும் துடைக்கத் திருநீற்றால்
இன்ப மெய்திய யாவரும் அப்பரின்
அன்பின் மூழ்கு மதிசயம் கேட்டவர்
துன்றி யன்னாரைச் சுற்றியே வந்தனர்.

## III

(14) நல்ல வாக்கும் பலித்திடுந் தன்மையால்
சொல்லொ ணாத துயரைத் துரத்தலால்
வல்லி தாம் திருத்தோற்றத் திறத்தினால்
எல்லா ரும்மவர் பாத மிறைஞ்சினார்.

## யாவரும் போற்றினர்

(15) அந்த னாள ருடனடி யாரெல்லாம்
வந்து வந்தப்பர் வார்கழல் சூடியே
சிந்தை யாலும் சிறந்த கரத்தாலும்
எந்தை யாரையே ஏத்தினர் போற்றினர்.

## யாழ் மக்கள்

(16) கந்த மாமுரு கேசன் கழலடி
சிந்தை செய்யுஞ்சந் நாசியார் சேவடி
வந்து யாழ்ப்பாண மக்கள் தினந்தினம்
முந்தி க்கொண்டு தொழுதனர் முட்டியே.

## உடற்பிணி / உளப்பிணி

(17) உடற்பி ணியுடன் உள்ளப் பிணியையும்
அடர்த்துத் தீர்த்திடு மப்பர்சந் நாசியார்
கிடக்கும் போதும் கிளர்நித் திரையிலும்
நடக்கும் போதுமே நம்பனை நாடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சதா முருகனை ஏத்தல்

(18) ஆல யத்தி லமர்ந்தமுக் காலமும்
சாலவே பூசை கண்டு முருகன்பால்
ஏல வேபல தொண்டு மியற்றினார்
சீல மோடு தியானத் திருந்தமே.

### கனவு

(19) செப்பு மோர்திரு நாளினி லப்பரும்
ஒப்பில் நித்திரை யூடே கனாவினில்
அப்பன் நற்கடம் பன்முரு கேசனும்
இப்பு விவாழத் தோன்றி விளங்கினான்.

### மஞ்சம்

(20) மூன்று லகமும் போல மலைபோலத்
தோன்று மஞ்சம் துலக்கும் பழங்கதை
ஞான்றும் சொல்லிடும் காட்சியைக் காட்டிட
ஆன்ற டங்கிய நிந்தே யெழும்பினார்.

### அப்பரின் எண்ணம்

(21) இவனொ ருபத்தன் என்றுதான் எண்ணியோ
கவன மான கருத்தின் இணுவையில்
அவனி வாழும் வகையொரு மஞ்சத்தில்
பவனி யாய்வரக் காட்டின னென்றெண்ணி.

### புந்திபொங்க

(22) கந்த னெந்தை கருணைக் கடலென்றன்
சிந்தை மல்கச் சிறந்த கனவினில்
வந்து காட்டினன் என்ற மகிழ்ச்சியால்
புந்தி பொங்கப் பொலிந்து விளங்கினார்.

### ஆயத்தம்

(23) கப்ப னையில் கரிமுக னோடுயர்
ஒப்பில் மாரி உபயத் திருவடி
செப்ப மாக வணங்கி முருகற்காம்
ஒப்பில் மஞ்சத்திற் காயத்தஞ் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொடங்கினார்

(24) பூசு நீறு பொலிந்திட நின்றப்பர்
காசி னோடேதும் கைப்பொரு ளின்றியே
மாசி லுள்ளம் மலைமகள் மைந்தன்மேல்
நேசனாய் மஞ்சம் நிற்கத் தொடங்கினார்.

### மரம்

(25) மஞ்சம் செய்தற்கு மாமரம் வேண்டியே
வஞ்ச மின்றியே வாய்த்த வடியார்பால்
பஞ்ச மின்றிப் பகர வனைவரும்
நெஞ்சு சேவடி நாடிக் கொடுத்தனர்.

### மக்கள் மரம் குவித்தனர்

(26) அப்பர் வாழ மரசோலை யின்கணே
செப்பும் வேம்பு இருப்பை மரங்களை
தப்பி லாமலே மக்கள் குவித்தனர்
எப்பொ ழுதுமவை எய்தும் அதற்கென்றே!

### கதிர்காமர் மறுத்தல்

(27) அன்பர் கதிர்காமர் பாற்சென்ற அப்பரும்
இன்பு மஞ்சம் இயற்ற மரங்களை
நங்க டம்பன் நவின்றான் தருகென
புங்க வன்சொலின் புரிவேன் மரமென,

### கதிர்காமர் உடன்படல்

(28) அன்றி ராவிலே கதிர்காமர் கந்தனின்
என்றுங் கேட்டறி யாத திருவாக்கை
நன்று கேட்டு நனிமகிழ்ந் தப்பர்பால்
சென்று செப்பிய வாறு மரமீந்தார்.

### முருகனது அற்புதம்

(29) முருக னற்புதம் கண்டுசந் நாசியார்
ஒருது றையிலே யுன்னடி நேர்ந்தனன்
இரும்பெ ருந்திரு மஞ்சத்தைக் கட்டவே
திருவ ருள்புரி யென்று பிரார்த்தித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்பிகள்

(30) பார தத்தமிழ் நாட்டி லிருந்துயர்
ஆர ணந்தெரி அற்புதச் சிற்பிகள்
நேர ழைத்து வரவோர் முசிலீமினை
வார மாயனுப் பவந்து சேர்ந்தனர்.

## கந்தன் அப்பரின் திருக்கோலத்தில்

(31) கந்தன் அம்முஸ்லிம் கதைக்கமுன் னேயப்பர்
அந்தக் கோலத் தணைந்துச் சிற்பிகளை
இந்த நல்லினு வைகூட்டி னாரென
வந்த சிற்பிகள் வாய்விட் டுரைத்தனர்.

## சிற்பிகள் திட்டம்

(32) தலைவ னோடு தொழிலாளி மார்பலர்
நிலையம் வந்து நினைத்தசந் நாசியார்
மலர டிபணிந் தேத்தியே தேவையாம்
உலவு மஞ்சத் துறுமரம் வேண்டினர்.

## 1902 அடியிடல்

(33) ஆயி ரத்துத் தொளாயிரத் தூரண்டில்
சேயி ருக்கச் சிறப்புற மஞ்சத்தை
மாயி ருஞாலம் மதிக்க அடியிட்டுத்
தோயு மன்பிற் சுருதியின் தொட்டனர்.

## மஞ்சத்தடியை.....!

(34) அடியில் மஞ்சம் எழுந்து அரைவாசி
இடையின் நின்றிடு காலையச் சிற்பிகள்
நடைப டக்கொண்டு போயந்தக் கோயிலில்
தடைப டாதுசெ யில்நல மென்னவே.

## அடி மஞ்சம் உருட்டிச் செல்லல்

(35) பூசை செய்து புகழ்ந்தடி யார்களும்
ஆசை யால்முரு கேசற் கொருமஞ்சம்
நேச மாயிழுத் தேகியே மேற்கேபோய்
வாச முற்றது வறியறி யாமலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாதை அகற்றல் (வேறு)

(36) ஒடுங்கிய பாதை யூடே
யுயர்மஞ்சம் செல்லாதாக
அருஞ்செயல் புரிந்தே யந்த
வழியினைத் திறக்க எண்ணிக்
கடுந்தவ ரப்ப ரன்பின்
கட்டுண்டு பத்தி யாலே
நெடுந்தடை செய்த கந்தர்
நின்றவே லிகளை வெட்டித்.

(37) தஞ்சமாய் முருகன் பாதம்
தானிணைந் தருளி னப்பர்
உஞ்சன மென்றப் பாதை
யூடிடை யுருட்டிச் சென்று
அஞ்சிநின் றழுத போது
ஆறுமா முகத்து வள்ளல்
மஞ்சத்தை மாம ருதின்
மரநிழல் விடென விட்டார்.

### மஞ்சம் கட்டி உயர்ந்தது

(38) சங்கரன் மைந்த னுக்குச்
சக்தியின் பாலனுக்குத்
தங் கமம் மஞ்ச மொன்று
தனியுயர்ந் தெழுந்தபோது
எங்குமுள் ளார்கள் கேட்டு
எண்ணிலாப் பணம்கு வித்தார்.
திங்களில் தொடுமாப் போலச்
சிறந்தெழுந் ததுஅம் மஞ்சம்.

### சந்நாசியாரின் கனாவில்

(39) கந்தனா டல்கள் சொல்லும்
கலையுலாஞ் சிற்ப மஞ்சம்
விந்தையாம் மேலெ ழுந்து
மிருசுடர் காட்டி நிற்கும்
அந்தவே ளைசந் நாசி
யாரிடை முருகன் தோன்றி
உந்திமே லிரும ருங்கும்
தோகைபோல் விரித்துக் காட்ட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளோட்டம்

(40) சிற்பிக ளதனை யேற்று
சிறப்புடன் வட்டமாக
மெற்புற முடியின் பக்கம்
புராணநூல் முறை பொருந்த
அற்புதக் கலையிற் சிற்பம்
அழகுற அமைக்க அப்பர்
தெற்றென வெள்ளோட் டத்தைச்
சிறப்புற நடாத்து வித்தார்.

## இருவிழாக்கள்

(41) ஆனியில் மகோற்ச வத்தில்
அரும்பெரும் பத்தா ம்நாளில்
வானுயர் தையிற் பூச
வாழுநாள் தனிலு மென்றும்
தானிக ரில்லா அந்தத்
தனிவிழா விரண்டிற் கந்தன்
மானிகர் வள்ளி தெய்வ
யானைய குடன் வருவான்.

## காரைக்காலில் அம்மைக்கு ஒரு கோயில்

(42) சடையொரு பாக மாகத்
தாடி யோர் பாக மாக
நடையிடு மப்பர் நீற்றால்
நன்முகம் விளங்க முன்னர்
இடையுயர் காரைக் காலில்
ஏகியே உணவ ளித்த
உடையதாய் பராசத் திக்கும்
ஒருகோயில் கட்டி யேத்தி,

## சிவலிங்கம்

(43) ஆதியிற் காரைக் காலை
ஆண்டமா னாமு தலி
நாதியா யேக மைந்தன்
நல்லகா லிங்க ராயன்
சோதியாய் வணங்கிச் சென்ற
சுடர்சிவ லிங்கம் தோற்ற
நீதியா யவ்வி டத்தில்
நிறுத்தினார் சிவலிங் கத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கந்தர் கோயில் - வீதி - காரைக்கால் வரை

(44) பூசைகள் விழாக்க ளோடு
பொலியுமக் கோயில் சேரப்
பாசமாய் ஒருநல் வீதி
பகர்பெரும் கோயில் தொட்டுத்
தேசமே போற்றும் வண்ணம்
திகழவே எடுத்து நாளும்
வாசமாய் மக்கள் செல்ல
வகைசெய்தார் வழக்கமாக.

### ஏழு தேர் வீதி

(45) கல்பயில் வீதி யோரம்
கடும்புனல் கேணி யொன்றும்
எல்லையில் நல்ல தீர்த்தம்
எய்தயி றெழுகி ணறும்
மெல்லவே வெட்டிக் கட்டி
வீதியிற் சோலை நாட்டிச்
சொல்லிடும் பெரிய கோயில்
தேரேழு செல்லச் செய்தார்.

(46) பிள்ளையில் லாதோர் வேண்ட
பிள்ளைப்பாக் கியத்தைச் செய்தும்
வள்ளல்போல் வாழ, வாழா
மக்கட்கு மணம்செய் வித்தும்
அல்லற்பட் டலைந்தோர்க் கெல்லாம்
அவற்றையே நீக்கி விட்டும்
தொல்லைநன் முனிவர் போலத்
தோன்றியே பிரகா சித்தார்.

### பெருமை

(47) முன்னைநாள் குரவர் போல
முத்தியை நாடி நிற்கும்
தன்னிக ரிலாச் சந்நியாசி
யார் செய்நல் லற்பு தங்கள்
இந்நில மன்றி மற்று
மெதுவுமே போற்றிற் றென்றால்
அன்னவர் பெருமை யாரே
அளந்துநன் கெழுத வல்லார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(48) அன்னையென் சிவகா மியென்
றடிதொழும் கந்த ருக்கும்
மின்னனை யாளாய் நிற்கும்
மெல்லியல் ஆனந்திக்கும்
மன்னுவட் டுவினி வைரவ
நாதரின் மகளுக் கேற்ற
மன்னனாய் முதலித் தம்பி
மணந்திட வகையுஞ் செய்தார்.

## புத்திரருக்கு

(49) நாகமுத் துடனே சுப்ப
ராயரும் வேண்ட ஒன்றும்
தாகமாய்ப் பத்தர் வேலா
யுதருக்கு ஒன்று மாக
வேகமாய் வாக்குச் சொல்ல
மேவினார் இருசி றார்கள்!
ஓகையோ டின்று மன்னா
ருரைத்தவாக் கினிது சொல்வேன்.

## கந்தரும் சின்னக்குட்டியும்

(50) பைந்தொடி சின்னக் குட்டிப்
பாவைகந் தரைம ணந்து
ஐந்து பெண் பிள்ளை தம்மை
அடுத்துமே பெற்றினிமேல்
கந்தனை வேண்டி யப்பர்
கால்பணிந் தேத்தி மேலே
மைந்தனை விரும்பி வந்தோம்
எனஅவர் மனம் விரும்ப,

## மூவர் மக்கள்

(51) முன்னம்வே லாயு தற்கு
ஒருமகன் வருவான் சாமி
பின்னவர் சுப்ப ராயர்
பிறக்கவோர் மைந்தன் பேசான்
இன்னவர் போல வன்றி
இனியுமக் கொருகு மாரன்
பொன்னென வருவான் இந்தப்
புவிபோற்றுஞ் சாமி யென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடிவேல்

(52) ஆறெனப் பிறந்த அந்த
அருமகன் வடிவேல் வந்து
ஈறிலாப் புகழி னோடு
யாவரு மிறைஞ்ச வாழ்ந்து
கூறுநா ளளவி லீசன்
குரைகழ லடைந்தா ரந்தப்
பேறென மேலு மப்பர்
பெரியவற் புதங்கள் செய்தார்.

## கனவில் முருகன்

(53) மறையவர் முகாமை யாளர்
மனத்திடைக் கசப்புண் டாகி
முறையின்மை நிகழ்ந்த காலை
முட்டடைந் தீசன் தன்பால்
குறைசொல அவர்க னாவில்
குமரன்வந் தடைந்து அப்பா!
நெறியருள் அருண கிரிநான்
நிறுத்திவேல் வணங்கென்றேக.

## வேல் வைத்து வணங்கல் (வேறு)

(54) மஞ்சஞ் செய்த மதிப்புடை நல்லர சோலையிலே
தஞ்சஞ் செய்வடி வேல்தனை நாட்டித் தகவுடனே
செஞ்சொற் பாடிச் சேவடி தொழுதுவேல் சேர்த்திருக்கை
வஞ்சக மின்றி வாழ்த்திச் சென்னியில் வைத்தேத்தியே.

## வீடுகட்டல்

(55) அன்னையின் பாதம் அழுது வணங்கிடும் கந்தரது
பின்ன மறிந்து பேரும் விடியவின் போதடைந்து
என்னே யிரவில் அழுதனை இருக்க வீடொன்றினை
இன்னே கட்டென் றடியிட்டவ் வீட்டி லெழுந்திடென்றார்.

## வீடுகுடிபுகுதல்

(56) அப்பர்கரத்தினா லத்திவா ரமிட்ட அவ்வீட்டினை
செப்ப மாய்க் கட்டியே கந்தரும் ஆனந்திப் பிள்ளையுமே
ஒப்புர வாகவே முப்பதாம் நாளில் தம் உற்றோருடன்
தப்பாமல் வீடு குடிபுகுந் தவ்வீட்டில் தாமேவாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பர் மஞ்சத்தடி வாசம்

(57) பெரியதாம் கந்த சுவாமியார் கோயில்சேர் பிணக்கதனால்
உரியதாம் முகாமையி லுற்றவர் நின்று வழக்காடவே
அரியதா மவ்விடம்விட்டே நமதப்பர் மஞ்சத்தடி
துரிதமாய்த் தங்கித் துயருற்றார் வேலோன் துணைய தென்றே.

## பெரிய கோயிலை மறந்திலர்

(58) ஆயினும் சேயோனைத் தான்மற வாதப்பர் அவ்வப்போதே
சேயினக் கோயில்பால் சென்றுசென் றன்னான் சேவடியை
வாயினி லன்றிமனத்தினு மெய்யினும் வாய்மையதால்
ஏயின செய்தனம் எம்பிரான் கந்த னினித்திடவே.

## அன்பரின் நோய் தீர்த்தல்

(59) சிறுகுடில் கோயிலாய் செவ்வேற் பெருமான் திருவுருவாய்
மறுவிலன் போடு மலருடன் நீரிட்டு வாசமிட்டு
உறுமுறை யேத்தி வருநாளி லோர்நாள் விரும்பன்பரின்
தெறுமுறை செய்திடும் நோய்தீர்க்கச் சென்று திரும்பினரே.

## கிடங்கு அகழ்தல்

(60) வந்ததும் செய்ததும் உற்றதுங் கொண்டு மதித்துநின்று
எந்தையின் நோக்க மிதுவென நெஞ்சினி லோர்ந்தறிந்து
கந்தருக் கேற்றது ஈதென்று பக்க நிலத்தினிலே
மந்திர கூடமா யோர்கிடங் கவ்விடம் மன்னிடவே.

## குகன் பதமடைதல்

(61) உற்றவண் நின்ற உறவின ரன்பரை நோக்கியிது
முற்ற வொருவருக் காகுமோ ஆகாதோ என்றியம்பி
பற்றியே சேயோன் பதந்தனை நெஞ்சிற் பதித்தபடி
பெற்ற பெரும்பய னெய்திக் குகன்பதப் பேறடைந்தார்.

## விசுவலிங்கம் வேறுபடல்

(62) ஐம்பத்தே ழாண்டு அகவையில் அப்பர் அகன்றிடவே
சம்பத் திழந்தவர் போலடி யார்கள் தடுமாறியே
செம்பொன்னி னன்னார் திருமேனி தீயிடச் சேர்ந்தெண்ணவே
வெம்பியே நின்ற விசுவலிங் கம்மதால் வேறுபட்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதி

(63) என்னப்பன் என்னையன் சந்நாசி யப்பா திருவுடலை
மன்னாத தீயிட மாட்டாமை காரண மாட்சிசொல்ல
முன்னாக நின்றநல் முதியோர் அறிஞர் முற்றுமேற்று
அன்னா ருடலைச் பொருந்துஞ் சமாதியில் ஆக்கினரே.

## அபிஷேகம்

(64) நெல்லொடு நீற்றினை யுப்பினை யந்த நெடுங்கி டங்கில்
மெல்லவே தூர்த்த மெலிந்த வுடலை யதிலிருத்திரும்,
எல்லையில் வாசப் பொடிபனி நீரிள நீரிறைத்து
நல்ல சமாதிவைத் தவ்விடத்தேயபி ஷேகஞ் செய்தார்.

## அலங்காரம்

(65) தாரணி போற்றிடும் பந்தரிட் டேவாழை தானிறுத்தி
ஆரணங் கூறு மமைதியில் ஆண்டே யலம்பி யெங்கும்
தோரணத் தோடுநல் மாலைகள் தூக்கியே தோதுசெய்து
பூரண கும்பமும் வைத்து விளக்கும் புரிய விட்டார்.

## பூசை / நிவேதனம்

(66) முப்பழம் வெற்றிலை தேங்காய் முழுதும் பரவிவைத்தே
செப்பிடும் தூபமும் தீபமும் காட்டித் துகளின்றியே
உப்பிட்ட அந்தச் சமாதியின் மேலொரு கல்லமைத்து
ஒப்பின்றிப் பூசையும் செய்தனர் யாரும் உவந்திடவே.

## வேல் பிரதிட்டை

(67) நாள்பதி னாறு நடந்திட நாட்டிய சமாதியிலே
கோள்களி னால்வரும் குற்றங் குறைகள் குறைந்திடவே
நாளொரு மூன்றினி லுத்திர நன்னாள் நாடிவர
வாழ்வடி வேலினைத் தாபித்தார் போற்றினர் வளர்கவென்றே.

## முதற்குடமுழுக்கு

(68) பாலிள நீர்தயிர் பலவாச நற்பொடி பாவியுற
வாலிய நற்குட கும்பநன் னீரைநனி யன்பொடவ்
வேலின துச்சியில் வேதவிதிப்படி விட்டாட்டினார்
பாரியா ரோடு பெரியர்பண் பாடப் பதிதனிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசை

(69) விளக்கினை யேற்றி விரிவெள்ளை கட்டி விசித்திரமாய்
முழக்கிட மங்கலம் தூபதீபங்கள் முழுதுங் காட்டிப்
பழத்துடன் வெற்றிலை பாலமு தோடு பலகாரங்கள்
வளத்துடன் வைத்துறப் பூசைக ளாற்றினார் வாழ்வதற்கே.

## வேலாயுதர் அப்பா I

(70) அருண கிரிநாத சிவசுப்ர மணியர் திருக்கோயிலாம்
பொருண யந்திட ப்போற்றிடு மந்தநற் பொற்கோயிலைத்
தருண மதிலப்பர் தமையன்வே லாயுதர் சந்நாசியாய்
அருண வுதித்தவா றேபோல வேயுதித் தரங்கேற்றினார்.

## II

(71) முன்னவர் செய்தமுறையே யடைந்திரந் தார்கட்கெல்லாம்
சென்னியில் நீறிட்டுத் தெய்வம் பராவியே தீர்த்துவந்தார்
தன்னிக ரில்லதாம் காரைக்காற் சிவனின் கோயிலிலும்
நன்னயப் பூசை நடந்திடச் செய்து நயந்திருந்தார்.

## III

(72) காரைக்காற் சிவன்கோயில் காலந் தொறுஞ்செய் மகோற்சவத்தை
வாரமாய்ப் பூசை யுடன்பல வாண்டு வரைபுரிந்தும்
சேருஞ் சிலகாலம் செய்ய முடியாமல் தீரவிட்டார்
ஊருக்கு ஊறு விளையுமென்றேங்கி யொதுங்கிநின்றார்.

## வேலாயுதர் ஆட்சி

(73) அக்காரைக்காலிற் கொடித்தம்பம் தன்னையே அங்கிருந்தே
இக்காலை மஞ்சத் தடியில் அருண கிரிக் கோயிலில்
தக்கதாய் நாட்டிக் கொடியேற்றி யிருபத் தைந்துவிழா
ஒக்கவே பல்லாண் டியற்றி யிறையடி யெய்தினரே.

## ஆறுமுகம் ஆட்சி

(74) தந்தைகா ரைக்கால் மயானத்தில் சமாதியுற அவர்தம்
மைந்தனா மாறுமுகனாரும் மஞ்சத் தடியமர்ந்து
முந்தை முறைப்படி கோயிலை நன்முறை யேநடத்தி
எந்தை யிணையடி சேரக்கா ரைக்காலில் சமாதிசெய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் புகழ்

(75) எத்திறம் போற்றிலும் அந்திறம் வாழும் இணுவைநல்லூர்
இத்திற மாகவே முக்காலம் எல்லாம் முழு துலகில்
சித்திர மஞ்சத்தால் சந்நாசி யாரால் சிறப்படைந்து
மத்திமா மலையாகிப் புகழால் விளங்குமிம் மாநிலத்தே.

## போற்றுதல்

(76) சிவசத்த ராகிய பெரியசந் நாசியார் பேரடியைத்
தவசித்த ராகிய இணுவையில் மக்கள்தம் தலைசுமந்து
பவமத்த மாகப் பலதுன்ப நீங்கிப் பவித்திரராய்
சுவசத்த ராயன்று மின்றுமே வாழ்விற் சிறப்படைவார்.

## தளர்விலை

(77) நெஞ்சாரப் போற்றி நினைந்தடி யேத்தியே நேராகவே
அஞ்சாது மஞ்சத் தடிசென்று அப்பன் அடியமர்ந்து
எஞ்சாது நின்று இருந்தடி பேணி இருந்தந்நிலம்
தஞ்சாக வீழ்ந்து தனிநிலம் கும்பிடின் தளர்விலையே.

## அறநிலைப் பள்ளி ஆசிரியர்

(78) அறநிலைப் பள்ளியிற் சேர்ந்து படித்து அதன்பயனால்
திறநிலை யுற்றிடும் மாணவர் பெற்றோர் அனைவருக்கும்
கறவையும் கன்று மெனவூட்டிக் கற்பிக்கும் கல்வியில்வல்
முறையுறை யாசிரி யர்க்குமெம் அம்மை முகந்தருண்மே.

## உரைத்தேன்

(79) இன்றுபோ லினிவருங் காலத்தி லெம்மவர் தாமறிய
நன்றிசேர் சந்நாசி யார்வர லாற்றை நடுவில் நின்றே
என்றுமே நின்றிட இனிய விருத்தத்தா லிங்குரைத்தேன்
ஒன்றியே சிவகாமி யன்னையை யுள்ளத்தி லேற்றிவைத்தே.

## அறநெறிப் பாடசாலை

(80) செந்தமிழ் சைவம் சிறந்திடப் பிள்ளைகள் சேர்ந்திடவே
வந்தனை யோடு அறநெறிவைகும் வளம்பெருக்கி
இந்த இணுவில் சிவகாமி வாயில் எழுந்துயர்ந்தோர்
சிந்தைபோல் பாட சாலையை வாழ்த்துவோம் செழிக்க நன்றே!

முதுபெரும்புலவர் கலாபூஷணம்

**வை.க.சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவை தந்த தவயோகி

இணுவில் என்ற ஊர்ப்பெயர் இணையிலி என முன்னாளில் வழங்கியதென எமது முன்னோர் கூறினர். இவ்வூரில் சமயம், வழிபாடு, கல்வி, கலாசாரம், மருத்துவம், மாந்திரீகம், இசை, நடனம், நாடகம், தவில், நாதஸ்வரம் ஆகியவையெல்லாம் இங்குள்ள இல்லங்களில் சாதாரணமாய் வளர்க்கப்படும் கலைகளாகும். இணுவையம்பதியில் காலத்துக்குக்காலம் வாழ்ந்த சமயப் பெரியார்களுள் பெரிய சந்நியாசியார் ஒரு பெரும் சித்தர். புகழ்பூத்த இப்பெரியாரின் இயற்பெயர் சுப்பிரமணியம். இவர் இணுவையூரை அருளாட்சி செய்த காலத்தில் உருவாக்கப் பெற்றதே சிற்பக்கலையின் திரண்ட வடிவமான இணுவை மஞ்சம்.

இம்மஞ்சம் பெரிய சந்நியாசியாரின் அருளாணைப்படி உருவாக்கப் பெற்று, உலகப் புகழீட்டியுள்ளது. இவரது தெய்வீக ஆற்றலுக்கு வசப்படாதோர் இவ்வூரில் எவரும் இல்லை. அவருள் காசிநாதர் என்ற இயற்பெயருடைய சன்னாசிக்கந்தர், பெரிய சந்நியாசியாரைக் கண்கண்ட தெய்வமென நம்பி வாழ்ந்தவர்.

விவசாயத்தை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட காசிநாதர் வேளாண் மரபிலே சோமநாதர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தமது தோட்ட வேலை முடிந்ததும் பெரிய சந்நியாசியாரிடம் செல்வதும் அவரின் ஏவல்களைச் செய்வதுமே பெரும்பேறெனக் கருதினார். கந்தப்பர் மூலம் ஓர் ஆண்மகவைப் பெற விரும்பிய சந்நியாசியார் இவ்வூரைச் சேர்ந்த சின்னக்குட்டி என்பவரைக் கந்தப்பருக்கு வாழ்க்கைத் துணைவியாகத் திருமணம் செய்து வைத்தார்.

இல்லற வாழ்விற் புகுந்த கந்தப்பர் - சின்னக்குட்டியார் குடும்பத்தினர் செல்விருந்தோம்பி, வருவிருந்து காத்திருக்கும் பண்பினர். அவர்களது மங்கல வாழ்வின் பேறாய் அடுத்து அடுத்து ஐந்து பெண்கள் பிறந்தனர். அவர்களின் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவரின் ஆசியினால் ஓர் ஆண்மகவைச் சின்னக்குட்டியார் பிரசவித்தார். கந்தப்பருக்கு ஆனந்தம் பொங்கியது. உள்ளம் கிளுகிளுத்த கந்தப்பர் சந்நியாசியாரிடம் ஓடிச்சென்றார். "என்ன கந்தரே! முருகன் பிறந்துவிட்டான். அவனுக்கு 'வடிவேல்' என்று பெயர்வை" எனச் சொல்லிக் கந்தப்பரை வாழ்த்தினார்.

கந்தப்பரின் குடும்பத்தில் ஆறாவதாய்ப் பிறந்த தவக் கொழுந்தை எல்லோரும் அன்புடன் சீராட்டினர். தெய்வக் குழந்தை குறுகுறு நடந்து விளையாடும்போது கந்தப்பர் உள்ளம் பூரிப்பார். தமது செல்வச் சிறுவனைத் தரையில் விடாது தான் செல்லும் இடமெங்கும் கந்தப்பர் தூக்கிச் செல்வார்.

ஒருநாள் ஒன்பது வயதான தமது மகனைத் தோளில் சுமந்து கொண்டு மருதனார்மடம் காய்கறிச் சந்தைக்குக் கந்தப்பர் சென்றார். அங்கு அரையில் வெள்ளை வேட்டியும் தலைப் பாகையும் அணிந்து கொண்டு நீண்ட வெண்தாடி காற்றில் அசைய அவ்விடத்தில் உள்ளோருடன் பெரியவர் ஒருவர் உரையாடுவதைக் கந்தப்பர் கண்டார்.

உடனே தோளிலிருந்து மகனைக் கீழே இறக்கிவிட்டார். சிறுவன் அப்பெரியவரிடம் ஓடிச்சென்றான். சிறுவனைக் கண்ட பெரியவர் திருப்புகழ் ஒன்றைத் தாளம்கொட்டிப் பாடியவண்ணம் ஆனந்தக்கூத்து ஆடினார். அவரை அங்கலாய்த்துப் பார்த்தான் சிறுவன். பெரியவரின் கோல நடனத்தைக் கண்ட சிறுவன் அவர் யாரெனத் தந்தையிடம் கேட்டான். "அவர், கொழும்புத்துறை யோகர்சுவாமி" என்றார் கந்தப்பர்.முதல் சந்திப்பிலேயே யோகர்சுவாமிகளின் நயனதீட்சையை வடிவேல் பெற்றுவிட்டான். உள்ளக் களிப்புடன் அவரது அருகே சென்றான். அவனது கையைப்பிடித்தார் யோகர் சுவாமிகள்

"நீ என்ன செய்கிறாய்?"
"நான் படிக்கிறேன்"
"பள்ளிப்படிப்புடன் கந்தர்மடத்திலுள்ள வேதாந்த மடத்துக்குச் சென்று சமய சாத்திரம் படி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து இருவரும் பேசிக் களிப்புற்றனர். வடிவேல் பள்ளிப் படிப்பை ஆறாம் வகுப்புடன் நிறுத்திக்கொண்டார். ஓய்வுநேரங்களில் தமிழ் இலக்கண, இலக்கியங்களையும் புராண இதிகாசங்களையும் தக்காரிடம் கற்றார்.

ஏழ்மைக் குடும்பத்தில் உதவியின்றித் தந்தையார் இடர்ப் படுவதை இளைஞர் வடிவேல் அவதானித்தார். பரமானந்தவல்லி அம்பாளுக்குக் காலை, மாலைவேளைகளில் தந்தையார் செய்யும் பூசைப்பணிகளைத் தாம் செய்வதாக வடிவேல் ஏற்றுக்கொண்டார். இளைஞர் வடிவேல் செய்யும் பூசையும் திருமுறை ஓதும் குரல் இனிமையும் அடியார்களின் செவிகளைக் குளிர்வித்தன.

காலையில் அம்பாளின் திருத்தொண்டை முடித்ததும் அண்மையிலுள்ள சேதர்ச்சட்டம்பியார் முதலான ஆசிரியர்களிடம் சென்று வடிவேல் பாடம் கேட்பார். பின்பு கந்தர்மடத்து வேதாந்த மடம் என வழங்கும் சிவகுருநாதபீடத்துக்குச் செல்வார். அங்கே குருமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த மகாதேவசுவாமிகளிடம் சமய சாஸ்திரங்களை முறையாகக் கற்றார். இவர் வேல்விருத்தம் எனும் பதிகத்தை இணுவைக் கந்தன் மீது பாடியுள்ளார்.

கற்றல், கேட்டல்களில் வல்லவரான வடிவேல் தலையில் பின் குடுமியும், கழுத்தில் உருத்திராக்க மாலையும் அணிந்து சிவனடியார் வடிவில் காணப்பட்டார். அவரது தோற்றப் பொலிவைக் கண்டோர் அனைவரும் அவரைச் "சுவாமி" என அழைக்கத் தொடங்கிவிட்டனர். அவர் மடத்தில் தங்கிநிற்கும் வேளையில் அங்கு நடைபெறும் பூசைமுறைகளை நன்கு கவனித்தார்.

வடிவேற்சுவாமி மடத்தின் நடைமுறைகளைப் பார்த்த பழக்கத்தால் இணுவில் பரமானந்தவல்லி அம்பாளின் பூசைமுறையை அதேபாணியில் செய்யலானார். பக்திபூர்வமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பூசை செய்யும் பாங்கைப் பார்த்தவர்கள் பரவசமுற்றனர். வழிபடுவோர் தொகை கூடத் தொடங்கியது. கந்தப்பர் கட்டிய தென்னங்கீற்றுக் கொட்டில் போதாதென உணரப்பட்டதால் அதனைச் சிறிதளவு பெரிதாக்க வடிவேல் சுவாமி உளங் கொண்டார்.

அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு ஊரவர்களும் ஏனைய அடியார்களும் உதவிக்கரம் நீட்டினர். கோயில் சிறிதளவு பெரிதாகச் சீமந்துக் கட்டடமாக மாற்றம் பெற்றது. உருவம் பொறித்த பரமானந்தவல்லி அம்பாளைக் கருவறையிலும் ஏனைய பிரகாரத் தெய்வங்களை அவற்றுக்கென அமைத்த மாடங்களிலும் சாதுக்கள், ஞானிகள், துறவிகள், சித்தர்கள் முதலானோர் வந்திருந்து தமிழழில் நிகழ்த்திய வேத பாராயணத்துடன் அட்டபந்தனமும் குடமுழுக்கும் பக்தி பூர்வமாகப் புரிந்து புதியமுறையிற் பிரதிஷ்டை செய்து வைத்தனர். அவர்களின் கைராசி ஆலயத்தை மேலும் புதுப் பொலிவுடன் விளங்கச் செய்தமை நன்றியுடன் நினைவுகூரத் தக்கது.

வடிவேல் சுவாமிகள் தமது தந்தையார் ஆலயம் அமைத்து அம்பிகைக்கு இருவேளை பூசை செய்து வந்ததைப் போல் தாமும் செய்தார். அத்தெய்வீகப்பணி இடையீடின்றித் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்றும் சுவாமிகள் பேரவாக் கொண்டார்.

நாளடைவில் அவரது மனதிலே புதிய மாற்றம் தென்பட்டது. அவர் தமது பணிகளைக் குடும்ப வட்டத்துக்குள் முடக்கிக் கொள்ளவில்லை. அதை விரிவுபடுத்த எண்ணினார். அதனால் சைவ ஆலயங்களுக்குச் சென்று சமயப் பிரசங்கங்கள் செய்தார். இசைக் கலைஞர்கள் அணிசெய்யப் புராணக் கதைகளை இனிமைசொட்ட அவர் பேசும்பொழுது கேட்போர் மனதிற் பக்தியும் பரவசமும் உண்டாகும். அவரது பிரசங்கங்களுள் காரைக்கால் அம்மையார், நந்தனார் சரித்திரம் போன்றன மிகப் பிரசித்தமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் தேவாரத் திருமுறைகளைப் பண்ணிசைவுடன் பாடுவதில் பெரிதும் வல்லவர். அதனால் அளவெட்டி சதானந்த வித்தியாசாலையில் வார இறுதிநாட்களிலே பண்ணிசை ஆசிரியராகப் பதினைந்து ஆண்டுகள் பணியாற்றினார். அத்துடன் நின்றுவிடாமல் பல சமூகப்பணிகளிலும் தலையிட்டு அவற்றில் வெற்றிகண்ட பெருமையும் அவருக்கு உண்டு.

வடிவேல் சுவாமிகள் சிவனடியார்களை உபசரிப்பதில் மிகுந்த ஆர்வமுடையவர். நயினாதீவுச் சுவாமி என வழங்கும் நயினை முத்துச் சுவாமிகள் எமது காலப்பகுதியில் வாழ்ந்த ஒரு சித்தர். அவர் வடிவேல் சுவாமிகளின் சிறுகுடிலுக்கு அடிக்கடி வந்து தங்கிச் செல்வார். அவர் வந்து தங்கும் நாட்களில் அமைதி நாடிக் காரைக்கால் சிவன்கோயிலுக்குச் செல்வது வழக்கம். அவ்விடம் சனநடமாட்டம் இன்றி, இடிபாடுகளுடன் கூடிய கட்டடங்களைப் பார்த்து வருத்தப்படுவார். ஆயினும், வானுறவுயர்ந்து நிற்கும் மரங்கள் அவரது உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும். இயற்கை கொஞ்சும் மரநிழல்களின் கீழிருந்து அடியார்களுக்கு அரிய விடயங்களைச் சொல்லி அகமகிழ்வார்.

நயினை முத்துச்சுவாமி காரைக்காலுக்குச் சென்றுவந்த காலப் பகுதியில் அவ்வாலயம் பூசையின்றிப் பல காலமாய் இருந்தமை சுவாமிகளுக்கு மனவேதனையைக் கொடுத்தது. அதனை வெளிப் படுத்தும் வகையில் வடிவேல் சுவாமிகளைப் பார்த்து

"எட மேனை, இந்தக் கோயில் பூட்டப்பட்டு நெடுநாட்களாகி விட்டது, அப்படித்தானே?" என்றார்.

"சுவாமி, இதன் பூசையைத் தொடக்குவோமா?" என்றார் வடிவேல்சுவாமி.

"கொஞ்சம்பொறு, உரிய காலம் வரும்பொழுது சொல்லுவேன்" என்றார் நயினாதீவுச் சித்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் அடியார் கூட்டத்துடன் நயினைக்குருமணி
"வடிவேல்! காரைக்கால் பூசையைத் தொடக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. அதற்கான ஆயத்தங்களைச் செய்" என்று அறிவுரை கூறினார்.

சுவாமிகள் சொன்ன கணப்பொழுதில் வேண்டிய ஏற்பாடுகள் தொடங்கப்பெற்றன. அடுத்துவந்த நவராத்திரி விழா முதல் நாளிலிருந்து இணுவிலைப் பிறந்தகமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தவனம் அம்பலவாணர் என்ற வீரசைவப் பெரியாரைப் பூசகராக நியமித்து நித்தியபூசை நடைபெற ஒழுங்கு செய்யப்பெற்றது.

நவராத்திரி ஆரம்ப நாளன்று ஏறத்தாழப் பதினைந்து ஆண்டு ஒலிக்காத அசையாமணி "கணீர் கணீர்"எனக் காலையில் ஒலித்தது. அடியார்கள் "அரோகரா" என்று குரல் எழுப்பப் பூட்டியிருந்த கதவுகள் திறக்கப்பெற்றன. கூடிநின்றோர் சிவநாமம் செப்பினர். கருவறையில் உளிகொண்டு தீட்டியிருந்த சிவலிங்கப் பெருமானையும் வெளியில் இருந்த பஞ்ச லிங்கத்தையும் சிவனடியார் கூட்டம் மெய்மறந்து தொழுது அன்றிலிருந்து அக்கோயிற் பூசை ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

தவத்திரு வடிவேல் சுவாமிகளின் பொதுப்பணி குடும்ப வட்டத்துக்குள் மாத்திரம் அடங்கியிருக்காமல் புதுக்குடியேற்றப் பிரதேசமான வன்னி மாவட்டத்துக்கும் பரவவேண்டுமெனக் கொழும்புத்துறை யோககுருநாதன் விரும்பினார். அவர் தமது விருப்பத்தைத் தெரிவிப்பதற்கு வடிவேல் சுவாமிகளை ஒருநாள் நேரில் சந்தித்தார். "உமக்கு கிளிநொச்சியில் நிறைய வேலை இருக்கிறது. அங்கு போம் காணும்" என்றார் யோகர்சுவாமிகள். குருநாதன் கட்டளையை மறுக்காத வடிவேல் சுவாமிகள் மௌனமாய் நின்றார். அவரது மௌனம் சம்மதத்துக்கு அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை யோகர்சுவாமிகள் உணர்ந்து கொண்டார். "சரி நான் போய்வருகிறேன்" எனச் சொல்லிவிட்டு யோகர்சுவாமிகள் அப்பாற் சென்றார்.

யோகர்சுவாமிகளின் அறிவுறுத்தலைக் கருத்துக்கெடுத்த வடிவேல் சுவாமிகள் கிளிநொச்சிக்குச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்ய ஆயத்தமானார். காட்டுப் பிரதேசத்தில் ஒருபோதும் கால் வைத்தறியாத சுவாமிகள் அங்குள்ள மேடு பள்ளங்களில் ஏறியிறங்கினார். காட்டுவிலங்குகளின் உறுமலும் பிளிறலும் கர்ச்சனையும் கேட்டுக் கிலிகொள்ளாது இறைநாமம் செபித்தார்.

உருத்திரபுரத்திலிருந்த பழைய சிவாலயத்தின் இடிபாடுகளையும் சிதைவுகளையும் கண்டு வருத்தமுற்றார். ஆயினும் சிதைவுகளுக்கிடையே சிவலிங்கத்தின் மேற்பாகம் கண்டெடுக்கப்பட்டமை அறிந்து அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

மேலும் பழைய சிவாலயத்தைப் புனரமைப்புச் செய்வதற்குத் தம்மாலான முயற்சிகளைச் செய்து வழிகாட்டினார். புதிய கோயிலை அமைத்து, நித்திய பூசை நிகழ்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வித்தார்.

இன்றும் சுவாமிகளின் சேவை கிளிநொச்சியில் நிலைக்க வேண்டும் என்று விரும்பினார். அதனால் ஜெயந்தி நகரிலே தமது தீட்சாகுருவை நினைவுகூர்ந்து மகாதேவ ஆச்சிரமம் என்ற பெயரில் ஒரு தவச்சாலையை நிறுவினார். இந்நிறுவனத்தின் மூலம் பன்முகப்பட்ட தொண்டுகளைச் செய்தார். தாழ்வுற்று வறுமை மிஞ்சிய மக்கள்மீது சுவாமிகள் கருணை கொண்டவர். பாமரமக்கள் பிற மதபோதனையில் அகப்பட்டு அல்லற்படாது இருத்தற்பொருட்டு அவர்களைத் தம்மிடம் அழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் அவர்களுக்கு வேண்டிய நல்லுரை வழங்கி நன்னெறிப்படுத்தியதால் உண்மைச் சமயத்தின் உயர்வை அவர்கள் அறியலாயினர்.

காலத்தின் தேவையறிந்து கிளிநொச்சிப் பிரதேசத்தில் கால் பதித்து சுவாமிகள் அம்மண்ணுக்கு ஆற்றிய சேவை அளப்பரிது. இராமர் செல்லும் இடமெல்லாம் அயோத்தியாய் விளங்கியது போல் தவத்திரு வடிவேல் சுவாமிகள் சென்ற இடமெல்லாம் மண்வளம் செழித்தது. சைவம் தழைத்தது. மக்கள் நல்வாழ்வு வாழ வாய்ப்புக் கிட்டியது. சுருங்கக்கூறின், கிளிநொச்சிப் புதுக்குடியேற்ற மங்களுக்கு வடிவேல் சுவாமிகள் ஒரு கலங்கரை விளக்காக விளங்கினார்.

தன்னலமின்றிப் பொதுப்பணியாற்றியவர் தவத்திரு வடிவேல் சுவாமிகள். அவர் இயற்கைப் பெரும்பேறெய்தியஞான்று சுவாமிகளின் பொன்னுடலைக் கிளிநொச்சி மண் தாங்கிவைத்திருக்கும் பேறு பெற்றுள்ளது.

தவயோகியாய் வாழ்ந்த வடிவேல் சுவாமிகள் மக்கள் தொண்டின் மூலம் இறையருள் பெற்றவர். இணுவை தந்த இத்தவ யோகி மக்கள் நெஞ்சங்களில் என்றும் வாழ்வார்.

**சோ.பரமசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு இணுவில் சச்சிதானந்த சுவாமிகள்

எல்லாம்வல்ல இணுவில் சிவகாமி அம்பாளின் மீளா அடிமையும் இத்திருக்கோவிலின் அண்மையில் வசித்தவருமான சின்னத்தம்பிச் சட்டம்பியார் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் அன்னை சிவகாமியை நாளிலும் பொழுதிலும் வேண்டியமையினால் 1924 ஆம் ஆண்டு இவரின் ஏகபுத்திரராக அவதரித்தவர் பேராயிரம் உடையார் என்னும் தவப்புதல்வன்.

இவர் தந்தையின் இறைபக்தியின் வழிவந்ததால் இவரும் அன்னை சிவகாமியின் மீளா அடிமையானார். சிறுவயதிலிருந்தே சிவகாமி அம்பாளின் திருக்கோயிலுக்குச் சென்று கோயிற் தொண்டுகள் செய்து வந்தார். இவரது பத்து வயதில் தந்தையார் மறுமையெய்தினார். இதனால் இவர் பாடசாலைக்குச் செல்லாது கோயிற் திருத்தொண்டுகள் செய்வதிலும், கந்தர்மடத்திலுள்ள வேதாந்த மடத்துக்குச் செல்வதிலும், நண்பர்களுடன் சேர்ந்து குப்பிழானில் வசித்த மாணிக்கம் அம்மாவின் ஆச்சிரமம் செல்வதிலும், ஆன்மீகச் சொற்பொழிவுகள் கேட்பதிலும் பொழுதுபோக்கியதோடு தாம் வணங்கி வந்த சிவகாமி அம்மன் கோவிலில் இரவில் துயில்கொண்டும் வருவார்.

ஒருநாள் இரவு இவரது தாய்மாமனாரான சீனிவாசகம் என்பவர் இவர் பாடசாலைக்குச் செல்லாமல் வீண்பொழுது போக்குகிறாரென்று இவரை அடித்து "நீ பாடசாலைக்குப் போ. அல்லது ஏதாவது வேலைக்குப்போய் ஏதும் சம்பாதி! வீணாக ஊர் சுற்ற வேண்டாம் என்று கூறி மீண்டும் அடித்தார். அடி வாங்கியதும் அழுதுகொண்டு ஓடிப்போய் அம்பாளின் சந்நிதானத்தில் விழுந்து அன்னையை நோக்கி "அம்மா ஊரார் என்னை அடிக்கவா என்னைச் சின்னத்தம்பிக்குக் கொடுத்தாய்?" என்று கதறினார். அம்பாளின் திருவருட்பார்வையால் கவலை தீர்ந்து எழுந்து நேராகத் தன் தாயாரிடம் சென்று "அம்மா என்னை ஒருமுறை பார்த்துவிடு. இப்போது பார்க்கும் கண்களால் நீ என்னைக் காணமாட்டாய்" என்றபோது, தாயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்மீது ஏற்கனவே இருந்த வெறுப்பினால் "நீ எப்படியாகிலும் போ" என்று கூறினார். தாயாரின் சொற்களை ஆசீர்வாதமாக எண்ணிய இவர் வேதாந்த மடத்துக்குச் சென்றார். சில நாட்கள் அங்கு தங்கியிருந்தபோது இவரது உறவினர் இவரை வேதாந்த மடத்திலிருந்து அழைத்துக்கொண்டு போய்க் கொழும்பில் கடையில் வேலைசெய்யுமாறு உறவினரொருவரின் கடையில் விட்டுவிட்டு வந்தனர்.

இவர் வேலையில் நாட்டமில்லாது சில நாட்களில் யாருமறியாமல் அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் வேதாந்தமட முதல்வர் மகாதேவா சுவாமிகளிடம் தஞ்சமடைந்தார். அவரும் இவரை ஆதரித்துத் தங்கவைத்தார். இக்காலத்தில் இவரது முக்கியமான வேலை மடத்திலுள்ள சமயலறையில் சட்டி, பானை கழுவுதலும், மடத்தில் சிறிய தொண்டுகள் செய்தலுமாகும். இந்த வேதாந்த மடத்தில் நாளாந்தம் வேதாந்தச் சொற்பொழிவுகள் நடைபெறும். ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றும் இந்நிகழ்வில் இவர் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. இருந்தும் குருவுக்குத் தன்னை அர்ப்பணித்து இட்ட வேலைகளையே செய்து வந்தார். சில வருடங்கள் செல்ல இவரது பதினாறாம் வயதில் இவரது மனப்பக்குவ நிலையை உணர்ந்த குரு இவருக்குக் குருவுபதேசம் செய்து இரு நிபந்தனைகளை விதித்தார். அந்த நிபந்தனைப்படி ஆறுவருட காலம் இவர் கௌபீனதாரியாக வீடுதோறும் சென்று பிச்சையேற்று வாழ்வதும், இரவுவேளைகளில் இல்லறத்தார் வீடுகளில் தங்காது சுடலை மடத்திலோ, கோவில் மடத்திலோ தங்கவேண்டும் என்பதுமாகும். குருவின் வாக்கை ஏற்று ஆறுவருடகாலம் கழியும்வரை குருவின் நிபந்தனை மீறாது வாழ்ந்தார்.

குறிப்பிட்ட ஆறுவருடங்கள் முடிவடைந்ததும் ஒரு நாள் யாழ் கச்சேரி வீதியால் செல்லும்போது ஓர் அடியார் இவரைத் தன்வீட்டுக்கு அழைத்துப்போய் இவரது தலைக்கு நன்றாக எண்ணெய் தேய்த்து, நீராட்டிப் புத்ததாடை அணிவித்து நல்ல அறுசுவை உணவு பரிமாறினார். இதுகண்ட அவர் "இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுபற்றியது? ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டார். தனக்கு ஒரு பெரியார் கனவில் தோன்றி "எனது பிள்ளை ஆறு வருடமாகத் தலைக்கு எண்ணெய் தண்ணீர் இல்லாது கஷ்டமடைகிறார். அவரை நன்கு ஆதரி" என்று சொன்னார். என்றதும், இவர் ஓடிப்போய்க் குருவின் பாதங்களில் விழுந்து வணங்கினார். இவரது முகத்தில் தவஒளியையும் சிறந்த தவசீலருக்குரிய அழகையும் கண்ட குருதேவர் இவரைக் கட்டியணைத்துச் "சச்சிதானந்தம்" என்ற ஞானப்பெயர் சூட்டியதுடன் தொடர்ந்து சென்று ஒருகோடி மக்களுக்குக் குருவாக இருப்பாய் என்றும் ஆசீர்வதித்தார்.

சச்சிதானந்தம் என்ற தவப்பெயருடன் இடுப்பில் மடித்துக் கட்டிய நாலுமுழ வேட்டியோடு தலையிலுள்ள உச்சிக் குடுமியைச் சால்வைத் துண்டினால் சுற்றிக்கட்டிய கோலத்தில் ஏதிலியாகத் தென்மராட்சியில் தவவாழ்வு மேற்கொண்டார். இவர் பொதுமக்களுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகுவதோடு நல்லுபதேசமும் செய்து தவசீலராக வாழ்ந்ததால் அனேக அடியார்கள் இவர்பால் ஈர்க்கப்பெற்றனர். இவர்களது பக்குவ நிலை அறிந்து சிலரைச் சீடர்களாக ஏற்றுக்கொண்டார். ஒரு சமயம் மட்டுவில் அம்மன் கோவிலைச் சேர்ந்த அறங்காவலரான செல்லத்துரை என்பவர் இவரிடம் குருவுபதேசம் பெற்றபின் இவரின் மனைவி செல்லம்மா என்பவரும் குருவுபதேசம் பெற்ற பின் குடும்பவாழ்வில் நாட்டமில்லாதபோது இக்குடும்பம் பிரிந்தது.

சச்சிதானந்தம் சுவாமிகள் தென்மராட்சிப் பகுதியில் பல பகுதிகளுக்கும் சென்று தங்கித் தவவாழ்வு வாழ்ந்ததுடன் தம்மை அணுகிவரும் அடியார்களுக்கு நல்லுரைகளும் நற்போதனைகளும் செய்து அனேக சீடர்களைத் தேர்ந்தெடுத்தார். 1958 ஆம் ஆண்டில் செல்லம்மா அம்மையாரின் சகோதரியினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கைதடியைச் சேர்ந்த காணியில் இவரது முதன்மைச் சீடரான வைத்தியர் வ.சின்னப்புவின் ஊக்கத்தில் மற்றுஞ் சீடர்களினால் சுவாமிகளின் தரிப்பிட வசதிக்காக ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவக்குடில் அமைக்கப்பட்டது. இத்தவக்குடிலில் சச்சிதானந்த சுவாமிகள் தவவாழ்க்கை வாழ்ந்து வந்தார். இதேசமயம் இவரது வேறொரு சீடரான செல்லம்மா அம்மையாரும் இத்தவக்குடிலில் வாழ்ந்து சுவாமிகளுக்குப் பணிவிடை செய்துவந்தார். சுவாமிகள் தனது ஆவியானது உடலைவிட்டு 1960 ஆம் ஆண்டு தை மாதம் பிரியுமென மூன்று மாதங்களுக்கு முன்னரே தனது சீடர்களுக்குத் தெரிவித்தார்.

இவரது முத்திநிலை பற்றியறிந்த சீடர்கள் சமாதி எங்கு அமையும் என்று கேட்டபோது, கைதடியில் நடைபெறாது அனேக அடியார்கள் கூடிவாழும் பகுதியிலுள்ள சுடலையில் நடைபெறுமெனவும் கூறினார். அத்துடன் செல்லம்மா அம்மையாரின் பாதுகாப்பு, தவக்குடிலான ஆச்சிரமத்தின் எதிர்கால நிலை பற்றிச் சீடர்களுக்குக் கூறினார். 1960 ஆம் ஆண்டு சமாதியடைய மூன்று நாட்களுக்கு முன் இவருக்குக் கொடிய வயிற்றோட்ட நோய் பீடித்தது.

இவர் சிகிச்சைக்காக யாழ்நகரிலுள்ள தனியார் மருத்துவ மனைக்கு அழைத்துச்செல்லப்பட்டார். இறுதி நாளன்று செல்லம்மா அம்மையாரும கூட இருந்த சமயம் சச்சிதானந்தம் சுவாமிகள் எழுந்து கட்டிலில் பத்மாசனம் போட்டு இருந்து கொண்டு சுவரில் சாய்ந்து யோகநிலையில் இருந்தபோது செல்லம்மா அம்மையார் தனது எதிர்காலம் பற்றி வருந்தினார். "நான் சிறிது நேரத்தில் உடம்பை விட்டுச் சென்றாலும் உனக்குப் பாதுகாப்பாக இருப்பேன்" என்று கூறினார். பின் சிறிது நேரம் சென்றதும் அம்மையாரை நோக்கி "அம்மா எனது நேரம் வந்துவிட்டது" என்றும் கர்ப்பூரத்தைக் கொளுத்தும்படியும் அம்மையாரை உருத்திராட்ச மாலையை அணியுமாறும் கூறியதும் உயிர் உடம்பை விட்டகன்றது.

இவரது பூதவுடலைக் கைதடியில் அடக்கம் செய்யச் சென்றபோது எதிர்ப்புக் கிளம்பியதால் சீடர்கள் இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியில் வந்து விபரங்களைத் தெரிவித்தனர். இவரது உறவினர் பலர் முன்வந்து காரைக்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடலையில் இவரைச் சமாதி வைத்தனர். 1960 ஆம் ஆண்டு தைமாதம் புனர்பூச நட்சத்திரம் சுவாமிகள் சமாதியடைந்த பெருநாளாகும். இவரது சமாதியில் சிறந்ததோர் கட்டடத்தை அமைத்து வருடாவருடம் இதே நட்சத்திரத்தில் காலையில் அபிஷேகம் செய்து பொங்கிப் படைத்துப் பூசை வழிபாடுகளும் இவரது சீடர்களினால் நல்ல பயபக்தியுடன் செய்யப்படுகின்றன. பின் அவரது தவக்குடிலில் விசேட பூசையும் பஜனையும் சொற்பொழிவுகளும் நடைபெற்று மகேஸ்வர பூசையும் நடைபெற்றுவருகின்றது. இவரது சீடர்களும் ஓர் அறங்காவற் குழுவை அமைத்துத் தவக்குடில் இருந்த இடத்தில் ஒரு பெரிய மண்டபமும் அமைத்துள்ளனர்.

இணுவிலில் பிறந்து தந்தையின் ஈமச்சடங்குப்பணி முடித்த பின் துறவியான பேராயிரம் உடையார் என்பவர் வேதாந்த மடத்தில் மகாதேவ சுவாமிகளிடம் ஞானதீட்சையும் குருவுபதேசமும் பெற்றுச் சச்சிதானந்தர் என்ற பெயரில் தவசீலராகித் தவஒளி வீசக் கைதடியில் தவவாழ்வில் ஆத்மீக ஞானஒளி பரப்பி அத்வைத ஞானகுருபீடத்தைத் தாபித்து இன்றும் தவஒளி வீசிக்கொண்டு விவேக முத்தியடைந்த சுவாமிகள் ஆனார்.

செல்லம்மா அம்மையாரைக் குருபீடத் தலைமையாக வைத்துக் குருவின் சீடர்கள் அடங்கிய அறங்காவல் குழு அமைந்து, அம்மையாரின் விடாமுயற்சியாலும் சீடரான மணியம் சுவாமிகளின் அரும் துணையாலும் 1967 ஆம் ஆண்டில் மடமும், கிணறும், சுற்றுமதிலும் அமைக்கப் பூரணப்பட்டன. 1967 ஆம் ஆண்டு தைமாதம் புனர்பூச நட்சத்திரமான சுவாமிகளின் குருபூசைத் தினத்தன்று இதே மடத்தில் மகேஸ்வர பூசையும் நடத்திச் சிறப்பித்தது அறங்காவற்குழு.

1983 ஆம் ஆண்டு இறுதியில் கைதடியில் பிறந்து கொழும்பில் வர்த்தகஞ் செய்து நிலைகுலைந்து சச்சிதானந்த குருபீடம் வந்து அம்மையாரின் அருட்கடாட்சத்தால் மீண்டும் தொழில்வளம் கொண்டு இம்மடத்தின் மீளா அடிமையாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வறங்காவற்குழுவை வழிநடாத்துபவர் திரு.இ.குழந்தைவடிவேலு ஆவார். கைதடியைச் சேர்ந்த ஆ.கந்தையா. வைத்தியர் வ.சின்னப்பு, சுப்பிரமணியம் போன்ற பல சீடர்களின் உதவியுடன் 1996 ஆம் ஆண்டிலிருந்து சச்சிதானந்த குருபீடத்தில் நம்பிக்கை வைத்து பல முன்னேற்றங்களும் மன அமைதியும் கொண்ட திரு.கு.கங்கைவேணியன் (வேணி களஞ்சியம், யாழ்நகர்) அவர்கள் திறந்த மனத்துடன் ஏற்ற பணிகள் செய்து குருபீடத்தை யாவரும் மெச்சக்கூடிய வகையில் செயற்படுத்துகின்றார்.

இக்குருபீடத்தில் பாலர் பாடசாலை அமைத்துப் பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வி புகட்டுகின்றனர். இந்தப் பாலர் பாடசாலை ஆசிரியை திருமதி அன்னபூரணி குகதாசன் அவர்கள் பாலர் கல்விப்பணி மட்டுமல்லாது குருபீடத்தின் பல முக்கியமான பணிகளையும் தானே செய்கிறார். சச்சிதானந்த பிரசுராலயம் ஒன்று ஆரம்பித்து. அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை ஏழைச் சிறுவர்களும். திக்கற்றவர்களும் அனுபவிக்கும்படி செய்துவருகின்றனர். சச்சிதானந்த குருபீடத்திலிருந்த மடம் தியான மண்டபமாகப் புதிதாக வடிவமைக்கப்பட்டு 09.02.1998 அன்று கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. இம்மண்டபம் மிகப் பிரமாண்டமானதும் கலையம்சம் கொண்டதுமான சிறப்புடையது. ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளின் கைதடி ஆச்சிரமத்தில் நித்தியபூசையானது அன்பர்களின் அன்பளிப்பால் வேதனம் கொடுத்துத் தொடர்ந்து பராமரிக்கப்படுகின்றது. இதனால் கைதடி மக்கள் ஆன்மலாபமும். கௌரவமும் பெறுகின்றனர்.

அன்னை சிவகாமியின் அருளால் இளமையிலேயே மெய்ப்பொருள் நாடித் தவசீலராகத் தென்மராட்சிப் பகுதியில் தனது தவவலிமையால் பலரைத் தன்பால் ஈர்த்துக் கைதடியில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து காட்டிய சச்சிதானந்தரின் பூதவுடன் பிறந்த மண்ணிலே சமாதிவைக்கப்பட்டதன் காரணமாகச் சுவாமிகள் இன்றும் கைதடிக்கும் இணுவிலுக்கும் தவ ஒளியைப் பரப்பிக் கொண்டிருப்பது இவ்வூர் மக்களின் தவப்பேறாகும்.

மு.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் சின்னத்தம்பிப் புலவர்

இணுவைப் பேரூரில் வாழ்ந்த உயர்குடியிலுள்ள சிதம்பரநாதன் என்பவரின் புதல்வராகத் தோன்றியவர் கதிர்காமசேகரமானா முதலியார் என இயற்பெயர் கொண்ட சின்னத்தம்பிப் புலவர்.

இவரின் முற்பிறப்புத் தவம் தொடர்பாக இவர் நற்கல்வி கற்றுத் தமிழ் இலக்கண இலக்கியத்திற் சிறந்து விளங்கினார். இவர் இயல்பாகவே கவிபாடும் ஆற்றலைத் தமது இளமையிலிருந்தே வெளிப்படுத்தினார். தமது குலதெய்வமான சிவகாமி அம்பாள் மீது மிகுந்த பக்தி இருந்ததால் கவிபாடும் ஆற்றலை அன்னையவள் இவருக்குக் கொடுத்தாள். அம்பாள் மீது கவிபாடி மகிழ்ந்தார். இதனால் யாவரும் இவரைச் சின்னத்தம்பிப்புலவர் என அழைத்தனர். இப்பெயர் இவரது கவிபாடும் திறமையால் இவரிடம் நிலைத்துவிட்டது.

இவர் ஒல்லாந்தர் ஆட்சியில் தோம்பு எழுதும் பணியில் ஈடுபட்டார். யாரோ கொடுத்த பொய்த்தகவல் காரணமாக இவர் ஒல்லாந்தரின் சிறையில் அடைக்கப்பட்டார். தமது மனவேதனையால் அன்னை சிவகாமியை வேண்டிப் பாடித் தம் துயர்நீக்கும்படி வேண்டினார்.

முதலில் கருணாகரப்பிள்ளையாரையும் தொடர்ந்து அன்னை சிவகாமி அம்பாளையும் துதித்துப் பாடினார். அடுத்த பாடலில் தமது கஷ்டமான நிலைமையைக் கூறிய புலவர் "இதுவரை என்னை ஆதரித்து அருளிய அன்னையே இக்கொடிய சிறையிலிருந்து விடுவிப்பாய்" என்று ஏழாவது பாட்டில் மனமுருகினார். ஏழாவது பாட்டில்,

"தூர்ப்பூட்டுமென்றனது துள்ளார்தம் சிறைப்படுத்தும்
அப்பூட்டும் தீயவர் தம் அரியசிறை வீட்டிருக்கும்
இப்பூட்டும் தீர்ப்பூட்டயென் சிறையை நீக்கியருள்
செப்பூட்டுந் திருப்பெயற்றாட் சிவகாம சுந்தரியே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடியதும் புலவர் அடைக்கப் பட்டிருந்த சிறைக் கதவு திறந்தது. இதனையறிந்த அதிகாரி விரைந்து வந்து புலவரை வணங்கிச் சிறையிலிருந்து விடுவித்தான்.

புலவரது எட்டாவது பாடலினால் புலவருக்குச் சதிசெய்தவன் சிறையிலடைக்கப்பட்டான். புலவர் மிகுதி இரு பாடல்களையும் பாடிச் சிறைநீக்கிய பதிகத்தை நிறைவுசெய்தார். அன்னை சிவகாமியின் அருளாலும் சின்னத்தம்பிப்புலவரின் பக்தியுடன் கூடிய புலமையாலும் அன்னை சிவகாமியின் புதுமையும் புலவரின் கல்விப்புகழும் தரணி எங்கும் பரவின.

சின்னத்தம்பிப் புலவர் இணுவைச் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ் என்னும் நூலில் சிறைநீக்கிய படலம், சிவகாமியம்மை துதி, சிவகாமியம்மை திருவூஞ்சல் என்னும் நான்கு பகுதிகளையும் மிக இனிமையாகப் பாடியுள்ளார். புலவர் மேலும் பஞ்சவர்ணத் தூது, நொண்டி நாடகம், கோவலன் நாடகம் என்னும் நூல்களையும் எழுதியுள்ளார். இவரால் எழுதப்பட்ட நாடகங்கள் இவ்வூர்க் கலைஞர்களால் மேடையேற்றப்பட்டதுடன் மட்டக்களப்புக் கலா மன்றத்தாலும் இவரது நூல்கள் வெளியிடப் பட்டன.

இவர் இயற்கையாகவே தமக்கு நேரும் கஷ்டங்களுக் கெல்லாம் தமது குலதெய்வமாகிய இணுவில் சிவகாமியம்மனை அன்புருகப் பாடி விடிவுகண்டுள்ளார். அக்காலத்தில் போதிய வசதிகளற்றபோதும் கூடிய பக்தியாய்ப் பாடி நற்பலன் பெற்ற சின்னத்தம்பிப் புலவரின் புலமையால் இணுவில் திருவூர் பெருமையடைவதும் அன்னை சிவகாமியின் அருள்வளமே.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.அம்பலவாணர் (காரைக்கால் சாமியார்)



இவர் இணுவில் கந்தசுவாமி கோயில் அறங்காவலர் குழந்தையர் வேலாயுதர் மரபு வழி வந்த அ.கதிரித்தம்பி என்பவரின் ஏக புத்திரராக வந்து அவதரித்தவர். இவரது இளம் பராயத்தில் தந்தையார் மறுமையெய்தியதால் இவரது கல்வியும் இடைநிறுத்தப்பட்டது. இவரது தந்தையாரின் நிலபுலங்களைப் பராமரிப்பதிலும் தாயாருக்கு உதவுவதிலும் இவரது பொழுது போயிற்று. இவர் ஓய்வுநேரங்களில் தமது ஆவினங்களை அழைத்துச் சென்று காரைக்கால் பகுதியில் மேய்ப்பார்.

காரைக்கால் விசாலாட்சி சமேத விஸ்வநாதப்பெருமான் திருக்கோயில் ஒரு தெய்வீகம் நிறைந்த புனிதபூமியாதலால் ஞான அறிவுள்ள பெரியார்களான நயினாதீவு முத்துச்சாமியார், வடிவேற் சாமியார், யோகர்சுவாமிகள் போன்ற பல தவசீலர்கள் அடிக்கடி இங்கு வந்து கூடி ஆனந்தப் பெருவெள்ளத்தில் மூழ்குவது வழக்கம். இவர்களுடன் கொக்குவிலைச் சேர்ந்த வைத்தியர் திரு.நடராசா அவர்களும் தமது ஞானப்பசி தீர்க்க வருவது வழக்கம். மேற்குறிப்பிட்ட பெரியார்களின் இதயத்திற் குடிகொண்ட விசுவநாதப் பெருமானின் சித்தப்படி இவர்கள் இத்திருக்கோயிலை அபிவிருத்தி செய்வதுடன் தவறாது பூசைகள் செய்து வழிபட்டு இவ்விடத்தின் தெய்வீகத்தை மெருகூட்ட எண்ணியதுண்டு.

இதே சிந்தனையில் துயில்கொண்ட வைத்தியர் நடராசா அவர்களின் கனவில் சிறிய உருவமுடைய இளைஞரின் தோற்றம் ஒன்று தென்பட்டது. இவ்விளைஞனைப் பற்றி ஆராயவிருந்தவரின் எண்ணம் கைகூடும் நேரம் வந்ததால் இணுவிலைச் சேர்ந்தவரும் நெட்டிலைப்பாயைப் புகுந்த இடமாகக் கொண்டு அங்கு வசித்தவருமான இளையவர் செல்லப்பா என்பவர் வழமைபோல உரையாடுவதற்காகத் தமது உற்ற நண்பராகிய வைத்தியர் நடராசாவிடம் சென்றார். தமது உரையாடலின்போது காரைக்காலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவில் தோன்றிய அந்த இளைஞரைப் பற்றிகூறி, அவ்விளைஞரைத் தேடிப்பிடித்து அழைத்து வரும்படி அன்புக் கட்டளை விடுத்தார். காரைக்கால் அயலில் விவசாயஞ் செய்த இ.செல்லப்பா என்பவர் குறிப்பிட்ட அம்பலவாணருடன் உரையாடியதுடன் வைத்தியரிடமும் அழைத்துச் சென்றார். தெய்வீக அருளால் கனவில் தோன்றிய இளைஞரை நேரில் கண்ட வைத்தியர் புளகாங்கிதமடைந்து அம்பலவாணருக்கு நல்லுபதேசம் செய்து ஆலய அபிவிருத்தியைப் பரிபாலிக்கும் பொறுப்பையும் ஏற்குமாறு பரிந்து பேசினார். அம்பலவாணர் இறைவன் சித்தப்படி மனநிறைவுடன் சம்மதம் கொடுத்தார். இவருக்கு வைத்தியர் நடராசா அவர்கள் குருவுபதேசஞ் செய்து ஞானமார்க்கம், சித்தவைத்தியம், விஷகடிவைத்தியம், மாந்திரீகம், சோதிடம் யாவற்றையும் நன்கு புகட்டினார்.

ஒரு குறித்த காலத்தில் திரு.அம்பலவாணர் அவர்கள் விஸ்வநாதப்பெருமான் திருக்கோயில் பொறுப்பையும் ஏற்று சித்த வைத்தியத்தையும் செய்யத் தொடங்கினார். கோயில் அபிவிருத்தி அடையவும், பூசைகள் யாவும் தெய்வீக அருளால் பொலிவுறவும் முற்கூறிய ஞானிகள், தவசீலர்கள் உறுதுணையாக இருந்து முன்னேற்றமடையச் செய்தனர். திரு.அம்பலவாணர் அவர்கள் தமது காலைக்கடன்களை முடித்துத் தனது ஆவினங்கள், புறாக்களுக்குத் தீனி வழங்கிவருவார். இதே காலத்தில் ஒரு குறிப்பிட்டளவு விவசாயமுஞ் செய்து தனது குலமுயற்சியைப் பெருமையுடன் செய்துவந்தார்.

கோயிலில் வீரசைவர் மரபிலுதித்தவர்கள் பூசை செய்து சிறப்புற வைத்தனர். காலைப் பூசை முடிந்ததும் தனது நற்சிந்தனையை நெறிப்படுத்தும் காரைக்கால் விசுவநாதப்பெருமான் ஆலய பரிவார மூர்த்தியும் காவல்தெய்வமுமான வைரவப்பெருமானின் கருவறையினுட் சென்று தியானத்திலிருந்த பின்பு தன்னை நாடிவந்த நோயாளருக்கும், வேறு குறைகளைப் போக்க வந்தோருக்கும் திருநீறிட்டு மணிமந்திர செபஞ்செய்வார். பின்பே நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்குவார். நோயாளிகளிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியபணம் கேட்கமாட்டார். நோயாளிகள் தமது விருப்பப்படி இயன்றதைக் கொடுப்பர். நாட்டின் எப்பகுதியிலிருந்தும் பெரிய வைத்தியசாலைகளினால் குணமாக்க முடியாதெனக் கைவிட்ட நோயாளிகளை மணிமந்திரம், விபூதி, கிரகசாந்தி, பெல்லிசூனியக் கழிப்பு ஆகியவற்றால் சுகமடையச் செய்தார். நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்தும் வரும் விஷகடிபட்டவர் களைத் தகுந்த முறையில் பராமரித்தார். சுவாமிகள் கருடனை மந்திரத்தால் வரவழைத்து ஆகாயத்திற் கருடன் வட்டமிட்டுச் செல்லவும் தீராத விஷகடியும் சுகமடைந்தன.

இவர் பெல்லிசூனியத்தால் தாக்கமடைந்தோரை அயலிலுள்ள காரைக்கால் மயானத்தில் பறைமேளம், உடுக்கு, சங்கு, சேமக்கலம் ஆகிய இசைக்கருவிகளுடன் அழைத்துச் சென்று தானும் அவரவருக் கேற்ற வகையில் தேவதைகளுக்கு வேண்டிய பலியும் கொடுத்துச் சுகமாக்கிவிட்டார். கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மனேநோயாளிகளைத் "துலங்கு" என்னும் மரக்குற்றிகளில் கால், கைகளுக்கு விலங்கிட்டு "நையம்" எனும் புகையும் அடித்துத் தலைக்குத் தேசிக்காய் நூற்றுக் கணக்கில் தேய்ப்பதுடன் வேறுசில வைத்தியமுறைகளையும் கையாண்டு சுகப்படுத்தினார். தூர இடங்களிலிருப்பவர்களும் தமது குறைபாடுகளைச் சொல்லுமிடத்து அவர்களது வீடுகளுக்குச் சென்று கிரகசாந்தி, ஹோமம், தூபம், காவல்கள் செய்து நற்பலனடையச் செய்தார். கிணறுகள், வீடுகளுக்குச் சிறப்பான நிலையம் எடுத்துக் கொடுத்து மேம்படுத்தினார்.

இவரது தெய்வீகம் மணிமந்திரம் சேர்ந்த வைத்தியம் உடற் பிணி, உளப்பிணியகற்றுவது நாளடைவில் பிரசித்தி யடைந்தது. தினம் நூற்றுக்கு மேற்பட்டோர் இவரைத் தரிசித்துச் சுகமடைய வருவர். தூர இடங்களிலிருந்து வருவோர் தங்கி நோய்தீர்க்க வசதிகளாக மடங்களும், சிறுகுடிசைகளும் அமைத்துக் கொடுத்து வசதி செய்தார். இவரை நாடிவந்து சுகம்கண்ட பலரும் திருக்கோயில் அபிவிருத்திக்கெனப் பெருநிதி வழங்கினர். இதனால் இத்திருக்கோயில், பல திருப்பணிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேறிப் பொலிவும் தெய்வீகமும் மென்மேலும் அடைந்தது. இவரது காலத்தில் வீரசைவர் சின்னத்துரை ஐயர் நெடுங்காலம் பூசை செய்தார். அவரது சேவை மிகவும் உறுதுணையாக இருந்தது.

பெரிய சந்நியாசியாரினால் இப்பதியில் நாட்டப்பட்ட 1008 பயன்தரு மரங்கள் காரைக்கால் சாமியாரினால் நன்கு பராமரிக்கப்பட்டன. கோயில் அபிவிருத்தி கண்டதால் கொடியேற்றமும் மகோற்சவமும் வெகுசிறப்படைய இறையருள் இவரை ஒரு கருவியாகப் பாவித்தது. சீரும் சிறப்பும் மிக்க இவர் பெருமை விரும்பாதவர். சடைமுடியும் தாடியும் வேட்டி சால்வையும் இவரது அணிகளாகும். எவருடனும் மிக அன்னியோன்னியமாகப் பழகுவார். பொதுமக்கள் எவரும் இவருடன் மிக விசுவாசமாகவும் நேசமாகவும் வாழ்ந்தனர். இவரது சேவையை மெச்சாதவர்களில்லை.

கடைசிக்காலத்தில் இவர் உடல்நிலை பாதித்து முத்தியெய்தியபோது இவரது திருவுடல் சமாதிக் கோலத்தில் பூக்களான தேரில் இவரது இல்லத்திலிருந்து காரைக்கால் பகுதிக்கு திருமுறை ஓதலுடன் பவனிவரும்போது, வீதிமருங்கில் எல்லா வீடுகளிலும் மகர தோரணம் நிறைகுடம் வைத்துக் கர்ப்பூரச்சுடரேற்றி மலர்தூவி மாலை போட்டு வணங்கினர். காரைக்கால் சிவன்கோயில் மேற்குப் புறத்தே தனியான காணியில் இவரது சமாதி வைக்கப்பட்டது. அப்போது பல்லாயிரக் கணக்கானோர் கூடித் தங்கள் பற்றினை வெளிக்காட்டியும் திருமுறைகள் ஓதியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் பெருமைப் பட்டனர்.

காரைக்கால் சுவாமியாரின் குரு சித்தவைத்தியர் நடராசா அவர்களின் சமாதியும் இத்திருக்கோயிலின் தென்பகுதியில் அவரின் சொந்த நிலத்தில் அமைந்ததால் சாமியார் அடிக்கடி குருவின் சமாதிக்குச் சென்றுவருவார். குருவின் அடக்கதினமான "அவிட்டம்" என்னும் நட்சத்திரத் தினத்தன்று மாதந்தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானஞ் செய்துவந்தார். வெள்ளிக்கிழமை தோறும் காரைக்கால் சாமியாரின் அபிமானியும் ஆன்மீகவாதியுமான சித்தர் செல்லர் என்பவரால் மாலையில் கோயில் பூசை முடிந்ததும் குழைசாதம் வழங்கப்பட்டது. இத்திருக்கோயிலின் மகோற்சவ காலங்களிலும் சிறப்பாக அன்னதானஞ் செய்து வயிற்றுப்பசி நீக்கியதன் மூலம் விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமான் ஆலயத்தில் அன்னதானத்தை அறிமுகப்படுத்திய பெருமை காரைக்கால் அம்பலவாணரையே சாரும். இவர் சமாதியடைந்தது 1979 ஆம் ஆண்டு தைப்பூசத் தினமாகும்.

சாமியாரின் காலத்தில் சிறப்படைந்த அன்னதானம் வழமை போல மகோற்சவ காலத்தில் நடாத்தும் பெருமை இவ்வூரில் வாழும் இத்திருக்கோயில் அன்னதானச் சபையினரைச் சாரும். இத்திருப்பணி வேலைகளும் அவர் விட்ட குறைகள் தொட்ட குறைகளும் பிற பல முன்னேற்றங்கள் யாவும் காரைக்கால் சாமியாரின் தவவலிமையால் இவ்வூர் மக்களால் தொடர்ந்துஞ் செய்யப்படுகின்றது. காரைக்கால் சாமியார் என்ற தவசீலரின் பேரருளால் யாவும் நல்லபடி நடக்க எல்லாம்வல்ல விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமானைப் போற்றுவோம்.


"ஈசனடி போற்றி யெந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி"

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை அருள்வாக்குரைக்கும் சாத்திரம்மா



இணுவில் சிவகாமி அம்பாளின் அருளாட்சியில் அவருக்குப் பண்பான திருத்தொண்டுகள் செய்வதற்கென்றே இணுவில் வேளாண் மரபிலுதித்தவர் கற்பகம் என்னும் பெருமாட்டி. இவர் சிவகாமி அம்பாள் மீது மிக்க அன்பு பூண்டு வழிபட்டு வந்தபோது அன்னை சிவகாமி இவரைத் தன் கலை கொண்டு திருவாக்குச் செய்விக்கச் சித்தங்கொண்ட காரணத்தால் இவர் திருவாக்குச் சொல்லி வந்தார். ஆரம்பத்தில் திருவாக்குச் சொல்வதில் பணமேதும் பெறுவதில்லை. காலப் போக்கில் அம்பாளின் திருப்பணி நிதியாக ஒரு பணம் (ஆறு சதம்) பெற்று வந்தார். அன்னையின் அருள்வாக்கினால் சேரும் பணத்தில் கோவில் திருப்பணிகள் செய்யத் தொடங்கினார். வயோதிப நிலை காரணமாக திருவாக்குச் சொல்லும் வாய்ப்பும் குறைந்தது.

இவரது இளைய புதல்வியான திருமதி நன்னித்தம்பி சிவகாமசுந்தரி என்பவரைத் திருவாக்குச் சொல்லுமாறு அன்னை உருவேற்றினார். இவரது கணவன் திரு.நன்னித்தம்பி என்பவர் நன்கு படித்தவர். வைத்தியம், விவசாயம், மற்றும் சகல வேலைகளிலும் விற்பன்னராக விளங்கினார். இவர் சமயபக்தியில் மிக்கவர். ஆன்மீகத்துறையில் கூடிய விருப்பிருந்ததால் தனது அரிய பத்தினி சிவகாமசுந்தரியை அன்னை சிவகாமியின் பணியில் ஈடுபட அனுமதியளித்தார்.

சிவகாமசுந்தரி என்பவர் ஏறக்குறைய 1930 ஆம் ஆண்டளவில் திருவாக்குச் சொல்லத் தலைப்பட்டார். இவரது திருவாக்கினால் திருப்தியடைந்த ஊர்மக்கள் இவர்பால் ஈர்க்கப்பட்டனர். அயலூர்களிலிருந்தும் மக்கள் இவரிடம் வந்து திருவாக்குக் கேட்டு அதன்படியொழுகி நற்பயனடைந்தனர். வருபவர்கள் சிவகாமி அம்பாளின் கோவில் திருப்பணிக்கென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுதொகைப் பணத்தையும் கொடுத்தார்கள். இவர் திருவாக்குச் சொல்வதைச் சாத்திரம் சொல்வதாகக் கருதிய பொதுமக்கள் இவரை அன்புடன் சாத்திரம்மா, அம்மா என்று அழைத்தனர். அன்னை சிவகாமியின் அருளால் அம்பாளின் கருவறையைக் கருங்கல்லினால் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை இவருக்கு மேன்மேலும் திருப்பணி நிதி சிறிது சிறிதாகச் சேரத்தொடங்கியது.

அன்னை சிவகாமியின் சூரன், சிங்க வாகனங்கள் செய்வதற்காகப் பிடியரிசி எடுத்துவந்த பரமர் தலைமையில் இயங்கிய தொண்டர்குழு தாம் பிடியரிசி எடுப்பதை நிறுத்தி விட்டனர். சாத்திரம்மா தானாக வீடுதோறும் சென்று அம்பாளின் திருப்பணி செய்வதற்காகப் பிடியரிசி சேர்க்க வருவதாகச் சொல்லி நாளாந்த உணவிற்காக உலையில் போடும் அரிசியில் ஒரு கைப்பிடி அரிசியை எடுத்து நாள்தோறும் சேமித்துத் தருமாறு கேட்டார். அம்பாளின் பக்தைகளான இல்லத்தரசிகள் வாரமொருமுறை வரும் அம்மாவிடம் சேர்த்த அரிசியுடன் சிறுதொகைப் பணத்தையும் கொடுத்து அவரை அன்புடன் ஆதரித்து வந்தனர். பொது மக்களிடமிருந்து சேரும் பணம், அரிசி, மற்றும் பொருட்களை வாரந்தோறும் அயலிலிருந்த பெரியார் சிவக்கொழுந்து என்பவரை அழைத்துவந்து கணக்கிட்டுப் பதிந்து வருவார். இவ்வாறு பல வருடங்களாகச் சேகரித்த பணத்தில் அன்னை சிவகாமியின் கோவில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஐந்து தளம் கொண்ட வானுயர் கோபுரம், மணிமண்டபம் யாவும் இவரால் சிறந்த கருங்கற்கள் மற்றும் வைரக்கற்களினால் கனவுறுதியான வேலைப்பாடாகக் கட்டி முடிக்கப்பட்டவை. 1974 ஆம் ஆண்டு பஞ்சதளக்கோபுரம் பூர்த்தியாகி கோவில் குடமுழுக்காட்டப்பட்டது. தொடர்ந்து 1984 ஆம் ஆண்டு வரை இவர் தமது திருப்பணி வேலைகளைத் தள்ளாத வயதிலும் தான் ஒருத்தியாக நின்று சிறுகச் சேர்த்த நிதியில் பெருகக்கட்டிக் கோயில் திருப்பணியை நிறைவேற்றினார்.

இவர் அம்பாளின் கோவிலுக்கு வருவோருக்கு இடையூறு செய்யாது பின் வீதியிலுள்ள மாணிக்கவைரவர், பத்திரகாளி அம்மன் கோவிலில் திருவாக்குச் சொல்லிவந்த காரணத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோவிலையும் முழுமையாக நல்ல வைரக் கற்களினால் திறம்படக் கட்டிமுடித்துக் கும்பாபிஷேகமும் செய்வித்தார். இறுதியாக வைரவர் கோவிலுக்கான மடைப்பள்ளியையும் கட்டுவித்தார்.

வருடாவருடம் கோடைகாலத்தில் அனேகமாகப் பங்குனி, சித்திரை மாதங்களில் வீசும் அனற்காற்றினால் பரவும் தொற்று நோய்களின் தாக்கம் பொதுமக்களைத் துன்புறுத்தியது. இந் நோய்களைத் தடுக்குமாறு அன்னை சிவகாமிக்குக் குளிர்த்தி செய்ய இவர் முற்பட்டார். இதற்கெனப் பொதுமக்கள் அரிசி, காய்கறிவகை, பழவகை, பால், தயிர், இளநீர், பூசனிக் காய் என்பவற்றை வழங்குவர். வெளிவாசலில் பெரிய கிடாரங்களில் அரிசி காய்கறிகளை வேகவைத்து அதனுடன் பால், தயிர், தேங்காய்ப் பால், பழவகை, பலகாரவகை யாவற்றையும் கலந்து வைத்து விட்டு நாலு வீதிகளிலும் நீற்றுப்பூசனிக்காய், இளநீர், காய்கறி வகைகளைப் படைத்துப் படைத்து அவற்றை வெட்டி நாற்புறமும் வீசியெறிந்து கர்ப்பூரம் கொளுத்தி உருவேறிய நிலையில் இவர் அன்னை சிவகாமியை நினைந்து பாடல்கள் பாடிவர, பறைமேளம், சங்கு, சேமக்கலம் ஆகியன முழங்கப் பெரிய ஆரவாரத்துடன் வீதியுலா முடிவுற்றதும் கோவிலில் நிற்கும் அனைத்து அடியார்களுக்கும் கஞ்சி பரிமாறப்படும். இதன்பின் அன்னை சிவகாமியின் அருளால் இத்தொற்று நோய்களின் வெம்மையால் மக்கள் பாதிக்கப்படுவதில்லை.

அம்மையார் மாலை நேரங்களில் அயலிலுள்ள படித்தவர்களை ஒன்றுகூட்டி வந்து புராணபடனம் படிக்க வைப்பார். நாள்தோறும் இதற்கு வேண்டிய இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் போன்ற பல புத்தகங்களையும் வைத்துப் படிக்கும் பலகை யாவற்றையும் தானே கொடுத்து வெளிச்சத்துக்காக அரிக்கன் லாம்பும் கொளுத்திவிட்டுத் தாமும் இருந்து வாசிப்பதைக் கேட்டு அதையிட்டு விமர்சனமும் செய்வார். இடையில் படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் தாகம் தீரத் தாமே வீட்டில் தேநீர் தயாரித்து வந்து பரிமாறுவார். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்வாய்ப்பட்டு முதிய நிலையில் மறுமையெய்திய பின் புராணபடனம் செய்வதும் இடைநிறுத்தப்பட்டது. இப்போது இப் பணி செய்வதற்கு எவரும் முன்வருவதில்லை.

சாத்திரம்மா போன்ற அரிய சேவை செய்து தொண்டு மனப்பான்மையுடன் பல முன்னேற்றங்களையும் இவ்வூர்க் கோவில்களிற் செய்து சிறப்பித்து இப்பேரூரின் சிறப்பையும் நன்மதிப்பையும் பெருக்கிய பல அருளாளர்கள் வாழ்ந்த இம் மண் ஆண்டுகள் பல சென்றாலும் அவர்களின் அரிய பணிகளை நினைவுகூர இவ்வூர்த் தெய்வங்களின் அருள் எங்களுக்குத் தொடர்ந்து கிடைக்கட்டும். இவர்கள் அனைவரும் தமது தன்னலமற்ற சேவையால் தெய்வமானார்கள்.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரிணுவைத் திருவூரில் வந்து நடமாடிய அருளாளர்கள்

இயற்கையான தெய்வீகமும் இசையும் நிறைந்த சூழலில், தவசீலர்களும் அருளாளர்களும் இறைவனை நாடித்திரியும் அவாவில் கரும்பின் சுவை காணும் எறும்புகள் போல வந்து இறைவனை ஏகாந்தநிலையில் தரிசிப்பதில் வியப்பில்லை.

இவ்வூர் மக்களும் ஆசாரசீலரான எவருடனும் பண்பாகப் பழகி, இன்சொல்லுடன் வரவேற்று, விருந்தோம்பி நாளும் இங்கு வந்து செல்லும் அருள்வள்ளல்களை அரவணைத்தனர். வந்து செல்லும் அருளாளர்களும் தம்மை ஆதரிக்கும் இறை பக்தியாளர் களின் ஆத்ம திருப்திக்காக நல்ல அருளுரைகளை வழங்கியும், தம் உளப்பசிக்காக இங்குள்ள புனிதத் தலங்களெல்லாஞ் சென்று தங்கித் தெய்வ சக்தியை அனுபவித்தும் வந்தனர். அத்துடன் எதிர்ப்படும் பக்தர்களுக்கு நிகழவிருக்கும் நன்மை, தீமைகளையிட்டு முன்கூட்டியே உணர்த்திப் நற்பலனுக்காக அதன்படி ஒழுகவைத்து இன்பங் கண்டவர்கள்.

வெளியூர்களிலிருந்து வந்த அருளாளர்களில் நயினாதீவைச் சேர்ந்த முத்துச்சாமி என்பவர் அடிக்கடி இவ்வூர்த் தவசீலரான வடிவேற் சுவாமி, சின்னத்தம்பிச் சட்டம்பியார் போன்றவர்கள் வசிக்கும் பரமானந்தவல்லி அம்மன் கோயில், சிவகாமி அம்மன் கோயில், காரைக்கால் சிவன் கோயில் போன்ற இடங்களில் தங்கியும் இவர்களுடனும் வேறு சிலருடனும் காரைக்காலில் பல அற்புதங்களை வெளிப்படுத்தினர். சமகாலத்தில் வாழ்ந்தவர்களான யோகர்சுவாமிகளும் இவர்களுடன் வந்து காரைக்காலின் தெய்வீக மகிமைகளைக் கூறியும் எதிர்காலத்தில் வடதிசையில் தவக்குடில் அமையும் என்று கூறியும் காரைக்காலில் (அம்பலவாணச் சுவாமிகள்) ஒரு தவசீலன் வந்து இத்தலத்தை அபிவிருத்தி செய்வான் என்றும் இப்பகுதி புனிமாகப் பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு ஆலயம் சிறப்புற வேண்டுமெனவும் தவசிலரான வடிவேற்சுவாமிகள், பெரிய சந்நியாசியார் போன்றவர்களுடன் உரையாடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்கால் சிவன் ஆலயம் பல நூறு வருடங்களுக்கு முன் சிறப்புற இருந்ததாகவும் பிற்காலத்தில் சனநடமாட்டம் அருகி நாளடைவில் மரங்கள், செடி கொடிகள் வளர்ந்து பற்றையாகி ஒரே மண்மேடாக இருந்ததாகவும் கூறிப் பெரிய சந்நியாசியார் தம்முடன் கூடவந்த பக்தர்களாகிய பணியாட்களை ஏவி அவ்விடத்தைச் சுத்தஞ் செய்யுமாறு அருளுரை பகர்ந்தார். பணியாட்கள் பெரியவரின் ஏவலின்படி அவ்விடத்தைச் சுத்தஞ் செய்யச் சென்ற போது கொடிய விசப்பாம்புகள் வந்து சீறித் துரத்தினவாம். அவர்கள் சந்நியாசியாரிடம் வந்து நடந்ததைக் கூறியதும் அவர் தனது ஞான உணர்வினால் அறிந்தபின் பணியாளரை நோக்கி இப்பகுதியை இரு வாரம் செல்லத் துப்புரவாக்கலாம் எனக் கூறியனுப்பினார். இவரது வேண்டுதலாலும் இறைவனின் கருணையாலும் காவல் காத்து நின்ற விசப் பாம்புகள் படையாகத் திரண்டு அவ்விடத்திலிருந்து தொடர்ச்சியாக அகன்று வேறிடம் சென்றனவாம். இரு வாரங்களின் பின் குறிப்பிட்ட இடத்தைச் சுந்தஞ்செய்து மண்புற்றுக்கள், மேடுகளை அகற்றிப் பார்த்தபோது பெரிய உருவமான சிவலிங்கம் காணப்பட்டதாகவும் காலப்போக்கில் இச்சிவலிங்கம் மூலமூர்த்தியாக அமைந்து ஆலயம் சிறந்து யாவரும் வணங்கும் பெரும்பதியாகியது எனவும் எமது சான்றோர் பலர் கூறுவர்.

நயினாதீவுச் சுவாமிகள் கூறியதுபோல இத்தலத்தின் வடபால் தியாகராசாச் சுவாமிகள் தவக்குடில் அமைத்து வாழ்ந்ததும் யாவரும் அறிந்ததே. நயினைச் சுவாமிகள் சிவகாமியின் ஆலய அண்மையில் வாழ்ந்த சின்னத்தம்பிச் சட்டம்பியாரின் அன்பராகவும் இருந்ததால் இவரிடம் அடிக்கடி வந்து செல்வது வழக்கம். சின்னத்தம்பிச் சட்டம்பியாரின் ஏகபுதல்வன் பேராயிரமுடையார் என்பவர் தனது மிகச்சிறிய வயதில் நயினைச் சுவாமிகளுக்குப் பணிவிடை செய்தபோது சிறுவனின் செயல்களை அவதானித்த சுவாமிகள் சட்டம்பியாரை நோக்கி "இங்கைவா சின்னத்தம்பி இவன் அன்னை சிவகாமியின் அம்சமாயிருக்கிறான் ஒருகாலத்தில் பிரகாசிப்பான்" என்று கூறியிருந்தார். இக்கூற்று உண்மையாகி இச் சிறுவன் தெய்வீக நாட்டத்துடன் துறவியாகிச் சச்சிதானந்த சுவாமிகள் என்ற பெயரில் தவசீலரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேற்சுவாமிகள் தமது பெற்றோரின் குடும்பநிலை காரணமாக காங்கேசன்துறை வீதி வழியே வடக்கே சென்று தமது விவசாயக் கடமைகளை முடித்துவிட்டுத் தோளில் மண்வெட்டியுடன் வீடுநோக்கி வந்தபோது தெற்குநோக்கி மாட்டுவண்டியில் முன்சென்ற யோகர்சுவாமிகள் வடிவேலருடன் ஆன்மீக உரையாடியதுடன் வடிவேலரின் வேட்டியைக் களைந்து கௌபீனதாரியாக்கியதுடன் அவரது பக்தித் துறவுநிலையை வெளிக்காட்டினார். இதுபோன்று பல அரிய செயல்களை அறிய முடிகிறது. யோகர்சுவாமிகள் மருதனார்மடம் சந்தியிலுள்ள பல்லப்பைவைரவர் ஆலய அண்மையிலுள்ள கல்லில் அமர்ந்து இருப்பார் வேண்டியவர்களுக்குப் பல அருளுரையும் சொல்லத் தவறுவதில்லை.

கோண்டாவில் - உப்புமடம் சந்தியினண்மையில் வசித்த அம்பலவாணச் சுவாமிகள் மிகவும் பக்திமயமான தவசீலராவார். மிகவும் குறுகிய தோற்றம். இவரது சடாமுடி ஏறக்குறைய 7 அடி நீளமானது. இதை வளையமாகச் சுருட்டி தலைமேல் சூடித் தலைப்பாகையால் மூடிக்கட்டியிருப்பார். இவரது பிற்காலத்தில் காலில் மிதியடிக்கட்டையும் கையில் ஊன்று கோலும் காவியுடையும் கூடிய குறுமுனி வடிவாகக் காட்சியளிப்பார். தமது இறுதிக்காலத்தில் கூட தான் விரும்பும் பாடசாலைகள், தருமசாலைகளுக்குச் சென்று அறச்சிந்தனைகளை அருளமுதமாகப் புகட்டுவார். இவரது மெய்யடியார்கள் விரும்பும்போது தமது சடாமுடியை நீட்டித் தொங்கவிட்டுத் தியானத்தில் இருந்து அடியார்களுக்கு அருள்புரிவார். இவரும் அடிக்கடி எம்மண்ணில் உலாவிவந்து இதனைப் புனிதப்படுத்தியவர். இவரது சமாதி காரைக்கால் மயானத்தில் அமைந்தது.

கோண்டாவில் குமரகோட்டம் பகுதியைச் சேர்ந்த குடைச் சாமியார் என அழைக்கப்பட்ட கந்தையாச்சாமியார் தாடியும் விரிந்த கூந்தலும் குறுகிய உருவமும் கொண்டவர். மூப்படைந்ததாலும் இறை சிந்தனையாலும் இவர் உடல் கூனிக் குறுகியே நடப்பார். உடுப்பது நாலுமுழ வேட்டி. கையில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடை, தோளிற் சால்வை. மிகவும் அன்புடையோர் அழைத்தால் புனிதமாகக் கொடுக்கும் தேநீரை அருந்திவிட்டு "அருள் கிடைக்கும்" என்று கூறிக்கொண்டே செல்வார். யாராவது இவரிடம் நல்வாக்குப் பெறவிருந்தால் உடன் வருமாறு சைகைகாட்டுவார். இவர்களுக்கு வரப்போகும் நன்மை தீமைகளை ஓரிரு வசனத்தில் கூறிமுடித்து விடுவார். இவரை நாடி வசதிகளிலும் பதவிகளிலும் உள்ளோர், பக்குவமற்றோர் பின்தொடர்ந்தால் திரும்பிப் போகுமாறு திருப்பி விடுவார். தமது அருளால் பலருக்கு முக்கால நிகழ்வையும் கூறி அவதானமாக இருக்கும்படி உணர்த்துவார். புனிதராகவே வாழ்ந்து சமாதியடைந்தவர். இவரது நடமாடலினால் எம்மூர் சிறப்படைந்தது.

குப்பிளானைச் சேர்ந்த மாணிக்கம் அம்மா என்ற பெண் துறவி எங்களூரில் நடமாடித் தனது அருளால் அநேக பக்தர்களைச் சீடராகக் கொண்டவர். சீடர்களான சச்சிதானந்தம் சுவாமிகள், தியாகராசாச் சுவாமிகள், சங்கரலிங்கம் சுவாமிகள் போன்ற பலர் மாணிக்கம் அம்மாவின் அருளால் தாமும் அறவாழ்வும் இறை தியானமும் நிறையப் பெற்றனர். இவரின் வருகையால் எம்மூரவர் பலர் இவர்பால் ஈர்க்கப்பட்டு நற்பேறு பெற்றனர். அநேகர் கூடிய சமய அறிவையும் பெற முடிந்தது.

இந்தியாவிலிருந்து குன்றக்குடி அடிகள் போன்ற தத்துவ ஞானிகளும் தவசீலரும் இங்குவந்து எமதூரையும் புனிதமாக்கிச் சென்றனர். ஞானிகள் தவசீலர்களின் வரவால் இணுவையூர் மக்கள் மனந்தளராது ஆன்மீக நெறியில் தொடர்ந்தும் வாழ வழி கிடைத்தது.

கல்வியால், இசையால், ஞானத்தால் தம்மைப்போல் என்றும் எங்கும் எவரும் தோன்றமுடியாத வகையில் தோன்றியவர் கிருபானந்த வாரியார். அருணகிரிநாத சுவாமிகள் முருகன் அருளால் திருப்புகழைப் பாடினாலும் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் ஞானிகள், சமயகுரவர்கள், சந்தான குரவர்கள், வால்மீகி, கம்பன் போன்ற பல பெரியார்களது ஞானப்பிழிவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையிலிருந்தே கற்றதுடன் இசையுடன் சேர்த்துக் கதாப் பிரசங்கமாரி பொழிந்தார். தான் வணங்கிய வயலூர் முருகன் அருளால் பலவற்றையும் கற்றுத்தேறி யாழ் மண்ணில் 50 வருடங்களாக அடிக்கடி வந்து சமயப் பிரசங்கங்கள் செய்தார். ஒரு பாடலைப்பாடி அதற்கு 6 - 8 விதமான கருத்துக்களை மிகச் சிறப்பாகவும் விளக்கமாகவும் யாரும் எளிதில் புரியும் படியும் கூறி எம்மிணுவில் மைந்தர்களுக்கு நல்லுபதேசஞ் செய்தவர்.

இணுவையம்பதியின் இயற்கையான தெய்வீக உணர்வும் ஞானமும் மேற்கூறிய அயலூர்ப் பெருந்தகையினரின் அருள் உலா, உபதேசத்தினால் மேலும் அதிகரிக்கப்பெற்று எமது மண் மேலும் புனிதமானது.

ஆறுமுகநாவலரும் இம்மண்ணின் மகிமையறிந்து வந்து சமயமும் தமிழும் நன்கு வளரத் தனது பெருமுயற்சியால் இணுவிலில் சைவப்பிரகாச வித்தியாசாலையை அமைத்துத் தம்மைப் பின்பற்றிப் பணிசெய்யப் பலரை உருவாக்கி அவர்கள் மூலம் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையையும், பல திண்ணைப் பள்ளிகளையும் அமைக்க வகைசெய்தார். இவரது உதவியாலும் உற்சாகத்தாலும் எம்மூரவர்கள் பலர் தமிழ் ஆசிரியர், பண்டிதர், புலவர், வித்தகராகவும் வந்ததுடன் சைவத்தையும் தமிழையும் இங்கு நிலைநாட்டினர்.

ஆறுமுகநாவலரோடு இங்கு வருகை தந்த நீர்வேலிச் சிவசங்கர பண்டிதர், வேங்கடாசலம் ஐயரிடம் கற்க வருகைதந்த கோப்பாய்ச் சபாபதி நாவலர், அம்பிகைபாகரிடம் பாடங்கேட்க வந்த புன்னாலைக்கட்டுவன் மகாவித்துவான் கணேசையர், மேலும் இந்தியாவிலிருந்து வந்துசென்ற தெய்வீக இசையாளர்களான மதுரைச்சோமு, சீர்காழி கோவிந்தராஜன் முதலியோரின் காலடிகள் தீண்டப்பெற்ற சிறப்பினால் பக்திவளம் கலைவளம் கவிவளம் வாய்க்கப்பெற்றது இணுவில் திருவூர்.

**மு.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலாயுதச் சந்நியாசியார்

இவர் மஞ்சத்தடிப் பகுதியில் வசித்தவர்; இப்பகுதியில் பெரும் சித்தர் பெரிய சந்நியாசியாரின் மூத்த சகோதரர். பெரிய சந்நியாசியாரின் அரும்பணிகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்து செயலாற்றியும் அவரது தெய்வீக வாழ்க்கையைப் பின்பற்றியும் வந்தவர். பெரிய சந்நியாசியார் முத்தியடைந்ததும் அவரது சமாதிக்கருமங்களை பக்தி பூர்வமாக நிறைவு செய்தவர். பின் அயலவர் பெரிய சந்நியாசியாரின் தொண்டர்கள் சகிதம் பெரிய சந்நியாசியாரியினால் வைத்துப் பூசிக்கப்பட்ட வேலாயுதத்தை சமாதி மீது நாட்டிய பின் உரிய காலத்தில் அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலை அமைத்துச் சகல வழிபாடு களுக்கும் பொறுப்பாகவிருந்து பரிபாலித்தவர். பெரிய சந்நியாசியார் போலத்தானும் திரு நீறு போட்டுப் பார்வை பார்த்து இறைவன் அருளால் நோய் பிணிகளை அகற்றி மக்களின் துயர் துடைத்தவர். முருகன் அருளால் தன்னாலான பணிகளைச் செய்து மக்களிடம் பக்தி பூர்வமான அன்பைப் பெற்றவர். இவர் மறுமை எய்திய பின் இவரது மகன் ஆறுமுகம் என்பவர் இவர் பணியினைத் தொடர்ந்தார்.

## ஆறுமுகம் சந்நியாசியார்

இவர் வேலாயுதச் சந்நியாசியாரின் மகனாவார். தந்தைக்குப் பின் தந்தை தொடர்ந்த பணிகளைத் தாமே பொறுப்பேற்றுச் செம்மையாக நடத்தினார். இவருடைய காலத்தில் தமது தந்தையார் கட்டிய மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலை நன்கு முன்னேற்றிப் பூசை வழிபாடுகளையும் செய்வித்தார். பொதுமக்களின் நோய் பிணிகளைத் திருநீறு கொண்டு தீர்த்து வைத்தார். கிராம மக்களை வருத்தி வந்த நோய் பிணி, பேய்பிடிப்பு, பெல்லி சூனியம் ஆகியவற்றைத் தெய்வ அனுக்கிரகத்தால் தீர்த்து வைத்தார். இவருடைய காலத்தில் முக மூடியணிந்த வேடதாரிகளின் நாட்டுக்கூத்துப் பிரபலமடைந்தது. ச.தம்பையா, பொ.பரமலிங்கம், பொ.தியாகராசா (அழகர்), சின்னத்துரை (கிழவி) மற்றும் பலரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கூத்து என்ற கலை மூலம் ஆறுமுகம் சந்நியாசியாரின் திரு உலாவின் போது அணிசேர்ந்தனர். அருள்வளம் மேம்படுத்திச் சந்நியாசியார் தீராத நோய்களைத் தீர்த்து வைத்தார். இன்றும் மஞ்சத்தடி சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் அருள்செறிந்து இருப்பது எங்கள் ஊர்மக்களின் இறைநம்பிக்கையாலும் தவப்பேற்றினாலுமாகும்.

## சண்முகம் சுவாமியார்

இவர் இணுவில் மேற்கு செகராசசேகரப்பிள்ளையார் ஆலயச் சூழலில் பிறந்து வளர்ந்தவர். இளமையிலயே ஆன்மீக ஈடுபாடு கொண்டு விளங்கியவர். தமது ஆன்மீக சிந்தனையை மேலும் விருத்தி செய்ய எண்ணித் தென்னிந்தியத் திருவண்ணா மலையில் ரமண மகரிசியின் ஆச்சிரமத்தில் சேர்ந்து ரமண மகரிசியின் சீடராக இருந்து நீண்டகாலம் உபதேசப் பணியாற்றியதுடன் ஆன்மீகத்தில் சிறந்த பயிற்சியும் பெறும்பேறு பெற்றவர். இவர் ஆன்மீகத்துறையில் சிறந்து விளங்கியதால் பல மாணவர் திருக் கூட்டம் இவரைக் குருவாக ஏற்றது. சில காலத்தின் பின் இவர் இவ்வூர் வந்து இணுவில் கந்தசுவாமி கோயில் திருவூஞ்சல் மடத்தில் தங்கித் தியானம், ஜெபம் என்பவற்றில் ஈடுபட்டார். இவரிடம் பலர் சீடர்களாகிக் கற்றனர். நைஷ்டிகப்பிரமச்சாரியான இவர் ஊர்மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டு வந்தார். ஏறக்குறைய முப்பது வருடங்களுக்கு முன் இவர் சமாதியடைந்தார். இவரது சீடர்களாக விளங்கியவர்கள் இணுவில் தம்பிமுத்து, இணுவில் முதலித்தம்பி, வேலுப்பிள்ளை, தாவடி நடராசா முதலியோராவார்.

## கணபதிப்பிள்ளை சுவாமியார்.

இவர் இவ்வூரில் செராசசேகரப்பிள்ளையார் ஆலயச் சூழலில் தவக்குடில் அமைத்து வாழ்ந்தவர். பிரமச்சாரிய வாழ்வை மேற்கொண்ட இவர் தமது முழு நேரத்தையும் செகராச சேகரப்பிள்ளையார் ஆலயத்தில் திருவிளக்கேற்றி, கோயிற் தொண்டுகளையும் சிறப்பாகப் பக்திமயமாகச் செய்து வந்தார். இவர் இளஞ்சந்ததியினரும் இறைபணியிலீடுபடும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குப் பயிற்சியும் அளித்தார். இறைசிந்தனையே தனது நோக்காகக் கொண்டிருந்த போதும் நோய் பிணியால் வாடியோருக்கும் பிள்ளையார் ஆலயத்தில் திருநீறு இட்டுப் பார்வை பார்த்து அவர்களைக் குணமடையச் செய்தார். அத்துடன் இவரிடம் தமது பாரிய துன்பங்களை வெளியிடுவோருக்கு அருள்வாக்குச் சொல்லியும், பிள்ளையாரிடம் இவர்களையிட்டு பிரார்த்தனை செய்தும் விபூதி அணிவித்தவர். விநாயகரிடம் முறையிட வருவோருக்கு அவர்களின் குறைதீர்த்துத் தானகவே திருவாக்குச் சொல்லித் துன்பம் நீங்கிப் பெருவாழ்வு வாழ வைத்தவர். இவர் உயரத்தில் குறைந்தவராய்க் குறுமுனிவடிவாக வாழ்ந்து உரியகாலத்தில் சமாதியடைந்தார்.

## வை.தியாகராசாச் சுவாமியார்

சிவந்த மேனி, நெடிய தோற்றம், நல்ல சாரீர வளம், கையில் சப்ளாக்கட்டை, கனத்த சுருதியிலே ஆனந்தத் தாண்டவமாடிய நிலையில் பஜனைக்கூட்டத்தின் மத்தியிலே பக்திப் பரவசமாக இவரைக் காணலாம். திருப்புகழைப் பாடிக்குஞ் சிந்தை வலுவோடு தீட்சண்யமான கூரிய பார்வை. யாழ்ப்பாணத்தின் பக்தர் நிறைந்த கோயில்களிலே களை கட்டிய பஜனைக்கோஷ்டியின் நடுநாயகமாக தியாகராஜரைக் காணலாம்.

காரைக்காலில் இவரது குடில். சிவகாமியம்மையின் சீரிய தொண்டர். பக்திப் பரவசமான பஜனைக்குழு என்றால் இவரைத் தம் சகோதரர்கள் புடைசூழக்காணலாம் திவ்விய ஜீவனசங்கம் அமைத்துத் தியானக்கலை பரப்பியவர். திவ்விய ஜீவனராகிப் பக்தர் பலர் சூழ வாழ்ந்த இல்லறஞானி. பகவான் இராமகிருஷ்ணரும் சாரதா அம்மையும் போல அம்மாவுடன் இணைந்து காரைக்காலில் பலருக்குப் புகலிடமாய் இருந்தவர்.

சிவகாமியம்மையின் தேர்த்திருப்பணியை முன்னெடுத்தார். தலயாத்திரையுடன் கூடிய தவவாழ்வும் வாழ்ந்தவர். தன்னை அண்டியவர்களுக்கு ஆன்மீக நாட்டத்தை ஊற்றெடுக்கச் செய்தவர். பக்தராக, பக்தி வெள்ளம் பரப்புவராக, சித்தராக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவயோகியாக வாழ்ந்து வாழ்நாளின் இறுதியில் பித்தராகப் பலர் கருதுங் கோலங் கொண்டவர். நின்றும் இருந்தும் கிடந்தும் அவன் தாள் நினைத்தவர். கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசர்க்கு ஆளானவர். மிண்டு மனத்தவராக ஆவதுங்கூடுமோ? மெய்யடியார்கள் விரைந்து வம்மின் என்று அழைக்கும் பாங்கில் ஈழத்தின் புனிதத் தலங்கள் தோறும் இறைபுகழ் பாடியவர். இவரது வாழ்வின் பயன் யாராலும் அறியப்படாதது.

இவரது ஆன்மீகத்துணையாக விளங்கிய அம்மா மறைந்த பின் இவரது போக்கு விசித்திரமாக இருந்தது. இறைபுகழ், இறைசிந்தனை, இறைபணி எனத் தன் வாழ்நாளைப் பயன்படுத்திய இவரது வாழ்வு பயனுள்ளதாக அன்றி வேறாக இருக்கமுடியாதல்லவா?.

காரைக்காலில் இவர் தாம் வாழ்ந்த குடிலில் கூடு துறந்தார் சமாதிக்கோலத்தில் இவரது பூதவுடல் இருந்தது. வழியனுப்பப் பலர் அக்குடிலில் கூடினர். அத்தேகம் அசைவற்று இருந்தது. அழுகவில்லை யாரும் அழவில்லை .துர்நாற்றம் வீசவில்லை. அபிசேகம் செய்து அவர் பயணத்தை முடித்தனர். தியாகராசாச்சுவாமி எங்குற்றார்? மண்ணிற் பிறந்தவர் பெறும்பயன் மதி சூடும் அண்ணலார் நாமம் நயமுற நவில்தலே.

நாமம் சொல்லுவோம். சிவநாமஞ் சொல்லுவோம் நாமஞ் சொல்லுவோம். நமனை வெல்லுவோம். இது யோகர் சொன்னது. தியாகர் நமனை வென்றாரா? பதில்---- எமது ஆழ்ந்த அசையாத சிவபக்தியால்தான் தெளிவுறும்.

## செல்லையாச் சுவாமியார்

இவர் இணுவில் தெற்கில் வாழ்ந்தவர். இவர் ஓர் இல்லற ஞானி. சமய பக்தியும் ஒழுக்கமும் பண்பாடும் மிக்கவர். அடியார்களிடம் நல்ல அன்புடையவர். இணுவில் பரராசசேகரப் பிள்ளையார், இணுவில் கந்தசுவாமியார் ஆகிய தெய்வங்களின் மீளா அடிமையானவர். இக்கோயில்களில் சு.குமாரசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடன் சேர்ந்து பஜனை பாடியதுடன் தன் இல்லறத்திலும் இனிய அமைதியான வாழ்வை மேற்கொண்டவர். இவர் நல்ல சமய ஆசார ஒழுக்கசீலர். இவரது குடும்பத்தினரும் இவரது சமயத் தொண்டிற்கு உறுதுணையாக இருந்ததுடன் யாவரும் தெய்வபக்தி மிக்கவர்களாகவே காணப்பட்டனர்.

## சங்கரலிங்கம் சுவாமியார்

இவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்தவர். இவர் இணுவைச் சிவகாமி அம்மனின் மீளா அடிமையானவர். சிறுவயதிலிருந்தே கோயில் தொண்டுகளில் ஈடுபட்டதால் அன்னை சிவகாமியின் திருக்கோயிலில் இவரது தாயார் கோயிலைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தஞ் செய்தபோது அவருடன் கோயிலுக்கு வரும் சங்கரலிங்கம் சுவாமியார் அவ்வயலிலுள்ள பேராயிரம் உடையார் (சச்சிதானந்தம் சுவாமிகள்) உடன் சேர்ந்து அன்னை சிவகாமியின் திருக்கோயில் தரையை பசுஞ்சாணம் கொண்டு மெழுகிச் சுத்தம் செய்தவர். பின் இவரது நண்பர்கள் பலருடன் சேர்ந்து பஜனை பாடினார். இவரது இனிமையான குரல் பண்ணிசைபாடும் போது எவரையும் இறைவன்பால் ஈர்க்கவல்லது. தொடர்ந்து தியாகராசாச் சுவாமிகளுடன் சேர்ந்து இவர் உருவாக்கிய கூட்டுப் பிரார்த்தனைக்குழு பிரசித்தி பெற்ற இணுவில் பஜனைக்கோஷ்டி எனப் பெயர் பெற்றது. வாலிபவயதில் இணுவில் சிவகாமி அம்மன் கோயிலில் அமைந்த இளைஞர் சங்கத்திலும் கூட இருந்து பல சிறப்பான பணிகளை ஆற்றியவர்.

## வேலுப்பிள்ளைச் சாமியார்

இவர் இணுவில் கந்தசுவாமி கோயில் வாசல் என்ற முகவரியில் பிறந்து வளர்ந்தவர். இவர் சிறுவயதில் பாடசாலைப் படிப்புடன் இலக்கணம், இலக்கியம், சமய தத்துவங்களை அருகிலுள்ள சேதர்ச்சட்டம்பியார், வடிவேற்சுவாமிகள் போன்ற பெரியார்களிடம் படித்ததுடன் மேலும் பல அறிஞர்களுடன் கூடித் திரியும் அருள் ஞானமும் தெய்வீக நாட்டமும் கொண்டவர். மேற்படிப்பை நாடாது தமது சீவனோபாயத்துக்காகச் சுருட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழிலை நாடியவர். இவர் சிறந்த ஆசாரசீலர். அணிவது நாலுமுழ வேட்டி, தோளில் ஒரு சால்வை. எந்தநேரமும் தூய உடை தூய சிந்தை, எவருடனும் அன்பாகப் பேசும் பாங்குடையவர். பிற்காலத்தில் தமது சகோதரர் மார்க்கண்டு நடாத்திய வியாபாரா நிலையத்தில் அவருடன் உதவியாக இருந்தவர். இதே நேரத்தில் வெளிவரும் எல்லா நாளேடுகளையும் வாங்கித் தானும் வாசிப்பதுடன் தம்மை நாடி வருவோரையும் வாசித்து மகிழ வைப்பார். வாசிக்க முடியாதவர்களுக்குத் தாமே வாசித்துக் காண்பிப்பார். காலையில் இவரது கடைவாசலில் நாளேடுகள் படிக்கும் கூட்டமே அதிகம். இவர் தமது சேவையால் ஒரு வாசிகசாலையாகவே அமைந்தார். அத்துடன் சமய, சித்தாந்தக் கருத்துக்களையே முக்கியமாக வழங்கி இன்புற்றவர்.

## பரமர் சுவாமியார்.

இவர் இணுவிலைச் சேர்ந்த மு.சுப்பையா உபாத்தியாயரின் மகன். இணுவில் அமெரிக்கன்மிசன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்றவர். பின் விவசாயம், கைத்தொழிலில் ஈடுபட்டார். இவர் தனது குலதெய்வமான இணுவில் சிவகாமி அம்பாளை இறுதி நாள் வரை இடையறாது உள்ளன்போடு துதித்து வந்தார். அம்பாளிடம் கொண்ட பக்திமேலீட்டினால் சரியைத் தொண்டையும், கிரியைத் தொண்டையும், செய்தார். இவர் தனது நண்பர்களுடன் சேர்ந்து அன்னையின் ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகளிலும் விசேட தினங்கள், மஹோற்சவ காலங்களிலும் பஜனை பாடி வந்தார். இவரது பஜனைக்குழுவில் இவரது சகோதரர் நாகலிங்கம் முருகேசு, சிவக்கொழுந்து ஆகியோருடன் வேறுபலரும் பாடுவர். ஆறுப்பிள்ளை மத்தளம் அடிப்பார். இவரது பக்தியான பஜனைப் பாடல்களில் மயங்கியவர்கள் இவரைப் பரமுச்சாமியார் என்றே அழைத்தனர்.

சிவகாமி அம்பாளின் பூந்தோட்டம், கோபுர வாயிலின் அண்மையிலுள்ள கிணறு ஆகியன இவரது பெருமுயற்சியால் தோற்றுவிக்கப்பட்டன. இவர் சிரமதானப்பணியிலும் தன் குழுவினருடன் திறம்பட ஈடுபட்டார். இவர்களது பெருமுயற்சியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருத்தலத்தில் சூரன், சிங்கம், வெண்புரவி ஆகிய வாகனங்கள் செய்விக்கப்பட்டு இவ்வருடம் வரை 72 வருட காலமாக மகிடா சூரன்போர் நிகழ்த்துவது அன்னை சிவகாமியின் அருளாகும். பிடியரிசி எடுத்தும் சுருட்டுக்கூலி சிறுகச் சேர்த்தும் இவ் வைபவங்கள் நடைபெற வகைசெய்தனர். இவரின் பின் இவரது புதல்வர்கள் கயிலாயபிள்ளை, சுப்பையாபிள்ளை (இரத்தினம்), பூபாலசிங்கம், சுந்தரலிங்கம், செல்வரத்தினம் போன்ற அனேக பக்தர்கள் மூலம் அன்னை சிவகாமியின் கோயிலில் பஜனை தொடர்ந்து நடைபெற்றது அன்னையின் அருளே ஆகும்.

## பண்ணிசைச் செல்வர் கா.சிவகொழுந்து.

இவர் இணுவிலைச்சேர்ந்த காலிங்கரின் மூன்றாம் புதல்வராவார். ஆரம்பக்கல்வியை இணுவில் அமரிக்கன்மிசன் பாடசாலையிலும் சமயநூல், பண்ணிசையை, மு.சின்னத்தம்பிச் சட்டம்பியாரிடமும் கற்றவர். குரல்வளம் மிக்கதால் இனிமையாகப் பாடவும் வல்லவர். ஏனையோருக்கும் தனது பண்ணிசைத் திறமையைச் சொல்லிக் கொடுத்தார். நாடகம் நடிப்பதிலும் சிறந்தவர். கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல், சின்னத்தம்பிப் புலவர் பாடல் போன்றவற்றைத் திறம்படப் பாடியவர். பரமுச் சாமியாரின் பஜனைக் குழுவுக்கு தலைமை தாங்கி நெறிப் படுத்தியவர். அன்னை சிவகாமியின் மீளாஅடிமையான இவர் அம்பாளின் திருத்தொண்டிலும் கூடிய பங்கேற்றவர். சிவகாமி அம்பாளின் திருத்தலத்தில் இளைஞர் பலரைக் கூட்டிச் சமூகத் தொண்டு, பஜனை, சமயச் சொற்பொழிவுகள் மூலம் நந்தனார் சரித்திரம், சின்னத்தம்பிபுலவர் பாடல்கள் போன்றவற்றில் நல்ல தேர்ச்சி பெற உறுதுணையாக இருந்தவர்.

## சுப்பிரமணியம் குமாரசாமி

இவர் இணுவில் மேற்கைச்சேர்ந்தவர். கடவுள் பக்தி மிக்கவர். நல்லொழுக்கம், நற்பண்பு ஆகிய குணங்களில் சிறந்தவர். இணுவில் கந்தசுவாமியாரை இடையறாது வணங்கியவர். தேவாரம், திருமுறைகள், பண்ணிசை ஆகியவற்றைத் தவத்திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேற்சுவாமிகளிடம் கற்றவர். யாழிலும் குழலிலும் பார்க்க இனிமையான குரலில் திருமுறை ஓதவல்லவர். இவர் வெள்ளிக் கிழமைகளில் மாலையிலும் தினமும் காலையிலும் பஜனை பாடியவர். இறுதிக்காலத்தில் செல்வச்சந்நிதியில் வியாபாரஞ் செய்ததுடன் முருகனிடம் கூடிய ஈடுபாடு கொண்டவர். நல்லூர், மாவிட்டபுரம் முருகன் ஆலயங்களுக்கு அடிக்கடி சென்று வழிபட்டவர். இவரது இறைசேவையின் பயனாக இவரது மூத்த மகன் பட்டதாரியாகி ஆசிரியராகி அதிபராகி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கடமையாற்றுகிறார். இவர் ஓர் முதுகலை மாணியாவார்.

## பெரியதம்பி கந்தையா

இவர் இணுவிலைச் சேர்ந்தவர். இவர் தெய்வ வழிபாட்டில் தன்னை அர்ப்பணித்தவர். திருமுறை ஓதல், பண்ணிசை போன்றவற்றையும் படித்தவர். மிக இனிமையாகப் பாடவல்லவர். இவர் நாடகம் நடிப்பதிலும் சமர்த்தர். அண்ணாவியார் ஏரம்பர் மேடையேற்றிய நாடகங்களை இணுவிலிலும் அயற் கிராமங்களிலும் நடித்துப் புகழ் பெற்ற பாடகர். இணுவில் கந்தசுவாமி கோயிலின் பஜனை, திருமுறை ஓதலில் தன்னையே அர்ப்பணித்தவர். இவர் 86 வயதுவரை நலமுடன் வாழ்ந்து நற்கடமைகளாற்றியவர். இவரது மூத்த மகன் இளமையில் நன்கு கற்றுத்தேறி ஆசிரியப்பணியாற்றி ஓய்வு பெற்றதுடன் இவர் இறைபக்தியுடன் ஆத்மீக சிந்தனை வசமானவர்; சிறந்த பண்பால் யாவரும் இவரைப் பெரியண்ணை என்றே அழைப்பர். இவர் யோகநெறி நிரம்பியதால் பல சித்துக்களையும் பெற்றவர். இவர் தூயநெறியுடைய கட்டைப் பிரமச்சாரியுமாவர். அமரர் கந்தையாவின் சோழப்பிள்ளைகளில் ஒருவரான வைத்தியகலாநிதி பாலசுப்பிரமணியம் அவர்கள் இணுவில் மேற்கில் வைத்தியத்தொழிலைக் கண்ணியமாகவும் திறமையாகவும் புரிவதுடன் நோயாளிகளை மிகப் பரிவுடனும் ஆதரித்து நெடுங்காலமாப் பணியாற்றுகின்றார். திரு.கந்தையா அவர்களின் நற்பணியும் அவர் வணங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்களும் அவரை நெடுங்காலம் வாழவைத்தது. தாமும் அவர் இறைபணி செய்ததுடன் இங்கிருக்கும் இருபிள்ளைகளும் சீருஞ்சிறப்புமாக நற்பெருமையுடன் வாழ்வதும் கண்டு இன்புற்றே இறைபதம் அடைந்தார்.

## சோதிலிங்கம் சுவாமியார்

இவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்தவர். இவரது இயற் பெயர் தனபாலசிங்கம் என்பதாகும். இவரது தந்தையின் தாயார் சின்னாச்சியம்மா என்பவர் ஒரு சமய பக்தையும் ஆன்மீகத் துறையில் குப்பிளானைச் சேர்ந்த மாணிக்கம் அம்மாவின் பிரதம சீடருமாவார். இவரது சிந்தனையில் வளர்ந்த சோதிலிங்கம் இளவயதிலிருந்தே ஆன்மீகத்துறையில் ஈடுபட்டவர். மஞ்சத்தடி முருகனுக்கும் இதர கோயில் தெய்வங்களுக்கும் தொண்டுகள் செய்பவர். மஞ்சத்தடி முருகன் ஆலய அறங்காவற் குழுவில் உபதலைவராக இருந்தபோது இக் கோயிலின் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் முதலியவற்றை நல்ல சிறந்த கட்டுமான வேலையாக, வெள்ளை வைரக்கற்களால் கட்டுவித்ததுடன் உள்வீதியின் புறச்சுற்று மதிலையும் அறங்காவற் குழுவின் ஏனைய உறுப்பினர்களின் உதவியுடனும், அயல் அடியார்களின் உதவியுடனும் நிறைவேற்றித் திருப்பணி வேலைகளில் திருப்தி கண்டவர். இவர் சோதிடம், மாந்திரீகம், திருநீறு போட்டுப் பார்வை பார்த்தல் போன்றவற்றிலும் வீடு, கிணறு முதலியவற்றுக்கு நிலையம் எடுத்தல் ஆகியவற்றிலும் சிறந்து விளங்குபவர். இவரது அயராத உழைப்பினால் இணுவிலில் பலரைத் தம்பால் ஈர்த்து அவர்களது தீயவழிகளைக் களைந்து நல்லவர்களாக்கியதுடன் அரங்கன் சன்மார்க்கசபை என ஒரு நிறுவனத்தையும் நடாத்தி வருகிறார். இவரது வழிகாட்டலில் முன்னேறி இன்று கொழும்பில் பிரபல சோதிடராக விளங்கும் திரு.பொ.சந்திரன் என்பவர் நன்கு பிரகாசிப்பது இவரது சித்து மார்க்கத்திற்கு ஓர் உதாரணமாகும். இவர் எப்போதும் காவியுடை, சட்டை. தலைப்பாகையுடனே காணப்படுகிறார். விவசாயம், வியாபாரம் ஆகியவற்றைத் தொழிலாகக் கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவைத் திருவூரை அலங்கரித்து வாழ்ந்த பெரியார்கள்

## புலவர் நடராசையர்

சீரும் சிறப்பும் மிக்க இணுவில் கிராமத்திலே அந்தணர் குலத்துதித்தவர் புலவர் நடராசையர் அவர்கள். "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற திருவாக்கை உறுதிப்படுத்திய இவர் இளமையிலிருந்து தமிழ் இலக்கண இலக்கியங்கள் வடமொழியை நன்கு கற்றுவந்தார். மேலும் சைவ சித்தாந்தத்தை நன்கு கற்றுத் தேறியவர். நாவலர் பெருமானிடம் சைவசித்தாந்தம், தொல்காப்பியம் முதலியன நன்கு கற்றுத் தேறியதுடன் தமிழ் அறிவியலில் நன்கு பாண்டித்தியம் பெற்றதால் புலவர் பரீட்சையில் தோற்றிப் புலமை பெற்றார். இவரது திறமையை அறிந்த நாவலர் பெருமான் இவரை வண்ணார்பண்ணையில் சைவசித்தாந்தம் கற்பிக்கும் ஆசிரியராக நியமித்தார். இவர் கவிபாடுவதில் வல்லவர். பல பண்டிதர்களையும் புலவர்களையும் தமது கல்வி மேம்பாட்டால் உருவாக்கியவர். இணுவில் பரராஜசேகரப் பிள்ளையாரின் பூசகராகவும் பணியாற்றினார். இணுவிலில் இருந்த மடத்தில் இயங்கி வந்த ஆதீனத்தில் தலைவராக இருந்தவர். சிதம்பரம், மதுரை போன்ற தென்னிந்திய நகரங்களிலும் சிலகாலம் வசித்தவர். சோதிடம், மாந்திரீகம், வைத்தியம் ஆகிய துறை களிலும் சிறந்து விளங்கினார். சைவத்தையும் தமிழையும் நன்கு ஆதரித்ததுடன் சிவஞானசித்தியார் சுபக்கம், ஞானப்பிரகாசர் உரையினை ஆராய்ந்து அச்சேற்றி வெளியிட்டவர். ஆசாரம், நல்லொழுக்கம், நற்பண்புடன் வாழ்ந்து பெருமை தேடியவர்.

## புலவர்அம்பிகைபாகர்

இணுவில் தெற்கில் தோன்றியவர்களில் இவர் பல சிறப்பு களையும் கொண்டவர். இவரும் பேராயிரவர் குலத்தைச் சேர்ந்தவர். சிறந்த ஆசாரசீலரான இவர் இணுவில் பரராசசேகரப் பிள்ளையாரிடம் மிகுந்த பயபக்தியுடையவர். வடமொழி, தென்மொழிகளில் சிறந்த புலவர். கவி பாடுவதில் விற்பன்னர். நாவலர் பெருமானிடம் தொல்காப்பியம் கற்றவர். இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சீரிணுவைத்திருவூரை அலங்கரிக்க வாழ்ந்த, வாழுகின்ற பெரியார்கள்





மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத்
தன்தேசமல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாஞ் சிறப்பு.

- கம்பன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் நால்வரும் மும்மொழிகளிலும் சிறந்து விளங்க வைத்தவர். இணுவில் பரராசசேகரப் பிள்ளையாரிடம் வைத்த பக்தியைப் போல் வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானிடமும் நீங்காத பக்திபூண்டவர். நடராசையருடன் நன்கு பழகிச் சைவ சிந்தாந்தங்களைக் கேட்டறிந்தவர். இவர் இணுவையந்தாதி, தணிகைப்புராண உரை, சூளாமணி வசனம் ஆகியவற்றை எழுதியவர். இவரது கல்வியின் பெருமையால் இவரது நான்கு புதல்வரும் கற்றுத்தேறியதுடன் இவ்வூருக்கு நன்மதிப்பையும் ஏற்படுத்தியவர்கள்.

## திரு.வைத்திலிங்க உபாத்தியாயர்

இணுவில் தெற்கில் இவர் பிறந்து தந்தையார் புலவர் அம்பிகைபாகரின் பெயரை மேலும் பிரகாசமடையச் செய்தவர். மும்மொழிகளான தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றை நன்கு கற்றுப் பாண்டித்தியம் பெற்றவர். தந்தையாரிடமே இலக்கணம், சங்க இலக்கியம் ஆகியவற்றைக் கற்றவர். பாடல்கள் பாடுவதில் திறமைமிக்கவர். ஆசாரசீலர். இணுவில் பரராசசேகரப்பிள்ளையாரின் மீளா அடிமையானவர். இக்கோயிலில் படிக்கும் புராணபடனத்தில் சிறப்பாக உரைசொன்னவர். இணுவில் சைவப்பிரகாச வித்தியா சாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றியவர். இணுவில் கந்தசுவாமியார் மீது கல்யாணவேலவர் திருவூஞ்சல் பாடியவர். இவரிடம் கற்ற பலர் உயர்பதவிகளை அடைந்தனர். அயலில் வாழ்ந்த அந்தணச் சிறுவர்களுக்குச் சமஸ்கிருதம் கற்பித்தவர். இவரது சகோதரர்களும் மும்மொழிகளிலும் திறமை மிக்கவர்கள். இவரது சகோதரரான இளைய தம்பி உபாத்தியாயர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இவரது திறமையும் பண்பும் இவரது கற்ற கல்வியை அணிசெய்தது என்றால் மிகையாகாது.

## திரு. ஆறுமுகதாசர் உபாத்தியாயர்

இப்பெரியார் இணுவில் தெற்கில் வாழ்ந்த சின்னத்தம்பி என்பவரின் மகன். வைத்திலிங்க உபாத்தியாயரின் மருமகன். இவர் சிறந்த சிவபக்தர், ஆசாரசீலர், வைதிகசைவர். பரராசசேகரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரை இடையறாது வணங்கியவர். அந்தணக் குருமார்கள் போல உடை அணிபவர். விபூதி அனுட்டானங்களில் தவறாதவர். தமது ஆரம்பக்கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசலையிலும், இலக்கண இலக்கியங்களை மாமனிடமும் கற்றவர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆங்கிலம் கற்று ஆசிரியரானவர். தனது ஆசிரியப் பணியை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் தொடர்ந்து நிறைவேற்றி ஓய்வுபெற்றவர். நடராச ஐயரிடமும் கல்விகற்றவர். வயலின் வாசிப்பதில் விற்பன்னர். இணுவில் கந்தசுவாமி கோவிலில் எல்லா வெள்ளிக்கிழமை களிலும், விசேட தினங்களிலும் திருமுறை ஓதுபவர்களுடன் சேர்ந்து வயலின் வாசித்தவர். நாடகம் எழுதுவதிலும் நடிப்பதிலும் திறமைசாலி. செபம், தவம், தியானத்தை நாளாந்தம் மாலையிற் கைக்கொண்டவர். இதன் மூலம் இறைவனை அகக்காட்சியால் கண்டு பூசிப்பவர். தமது பெருமையாலும் சிறப்பாலும் உரும்பிராயில் கல்விகற்ற அநேகரைச் சிறந்த பதவிகளை அடைய வைத்தவர்.

## திரு. தா. வைத்திலிங்கச் சட்டம்பியார்

இப்பெரியார் இணுவில் கிழக்கு தாமோதரம்பிள்ளை (தாமு) அவர்களின் மகன். சிவகாமி அம்மன் கோயிலின் அண்மையிலிருந்த திண்ணைப் பள்ளியிலும் அமெரிக்கன்மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் கற்றவர். பின்னர் ஒளவையாரின் நீதிநூல்களையும் தந்தையாரிடம் கற்றவர். தனது விருப்பத்தின் பேரில் சமயசாஸ்திர நூல்களையும் புராண இதிகாசங்களையும் கற்றுத்தேறியவர். மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் கோயிலில் பெரியபுராணம், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணங்களுக்கு நிகழ்ந்த புராணபடனங்களில் வாசிக்க உரைகூறியவர். சுத்த வைதிகர், ஒழுக்கசீலர். மற்றவர்களுக்கு நல்ல உபதேசங்களைப் போதிப்பவர். காலை, மாலையில் தவறாது ஆலய வழிபாடு செய்பவர். பெரிய சந்நியாசியார், நயினாதீவுச் சுவாமியார் ஆகியோர்பால் மிக்க பற்றும் மதிப்பும் வைத்துப் போற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. சுப்பையா உபாத்தியாயர்

இவர் இணுவில் கிழக்கு முதலித்தம்பியின் நான்காவது மகன். நடராசையரிடமும் அம்பிகைபாகப் புலவரிடமும் இலக்கண இலக்கியம் நன்கு கற்றவர். புராணங்களுக்கு உரைசொன்னவர். சைவாசாரத்தை நன்கு பேணிக்காத்தவர். தனது குலதெய்வமான இணுவில் சிவகாமி அம்பாளிடம் சிறந்த பக்தியுடையவர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். சிவகாமி அம்மன் கோவிலிலும் புராணங்களுக்கு உரைகூறியவர். அம்பிகைபாகப் புலவரின் மருமகன். ஆசாரமும் நல்லொழுக்கமும் நற்பண்புமுடைய இவர் இறுதிக்காலத்தில் நல்லூரில் வசித்தவர்.

## திரு. சி. கனகசுந்தரம் ஆசிரியர்

இணுவில் கிழக்கைச் சேர்ந்த இவர் ஆரம்பக்கல்வியை இணுவில் அமெரிக்கன்மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்றவர். மேல்வகுப்புக்களை கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்றார். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் கற்றுச் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் கற்பித்தவர். பதுளையிலும் அதிபராகக் கடமையாற்றியவர். கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை, இணுவில் அமெரிக்கன்மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றில் அதிபராக இருந்து ஓய்வுபெற்றவர். சிறந்த சமயபக்தர். மஞ்சத்தடி முருகன், கப்பணைப் பிள்ளையார், இணுவில் கந்தசுவாமி கோவில் ஆகியவற்றை இடையறாது வணங்கி வந்தவர். மு.பெரியதம்பி உபாத்தியாயரின் மூத்த மருமகனுமாவார்.

## திரு. சேதுலிங்கம் (சேதர்ச் சட்டம்பியார்)

இணுவில் மேற்கில் பரமானந்தவல்லி அம்பாள் ஆலயத்தின் வடபால் தோன்றியவர் சேதர்ச்சட்டம்பியார் அவர்கள். விபூதி, உருத்திராக்கம் ஆகிய சிவசின்னங்களைத் தவறாது அணிந்து வாழ்ந்தவர். சைவ ஆசாரசீலர். ஆரம்பக்கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றவர். சோதிட வல்லுநர். பண்ணிசையில் சிறந்து விளங்கியதுடன் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேறியதால் பலருக்கு உபதேசித்தவர். நீதிநூல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரம், சைவநெறி முதலியவற்றை இவரிடம் படித்த பலர் இத் துறைகளிற் சிறந்து விளங்க வைத்தவர். பரமானந்தவல்லி அம்பாளையும், இணுவில் கந்தசுவாமியாரையும் தினம் வணங்கி அருள்பெற்றவர். சைவ விரதங்களை மிகப் புனிதமாகவும் ஆசாரத்துடனும் கடைப்பிடித்து வாழ்ந்தவர். கோயில்களில் புராணங்களுக்கு உரைசொன்னவர். தினமும் ஆலயவழிபாடாற்றாது உணவருந்தமாட்டார். மஞ்சத்தடியில் அரசோலை விநாயகரையும் (கப்பனைப் பிள்ளையார்) தினம் உள்ளன்போடு வழிபட்டவர். இரவில் தன் மாணாக்கருக்கு வகுப்புகளை நடாத்தி இச்சூழலில் ஆசாரம், ஒழுக்கம், சமயவழிபாடு, பண்ணிசை என்பவற்றில் இன்றும் மக்களை வழிநடத்த வித்திட்ட இப்பெரியார் என்றும் நல்லோர் வாழ்வில் காட்சி தருவது இக்கிராமத்தின் பேறாகும்.

## திரு. மாணிக்கச் சட்டம்பியார்

மாணிக்கத்தியாகராசா என்ற இயற்பெயர் கொண்ட இப் பெரியார் இணுவில் மேற்கு உடுவில் எல்லையில் வசித்தவர். நீதி நூலறிவித்தகர். சங்க இலக்கியங்களில் கைவந்தவர். கம்பராமாயணம், மணிமேகலை, நளவெண்பா ஆகியவற்றில் வித்தகர். இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அறிவில் மிக்கவர். சிலேடையாகப் பேசுவதில் கெட்டிக்காரர். சைவ ஆசாரமுடையவர். தனது பிள்ளைகள் எல்லோரையும் நன்கு கற்பித்து அவர்களை வல்லுநராக்கியவர். இவரது மகள் திருமதி ஆயிலியம் வேலுப்பிள்ளை தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தவர். மகன் ஆனந்தர் என்பவர் திறமைமிக்கவராக இருந்ததால் தந்தையின் புகழையும் மேலும் பிரகாசிக்க வைத்தார். மாணிக்கச் சட்டம்பியார் அநேக அறிஞர்களையும் கல்விமான்களையும் உருவாக்கிய பெருமையுடையவர். இவரது மூன்றாம், நான்காம் சந்ததியினரும் உலகறிந்த கல்வியாளராக வரவைத்து ஊர்மக்களுக்குச் சிறப்பையும் தேடித் தந்துள்ளார்.

## இணுவில் சின்னத்தம்பிச் சட்டம்பியார்

சின்னத்தம்பிச் சட்டம்பியார் இணுவில் சிவகாமியம்மன் கோவிலின் அண்மையில் வாழ்ந்தவர். 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முதலர் என்னும் பெருமகனாரின் புதல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கல்விகேள்விகளில் சிறந்து விளங்கினார். முத்தமிழிலும் நல்ல புலமையுடயவர். இவர் தனது இசை வன்மையால் நன்கு பாடக் கூடியவர். அயலிலுள்ள சிவகாமி அம்பாளை இடையறாது வணங்கி வந்தே தனது காலையுணவை உண்பார். சிறந்த பக்திமான். தனது திறமையால் பாடல்கள் எழுதவும் பாடவும், நாடகங்கள் எழுதவும் வல்லவராதலால் அக்காலத்துக் கலைஞர்கள் இவரிடம் வந்து பாடல்கள், நாடகங் களை எழுதுவித்துத் தாம் பயிற்சிபெற்று மேடையேற்றி வருவர்.

இவரால் எழுதப்பட்ட நாடகங்கள் பல. சிவகாமி அம்மன் கோவிலின் தென்பால் மைதானமும் அரங்கும் அமைத்து இரவிரவாகக் கூத்தும், கலைநிகழ்ச்சியும் நடைபெறும். இந்தியக் கலைஞர்களான எம்.ஆர்.கோவிந்தன், சங்கரதாஸ் சுவாமிகள் போன்றோர் இங்கு நாடக மேடையில் நடிப்பதற்கும் பாடுவதற்கும் ஏற்றபடி ஆக்கங்களைப் புனைந்து கொடுத்துப் பெருமை தேடியவர் சின்னத்தம்பிச் சட்டம்பியார். இவரது இயற்பெயர் சின்னத்தம்பி என்பதாகும். இவரது சேவையால் சட்டம்பியார் என்ற பட்டமும் இணைக்கப்பட்டு சின்னத்தம்பிச் சட்டம்பியார் என்று அழைக்கப்பட்டார்.

இவரது திறமையை நன்கறிந்த இசைப்பேராசிரியர் கலாநிதி க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் திரு.வி.செல்வநாயகம் ஆகியோர் இவரைப் பாராட்டியுள்ளனர். தனது திறமைகள் நிறைய இருந்தபோதும் அறுபது வயதாகியும் தனது இறுதிக் கருமமாற்ற ஒரு மகன் இல்லையே என்று அன்னை சிவகாமியிடம் பலவாறு கேட்டும் பலன் கிடைக்காததால் அன்னை சிவகாமியின் ஆலயத்திலேயே தற்கொலை செய்யச் சென்றார். இக்கோவிலின் வடபால் வசித்தவரும் அன்னை சிவகாமியின் அருளால் திருவாக்குச் சொல்பவருமான கற்பகம் என்னும் மூதாட்டியிடம் உருக்கொடுத்த அன்னை சிவகாமி, மூதாட்டியைக் கோவிலுக்கு அனுப்பிவைத்தார். கற்பகப்பிராட்டியார் உருவேறிய நிலையில் திருக்கோவிலை அடைந்தபோது சின்னத்தம்பிச் சட்டம்பியார் தற்கொலை முயற்சியில் இருந்ததைக் கண்டு தனது வலது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை அவருடைய தலையில் வைத்து "நீ விரும்பியபடி உனக்கொரு புதல்வனைத் தருவேன்" என்று கூறி அவரை வீட்டுக்கு அனுப்பினார்.

அன்னை சிவகாமியின் அருளால் இவரது மனைவி கருவுற்று 1924 ஆம் ஆண்டு ஒரு ஆண்மகவு கிடைத்தது. அன்னையின் அருளாற் கிடைத்த பிள்ளைக்குத் தமது மூதாதையரின் பெயரான பேராயிரம் உடையார் என நாமஞ் சூட்டினார். இவர் வளர்ந்து வந்து கோவில்களில் தொண்டு செய்வதுடன் ஞான மார்க்கத்திலும் நாட்டம் கொண்டார். 1934 ஆம் ஆண்டு சின்னத்தம்பிச் சட்டம்பியார் மறுமை எய்தினார். மகன் தந்தையின் இறுதிக் கடமைகளைச் செய்துவிட்டு சமயமார்க்கத்தில் ஈடுபட்டார். பின் துறவியாகிப் பல இடங்கள் சென்று கடைசியில் கைதடியில் தவக்குடில் அமைப்பித்து சச்சிதானந்த சுவாமிகள் என்ற பெயரால் அழைக்கப்பட்டார்.

சின்னத்தம்பிச் சட்டம்பியாரின் பெருமையும் தொண்டும் பிற்காலத்தில் இவருக்கு ஈட்டிக்கொடுத்த நற்பெயரால் இணுவையூர் பெருமையடைகிறது.

### திரு. சு. சதாசிவச்சட்டம்பியார்

இவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்த சுப்பையா என்பவரின் மகனாவார். தனது ஆரம்பக்கல்வியை இணுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்றார். நீதிநூல்களையும், புராண உரைகளையும் பெரியார் வைத்திலிங்கச் சட்டம்பியாரிடம் கற்றவர். இவரிடம் நீதி நூல்களையும், புராண உரைகளையும் கற்றோர் பலர். மஞ்சத்தடி அருணகிரிநாத சுப்பிரமணியர் கோயிலில் புராணபடனஞ் செய்தவர். பெரிய சந்நியாசியாரிடத்தும் அவரது சகோதரர் வேலாயுதரிடத்தும் மிக்க அன்புடையவர். கப்பனை விநாயகரிடத்தும் மஞ்சத்தடி முருகனிடத்தும் அளவில்லாத பக்தியுடையவர். கப்பனைப் பிள்ளையார் ஆலய அண்மையில் அமைந்த இராப்பள்ளிக்கூடத்தில் படிப்பித்தவர். தெய்வசக்தியால் திருவாக்குச் சொல்வதிலும் நினைத்த காரியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதிலும் சமர்த்தர். தெய்வ பக்தியுடனும் எவரையும் நன்கு மதிக்கும் பண்புடனும் வேதாந்தமடத்தில் மகாதேவா சுவாமிகளிடம் வேதாந்தம் படித்த அறிவுடனும் அரிய செயல்களைச் செய்தவர். தம்மிடம் அருள்மிகுந்து காணப்பட்டவர்.

## திரு. பெரியதம்பி உபாத்தியாயர்

இணுவில் கிழக்கில் வாழ்ந்த முதலித்தம்பி அவர்களின் புத்திரரான இவர் சிறந்த சைவாசார சீலர். தனது ஆரம்பக் கல்வியை இணுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், மேற்படிப்பைக் கோண்டாவில் சைவ வித்தியாசாலையிலும் கற்றவர். கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் தமிழாசிரியராகப் பயிற்றப்பட்டவர். பின்னர் தான் கல்விகற்ற கோண்டாவில் சைவ வித்தியாசாலையில் ஒரு வருடகாலம் உதவியாசிரியராக இருந்தபின் தொடர்ந்து முப்பது வருடகாலமாகத் தலைமையாசிரியர் பதவியை வகித்தவர். இங்கிருந்து ஓய்வுபெற்றபின் கப்பனைப் பிள்ளையாரடியில் அமைந்த இராப்பாடசாலையிற் கல்வி போதித்தவர். திருமுறைகளைப் பண்ணுடன் பாடுவதில் வல்லவர். சிறந்த தெய்பக்தியும், நல்லொழுக்கமும், நற்பண்பும் மிகுந்து காணப்பட்டவர். இவரிடம் கற்ற பலர் இன்று நல்ல நிலையிலிருக்கின்றனர். இவரது நற்செயலால் பிற்காலத்தில் சீருஞ்சிறப்புமுடையவராக வாழ்ந்தவர். இவரது பிற்சந்ததியினரும் பெருவாழ்வு வாழ்கின்றனர்.

## திரு. வை. கதிர்காமநாதன் (தம்பி உபாத்தியாயர்)

இவர் இணுவில் தெற்கில் வாழ்ந்த வைத்தியலிங்க உபாத்தியாயரின் மகன். இவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழியிலும் வல்லவர். சிறந்த அறிஞராகப் போற்றப் பட்டவர். ஊர்மக்களாலும் தம்பி உபாத்தியாயர் என நன்கு மதிக்கப்பட்டவர். சிறந்த ஆசாரசீலர். விபூதி அனுட்டானங்களை நாளாந்தஞ் செய்யத் தவறாதவர். சைவசமய ஒழுங்கை நெறி தவறாது பேணிக் காத்தவர். பரராசசேகரப் பிள்ளையாரின் மீது அபாரபக்தியுடையவர். இவர் தமது திறமையால் இணுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றியவர். சைவசித்தாந்தத்திலும் நல்ல தேர்ச்சியுடையவர். இணுவில் தெற்கில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளில் இவரது சிறப்புரை தவறாது ஒலிக்கும். இவரது கற்பித்தல் திறமையால் பல கல்விமான்களையும் அறிஞர்களையும் இணுவிற் கிராமம் பெறத் தவறவில்லை. அண்மையில் அமரரான இவரால் சைவ உலகம் சிறப்படைந்தது என்றால் மிகையாகாது.

## திரு. த. கந்தையா உபாத்தியாயர்

இவர் இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், தாவடியை வதிவிடமாகவும் கொண்டவர். இவரது ஆரம்பக்கல்வி இணுவில் அமெரிக்கன்மிசன் பாடசாலையில் அமைந்தது. இவர் தொடர்ந்து கோண்டாவில் சைவவித்தியாசாலையிற் கற்றவர். இவர் இணுவில் சைவமகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இவர் தனது பகுதியிலுள்ள இணுவில் சிவகாமி அம்பாளின் மீளா அடிமையானவர். இடையறாது நாள்தோறும் கோயிலில் திரு விளக்கேற்றல் தொண்டுடன் கோயிலில் இதர தொண்டுகளிலும் தன்னை அர்ப்பணித்தவர். இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் ஆரம்பித்த இளைஞர் சங்கத்தில் சேர்ந்து ஏனைய உறுப்பினர்களுடன் பஜனை பாடுதல், சிரமதானம் செய்தல் போன்ற அரும்பணிகளில் வாலிபத் துடிப்புடன் செயலாற்றியவர். தனது வருமானத்தில் ஒரு பகுதியை மாதந்தோறும் சமய வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவர். சிறந்த ஒழுக்கமும், நற்பண்பும், சமய அறிவும், ஆசாரமும் மிக்கவர். இவரிடம் கற்ற அனேகர் இன்று சிறந்த பதவிகளை வகிப்பதுடன் இவரைப் பின்பற்றிப் பலர் திருக்கோயில் தொண்டுகளிலும் கிராம அபிவிருத்தியிலும் அதிக ஊக்கம் காட்டி வருகின்றனர். இவ்வூர் மக்களில் பலர் முன்னேற வழிகாட்டிய பெருமகன் இவர்.

முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம்

## பண்டிதர் சபா. ஆனந்தர் B.A., B.O.L

இணுவில் திருவூரின் கிழக்கில் வேளாண் குடியிலே சிறந்த சபாபதி என்பவரின் தவப்பயனாக வந்துதித்ததுடன் அக்குடிக்கே நற்பெயர் தேடிக்கொடுத்தவர் சபா ஆனந்தர் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சிறுவயதிலிருந்தே கல்வியில் சிறந்த ஞானமுடையவர். இவரது பெற்றோரின் குடும்பநிலை காரணமாக இவரது மூத்த சகோதரர்கள் எவரும் மேற்படிப்புப் படிக்கும் வாய்ப்பைப் பெறவில்லை. இவர் தனது விடாமுயற்சியினாலும் சரஸ்வதிதேவி இவரது நாவிற் குடிகொண்டமையாலும் படிப்பிலும் சாதனை களிலும் திறம்பட முன்னேறினார்.

இணுவில் மண் தன்னகத்தேயுள்ள எவரையும் இறைபக்தி, விடாமுயற்சி, கடின உழைப்பு, நற்பண்பு ஆகியனவற்றில் சிறந்து விளங்க உறுதுணை செய்கிறது. அவ்வாறே சபா ஆனந்தர் அவர்கள் தமிழில் நன்கு தகைமை பெற்றுப் பண்டிதரானார். இணுவில் கிராமத்தில் முதன்முதல் பண்டிதர் பரீட்சையிற் சித்தியடைந்த இருவரில் இவரும் ஒருவர். தமிழில் எவ்வளவு புலமை பெற்றாரோ அதேபோல ஆங்கிலத்திலும் நன்கு கற்றுப் புலமையெய்தினார். இவர் கலைமாணிப் பட்டதாரியானார். தமிழ் இலக்கியத்தில் திறமை காரணமாக B.O.L பட்டத்தையும் பெற்றார். இப்பட்டம் பெற்றவர்கள் மிகச்சிலரே. இப் பட்டத்தை இவர் தனது திறமையால் பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது. சிறந்த பேச்சாளரான இவர் தனது பேச்சு வன்மையால் பார்வையாளர் களைத் தன்பால் ஈர்த்தவர்.

தனது சமய அறிவின் ஆற்றலால் கோவில்களிலும் சமயப் பேரவைகளிலும் அழகாகவும், ஆழமாகவும் பேசவல்லவர். தனது பேச்சினிடைய பொருத்தமான சில நகைச்சுவையான செய்திகளையும் அவ்வப்போது பேசி மகிழ்வித்தவர்.

இவர் தனது கல்வி அறிவினால் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். நயினாதீவு மகாவித்தியாலயம், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, கம்பளைப் புசல்லாவ சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி போன்ற பெரிய கல்வி ஸ்தாபனங் களில் அதிபராகக் கடமையாற்றியவர். இவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றபின் தனது பரம்பரைத் தொழிலான விவசாயத்திலும் ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்போதிய சமய அறிவுடன் இலக்கண இலக்கியத்திலும் திறமை இருந்ததால் கோவில்களில் புராணபடனம் செய்தல், சமயச் சொற்பொழிவு நிகழ்த்துதல் மட்டுமன்றி முன்னர் ஆதரித்து வணங்கிய சகல கோவில்களுக்கும் சென்று இடையறாது வணங்கி வந்தார்.

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்கத்தில் சில நண்பர்களுடன் உரையாடியமை காரணமாக அங்கே திருக்குறள், திருமந்திரம் ஆகிய நூல்களுக்கு விளக்கம் கொடுக்க விரும்பி வாராந்த வகுப்புகளைத் தொடர்ந்து நடாத்தினார். இவருடன் மாணிக்கம் ஆனந்தர் அவர்களும் சேர்ந்து விளக்கவுரை நிகழ்த்துவார். இவர்களது கல்விபுகட்டலைக் கிரகிக்கும் நோக்குடைய ஆன்மீகம் விரும்பிய பலர் அவ்வகுப்பக்களில் கூடி அனுபவிப்பர். அவ்வகுப்புக்கள் நெடுங்காலமாக நடந்து வந்தன.

இவர் தமது சமயபக்தியினால் கோவிற் திருப்பணிகளுக்கும் தாராளமாகத் தந்துதவுவார். இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் பல திருப்பணி வேலைகளுக்கு உதவி செய்ததுடன் திருப்பணி செய்பவர்களுக்கு வேண்டிய புத்திமதியும் ஊக்கமும் கொடுத்து நல்ல கருத்துக்களடங்கிய ஆசீர்வாதங் களையும் தருவார். இவரது அறிவுரையில் கருத்தாழமும் கண்டிப்பும் இருக்கும். இதுவே இவரது நற்பண்புகளின் ஒரு சிறப்பாகும்.

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் முன் அமைந்த அன்னதான மண்டப அடிக்கல் நாட்டும் வைபவத்தில் இவரது கண்டிப்பான அறிவுரை அறநெறிப் பாடசாலை அமைக்கத் தூண்டியது. தனது நற்சிந்தனையால், திசைதெரியாது செல்வோருக்கு வேண்டிய உதவிகள் செய்வதுடன் முன்னேற்றப் பாதைகளையும் காண்பித்தார். இவர் இன்னோரன்ன பணிகளால் எத்தனையோ பெரியார்கள், கல்விமான்கள், உயர்பதவி வகிப்போர், சமய அறிஞர்களைத் தோற்றுவித்த செம்மல் ஆனார். அனைவரது உள்ளத்திலும் அவர் இன்றும் நிறைந்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தான் கற்று முன்னேறிய பாதையை ஏனையோரும் பின்பற்றிப் போதிய பயனடைய வைப்பதையே குறிக்கோளாகக் கொண்டவர். உயர்பண்பாளர் திருமிகு சபா ஆனந்தர் அவர்கள்

"கற்கக்கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக"

என்ற வள்ளுவர் கூற்றுப்படி ஐயந்திரிபறக் கற்றபின் அக்கல்வியின் பயனாக நல்லதைச் செய்து காட்டி வாழ்வாங்கு வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் பெருமைதேடித் தந்தவர். இதனால் தமிழ்கூறும் நல்லுலகு இவரைப் போற்றிப் பாராட்டி மகிழ்கிறது. உயர்திரு சபா ஆனந்தர் அவர்கள் தான் தேடிய கல்விச் செல்வத்தைத் தன் உடன் கொண்டு சென்று மறுமை எய்தியபோதும் அவரது பிள்ளைகள் யாவரும் நல்ல உயர்ந்த நிலையில் பரந்து வாழ்கின்றனர். அவரது சமய சமூகப் பணிக்காக அன்னை சிவகாமியின் கடைக்கண் நோக்குக்கு அவரது குடும்பமே ஆளாகியுள்ளதென இணுவையூர் பெருமையடைகிறது.

"தோன்றின் புகழொடு தோன்று அ;திலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற திருவள்ளுவர் வாக்குப்படி சைவமும் தமிழும் இத் தவப்புதல்வன் ஆற்றிய சேவையால் பெருமையடைகின்றன. வாழ்க அவர் பணி.

## மாணிக்கம் ஆனந்தர் அவர்கள்

சீர்மேவும் இணுவில் பதியில் கல்வியில் விற்பன்னரான மாணிக்கச்சட்டம்பியாரின் அருந்தவப்புதல்வர் இவர். இவரது தந்தை கல்வியில் வித்தகரானதால் அவர் பிள்ளைகள் யாவரையும் சிறந்த கல்விமான்களாக உருவாக்கினார்.

ஆனந்தர் அவர்கள் தமிழ் இலக்கண, இலக்கியம் நன்கறிந்தமை காரணமாகத் தலைசிறந்த ஆசிரியராக விளங்கினார். இவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்த பஞ்சவர்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இல்லாளை இல்லறத் துணைவியாகக் கொண்டவர். இவரது துணைவியாரும் சிறந்த ஆசிரியை. அவர் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் (தற்போது இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு) அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். இவர்கள் இருவரும் பக்திநெறியாம் சமயநெறியில் நன்கு ஆழப் பதிந்திருந்தனர்.

ஆனந்தர் அவர்கள் பாடசாலை அதிபராக இருந்து ஓய்வு பெற்றபின் சமயத்துறையில் கூடிய கவனஞ் செலுத்தித் தமிழையும் சைவசமயத்தையும் நன்கு வளர்த்தவர். தான் கற்ற சமயக்கல்வியை ஆன்மீக சிந்தனையுள்ள அனைவரும் அனுபவிக்க வேண்டுமென்ற கருத்துடையவர். இணுவில் மஞ்சத்தடியில் விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்கத்தில் நடைபெற்ற திருமந்திரம், திருக்குறள், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் ஆகிய நூல்களிலான வகுப்பில் சபா ஆனந்தர் அவர்கள் விளக்கவுரைகள் நடாத்தியபோது மா.ஆனந்தர் அவர்களும் சபா ஆனந்தருடன் இணைந்து விளக்கமான விரிவுரை நிகழ்த்தியவர். புராணபடனத்தில் உரை சொல்வதிலும் விற்பன்னர்.

இணுவில் சிவகாமி அன்னதான மண்டபத்தில் 1990 ஆம் ஆண்டு சைவசமய தத்துவங்களைச் சிறார்களுக்குப் போதனை செய்தததன் மூலம் இன்று சிவகாமி அறநெறிப்பாடசாலையைத் தோற்றுவிப்பதற்கும் அடிகோலியதுடன், ஆக்கமும் ஊக்கமும் தந்து எல்லோரது நெஞ்சிலும் குடிகொண்டுள்ளார். இவரது சமயத்துக்கான தொண்டு இவர் மறுமை எய்தியபோதும் என்றும் நிலைத்திருக்கும்.

**திரு. வை. நடராசா ஆசிரியர்**

இப்பெரியார் இணுவில் கிழக்கில் வாழ்ந்த பிரபல குடும்பத்தைச் சேர்ந்த சிதம்பரநாத உடையார் மகன் வைத்திலிங்கத்தின் மகனாவார். ஆரம்பக்கல்வியை இணுவில் அமெரிக்கன்மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிற் கற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்வகுப்புக்களைக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயின்றவர். சிறந்த சமயாசாரசீலரான இவர் சிறந்த விவேகம் உடையவர். இணுவில் சைவமகாஜன (இணுவில் மத்திய கல்லூரி) வித்தியாசாலையில் இவர் அதிபராக நெடுங்காலம் சேவை செய்து ஓய்வுபெற்றவர். இவர் சிறந்த நிர்வாகியுமாவார். இணுவில் கந்தசுவாமி கோவிலின் முதலாவது அறங்காவலர் குழு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு அரும்பணியாற்றியவர். இணுவிலிலுள்ள அநேகர் இவரது பெருமுயற்சியால் சிறந்த பட்டம் பதவிகள் பெற்று முன்னேறி உள்ளனர். இவரது சிறந்த பண்பாடு, பெருமுயற்சியின் பலனாக இவரது பிள்ளைகள் அனைவரும் வெளிநாடுகளில் பெரும் பதவிகளைப் பெற்று சிறப்புடன் வாழ்கின்றனர். இவரது மகனொருவர் லண்டனில் கலாநிதிப் பட்டம் பெற்று பண்புடன் சேவை செய்கின்றார். இவரது மூத்தமகன் ந.சச்சிதானந்தன் அவர்கள் லண்டனில் சேவை செய்வதுடன் இணுவில் மண்ணில் ஊறிய பண்பினால் பிரித்தானிய சைவத் திருக்கோயில்களின் ஒன்றியத் தலைவராகத் தொண்டாற்றுகிறார். சச்சிதானந்தனின் சமயப்பணியின் தாகம் நல்ல சமயப் பேச்சாளர்களை அழைப்பித்து லண்டனிலுள்ள திருக்கோயில்களைச் சிறப்பிப்பதாகும். இதேசமயம் எமதூர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் சமய நிகழ்ச்சிகளில் ஒளிவீசியதை அறிந்து அவரை அணுகி லண்டன் மாநகரத்தில் தொடர்சொற்பொழிவுகள், சமயமாநாடுகளில் பங்குபற்ற வைத்தார். திருமுருகனுக்கு மட்டுமன்றி லண்டன் வாழ், உலகத் தமிழர்கள் அனைவருக்கும் பெருமைதேடிய பிரித்தானிய திருக்கோவில் களின் ஒன்றியத் தலைவர் என்ற வகையிலும் இணுவில் மண்ணில் உதித்தவர் என்ற வகையிலும் நாம் பெரு மகிழ்வடைந்தோம். திருமுருகனின் கவர்ச்சியான ஆழ்ந்த இனிய சமயக் கருத்துக்களை மீண்டும் கேட்கும் ஆவலில் வருடாவருடம் அழைப்பித்துத் தொடர் சொற்பொழிவுகளை ஏற்படுத்தி மகிழ்கின்றனர். இவ்வருடம் நவராத்திரி விழாவையும் சிறப்பாக நடாத்தித் திருமுருகன் அவர்களைக் கௌரவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் நடராசா ஆசிரியரின் பிணைப்பால் அவரது பிள்ளைகள் நல்ல நிலையிலிருப்பதுடன் எம்மூர் நற்பெயர் பெற அன்னை சிவகாமியின் கிருபாகடாட்சமே உதவுகிறது.

வளர்க வாழ்க இவர்தம் நற்பணிகள்

மு.சிவலிங்கம்

## சேர்.பொன்.இராமநாதன்

கல்வியால், ஆன்மீகச் சிந்தையால், கலையார்வத்தினால் சைவத் தமிழுலகின் தலைசிறந்த பெரியார் சோ.பொன்.இராமநாதன் அவர்கள் பிறப்பால் மானிப்பாயைச் சேர்ந்தவர். ஆரம்ப வாழ்வில் மானிப்பாயில் ஊறிய சைவமும் தமிழும் கல்வி மூலம் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று பட்டம் பதவிகள் பெற்று கடமையாற்ற வைத்ததால் இவர் பிறந்த இடத்தைத் தொடர்ந்து வாழ்விடமாக்கிக் கொள்ள முடியவில்லை.

இவரது கல்வித் திறமையும் வசீகரமான பேச்சும் மேல் நாட்டினரிடையே இவருக்கு நன்மதிப்பைத் தேடித் தந்தன. இவரது ஆற்றலினால் இலங்கையின் தென்பகுதியில் சிங்கள, இஸ்லாமிய மக்களிடையே ஏற்பட்ட கலவரத்தை, அன்று இலங்கையைப் பரிபாலித்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மேலிடமான அரசசபை முதல்வரிடம் சென்று பேசிச் சிறப்பான முறையில் தீர்த்து வைத்தார். இலண்டனிலிருந்து தாய்நாட்டுக்கு வந்தபோது சிங்களத் தலைவர்கள் துறைமுகத்திலிருந்து தாமே இவரது ஊர்வல வண்டியினை இழுத்து அன்புடன் அழைத்து வந்தனர். இவர் நன்கு கௌரவிக்கப்பட்டார். இதேகாலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினால் வழங்கப்படும் அதியுயர் பட்டமான "சேர்" என்ற பட்டமும் பெற்றிருந்தார். இலங்கைவள நாட்டில் தமிழர் சிறுபான்மை இனமாக இருந்தபோதும் இலங்கை சட்ட நிரூபண சபைக்குக் "கற்றறிந்த இலங்கையர்" என்ற கோதாவில் (ஒரேயொரு) அங்கத்தவர் பதவி இவருக்குக் கிடைத்தது.

எப்படியான மேல்நாட்டுக்கல்வி, பட்டம் பதவி கிடைத்தாலும் தம்மிடம் ஊறியிருந்த சைவத்தையும் செந்தமிழையும் இவர் என்றும் மறக்கவில்லை. சைவப்புலவர் பரீட்சையிலும் தெரிவானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலம் தொடக்கம் 20 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் பதியப்பட்ட புலவர்கள் பட்டியலில் இவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரது ஊர் மருதனார்மடம் இணுவில் என ஈழத்துத் தமிழ்ப்புலவர் மாநாட்டுச் சிறப்பு மலரில் தமிழவேள் அவர்களால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சமயப்பற்றுடன் வரும் அறம், தெய்வீகம் இறுதியில் அமைதிபேணும் நிலைகள் யாவும் இயற்கையாகவே சிந்திக்கச் செய்யும். தமது சிறப்புடைய காலத்திலே கொழும்பில் ஓர் சிறந்த சிவன் ஆலயத்தை நிறுவினார். இன்றுவரை அவரது சந்ததியினர் சிறப்புடன் பராமரிக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சைவமும் தமிழும் வாழத் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரி (தற்போது யாழ் பல்கலைக்கழகம்), பரமேஸ்வரன் ஆலயம் ஆகியவற்றை அமைத்தார். அவை இன்றுவரை நன்கு பிரகாசிக்கின்றன. பெண்களுக்கெனவும் எதிர்கால மன அமைதிக்காகவுமெனக் கல்விக்கூடம் ஒன்று அமைக்க உத்தேசித்தார். இணுவில் கிராமத்தின் வனப்பும் கல்வி, கலை, தெய்வீகச் சூழல் என்பனவும் இவரைக் கவர்ந்ததால் இக்கிராமத்தின் வடபால் பிரதான வீதியின் கீழ்த்திசையில் ஏறக்குறைய 25 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கினார். பெண்களுக்கான இராமநாதன் கல்லூரியை 1913 ஆம் ஆண்டு நிறுவினார். இவற்றிற்கான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. அத்துடன் சைவ சமயத்தைச் சேர்ந்த பெண்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்குக் கண்டிப்பாகத் தமிழ், சைவசமயம், கலை, கலாசாரம் தமிழ் நடை உடை தமிழர் பண்பாடு பிரகாசிக்கும் படி கற்பிக்க வேண்டுமென்று சித்தங்கொண்டார்.

இணுவையின் அமைதியான தெய்வீகமும் நற்சூழலும் இயற்கையான கலை மணமும் இவருக்குப் பூரண திருப்தியைக் கொடுத்தது. இக்கல்லூரியின் வடமேல் திசையில் தமக்கென ஒரு மனையையும் தோற்றுவித்து அறவாழ்வு வாழ்ந்தார். இவரது கனவுப்படி பாடசாலை நன்கு விருத்தியானது. கலைகள் (நடனம், சங்கீதம், ஏனைய வாத்தியங்கள்) இன்று இலங்கையின் வடபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க அதிகாரச் சிறப்புடன் செயற்படுகிறது. இவ்விடத்தில் ஏற்கனவே அமைந்த பல்லப்பை வைரவர் கோயில், பூவோடை மயானம் போன்ற இடங்கள் இவரது தெய்வீகச் சிந்தனை, ஏகாந்த அமைதி பேண உதவின.

இச்சூழலில் தனது ஆவி போனாலும் தம் பூதவுடல் இவ்விடத்தில் அமைதியை அனுபவிப்பதன் பேரில் சமாதியடையவும் அதேயிடத்தில் ஓர் ஆலயம் அமைக்கவும் ஏற்பாடு செய்திருந்தார். இவரது மருமகன் சு.நடேசபிள்ளை என்ற கல்விமான் தஞ்சாவூரில் இருந்து இங்கு வந்து மாமனாரின் பணியை மேற்கொண்டு அவரது கனவை நனவாக்கிச் சிறப்படையச் செய்தார். இணுவில் வாழ் நன்கு படித்த புலவர்கள், பண்டிதர்கள் சிறந்த அறிவுடையோர் இவ்விடத்தில் அன்றுதொட்டுக் கூடிப் பல நன்மைகளை அனுபவித்தனர்.

ஒரு நல்ல உள்ளம் நெறி தவறாது தூய சிந்தனையில் வாழ்ந்ததால் அது உறங்கிய பின்பும் தெய்வச்சூழல், புனிதம், அமைதி, இடத்துக்கேற்ற கௌரவம் யாவும் இவ்வற நிலையத்தைத் தேடி வருவதுடன் மேன்மேலும் இதனைச் சிறப்படையச் செய்கின்றன. இந்தவகையில் இராமநாதன் கல்லூரி யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடம், கோட்டக்கல்வி அலுவலகம் யாவும் இவ்வளாகத்தில் பிரகாசிக்கின்றன.

பல்லப்பை வைரவர் கோயில், மருதனார்மடம் சந்தை மட்டுமன்றி அண்மையில் நனிசிறந்த ஆஞ்சநேயர் ஆலயம் யாவும் சீரிணுவைத் திருவூருக்கு அணிசேர்க்கின்றன. சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் உருவச்சிலை கொழும்பில் அமைக்கப்பட்ட போதும் இவர் வாழ்ந்த இடமான இராமநாதன் கல்லூரி முன்றிலிலும் ஒரு முழு உருவச்சிலை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவரது சமாதியமைந்த இடத்தில் 1938 - 1940 ஆண் ஆண்டில் இராமநாதேஸ்வரன் கோவில் இந்திய சிற்பக்கலை மரபையொட்டி இந்தியக் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டுச் சிறந்த கருங்கற்களால் கட்டப்பட்டு இன்றும் புனிதமாகப் பேணப்பட்டு வருவது அன்னாரின் இறைபக்தி நம்பிக்கை என்பவற்றாலாகும்.

மு.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டிதர் வித்துவான் சைவப்புலவர் இ.திருநாவுக்கரசு

ஈழத்துத் திருவாரூர் என்ற சிறப்பைத் தன்னகத்தே கொண்டது இணுவிலம்பதி. இணையிலி என்ற பெயரும் இதற்கு உண்டு. இணையில்லாத பதி இணுவில் என்பதே பொருள்.

இப்பதியில் கற்று வல்ல அறிஞர்களும், கலைஞர்களும் நிறைந்து வாழ்ந்தார்கள். இப்பொழுதும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

சமீபத்தில் அமரத்துவம் எய்திய பண்டிதர் வித்துவான் சைவப்புலவர் இ.திருநாவுக்கரசு கற்றோர் மத்தியில் ஒருவராக வாழ்ந்தார்.

இராமுப்பிள்ளை பத்தினிப்பிள்ளை தம்பதியருக்கு மூன்றாவது பிள்ளையாக 17.03.1923 இல் பிறந்தார் திருநாவுக்கரசு அவர்கள். பண்டிதர் இராசலிங்கம், முன்னாள் தபாலதிபர் இராசரத்தினம், முன்னாள் வடமாநிலக் கல்வி அதிபதி சுந்தரலிங்கம் ஆகியோரும் பண்டிதர் திருநாவுக்கரசு அவர்களின் சகோதரர்களாவர்.

இணுவில் இயற்றமிழ் ஆசிரியர் அ.க.வைத்தியலிங்கப்பிள்ளை, பண்டிதர் சி.கா.தம்பையா முதலியோரிடம் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றவரான திருநாவுக்கரசு எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவன் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்தார். ஆசிரியர்களது ஆசீர்வாதத்தினால் இலக்கிய, இலக்கணப் பாடங்களில் நல்ல தேர்ச்சியைப் பெற்றார். பரமேசுவர ஆசிரிய கலாசாலையிற் சேர்ந்து படித்து 1944 இல் பயிற்சி பெற்ற ஆசிரியராக வெளிவந்தார்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பண்டிதர் பரீட்சையிலும் முதலாம் இடத்தைப் பெற்றார். இலங்கையில் பண்டிதர்கள் பலர் வாழ்ந்தார்கள். பெரும்பாலானவர்கள் மேற்குறித்த சங்கப் பரீட்சைகளில் ஒன்றிலேயே சித்தியடைந் திருப்பார்கள். இரு சங்கப் பரீட்சைகளிலும் சித்தியெய்திய விரல் விட்டு எண்ணப்படக் கூடியவர்களில் பண்டிதர் திருநாவுக்கரசுவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பாடசாலைகளில் உதவி ஆசிரியராகவும், சிரேஷ்ட ஆசிரியராகவும், அதிபராகவும் நல்ல சேவையாற்றினார். நல்லதொரு மாணவர் உலகை உண்டாக்கிய பெருமை இவருக்குண்டு. நல்லை நகர் நாவலர் பெருமான் ஸ்தாபித்த நாவலர் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இவர் அதிபராகப் பணியாற்றிய காலத்தைப் பொற்காலம் என்று குறிப்பிடலாம்.

நாவலர் மகா வித்தியாலத்தை அரசு கையேற்றபோது நாவலர் தர்மங்களைப் பேணுவதற்கென அமைக்கப்பட்ட நாவலர் தர்மகர்த்தா சபையின் செயலாளராகப் பணிபுரிந்தார்.

நாவலர் வரைந்த கல்வித் திட்டப்படி நாவலர் பாடசாலையில் பாலபண்டித வகுப்புக்கள், திருமுறை வகுப்பு, சமஸ்கிருத வகுப்பு, சைவப்புலவர் வகுப்பு என்பன ஒழுங்காக நடைபெற வழிசெய்தார்.

சங்கீதத் துறையில் அக்கறை கொண்டு படித்துச் சங்கீத கலாவித்தகர் பட்டத்தினையும் பெற்றார்.

சங்கீத கதாப்பிரசங்கம் செய்வதில் உபந்நியாசம் நிகழ்த்துவதில், புராணங்களுக்குப் பயன்விரிப்பதில் மிகவும் வல்லவராக நாட்டில் விளங்கினார்.

சிறந்த கூட்டுறவாளராகவும், விவசாயியாகவும் தமது ஓய்வுக் காலத்தைக் கழித்த பண்டிதர் அவர்கள் அத்துறைகளில் தமது முத்திரையைப் பதித்துக்கொண்டார்.

சிறந்த கவிஞரான இவரது ஆக்கங்கள் பத்திரிகைகளில் பெரிதும் வரவேற்கப்பட்டன. இவர் பாடிய குமாரபுர ஊஞ்சல், இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் ஊஞ்சல், இணுவை அந்தாதி என்பன இவரது புலமையை நன்கு எடுத்து விளக்குவனவாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது அருமையான மனைவியார் கண்ணகைப்பிள்ளை (மகேஸ்வரி) கணவர் பண்டிதர் அவர்களைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றிவந்தார். இவர்களது மூன்று பிள்ளைகளும் இலக்கியவாதிகளாகத் திகழ்கின்றனர். திருமதி பத்மாசனி வரதராசா, திருமதி பாமதி மயூரநாதன், மகேஸ்வரகுமார் ஆகியோரே அருமைப் பிள்ளைகளாவர். மூவரும் பட்டதாரிகளாவர். மகன் யாழ்மாவட்டச் சமுர்த்தி உதவி ஆணையாளராகப் பணியாற்றுகிறார்.

இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் இவர்களது குல தெய்வமாவர். பெரிய கோயில் என்று வழங்கப்படும் நொச்சியொல்லைக் கந்தனில் ஆராத பக்தி கொண்டவரான பண்டிதர் அவர்கள் ஆலய வளர்ச்சிக்குரிய சபைகளில் அங்கம் வகித்து மிகவும் உற்சாகமாகப் பாடுபட்ட பெருந்தகையாக விளங்கினார்.

வரம்பிலா வித்தகர் என்று உலகத்தோரால் பாராட்டப் பட்டவரான பண்டிதர் சைவப்புலவர் வித்துவான் இராமுப்பிள்ளை திருநாவுக்கரசு அவர்கள். இலங்கை ஆசிரியர்களிடையே தமிழ் இலக்கண, இலக்கிய அறிவு தழைத்துப் பெருகுவதற்குக் காரணகர்த்தராகத் தமிழ் ஆசிரியர்களுக்கான ஏராளமான சேவைக்காலக் கருத்தரங்குகளில் உரையாற்றி வந்தமை குறிப்பிடப்பட வேண்டிய பணியாகும்.

நியதியின்படி 09.07.1996 செவ்வாய்க்கிழமை புண்ணிய வேளையில் தமது 79 ஆவது வயதில் இவர் சிவபதம் அடைந்தார். இவரது அரியசேவை இன்றும் பலராலும் பாராட்டப் படுகிறது.

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்

## பண்டிதர் கார்த்திகேசு (சரவணமுத்து)

இவர் கதிர்காமரின் மகன் ஆவார். பரமானந்தவல்லி அம்மன் கோவிலின் அண்மையில் வசித்தவர். ஆரம்பக்கல்வியைச் சேதர்ச் சட்டம்பியாரிடமும் வடிவேற்சுவாமிகளிடமும் கற்றவர். மேல்வகுப்பை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர். தனது குல தெய்வமாகிய பரமானந்தவல்லி அம்மனிடம் இடையறாத பக்தி கொண்டவர். புன்னாலைக்கட்டுவன் வித்துவான் கணேசையரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றவர். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் இணுவிலிலிருந்து சித்தியெய்திய இருவரில் இவரும் ஒருவர். மாணிக்கச் சட்டம்பியாரிடம் அகத்திணை, புறத்திணைகளில் சில நூல்களைக் கற்றவர். இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். பல குழந்தைப் பாடல்களைப் பாடியவர். தனது ஆசிரியர் கூறியபடி ஓர் ஊஞ்சற் பதிகம் பாடிக்கொடுத்தவர். மதிநுட்பம் மிக்கவர். குறுகிய காலம் வாழ்ந்தபோதும் தனது நுட்பமான கல்வியறிவால் சைவத்துக்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்றியவர். இவரது திறமையை இன்றும் ஊர்மக்கள் திறம்பட நயப்பதுடன் நன்மதிப்புடன் நினைவுகூருகின்றனர்.

## திரு.செ.இராசதுரை ஆசிரியர்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக் கல்வியை இணுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் மேல் வகுப்புக்களைக் கோண்டாவில் சைவ வித்தியாசாலையிலும் கற்றவர். ஆசிரியர் பரீட்சையிற் சித்தியெய்தியதும் இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையில் தொடர்ந்து ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். சேதர்ச் சட்டம்பியாரிடமும் சதாசிவச் சட்டம்பியாரிடமும் திருமுறை, பண் ஆகிவற்றைக் கற்றவர். புராண படனத்துக்கான உரையைச் சிறந்த இராகம் அமையச் சொல்லிப் பெயர்பெற்றவர். இவரும் சைவத்துக்கும் தமிழுக்குமாக நன்கு தொண்டாற்றியவர். இவரது இறுதிக்காலத்திலும் பிற்சந்ததியினரின் காலத்திலும் பல சிறப்புகளுடனும் வாழும் பேறுபெற்றவர்.

## பண்டிதர் அருளம்பலம் ஆசிரியர்

இவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்தவர். ஆரம்பக் கல்வியை அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும் உயர்கல்வியைக் கோண்டாவில் சைவத்தமிழ் வித்தியாசாலையிலும் கற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இடையறாது வழிபட்டவர். சிறந்த ஒழுக்கசீலர். இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். புகுந்த இடமான கோண்டாவிலில் வசித்தவர்.

## திரு. வேலாயுதபிள்ளை ஆசிரியர்

இப்பெரியார் இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக்கல்வியை இணுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றவர். மேற்படிப்பைக் கோண்டாவில் சைவ வித்தியாசாலையில் கற்றவர். ஆசிரிய பரீட்சையிற் சித்தியெய்தியதும் சைவவித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலைகளிற் சேவையாற்றியவர். சிறிய தந்தையார் சதாசிவச்சட்டம்பியாரிடம் சமயத்துறையிற் கற்றவர். கப்பனை விநாயகப் பெருமானிடம் மிகுந்த பக்திகொண்டவர். புராண படனஞ் செய்யும்போது சிறப்பாக உரைசொன்னவர். ஆசார சீலராகவே வாழ்ந்த இவர் சமய சமூக சேவைகளிலும் ஈடுபட்டு மஞ்சத்தடி விவேகானந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தில் சேவை செய்தவர். பண்ணிசை, ஊஞ்சற்பாட்டு ஆகியவற்றை மிக இனிமையாகப் பாட வல்லவர். இவரது பிற்காலமும் பிற்சந்ததியும் சிறந்தபெறுபேற்றுடன் அமைந்துள்ளன.

## பண்டிதர் வே.சண்முகலிங்கம்

பண்டிதரும் சைவப்புலவருமான வேலுப்பிள்ளை சண்முகலிங்கம் அவர்கள் ஏழாலையைச் சேர்ந்தவர். இளமைக் கல்வியை ஏழாலை சைவப் பாடசாலையிலும் உயர்கல்வியைக் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் கற்றவர். பால பண்டிதர், பண்டிதர், சைவப்புலவர் பரீட்சைகளிற் தேறியதோடு தமிழ், வடமொழி, ஆங்கிலம், ஆகிய மும்மொழிகளிலும் வல்லுநரானார். தம் உறவினரான ஏழாலைப் பண்டிதமணி மு.கந்தையா அவர்களிடம் சைவ சித்தாந்தத்தையும், வட மொழியையும் வேத சிவாகமங்களையும் பண்டிதர் பொன்னுத்துரை, வித்துவான் கந்தசாமி ஆகியோரிடம், தமிழ் இலக்கண இலக்கியம் ஆகியவற்றையும் ஐயந்திரிபறக் கற்றுப் புலமை பெற்றவர். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் பயின்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இணுவில் அறிஞர் மு.பெரியதம்பி ஆசிரியரின் இளைய மகளை மணம்புரிந்து மஞ்சத்தடி இணுவிலில் வாழ்ந்தவர். இவர் ஏழாலையில் ஒரு பாடசாலையிலும், இணுவில் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் ஆசிரியப்பணி ஆற்றியவர். யாழ் இந்துக் கல்லூரி இந்து இளைஞர் மன்றத்தில் 20 வருடங்களாகக் காப்பளாராக அறப்பணியாற்றி இம்மன்றத்தை அணிசெய்த காலத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார். இதனால் இம்மன்றத்தினர் இவரது திருவுருவப் படத்தை இந்து இளைஞர் மன்றத்தின் அலுவலகத்தில் திரைநீக்கஞ் செய்து கௌரவம் வழங்கினர்.

சிறந்த விவசாயியான இவர் நல்ல திடகாத்திரமான தேகமும் வலிமையும் ஆசாரமும் நற்பண்புமுடையவர். இவர் சுத்தபோசனஞ் செய்பவர். தமது சேவையின் ஓர் அங்கமாக அருணகிரிநாத சுப்பிரமணிய சுவாமி பேரில் ஊஞ்சற்பாட்டுப் பாடியவர். மஞ்சத்தடி விவேகானந்த கிராம அபிவிருத்திச் சங்கம், விவேகானந்தா சனசமூக நிலையம் ஆகியவற்றின் முதுபெரும் உறுப்பினர். இவரது சேவையால் இவ்வயலிலுள்ள திருக் கோயில்களும், காரைக்கால் மயானமும் காலத்துக்குக்காலம் சிரமதானஞ் செய்யப்பட்டுச் சிறப்படைந்தன. விவேகானந்த கிராம முன்னேற்றச் சங்கத்திலும் கோயில்களிலும் சமய விழாக்கள், கூட்டுப்பிரார்த்தனை, பஜனைகள் நடாத்தி அரிய தொண்டாற்றிய இவர் தமது மனைவியையும் இரு புத்திரர்களையும் அறநெறிவாழ்வை மேற்கொள்ள வைத்தவர். இணுவில் சைவத் திருநெறிக்கழகமும் சிவகாமி அறநெறிப் பாடசாலையும் ஆரம்பமாவதற்கு ஆணிவேராக இருந்தவர். சிறந்த சமயபக்தர். வெள்ளை உள்ளம், தூய வெண்ணிற ஆடை, நெற்றியில் துலங்கும் வெண்ணீறு ஆகியவையே இவரது தோற்றமாகும்.

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

## இரத்தினம், திருமதி ஞானகலா இரத்தினம்

இவர்கள் இணுவில் மேற்கை வதிவிடமாகக் கொண்ட தம்பதிகள் ஆவர். ஆரம்பகாலம் தொடக்கம் தமிழ், ஆங்கிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய மொழிகளில் நன்கு கற்றுத் தேறியவர்கள். ஞானகலா அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றித் தொடர்ந்து தமிழ்ப் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்ந்தவர். இரத்தினம் அவர்கள் தமது கல்வியறிவினால் ஆங்கில நூல்களைத் தமிழுக்கு மொழிபெயர்த்து நூலுருவாக்கியவர்கள். இவர் பல நூல்களுக்குப் புத்துயிர் அளித்தவர். பகவத்கீதையினைத் தமிழில் மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டவர். மற்றும் பல திறமையான ஆக்கங்களை அமைதியாகவும் சிறப்புடனும் செயற்படுத்தியவர். இவர்களால் இணுவை மண் சிறப்படைந்தது.

## பண்டிதர் இ.இராசலிங்கம்

இணுவில் மேற்கில் கற்றுணர்ந்து புகழ்பரப்பிய சகோதரர்களின் குடும்பத்தில் தலைமகனாகப் பிறந்த இவர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிற் தேறிய ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றியவர். இணுவில் மண்ணின் மகிமை இவரைச் சமயமும் செந்தமிழும் நன்கு கற்றுத்தேறிப் பண்டிதர் தேர்வில் தேறிப் புலமையடைய வைத்தது. தன்னலமற்ற அருஞ் சேவையாற்றிய இவர் சிறந்த நற்பண்புகளும் அமைதியான சுபாவமுமுடையவர். இறைபக்தியிலும் மிக்கவர்.

வை.க.சிற்றம்பலம்

## அமரர் க.ஆறுமுகம் ஆசிரியர்

கோப்பாயில் பிறந்த இவர் உயர்பண்பாலும் தனது புனித சேவையாலும் ஆன்மீக சிந்தனையாலும் தூய பணியாம் எழுத்தறிவித்தலை மேற்கொண்டவர். இணுவில் பெருங்குடியிற் தோன்றிய சரஸ்வதி என்னும் நல்லாளை இல்லறத் துணையாகக் கொண்டவர். ஐந்து பிரபல பாடசாலைகளில் கடமையாற்றியவர். தந்தை என்பவரின் கடமை இதுவென வள்ளுவரின்

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறளில் இலக்கணப்படி ஏழு சற்புத்திரச் செல்வங் களைப் பெற்றெடுத்துப் படிப்பித்து நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் என்றாற்போல வீட்டிலேயே பல்கலைக்கழகம் அமைத்தவர். இக்கூட்டுக் குடும்பத்தில் ஆசிரியர் 14 பேர் (பெற்றோர் உட்பட) ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபர், கணக்காளர், வங்கியாளர், மாணவச் செல்வங்கள் யாவற்றையும் கண்காணிக்கும் பீடாதிபதியாக வாழ்ந்து அமரத்துவம் அடைந்தவர். இவரது கல்வியை விட தமிழர் பண்பாடாம் சகல சிறப்புக்களும் இவரிடம் குடிகொண்டிருந்தன. தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் உலகப்புகழ் பெற்ற ஆத்மஞானி சைவ சமயச் சொற்பொழிவாளர், தெல்லிப்பழை துர்க்காதேவியின் உத்தம பணியாளரை (செற்சொற்செல்வரை) இவ்வுலகுக்கு அறிமுகஞ் செய்தவர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வி, சமயம், கலாசாரம், ஆகமவிதிகள், சேவை, கொடை, குடும்பம் யாவும் சிறக்க வாழ்ந்து தமை ஓர் முன்மாதிரியாகவும் எமது மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து காட்டிய பெரியார் ஆறுமுகம் என்றால் அது மிகையாகாது.

## சமயசமூக சேவைக்கோர் வழிகாட்டி ஆறுமுகம் செல்லையா

இணுவில் கிராமத்தில் முதிர்ந்த பண்பான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் செல்லையா அவர்கள். இவர் இளமைக் காலத்தில் குடும்பம் பொருளாதார நிலையில் முன்னேறுதற்பொருட்டுப் போதிய கல்வியறிவு பெறாது விவசாயத்திலும் சுருட்டுத் தொழிலிலும் ஈடுபட்டவர். இவரது புகுந்த இடத்தின் அண்மையில் அமர்ந்தருளும் மஞ்சத்தடி முருகன், கப்பனைப் பிள்ளையார், மாரியம்மன் ஆகிய தெய்வங்களை இடையறாது வணங்கியதுடன் சமயப்பற்றாளராகவும்மானார். இவரது ஒரே மகன் வெளிநாட்டில் வேலை பார்த்துப் பெற்றோரைப் பராமரித்ததால் தனது வீட்டிலுள்ள சிறிய பணிகளுடன் சமய, சமூகத் தொண்டாற்ற முற்பட்டார். மஞ்சத்தடி கிராம முன்னேற்றச் சங்கம் ஆரம்பித்த காலம் தொட்டு அதன் வளர்ச்சியில் முழுக் கவனத்தையும் செலுத்தினார். கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர் என்ற வகையில் சங்கப் பணிகளான சிறுவர் பாடசாலை, நெசவுசாலை, வாசிகசாலை, சிறுவர் போஷாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையம் போன்ற பல அமைப்புக்களிலும் தம்மை அர்ப்பணித்து முழுநேரத் தொண்டனாக மாறினார். இதே சமயம் அயலிலுள்ள கோயில்களிலும் மிகச் சுறுசுறுப்புடன் பல ஆலயப் பணிகளைச் செய்தவர். மஞ்சத்தடி கிராம அபிவிருத்திச் சங்கம் மூலம் செய்யப்படும் கோயில் சிரமதானம், காரைக்கால் மயானச் சிராமதானம் போன்றவற்றில் வேண்டிய உபகரணங்கள் கொடுத்தல், சிரமதானப் பணி செய்யும் தொண்டர்களுக்குச் சிற்றுண்டி நீராகாரம் வழங்குதல் போன்றவற்றில் இவர் பணி ஒப்பற்றது. சிறுவர் பாடசாலை ஆரம்பித்த காலம் முதல் தமது இறுதிக்காலம் வரை பாடசாலை மாணவர்களின் உற்ற நண்பனாகவே அன்புடனும் பண்புடனும் நடந்தார். நகைச் சுவையாகப் பேசுவதிலும் இவருக்கு நிகர் இவரேதான். இவர் தன்னை ஆ.செ என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுவார். மழலைச் செல்வங்களும் செல்லையா அப்பு என்று கூப்பிடும்போது இவர் பேரானந்தம் அடைவார். சமய, சமூக சேவையில் தன்னையே அர்ப்பணித்து மிக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார். கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு வரும் பல்வேறு உயரதிகாரிகளும் இவருடன் நன்கு பழகியதால் பெரு மதிப்பையும் பெற்றுக்கொண்டார். சேவைக்கென்றே வாழ்ந்த இவர் மஞ்சத்தடி வாழ் மக்கள் எவரும் இலகுவில் மறக்க முடியாத கனவான் என்றால் மிகையாது. இவரது சேவைக்காலம் இப்பிரிவின் பொற்காலமாகும்.

மூ.சிவலிங்கம்

## சி.மயில்வாகனம்

இணுவில் கிழக்கைச் சேர்ந்த சிதம்பரநாத உடையாரின் மகனான இவர் இவரது கல்வியறிவினால் சிங்கப்பூரில் பணியாற்றியவர். இவரிடமிருந்த கல்விப் பற்றினால் இணுவில் மத்திய கல்லூரியின் அடிநாள் அமைப்பான இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை அமைக்க இவ்வூர் அப்பாக்குட்டி, பொன்னையா ஆகியோருடன் மூலவராக உழைத்தவர். சிங்கப்பூரில் தமது சகோதரர் மாணிக்கம் (முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவர்) அவர்களுடன் வேண்டிய நிதியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரித்து வழங்கினார். கட்டடவேலைகளுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களின் வேதனத்துக்குமாகவும் நிதிசேகரித்து வழங்கிய இவர் ஆங்கிலேயரின் உடையணிந்தும் தமிழரின் தலைப்பாகை அணிந்தும் தனது சீருடையில் என்றும் காட்சியளிப்பார். இவரது பரம்பரை இன்றும் சீரும்சிறப்புமாக இயங்குவது இவர் தகைமைக்கு எடுத்துக்காட்டாகும்.

## சி.மாணிக்கம்

இவர் இணுவில் கிழக்குச் சிதம்பரநாத உடையாரின் புதல்வர். இவர் ஆங்கிலம், தமிழ் நன்கு படித்தவர். பிற்காலத்தில் கிராமசபை (சுன்னாகம் பட்டினசபையுடன்) தலைவராக இருந்தவர். எமது கிராமத்திலிருந்து கிராமசபைத் தலைவர் பதவியை அலங்கரித்துச் சிறந்த தொண்டாற்றியவர்.

## வ.சுப்பையா

இணுவில் மேற்கைச் சேர்ந்த இவர் இணுவில் கந்தசுவாமியாரிடம் இருந்த பக்திமிகுதியால் பல தொண்டுகளைச் செய்யும் காலத்தில் இக்கோயிலில் அமைக்கப்பட்ட தேர்த் திருப்பணிச்சபையின் ஆலோசகராகவும் பாதுகாப்பாளராகவும் ஊக்குவிப்பாளராகவும் இருந்து தேர் உலாவர அரும்பாடு பட்டவர். இவரது தூயமனம் போல இவரது சற்புத்திரர்கள் கல்விச் சேவையில் அதிபர் பதவிகளை வகித்து இணுவில் மண்ணுக்குப் புகழீட்டுகின்றனர்.

## ஆ.சுந்தரம் (சுந்தரப்பா)

இவர் இணுவிலை வதிவிடமாகக் கொண்டவர். பரராச சேகரப்பிள்ளையாரின் மீளா அடிமையான இவர் தேர் மற்றும் ஊர்திகளை உருவாக்க உழைத்து அவற்றைப் புனிதமாகப் பேணியதுடன் பசனை பாடல். இதர கோயில் தொண்டு களுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். இவரது களங்கமில்லாத நெஞ்சில் விநாயகர் குடியிருந்து தமது பணிகளைச் செய்வித்தவர். ஆலய சமூகத்தில் அனைவரது மதிப்பையும் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் தெற்கில் வாழ்ந்த சி.நாகமுத்து கொடியேற்றத் திருவிழாவை ஆரம்பகாலம் தொட்டு நான்கு தலைமுறை பரம்பரைபரம்பரையாகச் செய்துவருகின்றனர். இவர் இறை தொண்டுகளுடன் திருவிழாவையும் செய்தவர். இக்கோயில் முன்னேற்றத்தில் க.கணபதிப்பிள்ளை, சீ.அப்பையா, சுப்பையா, வே.ஆறுமுகம், ச.தம்பையா, இ.ஆறுமுகம், த.ஆறுமுகம், சு.தியாகர், கோ.பொன்னர், இலங்கநாதன் வேதவனம், செ.சண்முகம், ஆ.சுந்தரம், ஆ.குமாரசுவாமி போன்ற அநேகர் உள்ளன்புடன் பரராஜசேகரப்பிள்ளையாரின் மீளா அடிமைகளாகவும் உடல், பொருள், ஆவி யாவற்றையும் அர்ப்பணித்து இறை சேவைசெய்து இன்புற்றனர்.

மூ.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவைத் திருவூரை அலங்கரிக்க வாழ்கின்ற பெரியார்கள்

**பேராசிரியர் சபா.ஜெயராசா**

இன்று வாழ்பவர் அன்பர் சபா.ஜெயராசா அவர்கள். நல்ல கவிஞர், உளவியலாளர், கற்றறிந்தவர். அன்புடையார் சால்பின் இலக்கணமானவர். இணுவில் கிராமத்தின் இயல்பான ஆத்மீக விருப்பாளர். கல்விப்புலத்தில் பேராசிரியர். கவின் கலையான நடனத்துறையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் தலைவர்.

காங்கேசன்துறை வீதியிலிருந்து இணுவில் கந்த சுவாமியைத் தரிசிக்கும் சந்தியின் இடப்புறத்தே அவரது மனை. சத்தியசாயி நெறியாளர். அந்நிறுவனத்தில் இணைந்த ஆன்மீக ஈடுபாடுள்ளவர். சாயி கல்வி நூலொன்றைத் தமிழில் தந்துள்ளார். நல்ல சிந்தனையாளர். சாயி சிந்தனையுடையோர் ஆதலால் நன்னெறி நாட்டம் இயல்பானது. ஆன்மீக உரையாளர். அன்றி நல்ல ஆன்மீக ஈடுபாடுள்ளோரை உரைசெய்ய வைத்து ஊருக்கு நல்லது செய்ய விரும்புபவர். பல சந்தர்ப்பங்களில் இணுவில் கிராமத்தில் இவரால் ஆன்மீகப்பெருக்கு ஆடிப் பெருக்காகப் பெருகியுள்ளது.

கல்வி, கலை தொடர்பாகப் பல நூல்களைத் தந்துள்ளார். இணுவிலுக்குப் பல இனிமைகளைத் தந்துள்ளார். நன்மை பயக்கும் விடயங்கள் பற்றிப் பலரும் இவரிடமிருந்து ஆலோசனை பெறுகின்றனர். ஆறுதல் பெறுகின்றனர். புன்முறுவல் பூத்த வதனத்துடன் எங்கள் கிராமத்துக்கு ஒளி தருகின்றார்.

இணுவில் கிராமத்தின் பக்திவளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் துணையாளர் வரிசையில் சபா.ஜெயராசாவும் ஒருவர். இணுவில் மண்ணின் வாசனையே இயல்பான பக்திநெறிதானே! ஆனால் அப் பக்தியால் பரமபதம் காணும் சித்திநிலை வாய்க்கச் சிறப்போடு உழைப்பது பூர்வபுண்ணியப் பேறன்றோ?

அறிவின் ஆழம் ஆன்ம விழிப்பிற்கு வித்திடவேண்டும். சபா.ஜெயராசா அவர்கள் ஆழ்ந்த அறிவுப்புலமை உடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்ம நாட்டமுள்ளவர். இன்றைய சூழலில் தேடற்கரிய பெருஞ்செல்வப்பேறு ஆன்ம விதைப்பே. "எல்லாம் சிவன் செயல் என்று அறிவதே சொல்லுச் சுதந்திரம் பெற வழி" என்று யோகர் சுவாமிகள் கூறிய வாக்கை மெய்ப்பிக்க வேண்டியது நம்பணி. இப்பணியில் சபா.ஜெயராசா அவர்களும் வழிபோகிறார் என்பது ஆன்மீக நாட்டமுடையோர் பெருமகிழ்வாகும்.

குகு.சண்முகநாதன்

## முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம் ஆசிரியர்

இவர் மஞ்சத்தடி இணுவிலைச் சேர்ந்த வை.கந்தரின் மகனாவார். ஆரம்பக்கல்வியை இணுவில் அமெரிக்கன்மிஷன் பாடசாலையிலும், மேல்வகுப்புக்களைக் கோண்டாவில் சைவப் பிரகாச வித்தியாசாலையிலும் பயின்றவர். ஆசிரியத்தொழிலை மேற்கொண்டு முப்பத்தாறு வருடங்கள் கடமையாற்றியவர். தெய்வ வழிபாட்டில் மிக ஈடுபாடுடையவர். புராணப் படிப்பிலும் உரைசொல்வதிலும் திறமைமிக்கவர். கவிபாடும் ஆற்றல் உடையவர். முப்பதிற்கு மேற்பட்ட பிரபந்தங்களை ஆக்கியவர். இவரது திறமையை அறிந்த இந்துசமய கலாசாரத் திணைக்களம் இவருக்கு கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது. 90 வயதுடைய இவர் இப்பொழுதும் நிதானமாகக் கவிதைகள் எழுதுவதிலும் சமய சம்பந்தமான நூல்கள் எழுதுவதிலும் தமது காலைத்தைக் கழிக்கிறார். இணுவில் மஞ்சம் செய்த பெரிய சந்நியாசியாரின் வரலாற்று மான்மியத்தைத் தமது 39 ஆவது நூலாகப் பாடியவர். 1992ஆம், 1995 ஆம் ஆண்டுகளில் கொழும்புத் தமிழ்ச்சங்கம் இவரது இரு கவிதை நூல்களுக்கு முதற்பரிசு வழங்கியது. இணுவில் சிவகாமியந்தாதி இவரால் பாடப்பட்டு வெளிவர இருக்கிறது. இவரது மூன்று புத்திரர்கள் சங்கீதம், பண்ணிசையில் சிறந்து விளங்குவது இவர் செய்த தவப் பேறாகும். தனது வயது முதிர்ந்த காலத்திலும் இறைவன் மீதுள்ள பக்தியால் காலையில் செபம், தவம், தியானம் ஆகியவற்றில் தன்னை ஈடுபடுத்தி வருபவர். இவரது சேவையால் இணுவை மண் பெருமையடைகிறது.

ஏழ.சிவலிங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழவேள் இ.க.கந்தசுவாமி

"குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே"

நல்லாசிரியர் இலக்கணத்தை மேற்கண்டவாறு குறிப்பிட்டார் பவணந்தி முனிவர் அவர்கள். இன்றைய ஆசிரிய உலகில் குறிப்பிட்ட இலக்கணத்துக்கு எத்தனை பேர் பொருத்தமானவர்கள் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது. எனினும் நல்லாசிரியர்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களை நாம் மறந்துவிடவுங் கூடாது.

புகழ்பூத்த இணுவிலம்பதியில் நான்கு திசைகளிலும் நல்லாசிரியர்கள் நிறைந்து வாழ்ந்தார்கள். இப்பொழுதும் வாழ்கின்றார்கள். அவ்வாறு வாழ்ந்துகொண்டிருப்பவர்களில் தமிழவேள் இ.க.கந்தசுவாமி அவர்கள் குறிப்பிடத்தக்க ஒருவராவர்.

இணுவிலில் இலட்சியத் தம்பதியராக வாழ்ந்தவர்களான கந்தையா. சிவக்கொழுந்து ஆகிய இருவரும் பெற்றெடுத்த அருமைப் பிள்ளைகளில் ஒருவரே திரு.கந்தசுவாமி அவர்கள்.

இளமையில் நன்கு கற்றவரான திரு.கந்தசுவாமி அவர்களுக்குச் சமயசேவை, சமூகசேவை என்பவற்றில் மிகவும் ஈடுபாடு உண்டாயிற்று. இளைஞர் சேவா சங்கத்தின் செயலாளராகி அப்பதவியின் மூலம் செயற்கரும்பணிகளை நிறைவேற்றினார். இணுவில் சிவகாமி அம்மன் கோயிலில் வெள்ளிதோறும் மாலை வேளைகளில் சைவப்பிரசங்கம் நடைபெற ஒழுங்குசெய்தார் திரு.கந்தசுவாமி. அப்பொழுது இச் சங்கத்தின் தலைவாராக இருந்தவர் பண்டிதர் சபா.ஆனந்தர் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திரு.சபா.ஆனந்தர் அவர்கள் இவருக்க நல்ல வழி காட்டியுமானார். இதனால் திரு.கந்தசுவாமி அவர்கள் இளமையிலேயே நல்ல பேச்சாளராகத் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சேர்ந்து பயிற்சி பெற்ற ஆசிரியராக வெளிவந்தார். இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம் (இப்பொழுது இணுவில் மத்திய கல்லூரி) அவரை ஆசிரியராக வரவேற்றது. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் பாராட்டக்கூடிய வகையில் திரு.கந்தசுவாமி ஆசிரியர் அவர்களது சேவை அமைந்தது. "சேவையே தெய்வம்" என்ற உணர்ச்சியுடைய இவர், ஆசிரியப் பணியுடன் சமூகசேவைப் பணியையும் மேற்கொள்ளலானார்.

கிராம முன்னேற்றச் சங்கத்தின் செயலாளராகப் பணி புரிந்தார். கிராமஞ் சிறப்புறத்தக்க வகையில் பழைய பாதைகள் திருத்தமுறவும் புதிய பாதைகள் தோற்றம் பெறவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். சின்னத்தம்பிப் புலவர் வீதி, காரைக்காற் சிவன் கோயில் வீதி, குமாரலிங்கம் வீதி என்பன புதுப்பொலிவு பெற உழைத்தவர்களில் இவரும் ஒருவராவர். இணுவில் சனசமூக நிலையச் செயலாளராக இருந்து முத்தமிழ் வளர ஆவன செய்துவைத்தார்.

இணுவில் புகையிரத நிலையம், தபாற்கந்தோர் முதலானவைகளின் தோற்றத்துக்கும் இவர் உழைத்த உழைப்பு மகத்தானது. உடுவில் கிராமசபை அங்கத்தவராக இருந்து அரசியல் துறையில் பணிபுரியும் வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது.

திரிகரண சுத்தியுடன் ஊருக்கு உழைத்துக் கொண்டிருந்த வேளையில் தலைநகர் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றார். இணுவில் ஊர்ச்சேவை, தலைநகர்ச் சேவைக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்தது.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் உலகப் புகழ்வாய்ந்த ஒரு ஸ்தாபனமாகும். அந்த ஸ்தாபனமும் இவரது சேவையை நாடியது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இவரது அரிய சேவை கால் நூற்றாண்டுக்கு மேல் நீடித்தது. கொழும்புத் தமிழ்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து நாடளாவிய வகையில் பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளை நடத்தி மாணவர் சமுதாயத்தை நன்கு உற்சாகப்படுத்தினார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் விசேட வகுப்புக்கள் நடைபெற முயற்சியெடுத்த இவர், சங்கக் கட்டட வேலைகளும் வளர்ச்சியடைய உழைத்தார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்குப் பல பெரியார்களை அழைத்துப் பிரசங்கம் செய்வித்தல், பெரியவர்களாக வாழ்ந்தவர் களின் புகழ்கூறும் கூட்டங்களை நடாத்துதல் என்பனவற்றுக்காக முக்கியமாக உழைத்தார். கொழும்புத் தமிழ்ச் சங்க வரலாற்றில் அழியாத ஒரு முத்திரையைத் திரு.இ.க.கந்தசுவாமி ஆசிரியரவர்கள் பதித்துள்ளார் என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

சிவகாமி அம்மை பிள்ளைத்தமிழ், பஞ்சவர்ணத்தூது ஆகிய நூல்கள் வெளிவர ஆவன செய்தார். இவ்விரு நூல்களும் அறிஞர்களது பாராட்டை மிகவும் பெற்றன.

மலேசியா, மொறிசியஸ், தமிழ்நாடு முதலாம் இடங்களில் இடம்பெற்ற மாநாடுகளுக்குச் சமுகமளித்தார். மொறிசியஸ் மாநாட்டில் இணுவில் இளந்தாரி கோயில் வழிபாடு குறித்து ஆய்வுக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார். பிரமச்சரிய வாழ்க்கையை அனுபவித்து வரும் இவரது கட்டுரைகள் பல இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ் ஏடுகளில் இடம்பெற்றுள்ளன.

இவரது தளராத முயற்சியினால் ஈழத்துத் தமிழ்ப் புலவர் மாநாடு சென்ற வருடம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றது. தமிழகத்தைச் சேர்ந்த பெரியார்கள், நமது நாட்டு அறிஞர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிச் சிறப்பித்தார்கள். குறித்த மாநாட்டை விளக்கும் வகையில் ஒரு மலரையும் வெளியீடு செய்துள்ளார். தமிழ்ப் புலவர் கல்லூரி ஒன்று இந்த நாட்டில் உருவாக வேண்டும் என்ற பெருவிருப்பும் உடையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் கிராமத்துடன் தொடர்புகொண்டவர்களான காலிங்கராயன், கருணாகரத் தொண்டைமான் ஆகியோர்களுக்குச் சிலைநிறுவும் சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் தமிழவேள் இ.க.கந்தசுவாமி அவர்கள் இவ்வூரில் இப்பொழுது வாழ்கின்ற ஆசிரியர்களில் மூத்த ஆசிரியர் என்பதும் ஈண்டு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்

## இணுவை தந்த ஆன்மீகச்செல்வர் கு.சண்முகநாதன்

"அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்று மணிவாசகர் இறைவனை வேண்டினார். அடியார் நடுவுள் இருக்கும் பேரின்பம் அத்தகையது. இணுவிலில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து கோவில் தோறும் சென்று சென்று தேவாரப் பதிகங்களைப் பண்ணோடு ஒத்தறுத்துப் பாடிப் பரவசமடையும் தந்தை குமாரசாமியின் பின்னாலே ஆலயங்களுக்குத் திரிந்து தேவாரம் பாடி வளர்ந்த பிள்ளை சண்முகநாதன். பிள்ளைப் பராயத்திலிருந்தே இவ்வாறு "அடியார் நடுவுள் இருக்கும்" பேரின்ப அனுபவத்தில் ஊறித்திளைத்து வளர்ந்தவர் - பல்கலைக்கழக வாழ்விலும் சரி, பின்னரான ஆசிரிய, அதிபர் வாழ்விலும் சரி இறைசிந்தனையாளர்களின் மத்தியிலேயே தமது கடமை தவிர்ந்த வேளைகளையெல்லாம் இன்பமயமாகக் கழிப்பவர் இந்தச் சண்முகநாதன். இதற்கு உவப்பாக இவரது பாபா பக்தி, பாபா சமித்தியில் பிரார்த்தனை பஜனைக் குழுக்களில் இவரை இடம்பெற வைத்து வருகிறது. இறைவன் திருவருளை நம்பிச் சரணாகதியடைந்தவன் பிறர் எவரையும் பின்செல்லத் தேவை வராது என்ற தத்துவத்தை மெய்ப்பிக்கும் வாழ்வு அமையப்பெற்ற சண்முக நாதன் அவர்கள் தம் குடும்ப வாழ்வில், கல்லூரிக் கடமைகளில் ஏற்படும் பிரச்சினைகளையெல்லாம் ஆன்ம பலத்தோடு எதிர்கொண்டு வெற்றியே பெறுபவர்.

எளிமையான நடையுடை பாவனை, சிரித்துச் சிரித்தே பேசும் சரளமான பேச்சு, பணிவு, அதேவேளை தலை வணங்காமை, எளிமை ஆனால் உறுதி, தாராளப்பேச்சு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை ஆழ்ந்த நுண்ணிய நோக்கு - இப்படியான அதிசய அம்சங்கள் அமைந்த ஆன்மீகஞானி சண்முகநாதன் அவர்கள் தமது உளவியல் அறிவனுபவத்தையும் ஆன்ம பலத்தையும் துணைகொண்டு உடல்நோய், மனநோயாளர் பலரை இறை வழிபாட்டில் ஈடுபடுத்தி நோய் நீக்கம் புரிந்துமுள்ளார். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஒப்பற்ற அதிபராக சமூகம் ஏற்றுப் போற்றும் திரு.சண்முகநாதன் அவர்கள் ஆலயங்கள் தோறும் செய்யும் சமயப் பிரசங்கங்கள் இறைநெறியை இங்கு பரப்பி வருகின்றன.

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

## திரு. இரா. சுந்தரலிங்கம்

இணுவில் மேற்கு இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம் என்பவர் பிரபல பண்டிதர்களும் கல்விமான்களுமான பண்டிதர் இராசலிங்கம் பண்டிதர் வித்துவான் சைவப்புலவர் இ.திருநாவுக்கரசு ஆகியோரின் இளைய சகோதரராவார். இவர் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆங்கில மூலமும் கற்றுத்தேறியவர். தமது மூத்த சகோதரர்களிடம் தமிழ் இலக்கண, இலக்கிய பாடங்களினைக் கற்றுக்கொண்டவர். பின் இந்திய பூனா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டம் பெற்றவர்.

அராலி இந்துக்கல்லூரியிலும், சண்டிலிப்பாய் ராஜா பாடசாலையிலும் ஆசிரியராகப் பணியாற்றியவர். பின் பரீட்சைத் திணைக்களத்தின் உதவிப் பரீட்சை ஆணையாளராகப் பணியாற்றியவர். பின்னர் வடமாநிலக் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். இவர் சேவையிலிருக்கும் காலத்தில் தனது ஊருக்குப் பல பேறுகளை எடுத்துக்கொடுத்தவர். உரிய வயதில் இவர் ஓய்வுபெற்றபின் அரசு இவரை இன்றுவரை வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சில் பணியாற்ற வைத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வெளிவாரிப் பட்டப்படிப்பு மூலம் கலைப் பட்டதாரியுமானார். பாலபண்டிதர் பரீட்சையில் தேறிய இவர் ஏற்கனவே இசை, நடனம், நாடகம் ஆகிய கலைகளில் தேர்ச்சி பெற்றவர். இவரது பதவிப் பணிகள் காரணமாகத் தமது கலைத்திறனை வெளியிடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அவர் சுத்தபோசனஞ் செய்வதுடன் சிறந்த ஆசாரமும் மிக்கவர். இவர் தமது குலதெய்வமாகிய செகராசசேகரப் பிள்ளையார், இணுவைக் கந்தன் ஆகிய தெய்வங்களின் மீளாஅடிமையானவர். சிறந்த சமய பக்தியும் தமிழ்ப்பற்றும் மிக்கவர். இன்சொல்லை இலக்கணம் தவறாது பேசவல்லவர். சிறுவயதிலிருந்தே இறை நாமங்கள் தோத்திரங்கள் பாடி மகிழ்ந்தவர். இவர் எவருடனும் கலகலப்பாகவும் நகைச்சுவை யாகவும் பேசி இன்புறுபவர். இவரது சமயபக்தியும் விடாமுயற்சியும் இனிமையுடன் எவருடனும் நற்பண்பு பாராட்டும் செயலும் இவரை வாழ்வில் படிப்படியாக உயர்ந்த கல்வியில் உயரிய அந்தஸ்தை அடையவைத்தன. இவரின் பெருமைகளுக்குக் காரணம் பெற்றோரின் நம்பிக்கையும் தெய்வங்களின் நல்லருளும் என்றால் மிகையாகாது.

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

**திரு.க.தேவராசா** (வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

இணுவைத் திருவூரின் ஒரே தொடரானது தாவடியூர். அரச நிர்வாகத்தேவைக்காக வெவ்வேறு பிரிவாகப் பிரிக்கப் பட்டது. இதே நிலையில் இணுவையின் பக்திநெறி தழுவிய தாவடியில் இல்லறமாம் நல்லறம் நடாத்திய வேளாண் குலத்துதித்தவர் திரு.தேவராசா அவர்கள். விவசாயக் குடும்பத்தில் பிறந்த நல்லறிவுடையவர். பெரும் சுறுசுறுப்பும் விடாமுயற்சியும், மண் வாசனையால் இறைசிந்தனையும் வாய்க்கப்பெற்றவர்.

இந்த மரபுப்படி நன் மாணாக்கராக இருந்தபோதே பெற்றோரிடமும் கல்விக்கூடங்களிலும் பெற்ற அறிவும் பண்பான தாயிடம் பெற்ற அன்பும் பண்பும் எங்கு சென்றாலும் இவரைத் தீயவழியை நாடவிடவில்லை. தனது குலதெய்வமான தாவடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரின் மீளா அடிமையானார். புகுந்த இடத்தில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையாரிடமும் தனது இறைபக்தியைப் பேணியதுடன் இணுவிலிலுள்ள எல்லாத் திருக்கோயில்களையும் உள்ளன்போடு வழிபடுகிறார். இவரது பெற்றோர் இவர் முன்னேற வேண்டி அயராது செயற்பட்டதுபோல் இவரது புகுந்த குடும்பத்தினரும் தமது பிள்ளைகளை முன்னேற்றியது. காரணம் அவர்களது அயராத கடும் உழைப்பாலேயே. இவருக்கு இயற்கையும் செயற்கையும் நல்ல பாதைகளையே நல்கின.

படிப்பால் உயர்ந்து பட்டங்கள் பதவிகளால் உயர்ந்தாலும் தமது சமயபக்தியால் சமயக் கடமைகள், கோயில் தொண்டுகள், இடையறாத இறைவணக்கம், தன்னைப்போல தனது குடும்ப உறுப்பினரையும் நல்ல நிலையையடைய வழிகாட்டல் போன்ற பல கருமங்களை இயற்கையாகவே புரிபவர். இதன் காரணமாக எவரிடத்திலும் அன்பும், நற்பண்பும், அகந்தையில்லா வாழ்வும், தன்னைப் போல் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்ற எண்ணமும் கொண்டவர். "எப்படியும் வாழலாம்" என்று வாழும் இன்றைய பலரின் நிலைக்கு மாறாக "இப்படித்தான் வாழ வேண்டும்" என்று தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து காட்டுகிறார்.

இவர் தமது கல்வித் திறமையால் பல மாணாக்கர் நல்ல நிலைக்குவர வகைசெய்தவர். குறுகிய காலத்தில் எத்தனையோ மாணவர்களை முன்னேற்றி அவர்களது வாழ்வை மிளிரச் செய்தவர். கல்விசார் புத்தகங்கள், பல கட்டுரைகள் எழுதியவர். இவரது "ஆகம முறையில் திருக்கோயில் அமைப்பு" என்னும் ஆன்மீகக் கட்டுரை எங்களால் சென்ற வருடம் வெளியிடப்பட்ட "அறநெறிக் களஞ்சியம்" என்னும் நூலை அலங்கரித்தது.

எல்லாத் தெய்வங்களினதும் மீளா அடிமையாகிய இவர் தமது நாளாந்தக் கடமைகளாக தன் பிள்ளைகளை நெறிப் படுத்தல், ஊரில் நிகழும் எல்லா வைபவங்களிலும் பங்குபற்றுதல், எவர் எவ் வகையான உதவி கேட்டாலும் மறுக்காது தன்னை அர்ப்பணித்தேனும் உடன் செய்துகொடுப்பது. வஞ்சனையற்ற தூயசிந்தனை போன்றவற்றில் மிகவிருப்போடு செயலாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு வருடங்களுக்கு முன் இவரது பொன்விழாவை இணுவை மக்கள் எதுவித வேறுபாடுமின்றி உவகையுடன் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் பல பேரறிஞர்கள் வாயார வாழ்த்த மிகச் சிறப்பாகக் கொண்டாடியது இவரின் சிறப்பை மேலும் பெருமையடையச் செய்துள்ளது.

இவர் போன்ற தக்கோரால் இணுவையூர் சிறப்படைகிறது. இவர் மேலும் பலபணிகளாற்றி நற்பெயரையும் தமது குடும்பத்துக்கு மட்டுமன்றி எம்மூருக்கும் தேடித்தரச் சகல தெய்வங்களும் அருளாசி வழங்கட்டும்.

மூ.சிவலிங்கம்

## ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

இவர் கல்வியும் பண்பும் நல்லொழுக்கமும் இறை பக்தியும் மலிந்த நல்லாசிரியர்கள் குடும்பத்தில் தலைமகனாகப் பிறந்தவர். மகாபாரதத்தில் குந்திதேவியின் மூன்று புதல்வரில் மூத்தவனாகப் பிறந்து தர்மத்தையும், சத்தியத்தையும், நல்லறிவையும், பொறுமையையும் கையாண்ட தருமரைப் போன்ற குணசீலர். மிக அமைதியாக அன்று தொட்டு இன்று வரை வாழ்கிறார். கல்வித்தகைமை காரணமாக ஆசிரியர் தகைமை பெற்று படிப்படியாக முன்னேறி ஆசிரியர்களை உருவாக்கும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபராகப் பதவியேற்றுள்ளார்.

இவரது துணைவியார் குறுகிய காலத்தில் மறுமை எய்தினார். தசரதராமன் ஏகபத்தினி விரதம் பூண்டது போல இவரும் மறுமணம் தவிர்த்து அகத்துறவியாக வாழ்கிறார். இவரது சமயப்பற்று, தமிழ்ப் பற்று, தேசப்பற்று எவரையும் தன்போல மதிக்கும் செயல்முறையான பண்பாடு இவரை உத்தமனாக்குகின்றன. இவரின் பண்பினாலும் கௌரவத்தினாலும் பெற்றோர் அகமகிழ்ந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தமது பெற்றோரின் கடமைகளைத் தன்தலையாய கடமையென எண்ணிப் போற்றி வாழ்கிறார். இவரது இளைய சகோதரர் செஞ்சொற்செல்வர் சிவநெறித்தவமகன் ஆவார். இவர் தமது பண்பு மேம்பாட்டாலும் எவருரையும் அன்பு, பாசம், பணிவு, அடக்கம். ஆகிய நற்குணங்களால் அரவணைப்பது இவரது பெருமையை மேலும் உயர்த்துகிறது. இவரது தன்னலமற்ற சேவையால் சீரிணுவைத்திருவூர் சிறப்படைகிறது.

மூ.சிவலிங்கம்

## பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

இவர் இணுவில் மேற்கில் பிறந்தவர்.தமது ஆரம்பக் கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், தொடர்ந்து உடுவில் மான்ஸ் (mans) ஆங்கிலப் பாடசாலையிலும் உயர் கல்வியைத் திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரியிலும், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியிலும் கற்றவர். பால பண்டித, பண்டித பரீட்சைகளில் முதன்மையாகத் தேறியவர். பண்டிதர் வித்துவான் இ.திருநாவுக்கரசு, வித்துவான் வேந்தனார், வித்துவான் ந.சுப்பையாபிள்ளை, பண்டிதர் துரைசிங்கம், பண்டிதர் இ.இராசலிங்கம் வித்துவான் சி.நா.கணேசனார் முதலானோரிடம் தமிழ் இலக்கணம் இலக்கியம் ஆகியவற்றை முறைப்படி கற்றவர்

தமது 18 ஆவது வயதில் (1957) கவிதை எழுதத் தொடங்கிய பின் 20 ஆவது வயதில் இவர் இயற்றிய **எழிலி** காவியத்திற்கு இலங்கை சாகித்திய மண்டலம் பரிசு வழங்கியது. மிகக் குறைந்த வயதில் இப்பரிசைப் பெற்றவர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. ஈழத்து தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் இவரது கவிதைகள் வெளிவந்தன. தமிழர் வாழும் நல்லுலகு எல்லாம் இவரது கவிதைகள் வெளிவந்து பிரகாசித்தன. கம்பன் கழக விழாக்களிலெல்லாம் இவரது கவிதைகள் பெரிய பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 2002 ஆம் ஆண்டிற்கான சிறந்த கவிதை நூலாக ச.வே.பஞ்சாட்சரம் கவிதைகள் நூல் தேர்ந்தெடுக்கப்பட்டு இலங்கை இலக்கியப் பேரவையால் வழங்கப்படும் பரிசு உட்பட 11 போட்டிகளில் பரிசு பெற்றவர். இலக்கணப்பூங்கா என்னும் அரியநூலை ஆக்கி வெளியிட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவற்கிரி அ.மி.த.க பாடசாலை, கண்டி புசல்லாவ பரி. திரித்துவக்கல்லூரி, சரஸ்வதி மகாவித்தியாலயம், இணுவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகியவற்றில் 37 வருட காலம் ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

இவரது கண்ணன் கவசம் உட்பட முப்பதிற்கு மேற்பட்ட பக்தி இலக்கிய நூல்கள் உட்பட 45 இற்கு மேற்பட்ட நூல்கள் அச்சேற்றப்பட்டன. நாடெங்கிலும் நூற்றிற்கு மேற்பட்ட மாணவ இலக்கியப் படைப்பாளிகள் உருவாகத் தூண்டுதலாகச் செயற் பட்டவர். இணுவிலில் கலை இலக்கியக் கழகம் நடத்தியவர். இணுவில் கந்தசுவாமி கோயில் இளம் தொண்டர் சபை, புசல்லாவை இலக்கிய வட்டம் ஆகியவை தோன்றக்காரணமாய் உழைத்தவர். ஈழத்தமிழர் விடுதலைக்காக ஏராளமான கவிதைகளையும் இசைப் பாடல்களையும் இயற்றியவர்.

நாடகப்பிரதியாக்கம், சித்திரம் போன்ற துறைகளிலும் ஈடுபாடுடையவர். மிகுந்த இறைபக்தியும் இறைநம்பிக்கையும் உடையவர். இதனால் தனக்கு நேரும் இடர்களையெல்லாம் பத்தியால் வென்றவர்.

மிக ஆணித்தரமான சொல்லாற்றலினாலும், தமிழையே உயிராக நேசிப்பதனாலும், எவருடனும் அன்பாகவும் இனிமையாகவும் பேசுவதாலும், தான் கற்ற பண்டிதர் என்ற மமதையற்ற நிலையாலும் இவ்வூரின் சிறப்பைத் தக்க வைத்துள்ளார்.

முது பெரும் பண்டிதரான இவர் தனது கவிபுனையும் ஆற்றல், நல்ல தமிழ் வசனங்களை உபயோகித்து எழுத்தோவியமாக்கும் திறமை ஆகியவற்றால் சம காலத்தில் வாழும் பண்டிதர்களில் மிகச் சிறப்பானவரெனலாம்.

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவைத் திருவூர் பெற்றெடுத்த ஈழத்து விவேகானந்தர்

"தவமும் தவமுடையார்க்காகும்" என்ற வாக்குப்படி உயர் பண்பும், இறைபக்தியும், கல்வியும், பலசீரும் நிரம்பிய ஆசிரியர்கள் ஆறுமுகம் சரஸ்வதி தம்பதிகள் தாம் முன்செய்த தவப்பயனாகத் தமது பெருமையை உலகறியச் செய்யவல்ல ஒரு தவமகனைப் பெற்றெடுத்தனர். தமது புத்திரர்களில் இளைய வனாகவும், பிள்ளைகளில் ஐந்தாவதாகவும் இரு தங்கைகளின் ஆசைநிறைந்த அண்ணனாகவும் பிறந்தவர் இந்தத் திருமுருகன் அவர்கள்.

இவரது இறைபக்தி, பிறர்மீது அன்பு பாராட்டும் திறமை முதலாக சிறுவயது முதல் இதுவரை, இவரது சகல வாழ்க்கை நெறியையும் உற்றுநோக்கினால் பாரதநாட்டின் தலைசிறந்த இந்துவும், ஒழுக்கசீலரும், அஞ்சாநெஞ்சரும், ஏனையோரைக் கவரும் கனிவான பொருள் வளச் சிறப்புமிக்க பேச்சாற்றல் வாய்ந்தவரும், எடுத்தகாரியத்தைச் செய்துமுடிக்கும் திடமான நிர்வாகத் திறமையும், தவவலிமையும் ஒருங்கமைந்தவரும் அழகானனுமான இளம் துறவி சுவாமி விவேகானந்தர் அவர்களது வாழ்க்கை நெறியையே ஒத்து இருக்கின்றன. இதனால் இருவரையும் ஒப்பு நோக்குவோம்.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் செழிப்பும், கௌரவமும், கண்ணியமும் மிக்க குடும்பத்தில் செல்லப் பிள்ளையாகப் பிறந்தார். இளமையில் சிறுவர்கள் பலரை ஒன்றுகூட்டிப் பல குறும்புகள் செய்தார். அயலவர்கள் இவரது குறும்பைச் சகிக்காது இவரின் தந்தையிடம் முறையிட்டனர். பெற்றோர் இவருக்குக் கொடுத்த தண்டனையாக அறையினுள் பூட்டிவைத்தனர். இளமையிலேயே மிக இரக்க சுபாவம் கொண்டவர். இவர் பூட்டப்பட்டிருந்த அறையின் ஜன்னல் வீதியோரத்தில் இருந்தது. ஜன்னல் வழியே வீதியால் செல்லும் ஏழைகளை அழைத்து அறையிலிருந்து போர்வைகள், உடுப்புக்களை ஒருவருக்கு ஒன்றாகக் கொடுத்தார். மிகுதி நேரத்தில் இறைவனை நோக்கித் தியானஞ் செய்வார். இவர் படிப்பில் மிகத் திறமைசாலி. ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருதரம் சொல்லிக் கொடுப்பதை மனதில் ஆழப்பதித்து இது ஏன்? எப்படி? என்று தன்னுள் ஆராய்ந்து தெளிந்து மாறுபடுமிடத்து ஆசிரியர் கூற்றுப் பிழை எனவும் வாதாடி உண்மை நிலையை வெளிப்படுத்தினார்.

இவரது இளம்வயதில் தந்தை இறந்ததால் குடும்பம் நலிவுற்ற போதும் தனது குருவான பகவான் இராமகிருஷ்ணரிடம் சென்று தனது தவநிலையில் பயிற்சி பெறுவார். இவரது குடும்ப நிலைமையத் தனது தவவலிமையால் உணர்ந்த குரு இவரைக் காளிதேவியிடம் தியானித்துக் குடும்பத்தைக் காப்பாற்றும்படி கேட்கச்சொன்னார். விவேகானந்தரின் தியானத்தின்போது காளிதேவி அருள்ஒளியின் பிரகாசத்தில் பிரசன்னமானபோது தனது குடும்பநிலை பற்றி ஏதும் கேட்காது பரந்தநோக்கில் அருள்வேண்டினார். இவரது சுயநலம் விரும்பாத பொதுநல நோக்கினை உணர்ந்த குரு. இவரது குடும்பத்தைக் காப்பாற்றும் படி அன்னையிடம் கேட்டு அருள்கிடைக்கச் செய்தார்.

பல மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற விவேகானந்தர் மிக அழகாகவும் ஆழமாகவும் பேசவல்லவர். அமெரிக்காவில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் உரையாற்றி நல்ல அருங் கருத்துக் களையும் எடுத்துக்கூறித் தாய்நாட்டுக்குப் பெருமையை ஏற்படுத்தினார். இவர் துறவியானதால் தனக்கென ஏதும் சேமிக்காமல் வறியவர்களும் அல்லலுற்றோரும் வாழ வழி வகுத்தார். மடங்களையும் அமைத்துப் பெரும் புகழீட்டினார். இவர் முத்தியடைந்த பின் ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்குப் பின் திருமுருகன் அவர்கள் பிறந்தார். இதனால் விவேகானந்தரின் மறுபிறவிதான் திருமுருகன் என்று கூறுவதற்கு இடமுண்டு. எங்கள் மாயாமலத்தினால் நாங்கள் உண்மை நிலையை உணரமுடியாதிருக்கலாம்.

திருமுருகன் அவர்கள் பிறந்தபின் உரியகாலத்தில் அன்னை அறுசுவை உணவுகளை ஊட்டினார். தந்தை கல்வியை ஊட்டினார். சகோதரர்கள் தோள்வலியைக் கொடுத்தனர். பள்ளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவம் வர இவரது அன்னை சரஸ்வதிதேவியை இவர் தம் நாவில் உறைய இடம் கொடுத்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை அயலிலுள்ள இராமநாதன் கல்லூரி ஆரம்பப்பிரிவில் கற்றார். ஒரு நாயன்மார் குருபூசையில் இவரைப் பேசும்படி வகுப்பு ஆசிரியை ஆயத்தஞ்செய்வித்தபோது ஆசிரியை அறியாது ஒளித்து ஓடிவிட்டார். ஆசிரியை இவரைத் தேடிப்பிடித்து மேடையில் ஏற்றி நன்கு நெறிப்படுத்தியதால் தனது கன்னிப் பேச்சை நிறைவுசெய்தார். இந்நிகழ்வு இவரது முதற்படி எனலாம்.

இக்காலத்தில் இவர் தனது குறும்புத்தனத்தால் பறந்து திரியும் பூச்சியினங்களைப் பிடித்து வெற்றுத் தீப்பெட்டியில் அடைத்து வைத்து வேடிக்கை பார்ப்பார். சிலகாலத்தின் பின் இவருக்கு ஏற்பட்ட சின்னமுத்து. பொக்குளிப்பான் போன்ற தொற்றுநோய் காரணமாக இவர் தனிமைப்படுத்தப்பட்டு ஒரு அறையில் பூட்டி வைக்கப்பட்டார். இதனால் இவர் வெளியே வரத்துடித்தார். இவரது உறவினரான பெரியவர் இவரை நோக்கித் "திருமுருகா நீ சிறு பூச்சிகளைச் சிறைவைத்ததன் பயனாக இப்போது சிறைப்பட்டுள்ளாய். இதுதான் கடவுளின் தீர்ப்பு என்றார்." சிறுவனாக இருந்தபோதும் தனது செயலையிட்டு மிகவேதனைப்பட்டதுடன் பிற உயிர்களை நேசிக்கவும் கற்றுக்கொண்டார்.

இவர் மேல்வகுப்புக்களை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் படித்தபோது இவரது நாவன்மையையும் பேச்சு வசீகரத்தினையும் அறிந்த "தேவன் யாழ்ப்பாணம்" எனப் புகழ்பூத்த ஆசிரியப் பேச்சாளரான மகாதேவன் அவர்களால் மாணவர் மன்றங்களில் மேடைப்பேச்சைத் தொடர வழிவகுக்கப்பட்டார். இத்துடன் இவரது இரண்டாம் படியேற்றமும் நிறைவானது. மாணவர் உலகில் சிறந்த அமைதியான பேச்சாளராக நிலைகொண்டதால் கம்பன் கழகப் பிரமுகர் இ.ஜெயராஜ் அவர்களால் ஈர்க்கப்பட்டு நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட பட்டிமன்றங்களில் தன் திறமையை நிலைநாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் படியையும் தாண்டிய இவர் பேராதனையில் பட்டப் படிப்பையும், தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப் பின் படிப்பையும் பூர்த்தி செய்தார்.

1987 ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படை யாழ் மண்ணில் கோரத்தாண்டவம் ஆடிய காலத்தில், இவர்களது குடும்பம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. திருமுருகன் மிடுக்கான வாலிபனாதலால் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டார். இதனால் மிக வேதனைப்பட்ட இவர் தான் வணங்கும் தெய்வங்களை வேண்டியமையால் உயிராபத்திலிருந்து மீட்கப்பட்டார். பின் குடும்பத்தினருடன் பல இடங்களில் ஓடித்திரிந்தும் பல நாட்கள் உணவும் தண்ணீருமின்றித் தவித்தனர். தெய்வங்களின் அருட் சக்தியால் சிறிது மாற்றமேற்பட்டு ஓரிடத்தில் நிலையாகத் தங்கினார். இவர் தாக்கப்பட்டபோது முதுகில் ஏற்பட்ட பெரிய காயம் மாறினாலும் பெரிய தழும்பு இன்றும் இவருக்கு வேதனையைத் தருகிறது. கோயில்களுக்குள் செல்லும்போது தனது சால்வையால் முதுகை மறைத்துக்கொள்வார்.

இவர் 1989 ஆம் ஆண்டு சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையிற் பல ஆசிரியைகளிடையே ஒரேயொரு ஆண் ஆசிரியராக நியமனம் பெற்றார். பாடசாலை மாணவ மாணவியர் சிலர் இவரை அணுகிவந்து "சேர் நீங்கள் இப்பாடசாலையை விட்டு மாறாது தொடர்ந்து இங்கு கற்றுத்தாருங்கள்" என்று தமது பிஞ்சுமொழிகளில் வேண்டினர். திருமுருகன் அவர்களும் மாணவர்களின் அன்பையும் பண்பையும் கண்டுவியந்தார். பாடசாலையின் சுற்றுச்சூழலதும் நீர்பெறும் கிணற்றினதும் அசுத்தம் யாவற்றையும் கண்டறிந்ததும் மகாத்மாகாந்தி அவர்கள் ஏழைகளின் அல்லல் போக்கத் தானே சிரமதானம் மூலம் சுத்தஞ்செய்தது போல் அதை ஏன் தன்னால் சுத்தஞ்செய்ய முடியாதென உணர்ந்து செயற்பட்டார். பாடசாலை ஓய்வு நேரங்களில் கிணறு கலக்கி இறைத்தல், பாடசாலைச் சுற்றுச் சூழலைச் சுத்தஞ் செய்தல், கட்டடத்திற்கு வெள்ளையடித்தல் போன்ற பெருந்தொண்டுகளில் நாட்டம் கொண்டார். இதேநேரம் பாடசாலைக்கு வந்த கல்வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தினர் இவரது செயலைக் கண்டு இவருக்கு 1991 ஆம் ஆண்டிற்கான நல்லாசிரியர் விருது கிடைக்க வகை செய்தனர்.

பின் இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு மாற்றஞ் செய்யப்பட்டார். இக்கல்லூரியில் தற்போதும் இவர் சிறந்த ஆசிரியராகப் பணியாற்றுகிறார். ஏற்கனவே அன்னை சிவத்தமிழ்ச்செல்வியும் இவரது குடும்பமும் நட்புப்பூண்டிருந்தனர். இத்தொடர்பில் திருமுருகன் அவர்கள் அயலூரில் பணி புரிந்ததால் அன்னை துர்க்காதேவிபால் ஈர்க்கப்பட்டு அன்னையின் மீளா அடிமையானார். ஆலயத் தொண்டுகளையும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் இதர பணிகளையும் செய்ய, செயற்பட உறுதுணையாக இருக்கிறார். இவரது பணியும் கடமையுணர்ச்சியும் அன்பும் இவரை மேலும் ஒருபடி உயர்த்தி, அன்னை துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி அவர்களால் "என்பிள்ளை" என அன்புடன் உரிமை கொண்டாட வைத்தது. அவரின் அன்புக் கட்டளையின்படி திருமுருகன் அவர்களின் மதியபோசனத்தை துர்க்காதேவியிடம் நாள் தவறாது உண்ண வேண்டிய சூழ்நிலை அன்னை துர்க்காதேவியின் அருளால் கிடைத்தது. அன்னையின் அருளால் இவருக்குப் பல முன்னேற்றமும் மதிப்பும் கிடைத்ததுடன் அன்னை இவரது நெஞ்சத்தை உறைவிடமாக்கினார்.

1992 இல் இவரது பக்திநிலையை அறிந்த ஏழாலை களபாவோடை அம்பாள் ஆலயத்தினர் இவரை இத்திருத் தலத்தில் சமயச் சொற்பெருக்காற்ற வைத்தனர். இவரது கன்னிப் பேச்சு அப்போது நன்கு பிரபலமடையவில்லை. 1992 ஆடி மாத மகோற்சவத்தை முன்னிட்டு இணுவில் கோண்டாவில் விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமாள் திருக்கோயிலில் (காரைக்கால் சிவன் ஆலயம்) சமயத் தொடர் சொற்பொழிவு ஆற்றும்படி இவ்வாலய அன்னதான சபையினரும் இணுவில் அன்பர்களும் இவரது பெற்றோரிடம் அனுமதி பெற்று முதலாவது தொடர் சமயச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தனர். திருமுருகன் அவர்கள் அன்பர்களதும் பெற்றோரதும் வேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளின்படி தனது ஆழ்ந்த சமயபக்தியுடன் கூடிய தூய உள்ளத்தின் செயல் திறனைக் காட்ட முன்வந்தார். இவரது பேச்சில் சமயபக்தியும், இதனால் இவரது உருகிய நெஞ்சமும் அன்பும் பேச்சின் ஆழமும் அமைதியும் வசீகரமும் கேட்டோர் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தன. பத்துநாட்கள் தொடர் சொற்பெருக்காற்றிய திருமுருகன் அவர்களுக்கு இணுவில் கோண்டாவில் வாழ் பக்தர்கள் அன்பான வரவேற்பு வைபவம் ஏற்பாடு செய்து இவ்விழாவுக்கு இவரது பெற்றோர் யாவரையும் அழைத்துப் பார்வையாளராக அமரச்செய்தனர். பல பெரியார்கள் பாராட்டினர். பல மாலைகளும், பொன்னாடைகளும் அணிவித்தனர். அத்துடன் இவருக்குச் "செஞ்சொற்செல்வர்" என்ற பட்டத்தையும் வழங்கித் தாமும் இன்புற்றனர்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்"

என்ற குறளமுதம் போல தாய் மட்டுமல்லர் தந்தை, உடன் பிறந்தோர் அனைவரும் இவர் பிறந்த மண்ணில் இவ்வூர் மக்களால் சான்றோன் எனக்கேட்டு மகிழ்ந்தனர். "செஞ்சொற் செல்வர்" என்ற இப்பட்டம் இன்றுவரை திருமுருகன் அவர்களுக்கு அணி செய்வதை யாவரும் அறிவர். இவரது சமயச் சொற் பொழிவின் பெருமை பல இடங்களுக்கும் பரவியது. இதனால் இத்தேசத்திலுள்ள திருக்கோயில்கள், கல்வி நிலையங்கள், பொதுவைபவங்கள் ஆகியவற்றில் கணீரென்ற குரலில் இவரது பேச்சை அடிக்கடி கேட்கமுடிகிறது. இன்றும் இவரது பேச்சை இளைஞர், யுவதிகளுடன் வயோதிபர்களும் வெகுதூரஞ் சென்றும் கேட்டு அனுபவிக்கின்றனர்.

இவரது பேச்சுத் திறமையை அவதானித்த இத்திருவூரைச் சேர்ந்தவரும் இலண்டனிலுள்ள இந்துத் திருக்கோயில்கள் ஒன்றியத் தலைவருமான நடராசா சச்சிதானந்தன் அவர்கள் இவரை இலண்டனுக்கு அழைத்து உலக இந்து மாநாடொன்றில் இலங்கைப் பிரதிநிதியாகப் பங்குபற்றச் செய்தார். இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்படப் பல நாடுகளிலுமுள்ள மிகப் பெரிய ஆதீனங்களின் முதல்வர்களான வயதிலும் கல்வியறிவிலும் மேம்பட்டவர்களிடையே மிகக் குறைந்த வயதுடைய இலங்கைப் பிரதிநிதியான செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் தமது நாவிற் குடியிருந்த சரஸ்வதிதேவியும், நெஞ்சிற் குடியிருந்த துர்க்காதேவியும் அருள்சொரிந்து உந்த வழங்கிய கருத்துரைகள் யாவரையும் வெகுவாகக் கவர்ந்ததில் வியப்பில்லை. அவ்விடத்தில் பலரும் இவரது பேச்சை நன்கு வியந்துரைத்தனர். பல பெரியார்கள் தத்தமது நாடுகளுக்கும் வந்து உரையாற்றும்படி கேட்டிருந்தனர். முக்கியமாக இந்தியப் பெரியார்களின் அழைப்பை ஏற்றுச்சென்று பல சொற்பொழிவுகளை நிகழ்த்திப் பலரது பாராட்டுக்களைப் பெற்றுத் தனது தாய்க்கும் தாய் நாட்டுக்கும் பெருமை தேடித்தந்தார்.

இவர் இலண்டனிலிருந்து தாயகம் வந்தபோது முதன் முதல் இவரது குலதெய்வமான இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் இணுவில் மக்கள் சார்பில் மிகப் பிரமாண்டமான வரவேற்பு வைபவம் இவரது பெற்றோர் முன்னிலையில் எடுக்கப்பட்டதுடன் பட்டங்களும், பதக்கங்களும், மாலைகளும், பொன்னாடைகளும் அணிவிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள தலைசிறந்த புகழ்மிக்க பெரியார்கள், கல்விமான்கள் மூலம் பாராட்டுரைகளும் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப் பட்டார். இவ்வைபவத்தைத் தொடர்ந்து நாட்டின் பற்பல இடங்களிலும் இவருக்கு வரவேற்பு விழாக்கள் எடுக்கப்பட்டுப் பட்டங்களும், பதக்கங்களும், பொன்னாடைகளும், பாராட்டுக் களும் வழங்கப்பட்டன. திருமுருகன் அவர்கள் தனக்குக் கிடைத்த பாராட்டுதலை அவ்வவ்விடத்திலுள்ள தெய்வங்களிடம் சமர்ப்பித்தார். பட்டங்களைப் பறக்கவிட்டார். பதக்கங்களையும் பொன்னாடை களையும் நலிந்து அல்லலுறும் சமுதாயங்களுக்கு வழங்கினார். இவருக்கு எஞ்சியவை பொதுமக்களின் அன்புள்ளங்களும் தெய்வங்களின் அருளாசியுமே. பெற்றோருக்கு அகமகிழ்வும் தவமகனைப் பெற்ற தவப்பேற்றின் பெருமையும் கிடைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின் வெளிநாடுகள் பலவற்றிலிருந்து அன்பர்களும் ஆன்மீகவாதிகளும் இவரை அழைத்துத் தத்தம் இடங்களில் சொற்பொழிவாற்றுவித்து மகிழ்ந்தனர். வெளிநாடுகளில் சொற் பெருக்காற்றும் இடமெல்லாம் தாம் மட்டுமன்றித் தமிழீழமக்கள் அனைவரும் அன்றுமுதல் இன்றுவரை அடைந்த துன்பங்கள், கஷ்டங்கள், இடப்பெயர்வுகள், வாழ்க்கைப் பாதிப்புகள் யாவற்றையும் விரிவாக எடுத்துக்கூறினார். இதனை நன்குணர்ந்த புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்போர் இப்பிரதேசத்தில் வாழும் தம் இனப் பிணைப்பை முன்னிட்டு அனைவரதும் துயர் துடைக்கத் திட்டமிடுகிற பணிகளை இவர் மூலம் நிறைவேற்ற வேண்டி இவரிடம் பணி முன்னுரிமைப் பட்டியல் தருமாறு கோரினர். இவர் கொடுத்த பட்டியலில் அனாதைச் சிறுவர் இல்லங்கள், அனாதை விடுதிகள், அல்லலுற்றோரைப் பேணும் காப்பகங்கள், வலுவிழந்தோர், சைவச் சிறுவர் இல்லங்கள், நலிவுற்ற பாடசாலைகள், கண்சிகிச்சை நிலையம், இதற்கான லேசர் கருவிகள், தங்குமிடமற்றவர்களுக்கான விடுதிகள் என முக்கியமானவை தெரிவிக்கப்பட்டு அவற்றிற்குரிய உதவிகளும் உரிய காலத்தில் கிடைத்தன.

தனது சொந்த முயற்சியாகத் தான் ஆரம்பத்திற் கற்ற பாடசாலையில் கல்வி கற்கும் ஏழைமாணவருக்கு உதவ ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தினார். இதுவும் செயற்படுகிறது. தான் உயர்கல்வி கற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அன்பர்களின் முயற்சியாக ஆறுமுகநாவலரின் சிலையையும் நிறுவினார். வெளியிடங்களில் வாழும் அன்பர்களின் உதவியால் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் முருகன் ஆலயம் அமைக்க உதவினார். யாழ் கல்வியியற் கல்லூரி மாணவரின் வழிபாட்டிற்காகச் சிவயோகம் அறக்கட்டளை மூலம் வித்தக விநாயகர் ஆலயம் ஒன்றைக் கட்டுவித்தார்.

சிவயோகம் அறக்கட்டளை மூலம் கந்தரோடைக் கிராமத்தில் வசதிகளற்ற ஐந்து விதவைப் பெண்களுக்கு ஒவ்வொரு வீடு அமைத்தார். புற்றுநோயாளர்களுக்கு நிதியுதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியது, வசதி குறைந்த மாணவருக்கு நிதி வழங்கியது, நூல் நிலையங்களுக்கு நூற்தொகுதிகள் அன்பளித்தது, வன்னிவாழ் மக்களின் வழிபாட்டிற்காக முப்பதிற்கும் மேலான நாகதம்பிரான் சிலைகளை வழங்கியது, கொக்குவில் மஞ்சவனப் பதியில் தொடர்சொற்பொழிவு ஆற்றியபோது வழங்கிய நிதியில் திக்கற்ற விதவைகளுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கியது, செவிப்புலனற்ற வறிய மாணவர்களுக்குச் செவி ஒலிக்கருவி வழங்கியதுடன் தற்போது வாழ்வகம் என்ற நிலையான இல்லம் அமைந்த மூன்றரைப் பரப்புக் காணியை வாங்க 14 இலட்சம் ரூபா கிடைக்கவும் வகைசெய்தது, திருமலையில் அலஸ் தோட்டத்தில் 1200 அகதிக்குடும்பங்கள் வழிபட வீரபத்திரர் ஆலயம் அமைத்தமை போன்ற அநேக பணிகளைத் தன் சொந்த முயற்சிக்காக வெளிநாடுகள் வழங்கும் நிதியுதவியில் செய்து இவை யாவற்றையும் இறை சேவையாகச் செய்துள்ளார்.

முதன்முதல் இவர் இலண்டன், கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்றபோது, இணுவிலில் ஒரு சிறந்த நூல்நிலையம் அமைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வெளிநாடுகளில் வசிக்கும் இணுவையூர் மக்கள் முன்வந்தனர். காணி விலைக்கு வாங்கி இணுவில் கந்தசுவாமி கோயில் முன்றிலில் சைவமும் தமிழும் முன்னேற வேண்டி நூல் ஆராய்ச்சி நிலையமும், அரும்பொருட் காட்சி நிலையமும் கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றபோது, எதிர்பாராத சிலர் செயலால் கட்டட வேலைகள் தடைப்பட்டன. வெளிநாடுளில் வாழும் நலன் விரும்பிகள் இவ்விடம் வந்து நிலையைச் சீராக்கியதைத் தொடர்ந்து வேலைகள் நடைபெறுகின்றன. 2004 ஆம் ஆண்டு வேலைகள் பூர்த்தியாக உள்ளது. இக்கட்டட வேலைகள் தொடர முடியாத நிலையில் வெளியூர் மக்களிடம் இவ்விடயமாக உதவி கோரலாமே என்று சிலர் கேட்டபோது திருமுருகன் அவர்கள் கூறிய பொன்னான பதில் யாதெனில் "எனக்கென ஒரு காணியோ, வீடோ இருக்கவேண்டிய நிலையில்லை. எனது சொந்த ஊருக்கோ, எனக்கோ வேறு எவரிடமும் உதவி கோருவது சுயநலமே. சுயநலம்நாடி உதவிசெய்யுமாறு கேட்டால் மிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய நிதிவழங்க அநேகர் முன்வரலாம். அப்படி வாங்கிப் பொதுவேலை செய்வது நியாயமாகாது. இதை அனுபவிக்கும் இவ்வூரைச் சேர்ந்த எவராவது மனமுவந்து உதவ முன்வந்தால் வரவேற்போம்" என்று கூறியதுடன் இந்நூல்நிலையப் பணி அமைப்புக் குழுவில் உறுப்பினராக இருப்பதும் சுயநலம் பதவிமோகம் ஆகும். எனவே, என்னாலான பணி செய்வது நலம் என்றும் கூறினார்.

செஞ்சொற்செல்வர் நடுத்தரமான குடும்பத்தில் பிறந்தவர். ஒரு கட்டைப்பிரமச்சாரி, சுத்தபோசனஞ் செய்பவர். நற்பண்பும், அகிம்சையும், வாய்மையும், தூய்மையும், ஆசாரமும், கடவுள் பக்தியும் இவர் வாழ்வில் பேணிக்காக்கப்படுகின்றன. மற்றெவர் நலிவுற்றாலோ, துன்பம் அடைந்தாலோ இவரது உள்ளம் தாங்க மாட்டாது. அவர்களுக்காக வருந்துவார். உயர்வு தாழ்வின்றி எல்லோரையும் தனது அன்பினால் மதித்து நடத்துபவர். எளிமையான தோற்றம், தூய வெண்ணிற ஆடை, கோயில்களில் வெள்ளை வேட்டியும், காவி நிறமுடைய சால்வையும், புன்சிரிப்பும், மூக்குக்கண்ணாடியும் இவரை அலங்கரிக்கும். கோபம் என்பதை அறியாதவர். தீயபழக்கமேதுமற்றவர். மிகக் கடுங் குளிருடைய வெளிநாடுகளுக்குச் செல்லும்போதும் தமிழரின் தேசிய உடையுடன்தான் காட்சியளிப்பார்.

இவரது தூயபணிகளை நோக்கி வலிகாமம் கோட்டக் கல்வி அலுவலகம் 2002 ஆம் ஆண்டு நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவித்தது. யாழ் கல்வியியற் கல்லூரி தனது மூன்றாம் ஆண்டு நிறைவில் இவருக்கு என்றுமே காண முடியாதவாறு மிகப் பிரமாண்டமான வரவேற்புடன் "சிவநெறித் தவமகன்" என்ற பட்டத்தை வழங்கித் தமது நிலையத்துக்கே பெருமை தேடிக்கொண்டது மகிழ்ச்சிக்குரியது.

இவர் இணுவில் சிவகாமி அம்பாளைத் தாய்த்தெய்வம் என்றும், ஏனைய தெய்வங்களை வாழவைத்த தெய்வங்கள் என்றும் கூறுவதுடன், தெல்லிப்பழை துர்க்காதேவியைத் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தில் ஏற்றித் தெய்வங்களின் மீளா அடிமையானார். அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் வேண்டுதலினால் துர்க்கா தேவியின் அறக்காவல் குழுவுக்கு அணிசெய்கிறார். தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் முதுமை காரணமாக அவருக்கு உதவியாகப் பல நிர்வாகப்பணிகளுக்குத் தன்னை அர்ப் பணித்துள்ளார். 2002 ஆம் ஆண்டு. இவர் சமயச் சொற்பொழிவு செய்த பத்தாவது ஆண்டு நிறைவில் 2002 ஆடி மகோற்சவ காலத்தில் இவரது பேச்சைக் கேட்க விரும்பிய மக்கள் இணுவில் கோண்டாவில் காரைக்கால் சிவன் ஆலயத்தில் விழா எடுத்துப் பாராட்டுரைகள் வழங்கி பொன்னாடைகள், மலர்மாலைகள் அணிவித்துப் பெருமையடைந்தனர்.

இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தினர் சென்ற வருடம் வெளியிட்ட ஆன்மீக நூலுக்கு "அறநெறிக்களஞ்சியம்" எனப் பெயரிட்டு இம்மலரைத் தொகுத்து மேலும் பல சேவைகள் செய்தவர். இவ்வருடம் வெளியிடவிருக்கும் "சீரிணுவைத் திருவூர்" என்ற நூலுக்கு நூற்பெயர் வழங்கியும் சைவத்திருநெறிக் கழகத்தினரை ஊக்குவித்தார்.

சுவாமி விவேகானந்தர் தனது குருவிடமிருந்து துறவறம் பெற்றார். திருமுருகன் தான் எல்லாத் தெய்வங்களினதும் மீளா அடிமை என்பார். இவர் குருவிடமிருந்து துறவறம். குருவுபதேசம் பெறாத அகத்துறவி. இவர் எந்த மேடையில் பேசினாலும் நிறைவாக "நாடு நலம்பெற வேண்டும். சமாதானம் விரைவில் ஏற்பட வேண்டும். மக்கள் எல்லோரும் தமது துன்பம் நீங்கி இன்புற்று வாழவேண்டும்" என்று கூறித் தமது எல்லாத் தெய்வங் களையும் வணங்குவார். ஆறு.திருமுருகன் அவர்களின் சைவப் பணியை நன்குணர்ந்த வயதில்குறைந்த வெளிநாட்டு அன்புள்ளங்களின் நெடிய பாசத்தால், இலண்டனில் அமைத்த தண்ணீர்ப்பந்தலுக்கு "ஆறு.திருமுருகன் தண்ணீர்ப்பந்தல்" எனப் பெயரிட்ட சிறப்பை நோக்குவோம். திருநாவுக்கரசர் தமது நாவன்மையால் இறைவனைப் புகழ்ந்து பாடியபோது அறச் சாலைகள், தண்ணீர்ப்பந்தல்களுக்கு திருநாவுக்கரசரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரினை ஓர் அடியவர் சூட்டியதை அடியொற்றி "ஆறு.திருமுருகன்" தண்ணீர்ப்பந்தல் எனப் பெயர் சூட்டி மகிழ்வது எங்கள் திருமுருகனின் சமயச்சொற்பொழிவின் சிறப்பும் தெய்வீகமே. இது இணுவிலுக்குக் கிடைத்த பிந்திய செய்தியாகும். எல்லோரும் வாழவேண்டும் தெய்வீகம் சிறக்கவேண்டும் என அனைவரும் இறைஞ்சுவோம். இவரது செயல்வடிவம் தெய்வங்களையே அருள்சொரிய வைத்ததால் இவருக்குச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் · உபஅதிபராகும் பதவியுயர்வும் கிடைத்ததும் திருவருளே. 21.03.2003 அன்று தாய்லாந்து நாட்டில் ஒருவார காலமாக நடைபெற்ற உலகச் சமயத்தலைவர்கள் மாநாட்டில் (இந்த மாநாடு ஐ.நா. சகோதர ஸ்தாபனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது) இலங்கையின் சைவசமயப் பிரதி நிதியாக இவர் தெரிவுசெய்யப்பட்டதும் எமது திருவூரின் பொற் காலமாகும். சுவாமி விவேகானந்தர், மகாத்மாகாந்தி, ஆறுமுக நாவலர், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் போன்ற நல்லோரது அடியொற்றி வாழும் இணுவையூர் செஞ்சொற் செல்வர் சிவநெறித்தவமகன் ஆறு.திருமுருகன் அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகெல்லாஞ் சென்று சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டுசெய்து தமது தாயகத்தில் பல்லாண்டு காலம் வாழ்ந்து எம்மையெல்லாம் வழிநடாத்த எல்லாம்வல்ல சகல தெய்வங்களும் கருணையுடன் ஆசிவழங்க நாம் அனைவரும் பெருமையுடன் பிரார்த்திப்போமாக.

"தோன்றின் புகழொடு தோன்றுக"

மூ.சிவலிங்கம்

## கந்தையா ஸ்ரீகணேசன்

இவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்தவர். இவர் இளமையிலிருந்தே தமிழ், ஆங்கிலம் போன்றவற்றை மிகச் சிறப்பாகக் கற்றுத் தேறியவர். ஆசிரியராகி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் ஆங்கில விரிவுரையாளராகக் கடமையாற்றும் இவர் M.Phil பட்டதாரியாவார். கதை, கவிதைகள் எழுதுவதிலும் சிறப்புடையவர். நாடகத்துறையில் பல நூல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி வெளியிட்டவர். இவரது நூல்கள் தேசிய மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பாராட்டப்பட்டன. இயற்கையாகவே நிகழ்ச்சிகளை விமர்சனம் செய்வதிலும், நகைச்சுவையாகக் கலந்துரையாடுவதிலும் வல்ல இவர் எதிர்காலத்தில் மேலும் பல உயர்நிலைகளைப் பெற உழைப்பாராக.

மு.சிவலிங்கம்

**சோ.பரமசாமி B.Sc**

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழியையும் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் பயின்றவர்.

உயர்கல்வியைத் தென்னிந்திய சென்னை மாநிலக் கல்லூரியிற் படித்து சென்னைப் பல்கலைக்கழக விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்றவர்.

பாடசாலையிற் படித்த காலத்தில் சைவசமய இலக்கியத்தில் திறமையிருந்ததால் ஆத்மஜோதி, சிவதொண்டன், தினகரன், தினபதி, சுதந்திரன் போன்ற பத்திரிகை சஞ்சிகைகளுக்குச் சமய, சமூக, இலக்கியக் கட்டுரைகள் எழுதியவர்.

1956 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழ்மறைக்கழகம் நடாத்திய கட்டுரைப்போட்டியில் "திருக்குறளும் கீதையும்" என்ற இவரது ஆய்வுக் கட்டுரை பாராட்டப்பட்டு "தமிழ்மறைக் கட்டுரைகள்" என்ற தொகுப்பு நூலில் இடம்பெற்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இவரது விவசாயத்திற்கான திருக்குறள் "உழவு" என்னும் பத்துக் குறளுக்கு பத்து ஓரங்க நாடகங்கள் இவரால் எழுதப்பட்டு அவை இருவாரங்களுக்கு ஒருமுறை வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் அரச திணைக்களத்தில் பட்டதாரி மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் "புவிச்சரிதவியல்" என்ற ஆங்கில நூலின் ஒரு பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்தவர்.

இவர் தனது சொந்த ஆக்கமாக "வீரசைவமரபியல்" என்றும் நூலை எழுதி வெளியிட்டவர். இந்த நூல் இந்து கலாசார அமைச்சினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. இவர் இளமையிலிருந்தே சிவநெறியிலும் தமிழிலும் அதிக பற்றுள்ளவர். இணுவில் பரமானந்தவல்லி அம்மன் கோயிலில் முன்னரும், இப்போது சில வருடங்களாகவும் பூசை செய்யும் பேறும் பெற்றுள்ளார்.

மூ.சிவலிங்கம்

**கா.செ.நடராசா**

இணுவில் மேற்கைச் சேர்ந்த செல்லையா நடராசா அவர்கள் ஓய்வுபெற்ற ஆசிரியராவார். இவர் ஆரம்பக்கல்வி கற்றதுடன் தொடர்ந்து குறுகிய காலம் படித்ததும் குடும்பநிலை காரணமாகக் கைத்தொழிலில் ஈடுபட்டவர். கைத்தொழிலில் ஈடுபட்டாலும் ஓய்வு நேரங்களிலும் இரவு நேரங்களிலும் இலக்கண இலக்கியம் பண்ணிசை சமய பாடங்களுடன் பள்ளிப் படிப்புக்குரிய பாடங்களையும் இணுவில் பெரியார்களான சேதுலிங்கச்சட்டம்பியார், பண்டிதர் சரவணமுத்து, தவத்திரு வடிவேற்சாமியார் போன்றோரிடம் கற்றுத் தமது கல்வி நிலையை வளர்த்தவர். சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் பிரத்தியேகமாகப் படித்துத் தேறியவர். தொடர்ந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையிலும் பயிற்றப்பெற்று ஆசிரியப் பணியாற்றியவர். இக்கால இடைவெளியில் கலைமாணி, முதுகலை மாணிப் பட்டங்களும் பெற்றுச் சிறந்த ஆசிரியராகப் பணியாற்றியபின் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் இணுவில் கந்தசுவாமிகோவில், பரமானந்தவல்லி அம்மன் கோவில், செகராசசேகரப் பிள்ளையார் கோவில் ஆகிவற்றின் அண்மையிலிருந்ததால் இவருக்கு ஆன்மீகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை உருவாகியது. சிறுவயதில் ஆசாரசீலராக அதிகாலையில் இணுவில் கந்தசுவாமி கோயில் பசனை பாடும் திருக்கூட்டத்தினருடன் தானும் ஒருவராகச் சேர்ந்து நன்கு பண்ணிசை பாடியவர். ஏறக்குறைய 15 வயதளவில் தமது உடன்பிறவாச் சகோதரர்களான ஆ.தம்பிராசா, செ.பரமலிங்கம் ஆகியவர்களுடன் ஒருவருடத்துக்கு மேல் நாடகக் கலைஞர் அண்ணாவியார் ஏரம்பு சுப்பையாவிடம் தாளக்காவடி ஆட்டம் பயின்று, இணுவில் கந்தசுவாமி கோயில் தேர் உற்சவத்துக்கு தெருவீதிகள், சந்திகள், வேறு முக்கிய இடங்களில் அண்ணாவியாரின் தாளத்துக்கும், வேறு பக்கவாத்தியங் களுக்கும் ஒப்பச் சிறப்பாகக் காவடி ஆடிப் பலரிடமும் நன்மதிப்பும் பாராட்டும் பெற்றனர். பலரசிகர்கள் இவர்களது காவடி ஆட்டத்தைப் பலமணி நேரம் பார்த்து மகிழ்ந்தனர்.

இவர் ஆன்மீகத் துறையில் மிக்க ஈடுபாடிருந்ததால் எப்பொழுதும் சிறந்த முறையில் நல்ல சிந்தனைகளோடு செயலாற்றினார். இவர் தமது கல்வியறிவினால் "இளங்கோவின் கனவு", "தமிழா விழித்தெழு" "இணுவையப்பர்" போலும் பல ஆக்கங்களையும் செய்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் சைவநற்சிந்தனையில் பல அரிய கருத்துக்களைத் தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கூறியவர். இவர் தற்பொழுது தமிழகத்தில் வசித்து வருகிறார். இவர் பிள்ளைகள் நல்ல பதவிகளில் இருப்பதுடன் நடராசா அவர்களும் இணுவையூருக்கு நன்மதிப்பைத் தேடித்தந்துள்ளார்.

மு.சிவலிங்கம்

## செ.சோதிப்பெருமாள் J.P

இணுவில் கிழக்கைச் சேர்ந்த இவர் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையிலும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் படித்து ஆசிரியப்பணியாற்றியவர். இவர் கொழும்பிலும் பின் அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும் ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்து இணுவில் மத்திய கல்லூரி மேற்பிரிவிலும் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர். இணுவில் மத்திய கல்லூரியின் உன்னத வளர்ச்சியில் இவரது பங்கு சிறப்பானது. சமய சீலரான இவர இணுவில் கந்தசாமி கோயிலின் அறங்காவற்குழுவில் கடமையாற்றுவதுடன் தொடர்ந்து அறங்காவற் குழுவின் செயலாளராகத் தொண்டு செய்கிறார். இவரதுஅயராத முயற்சியால் இணுவில் கந்தசுவாமி கோவிலின் வாசற் கோபுரம், புதிய மணியும் மணிக் கோபுரமும் மிக விரைவில் பூர்த்தியாயின. இத்திருப்பணிகள் மட்டுமன்றி கோயிலின் கோபுரத்தின் மேற்கே அமைந்த பாரிய மண்டபமும், ஆறுமுகசாமியின் வாசற்கோபுரமும் மற்றும் பல வேறு அமைப்புக்களும் முன்னேற்றமடையும் இணுவில் கந்தசுவாமி கோவில் அறங்காவற் குழுவின் ஏனைய உறுப்பினருடன் சேர்ந்து இவர் சிறப்புறப் பணியாற்றி வருவது கோயிலின் உயர்ச்சியில் முருகன் திருவருளாகும்.

இவர் சமூகத் தொண்டாற்றியதன் காரணமாக ஏற்கனவே சமாதான நீதவானாகவும் நியமனம் பெற்றார். இவரது சேவையைப் பெறாத அதிபர் ஆசிரியர்கள் எவரும் இல்லை எனலாம். இவரை அறியாத எவரும் இல்லை. இவரது சேவை தொடர்ந்து சிறப்புடன் மிளிர இத்தெய்வங்கள் அருள் புரியட்டும்.

மூ.சிவலிங்கம்

**துரை எங்கரசு**

இவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்தவர். இணுவிலில் சிறந்த மாணவராக இருந்தபோது பேச்சுவன்மையும் எழுத்து வன்மையும் ஆளுமையுங் கொண்டவர். பட்டப்படிப்பு, பட்டப் படிப்பின் பின் படிப்புகளையும் கற்றுத் தேறியவர். ஆசிரிய சேவையில் தமது பணியை ஏற்ற இவர் அதிபர் சேவையிலும் தரமுயர்ந்து முதலாம் பிரிவில் வெவ்வேறு பாடசாலைகளில் ஆசிரிய, அதிபர் பதவிகளை வகித்த பின், தற்பொழுது இணுவில் மத்திய கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றுகின்றார். உடுவிற் கல்விக் கோட்டப் பிரிவுலுள்ள அதிகூடிய பிள்ளைகள் படிக்கும் தரமும், பல சிறப்புக்களும் கொண்ட இணுவில் மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் தனது சொந்த ஊரில் அதிபராக இருந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறார். இவர் தமது கல்லூரி சிறந்து விளங்குவதற்கு வேண்டிய அவசியமானவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றைச் செயற்படுத்த வல்ல பெரியோர்களை நாடி அனைவரையும் தமது திறமையால் அரவணைத்துச் செயற்படுகிறார். இவர் இணுவில் இந்து இளைஞர் பேரவையின் ஆரம்ப உறுப்பினராவார். இவர் எழுத்தாற்றல் மிக்கவர். பிரபல நாள், வார ஏடுகளுக்குக் கதை எழுதியவர். இவரது சிறுகதைத்தொகுதி ஒன்றும் வெளியானது. இணுவிலில் உள்ள சிறந்த எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.

மூ.சிவலிங்கம்

**கா.வைத்தீஸ்வரன்**

இவர் இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக்கல்வியை இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையில் (இணுவில் மத்திய கல்லூரி) கற்றார். உயர்வகுப்புக்களைக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்றார். சுகாதாரப் பரிசோதகராகப் பதவிவகித்தவர். தொடர்ந்து சுகாதாரக் கல்வி அதிகாரியாக வெகு சிறப்பாகக் கடமையாற்றியவர். புலமைப்பரிசில் பெற்று ஜப்பான் தேசம் சென்று சுகாதார சேவைகளின் நுட்பங்களை ஆராய்ந்தவர். இதனால் பெரிய முன்னேற்றமான அணுகுமுறைகளைக் கையாண்டு பலரிடமும் சேவை காரணமாக நன்மதிப்புப் பெற்றவர். தனது ஓய்வு நேரங்களில் சுகாதார சேவையில் மனித வாழ்க்கைக்குகந்த பல விடயங்களைப் புகுத்தி மிகப் பெறுமதியான சுகாதார நூல்களை வெளியிட்டுப் பெருமை தேடியவர். வாழையடி வாழையாக இறை தொண்டுகளில் ஈடுபட்டவர். மஞ்சத்தடி கிராம முன்னேற்றச் சங்கம், இணுவில் மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றில் உயர்பதவிகள் வகித்தவர். இவர் எழுதிய சுகாதார நூல்களில் தனது நாளாந்தப் பயிற்சிக்குட்படும் நூல்களான திருமந்திரம், திருக்குறள் போன்றவற்றின் அரிய கருத்துக்களையும் பாடல்களையும் புகுத்தி வாசகர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதைக் கொள்ளைகொண்டவர். மஞ்சத்தடி முருகனின் மீளா அடிமையான இவர் மஞ்சத்தடி அருணகிரிநாத சுப்பிரமணிய சுவாமி கோவில் அறங்காவற் குழுவிலும் அங்கம் வகித்தவர். மிகவும் பொறுமையும் சாந்தமும் எவரையும் இன் சொல்லுடனும் புன்முறுவலுடனும் வரவேற்கும் சக்தியும் வாய்ந்தவர். தற்போது கொழுபுத் தமிழ்சங்கப் பொருளாளராகவும் அரும்பணியாற்றுகிறார். கொழும்பிலும் இணுவில் மக்கள் அநேகர் நன்மதிப்புப் பெறும் பெருமையால் இணுவையூர் அகமகிழ்கிறது.

மு.சிவலிங்கம்

**திருமிகு வை.ஈழலிங்கம்** (கணக்காளர், விரிவுரையாளர், அவுஸ்திரேலியா)

இவர் இணுவில் தெற்கு வைத்திலிங்கம் அவர்களின் புதல்வர் ஆவர். ஆரம்பக்கல்வியை இணுவில் இந்துக்கல்லூரியில் கற்று, பின் மன்னார் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கல்வி கற்று, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் உயர்கல்வி கற்று, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று, பின் அங்கு சில ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். இலங்கை இறைவரித் திணைக்களத்திலும் கொழும்பு சட்டமா அதிபர் காரியாலயத்திலும் கணக்காளராகப் பணியாற்றிப் பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதலாவது நிதியாளராகச் சிறந்த பணியாற்றியவர்.

கடந்த இருபது ஆண்டுகளாக அவுஸ்திரேலியாவில் பணியாற்றும் இவர் அவுஸ்திரேலியா ஈழத்தமிழர் கழகத் தலைவராகவும், சிட்னி முருகன் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார். அவுஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்பு ஸ்தாபனத்தை உருவாக்கி 24 மணிநேர தமிழ் ஒலிபரப்பாளராகச் சிறந்த பணியாற்றி வருகிறார்.

ஆதரவற்ற தமிழீழச் சிறார்களுக்கு உதவுவதற்குப் பெருந்தொகை நிதியைச் சேகரித்து உதவி வருகிறார்.

மு.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷகடி வைத்தியர் அப்புத்துரை, பிள்ளைகள்

இணுவில் தெற்கைச் சேர்ந்த பொ.அப்புத்துரை என்பவர் இவ்வூரில் வியாபாரம், கைத்தொழில் செய்து பெரிய குடும்பத்துடன் தமது வருமானம் போதாத நிலையில் இருந்தவர். இற்றைக்கு ஐம்பது வருடங்களுக் முன் கிளிநொச்சி உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் குடியேற்றத் திட்டத்தில் முதன்முதல் ஓர் உறுப்பினராகப் பதிவுசெய்யப்பட்டுக் குடியேறியவர். இவர் மிகுந்த ஊக்கத்துடன் தனக்குக் கிடைத்த வயல்நிலத்திலும் குடியிருப்புக்கென வழங்கப்பட்ட காணியிலும் சிறப்புற விவசாயம் செய்தவர். இவர் இணுவில் கிராமத்தில் வசித்த காலத்தில் கிருஷ்ணபகவானை மிகவும் நேசமுடன் வணங்கியவர். கருடவாலாயமும் இருந்தது. இவருக்கு விஷகடி வைத்தியம் கைவந்தகலை. இவர்கள் வாழ்ந்த பகுதிகளில் விஷப் பாம்புகளால் அதிகம் கடியுண்டு வருவோருக்கெல்லாம் கைகொடுத்தவர். இதனால் நன்கு பிரசித்தி பெற்றார். அத்துடன் அரச, அரச சார்பற்ற தனியார் பிரமுகர்கள் இவரது வைத்தியத் துறை (ஆயுள்வேதம் உட்பட) சார்பாகவும், குணம் நடைச் சிறப்பின் காரணமாகவும் இவருடன் நட்புடன் பழகிவந்தனர். நற்புகழுடன் வாழ்ந்தவர்.

இவரது பிள்ளைகளான தாமோதரம்பிள்ளை. இராதா கிருஸ்ணன் ஆகியவர்களும் தமது கல்வி விவேகம் காரணமாகப் பெற்றோருக்கு விவசாயத்தில் அதிக உற்சாகத்துடன் உதவியதுடன் தந்தையின் விஷகடி வைத்தியம், ஆயுள்வேத வைத்தியம் ஆகியவற்றையும் கற்று நல்லதேர்ச்சி பெற்றிருந்தனர். தந்தையார் வீட்டில் நிற்காதவேளை நோயாளிகள் வந்தால் அவர்களைப் பார்வையிட்டு பரிகரித்து திருப்தியான முறையில் ஏற்ற நடவடிக்கைகள் எடுத்தனர். இதனால் இவர்களது புகழும் கூடியது. தாமோதரம்பிள்ளை மேலதிமாக வர்த்தக நிறுவனமும் (விவசாய, வைத்திய உபரணங்கள்) தமது வைத்தியத் துறையுடன் சேர்த்து நடாத்தி வந்ததுடன் கூடுதலாகச் சமூகப் பணியும் ஆற்றியதால் சமாதான நீதிபதி பட்டமும் கிடைத்தது. சகோதரர் இருவரும் பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது ஆயுள்வேத வைத்தியத் தேவைக்கேற்ற மூலிகைகள், யுத்த காலத்தில் பெறுவது கஷ்டமாதலால் தாமோதரம்பிள்ளையின் சிந்தனையில் மூலிகை பயிரிட நேர்ந்தது. தமது உறவினரும் இணுவில் தெற்கைச் சேர்ந்த விவசாயப் போதனாசிரியருமான (கிளிநொச்சி) கந்தசாமி என்பவர் கைகொடுக்கவும் அவரது மேற்பார்வையில் அரச உதவியுடனும் வேறு பலரின் கூட்டுறவுடனும் 10 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் மூலிகை பயிரிட்டு கிளிநொச்சிப் பகுதியில் நற்புகழீட்டியும் ஆயுள்வேத வைத்தியத்துறைக்குக் கைகொடுத்தனர். இவர்களுக்கும் விவசாயப் போதனாசிரியருக்கும் அப்பகுதியில் நற்புகழும் சிறந்த அனுபவமும் நற்பயனும் கிடைத்தது. தாமோதரம்பிள்ளையும், இராதாகிருஷ்ணனும் விவசாயம், ஆயுள்வேத வைத்தியம் மட்டுமன்றி அன்பினாலும் பண்பினாலும் அனைவரையும் அரவணைக்கும் பாங்குடையவர்கள். சென்றகால இடப்பெயர்வில் தத்தமது வீடுகளில் அநேகருக்கு புகலிடம் கொடுத்து உதவினர். இவர்கள் சமயத்தொண்டுகளையும் சரிவரச் செய்தனர். சமய, சமூக, பொருளாதார, கூட்டுறவுத் துறை விளங்குவது இணுவையூரின் சிறப்பாகும்.

மூ.சிவலிங்கம்

## பெ.கனகசபாபதி J.P

இணுவில் கிழக்கைச் சேர்ந்த இவர் இணுவில் சைவ மகாஜனக் கல்லூரியிலும், உடுவில் மான்ஸ் ஆங்கிலப் பாடசாலையிலும், உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் பயின்றவர். இதே காலத்தில் உதைபந்தாட்டத்திலும் சிறந்து விளங்கினார். விவசாயத் தொழிலிலும் கூட்டுறவுச் சங்க முகாமையாளராகவும் பணியாற்றியதுடன் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையிலும் பயின்றவர். இதனால் இவர் கூட்டுறவுத் துறையை விருப்புடன் நாடினார். இவர் சிறுவயதிலிருந்தே கோயில் தொண்டுகளிலும் சமூகத் தொண்டிலும் ஈடுபட்டார். மஞ்சத்தடி கிராம அபிவிருத்திச் சங்கச் சனசமூக நிலையத்தில் கூடிய கவனம் எடுத்துச் சங்கத்தில் உயர்பதவி வகித்து வந்ததன் காரணமாக சமய, சமூகப் பணியின் உற்சாகத்தால் கிராம அபிவிருத்திச் சங்கம் காரைக்கால் மயானம், அருணகிரிநாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசுப்பிரமணியர் ஆலயம் என்பவற்றில் சிரமதானம் மற்றும் சிறந்த அபிவிருத்திப் பணிகளைச் சக உறுப்பினர்களுடன் சேர்ந்து நடாத்தி வெற்றிகண்டார். காரைக்கால் மயான அபிவிருத்தியும் இரங்கல் மண்டபமும் இவரது அயராத முயற்சியின் சின்னங்களாகும். கிராம அபிவிருத்தியில் 1965 ஆம் ஆண்டிலிருந்து அரச நிதியுடன் பொதுமக்கள் நிதியும் சேர மஞ்சத்தடி நெசவு நிலையம், சங்க மண்டபம், சிறுவர் போசாக்கு மண்டபம் யாவும் உன்னதமாக வெற்றியுடன் செயற்படுகின்றன. இவ்வூர்வாசியான அமரர் ஆ.செல்லையா அவர்களின் பெறுமதி வாய்ந்த தியாக மனப் போக்கும் இவருக்கும் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கும் பெரும்பேறாக அமைந்தது. இதே காலத்தில் நல்லூர் தொகுதியில் உறுதிமிக்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறந்த அபிமானியாக இருந்ததால் அமரர் திரு.மு.சிவசிதம்பரம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களின் செயலாளராகக் கடமையாற்றினார். இதனால் அநேக நண்பர்களையும் பல அனுபவங்களையும் பெற்றதால் சமாதான நீதவான் பட்டமும் பெற்றார். பின் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினராகிப் பின் ப.நோ.கூ.ச தலைவரானார். தொடர்ந்து இப்பதவி வகிப்பதுடன் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவராகவும் பணியாற்றுகிறார். மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் கோயில் அறங்காவல் குழுவில் தொடர்ந்து செயலாளராகப் பணியாற்றுகிறார். இவரது அரிய முயற்சியால் அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்ற நிலையங்கள் சிறப்புடன் இயங்குகின்றன. இப்பிரிவில் இவர் சிவகாமி அம்மன் ஆலயத்தின் அபிவிருத்தி, திருப்பணி ஆகியவற்றிலும் அன்னதான சபையிலும் ஏனைய உறுப்பினர்களுடன் சேர்ந்து நெடுங்காலமாகச் சிறப்புடன் சேவை செய்து நன்மதிப்பு பெற்றுள்ளார்.

## செ.இலகுநாதன் (புண்ணியம்)

இணுவில் கிழக்கைச் சேர்ந்த இவர் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்விகற்ற காலத்திலிருந்தே உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்ததோடு தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளிலெல்லாம் தவறாது செயலாற்றி வருகிறார். இக்கிராமத்தில் விளையாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிகள், விளையாட்டுப் போட்டிகளை ஏற்படுத்திப் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கெல்லாம் தமது முயற்சியாலும், பிறரது முயற்சியாலும் சிறந்த பரிசில்களை வழங்கி ஊக்கப்படுத்துகிறார். இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தை ஆரம்பித்து நல்ல சேவையாற்றும் நோக்கில் நன்கு பலம்வாய்ந்த கழகமாக்கியுள்ளார். இவர்கள் மூலம் தாச்சி, கரப்பந்து, காற்பந்து மற்றும் இதர விளையாட்டுக்களிலும் இவ்வூர் இளைஞர்கள் சிறந்து விளங்குகிறார்கள். இவர் சொந்த முயற்சியாக விவசாயமும் வியாபாரமும் செய்து வருகிறார். பெரிய நிலப்பரப்பில் விவசாயம் செய்து அதிக பலனை அடைந்துள்ளார். வியாபாரத்திலும் சூழ்நிலைக்கேற்ப விவசாயத் தேவையான மற்றும் விவசாயப் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பவர். இணுவில் (மருதனார்மடம்) சந்தையைக் குத்தகைக்கு எடுத்து நடாத்தி வந்தார். இச்சந்தை மூலம் உடுவில் பிரதேசசபைக்கு 25 இலட்சம் ரூபா வரை வருடவருமானம் கிடைக்கிறது. இணுவில் விவசாய சமாசத்தில் உயர்பதவி வகிப்பதுடன் உடுவில் கமநல சேவை நிலையத்தில் விவசாய சம்மேளனத் தலைவராக விளங்குகிறார். கூட்டுறவுத் துறையிலும் கூடிய பங்கேற்றுள்ளார். உள்ளூர்க் கூட்டுறவுக் கிளைக் குழுவில் முக்கிய பதவி வகிப்பதுடன் நெடுங்காலமாகச் சுன்னாகம் ப.நோ.கூ.சங்கச் சமாசத்தில் பலம்வாய்ந்த உறுப்பினராக இருக்கின்றார். இணுவில் இராமநாதன் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கச் செயலாளராக உள்ளார். இணுவில் கிழக்குக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் இணுவில் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தை இணுவில் பகுதிக்கான கைத்தறிநெசவுசாலை இயங்கும் வகையில் அமைத்துக் கொடுத்ததோடு, திரு.சி.சண்முகலிங்கம் அவர்களுடன் இணைந்து கனேடிய அரசின் உதவியுடன் கிராம அபிவிருத்திச் சங்க நிலத்தில் சுயதொழில்வாய்ப்பிற்கான கட்டடமும் அமையக் காரணமாக இருந்தவர். அத்துடன் இணக்கசபை மூலம் பலரது பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதிலும் வெற்றிகண்டவர். இணுவில் அரிமாக் கழக உறுப்பினராக இருப்பதால் இவரது ஊக்கத்தினால் இணுவிலில் மூன்று பஸ்தரிப்பு நிலையங்கள் அமைந்தன. தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதனார்மடம் சந்தியில் பல இலட்சம் ரூபா மதிப்புள்ள மணிக்கூட்டுக் கோபுரமும் அமைக்கப்பட்டு விரைவில் அது சேவையாற்ற இருக்கின்றது. இணுவில் கோண்டாவில் காரைக்கால் சிவன் ஆலயத்தில் பல வருடங்களுக்கு முன் அன்னதான சபையை ஆரம்பித்து வருடாந்த மகோற்சவ காலங்களில் அன்னதானம் வெகுசிறப்பாக இயங்க வைக்கும் பொறுப்பில் பணியாற்றுகிறார். ஆலயவளர்ச்சி, பாடசாலை களின் வளர்ச்சி போன்ற சகல செயல்களிலும் மிக உற்சாகத்துடன் பொறுப்பேற்று நடத்தி முடிக்கும் ஆற்றலுடையவர். இணுவில் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் கடமையாற்றும் நிலையில் புதிய விளையாட்டு மைதானம் விலைக்கு வாங்க நண்பர்களிடமும், வசதி படைத்தோரிடமும் தமது திறமையால் நிதியுதவி பெற்று "பாண்ட்" வாத்தியக் கருவிகள், கணினிகள், நூல்கள், புதிய கட்டிட நிதிகள் யாவும் கிடைக்க வகை செய்கிறார். இத்தகைய பல சேவைகள் ஆற்றுமிடத்துப் பலராலும் நன்கு மதிக்கப்படும் இவரது பிள்ளைகள் யாவரும் கல்வியில் மேலோங்கி நல்ல பட்டம் பதவிகள் பெற்றுப் மேற் பட்டப்படிப்பில் இப்போதும் இருவர் தொடர்கின்றனர்.

## கே.எஸ்.ஆனந்தன்

இணுவில் கிழக்கில் வசிக்கும் கே.எஸ். ஆனந்தன் அவர்கள் தமிழ் சைவ அறிவில் சிறந்தவர். இத்துறையில் இவர் நன்கு படித்த பலருடன் விரிவான ஆராய்ச்சிகள் நடாத்தித் தாமும் போதிய அறிவைப்பெற்றுள்ளார். நல்ல ஆற்றலும் விவேகமும் உடையவர். எதையும் ஆணித்தரமாக விளக்கிக்கூற வல்லவர். சமயப்பணிகளுடன் சிறுகதை, தொடர்கதை, நாடகங்கள் எழுதுவதில் வல்லவர். பல நூல்களை எழுதியுள்ளார். இவரின் பல சிறுகதைகள் வீரகேசரி, சுதந்திரன் பத்திரிகைகள் மூலம் வெளிவந்ததுடன் புத்தகத் தொகுப்பாகவும் வெளிவந்து நற்பெயரீட்டியவர். "தீக்குள் விரலை வைத்தால்" என்பது முதலாகப் பல நாவல்களையும் எழுதியுள்ளார். அவற்றில் பல வீரகேசரி வெளியீடாக நூல்வடிவில் வெளிவந்தன. இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல் ஒன்று தமிழ் நாட்டு மணிமேகலை பிரசுர நிலையத்தால் வெளியிடப்படவுள்ளது. தொடர்ந்தும் எழுதிக்கொண்டே இருக்கிறார்.

எழுத்துப்பணியுடன் நில்லாது இணுவில் கிழக்கில் உள்ள சிவகாமி அம்மன் ஆலய அபிவிருத்தியிலும் அதிக ஈடுபாடு உடையவர். சமயப்பணியை மேலும் விரிவுபடுத்த எண்ணித் தமது நண்பர்கள், அயலவர்கள் பலருடன் சேர்ந்து இணுவில் இந்து மகாசபை என்னும் சமய நிறுவனத்தை நிறுவி முக்கிய பதவிகள் வகித்து அநேகரை முன்மாதிரியாக வழிநடத்தி வருகிறார். இவர் எழுதிய இரு நாடகங்கள் அண்மையில் காரைக்கால் அம்பலவாணர் அரங்கில் இணுவில் இளைஞர்களால் நடித்து மேடையேற்றப்பட்டன.

## ந.கணேசலிங்கம்.

இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த நடராசா கணேசலிங்கன் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்துக் கல்லூரியின் நீண்ட கால அதிபர். 2003 ஆசிரியர் தினத்தில் கம்பஹா மாவட்டத்தின் மிகச்சிறந்த அதிபராகத் தெரிவாகி ஜனாதிபதியால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இதுவரை 26 சிறுகதைகளையும் பல கட்டுரைகளையும் எழுத்து வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, சுதந்திரன், கொழும்புத் தமிழ்ச்சங்க மாதாந்த இதழான ஓலை முதலிய பத்திரிகைகளில் எழுதியுள்ளார். தொடர்ந்தும் எழுதுவதுடன் இவரது ஒட்டிய உறவும் ஒட்டாத உறவும் என்னும் சிறுகதைத் தொகுதி வெளிவரவுள்ளது. கவியரங்குகளிலும் சிறப்புடன் பங்கு பற்றித் தனது எழுத்தார்வத்தை எடுத்துக்காட்டுகிறார்.

## இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்.

இவர் இணுவில் சிவகாமி அம்மன் ஆலயச்சூழலைச் சேர்ந்தவர். அரச செயலகத்தில் பணியாற்றுகிறார். தற்போது முல்லைத்தீவுக் கச்சேரியில் பணியாற்றுகிறார். தமிழ்த் தேசியப் பற்று மிக்கவர். அநேக சிறுகதைகளையும் நாவல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பத்திரிகைகள் மூலம் எழுதியுள்ளார். அவற்றில் பல புத்தகவடிவிலும் வெளிவந்துள்ளன.இவரது சிறுகதைகள் சில சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. புதுக்குடியிருப்புக் ஏழல் இலக்கிய வட்டத்தின் அமைப்பாளரும் தலைவருமாக இருக்கிறார். "வெளிச்சம்" சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் முன்பு பணியாற்றியவர்.

## நாக.சிவசிதம்பரம்

இவர் இணுவில் சிவகாமி அம்மன் கோவில் சூழலைச் சேர்ந்தவர். பட்டதாரி ஆசிரியர். தனித்துவமாகக் கவிதை பாட வல்லவர். கம்பன்கழகக் கவியரங்குகளிலும் பங்குபற்றிய பெருமைக்குரியவர். வெளிச்சம் பத்திரிகைக் கவிதைத் தொகுதிகள் முதலியவற்றில் இவரது படைப்புக்கள் வெளிவந்தன. இவரது கவிதைத் தொகுதி ஒன்று விரைவில் வெளிவரவுள்ளது.

## இணுவை உத்திரன்

இவர் இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் சூழலைச் சேர்ந்தவர். கொழும்பு நிறுவனமொன்றில் பணி புரிகிறார். வீரகேசரி, சஞ்சீவி, மித்திரன், தினமுரசு, வலம்புரி முதலிய பத்திரிகைகளில் சிறுகதைகள் எழுதுகிறார். அண்மையில் "நிறங்கள்" என்னும் இவரது சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. இவர் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

## இணுவை சக்திதாஸன்.

இவர் இணுவில் மேற்கைப்பிறப்பிடமாகக் கொண்டவர். டென்மார்க்கை வசிப்பிடமாகக் கொண்டவர். லண்டன், பரிஸ் முதலிய வெளிநாட்டு வானொலிகளில் இவரது கவிதைகள் ஒலித்தவண்ணமிருக்கின்றன. அவற்றுள் 50 கவிதைகள் அடங்கிய "நெஞ்ச நெருடல்" என்ற தொகுதி அண்மையில் இணுவிலில் வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டிதர் நா.இராசையா

இணுவில் தெற்கைச் சேர்ந்த இவர் சைவத்துக்கும் தமிழுக்கும் தன்னை அர்ப்பணித்தவர். தனியார் கல்வி நிறுவனங் களில் சைவத்தையும் தமிழையும் அநேகர் விரும்பிப் படிக்கவும் சித்திபெறவும் காரணமானவர். கோயில்களில் சமயச் சொற் பொழிவுகளைச் சமய, இலக்கண, இலக்கிய நெறி தவறாது ஆணித்தரமாக நடாத்தி வெற்றிகண்டவர். இணுவில் தெற்கில் அமைந்த திருநெறிய தமிழ்மறைக் கழகத்தின் முன்னாள் தலைவராக இருந்த காலத்தில் சங்கம் ஆற்றியவரும் பணிகளுக்கு வித்திட்டவர். நாளேடுகளுக்குச் சிறந்த சமய, தமிழ்க் கட்டுரை களை எழுதி வெளியிடச் செய்தவர். இவரது பிள்ளைகளையும் தனது திறமையினால் தமிழ்ப்பணியில் முன்னுக்குவரச் செய்தவர். இவரது மகள் ஆதிலட்சுமி என்பவர் கவிதை, எழுத்துருவாக்கலில் சிறந்து விளங்கி வருகிறார். பல விடுதலை கீதங்களை கண்ணம்மா என்ற புனை பெயரில் எழுதிவருகிறார். பண்டிதர் இராசையா யாழ் ஆனைப்பந்தியடி உயர் கல்வி நிலையத்தில் கற்பித்த காலத்தில் அநேக கற்றோர்களைச் சிறப்புற உருவாக்கிய பெருமை கொண்டவர். சிறந்த இறைபக்தியுடன் தமிழ்ப்பற்றும் மிக்க இவர் சீரிணுவைத் திருவூரின் சொத்தாவார்.

## மா.இராசரத்தினம்

இவர் இணுவில் தெற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியராவார். கோயில் பசனையும் கூட்டுப் பிரார்த்தனையும் ஒழுங்காக நடைபெற உதவுவதுடன் திருநெறிய தமிழ்மறைக் கழகத்தின் ஆரம்ப உறுப்பினர், செயலாளர் போன்ற பதவிகளை வகித்தவர். தான் சார்ந்த கழகம் மூலம் சமய அறிவுப்போட்டி, பண்ணிசைப் போட்டி போன்றவற்றை ஏற்படுத்தியவர். பண்ணிசைப் பாடல்களை விசேடமாகக் கற்பித்துச் சமய சமூக நிலையில் பூரண தொண்டாற்றுகிறார். இவரது பெருமுயற்சியால் இணுவிலில் இயங்கும் இரு அறநெறிப்பாடசாலைகளில் ஒன்று பல சிரமங்களின் மத்தியில் செயற்பட மூலவேராக உள்ளவர். சிறந்த ஆன்மீகத் தொண்டு புரியும் இவர் இணுவில் பரராசசேகரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் ஆலயப் பொதுமக்களால் நன்கு கவரப்பட்டவர். இவரது அரிய தொண்டுகள் தொடர்ந்து சிறக்க எல்லாம்வல்ல பரராஜசேகரன் அருள்புரிவானாக.

## சின்னத்துரை சோதிலிங்கம் B.A

இணுவில் கிழக்கைச் சேர்ந்த ஆசிரியரான இவர் இந்து நாகரிகப் பாடத்துறையை உயர்தர வகுப்பு மாணவர்களுக்குச் சிறப்புறக் கற்பித்து வருபவர். இவர் உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக இந்துநாகரிகம் தொடர்பான பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அண்மையில் "இந்துநாகரிகத்தில் நுண்கலைகள்" என்ற இவரது நூல் வெளிவந்துள்ளது. இவர் இணுவில் இந்துக் கல்லூரியில் தற்போது பணியாற்றுகிறார்.

## வைத்திலிங்கம் ஸ்ரீஸ்கந்தவரோதயன்

மஞ்சத்தடியில் வாழ்ந்த வை.க.வைத்திலிங்கம் என்பவர் சமயப்பற்றும் நல்ல சமய அறிவுமுடைய பாடசாலை அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சிறந்த விவசாயியுமாவார். இவரது முதல் மைந்தர் ஸ்ரீஸ்கந்தவரோதயன் என்பவர் தந்தையைப் போலத் தமிழறிவும் சமயப்பற்றும் மிக்கவராதலால் இணுவிலில் உள்ள பெரியகோயில்களை இடையறாது வணங்கியே தமது கடமைக்குச் செல்வார். சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையில் சிறந்த பதவியில் நறகருமமாற்றுகிறார். இவரது தந்தை இணுவில் சிவகாமி அம்மன் கோயில் திருப்பணிகளுக்கு உதவியதுடன் அன்னதானசபை உறுப்பினராக இருந்து வருடா வருடம் போதிய உதவி வழங்கியவர். மஞ்சத்தடி முருகன், பரராஜசேகரப் பிள்ளையார் போன்ற கோயில்களில் ஆழ்ந்த பக்தியோடு சீரிய தொண்டுகளும் செய்கின்றார். தந்தை எடுத்துக் கொடுத்த பல பணிகளை நிறைவேற்றி வரும் தனயனென ஊரில் பலராலும் நன்கு மதிக்கப்படுகின்றார்.

## அம்பலவாணர் குகதாசன்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பிறந்து வளர்ந்த நாற்றிசையிலும் அருள்மிகு திருக்கோயில்கள் சூழப்பட்டிருந்ததால் இயற்கையாகவே தெய்வபக்தியும் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவும் இவரிடம் குடிகொண்டன. கல்விச் சிறப்பால் பட்டம் பதவிகள் கிடைத்தன. இலங்கை மக்கள் வங்கியில் பணியேற்ற இவரது திறமையும் தெய்வங்களின் ஆசீர்வாதம் இவரை வங்கி முகாமையாளராகப் பதவியுயர்வு பெறச்செய்தன. இயற்கையாகவே நற்பண்பும் சமய, சமூக சேவையாற்றும் மனப்பாங்கும் இவரிடம் அமைந்தன. இணுவில் கந்தசுவாமி கோயிலின் வாசலில் அமைந்த இணுவில் மத்திய பொது நூலகமும் அரும்பொருட் காட்சியகமும் என்னும் தாபனத்தில் பல பெரியார்களின் மத்தியில் இதன் செயலாளராகப் பணியாற்றுகிறார். இவரது சேவை இணுவில் அரிமாக்கழகத்திலும் செறிந்துள்ளது. அண்மையில் இவரது பெருமுயற்சியால் மக்கள் வங்கியின் கிளை ஒன்று இணுவிலில் அமைந்தது. சீரிணுவைத் திருவூர் அலங்கரிப்பில் இவரது நன்மதிப்புப் பிரசித்தமானது.

## கலாநிதி இரத்தினம் விக்னேஸ்வரன்

இவர் இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக்கல்வியை இணுவில் இந்துக்கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் கற்றுச் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றவர். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணனித்துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். இவர் தற்போது கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். தகவல் தொழில்நுட்பத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இவர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் சிறப்பு ஆய்வாளராக விளங்கி இன்று நாடு திரும்பிப் பணியாற்றி வருகிறார். இணுவில் கந்தசுவாமி கோயில் இளம்தொண்டர் சபையின் ஆரம்பகாலத் தலைவராக இருந்து அரும்பணியாற்றிய இவர் இணுவைக் கந்தப்பெருமானின் தலைசிறந்த பக்தனுமாவார். பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவரும் இவர் எமது ஊரின் சிறந்த கல்விமானாகவும் விளங்குகிறார். கோண்டாவில் நெட்டிலைப்பாயைச் சேர்ந்த புகழ்பூத்த மூத்த பத்திரிகையாளர் செ.நடராசா அவர்களின் அரும்புதல்வியை வாழ்க்கைத்துணையாகக் கொண்டவர். இணுவில் கந்தனின் மேல் இருந்த பக்தி காரணமாக ஆறுமுகப்பெருமான் வாசலில் கோபுரம் அமைக்க இறையருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலித்தது. இவரது அயராத உழைப்பினால் வெளிநாடுகளில் வாழும் நண்பர்கள் கொடைவள்ளல்களின் உதவியும் பெற்றுச் சிறந்ததோர் கோபுரத்தை (தெற்குவாசல்) நிறுவினார். தென்னிந்திய சிற்பக்கலைஞர் திரு.ஞானமூர்த்தியும் அவரது உதவியாளர்களும் மிகக்குறுகிய காலத்தில் பல சிற்பவேலைகளும் கலை நுட்பங்களும் கொண்டதோர் அரிய நெடியகோபுரத்தை அமைத்தனர். இக்கோபுரம் சிறப்புற அமைந்தது இணுவில் ஆறுமுகப்பெருமானின் அருள்வளமும் விக்னேஸ்வரன் அவர்களின் பெருமுயற்சியும் என்றால் மிகையாகாது. இக்கோபுரத்தின் குடமுழுக்குக் கடந்த தை மாதம் 8 ஆம் திகதி (22.01.2004) அன்று நண்பகல் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வால் இணுவை மக்கள் கோபுர தரிசனத்தையும் விக்னேஸ்வரன் அவர்கள் இணுவைக் கந்தனின் பேரருளையும் பெறத்திருவருள் கைகூடியது.

## இணுவைச் சுசீலா தர்மலிங்கம்

இவர் இணுவில் தெற்கைச் சேர்ந்தவர். கடந்த இடப் பெயர்வுடன் இந்தியா சென்று வசித்து வருகிறார். இயற்கையாகவே கவிகள் புனைவதில் பிரபல்யமானவர். அநேக பாடல்களைத் திறமையாக எழுதி நன்கு மதிப்புப்பெற்றவர். இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையாரின் பாடல்கள் அடங்கிய ஒலிப் பேழை அமரர் மஹாவித்துவான் வீரமணி ஐயரினதும் சுசீலா அவர்களினதும் ஆக்கமான பக்திப்பாடலாகும். இன்றும் இப் பாடல்கள் ஒலிக்கின்றமை இணுவிலின் பெருமையாகும்.

## இணுவையூர் வாரியார் தி. ரவீந்திரன்

இவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்தவர். 14 வருடங்களுக்கு முன்னர் நோர்வே நாட்டுக்குச் சென்று வசித்து வருகிறார். இவர் இயற்கையாகவே சமயபக்தி மிக்கவர். தனது சொல்வன்மையாலும் ஆன்மீகச் சிந்தையாலும் சமயச்சொற்பொழிவுகள் செய்வதிலும் தமிழ், சமயம், கலையுடன் இணைந்து செயற்படும் வகையில் கலைவிமர்சனம் சொற்பெருக்காற்றல் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு கதைகள், கட்டுரைகள், நிகழ்ச்சிகளைத் தொகுத்து விமர்சனஞ் செய்தல் போன்ற பல நிகழ்வுகளிலும் ஆர்வத்துடன் பணிபுரிகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது சேவையினால் 1993.02.28 அன்று இணுவையூர் வாரியார் என்று பட்டஞ் சூட்டிக் கௌரவித்துள்ளனர். இவர் தற்போது ஆன்மீகப் போக்கில் நிறைவாக வாழ்கிறார்.

## மு.கௌரிகாந்தன் M.A, M.Ed.

ஏழாலையில் பிறந்து முதுகலைமாணிப் பட்டம் பெற்று ஆசிரியராகி இணுவில் மேற்கில் மணம் புரிந்து வதியும் திரு.மு.கௌரிகாந்தன் இன்று வடமேல் மாகாணத்தின் இந்துசமய பாட ஆசிரிய ஆலோசகராகச் சிறப்புடன் பணிபுரிகிறார். அமைதியும் தன்னடக்கமும் தமிழ்சைவப் பற்றும் மிக்க இவரால் இணுவில் பெருமை அடைகிறது.

## தெ.புவனேந்திரன்

இணுவில் மேற்கைச் சேர்ந்த "இந்திரன்" என அழைக்கப் படும் புவனேந்திரன் ஒரு வளரும் கவிஞர். தேவஅபிதா என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதிவருபவர். சிறந்த பட்டிமன்றப் பேச்சாளர். டென்மார்க்கில் வதியும் இவரது கவிதைத்தொகுதி ஒன்று அச்சாகிக்கொண்டிருக்கின்றது.

## தெ.இரவீந்திரன்

இணுவில் மேற்கு தெட்சணாமூர்த்தியின் மகனும் "ரவி" என அழைக்கப்படுபவருமான இரவீந்திரன் என்னும் இளைஞர் நிகரி வெளியீட்டு நிலையத்தின் உரிமையாளர். தமது இந்தப் பதிப்பகத்தின் மூலம் முதுபெரும் எழுத்தாளர்கள் சிலரின் உன்னத ஆக்கங்களை வெளிக்கொணர்வதோடு, நிகரி நிறுவனத்தின் மூலம் நாடெங்கும் ஈழத்துப் புத்தகங்களை விநியோகித்து இலக்கியப்பணிக்கு ஊக்கம் கொடுத்து வருகிறார்.

## நா.ரவிச்சந்திரன்

இணுவில் மேற்கைச் சேர்ந்த நா.ரவிச்சந்திரன் உணர்ச்சி வேகம் மிக்க சுவைபொங்கும் கவிதைகளை ஆக்கிவருகிறார். கவியரங்குகளில் முழங்கி வருகிறார். இவரது கவிதை நூல் ஒன்று அச்சாகிக்கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பால் உயர்ந்தவர்கள்

## பொ. நடராசா

உழைப்பால் உயர்ந்தவர் பொ.நடராசா (அண்ணா கோப்பி) அவர்கள். பூரண கல்வி கற்காத நிலையில் வியாபாரத்தை நோக்கினார். இணுவில் விவசாயப்பூமி இதனை நினைவுறுத்துவது போல இணுவில் வடபகுதியில் பெருநிலப்பரப்பில் பல தேவை களையும் பூர்த்தி செய்யும் விவசாயப் பண்ணையை நிறுவினார். அண்ணா தொழிலகத்தை இணுவிலில் ஆரம்பத்தில் சிறியளவில் தொடங்கியவர். தனது விடாமுயற்சியும் உழைப்பின்பால் கொண்ட அவாவும் இன்று அவரை ஒரு பெருவிருட்சமாய் பல்வேறு சிறுகைத்தொழில்களை ஒன்றுடன் பலவான உற்பத்திகளையும் மிகத்தரமாகச் செய்து பணியாட்கள் மூலம் நாடெங்கும் கிளை களை நிறுவி நல்ல விபாயாரஞ் செய்தவர். ஐநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இவரது தொழிலகத்தில் தொழிலாற்ற வகை செய்தவர்.

## து. சிவராசா

இணுவிலில் 30 வருடங்களுக்கு முன் ஐம்பதுக்கும் மேற்பட்ட சுருட்டுத் தொழிலகங்கள் இருந்தன. ஆயிரக் கணக்கானோர் பணியாற்றினர். யுத்தகாலச் சீர்கேட்டால் யாவும் அருகியபோதும் இணுவிலில் புகையிலை, சுருட்டுவேலையைத் தமது மரபுக்கேற்ப நம்பி வாழ்ந்த தொழிலாளரின் நன்மை கருதி இன்றும் பரம்பரையாக இயங்கிவந்த சுருட்டுத்தொழிலை வளமுடன் இயக்கிவருபவர் து.சிவராசா அவர்கள் இவர் இத்தொழிலைக் கைவிட்டால் பல வர்த்தக வழிவகைகள் செய்யலாம். இணுவிலின் சுருட்டுத்தொழில் தொடர்ந்து இயங்கவேண்டும் என்ற பழைய முறையைக் கையாள்வது தெய்வங்களின் நல்லாசியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் சைவத்திருநெறிக் கழகம்

எல்லாம்வல்ல அன்னை சிவகாமி அருளால் அவள் அடி பணிந்து கோயிற்திருப்பணி, சிரமதானப்பணி ஆகியவற்றில் இக்கழகம் ஈடுபட்ட காலத்தில் அன்னதானப் பணியிலும் செயற்பட நேரிட்டது. பொது மக்களின் உதவியினால் அன்னதானத்துக்கென அரியதோர் மண்டபமும் நிறுவப்பட்டது. இம்மண்டபம் அன்னதானஞ் செய்யும் காலங்கள் போக ஏனைய காலங்களில் பாவனை அற்றிருந்ததால் இக்கட்டடத்துக்குப் பெருமை சேரும் வகையில், சமயக்கல்வி போதிக்குமாறு திரு.சபா.ஆனந்தர் அவர்கள் போன்ற பெரியார்கள் வற்புறுத்தினர்.

உடனடியாகச் சமயக்கல்வி போதிப்பதற்கான வசதிகள் இல்லாததன் காரணமாகக் காலம் கடந்தது.

இலங்கை அரசாங்கம் அறநெறிப்பாடசாலைகளை ஏனைய இடங்களில் முன்னர் அமைத்தபோதும் யாழ் மாவட்டத்திற்குக் கூடுதலாக அமைக்கப்படவில்லை. இதே காலத்தில் இந்து கலாசார அலுவல்கள் அமைப்பின் யாழ் பிராந்திய உதவிப் பணிப்பாளரும், வலிதெற்குப் பிரதேச செயலருமான அமரர் ஆ.மகாலிங்கம் அவர்கள் அன்னை சிவகாமியின் அருள்வளஞ் சூழ்ந்த இப்பகுதியில் அறநெறிப் பாடசாலையை நிறுவுமாறு அன்புக்கட்டளை விடுத்தார். அறநெறிப் பாடசாலை தனித்து இயங்கமுடியாது. இது கோயில் அறங்காவற்குழு அல்லது இந்துசமய நிறுவனம் பொறுப்பேற்று நடாத்த வேண்டிய சட்ட அமைப்பைக் கொண்டது. சிவகாமி அம்மன் கோயில் தனியார் கோயிலாக இருந்ததால் சைவநிறுவனம் நிறுவி அறநெறிப் பாடசாலையும் செயற்பட நேர்ந்தது.

1997 ஆம் ஆண்டு இணுவில் சைவத்திருநெறிக்கழகமும் அதன் அனுசரணையில் சிவகாமி அறநெறிப்பாடசாலையும் ஆரம்பமாயின. இவை சட்டப்படி செயற்பட்டு உரிய காலத்தில் இந்து கலாசார அமைச்சில் பதியப்பட வேண்டும். 1997 ஆம் ஆண்டு விண்ணப்பித்தபோதும் 2001 ஆம் ஆண்டின் இறுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டும் பதிவாகின. ஐந்து சோடி வாங்குகளும் இரு தொகுதி சிறுவர்களுக்கான நூல்களும். பண்ணிசைக்கான சுருதிப்பெட்டியும் எமக்கு வழங்கப்பட்டன.

இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தில் சிவகாமி அம்மன் கோவில் அன்னதானசபை உறுப்பினர்களும் இவ்வூர்ப் பெரியார்கள் சிலரும், இளைஞர்களும் உறுப்பினர்களாக அணிசெய்கின்றனர்.

ஆரம்பத்தில் இச்சிவகாமி அறநெறிப்பாடசாலையில் பத்துக்கும் குறைவான பிள்ளைகளே படிக்கத்தொடங்கினர். ஆறு வருட நிறைவில் இதன் துரிதவளர்ச்சி காரணமாக 65 பிள்ளைகள் இன்று படிக்கின்றனர்.

## இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின் பிரதான நோக்கங்கள்.

(1) சிவகாமி அறநெறிப்பாடசாலையை நன்கு பராமரித்தல்.

(2) பிள்ளைகளை இளம்பருவத்திலிருந்தே சமயச் சிந்தனைகளையும் நற்பழக்கவழக்கங்களையும் பேணவைப்பது.

(3) பன்னிரு திருமுறைகளைப் பிழையில்லாமலும் பயபக்தியுடனும் கருத்தறிந்து இசையுடன் பாட வசதிசெய்வது.

(4) வருடாவருடம் சிவகாமி அம்மன் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதல் செய்வது.

(5) தொடர்ந்து வருடாவருடம் திருவாசகவிழாவினைச் சிறப்பாக நடத்துவது.

(6) திருக்கோயிலின் மகோற்சவ காலத்தில் சிறந்த சமயப் பெரியார்களை அழைத்து வந்து தொடர் சொற்பொழிவுகள் நடத்துவது.

(7) மகோற்சவத்தையொட்டி அறநெறிப்பாடசாலை மாணவர் இடையே சமய அறிவுப்போட்டி. பண்ணிசைப் போட்டிகள் வைத்து நல்ல பெறுமதியான பரிசில்கள் வழங்குவது.

(8) சமயகுரவர்களின் குருபூசைத் தினங்களைப் பக்திபூர்வமாகக் கொண்டாடுதல்.

(9) நவராத்திரி விழாவையொட்டிப் பத்து நாட்களும் விசேட பூசை, வழிபாடுகள் நடத்துவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10) அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்குச் சமயக்கல்விப் போதனையும், பண்ணிசையும் இலவசமாகப் போதிப்பதுடன் மேலதிகமாகச் சங்கீதம், நடனம் ஆகிய துறைகளில் வகுப்புகள் நடாத்துதல்.

(11) இங்குபயிலும் மாணவர்களை வகுப்புக்கல்வியுடன் கோவில் களில் தாமாகவே முன்வந்து தொண்டுசெய்தல், நல் லொழுக்கம் பேணுதல், பெரியோரைப் பேணுதல் போன்ற செயல்களில் ஊக்குவித்தல்.

(12) இணுவில் சிவகாமி அம்பாள் மகோற்சவத்தின் போது சுவாமி வெளிவீதியுலா வரும்போது திருமுறைப் பஜனை செய்தல்.

(13) வெள்ளிக்கிழமை தோறும் சிவகாமி அம்மன் கோவில் வாசலில் கூட்டுவழிபாடு நடாத்துதல்.

இச்சிறந்த நோக்கங்கள் யாவும் அன்னையின் அருளால் திறம்பட நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சிவகாமி அறநெறிப்பாடசாலையின் ஆறாம்வருட நிறைவில் அறநெறி சார்ந்த 21 கட்டுரைகளையும், சிவகாமி அம்பாளின் சிறப்புகளை மையமாக வைத்து அமரர் மகாவித்துவான் வீரமணி ஐயாவினால் எழுதப்பட்ட 51 பாடல்களையும் கொண்ட "அறநெறிக் களஞ்சியம்" என்னும் ஆன்மீக நூல் 05.01.2003 அன்று வெளியானது. இந்நூலின் சிறப்பினால் இணுவில் சைவத்திருநெறிக் கழகம் அனைவரது பாராட்டையும் பெற்றது. இப் பாராட்டை அன்னை சிவகாமியின் பேரருள் தேடிந்தந்ததால் நாம் பெருமையடைகிறோம்.

இணுவில் சைவத்திருநெறிக் கழகம் தனது ஏழாவது ஆண்டு நிறைவையொட்டி "சீரிணுவைத் திருவூர்" என்னும் சிறந்த நூலை வெளியிடும் பேறும் எமக்குக் கிடைத்தது. அன்னையின் அருளால் இந்நூலை வெளியிடும் நோக்கம் இதிற்காட்டிய இயற்கையான அரியசம்பவங்கள், காட்சிகள், சிறப்புகள் யாவற்றையும், அடிக்கடி மாறிவரும் சூழலில், எமது இரண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் சந்ததியினர் ஒருமுறை மீளாய்வு செய்து தமது ஆன்றோரின் சிறப்புகள், பெருமைகள் யாவற்றையும் அறிந்து மேம்பட வாழவைப்பதாகும்.

இணுவில் சைவத்திருநெறிக்கழகம், சிவகாமி அறநெறிப் பாடசாலை ஆகியவற்றை எங்கள் உறுப்பினர்கள் திறம்பட நடாத்தும் நிலைமையை உணர்ந்த இவ்வூர்ப் பிரமுகர்களும், இவ்வூரைச் சேர்ந்த வெளிநாடுகளில் வசிக்கும் அன்பர்களும் அவ்வப்போது வழங்கிவரும் உதவிகளுடன், இந்துசமய கலாசார அமைச்சு வழங்கிய 25000 ரூபா நன்கொடையுடன் தளபாடங்கள், சிறுவர் நூலகத்துக்கான அலுமாரி, மண்டபத்துக்கான மின் இணைப்பு யாவும் கிடைத்தன. மேலும் எங்கள் அறநெறிப் பாடசாலையின் வளர்ச்சி கண்டு மேலும் உதவிகள் வழங்க ஏற்ற நடவடிக்கைகள் எடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

சிவகாமி அறநெறிப்பாடசாலையில் கடந்த ஆறு வருடங்களாகச் செல்வி சசிசுகேதினி அவர்களும், ஒரு வருடகாலமாகச் செல்வி கவிதா பாலசுப்பிரமணியம், செல்வி கம்சபூஷனி கனகரத்தினம் ஆகியோரும் சமயம், திருக்குறள் ஆகியனவும், செல்வி ஜெயகௌரி அவர்கள் பண்ணிசையும் சங்கீதமும், செல்வி கலைவாணி அருளானந்தம் அவர்கள் நடனமும் போதிக்கின்றனர். பண்ணிசை, சமயம் போன்ற பாடங்களைப் போதிக்கும் ஆசிரியைகள் வேதனமின்றியே தொண்டாற்றுகின்றனர். இவர்களனைவரதும் சேவை பாராட்டத் தக்கது.

இவை யாவும் அன்னை சிவகாமியின் கருணையின் மகத்துவம் என்றே எண்ணி அன்னையின் கடைக்கண் பார்வை எங்கள் துரித பணியினை மேன்மேலும் ஊக்குவிக்க அன்னையின் சேவடி பணிவோமாக.

அன்னை சிவகாமியின் புகழ் திக்கெட்டும் பரவட்டும்.

**சைவத்திருநெறிக் கழகத்தினர்**
**இணுவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீர்த்தனை
# இணுவையூர் சைவத்திருநெறிக்கழகம்
### பல்லவி

வையகத்தில் இணுவையூர் சைவத்திருநெறிக் கழகம்
வழங்கும் சேவையில் சைவம் விளங்கிடுமே.

### அனுபல்லவி

தெய்வ நெறியான மேன்மைச் சைவநீதி விளங்க வைத்தே
உய்யுநெறி காட்டிடுமே உயர் தெய்வ பக்தி நல்கி

### சரணம்

அறநெறிப் பாடசாலை சைவநெறி வளர்க்கும்
திருமுறை பண்ணிசைகள் தெய்வீக மணம் கமழும்
குருகுல மூலம் கீதம் வாத்தியம் நிர்த்தியம் கொழிக்கும்
பிரகாசம் தரும் பிஞ்சுக் குழந்தைக் கல்வியூட்டி.



2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்த்திருவிழாவின் போது அறநெறிப்பாடசாலைப் பஜனைக் குழுவினருடன் அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாளர் மூ.சிவலிங்கமும், சைவத்திருநெறிக்கழகத் தலைவர் தவராஜாவும், உபதலைவர் செல்வபட்சுமியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசுவாமி கோவில்

# இளந் தொண்டர் சபை

எழில்மிகு இணுவைக்கந்தன் கோட்டத்தின் வடபால் மடாலயம் அமைத்து அருள்மிகு இளைஞர் கூடி வளர்மதி எனத் திகழ்விக்கும் வனப்பு மிகு நிறுவனமே இந்த இளந்தொண்டர் சபை. ஆலய அருட் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னதாக ஆலயச் சூழலைத் தூய்மைப் படுத்தவும், சுவாமி காவுதல், அடியார்களுக்குத் தாகசாந்தி செய்தல் போன்ற சரியைத்தொண்டுகள் புரிவதற்காகவும், ஆறுமுகசுவாமி மண்டபத்தில் கூடி அமைக்கப்பட்ட அமைப்பே இணுவில் இளம்தொண்டர் சபையாகும்.

இச்சபையினது நிர்வாக அமைப்பினுக்கு ஏற்பக் காலத்துக்குக் காலம் இயற்றப்பட்ட சட்டவரைவுகள் இச்சபையின் இன்றைய வளர்ச்சிக்கு ஆணிவேராக அமைந்துள்ளன என்பது மிகையாகாது. இந்த அடிப்படையில் 1976 ஆம் ஆண்டளவில் திருமணமாகாத 35 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மட்டும் நிர்வாகத்தில் இருக்கலாம் என்பதனை வலியுறுத்தும் யாப்போடு நிறுவப்பட்டு இன்று இளம்விருட்சமாக இளந்தொண்டர்சபை கிளைபரப்பி நிற்கின்றது.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்னும் கூற்றுக்கிணங்கச் சமயப் பணியினை மேற்கொண்டு வரும் இச்சபையானது ஆண்டுதோறும் மகோற்சவத்தை முன்னிட்டுச் சமயபாடப் பரீட்சைகளைப் பாடசாலை மட்டத்தில் நடாத்துவதோடு நாவன்மையை மேம்படுத்தும் நோக்கோடு பேச்சுப்போட்டிகளையும் நடாத்தி முதலிடம் பெறும் மாணவர் களுக்குத் தங்கப் பதக்கங்களை வழங்கிக் கௌரவித்து வருகின்றது.

நவராத்திரிவிழா இச்சபையின் மடாலயத்தில் பத்து நாட்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. கலை நிகழ்ச்சிகளும், இளம் கன்னிப்பேச்சாளர்களை மேடைக்கு அறிமுகமாக்குவதும் நவராத்திரி விழாவின் சிறப்பம்சங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாவருடம் நவராத்திரி விழாவினையொட்டிச் சகலகலாவல்லி மாலையும் இச்சபையினரால் அச்சிடப்பட்டு இலவசமாக அடியார்களுக்கு வழங்கப்படுகின்றது.

இச்சபையானது சமய, கலை, இலக்கிய நூல்களையும் காலத்துக்குக்காலம் வெளியிட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் ஆசிரியர் அவர்களின் இணுவை முருகன் பிள்ளைத்தமிழ், அன்னை நாச்சி அருள்மஞ்சரி, இலக்கணப்பூங்கா (முதற்பதிப்பு), மிருதங்க வித்துவான் க.சங்கரசிவம் அவர்களின் "மிருதங்கம்" போன்ற நூல்கள் இச் சபையினரால் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் ஆலயத்தின் அருட்சூழலை மேம்படுத்தும் பொருட்டுத் திருவெம்பாவைக் காலங்களில் காலை பண்ணிசை நிகழ்வும், மாலைவேளைகளில் சுவாமி வீதியுலா வரும்போது பஜனையும் வருடம்தோறும் தவறாது நிகழ்த்தப்பட்டு வருகின்றன. தேர், தீர்த்தத் திருவிழாக் காலத்தில் அடியார்களுக்காகத் தண்ணீர்ப்பந்தலும், அன்னதானமும் நடாத்தப்படுகின்றன.

சமய முயற்சியோடு தெய்வீகக் கலைகளினது மேம்பாடு கருதிப் பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், சிற்பமும் ஓவியமும் போன்ற கலைவகுப்புகளும் திறமைமிகு ஆசான்களால் நடாத்தப்பட்டு வருகின்றன. இதுவரையில் ஏழு மாணவர்கள் இச்சபையின் வகுப்புகளிலிருந்து அரங்கேற்றப்பட்டவர்களாகக் கலை இலக்கிய உலகில் பிரவேசித்துள்ளனர். இச்சபையின் கலை வகுப்புகளில் பயிற்றப்பட்ட மாணவர்களில் பலர் அதிக திறமைமிக்க ஆசிரியர்களாகவும், இராமநாதன் நுண்கலைப் பிரிவில் மாணவர்களாகவும் இருந்து வருவது இக் கலைவகுப்பின் நல்ல அறுவடைக்கு நற்சான்றாக விளங்குகின்றதெனலாம்.

கலைச்சிறப்பு மிக்க இணுவையில் பதினாறாம் நூற்றாண்டு தொடக்கம் பாரம்பரியமாகச் செயற்பட்ட நாட்டுக் கூத்துக்கலை அதனைத் தொடக்கப்பெற்ற இசைநாடக மரபு என்பன நாகரிகமோகத்தாலும் நாட்டுச்சூழ்நிலையாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளம்பிய நிலை கண்டு அக்கலைகளை மீண்டும் தளம்பாது ஒளிவீச வைக்கவேண்டுமென்ற அர்ப்பணிப்பு நோக்குடன் சுவாமி சங்கரதாஸ் அவர்களின் இசை நாடகங்கள் இச்சபையினால் வருடாவருடம் அரங்கேற்றப்படுகின்றன. வெளியூர் நாடக ஆர்வலரது வேண்டுகோளுக்கிணங்க வெளி, அயற் கிராமங்களிலும் மேடையேற்றப்படுகின்றன.

இளஞ்சிறார்களது கல்வி மேம்பாடு கருதிச் சிறுவர் பாடசாலை இற்றைக்கு இருபது வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவருகின்றது. தற்போது இப்பாடசாலையில் 95 பிள்ளைகள் கல்வி பயில்கின்றார்கள். இப்பிள்ளைகளின் மேம்பாடு கருதி இப்பாடசாலைக்கெனத் தனியானதொரு கட்டடத் தொகுதி நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது. இதற்கான சகல பொருளுதவிகளையும் இளம்தொண்டர் சபையின் முன்னாள் உறுப்பினரும் தற்போது இலண்டனில் வசிப்பவருமான சண்முகநாதன் சபேசன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

மேலும் இச்சபையினால் நடாத்தப்படும் சமய விழாக்கள், அரங்கேற்றங்கள், சமய, கலை வகுப்புக்கள் போன்றவற்றிற்குத் தற்போது இருக்கும் மண்டபம் போதாமை கண்டு முன்னாள் இந்துகலாசார அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்களால் இரண்டாவது உலக இந்து மாநாட்டு ஞாபகார்த்த அன்பளிப்பாகப் புதிய மண்டபம் ஒன்று நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டப் பட்டுக் கட்டத் வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலும் இச்சபையின் இறைபணியானது மேன்மேலும் பல்கிப்பெருகிக் காட்டாற்று வெள்ளமெனப் பாய்ந்து தெய்வீகச் சூழலும் சைவநீதியும் தெய்வீகக் கலையுணர்வும் தழைத்தோங்க வேண்டுமென எல்லாம்வல்ல எம்பெருமான் தனித்துவப் பெரும் தெய்வம் கந்தவேளின் பாதம் பணிவோமாக.

ஓம் சக்தி!

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

**இணுவில்**
**இளந்தொண்டர் சபையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெறிய தமிழ்மறைக் கழகம்

தெய்வீகப் பொலிவும், கலைப் பொலிவும் மிக்கது இணுவையம்பதி. இதன் தென்புறத்தில் அமைந்திருப்பது ஸ்ரீபராராஜசேகரப்பிள்ளையார் ஆலயம். ஸ்ரீபராராஜசேகரப்பிள்ளையாரின் திருவருளினாலே 1991 ஆம் ஆண்டு திருநெறிய தமிழ்மறைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இம்மன்றத்தின் ஆரம்பகர்த்தாக்களாக இருந்து ஆலோசனையும், ஆசியும் வழங்கிய அறிஞர் பெருமக்கள் காலஞ்சென்றவர்களான திரு.சபா.ஆனந்தர், திரு.மா.ந.வீரமணியர், திரு.வை.கதிர்காமநாதன் ஆகியோராவர். இவர்கள் திருநெறிய தமிழ்மறைக்கழகத்தின் அத்திவாரமாக இருந்து அதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உழைத்தவர்கள். மன்றத்தின் ஆலோசனைக் கூட்டங்கள் யாவும் ஆலய முன் மண்டபத்திலேயே நடைபெறும்.

சைவச் சூழலில் வாழும் சிறார்களையும், இளைஞர் களையும், யுவதிகளையும் எதிர்காலத்தில் நல்ல சமூக இணைப் பாளர்களாகவும் ஆத்மீகவளம் மிக்கவர்களாகவும், கல்வியறிவு மிக்கவர்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் ஆக்குவதே திருநெறிய தமிழ்மறைக் கழகத்தின் நோக்கமாக இருந்தது. இந்நோக்கத்தை நிறைவேற்றுமுகமாக மன்றத் தலைவராகப் பண்டிதர் நா.இராசையா அவர்களும், செயலாளராகச் சோ.பரமசாமி அவர்களும், பொருளாளராக மா.இராசரத்தினம் அவர்களும் தெரிவாகினர். ஆலயத்தொண்டர்கள் நிர்வாகசபை உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டனர்.

இதன்பேறாக மன்றம் தேவாரங்களைப் பிழையின்றிக் கற்கப் பண்ணிசை வகுப்புகளையும் மற்றும் நடன வகுப்புக் களையும் நடாத்தி வந்தது.

ஆரம்பத்தில் பண்ணிசை வகுப்புகளை மா.இராசரத்தினம் ஆசிரியர் ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து சங்கீத பூஷணம் செல்வி நாகம்மாவும், இசைமணி திரு.திருஞானசம்பந்தரும் பண்ணிசை வகுப்புகளை நடாத்தி வந்தனர். நடன வகுப்புக் களைச் செல்வி சிவகுரு (சுதுமலை), செல்வி மாலினி (உடுவில்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சு.மகேந்திரன் (தாவடி), செல்வி பிரியதர்சினி, செல்வி சுமதி (இணுவில்) ஆகியோர் நடாத்தினர். மிருதங்க வகுப்புக் களைத் திரு.பாலச்சந்திரசர்மா, செல்வன் கண்ணதாசன், திரு.எம்.எம்.செல்லத்துரை, செல்வன் மதுஜன் ஆகியோர் நடாத்தினர்.

மாணவர்களை ஊக்கப்படுத்துமுகமாகப் பண்ணிசைப் போட்டிகள், நாவன்மைப் போட்டிகள், மனனப்போட்டிகள் நடாத்திப் பரிசில்களும் வழங்கப்பட்டன. முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்குத் தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டிலிருந்து அதாவது திருநெறிய தமிழ்மறைக் கழகம் ஆரம்ப காலத்திலிருந்து இற்றைவரை போட்டிகள் வைத்து, மேற்கூறியபடி பரிசில் வழங்கும் முறை நடைபெற்று வருகின்றது. இதனால் பல மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

மேலும் சிவராத்திரி விழா, நவராத்திரி விழா, நாவலர், நால்வர் குருபூசைத் தினங்கள் என்பன நடாத்தப்பட்டு வருகின்றன. இதற்கு வழிகாட்டிகளாக திரு.வை.ஸ்கந்தவரோதயன், திருமதி அன்னலட்சுமி சின்னராசா (அமரர்), திருமதி வை.கணேசபிள்ளை அவர்களும் திருமதி ப.சந்திரசேகரி அவர்களும் இருந்து வந்துள்ளார்கள்.

இத் திருநெறிய தமிழ்மறைக் கழகமானது 1993 ஆம் ஆண்டு தவத்திரு வடிவேற்சுவாமிகளது வாழ்க்கை வரலாறு பற்றிய மலர் ஒன்றை வெளியிட்டுப் பெருமையடைந்தது. சுவாமிகள், பக்தர்களும், சித்தர்களும் வாழ் இணுவையம் பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சைவசித்தாந்தம், வேதாந் தங்களைப் படித்துக் கரைகண்டவர். யோகர்சுவாமிகளிடம் நிர்வாணதீட்சை பெற்றவர். கிளிநொச்சியில் மகாதேவா ஆச்சிரமத்தை உருவாக்கிப் பல தொண்டுகள் புரிந்தவர். இவரது பணிகள் அகிலத்திற்கு ஒளியூட்டுவனவாகும். ஈழத்து ஞானிகளின் வரிசையில் நிற்கும் வடிவேற்சுவாமிகள் உதயமானது இணுவில் கிராமம் புனிதமும் பெருமையுமடையக் காரணமாயிற்று. சுவாமி களின் அருமையையும் பெருமையையும் மன்றம் வெளியிடக் காரணமாயிருந்தவர் திரு.சோ.பரமசாமிஐயர் அவர்களே என்று குறிப்பிடுவதில் மன்றம் மகிழ்ச்சியடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து 1996 ஆம் ஆண்டிலிருந்து திருநெறிய தமிழ் மறைக்கழகம் அறநெறி வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றது. இதன் தலைவராக கிராமசேவையாளர் திரு.நஶ்ரீமானும், செயலாளராகத் தே.திருமுருகராசனும், பொருளாளராக செல்வன் க.பார்த்தீபனும் இருந்து செயற்பட்டனர். வழமைபோல் பண்ணிசை வகுப்புக்கள், திருக்குறள் வகுப்புக்கள், பேச்சுப் போட்டிகள், விழாக்கள், குருபூசைத் தினங்கள் யாவற்றையும் மன்றம் நடாத்திவருகிறது. மேலும் மன்றமானது, கூட்டுப் பிரார்த்தனைகள் நடாத்தியும், திருவாசகம் முற்றோதல் நடாத்தியும் வருகிறது. அறநெறி வகுப்புக்கள் வாரத்தில் இரு தினங்கள் நடைபெறுகின்றன. வகுப்புக்கசை செல்வி இ.இரத்தினசிங்கம், திரு.எஸ். பவானந்த மூர்த்தி ஆகியோர் நடாத்தி வருகின்றனர். பண்ணிசை வகுப்புக் களைத் தற்பொழுது மா.இராசரத்தினம் ஆசிரியர் நடாத்தி வருகின்றார். கூட்டு வழிபாட்டிற்குத் திருமதி எஸ்.மீனாட்சி அவர்களும் ஏனைய நிகழ்வுகளுக்குத் திருமதி வை.கணேசபிள்ளை ஆசிரியரும், திருமதி சி.சோமநாதன் ஆசிரியரும் வழிகாட்டிகளாக இருந்து வருகின்றனர். கடந்த வருடம் இந்துகலாசார அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட சைவமாநாட்டு விழாவையும் மன்றமானது 05.02.2003 இலிருந்து 10.02.2003 வரை சிறப்பாகக் கொண்டாடியது. விழாவின் பூர்த்தி நாளன்று இந்துகலாசார அமைச்சர் மதிப்புக்குரிய தி.மகேஸ்வரன் அவர்களும், இந்தியப் பேச்சாளர் எஸ்.செல்வக்கணபதி அவர்களும் விழாவில் கலந்து உரையாற்றியமை பெருமைக்குரிய விடயமாகும்.

மேலும் மன்றமானது 2003 யூன் மாதம் புதிய தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைத் தெரிவுசெய்தது. இதன்படி தலைவராச் செல்வன் கு.விக்னரூபனும், செயலாளராகச் செல்வன் து.ஜெயக்குமாரும், பொருளாளராக செல்வன் அ.கிரிதரனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதன் காப்பாளர்களாக பண்டிதை திருமதி கணேசபிள்ளை, திரு.மா.இராசரத்தினம் ஆசிரியர் ஆகியோர் தெரிவாகினர். இவர்களது அயராமுயற்சியால் இக்கழகம் வளர்ந்து வருகின்றது என்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

இம்மன்றம் மேலும் மேலும் நற்பணிகளையாற்ற எல்லாம் வல்ல ஸ்ரீபரராசசேகரன் துணைநிற்பான்.

**பண்டிதை திருமதி வை.கணேசபிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மகாசபை

1976 ஆம் ஆண்டு தைமாதம் இணுவில் சிவகாமி அம்மன் கோவில் தேர்த்திருப்பணிச் சபையுடன் இணைந்து பணியாற்றிய இளைஞர்கள் பலரது வேண்டுகோளுக்கிணங்க, திரு.கே.எஸ்.ஆனந்தன் தலைமையில் இச்சபை உருவாக்கம் பெற்றது. ஆரம்பத்திலிருந்து ஆன்மீகப் பணியில் ஈடுபட்டுவரும் இச்சபையினர் பல்வேறு பணிகளையும் மேற்கொண்டு வந்துள்ளனர். "அர்ச்சனைகள்" எனும் ஒரு நூலினை முதலில் வெளியிட்டு அதன் வருமானத்தைக் காரைக்கால் சிவன் கோவில் உள்வீதி மண்டபவேலை ஆரம்பித்த போது தமது சிறு காணிக்கையாக அமரரான அம்பலவாணர் சுவாமியாரிடம் கையளித்தனர். அதே வருடம் தொடக்கம் அந்நூலில் வெளியான நவசக்தி அர்ச்சனைகள் பற்றிய கட்டுரையைப் படித்து நவகலச அபிஷேகம், நவசக்தி பூசை, நவசக்தி அர்ச்சனை, நவசக்தி ஓமம் என்ற ஆன்மீக விழாவை நவராத்திரி பூசை முடிந்த மூன்றாவது நாளில் மிகப் பெருவிழாவாகக் கொண்டாடி வருகின்றனர். அம்பாள் அன்றைய தினம் தங்கரதத்தில் வீதியுலா வருவதும் இருபத்தேழு வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இச்சபை பல நூல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. "சிவகாமி" எனும் ஓர் சமய சஞ்சிகையையும் வெளியிட்டுள்ளனர். 2001 ஆம் ஆண்டு இணுவைச் சித்தர்களான பெரிய சந்நியாசியார், அம்பலவாணச் சுவாமியார் இருவரையும் கௌரவித்து "அவரே இவராய்" எனும் ஓர் ஆன்மீக நூலைச் சபையின் இருபத்தைந்தாவது அகவையில் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சபையிலுள்ள அங்கத்தவர்கள் தமது செலவில் பல பணிகளைச் செய்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும். இவர்கள் செய்த பணிகள் பற்றிய விபரம் வருமாறு.

(1) சிவகாமி அம்மன் கோவிலுக்கு ஒரு சகடை, நான்கு சோடி வாகனக் கொம்புகள், தேர்முட்டிக்கான "கலசம்" உட்படப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு காணிக்கைகளிலும் இவர்களது பணிகள் அர்ப் பணிக்கப் பெற்றுள்ளன.

(2) இணுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை (இணுவில் மத்திய கல்லூரி, ஆரம்பப் பிரிவு) க்கு "சரஸ்வதி" நூல் நிலையம் ஒன்று கட்டி அதற்கான சிறுவர் நூல்களும் வழங்கியுள்ளனர்.

நல்ல நோக்கத்தை இலட்சியமாகக் கொண்ட ஒரு சபையாக இது இயங்குவதால் இருபத்தேழு வருடங்கள் பூர்த்தியிலும் இலட்சக் கணக்கான ரூபா செலவில் அம்பிகை பவனி வரும் "தங்கரதம்" புனரமைப்புப் பெற்றுவருகின்றது. இச்சபையின் அங்கத்தவர்கள் பலர் கனடா, சுவிஸ், ஜேர்மனி, இலண்டன் போன்ற இடங்களில் தற்சமயம் வாழ்கின்றபோதும் இந்து மகாசபை சமயப் பணிகளுக்கு உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இச்சபை 1976 இல் இலங்கை கலாசார திணைக் களத்திலும், 1984 இல் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சிலும் பதிவு செய்யப்பட்டது.

**கே.எஸ்.ஆனந்தன்**
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் இந்து இளைஞர் பேரவை

எல்லாம் வல்ல இணுவில் சிவகாமி அம்பாளை வணங்குவதுடன், இவ்வாலயத்தில் காலத்துக்குக்காலம் வேண்டிய சிரமதானப் பணிகளும் கோயிலின் திருத்தொண்டுகளுமே முக்கிய நோக்காகக் கொண்ட இளைஞர்கள் கூடி 1983 ஆம் ஆண்டு விஜயதசமியன்று இந்து இளைஞர் பேரவை என்னும் ஆன்மீக நிறுவனத்தை நிறுவினர்.

இச்சபையினூடு இவ்வூர் இளைஞர்கள் அன்னை சிவகாமியின் திருத்தொண்டில் ஈடுபட்டதுடன் அன்னையின் அருள்வேண்டி நிற்கும் பக்தர்களின் வேண்டுதலின் பேரில் 1983 ஆம் ஆண்டிலிருந்து புரட்டாதி மாதப் பூரணைத் தினங்களில் அம்பாளுக்குப் பகல் விசேட அபிடேகங்களும் இரவு திரு விளக்குப் பூஜையும் நடைபெற வழிசெய்துள்ளனர். அம்பாள் கமலாசனத்தில் உள்வீதி, வெளிவீதி உலா வருவதும் பெண் அடியார்கள் ஆலயத்தில் பிரதம சிவாச்சாரியாரின் வழிகாட்டலில் திருவிளக்குப் பூஜை முறைப்படி செய்வதும், அம்பாள் வீதியுலா வரும்போது திருவிளக்குகள் ஏந்திவருவதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

இத்திருவிளக்குப் பூஜையின் சிறப்பு அம்சமாக விசேட மேளக்கச்சேரிகள் இடம்பெற்றுவருகின்றன. நான்கு வருடங்கள் கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் ஆன்மீகச் சொற்பொழிவாற்றினார். இருவருடங்கள் சிறப்பு நிகழ்ச்சியாகச் சின்னமணியின் வில்லுப்பாட்டும், ஒரு வருடம் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமயச் சொற்பொழிவும், திருமதி மங்கையர்க்கரசி சிற்றம்பலம் அவர்களின் சொற்பொழிவும் அணிசேர்த்தன.

இவ்விளைஞர்கள் தமது சிறப்புப் பணியாக அன்னை சிவகாமியின் ஆலயத்திலும் காரைக்கால் சிவன் கோயிலிலும் தொடர்ந்து சிரமதானம், பல்வேறு திருத்தொண்டுகள் செய்தனர். யுத்தகால நெருக்கடியால் எம்மிற்பலர் வெளிநாடு சென்றதாலும் தொடர்ந்து சிரமதானம் செய்யமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சபை உறுப்பினர் பலர் திருவிளக்குப்பூஜை சிறப்புற நடைபெறுவதன் பேரில் போதிய நிதியுதவிகளைச் செய்துள்ளனர். எம்மிற்சிலரே இங்கிருந்து திருவிழாவைச் சிறப்புற நடாத்துவதால் இணுவையூர் மக்களின் பேரன்பும் அன்னை சிவகாமியின் அருளாசியும் கிடைக்கப் பெற்றுள்ளோம். இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தினர் வெளியிடும் "சீரிணுவைத் திருவூர்" என்னும் நூலில் எங்கள் பேரவையின் சேவையும் வெளியிடப்படுவதில் பெருமையடைகிறோம்.

**இணுவில் இந்து இளைஞர்**
**பேரவையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திவளர்க்கும் பரமானந்தக்களம்

"கூடும் அன்பினில் கும்பிடலன்றி
வீடும் வேண்டா விறலினார்"

என்று பக்தியின் இலக்கணமான சிவனடியார் பற்றிச் சேக்கிழார் பெருமான் வரையறை கண்டார். "சிவனடியார் தரிசனம் சிவதரிசனமே" என்கிறது சைவம். சிவனடியாரோ வீடும் வேண்டாத பரமானந்தர்களாக அல்லவா இருக்கிறார்கள். வீடு என்றால் மோட்சம், விடுதலை, சுவர்க்கம், முத்தியின்பம் என்றெல்லாம் பொருள் கொள்கின்றனர். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதுதான் வீடுபேற்றுக்கான உபாயம் என்கிறதால் சம்பந்தர் சுவாமிகள் நல்லவண்ணம் என்பதற்கு இல்லறமாம் நல்லறம் என்கிறது சைவப்பெருவாழ்வு. அறத்தால் வருவதே இன்பம். அந்த இன்பவாழ்வு வீட்டைப் புறந்தள்ளும் பரமானந்த நிலையான பக்தி மார்க்கத்தால் அடையப்படுவது.

பக்திக்கு நிலைக்களன் ஆலயங்களே. "ஆலயம் தானே அரன் எனத் தொழுமே" என்கிறது திருமந்திரம். ஆலயத்தில் கூடும் மக்கள் அந்த ஆலயம் தரும் பரமானந்தச் சூழ்நிலையால் இதயத்தில் கூடும் அன்புப்பெருக்கே பக்தி எனப்பட்டது. பக்தி என்பது (Loving Devotion) அன்பின் அர்ப்பணிப்பு ஆகும். அந்த அர்ப்பணிப்புத் தாம் வாழும் மனையாகிய வீட்டையும் கூட வேண்டாம் என்று புறந்தள்ளும் அன்பாகும் பக்திப்பரவசமானது. தன்வசமிழந்த நிலை பரமானந்த நிலை, கும்பிடக் கும்பிடப் பரவசநிலை மேலோங்கும். இந்நிலையில் கும்பிடும் கருமம் அன்றித் தாம் கும்பிட்டபின் கூடவுள்ள வீட்டையும் கும்பிட்டதன் பயனாக அடையவுள்ள மோட்சவீட்டையும் வேண்டாம் என்று மறுக்கும் பரவச நிலையே பக்தி. உருவேறுதல், உருஆடுதல் என்பவை பரவச நிலையைக் குறிக்கும் தொடர். அன்பின் வழியது உயிர்நிலை. அந்த உயிர் நிலையை எய்தியவன் மனிதனது உண்மையான சொரூப நிலையாகிய "உரு" என்ற நிலையை எய்துகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணப்பனின் வேட்டுவப் பக்தி நிலையைப் "பொருவில் அன்புருவம்" என்கிறார் சேக்கிழார். உண்மையான மனித சொரூபமே அன்பின் உருவந்தான். கடவுளைத் தேடித் தேடி மனிதன் களைத்துப் போய்விடுகிறான். கடவுளைத் தேடுவது மனிதனது கடமையன்று என்கிறார் பாபா. கடவுள் அன்பின் சொரூபம். மனிதன் தெய்வீகமானவன். (Man is Divinity) தெய்வீகம், அன்பு இரண்டும் வேறு வேறானவையல்ல. தன்னிடத்தில் ஆழ்ந்துள்ள அன்பை வெளிக்கொண்டு வரும்போது "தானே அதுவாக இருப்பதை" உணரமுடியும். தானே அதுவாக மெய் மறந்த பரவச நிலைதான் "உரு" ஆகும். சுவாமி வந்துவிட்டது, தெய்வீகக்கலை வந்துவிட்டது என்பது மிக ஆழமான பொருள் உடையது. இத்தகைய "உரு" ஏற்றும் களங்கள்தான் ஆலயங்கள்.

இணுவில் கிராமத்திலே ஆலயங்கள் இல்லாத வீதிகளோ, குறுந்தெருக்களோ கிடையாது. ஏனெனில், இணுவில் மக்கள் கும்பிடப்பிறந்தவர்கள். இந்தக் கும்பிடுதல் கூளைக் கும்பிடுதல் அல்ல. கூடும் அன்பினில் வீடும் மறக்கும் பரவச நிலையை நோக்கிய பரமானந்தக் கும்பிடுதல். இணுவில் மண்வாசனை,

நிலைபெறுமா றெண்ணுதியேல்
நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய
கோயில் புக்கு

அப்பர் தேவாரத்தின் இலக்கணமாகத் தினம்தினம் கோயில்புகும் சூழல், இயல்பு இணுவில் மண்ணுக்கு உண்டு.

தலையாரக் கும்பிட்டுக்
கூத்துமாடிச்
சங்கரா சய போற்றி போற்றி என்றும்

அலை புனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும் அலறி நிற்கும் அடியவர் கூட்டத்தை இணுவில் கோயில்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சந்நியாசியார் "உரு" ஆடினார். சிவகாமி அம்மன் வீதியிலே "உரு" ஆடிய பெண்மணி, காரைக்காலில் இன்றும் உரு ஆடும் பக்தர், கடும்பக்தி வளர்க்கும் பாமரநிலை மாறாத களம் இணுவில். வருடத்தில் முக்காற்பங்கு நாட்கள் கோயில், குளம் என்று காலம் கழிக்கின்ற மக்கள்.

1950 ஆம் ஆண்டு எனது தந்தையார் என்னை இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு அழைத்துச் செல்வார். எனக்கு ஐந்து வயது. வைரவரின் கிணற்றிலே அதிகாலை நான்கு மணிக்குக் குளிப்பு. ஆறுமணி வரை சுவாமி தரிசனம். தெற்கு வீதியிலே பெரிய சந்நியாசியார் கட்டுவித்த மஞ்சத்தைக் காட்டுகிறார். பென்னம்பெரிய குளவிக்கூடுகள் நிறைய மஞ்சத்துக்குள்ளே தெரிகின்றன. இது ஓடாதோ? என்று ஆவலுடன் கேட்கிறேன். தேரெழுந்தூர் எப்படித் திருவழுந்தூர் ஆனது என்று எனது தந்தை கதை சொல்கிறார். தூய்மையான சிற்ப ஆசாரப்படி ஒரு தேர் செய்தார்கள். அது சர்வ இலட்சணங்களும் பொருந்திய ரதமாக உருவானதால் வானத்தை நோக்கிக் கிளம்பியது. சிற்பாசாரி ஆச்சரியத்துடன் பார்த்தான். அந்த ரதத்தைப் பூமியில் தரிக்க வைக்க எண்ணித் தனது கைப்பிடி உளியால் காயப்படுத்தினான். குறைபாடு உண்டானது. தூய்மை குறையத் தேர் பூமியில் தரித்தது. தேரெழுந்தூர் என்ற காரணப்பெயர் திருவழுந்தூர் என மருவியது. அப்படியே இந்த மஞ்சமும் தூய்மை இழந்துதான் பூமியில் பாரமானதோ? என்று குழந்தை மனதால் கேள்வி எழுப்பினேன். இன்று அந்த மஞ்சம் வீதியிலே ஓடிப் பரமானந்தம் தருகிறது.

இப்படித்தான் ஒவ்வொரு தந்தையும் தம்குழந்தைகளுக்குப் பக்தியுணர்வைப் பாங்காக ஊட்டியிருப்பார்கள் என்று எண்ணு கின்றேன். சிவபாதவிருதையர் தனது குழந்தையைத் தோளில் சுமந்து தோணிபுரம் சென்ற அந்தக்காட்சியை நான் இணுவில் கிராமத்தில் 50 ஆண்டுகளாகக் காண்கின்றேன். ஒவ்வொரு குழந்தையும் தேவாரம் பாடவில்லை என்று சொல்லமுடியாது. ஆயினும் எல்லாக் குழந்தைகளும் நாயன்மார் பாடிய தேவாரத்தை மறப்பதில்லை என்பது மட்டும் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிப்பாடசாலைகள், பஜனைப் பயிற்சிக் குழுக்கள், இளம்தொண்டுப் பயிற்சிகள் இவைகள் இல்லாத இணுவில் ஆலயச் சூழல் இல்லை எனலாம். பக்தியை இழிவு செய்யும் இளம் தலைமுறை பெருகும் இந்தக்காலத்தில் இளந்தாரி கோவிலும், இளந்தொண்டர் சபைகளுமாக இளமையைப் பாழ்படுத்தாமல் பக்தி வளர்க்கும் பயிற்சிக் களங்கள் பாங்காகவுள்ள களந்தான் இணுவில் கிராமம்.

பெரிய சந்நியாசியார் "உரு" எடுத்து ஆடினார். மஞ்சம் கட்டுவித்தார். மஞ்சத்தடி மகானின் சமாதியானது. மஞ்சம் கந்த சுவாமியாரை ஏற்றி வீதிவலம் வருகிறது. சந்நியாசியார் வளர்த்த பக்தி மார்க்கம் பரவிப்பரந்து வளர்ந்து செல்கிறது.

கிழக்கே காரைக்கால் சிவாலயம் சித்தர் பரம்பரையின் தோற்றுவாயாகச் மயானத்தின் அயலில் பக்தியால் வளர்கிறது. சித்தசுயாதீனமிழந்தோரைச் சித்தம் தெளியச் செய்யும் இடமாகவும் இது வளர்ந்தது. தெற்கே பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயம் பல்வேறு வகையான பணிகளால் நிறைந்து பக்திக்களமாக நிலைபெற்றுள்ளது.

கந்தசுவாமி கோவிலின் வடகிழக்கு மூலையிலுள்ள செல்லப்பாப் பரிகாரியார் வைத்தியமும் செய்தவர். கலையும் ஆடியவர். அவரும் தம் வாழ்விலே ஒரு கோயில் வைத்துப் பராமரித்தவர். இப்படிப் பார்த்தால் இணுவிலில் வாழ்ந்த பரிகாரிமாரெல்லாரும் சித்தவைத்தியம் செய்ததோடு சித்தம் தெளியும் சிவகைங்கரியமான பக்திநெறி வளர்க்கும் பணியிலும் பூரணமாக ஈடுபட்டனர் அல்லவா?

பஜனைக்கு இலக்கணமாகத் தியாகராசாச் சுவாமிகள் நெடிய தோற்றத்தோடு கூத்தாடி, ஆடிப் பாடிய பஜனைக்கூட்டம் இணுவிலில் இருந்து புறப்பட்டு ஈழமெங்கும் ஒலித்து நின்றதே. நல்லூர் வீதியில் "உரு" எடுத்து ஆடிய பஜனையின் பாவனை இன்றும் பரவசம் தருகிறதே. இவையெல்லாம் தொடர்ந்து பேணிப் பாதுகாக்கும் பாரம்பரிய மரபைப் பேணும் பொறுப்பை நாம் ஏற்கவேண்டிய சூழ்நிலையை உணருகிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமானந்தவல்லி வாசிகசாலையருகே வடிவேற்சாமியார் உருவாக்கிய பக்திமரபு கிளிநொச்சி வரை பரந்து வேரூன்றியுள்ளதே. வேதாந்தமடத்தைச் சார்ந்த மகாதேவச் சுவாமிகளிடத்துக் குருதீட்சை பெற்றாலும் இணுவில் மண்ணின் இயல்பு அவரைப் பக்திவளர்க்கும் பரமானந்த நிலையை விட்டு நீங்க அனுமதிக் கவில்லை என்பதை எண்ணிப்பார்க்கிறேன். உருத்திரபுரம் வரை சென்று உருத்திரன் நாம உபாசனையோடு செல்லும் பக்தி மரபை, அந்த வன்னி மண்ணில் விதைத்துப் பயிராக்கிய அவரது வித்தகம் இணுவிலில் விளைந்தது.

இணுவில் மக்களை "கிழங்கு" என்று கொச்சைப்படுத்தும் வழக்கமொன்று உள்ளது. நான் இதையும் சற்றுச் சிந்தித்துப் பார்த்ததுண்டு. கந்தன் நாமத்தில் கட்டுண்டதால் வள்ளிக் கிழங்கோ அல்லது பசையுள்ள மாப்பிடிப்பான மரவள்ளிக் கிழங்கோ என்பது கொஞ்சம் அர்த்தப்புஷ்டியான வார்த்தைதான். கிழங்கு விளைய மண்வளந்தான் காரணம். பக்திப் பசைப் பிடிப்பை எண்ணித்தானே இந்தக் கிழங்கு நாமம் என்று சிந்திக்க முடிகிறது. வேர்க்கிழங்கில்லை வேரில் விளைந்த தடித்த மாப்பிடிப்பான கிழங்கு. இதுவும் ஒரு நல்ல உருவகம்தானே.

மருதனார்மடம் சந்தியிலிருந்து உப்புமடம் சந்திவரை நடந்து பார்ப்போம். நல்ல செம்மண் ஊறிய பாதங்கள் நிறைந்த வேளாண்மரபு. இந்நூற்றாண்டிலும் தோட்டவெளிகள் தொலைக்கப் படவில்லை. தியேட்டர் உருப்படவில்லை. ஆஞ்சநேயர் ஆரம்ப இடத்திலே ஏன் வந்து நிலைகொண்டாரோ? இது எங்களுக்கு விளங்காத காரியம். விளங்காதபடியால்தானே "எல்லாம் சிவன்செயல்" என்று சொன்னார்கள். அவனின்றி அணுவும் அசையாது என்று நாங்கள் சொல்லிக்கொண்டு அவரவரிலே குற்றங்காண முடியுமோ?

அண்ணாகோப்பியின் கட்டட மேல்மாடியிலே இணுவில் வைத்திசாலைக்கு நேரெதிர் முன்னாலே "சாயிபாபா" பஜனை ஞாயிறு தோறும் நடக்கிறது. இளம் பிள்ளைகளும், அனுபவம் வாய்ந்தவர்களும் பக்தியோடு பஜனை செய்கிறார்கள். அந்த நாமசங்கீர்த்தனம் மேலும் பக்திக்கு மெருகூட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனந்தம் பரமானந்தம்"
"ஆனந்தமே ஜீவித பரமானந்தம்"

எம்.எஸ்.சுப்புலட்சுமியின் பாடல் இணுவிலில் ஒலிக்கிறது. இசைவேளாளர்கள் இணுவிலில் வாழ்ந்து ஈழமெங்கும் சென்று தேவ இசை பரப்புகிறார்கள். சைவப்பரம்பரை சப்பறம், மணவறை, சிகரம் கட்டி ஊருலகத்திலுள்ள கோயில்களில் பக்தி வளரப் பணிபுரிகின்றது. இப்பொழுது எல்லாம் இணுவிலே சைவப் பள்ளிக்கூடமாகி குருபூசை, சிவபூசை, பண்ணிசை, பரதம் நெறிமுறையாகப் போதிக்கப்படுகின்றன.

கல்விகற்ற மேலாளர்கள் பல்கிப்பெருகினாலும் பக்தி நெறியில் பிசகாது பயனூட்டுகிறார்கள். பல்கலைக்கழகங்களில் எல்லாம், கல்விக்கூடங்களிலெல்லாம் இணுவிலில் விளைந்த வள்ளிக்கிழங்குகள் தெள்ளத்தெளிந்த தெய்வஞானம் தரும் அருட்பணி செய்கிறார்கள். இவர்களின் பெயர்ப்பட்டியலைத் தருவது வேண்டாத கருமம். வேண்டத் தகுந்தவர்கள் வேண்டும் பணிபுரியச் சைவவேளாண்மை விளைகிறது.

ஜீவித பரமானந்தம் என்றால் வாழ்வாங்கு வாழும் தெய்வ வாழ்வு. "உள்ளம் பெருங்கோயில்" ஆகும் நிலையில்தான் பக்தி. உப்பில்லாப் பண்டம் போலப் பக்தியில்லாத மனித வாழ்வு பயனற்றுவிடும். "பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி" என்று சொன்ன வாசகத்தைச் சற்று எண்ணிப்பாருங்கள். பக்தன் பரமானந்தன். அவன் பரமானந்தக்களமான பரமன் ஆலயங்களில் "உரு" ஏறிக் கலை ஆடிவருகிறான். சலம்பூவொடு தூபமும் தமிழிசைப் பாடலும் மறந்திடாத அந்தப் பரமயோகியை நாம் ஏன் பாடவேண்டும்.

யோகர்சுவாமி என்ற தெய்வம் காங்கேசன்துறை வீதியாலே அடிக்கடி கீரிமலைக்கு யாத்திரை போனது. அந்தக் காலத்திலே கிழக்காக, மேற்காக இணுவில் கிராமத்தை தீட்சண்ய நோக்கோடு பார்த்தது. இது நயனதீட்சை பாருங்கள். யாருக்கென்றுதானே கேட்கிறீர்கள்?. மண்ணைப் பார்த்தாற் போதாதா? மண்ணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தர்கள் விலகமுடியுமோ? ஞானிகள், யோகிகள், சித்தர்கள் செய்கை பலருக்கு விளங்காது. அவர்கள் பைத்தியங்கள் மாதிரித்தான். ஆனால் அவர்கள் செய்கின்ற வைத்தியம் என்ன தெரியுமா? சித்தம் தெளிய மருந்து தருவார்கள். சித்தமலம் அறுவித்துச் சிவமாக்க முனைவார்கள். அப்படிச் சிறியோர், பெரியோர் எனப் பலபேர் இந்தப் பரமானந்தக் களத்திலே விளையாடியிருக்கிறார்கள். இவர்களின் எச்சம்தான் இன்றும் துலங்கும் பக்திநிலை.

இதைக் காக்கும் பொறுப்பு மிகப்பாரியது. கோயில்களைத் தெய்வ நிலைக்களன்களாக்கும் காரியங்களைக் கவனமாகப் பேணவேண்டும். பணத்தைக்கொட்டி, பழைமையை அழித்துச் செல்வச் செழிப்பையும், ஆடம்பரத்தையும் வெளிப்படுத்தும் அலங்காரமான ஆலய அமைப்பைத் துளியும் நினைக்கக் கூடாது. நாவலர் தந்த மாதிரி நல்ல வார்த்தைகளைத் தூவும், நற்சிந்தனைகளைத் தூவும் இடங்களாக ஆலயங்களை ஆக்க வேண்டும். பண்ணும் பாடலும் கலந்த பரவசமான பஜனைகள் பரவவேண்டும். கோயிலுக்காகக் கோட்டடிக்குப் போன கெட்டதுகளை மறந்து சிவமெனும் பரஅன்பு எனும் நிலை பேண வேண்டும். இந்த மண்தான் எனக்குத் தந்தையூடாக ஞானம் தந்தது என்று ஒவ்வொரு பிள்ளையும் சொல்லவேண்டும். தந்தையரெல்லாம் தனயர்க்கு ஞானம் தரும் தன்னலமில்லாத பரமானந்தராக வேண்டும.

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம்பெற மார்க்கமொன்று சொல்லு சிவமே
அல்லலகற்ற வழி சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே

யோகர் சொல்லுகிறார் நீ கேட்பாயோ. கேட்டுப் பிறர்க்குச் சொல்வாயோ பக்தி வளர்க்கப் போகிறாயோ. பரமானந்தம் காண விருப்பமோ? சேரவாரும் செகத்தீரே! என்று ஆட்களைச் சேர்த்து அல்லல் அறுத்து ஆனந்தமாக்கிடுவோம் வருவாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீகச் சூழல் ஈனங்களால் மாசுபடுத்தப்படுகின்றது. இரணியனும், இராவணனும், கம்சனும், சிசுபாலனும் கடவுள் மேல் பக்தி இல்லாதவர்களே. நல்ல தவம் செய்து வரங்கள் பல பெற்ற மாதவர்கள். கடவுளைக் கண்டு உணர்ந்து உறவாடி அனுபவித்தவர்கள். ஆனால், புராணங்கள், இதிகாசங்கள் “கடுந்தவம் செய்தாலும் விஞ்சிய கடவுள் பக்தி மிகுந்தாலும் தங்களைப் பெரிதாக நினைக்கக்கூடாது. அகந்தை கூடாது. ஆணவம் கூடாது. இதனாலே அசுரகுணம் வரும். ஆண்டாண்டாக அனுபவித்த பக்தியும் பவித்திரமும் தொலைந்து போய்விடும்” என்று எமக்கு எச்சரித்தன. அன்பு செய்யவும் அறஞ்செய்யவும்தான் எங்களுக்கு அருகதை. ஆக்குகிற வேலைதான் எங்களுக்கு. ஆக்குவதற்கு அன்பு வேண்டும், பக்தி வேண்டும். அறந்தவறாத உணர்வு வேண்டும். அழிப்பதற்கு இவை தேவையில்லை. அரக்கக் குணம் மட்டும் போதும். ஆலயங்களில் வாகன சாலைக்கு உங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள். இடும்பன், சூரன், இழிகுணமுள்ள விலங்குகள் இவைதானே வாகனங்கள். இவற்றை அடக்கி இவை மீது ஊர்ந்து தெய்வம் உலாவருவதுதானே வாகனத்திருவிழா. நாங்கள் இந்த வாகனங்கள் மாதிரி எங்களை வளர்க்கலாமோ? கூடவே கூடாது. பக்தி பரப்பும் திருவிழாக்களின் உட்கருத்தை உணரச் செய்பவை ஆலயங்கள். ஆகவே அவற்றின் பக்திநிலை தான் எம்மனத்தில் நிழலாட வேண்டும்.

மண்ணைக் கொத்திக் கிளறிப் பாத்தி கட்டிப் பயிர்நாட்டித் தண்ணீர் பாய்ச்சுகிற கமக்காரனுக்குத் தன்னுடைய மனத்தைப் பண்படுத்திப் பக்திப்பயிர் செய்வது கடினமான பணியில்லை. கீரையும், கிழங்கும், சாமையும், குரக்கனும், தினையும் தின்பவனுக்கு உணவுகளைப் புனிதப்படுத்துவது ஒன்றும் கூடாத கருமமில்லை. பசித்து வருபவனுக்குப் பஞ்சம் பாராது கிள்ளித் தானும் உணவளிப்பது வேளாண்மை செய்பவனுக்கு வேண்டாத காரியமில்லை. இவைகள் இந்த மண்ணில் இயல்புகளாக இருந்த படியால்த்தான் இத்தனை ஆலயங்கள் எழுந்தன. நித்தியபூசைகள் நடந்தன. கிணற்றடி எல்லாம் வைரவர் ஆலயங்கள். சராசரி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்திற்கு ஒரு வைரவர் இருப்பபார். இங்குள்ள ஆலயங்களில் வேள்வி நடந்ததில்லை. ஆனால் மடைபரப்ப மறந்ததில்லை. பொங்கலும் மடையும் பொங்கும் பாமரப் பக்திவெளிப்பாடு பரவசமானது, பரமானந்தம் தருவது.

நம்முன்னோரின் பாக்கியத்தை அறிந்துகொள்ளும் நோக்கில் தான் இவைகளை நினைவூட்ட விரும்புகிறோம். பக்தி பழமையானது. பக்தி வெளிப்பாட்டில் ஒரு புதிய மாறுதலும் வேண்டாம். பாற்காவடியும் பஜனைக்காவடியும்தான் எங்கள் பக்தியை வளர்த்தன. பறவைக்காவடி வேண்டாம். உடலை வருத்தி ஊறு செய்வதிலும் உள்ளத்தைத் தூய்மை செய்யும் உணர்வுகளை வளர்ப்பதே மேலானது. இறைநாமம் இனிய நாவால் சொல்லி இன்பம் காணுவது வேதகாலம் முதல் வளர்ந்த பழைய பக்தி மரபு. அதை இசையோடு பாட வழிதந்தவர்கள் ஞானசம்பந்தர் வழிவந்தோர். அவன்நாமம் எம்நாவில் மறந்தறியாப் பக்தி என்றும் இனியது. இவ்வினிய சூழல் எமது ஆலயங்களில் மேன்மேலும் வலுப்பெறச் செய்வது எமது கடன்.

ஓதுவார்கள் இந்திய ஆலயங்களில் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். ஆனால் எம் இணுவை ஆலயங்களில் திருமுறை ஓதும் தகுதிபெற்றோர் மிகுந்து இருக்கிறார்கள். இந்த ஓதும் மரபு பேணப்பட வேண்டும். பண்சுமந்த பாடற்பரிசு படைத்தருளும் எம்மண் சுமந்த மேனியராக எமது தலைமுறையினர் வாழ வேண்டும். இதனை ஒவ்வொரு குடிமகனும் தன்கடனாக எண்ணிப் பணிசெய்ய விழைவோம்.

"அன்பே சிவம்"

**கு.சண்முகநாதன்** M.A
**அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகாமி அன்னதான சபை

சீரும் சிறப்பும் அறமும் அருளும் நிறைந்த திருக் கோயில்கள் நிறைந்த இணுவையம் பதியிலே ஒளிவீசும் சக்திபீட மாதாவாகிய சிவகாமி அம்பாளின் திருவருளால் அன்னையின் ஆலயத்திற் தொண்டு செய்ய முன்வராதார் யாருமில்லை. சமுதாய வளர்ச்சியும் சிறப்பும் நோக்கிய திருப்பணிகளில் சிலவற்றைச் செய்துதவும் பொருட்டு ஒரு தொண்டர்குழு முன்வந்தது. பல திருத்தொண்டுகளைப் பொதுமக்களின் உதவியுடன் செய்து, வேண்டிய அவசிய வேலைகளைச் செய்து கொண்டிருப்பவர்கள், ஒருசில பிரதான கட்டுமானப் பணிகளை அன்னையின் திருக கோவிலின் உள்ளும் புறமும் செய்துகொண்டு பணியாற்றியவர்கள் 1980 ஆம் ஆண்டு அன்னதானப் பணியிலும் இறங்கினர்.

இக்காலத்தில் இப்போது அன்னதான மண்டபம் இருக்கும் இடத்தில் அன்னை சிவகாமியின் வாசலில் கட்டாந்தரையில் மேலே படங்குகளால் தற்காலிகமாகக் கூரையிட்டுக் கட்டிய இடத்தில் நான்காம் தடவையாகவும் அன்னதானம் செயற் பட்டது. பல அடியார்கள். ஆதரவாளர்களின் உதவியுடன் ஓர் அன்னதானமடம் அமைக்கத் திருவருள் பாலித்தது. மூன்று வருடங்களுள் இன்றைய நிலையில் புதுப்பொலிவுடன் இந்த மண்டபம் பூர்த்தியானது அன்னையின் அருள் வளமே.

இந்த மண்டபம் அத்திவாரம் இடும்போது நாளும் கோளும் நற்குறிப்பும் கூறித் திருவாக்குக் கூறிய அருள்வாக்கன்னை சாத்திரம்மாவும், அத்திவாரத்தை ஆரம்பித்த பேரறிஞர்களான சபா.ஆனந்தர். மா.ஆனந்தர் அவர்களும் தமது உத்தமமான பணியைத் தொட்டனர். அவ்வருடமே (1981) இந்த மண்டபத்தில் குறைவேலைகள் இருந்தபோதும் அன்னதானம் நடைபெற்றது. தொடர்ந்து கட்டுமானப் பணிகள் பூர்த்தியாகி இருவருடங்களில் ஏற்ற வசதிகள் செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குழுவில் செயற்பட்டவர்களான இணுவில் கிழக்கைச் சேர்ந்த மு.இராசையா, மு.சிவலிங்கம், பெ.கனகசபாபதி, கா.நடராசா, க.காலிங்கராசா, வை.க.வைத்தியலிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அக்காலத்தில் இந்த மண்டபம் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப் பட்டது. இம்மண்டபம் தென்பகுதியில் ஓர் அறையையும் வடபகுதியில் நூலகம் அமைக்கும் நோக்கில் புத்தகங்கள் வைக்கும் அலுமாரிக்கான தட்டுக்களும் அமைக்கப்பட்ட ஓர் அறையையும் இடையில் எழுபது அடி நீளமும் அறுபது அடி அகலமும் கொண்ட பெரியசாலையையும் கொண்டது.

இந்த அன்னதான சபையின் கட்டுமான வளர்ச்சிக்கு இச்சபை உறுப்பினர்களான க.காலிங்கராசா, இராசையா, சிவலிங்கம், லைத்தியலிங்கம் ஆகியோருடன் இணுவில் தெற்கில் மிகக்கூடுதலான உதவிகள் புரிந்தவர்களில் து.சிவராசா, இ.சற்குரு, செல்வநாயகம், அண்ணாகோப்பி நடராசா, திருமதி சிவராசாவின் புத்திரர்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இதுமட்டுமல்லாது இணுவில் தெற்கிலிருந்து வருடாவருடம் அன்னதாகப் பணிக்கென அரிசி மற்றும் உதவிகளைத் தொடர்ந்து இன்றுவரை உதவுபவர்களில் து.சிவராசா, இ.சற்குருநாதன், செல்வநாயகம், வைத்திலிங்கம், ஸ்ரீஸ்கந்தவரோதயன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். அன்னையின் சேவைக்கென்றே வாழும் அம்பாள் இவ்வயலைச் சேர்ந்த எவரும் இதற்குத் தகுந்த சிறப்பான பங்களிப்பைச் செய்யத் தவறவில்லை. பலர் தாராளமாகக் கட்டுமானப் பணிக்கு உதவியது மட்டுமன்றி, வருடாந்த மகோற்சவ கால அன்னதானத்திற்கும் அரிசி, நிதி, உப உணவுப் பொருட்கள் வழங்கியும் உள்ளனர். இவர்களில் ம.ஞானானந்தம், திருமதி அ.இராமசாமி, மு.கணேசு, அங்களப்பாய் இராசையா புதல்வர்கள், தம்பிராசா ஆகியோர் வருடந்தோறும் தமது அன்பளிப்பை வழங்குவதுடன் அன்னதான சபை உறுப்பினர் களும் போதிய பங்களிப்புச் செய்து இன்புறுகின்றனர்.

அமைந்த மண்டபத்தின் மேற்கூரைக்கான கூரைத் தகடுகளை அன்பளிப்புச் செய்தவர்கள் இணுவில் மேற்கைச் சேர்ந்த திரு.புஷ்பராசா அவர்கள். இவரால் வழங்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியில் கூரைத்தகடுகளை எடுத்துவர ஈவினை அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகட்டுத் தொழிற்சாலைக்கு லொறியுடன் சென்ற அன்னதான சபை உறுப்பினர்கள் பெ.கனகசபாபதி, கா.நடராசா ஆகிய இருவரும் பலாலி படைத்தளத்திலிருந்து தெற்கு நோக்கி வீசப்பட்ட எறிகணையின் பேரொலியுடன் கூடிய அதிர்ச்சியையும் சகித்துக்கொண்டு ஏற்றிவந்தது இன்றும் மறக்க முடியாதது.

அன்னதானமண்டபம் நற்செயலுக்காகவே அமைய வேண்டும் என்ற அறச்சிந்தனை நோக்கி 1997 ஆம் ஆண்டு இம்மண்டபத்தில் "இணுவில் சைவத்திருநெறிக்கழகம்", அறநெறிப்பாடசாலை என்பன அமைக்க அன்னை சிவகாமி அருள்பாலித்தாள். இந்த அறநெறிப் பாடசாலையின் வசதி கருதி அன்னதானசபை மண்டபத்தில் ஏறக்குறைய 27000 ரூபா செலவு செய்து மின்னிணைப்பும், மூன்று மின்விசிறிகளும் இணைக்கப் பட்டுள்ளன. தளபாடங்கள் மற்றும் பல வசதிகளும் பொதுமக்களின் உதவியால் செய்யப்பட்டுள்ளன. அன்னதான சபை உறுப்பினரும் பொதுமக்களும் குறிப்பாக இளைஞர்களும் மிகவும் சுறுசுறுப்புடன் இயங்குவதால் நிகழ்வுகள் யாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இந்த மண்டபதம் மகோற்சவகால அன்னதான சேவை, அறநெறிப்பாடசாலை மற்றும் கலைவகுப்புகள், ஆன்மீகக் கூட்டங்கள், அறநெறிப் பாடசாலையின் ஆண்டு விழாக்கள் ஆகியன நடாத்த வசதியளிக்கிறது. அத்துடன் திருவிழாக்கள், அத்துடன் சிவகாமி அம்பாள் சந்நிதானத்தில் நடைபெறும் மங்கள விழாக்கள் போன்றவற்றில் வீடுகளில் போதிய இட வசதியற்றவர்கள் இந்த மண்டபத்தில் விருந்தினரை உபசரித்துச் சாப்பாடு பரிமாறுகின்றனர். பொதுமக்களால் அமைக்கப்பட்ட இந்த நிலையம் பொதுவான நிகழ்ச்சிகளில் சேவையாற்றுவது மிக மகிழ்ச்சியாகின்றது.

**மு.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்

இணுவில் கிராமத்தின் வடபால் இணுவில் புகையிரத நிலைத்திலிருந்து வடக்கே 200 யார் தொலைவில் கிறிஸ்தவ மக்களின் ஆன்மீகம் பேணும் நிலையமாக அமைந்ததுள்ளது இந்த ஆச்சிரமம். இந்த நிலையம் வண.சகோதரர் செல்வரத்தினம் அடிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

காரைநகரில் வாழ்ந்த சைவசமயப்பற்று மிக்கவரான இவரது தந்தை சுப்பிரமணியம் என்பவர் காரைநகரில் தமிழில் படித்தவர். வேலை இலகுவில் பெறும் நோக்கில் யாழ் நகரில் ஆங்கிலப் பாடசாலையில் பயின்று ஆசிரியராகப் பணியாற்ற விரும்பியதால் இலங்கை மெதடிஸ்த மிசனால் நடாத்தப்பட்ட ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று வரும்கால் கிறிஸ்தவ மதத்திற் சேர்ந்தார். கிறிஸ்தவ மதத்தவரான பெற்றோரின் ஆண் மகனாக 1906 ஆம் ஆண்டில் சாமுவேல் செல்வரத்தினம் அடிகளார் பிறந்தார். தந்தையார் ஆசிரியராகவும் மெதடிஸ்தசபை ஊழியராகவும் பணியாற்றியபோது அங்கிலிக்கன் திருச்சபை உபதேசியாராக இவர் பணியேற்றார். பெற்றோர் தம் மகனுக்கும் பாடசாலைக் கல்வியுடன் கிறிஸ்தவ சமய அறிவையும் நன்கு போதித்தனர்.

இவர் யாழ் மத்திய கல்லூரியில் பயின்றபின் திருச்சபைப் பணிகளில் ஈடுபாடு கொண்டு வட இந்திய சேரம்பூர் இறையியற் கல்லூரியில் படித்தவர். இக்காலத்தில் (1928) விடுமுறைக் காலத்தில் "திருப்பத்தூர்" ஆச்சிரமத்தைப் பார்வையிட்டார். இந்த ஆச்சிரமம் போல யாழ்ப்பாணத்திலும் ஒரு ஆச்சிரமம் அமைக்க ஆவல்கொண்டார். இவர் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது ஆன்மீகத் துறையில் அதிக கவனஞ் செலுத்தினார். பின் தென்னிந்திய திருச்சபையின் குருத்துவ ஊழியரானார். 1931 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் உதவிக்குரு ஊழியராகச் சேர்ந்து பல இடங்களில் சேவை செய்தபின் தனது சேவையிலிருந்து விலகி ஆச்சிரம வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவிரும்பினார். யாழ் சபாசங்கச் செயலாளராகவும் தலைவரின் உதவியாளராகவும் திறமையாக உழைத்தார். பின் 1936 ஆம் ஆண்டு ஏழாலையில் குருமுதல்வராக இருந்துகொண்டு மருதனார்மடத்தில் ஆச்சிரமப் பணிகளின் ஆரம்ப வேலைகளை மேற்கொண்டார். சகல சபைகளும் அங்கம் வகிக்கும் பொதுச் சபையில் ஆச்சிரமத்தின் தேவையைக் கோரினார். 1939 ஆம் ஆண்டு அனைத்துலகக் கிறிஸ்தவ தலைவர்களால் ஆச்சிரம அடிக்கல் நாட்டப்பட்டது. பரப்பு 20 ரூபா வீதம் 128 பரப்பு நிலம் வாங்கினார்.

31.08.1939 அன்று முதல்குடில் (ஆச்சிரமம்) உதயமானது. தொடர்ந்து ஆச்சிரமத்துக்கான காணி துப்புரவு செய்யப் பட்டதுடன் தொடர்ந்து வழிபாடு நடைபெற்றது. செல்வரத்தினம் அடிகளார் வேறிரு பணியாளர்களுடன் இந்த ஆச்சிரமத்தில் குடியிருந்தார். இவர்கள் புனிதமான ஆச்சிரம வாழ்வை மேற்கொண்டனர்.

குருமுதல்வரான செல்வரத்தினம் அவர்களின் நற்குடிப் பண்பும் சிறந்த கல்வியறிவும் கல்விச் சிறப்புக்கேற்ற பேச்சு வன்மையும் சந்தர்ப்பத்திற்கேற்ற நகைச்சுவை கலந்த அன்பான வார்த்தைகளும் இவரது அணிகலன்களாகும். இவர் ஆச்சிரம வாழ்வை இடையறாது சிந்தித்ததால் பிரமச்சாரியாகவும் நற்பண்புடனும் வாழ்ந்தவர். ஏனைய மதத்தினரையோ, வேறெவரையோ மனம் நோக வைக்காது பழகுபவர். யாவரும் இவரை "பெரியண்ணன்" என்று அன்புடன் அழைப்பர். ஆச்சிரமத்தின் பிரதான நோக்கங்களாவன.

1. இவ்வாச்சிரமம் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவும் புதியவர்களின் இல்லமாகும்.
2. கூட்டு இறை வழிபாடியற்றி அவ்வறிக்கையைச் சபை களின் பரிசீலனைக்கு அனுப்புதல்.
3. அருட்செய்திப் பணியாளரைப் பயிற்றுவிக்கும் மையம் ஆக்குதல்.
4. ஆச்சிரமத்தில் கிறிஸ்தவ நூலகம் ஒன்று அமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆச்சிரமத்தில் திருச்சபை ஊழியர் இளைப்பாறிச் செல்ல வசதியளித்தல்.
6. அயற்கிராமத்தில் அருட்செய்தி பரப்பித் தேவைக்கேற்பத் தொண்டுகள் செய்தல்.

இந்த ஆச்சிரமத்தின் செயற்பாடுகள் சிறப்பாக இருந்ததால் திருச்சபையில் நல்ல வரவேற்பாக இருந்தது. இவ்வாச்சிரமத்துக்கு வெளியிடங்களிலிருந்து வருவோர் நன்மை கருதி, இணுவில் புகையிரத நிலையத்தில் சில உள்ளூர் புகைவண்டிகள் மட்டும் அனறித் தபால் புகையிரதங்களையும் தரிக்கச் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை முறைப்படி செய்து பெரியண்ணன் வெற்றி கண்டார். இங்கு வாழும் தொண்டர்கள் நாள்தோறும் இறை வணக்கத்தை நியமம் தவறாது கடைப்பிடித்தனர். இதனால் இவ்வாச்சிரமம் நன்மதிப்புப் பெற்று வணங்குவோரின் எண்ணிக்கையும் கூடியது. 1940 இல் புதிய செபாலயம் உதயமானது. புதிய குரு இல்லங்களும் (சாந்தி இல்லம் பெத்தேல்) அமைக்கப்பட்டன. 1941 ஆம் ஆண்டில் புதிய ஆன்மீக கிறிஸ்தவ நூலகம் தொடங்கியது. இதனால் பலர் நன்மையடைந்தனர். செல்வரத்தினம் அடிகளார் நூல்நிலைய வளர்ச்சி பற்றித் தமது நண்பர்கள், ஆதரவாளர்கள் போன்றவர் களுக்குச் செய்தியனுப்பி உள்நாடு, வெளிநாடு களிலிருந்தும் அநேக ஆன்மீக நூல்கள் வரப்பெற்றுக் கொண்டார்.

ஆச்சிரமத்தில் கிறிஸ்தவ சமுதாயத்துக்குச் செய்யும் சேவைகள் பற்றிப் பல திட்டங்கள் அமைத்துப் பல கூட்டங்கள், கருத்தரங்குகள், வேதப்படிப்புக்கள், சமயச் சொற்பொழிவுகள் ஞானஒழுக்க வழிநடாத்தல்கள் ஆகியன செல்வரத்தினம் அடிகளால் ஒழுங்குசெய்யப்பட்டன. 1942 இல் பேராயர்கள் பலர் சிறப்புரைகள் நடாத்தினர். இவ்வாச்சிரமத்தின் தலைமைத் தொண்டர் கற்புடமை, எளிமை வாழ்வு, கீழ்ப்படிவு ஆகிய கட்டுப் பாடுகளுக்கு அமைவாகவே நியமிக்கப்படுவர். இவர்களது சேவைச் செய்திகள் நாடெங்கிலும் பரப்பப்பட்டன. இதனால் இவர்களுக்குச் சேவையின் பேரால் நன்மதிப்பு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாவருடம் இங்குள்ள தொண்டர்கள் இறையியல் குருத்துவப் பயிற்சிபெறச் சென்னைக்கு அனுப்பப்பட்டனர். மேலும் பாடசாலைக்கு ஒழுங்காகப் போக முடியாத பிள்ளைகளுக்குக் கல்வியூட்ட ஆச்சிரமம் வசதிசெய்தது. வீடுகளில் படிக்க வசதியற்றவர்களுக்கு இங்கு இரவில் பாடம் சொல்லிக் கொடுத்தனர்.

1944 ஆம் ஆண்டு ஐ.ரி.தேவசகாயம் என்பவர் இங்கு வந்து இறைபணியில் இணைந்தார். இவர் சங்கீதஞானம் உடையவர். பல கிறிஸ்தவப் பாடல்களைப் பாடியுள்ளார். கதாப்பிரசங்கம் சிறப்பாகச் செய்ததால் அநேகர் இவர்பால் ஈர்க்கப் பெற்றனர். இவர் செல்வரத்தினம் அடிகளாருக்கு உறுதுணையாக இருந்ததால் “சின்னண்ணர்” என்று அழைக்கப்பட்டார். இவர் 25 வருடகால சேவையின் பின் 1970 ஆம் ஆண்டு காலமானர். பெரியண்ணன் பல பணிகளைச் செய்து இவ்வாச்சிரமத்துக்கு நற்பெயரீட்டிக் கொடுத்தார். 10 ஆண்டு நிறைவில் 64 பேர் இங்கு தங்கிச் சேவை செய்தனர். 1953 ஆம் ஆண்டு இங்கு ஒரு செபப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1964 இல் இதன் வெள்ளிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 1973 ஆம் ஆணடில் சகோதரர் செல்வரத்தினம் அடிகளார் மறுமையெய்தினார். 1974 இல் பெரியண்ணன் நினைவு மண்டபம் நிறுவப்பட்டு இறையியல் கல்லூரி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. செபலாயத்துக்கு முன் “வெள்ளை மெழுகுவர்த்தி” என்ற ஒளிக்கோபுரம் கட்டப்பட்டது.

1978 ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் வீசிய சூறாவளியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் ஆச்சிரமத்திலிருந்து இணுவில் அண்ணா நிறுவன வாகனம் மூலம் கொண்டு சென்று வழங்கப்பட்டன. இங்கும் ஏற்பட்ட அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆச்சிரமத்தின் தலைமையை ஏற்று நடத்திய சாம் அண்ணன் தலைமையில் அயற்கிராமச் சைவத்தொண்டர்களும் உதவினர். தொடர்ந்து அடிக்கடி இவ்வித நிவாரண உதவிகள் செய்தனர். இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதிப் படையின் கெடுபிடியால் பாதிக்கப்பட்ட 2500 பேருக்கு இந்தக் கிறிஸ்தவ ஆச்சிரமம் தங்குமிட வசதி, உணவு வசதி என்பவற்றைச் செய்து கொடுத்தது.

பெரியண்ணன் என்று அன்பாக அழைக்கப்பட்ட செல்வரத்தினம் அடிகளாரின் திடமான விடாமுயற்சியும் சமயப் பற்றும் இணுவையூர் மக்களின் முன்மாதிரியும் இந்துசமயப் பாங்கான துறவிகளோடு வாழ்ந்து செயற்படுகிறது கிறிஸ்தவ சேவஆச்சிரமம். அன்று ஆரம்பிக்கும்போது எதிர்பார்த்த முன்னேற்றத்திலும் அதிகப்படியான செயற்றிறனைக் கொண்டு இயங்குவது இம் மண்ணில் கிறிஸ்தவ மார்க்கமும் தன் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் சமயத்திலும் அன்பு, மனிதநேயம் சிறப்புடையது என மதிக்கப்பட்டுள்ளது, இவ்வூரின் சகோதரத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சீரிணுவைத்திருவூரில்
# கல்வியும் கலையும்



ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வராதிடர்.

- கம்பன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவிலின் கலைமரபும், கல்விமரபும்

**பேராசிரியர் சபா.ஜெயராசா**

இந்நாட்டின் இசை, நடனம் மற்றும் கல்விப் பாரம்பரியங்களை அறிந்துகொள்வதற்கும் அவற்றின் ஆழ்ந்த சுவடுகளைத் தேடிக் கொள்வதற்குமுரிய வளமான கிராமங்களுள் ஒன்றாக இணுவில் விளங்குகின்றது. இனிய இல்லம் என்பது இனி இல்லாகி, இணுவிலாக மருவி வரலாயிற்று. தமிழக மதுரை மாவட்டத்திலும் இத்தகைய பெயர் கொண்ட ஒரு கிராமம் காணப்படுதல் குறிப்பிடத்தக்கது.

இணுவில் கிராமத்தின் கலைகளும் கல்வியும் தொன்மையான பொருளாதார நடவடிக்கைகளோடு ஒன்றிணைந்திருந்தன. ஒருபுறம் குளக்கரையோடு இணைந்த, மருதநில நெல்வளமும் மறுபுறம் தினைவளம், கனிவளம் நிறைந்த நிலவளமும், வடதிசையில் மேய்ச்சல் நிலவளமும் என்றவாறு தானியங்கள், பால், பழம் என்பவற்றோடு பனைவளம் தழுவிய தொழில்களோடு இணைந்த நிறைநிலக் (Contented) கிராமமாக இணுவில் விளங்கியது.

இவ்வாறான பின்னணியை அடிப்படையாகக் கொண்டு கலைகளும் கல்வியும் வளரலாயின.

தொன்மையான கலைகளின் வளர்ச்சியும், கல்வி வளர்ச்சியும் வளப்பெருக்கோடு (Fertility) இணைந்திருந்தமை மானிடவியல் ஆய்வுகளிலே புலப்படுத்தப்படுகின்றன. வீட்டிலே குழந்தைச் செல்வம் பெருகுதல், பட்டியிலே பசுவளம் பெருகுதல், நிலத்திலே பயிர்வளம் பெருகுதல், மரங்களிலே கனிவளம் பெருகுதல் என்பவற்றை வேண்டி ஆடலும், பாடலும், சடங்குகளும் நிகழ்த்தப்பட்டன.

வளப்பெருக்கோடு இணைந்த அம்மன் வழிபாடு, இளந்தாரிகள் வழிபாடு, அண்ணமார் வழிபாடு, மடைவைத்தற் சடங்குகள், பட்டிப் பொங்கல், தினைப்பொங்கல், சித்திரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சி, மேளக்கட்டு, பங்குனி அவியல், மாம்பழ நேர்த்தி, பாற்காவடி, பழக்காவடி, வட்டுவினிப் பொங்கல், பூரணைப் பொங்கல், முதலாம் வளநிலை வழிபாடுகள், இன்றும் இங்கு காணப்படுகின்றன. இவ்வழிபாடுகளுக்குரிய ஆடலும் பாடலும் வழக்கிலிருந்தன.

மேளக்கட்டு என்பது தவில், நாயனத்தோடு இணைந்த வளப் பெருக்க வழிபாடு ஆயிற்று. கலை என்பது வளமாகவும், வழிபாடாகவும் மலர்ச்சியுற்ற நிலையை மேளக்கட்டுச் சடங்கு எடுத்துக்காட்டுகின்றது. தை மாதத்தில் தவில், நாயனக் கலைஞர்கள் தாம் அமைத்த இசைக்குழுவின் வளம்பெருக வேண்டி பரமானந்தவல்லி அம்மன் ஆலயத்தில் மேளக்கட்டுச் சடங்கையும், இசையையும் நிகழ்த்துவர்.

தமிழர்களது கலைமரபிலும், மருத்துவ மரபிலும் ஐம்பூதங் களைப் பற்றிய அறிவும் தேடலும் சிறப்புப் பெற்றிருந்தன. இயற்கைச் சமநிலையோடு மனிதவாழ்க்கைச் சமநிலையும் இணைந்திருந்தமை உய்த்துணரப்பட்டது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயவெளி முதலியவற்றை வாழ்த்துதலும், வழிபடுதலும், பாடல் புனைதலும் ஆடல் அமைத்தலும் வழக்கிலிருந்தன.

இயற்கையைப் பெண் தெய்வமாக்கி வழிபடும் பாடலுக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு.

“வித்துக் காற்றாய்
வந்தாய் காளி!
விறைப்பொடு நிலமாய்
வந்தாய் காளி!
கொத்துத் தணலாய்
வந்தாய் காளி!
கோதில் வெளியாய்
வந்தாய் காளி!”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையை அடிப்படையாகக் கொண்ட சித்த மருத்துவக் கல்விமரபும் இணுவிலில் வளர்ச்சிபெற்றிருந்தது. செல்லப்பா மரபு, மணியத்தார் மரபு, நாகையர் மரபு, சீவரத்தினம் மரபு, விநாசித்தம்பியர் மரபு, இராமலிங்கர் மரபு சீனிவாசகம் மரபு, செல்லையர் மரபு, சிவமணி மரபு போன்ற சித்தவைத்தியர் மரபுகளும், கல்விமுறையும் நிலைபெற்றிருந்தன.

இணுவில் கிராமத்தின் கல்விமரபு கவின்கலைக் கல்வி, சித்த மருத்துவக் கல்வி என்பவற்றுடன் சோதிட மரபையும் உள்ளடக்கியிருந்தது. கோள்களின் அசைவுகளுடன் தொடர்புடைய சோதிடம், நட்சத்திர அசைவுகளுடன் தொடர்புடைய சோதிடம், விலங்கு நடத்தைகளுடன் தொடர்புடைய எதிர்வுகூறல், பறவைகளின் நடத்தைகளுடன் தொடர்புடைய எதிர்வுகூறல், மனையடி மரபு, நீரடி மரபு போன்றவற்றை விளக்கும் வல்லுநர்கள் வாழ்ந்த பொழுதும் அவர்களது அறிவுக்கையளிப்பு வாய்மொழி தழுவியதாகவே பெருமளவில் அமைந்திருந்தது. ஏடுகள் காலவோட்டத்தில் அழிந்துவிட்டன. சித்தர், நாகலிங்கர், கனகர், கதிர்காமர், அண்ணாமலையார், நாகர், வேலவர் போன்ற பெரும் சோதிடர்கள் இக்கிராமத்தில் வாழ்ந்தனர்.

இக்கிராமத்தின் பிறிதொரு சிறப்பு வைதிகக் கல்வி மரபாகும். ஸ்ரீ மகாதேவக்குருக்கள் அவர்களால் அமைக்கப் பட்டுள்ள ஸ்ரீகாயத்திரி பீடமும் குருகுலமும் வைதிகக் கல்வி மரபின் சிறப்பை எடுத்துக் காட்டும்.

இணுவில் கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தில் மறைஞானக் கல்வி அல்லது அருள்நிலைக் கல்வி தனித்துக் குறிப்பிடத்தக்கது. பச்சிலைச் சித்தர், தேன்சித்தர், வல்லாரைச் சித்தர், கடுகுச் சித்தர், ஊஞ்சல் சித்தர், தினைச் சித்தர் முதலாம் மறைஞானிகளாய் வாழ்ந்து, நோய்களைத் தடுத்தும், தீமைகள் வராது காத்தும், அருளொலி பரப்பியும் வந்தனர். சித்தர்கள் ஒன்றிணைந்த சோலையாகவும் கூடலாகவும் காரைக்கால் அமைந்திருந்தது. மிகுந்த அமைதி கொண்ட அந்தச் சூழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவவழிபாட்டை ஆதாரமாகக் கொண்டிருந்தது. சித்தர்களின் பாரம்பரியத்தில் வந்த பெரிய சந்நியாசியார் வடிவமைத்த பெருங்கலைக் கோபுரமாக அமைந்த பெருமஞ்சம் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இம்மஞ்சத்தின் சிறப்பு, சித்தர் மரபு தழுவிய சிற்பங்களாகும். மறைஞானப் புதையலை உட்கொண்டு ஆக்கப்பெற்ற மரச்சிற்பங்களைப் புராண இதிகாசங்களையும், தொன்மங்களையும் வைத்துப் பொருள் விளக்க முடியாதுள்ளது. சித்தர் மரபிலேதான் அவற்றின் ஆழ்ந்த பொருள்களைக் கண்டறிய வேண்டியுள்ளது.

வரன்முறை தழுவிய கல்வி, முறைசாராக் கல்வி என்ற வகையில் இணுவில் கிராமத்தின் கல்வி வளர்ச்சி இரு கிளைகளாக வளர்ச்சியுறத் தொடங்கியது. வரன்முறை தழுவிய கல்வியில், திண்ணைப் பள்ளிக்கூடங்கள், கோயில் மடப்பள்ளிக்கூடம், தவில், நாயன இசைக் குருகுலங்கள் முதலியவை சிறப்பாகக் குறிப்பிடக் கூடியவை. முறைசாராக் கல்வியில் புராணபடனம், நிலாப்பள்ளி, மரநிழற் பள்ளி, ஊஞ்சற் பள்ளி முதலியவை சிறப்பிடம் பெற்றிருந்தன.

மூன்று திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இணுவிலில் இயங்கி வந்தமைக்கு ஆதாரங்கள் உள்ளன. இணுவில் தெற்கில் ஒரு பள்ளிக்கூடமும், மேற்கில் ஒரு பள்ளிக்கூடமும், கிழக்கில் ஒரு பள்ளிக்கூடமும் இயங்கி வந்தன. திண்ணைப் பள்ளிக்கூட மரபின் உன்னத ஆசிரியர்களாக சேதுலிங்கச் சட்டம்பியார், மாணிக்கச் சட்டம்பியார், கனகசபைச் சட்டம்பியார், வடிவேற் சாமியார் ஆகியோர் விளங்கினர். இலக்கியம், இலக்கணம், சமயம், தருக்கம், சோதிடம், நாட்டுச்சீவன நூல், முதலாம் பாடங்கள் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் நடைபெற்றன.

பரராசசேகரப் பிள்ளையார் கோவில், கந்தசுவாமி கோவில், சிவகாமி அம்மன் கோவில் முதலியவற்றுக்கு அணித்தாகக் கோவில் மடப் பள்ளிக்கூடங்கள் இயங்கிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடத்தடிப் பள்ளி, மடத்துவாசற் பள்ளி, கோயிற் பள்ளி என அவை அழைக்கப்படலாயின. திண்ணைப் பள்ளிக் கூடங்களிலே படித்தவர்கள் மேலும் ஆழ்ந்த புலமை பெறுவதற்கு கோவிற் பள்ளிக்கூடத்துக்கு வந்தனர். கோவிற் பள்ளிக்கூட மரபில் வந்தவர்களுள் பஞ்சவர்ணத்தூது எழுதிய இணுவைச் சின்னத்தம்பிப் புலவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். நடராசையர், இரத்தின ஐயர், அம்பிகைபாகர் முதலியோர் இம் மரபில் வந்தவர்கள். கோவிற் பள்ளிக்கூட மரபு சிறந்த கவிமரபு ஒன்றினை உருவாக்கியது. "அறிவாற்றலின் ஒரு பரிமாணம் கவிதை புனைதல்" என்ற கண்ணோட்டம் நிலைபேறு கொண்டது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வந்த மேனாட்டு அறிஞர்கள், இந்தப் பரிணாமத்தைத் தமது கல்வி அவதானிப்புக்களிலே சுட்டிக் காட்டியுள்ளனர். (பேராயர் எஸ். ஜெபனேசன், 2002)

பலவகையான கவின்கலைக் குருகுலங்கள் இணுவில் கிராமத்தில் இயங்கின. அண்ணாவி ஏரம்பர், அண்ணாவி கனகர், அண்ணாவி சிதம்பரம், முதலியோர் ஆடற் குருகுலக் கல்வியைக் கையளிப்புச் செய்தனர். கலைச்செல்வர் ஏரம்பு சுப்பையா, மகாவித்துவான் வீரமணி ஐயர், கல்விப்பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் முதலியோர் ஆடற்கலை மரபின் உன்னதங்களை வெளிப்படுத்தினர்.

தவில், நாயன இசைக்குருகுல மரபில் மிகப்பெரும் தவில், நாயனக் கலைஞர்கள் தோன்றினர். வித்துவான்கள் விசுவலிங்கம், உருத்திராபதி, கோதண்டபாணி, மாசிலாமணி, தெட்சணாமூர்த்தி, சுந்தரமூர்த்தி குடும்பம், புண்ணியமூர்த்தி, கந்தசாமி பிள்ளைகள், கோவிந்தசாமி குடும்பம், சின்னராசா குடும்பம், கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்கள், இராதா கிருஷ்ணன், உதயசங்கர், தமிழக அரசின் விருதுபெற்ற தவிற் கலைஞர் கணேசபிள்ளை, வானொலி புகழ் சண்முகம்பிள்ளை, இராமையாபிள்ளை, பெரிய பழனி, சின்னப்பழனி, பழனிமலை, சின்னத்தம்பி, சடையர், கனகசபாபதி முதலியோரும் அவர்களது குடும்பங்களும் என்றவாறு தொடர்ச்சி நீண்டு செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுலக்கல்வி வாயிலாகப் பண்ணிசை மரபும் வளர்க்கப்பட்டு வந்தது. தியாகாராசாச் சுவாமிகள் குடும்பம், பெ.கந்தையா குடும்பம், சு.குமாரசாமி குடும்பம், வடிவேல் குடும்பம் ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

புராணபடன மரபில் வித்துவான் இ.திருநாவுக்கரசு, பண்டிதர் இ.இராசலிங்கம், பண்டிதர் நா.இராசையா, பண்டிதர் சபா.ஆனந்தர், சோ.பரமசாமி ஐயர், ஆறு.திருமுருகன், கு.சண்முகநாதன் முதலியோர் விளங்கினர். இவர்கள் புராணபடன மரபில் மட்டுமன்றி இலக்கண, இலக்கிய ஆய்வுகளிலும், கல்வியியற் புலமையிலும் சிறந்து விளங்கினர். பண்டிதர் சபா.ஆனந்தர் அவர்கள் அறிஞர் மு.வரதராசனார் அவர்களோடு இணைந்து கற்று தமிழியல் ஆய்வுகளை அவருடன் ஒன்றிணைந்து மேற்கொண்டவர்.

தமிழியல் ஆய்வுகளை வளமுறச் செய்தவர்கள் வரிசையில் மூதறிஞர் இ.இரத்தினம் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர். இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர் அரசகரும மொழத் திணைக்களத்திற் கடமையாற்றிய வேளை பல ஆங்கில நூல்களைத் தமிழிலே மொழிபெயர்த்தார். இவரது துணைவியார் ஞானகலா இரத்தினம் அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தமிழ்ப் பகுதியில் பணிப்பாளராகக் கடமைபுரிந்தார்.

இணுவில் கிராமத்துத் தமிழியல் ஆய்வாளர் வரிசையில் திரு.க.கந்தசாமி (தமிழவேள்), திரு.கா.செ.நடராசா, திரு.வ.மகேஸ்வரன், திரு.சோ.பரமசாமி ஆகியோர் தனித்துவம் மிக்கவர்கள். திரு.க.கந்தசாமி அவர்கள் தமிழ்மொழி சார்ந்த பாடநூல்கள், இலக்கண நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் முதலியவற்றை வெளியிட்டுள்ளார்கள். இவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கா.செ.நடராசா அவர்கள் "இளங்கோவின் கனவு", "தமிழா விழித்தெழு", "இணுவை அப்பர்" முதலாம் நூல்களை எழுதியுள்ளார். திரு.வ.மகேஸ்வரன் அவர்கள் தஞ்சாவூரில் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார். திரு.சோ.பரமசாமி அவர்கள் "வீரசைவ மரபியல்" என்ற பரிசுநூலை எழுதியுள்ளார்.

மிக இளம் வயதில் கவிதை நூலுக்குப் பரிசுபெற்ற பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் கவிதை, புனைகதை, கட்டுரை, இலக்கணம், காவியம் முதலாம் துறைகளில் பல நூலாக்கங்களைப் புனைந்துள்ளார். இவர் ஆற்றலும், வளமும் மிக்க ஆக்க இலக்கிய ஆக்குநர். எழுத்தாளர் வரிசையில் திரு.கே.எஸ்.ஆனந்தன் அவர்களும் முக்கியமானவர். யாழ்ப்பாணத்து மாற்றமுற்றுவரும் சூழலை அடிப்படையாகக் கொண்ட பல நாவல்களும் சிறுகதைகளும் அவரால் எழுதப்பெற்றுள்ளன. அதிபர் துரைஎங்கரசு அவர்களும் யாழ்ப்பாணத்து நிலைமாற்றங்களைப் பின்புலமாகக் கொண்ட பல சிறுகதைகளைப் புனைந்து வருகின்றார்.

கிருதியாக்கம், கீர்த்தனை எழுத்தாக்கம், நாட்டிய நாடக எழுத்தாக்கம் முதலியவற்றில் உலகப்புகழ் பெற்ற சிறப்புக்கு உரியவராக அமரர் வீரமணி ஐயா அவர்கள் விளங்குகின்றார்.

இளம் எழுத்தாளர்கள், வளர்ந்துவரும் எழுத்தாளர்கள் வரிசையில் பத்துக்கும் மேற்பட்டவர்களை இனங்காணமுடியும்.

இணுவில் அழகுக்கலை மரபில் மணிச்சப்பறக்கலை, மணவறைக் கலை, முத்து அலங்காரம், மலர் அலங்காரம், மலர் மாலைக் கலை, சார்த்துப்படிக் கலை முதலியவை தனித்துவம் வாய்ந்தவை. இக்கலை பெரும்பாலும் வீர சைவர்களால் சாஸ்திரோத்தமாக வளர்க்கப்பட்டு வருகின்றது. இக்கலையை வளர்ப்பதில் திரு.சிதம்பரேஸ்வரன் அவர்களின் பணி விதந்து கூறப்படத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரநிழற்பள்ளிகள், ஊஞ்சற்பள்ளிகள் முதலியவை இக் கிராமத்தில் இடம்பெற்ற பெண் கல்விப் பாரம்பரியங்களை எடுத்துக் காட்டுகின்றன. வீடுகளைச் சூழ்ந்த மரநிழல்களின் கீழிருந்தும், மரங்களிற் கட்டப்பெற்ற ஊஞ்சல்களில் இருந்தும் பெண்கள் கல்வி பயிலுதல், தனித்துவம் மிக்க கல்விச் செயற்பாடுகளாயிருந்தன. இவ்வகையில கல்விபெற்றோர் சிறந்த பெண் ஆசிரியைகளாக விளங்கினர். ஆயிலியம் அக்கா, சிவபாக்கியம் அக்கா, பாக்கியம் அக்கா, சரஸ்வதி அக்கா, அன்னக்கா முதலியோர் சிறப்புற்று விளங்கினர்.

இணுவில் கிராமத்தின் கலை வளத்தையும் கல்வி வளத்தையும் அறிந்த சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் இராமநாதன் கல்லூரியை இக்கிராமத்தில் நிறுவினார். இக்கிராமத்தின் இசை நடனப் பாரம்பரியங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக்கதின் இசை நடனத் துறைகளை இணுவிலிலே வளர்ப்பதற்கும் துணையாகவுள்ளன.

இணுவில் கிராமத்தின் கல்வியையும் கலைகளையும் நிறுவன மயப்படுத்தி வளர்ப்பதில் பலர் முன்னின்று உழைத்து வருகின்றனர். திருவாளர்கள் ஆறு.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி, திரு. ஆறு.திருமுருகன், த.தேவராஜா, விரிவுரையாளர் க.தேவராஜா, விரிவுரையாளர் கலாநிதி இ.விக்னேஸ்வரன், திரு. செ.சோதிப்பெருமாள், வங்கி முகாமையாளர் குகதாசன், இளந்தொண்டர் சபையினர், இணுவில் பொது நூலகத்தினர், இணுவில் திருவூர் ஒன்றியத்தினர் ஆகியோர் இதற்காக உழைத்து வருகின்றனர். இக்கிராமத்தின் கலை பண்பாட்டு வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் இணுவில் சமூகத்தினரது பங்குபற்றல் மிகுந்த இங்கிதமாக உள்ளது. அவர்கள் பற்றி விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவிலில் சைவம்பேணிய திண்ணைப் பள்ளிகள்

**பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்**

இற்றைக்கு ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன் ஈழத்தில் தமிழ்மொழி மூலக் கல்வியும் சைவநெறியும் பின்னடைந்து வருவதைத் தடுத்துத் தமிழ், சைவக் கல்வியைத் தழைப்பிக்கவென ஆறுமுகநாவலர் கற்பித்து உருவாக்கிய அவரது மாணாக்கர்கள் அவர் ஏவலின் பேரில் ஊர்கள் தோறும் திண்ணைப் பள்ளிகள் வைத்துச் சமய நூல்களையும் கருவி நூல்களையும் கற்பித்து வந்ததன் மூலம் தமிழறிவைச், சைவ ஒழுக்கத்தைச் சமூகத்திற் பேணி வளர்த்தனர்.

அந்தவகையில் இணுவில் கிராமத்திலும் திண்ணைப் பள்ளிகள் நாவலர் மாணாக்கரால் நடாத்தப்பட்டன. இணுவில் செகராச சேகரப் பிள்ளையார் ஆலய வீதியில் வாழ்ந்த சொத்திச் சட்டம்பியார் என அழைக்கப்பட்ட சுப்பிரமணியச் சட்டம்பியார் தமது வீட்டில் திண்ணைப் பள்ளி நடத்தி இலவசமாகத் தமிழ், சமய நூல்களை மாணவர்களுக்குக் கற்பித்து வந்தனர். அதேபோலத் மத்திய கல்லூரியின் தெற்கருகே செல்லும் வீதியிலமர்ந்த தமது வீட்டில் வாழ்ந்த மாப்பிள்ளைச் சின்னத்தமபி என அழைக்கப்பட்ட பெரியார் அந்தக் காலத்தில் திண்ணைப்பள்ளி நடாத்தித் தமிழ் சைவப் பணியாற்றினார்.

இணுவில் கிழக்கு அங்கிளப்பாயைச் சேர்ந்த சரவணைச் சட்டம்பியார் என்பவர் இன்று இணுவில் மத்திய கல்லூரி அமைந்துள்ள இடத்தில் திண்ணைப் பள்ளி நடத்தி இணுவிலில் தமிழ், சைவம் வளர்த்தார்.

இதேபோல இணுவில்குடி மு.வேங்கடாசலம் ஐயர் கந்தசுவாமி கோவிலின் பின்புறத்தில் வைரவநாதையர் சுப்பையருக்குச் சொந்தமான வளவில் திண்ணைப்பள்ளி நடாத்தி வந்தார். இவர் 1864 இல் சிதம்பரத்தில் ஆறுமுகநாவலர் கட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த பாடசாலைக்கு இணுவிலிலிருந்து கூரைமரம் அனுப்பினார் என்று 1889 இல் வே.கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய "ஆறுமுகநாவலர் சரித்திரம்" என்னும் நூல் கூறுகிறது. கோப்பாய்ச் சபாபதி நாவலர் முதலியவர்களுக்கு இந்த இணுவில்குடி மு.வேங்கடாசலம் ஐயர் வித்தியாகுருவாக விளங்கினார் என்று ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு" கூறுகிறது. இவர் இணுவிலில் அன்றி கோண்டாவிலிலும் சைவப் பாடசாலை ஒன்றை நிறுவினார். அப் பாடசாலையும் இன்றுவரை தமிழ் சைவப் பணிபுரிந்து வருகிறது.

சொத்திச்சட்டம்பியார், சரவணச்சட்டம்பியார், வேங்கடாசலம் ஐயர் முதலியோர் ஆதியில் திண்ணைப் பள்ளிகள் நடத்திய மரபில், பிற்காலத்தில் சேதர்ச்சட்டம்பியார், மாணிக்கச்சட்டம்பியார், கனகசபைச்சட்டம்பியார் முதலியோர் திண்ணைப்பள்ளிகள் நடத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பல்கலைக்கழக இணுவில் இராமநாதன் நுண்கலைப்பீடம்

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் இணுவில் கிராமத்தின் செழிப்பையும் வனப்பையும் தெய்வீகச்சாயலையும் இசையின் நறுமணங்கலந்த புகழையும் கண்டு தமது எதிர்கால வாழ்வு சிறப்படையும் நோக்கில் இணுவில் கிராமத்தின் வடபால் கல்லூரிகள் அமைப்பது குறித்துத் தமது சிந்னையைச் செலுத்தினார்.

அன்று இணுவிலிலிருந்து நாற்றிசையுஞ் செல்லும் பாதை களின் நடுவே அமைந்த நாற்சந்தியின் அருகில், பிரயாணஞ் செல்வோர் தரித்து நின்று செல்வது வழக்கம். இப்படித் தரித்துச் செல்வோர் மழை, வெயில் காலங்களில் நிம்மதியுடன் தரித்து நிற்பதற்கென இச் சந்தியின் வடமேல் கரையில் ஒரு தங்கும் மடத்தைக் கருணையுள்ளம் கொண்ட மருதயினார் என்ற பரோபகாரி அமைத்தார். அக்காலத்தில் இந்தமடம் அமைந்த இடம் மருதயினார் என்பவரின் சிறப்பையொட்டி மருதையினார்மடம் எனப்பட்டு மெல்ல மருவி மருதனார்மடம் என வழக்கில் வந்தது. இச்சந்தியை அண்டிய இணுவிலின் நாற்றிசையும் கால் மைல் தூரப் பிரதேசம் மருதனார்மடம் என்ற குறிச்சிப்பெயரால் இன்று வரை அழைக்கப்படுகிறது. உற்றுநோக்கினால் இணுவில் கிராமத்தின் பலகுறிச்சிகளுள் மருதனார்மடம் என்ற குறிச்சியும் ஒன்றாகும்.

இதன் விளைவாகவே மருதனார்மடச்சந்தை, மருதனார் மடம் ஆஞ்சநேயர் கோயில், மருதனார்மடம் பல்லப்பை வைரவர் கோயில், மருதனார்மடம் எரிபொருள் நிரப்பு நிலையம், மருதனார்மடம் புகையிரதநிலையம் (மருதனார்மடப் புகையிரத நிலையப்பெயர் இணுவில் புகையிரத நிலையமாக மாற்றப் பட்டுள்ளது.), மருதனார்டம் இராமநாதன் கல்லூரி எனப் பல அமைப்புகள் இக் குறிச்சியின் பெயரால் வழங்கின. இணுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமம் சிறியதாக இருந்ததாலும் சுன்னாகம் பெரிய பட்டண அந்தஸ்தில் இருந்ததாலும் தபால் விநியோகம் முதலான தபாலகத் தேவைக்காகவும் இணுவில் சுன்னாகம், மருதனார்மடம் சுன்னாகம் என எதற்கும் சுன்னாகம் கையாளப்பட்டது.

இராமநாதன் அவர்கள் பெரிய நிலப்பரப்பில் பெண்கள் சமயாசாரப்படியும் பாதுகாப்பாகவும் பெண்களாகவே வாழ வேண்டும் எனவும், பெண்களின் மென்மைக்கேற்ப நுண்கலைகள் பயிலவும் வகைசெய்ய வேண்டும் எனவும் கருதியதால் இராமநாதன் கல்லூரியை இணுவில் கிராமத்தில் அமைத்தார். தமது குடும்பமும் இச்சூழலில் வாழ்ந்து இணுவில் சிறப்பையும் சமயம், இசை போன்ற கலைகள் யாவற்றையும் அனுபவிக்க வேண்டியும் கல்லூரியின் மேற்குப் பகுதியில் ஒரு சிறந்த இல்லத்தையும் அமைத்து வாழ்ந்து உடல், உள அமைதி கண்டார். இவரது மருகரான தென்னிந்தியாவைச் சேர்ந்த கல்விமான், புலவர் சு.நடேசபிள்ளை என்பவர் மாமனார் வாழ்ந்த இல்லத்தில் வாழ்ந்து தமது கடமைகளுடன் இராமநாதன் கல்லூரியையும் திறம்பட நடாத்திச் சிறப்படைந்தார். அரசியலிலும் ஈடுபட்டார். இணுவிலில் வாழ்ந்த கற்றறிந்த உயர்கல்வியாளர் மட்டுமன்றிப் பாமரமக்களும் அவரை ஆதரித்தனர். இதே காலத்தில் சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் நீண்ட கனவாகிய இசைக்கல்வி விருத்தியையும் மேற்கொள்ளத் தலைப்பட்டார்.

"உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது" என்றவாறு இராமநாதனின் கனவு நனவாகும் விதத்தில் சு.நடேசபிள்ளை அவர்கள் முயற்சியால் 09.10.1960 விஜயதசமியன்று வெகு சிறப்பாக இராமநாதன் இசைக்கல்லூரி ஆரம்பமானது. தென்னிந்தியாவைச் சேர்ந்த பல இசைப்பேரரசுகள் வந்து ஆற்றிய சேவையில் இசைக்கல்லூரி சிறப்பாக இயங்கியது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் நன்கு கற்றுத்தேற வாய்ப்பாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் இசைக்கல்லூரி தென்னிந்திய அண்ணாமலை (இசை) பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு நாராயண பிள்ளை அவர்களால் தொடக்கப்பட்டது. இதன் முதல் அதிபராக மகாராஜபுரம் விஸ்வநாதஐயர் பொறுப்பேற்றுத் திறம்பட நடாத்தினார். இணுவிலில் இசை நன்கு வளர்ந்தது.

இக்கல்லூரியில் நான்கு ஆண்டுகள் கற்றுச் "சங்கீத இரத்தினம்" தேர்வில் தேறியவர்களுக்குப் பட்டமும் வழங்கப் பட்டது. தொடர்ந்து இக்கல்லூரி அரச முகாமையினால் 1960 இல் பொறுப்பேற்கப்பட்டது. இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் கலைப்பகுதி கர்நாடக சங்கீதம், மிருதங்கம் போன்ற துறைகளைக் கொண்டது. சிறப்பு வாய்ந்த சங்கீதபூசணம் இராமநாதன் மிருதங்கத் துறையில் சிறப்புடன் வழிகாட்டியதன் பேரில் இவரது சிட்சையில் உருவானவர்களில் திரு.ப.சின்னராசா, சி.மகேந்திரன் போன்ற சில மிருதங்கக் கலைஞர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

01.03.1973 தொடக்கம் செல்வி கிருஷ்ணானந்தியின் கீழ் பரதநாட்டிய நெறி உதயமானது. 1974 ஆம் ஆண்டு இராமநாதன் நுண்கலைப்பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் பொறுப்பேற்கப்பட்டுச் சகல வசதிகளும் செய்யப்பட்டு இராமநாதன் நுண்கலைப்பீடமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் தலைமையில் இயங்கிய இராமநாதன் நுண்கலைப்பீடம் 1992 இல் இருந்து பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்களைத் தலைவராகக் கொண்டு தனிப்பீடமாக இயங்குகிறது.

கர்நாடக இசை வாய்ப்பாட்டுக்கு எஸ்.பத்மலிங்கமும், கருவி இசைக்கு ஏ.எஸ்.சோமசுந்தரசர்மாவும், பரதநாட்டியத்துக்கு செல்வி பத்மரஞ்சினி உமாசங்கரும், பண்ணிசைக்கு நா.வி.மு.நவரத்தினமும் இணைப்பாளர்களாக அன்று நியமிக்கப் பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது சித்திரமும் வடிவமைப்பும் பயில்நெறியும் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் ஒரு துறையாக ஆரம்பிக்கப் பட்டுப் பிரபல ஓவியர் ரமணி முதலியோர் விரிவுரையாளர்களாகப் பணியாற்றுகின்றனர். இணுவில் இராமநாதன் கல்லூரியின் மேற்குப் புறத்தே இருந்த மிகுதிக் காணியில் அண்மையில் அமைக்கப்பட்ட கட்டடத்தொகுதியில் நுண்கலைப்பீடம் திறம்பட இயங்கி வருகின்றது.

இந்த நுண்கலைப்பீடத்தில் படித்துப் பட்டம்பெற்றுச் சகல துறைகளிலிருந்தும், பலர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சிறப்பான கலைத்தொண்டில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா / இணுவில் இந்துக் கல்லூரி

இணுவில் மேற்கில் இணுவில் கந்தசுவாமி கோயிலும் வெகு அண்மையில் இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயிலும் அமைந்திருந்ததால் இப்பகுதி மக்கள் கோவில்களை இடையறாது வணங்குவதோடு அன்றாட வாழ்விலும் பக்தி நெறியையே கையாண்டு வந்தனர். இவர்களின் பிள்ளைகளுக்குச் செந்தமிழும் சிவநெறியும் ஆரம்பத்திற் கற்பிக்கவென இச் சூழலில் திண்ணைப் பள்ளிகள் தொடக்கப்பட்டுச் சிறப்பாக இயங்கின. இத் திண்ணைப் பள்ளிகளிற் கற்பித்தவர்கள் சட்டம்பியார், உபாத்தியாயர் என அழைக்கப்பட்டனர். இணுவில் கிராமம் விவசாயத்தை நிலை நாட்டியும் கோயில்களைக் கூடுதலாக அமைத்தும் இருந்ததால் ஏனைய ஊர்களில் கிறிஸ்தவமதம் பரவியது போல் இங்கு சைவ சமயத்தைவிட வேறெவையும் இடம்பிடிக்க முடியவில்லை.

திண்ணைப் பள்ளிகள் இப்போது இணுவில் இந்துக் கல்லூரி இருக்கும் பரந்த காணியிலும் தெற்குப் புறத்திலும் வெவ்வேறாக இயங்கி வந்தன. யாழ்ப்பாணத்தில் சைவசமயம் குன்றும் வண்ணம் கிறிஸ்தவ மதப் பரம்பல் ஏற்படுவதை அவதானித்த நாவலர் பெருமான் மனம்வருந்தினார். ஊர்கள் தோறும் சிவநெறித் தொண்டர்களினது உதவியுடன் தம்மிடம் படித்த மாணவர்களை ஆசிரியர்களாகக் கொண்டு சைவமும் தமிழும் கற்பிக்கும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை ஏற்படுத்தினார். இதே காலத்தில் 1864 ஆம் ஆண்டு இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை உதயமானது. இதனால் இங்கு தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவசமயம் ஆகிய பாடங்களிற் படித்து உயர்நிலையடைந்த பல பெரியார்களை இவ் வித்தியாசாலை உருவாக்கியது.

ஏறக்குறைய 65 வருடங்களுக்கு முன் சைவவித்தியா விருத்திச் சங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு சகல வளங்களும் சேர்க்கப்பட்டு இயங்கிய இப்பாடசாலை சிறப்புடன் செயற்பட்டது. சகல பாடசாலைகளும் இலங்கை அரசினால் பொறுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேற்கப்பட்ட 1960 ஆம் ஆண்டிலிருந்து அரச பாடசாலையாகப் பிரகடனப்படுத்தப் பட்டது. பழைய மாணவர் இரா.சுந்தரலிங்கம் அவர்கள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் அவரால் இப்பாடசாலை இணுவில் இந்துக் கல்லூரி என்று பெயர் மாற்றப்பட்டு இயங்கி வருகின்றது.

இக்கல்லூரியில் தரம் ஒன்று முதல் தரம் 13 வரை 644 பிள்ளைகள் சென்ற ஆண்டில் (2003) கல்வி கற்றனர். சென்ற ஆணடின் கணக்குப்படி 29 ஆசிரியர்கள் கடமையாற்றினர். சென்ற வருடம் அதிபராக இருந்த செ.குபேரநாதன் அவர்கள் உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வுடன் செல்ல, தற்போது திரு.சச்சிதானந்தம் அவர்கள் அதிபராகப் பணியாற்றுகிறார். இரு மாடிக்கட்டடங்களும், வேறு கட்டடத் தொகுதிகளும் இருக்கின்றன. தொழிற்கூடமும், விஞ்ஞான கூடமும் இக்கட்டடத் தொகுதியின் வடபால் வசதியான விளையாட்டு மைதானமும் அமைந்துள்ளன.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு சி.சின்னத்துரை அவர்கள் (கல்கி பீடி அதிபர்), து.சிவராசா (ஐங்கரன் மில்), இ.சற்குருநாதன், பொ.நடராசா (அண்ணா தொழிலக அதிபர்), முதலிய வர்த்தகப் பிரமுகர்களும் ஏனைய நலன்விரும்பிகளும் அதிக நிதியுதவிகளும் வேறு பல உதவிகளும் வழங்கியுள்ளனர்.

இப்பாடசாலை பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலின் வடபால், கந்தசுவாமி கோயிலின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ளதால் இங்கு படிக்கும் மாணவர்களும், கற்பிக்கும் ஆசிரியர்களும் சைவநெறியைத் தவறாது பேணிவருகின்றனர். இங்கு படித்த பலர் சிறந்த தமிழ் சைவத்துறை விற்பன்னர்களாகவும், சிறந்த ஆசிரியர்களாகவும், வர்த்தகப் பிரமுகர்களாகவும் முன்னேறித் தாம் கற்ற கல்லூரி அன்னைக்கு நன்றி மறவாது பல உதவிகளையும் செய்து மகிழ்வது பரராஜசேகரப் பிள்ளையாரினதும், கந்தசுவாமியாரதும் அருட்பேறாகும்.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் கல்லூரி

இக்கல்லூரி இணுவில் கிராமத்தின் வடபால் உள்ள மருதனார் மடம் என்னும் குறிச்சியில் அமைந்துள்ளது. கற்றறிந்த இலங்கையரான சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தமது கல்விச்சேவையை நிலைநிறுத்திச் செந்தமிழும் சிவ நெறியும் பேணிப்பாதுகாப்பதற்கென ஆண்களுக்கான உயர் கல்லூரியை யாழ்நகரின் வடபால் திருநெல்வேலியிலும், பெண் களுக்கான இராமநாதன் கல்லூரியை இணுவிலின் வட பகுதியிலும் நிறுவினார். பெரிய நிலப்பரப்புக்கொண்ட இராமநாதன் கல்லூரிக்கான காணியில் சிறந்த மண்டபங்கள் அமைந்துள்ளன. பாடசாலைச்சமூகத்தின் சமய வளர்ச்சிக்காக கல்லூரி மேல் மாடியில் ஐம்பொன்னால் செய்யப்பட்ட நடராசப்பெருமான் சிவகாமி அம்மையுடன் காட்சி தருகிறார். இங்கு நாளாந்தப் பூசை சிறப்பாக நடைபெறுகிறது. 1000 பேர் வணக்கம் செலுத்தும் பெரிய மண்டபம் அமைக்கப்பட்டுச் சைவப் பெரியார்களின் படங்களும் இடம்பெறுகின்றன.

இக்கல்லூரியில் சைவ சமயத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர். ஆரம்பப் பள்ளி வகுப்புக்கள் (ஐந்தாம் வகுப்புக்குக் கீழ்) ஆண், பெண் இருபாலாரும் அனுமதிக்கப்பட்டனர். இக்கல்லூரியில் செந்தமிழும் சைவசமயப் பண்பாடும் நன்கு பேணப்படுகின்றன. சமயப்பண்பாட்டின்படி பெண் பிள்ளைகள் முழுப்பாவாடை சட்டையும், மேல்வகுப்பினர் பாவாடை சட்டையுடன் தாவணியையும் அணிவது வழக்கம். அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்ற பின் முழுப் பாவடைச் சீருடை நிறுத்தப்பட்டு நாடு பூராகவும் அணியும் சீருடைப் பாவனை நடைமுறையில் இருக்கின்றது. இப்போது உயர்வகுப்பு மாணவிகள் வெள்ளைநிறச் சேலை அணிவது நடைமுறையில் உள்ளது.

இங்கு பிள்ளைகளின் உடற்பயிற்சிக்கெனப் பரந்த விளையாட்டு மைதானமும் விவசாயத்ததிற்கான பிரத்தியேக நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளன. சேர்பொன் இராமநாதன் அவர்களின் பின் அவரது மருமகனும் சிறந்த கல்விமானுமாகிய சு.நடேசபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இக்கல்லூரியைத் திறம்பட நடாத்தி வந்தார். பின் எல்லாப் பாடசாலைகளும் அரசினால் பொறுப்பேற்கப்பட்டதிலிருந்து இக்கல்லூரி அரசினர் கல்லூரியாகக் கல்வித் திணைக் களத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இக்காலத்தில் சேர்.பொன் இராமநாதன் அவர்களும் சு.நடேசபிள்ளை அவர்களும் வாழ்ந்த இல்லம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப்பீடமாக மாற்றப்பட்டது. இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபம் ஒன்றில் வலிகாமம் வலய உடுவிற் கல்விக்கோட்டஅலுவலகங்கள் இயங்குகின்றன. எஞ்சிய இடங்களில் ஆரம்பப் பிரிவும் மேற்பிரிவுமாக வகுப்புக்கள் நடாத்தப் படுகின்றன. உடுவில் கல்விக் கோட்ட வெளியீடு 2002 சைவத் திருமுறை விழா சிறப்பு மலரின் விபரப்படி ஆரம்ப பிரிவில் ஆண்டு 1- 5 வரை 312 பிள்ளைகள் (ஆண்பெண் உட்பட) படிக்கின்றனர். மேற்பிரிவுகளில் 674 பெண்கள் படிக்கின்றனர். இக்கல்லூரியின் அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் சீரிய பணியாற்றுகிறார். இவருடன் இணைந்து மொத்தமாக 40 ஆசிரியப் பெருமக்கள் அரும்பணி யாற்றுகின்றனர். இங்கு அன்றிலிருந்து இன்று வரை பலவூர் மாணவியர் தங்கிக்கற்கும் மாணவியர் விடுதியும் சிறந்த முறையில் இயங்கி வருவது குறிப்பிடப்படவேய்டிய சிறப்பாகும்.

இக்கல்லூரியில் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலையில் உள்ளவை போன்ற கற்றல் கற்பித்தல் உபகரணங்களும் வசதிகளும் இருக்கின்றன. கலை, மனையியல், நுண்கலைகள், உடற்கல்வி போன்றவை விசேடமாகப் போதிக்கப்படுவதுடன் கோட்டம், வலயம், மாவட்டம், தேசிய மட்டங்கள் வரை மாணவர் சகலதுறைப் போட்டிகளிலும் பங்குபற்றுவதுடன் சிறந்த பெறுபேறுகளையும் பெறுகின்றனர். இக்கல்லூரியில் படித்த அனேக பெண்கள் யாழ்ப்பாணத்திலும் வெளி மாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் சமயப்பண்புடனும் சிறப்புடனும் நல்ல குலமகள்மாராக வாழ்வது இக்கல்லூரியின் நல்ல பாரம்பரியத்தினது பெறுபேறும் சிறப்பு அம்சமுமாகும்.

**மு.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / இணுவில் மத்திய கல்லூரி

இன்றைய இணுவில் மத்திய கல்லூரியானது அரசாங்கம் எல்லாப் பாடசாலைகளையும் பொறுப்பேற்கமுன் இரு தனிக்கல்வி நிலையங்களாக அமைந்திருந்தது. இப்போதுள்ள இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்ப பிரிவு அமெரிக்க மிசனறியினரால் 1903 ஆம் ஆண்டு கிறிஸ்தவ சமயத்தையும் ஆங்கிலக் கல்வியையும் சேர்த்துக் கற்பிக்கும் நோக்கமாக அமைக்கப்பட்டது. ஆசிரியர்களாக கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களே நியமிக்கப்பட்டனர். சமயச் சார்பிருந்ததால் அன்று தொட்டுச் சைவத்தில் ஊறிப்போன இணுவையூர் மக்கள் இப் பாடசாலையில் படிப்பதற்காகத் தமது பிள்ளைகளை அனுமதிக்கவில்லை. இணுவிலில் பல திண்ணைப் பள்ளிகள் செயற்பட்டதால் மாணவர்களின் ஆரம்பக்கல்வி பாதிக்கவில்லை.

1930 ஆம் ஆண்டின் பின் அமரிக்கன்மிசன் பாடசாலையில் கிறிஸ்தவ பாட போதனையில் முன்பிருந்ததிலும் தளர்ச்சி ஏற்பட்டதால் சிறிது சிறிதாக மாணவர் தொகை கூடியது. உடுவிலைச் சேர்ந்த பத்தினிப்பிள்ளை என்பவர் இங்கு கூடிய காலம் அதிபராகக் கடமையாற்றினார். பின் ஆசிரியர் கனகசுந்தரம், திருமதி ஆனந்தர் (பஞ்சவர்ணம்), திரு.செ.சோதிப்பெருமாள் ஆகியோர் அதிபர் பதவி வகித்து வந்து பிற்காலத்தில் பாடசாலையில் பற்பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. உதாரணமாகக் கூடுதலான பிள்ளைகள் ஆண்டு 7 வரை படிக்கவும் ஆசிரியர்களின் தொகை கூடவும், கட்டடங்கள் பெருகிச் சிறக்கவும் வழிகள் ஏற்பட்டன.

இணுவில் மத்திய கல்லூரி மேற்பிரிவு அமைந்திருக்கும் இடத்தில் திண்ணைப்பள்ளி ஒன்று இயங்கியது. இணுவிலில் சைவசமயப் பிள்ளைகள் படிப்பதற்கென தமிழ்ப் பாடசாலை ஒன்றை நிறுவும் காலமும் வந்தது. இணுவில் கிழக்கைச்சேர்நத சிதம்பரநாத உடையார் மகன் மயில்வாகனம் என்பவர் மலேசியாவில் கடமையாற்றியவர். இங்கு வந்து இக்கல்லூரியின் மேல் திசையில் வாழ்ந்த பெரியார் திரு இஅப்பாக்குட்டி, இணுவிலைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த பெரியார் திரு.பொன்னையா ஆகியோரை அணுகி இணுவிலில் ஒரு சைவப் பாடசாலை அமைப்பது பற்றி ஆராய்ந்த பின் மயில்வாகனம் உடனடியாக சிறு அளவில் ஆரம்பிக்கும் படியும் தான் மலேசியாவிலிருந்து நிதி அனுப்புவதாகவும் சொல்லிச்சென்று பணம் அனுப்பினார். இவ்வூரில் திரு.அப்பாக்குட்டி, திரு.பொன்னையா ஆகியோரின் தலைமையில் மயில்வாகனம் அவர்களால் அனுப்பப்படும் நிதியுதவியுடன் சிலகட்டடங்கள் அமைக்கப்பட்டு 1930 ஆம் ஆண்டு ஆனி உத்திரம் என்னும் நன்னாளில் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை என்ற நற்பெயருடன் பாடசாலை ஆரம்பமானது.

அதற்கு ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன்பே ஈழத்தில் சைவத்தமிழ் பாடசாலைகளை தொடக்கி நடத்திச் சைவசமயத்தை பேணிக்காத்த ஆறுமுகநாவலர் அவர்களின் சைவத்தமிழ்ப் பணி மரபைப்பேணி இப்பாடசாலை அமைந்ததில் இணுவில் மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆரம்பத்தில் 26 பிள்ளைகளே சேர்ந்தனர். கற்பிப்பதற்கு மூன்று ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர். தொடர்ந்து பிள்ளைகள் வரவு கூடவும் கட்டடவசதிகளும் செய்யப்பட்டு 1938ம் ஆண்டு இப் பாடசாலையில் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுப் பத்து ஆசிரியர்களும் கடமைக்குச் சேர்க்கப் பட்டனர். இதுவரையில் ஆசிரியர் வேதனம் திரு.சி.மயில்வாகனம் அவர்களின் பெருமுயற்சியால் மாதந்தோறும் அனுப்பப்பட்டு வழங்கப்பட்டது. திரு.அப்பாக்குட்டி அவர்கள் மறுமையெய்திய போதும் திரு.பொன்னையா அவர்கள் தலைமையில் கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவரே முகாமையாளராகவும் கடமையாற்றினார்.

இப்பாடசாலையில் ஆரம்பத்தில் நீர்வேலியைச் சேர்ந்த திரு.ஆ.செல்லப்பா அவர்களும் அவரைத் தொடர்ந்து திரு.வை.நடராசா அவர்களும் அதிபர்களாக இருந்து கடமையாற்றினர். இவர்கள் இருவரது கல்வித் திறமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்பும் நிர்வாகத்திறமையும் காரணமாக இணுவில் கிராமத்தைச் சேர்ந்த பலர் ஆர்வத்துடன் கற்றுப் பல சிறப்புகளும் பெற்று உயர்நிலையில் செயற்பட்டனர். இணுவில் சைவமாகஜன வித்தியாசாலையில் 700 மாணவர்களுக்கு மேல் கற்றுவந்தனர். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின் இப்பாடசாலை மேலும் பல முன்னேற்றங்களையும் அடைய நிதி பெறச் செய்தவர் உடுவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய தர்மலிங்கம் அவர்கள். முன்பு மூன்று பரப்புக் காணியிலிருந்த பாடசாலையின் வசதிகருதி மேற்குத் திசையிலிருந்த திரு அப்பாக்குட்டி அவர்களின் சந்ததியினரின் காணிகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டு 3 மாடிக் கட்டடங்கள் மட்டுமன்றி வெவ்வேறு கட்டடங்களும் அமைய இறைவன் திருவருள் பாலித்தான். பொதுமக்களும் கொழும்பில் வாழ்ந்த இணுவில் அன்பர்களும் பெரிதும் உதவினர்.

அமெரிக்கன் மிசன் பாடசாலை அரசுடமையாக்கிய பின் இணுவில் மத்திய கல்லூரி (சைவமகாஜன வித்தியாசாலை) யின் அங்கமாக அரசினால் அங்கீகரிக்கப்பட்டு ஒரே நிர்வாகமாக அமைந்துள்ளது. மத்தியகல்லூரியின் ஆரம்பப் பிரிவில் 658 மாணவரும் மேற்பிரிவில் 762 மாணவரும் படிக்கின்றனர். இலங்கை அதிபர் தரம் ஒன்றைச் சேர்ந்த துரை எங்கரசு அதிபராகக் கடமையாற்றுகிறார். மொத்தமாக 44 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இக்கல்லூரியில் சகலதுறைகளிலும் கற்பதற்கான வசதிகளும் இருந்த போதும் , அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர் சங்கம் வெளிநாடுகளில் வேலை செய்யும் ஆதரவாளர்கள் நலன்விரும்பிகள் மூலம் மேலும் கட்டடங்கள் அமைக்கவும் மாணவர்கள் கணனி வகுப்புக்களை மேற்கொள்ளவும் தொடர்ந்து பல அபிவிருத்தி வேலைகள் செய்யவும் புதியதோர் விளையாட்டு மைதானம் குறுகிய காலத்தில் விரைவாக வாங்குவதற்குமெனப் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் தாமாகவே முன்வந்து உதவி புரிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்லூரியில் உடுவில் கோட்ட மட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளிலும் மிகக்கூடுதலான மாணவர்கள் படிப்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்பப் பாடசாலையில் திறமையான பல ஆசிரியர்கள் 25 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து கல்வித்தரத்தை மேம்படுத்தி நல்ல பரீட்சைப் பெறுபேறு களையும் பெற்றுக்கொடுத்தனர். பிள்ளைகளை அதிகமாகச் சேர்த்து வலய,மாவட்ட தேசிய மட்டத்தில் பல்வேறு போட்டிகளில் சிறந்த பெறுபேறு பெறவைப்பதுடன் கல்லூரிக்கே பெருமையும் தேடிக்கொடுப்பவர்கள் ஆசிரியப்பெருமக்கள் என்றால் மிகையாகாது.

கல்லூரிப் படிப்பிலும் மேல்மட்டக்கல்வியிலும் சிறப்பான பெறுபேறு பெறுவதும், இங்கு படித்த அநேகர் சிறந்த பட்டம் பதவிகளில் சிறப்படைவதும்தமிழ் சைவசமயப் பண்பாட்டை நெறிதவறாது பேணிப்பாதுகாப்பதும் இவ்வூருக்கே சிறப்பாகும்.

**மு.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதனார்மடம் இறையியற் கல்லூரி

கிறிஸ்தவ இறையியற் கல்லூரி 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டிலிருந்தே கிறிஸ்தவ சமயமும் யாழ்ப்பாணப் பகுதியில் வாழும் மக்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. 1823 ஆம் ஆண்டு அமெரிக்க நற்செய்தி தூதுப் பணியாட்களினால் வட்டுக்கோட்டை என்னுமிடத்தில் பற்றிக்கோட்டா செமினரி நிறுவப்பட்டு மேலைத்தேய முறைகளுக்கு ஏற்ற வகையில் கல்வி கற்பிக்கப்பட்டது. இதில் கல்வி கற்றவர்களுள் பெரும்பான்மையினர் இந்துக்களேயாவர். அத்துடன் ஆரம்பத்தில் ஒருவர் கிறிஸ்தவராக மாறும்போது அவரின் குடும்பத்தினர் புறக்கணித்தாலும் நாளடைவில் இந்நிலை மாறி வந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் வரலாற்றை நோக்கும்போது இப் பகுதிகளில் பல சமயத்தவர்கள் வாழ்ந்து வந்தமை ஆசிரியர்களினால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இங்கு வாழ்ந்த மக்கள் சமயச் சகிப்புத் தன்மையுடன் ஒற்றுமையாக வாழ்ந்திருக்கின்றார்கள்.

எமது கல்லூரிக்கு அருகாமையில் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக மக்களுக்காகச் சேவை செய்து கொண்டிருக்கின்றது. இங்கு எவ்வித மத வேறுபாடும் இல்லாமல் மக்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். எமது கல்லூரி நிறுவப்பட்டதன் பிரதான நோக்கம் கீழைத்தேச முறைமைகளுக்கேற்பக் கிறிஸ்தவ சமய உண்மைகளை மக்கள் புரிந்து கொண்டு நாம் வாழும் பல்வேறு வகையான சூழல் நிலைமைகளில் மக்கள் எவ்வண்ணமாக இறைவனையும், இறைவனின் செயற்பாடுகளையும் புரிந்துகொண்டு அவ்வகைப்பட்ட நிலைமைகளில் நாம் மனிதகுல மேம்பாட்டிற்காக எவ்வாறு செயற்படவேண்டும், வாழ வேண்டும், வாழ்ந்து பழகவேண்டும். அத்துடன் எதிர்காலச் சந்ததியினருக்கு முன்மாதிரியான வழிகாட்டல்களை வைத்து இருக்க வேண்டும் என்பது தெளிவை ஏற்படுத்துவதேயாகும்.

எமது கல்லூரியில் இலங்கையின் தற்காலச் சூழலில் கிறிஸ்தவர்கள் ஆற்றவேண்டிய பணியே முக்கியப்படுத்தப் படுகின்றது. இதற்குதவும் வகையில் இறைவனின் செயற்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு அமைந்துள்ளது என்பதையே பிரதானமான நோக்கமாகக் கருதிக்கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அனைத்துச் சமய உண்மைகளையும் கற்றுக்கொடுத்து இப்படியான சூழ்நிலையில் மனிதகுல மேம்பாட்டிற்காகச் செயற்படவேண்டிய நிலைமைகளைப் பாடங்களாகக் கற்பித்து வருகின்றோம். இதில் பலவகையான இடர்ப்பாடுகள் இருந்தாலும் அவற்றை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதே மாணவர்களுக்குக் காண்பிக்கப் படுகின்றது. இதன் மூலம் மாணவர்களுக்குப் புதிய வழிமுறைகளை அறிந்துகொள்ளும் ஆற்றல் ஊக்குவிக்கப்படுகின்றது.

இதுவரை எமது கல்லூரியில் இருந்து 36 நபர்கள் பயிற்றுவிக்கப்பட்டுப் பணிக்களங்களுக்கு அனுப்பி வைக்கப பட்டுள்ளனர். எமது கல்லூரியில் 4 - 5 வருடங்கள் தங்கியிருந்து கல்வி கற்குமாறு அன்பர்கள் வேண்டப்படுகின்றனர். பயிற்சி முடிந்ததும் வெளியேறிப் பணியாற்ற வேண்டும். எமது கல்லூரியின் பட்டப்படிப்புச் சான்றிதழை இந்தியாவிலுள்ள செராம்பூர் பல்கலைக்கழகம் வழங்குகின்றது. பரீட்சைகள் யாவும் அவர்களினால் நடாத்தப்படுகின்றன. எமது கல்லூரியில் கல்விகற்றவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வெளிவாரியாகப் படித்துப் பட்டதாரிகளாக வரக்கூடியதாக உள்ளனர். ஏற்கனவே சிலர் அவ்வாறான நிலையில் பட்டதாரிகளாக வந்துள்ளனர். தற்போது 13 மாணவர் கல்வி கற்றுக்கொண்டிருக் கின்றார்கள். எமது கல்லூரியே மாணவர் களுக்கான அனைத்துச் செலவினங்களையும் கொடுக்கின்றது. கல்லூரிக்குப் பொறுப்பாக எமது பேராயரும் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாணத் திருமண்டலப் பரிபாலனக் குழுவினரும் உள்ளனர்.

இன்று எமக்குள்ள உத்தரவாதம் மனிதநேயச் செயற்பாடுகளே ஆகும். மனிதன் இவ்வுலகத்தில் வாழும்போதே அனைத்து வழிகளிலும் விடுதலை பெற்றவனாகச் சுய மரியாதையுடன் வாழவேண்டும். இதற்காகச் செயற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து நிறுவனங்களுடனும் கைகோத்துப் பணியாற்ற நாம் முன்வருவோம். இணுவில் பிரதேசத்தில் எமது குறிச்சி ஒருபகுதியாகும். இப்பகுதியில் பல மதவழிபாட்டு இடங்களும் அமைதியாகச் செயற்பட்டுவருகின்றன. எதிர்காலத்தில் ஒருவரை ஒருவர் வெறுப்புடன் நோக்காமல், மனம்புண்படுமாறு செயற்படாமல் ஒருவரை ஒருவர் மதித்து நடந்து சந்தோஷமாக வாழவேண்டும் என்பதே எமது விருப்பம். இப்படியாக வாழும்போது இறைவனை மகிமைப் படுத்துவோம். நாம் இந்த உலகம் சீரான நிலையில் செயற்படுவதற்காக அனுப்பப் பட்டவர்கள் என்பதனை நினைவில் வைத்துக் கொண்டு வாழப்பழகினால் எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் சாந்தி, சமாதானம், அமைதியுடன் வாழமுடியும்.

அருள்திரு பெஞ்சமின் ஜெயராஜா
விரிவுரையாளர், இறையியல் கல்லூரி,
மருதனார்மடம், இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி, சமயம். சமூகப்பணியில் வரலாறு படைத்த பெண்கள்

எமது இணுவில் கிராமத்தில் பல கல்வியாளர்கள் தமது கல்வி மேம்பாட்டினால் பல சாதனைகளைப் படைத்துச் செந்தமிழையும் சிவநெறியையும் சிறப்பித்து இணுவில் கிராமத்தின் பெருமையை உயர்த்தியது போல இணுவிலின் புத்திரிகளான பெண்கள் பலரும் விழுதுகள் பரப்பி பற்பல நாட்டிலும் இம்மண்ணிலும் சீருடனும் சிறப்புடனும் பணியாற்ற வைத்துத் தாமும் வாழ்வாங்கு வாழ்ந்தனர். இதனால் இணுவில் அன்னை சிறப்படைகிறாள். அன்றைய பெண்கள் இன்று போல் கல்வியில் நாட்டம் கொள்ளவில்லை.

## திருமதி ஆயிலியம் வேலுப்பிள்ளை

முதுபெரும் தமிழ்ச்சைவ நெறியையே தமது செயற் பாடாக வாழ்ந்த இணுவில் மேற்கு மாணிக்கத் தியாகராசா அவர்கள் வள்ளுவன் கூற்றுப்படி தந்தையின் கடமை எதுவென உணர்ந்து புரிந்து வாழ்ந்து காட்டியவர்.

“தந்தை மகற்காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் என்னும் சொல்”

தமது பிள்ளைகள் எல்லோரையும் கல்வியில் அக்கறையோடு ஈடுபடுத்தி அவர்களனைவரையும் சிறப்புற வைத்தார். இவரது மகள் திருமதி ஆயிலியம் வேலுப்பிள்ளை அவர்கள் தமது சகோதரர்களைப் பின்பற்றி நன்கு கற்றுப் பயிற்சிபெற்ற ஆசிரியையாகப் பணியாற்றி இளஞ்சிறார்களை நன்கு அரவணைத்து நற்பழக்கவழக்கம், நற்கல்வி யாவற்றுடன் நற்பண்பையும் ஊட்டிவிட்டதுடன், ஆசிரியையாகி இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபராகி (இணுவில் இந்துக் கல்லூரி) மிகச் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து பெருமை தேடியவர். இவரது பிள்ளைகளும் மிகச்சிறப்புடன் வாழ வகை செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி இரத்தினம் செல்லப்பா

இவர் நன்றாகக் கற்று ஆசிரியப் பயிற்சிக்கலாசாலையில் பயின்று இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையில் (இணுவில் மத்திய கல்லூரி) ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது பிள்ளைகளும் நல்ல நிலையில் இருப்பது பெற்றோர் செய்த கல்வித் தொண்டாகும்.

## திருமதி சிவபாக்கியம் பதஞ்சலி

இவர் பெற்றோர் செய்த தவப்பயனாக இணுவில் மேற்கில் பிறந்து தமது விடாமுயற்சியால் பயிற்சிபெற்ற ஆசிரியையாக இணுவில் சைவ மகாஜனக் வித்தியாலயத்தில் நெடுங்காலமாகக் கற்பித்தவர். தன்னிடம் படிக்கும் எல்லோரும் மேம்பட வேண்டும் என்ற அவாவினால் யாவரையும் நன்கு அரவணைத்து மிகத் திறமை காட்டும் பிள்ளையை உதாரணம் காட்டி எல்லோரும் அப்பிள்ளை போலத் திறமை காட்டவேண்டுமென வற்புறுத்தி அனைவரையும் செயற்படவைத்தார். இவரிடம் கல்வி கற்ற எம்போன்ற பலர் கல்விச்சிறப்புடனும் நற்பண்புடனும் நற் பிரசைகளாகவும் வர உதவியவர். இணுவில் கிராமத்தில் தலைசிறந்த பெரியவர்களில் இவரிடம் படிக்காதவர் கிடையாது. இவரது கணவனும் உடற்பயிற்சி ஆசிரியராகவும் எவருடனும் நட்புடனும் நகைச்சுவையாகவும் பழகியவர். "பிறர்பிள்ளை தலை தடவத் தன்பிள்ளை தானே வளரும்" என்ற முதுமொழிக்கிணங்க இவரது சற்புத்திரர்கள் யாவரும் நற்கல்வி கற்றுத் தமது சேவையால் மிக உன்னத நிலையிலுள்ளனர். இவரது முதல் மைந்தர் ஆசிரிய சேவையாற்றி ஓய்வுபெற்றவர். இவரது ஒரு மகன் கலாநிதிப்பட்டம் பெற்று இலண்டனில் பணியாற்றுகிறார். வேறொரு மகனின் குடும்பம் கலைக்குடும்பமாகச் செழிப்படைந்து இலண்டனில் வசிக்கின்றனர். இக்குடும்பத்தில் ஒரு பெண் பாடகியும் உருவாகி எம்மண்ணில் பல மேடையேறித் தனது மூதாதையர்களைப் பெருமையடையச் செய்தவர். திருமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபாக்கியம் பதஞ்சலி அவர்கள் நூற்றாண்டு விழாவை எதிர் நோக்கி இருந்தபோதும் இன்றும் சிறப்பான தேகாரோக்கியத்துடன் வாழ்வது தெய்வ ஆசியாகும்.

## திருமதி அன்னலட்சுமி சின்னராசா

இவர் இணுவில் தெற்கைச் சேர்ந்தவர். தமிழ்ப்பயிற்சி பெற்ற ஆசிரியையாகிய இவர் இணுவில் இந்துக் கல்லூரியில் அதிககாலம் ஆசிரியப் பணியுடன் தெய்வீகப் பணிகளுமாற்றியவர். தமிழ்ப் பால பண்டிதையான இவர் எந்தமேடையிலும் நற் பண்புடனும் திறமையுடனும் பேசவல்லவர். சமய, சமூகத் தொண்டுகளில் அதிக நாட்டம் மிக்கவர். கணவரும் ஆசிரியராக இருந்ததால் தமது பிள்ளைகளனைவரையும் நற்கல்வி பயில வைத்து அனைவரையும் சிறப்புடன் வாழவைத்து மறுமை அடைந்தவர்.

## திருமதி இராசம்மா (பஞ்சவர்ணம்) ஆனந்தர்

இவர் இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவரது கணவனின் புகழ்பூத்த கல்வி மரபைத் தக்கவைத்தவர். இணுவில் அமெரிக்கன் மிசன் (இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு) பாடசாலையில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். இவரது பிள்ளைகளும் சிறப்புடன் வாழ்கின்றனர். இவரது ஒரு மகன் பொறியியலாளர் ஆவார்.

## திருமதி தங்கேஸ்வரி கந்தையா

இவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்தவர். இவரது கணவரும் ஆசிரியர். சமயப்பற்று மிக்கவர். கோயில்களில் புராணபடனஞ் செய்தவர். திருமதி தங்கேஸ்வரி என்பவர் இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். இவரது முதல் மகன் முதுகலைமாணி வவுனியா வளாகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யாழ் பல்கலைக்கழகம்) ஆங்கில விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார். ஏனைய பிள்ளைகள் யாவரும் ஆசிரியர்கள். பெரும்பான்மையானோர் பட்டதாரிகள்.

## பண்டிதை நாகரத்தினம் தேவராசா

இவர் ஆசிரியப் பணியாற்றியதுடன் தமது திறமையால் ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றியவர்.

## திருமதி சரஸ்வதி ஆறுமுகம்

இவர் இணுவில் தெற்கைச் சேர்ந்தவர். இவர் நெடுங் காலம் சிறந்த பணியாற்றி ஓய்வுபெற்றவர். யாழ் இந்துக்கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் பணியாற்றியதால் தலைசிறந்த கல்வியாளர் களை உருவாக்கியவர். இவரது கணவன் ஆறுமுகம் அவர்கள் சமயப்பற்று மிக்க ஒழுக்கசீலர். ஆசிரியப் பணியுடன் சமயப் பணியிலும் கூடுதலாகத் தன்னை அர்ப்பணித்தார். இக்குடும்பம் கல்விக்குடும்பம் ஆனதாலும் பிறரைக் கல்வியால் செல்வத்தால் வாழ வைத்ததாலும் தமது ஏழு பிள்ளைகளையும் மேன்மையடைந்த பண்பான ஆசிரியர்களாகவும் முதல் மருமகன் கணக்காய்வாளராகவும், கடைசி மருமகன் வங்கியாளராகவும், ஏனைய மருமக்களும் ஆசிரியர்களாகவும் வாய்க்கப்பெற்றவர். கூட்டுக்குடும்பமாக - இப்பகுதியில் முன்மாதிரியான சிறப்புடைய குடும்பமாகத் தமது குடும்பத்தை மிளிரச்செய்த இல்லத்தரசியாக வாழ்வதுடன் பிள்ளைகளான கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆறு.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் (நல்லாசிரியர்), ஆசிரியப் பணியுடன் கொழும்புத் தமிழ்சங்க உதவித் தலைவராகவும் உள்ள ஆறு.குகமூர்த்தி ஆகிய முதற் தரமான சற்புத்திரர்களைப் பெற்றுப் பெரும்பேறு பெற்றவருமாவார்.

## திருமதி புவிநாயகம் செல்லையா

இவர் இணுவையம் பதியில் சிறப்பாக வாழ்ந்த ஆசிரியக் குடும்பத் தலைவி. இணுவில் மத்திய கல்லூரியில் சிறப்பான ஆசிரியப் பணியாற்றிப் பெருமை சேர்த்தவர். பிள்ளைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்சிந்தனை, சிறந்தகல்வி, போதிய வசதிகளும் கொடுத்தவர். இவர்களது இருபிள்ளைகள் வைத்திய கலாநிதிகள். ஒருவர் கல்விசார் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இதனால் இவர்கள் யாவரும் நல்ல பட்டம் பதவிகளில் இருப்பது பெருமைக்குரியதே.

## திருமதி பத்மாசனி வரதராசா

இவர் பண்டிதர் வித்துவான் சைவப்புலவர் இ.திருநாவுக்கரசு அவர்களின் மூத்த புத்திரி. M.Sc பட்டம் பெற்றவர். தற்போது வவுனியா விவசாயக் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றுகிறார்.

## திருமதி பரமேஸ்வரி கருணானந்தராசா

இவர் M.A பட்டம் பெற்றவர். யாழ் பல்கலைக்கழகத்தில் பிரதம நூலகராகக் கடடையாற்றுகிறார்.

## செல்வி ஸ்ரீகாந்தலக்சுமி அருளானந்தம்

இவர் M.Sc பட்டம் பெற்றவர். யாழ் பல்கலைக்கழகத்தில் முதுநிலை உதவி நூலகராகப் பணியாற்றுகிறார். கடின உழைப்பும் கல்வி ஆழமும் மிக்கவர். "சீரிணுவைத் திருவூர்" என்னும் இந்த மலரில் நூல் நிலையங்கள் பற்றிய ஒரு விரிவான ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ளார். இன, மத, தேசப்பற்றும் நக்கீர நடுவுநிலைமையுங் கொண்டவர்.

## பண்டிதை வைகுந்தம் (பூங்கொடி) கணேசபிள்ளை

இவர் இணுவில் தெற்கில் பிறந்து வளர்ந்து வாழ்பவர். இவர் இணுவில் இராமநாதன் கல்லூரி, முழங்காவில் மகா வித்தியாலயம் போன்ற கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இணுவில் இராமநாதேஸ்வரர் ஆலயத்தின் திருவூஞ்சல், பரராச சேகரப்பிள்ளையார் "வேலவர் ஏசல்" போன்ற பிரபந்தங்களைப் பாடியவர். தெய்வபக்தி மிக்கவர். தேர்ச்சிமிக்க சொற்பொழிவாளர். இவர் கணவர் தையிட்டியைச் சேர்ந்த பண்புமிகு ஆசிரியர். இணுவில் சைவப்பிரகாச ம.வி (இணுவில் இந்துக் கல்லூரி) உப அதிபர். ஏகபுத்திரன் சசிகுமார் B.Sc பட்டதாரி. இணுவில் பொது நூலகத்தில் முன்னாள் தலைவராகமிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிதை தனலக்சுமி மகாலிங்கம்**

இவர் சுதுமலையில் பிறந்து இணுவில் கிழக்கில் வாழ்பவர். தமிழ் இலக்கண அறிவில் சிறந்து விளங்கி அனேக உயர் கல்வி மாணவர்களுக்குத் தமிழைப் புகட்டி வருபவர். சிறந்த இறைபக்தை. சைவசமயப் பற்றும் ஞானமும் மிக்க இவர் சில சைவசமயப் பாட நூல்களை எழுதியுள்ளதாக அறியமுடிகிறது. இவர் கணவர் மகாலிங்கம் சிறந்த பேச்சாற்றல் மிக்க கூட்டுறவு இயக்கப் பிரமுகராவார்.

## சமூகசேவையில் பங்களிப்பு

**திருமதி கு.செல்வலட்சுமி J.P**

இவர் நாட்டுப் பாடல்களைப் பாடிப் புகழ்படைத்த தம்பையாவின் பேர்த்தியாவார். இவர் இணுவில் கிழக்கு மாதர் சங்கத் தலைவியும், ஐக்கிய நாணய சங்கச் செயலாளரும், இணுவில் சைவத் திருநெறிக்கழக உபதலைவியும், கைதடி வயோதிபர் இல்ல ஆலோசகராகவும் மற்றும் பல பொது நிறுவனங் களிலும் சிறப்பாகப் பணியாற்றுகிறார். இணுவில் கிழக்குப் பகுதியில் சிறந்த சமூகசேவகி என்ற காரணத்தினால் சமாதான நீதவான் பட்டம் இவரை அறியாமலே கிடைத்தது. இவரது உன்னத சேவை இவ்வூரில் சமூக மேம்பாட்டுடன் மட்டுமன்றி இணுவில் சிவகாமி அறநெறிப்பாடசாலை மாணவர்களை கோயில் பஜனை, கூட்டுப்பிரார்த்தனையில் வழிநடத்திச் செல்லுவதாகவும் அமைகிறது. இவர் சிறப்பாகத் திருமுறைகளைப் பண்ணோடு பாடவல்லவருமாவார்.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் மத்திய நூலகம்

## தகவல் யுகமொன்றில் சுடர்விடும் நம்பிக்கை ஒளி

அன்பும் அறநெறியும் ஆன்மீக வாழ்வும் இணைந்ததோர் அற்புதமான ஊர் இணுவையூர். உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர். எழுத்தறிவித்தவன் இறைவனாவன் என்ற இரு வாக்குகளுக்கும் ஏற்ப உழவுத்தொழிலையும், கற்பித்தல் பணியையும் பிரதான தொழில்களாகக் கொண்டவர்கள் இம்மக்கள். படிப்பறிவை விடப் பட்டறிவிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இம்மக்கள் நூலுணர்வு மிக நிரம்பப்பெற்றவர்கள். இவர்களது நூலுணர்வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகக் கோவில்கள் மட்டுமன்றிச் சுருட்டுக்கொட்டில்கள் கூட இருந்திருக்கின்றன என்பதை நடமாடும் எடுத்துக் காட்டுக்களாக விளங்கும் சமூகத்தின் மூத்த உறுப்பினர்களைப் பார்த்து அறிந்துகொள்ள முடியும். பாடசாலைப் பக்கம் எட்டிப்பார்க்காதவர்கள் அல்லது எட்டிப்பார்க்கும் வசதியற்றவர்கள் கூடத் திருக்குறள் போன்ற சமய நூல்களையும் செவிவழிப் பெறுவதற்கான சிறந்த சொற்பொழிவுக் கூடங்களாக சுருட்டுக்கொட்டில்கள் மாறியமையை வாய்மொழி வரலாறு எமக்கு எடுத்தியம்புகிறது.

மாறிவரும் சமுதாயமானது, ஆறஅமர இருந்து நல்லவை தீயவற்றை அறிந்து தீயவற்றை விலக்கக்கூடிய அறிவையோ அதற்கான நேர அவகாசத்தையோ கொடுக்கமுடியாத அளவிற்குப் பரபரப்பு மிக்கதாகவும் இயந்திர மயப்பட்டதாகவும் இருப்பதானது புதிய தலைமுறையினரின் அறிவுத் தேடலிலும் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இது நூலுணர்வு மிக்க எமது சமூகத்தின் புதிய தலைமுறையினரின் தேடலுணர்வையும், கணிசமானளவு பாதித்துள்ளதை மறுக்கமுடியாது. இம்மண்ணில் உருவாகும் பொதுநூலகமானது இத்தேடலுணர்வை அதிகரிக்கும் பிரதான களமாக மாறும் என்ற பேரவாவின் வெளிப்பாடே இக்கட்டுரையாகும்.

### அறிமுகம்

நூலகங்களை பொதுநூலகங்கள், கல்விசார் நூலகங்கள், சிறப்பு நூலகங்கள் என மூன்று பெரும்பிரிவாக வகைப்படுத்த முடியும். இதில் மக்களுக்காக மக்களால் மக்களே முன்னின்று நடத்துவன பொதுநூலகங்கள் எனப்படும். இலங்கையில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் நிதியினைப் பெற்று மாநகர சபை, நகரசபை, பிரதேசசபை மட்டத்தில் இயங்கும் நூலகங்கள், கிராம மட்டத்தில் கிராம மக்களின் ஒன்றிணைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியினால் உருவாக்கப்பட்டு அவற்றின் தனிப்பட்ட நிதியினால் இயங்கும் நூலகங்கள், சனசமூக நிலையங்களின் ஒரு பிரிவாக இயங்கும் நூலகங்கள் என்பன பொதுநூலகங்கள் என்ற வரையறைக்குள் வருகின்றன. நவீன சமுதாயத்தின் முக்கிய அம்சமாகக் கருதப்படும் பொது நூலகங்கள் சமூகத்தின் நாளாந்தச் செயற்பாடுகளில் மிக முக்கியத்துவம் வகிக்கின்ற சமூக நிறுவனங்களாகும். சமூகத்தின் கலாசார நிலையங்களாகச் சேவையாற்றும் இந்நிறுவனங்கள் சமூக அங்கத்தவர்களை இன, வயது, மொழி, மத வேறுபாடின்றி ஒன்றிணைக்கும் நிலையங்களாகக் காணப்படுகின்றன. இவை ஏனைய கல்விசார், விசேட நூலகங்கள் போன்று குறிப்பிட்ட வாசகர் பிரிவுக்குச் சேவை செய்வன அல்ல. சிறுவர், மாணவர், முதியவர், பெண்கள், வலுக்குன்றியோர், ஆசிரியர், ஆராய்ச்சியாளர் போன்ற சமூகத்தின் அனைத்து மட்டத்தினரும் சேவை செய்யவேண்டிய கடமைப்பாடு உடையது பொது நூலகமாகும்.

சர்வதேச நூலகச் சங்கங்களின் சம்மேளத்தினால் (IFLA) மீளாய்வு செய்யப்பட்ட யுனெஸ்கோவின் அறிக்கைப்படி பொதுசன நூலகங்களின் குறிக்கோள்களும் இலக்குகளும் பின்வருமாறு அமைகின்றன.

(1) **கல்வி சார்ந்தவை**

எந்தவொரு கல்விமட்டத்திலும் தனிப்பட்டவர்களதும் குழுவினதும் சுயமுன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதன் மூலம் தனிநபருக்கும் அறிவிற்கும் இடையிலான இடைவெளியை இல்லாமல் செய்தல், தனிநபர் ஒருவருக்கான கல்வி நிலையமாக பொதுநூலகங்களின் பண்பாட்டை மேம்படுத்தல், முறை சார்ந்த கல்விச் செயற்திட்டங்களுக்கு உதவுதல், சிறப்புத் தகவல் வளங்களின் உருவாக்கத்தை மேம்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) தகவல் சார்ந்தவை

தனிநபருக்கு அல்லது குழுவிற்குச் சரியான தகவலை வேகமாகவும் நடப்பு விவகாரங்களுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை மிக விரைவாகவும் வழங்குதல், பொது நூலகங்களின் பயன்பாட்டைத் தகவல் நிலையங்களின் தரத்துக்கு உயர்த்துதல், சிறப்புத் தகவல் வளங்களுக்கான ஆற்றுப்படுத்தும் நிலையங்களாகப் பொதுநூலகங்களின் பயன்பாட்டை மேம்படுத்தல், கலாசார வாழ்வின் ஆதார நிலையங்களில் ஒன்றாக வளர்த்தெடுத்தல், அனைத்துக் கலைகளிலும் பங்கெடுத்தலும் அவற்றைப் பேணுதலும்.

(3) கலாசாரம் சார்ந்தவை

தனிநபர் ஒருவர் கலைகளில் பங்கெடுக்கக்கூடிய வகையிலான நிலையங்களாகப் பொதுநூலகங்களின் பயன்பாட்டை மேம்படுத்தலும் ஊக்குவித்தலும், கலாசார நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பவர்களாகவும் அவற்றின் ஒழுங்கமைப்பாளர்களாகவும் பொதுநூலகங்களின் பங்கை ஊக்குவித்தல், ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் கழிக்கும் விதத்தில் உள்ளூர்ச் சமூகங்களையும், கலாசார நிறுவனங்களையும் இணைத்து வைக்கும் பொறுப்பு மிக்கவைகளாகப் பொதுநூலகங்களை ஊக்குவித்தல், உள்ளூர் நிறுவனங்களுக்கும் கலாசார நிறுவனங்களுக்கும் சிறப்பு நூலகமாகப் பொது நூலகங்களின் பாவனையை மேம்படுத்தலும் ஊக்குவித்தலும், கலாசார தகவல் நிலையங்களாகப் பொது நூலகங்களின் பயன்பாட்டை மேம்படுத்தலும் ஊக்குவித்தலும் என்பன.

(4) ஓய்வு சார்ந்தவை

ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிப்பதை ஊக்குவித்தலும் புத்தாக்கத்துக்கான தகவல் வளங்களை வழங்குதலும், தனிப்பட்டவருக்கும், தனிநபருக்கும், தேவைப்-படும் பொழுதுபோக்குச் சாதனங்களின் வழங்கலை மேம்படுத்தல், சமூகத்திலுள்ள சிறப்புக் குழுக்களின் ஓய்வுக் காலத் தகவல் வழங்கலை மேம்படுத்தல் போன்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் முக்கிய தொழிற்பாடுகளை ஆற்றவேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

- முறைசாராத வளர்ந்தோர் கல்விக்கான முகவர் நிலையங்களாகச் செயற்படல்.
- சுயகல்விக்கான முகவர் நிலையங்களாகத் தொழிற்படல்.
- கூட்டுறவு முறையில் கலாசார அனுபவங்களையும் ஜனநாயக வாழ்வையும் விருத்திசெய்தல்.
- தற்காலத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அனைத்து விவகாரங்கள் நெருக்கடிகள் தொடர்பான தகவல்களை வழங்குதல்.
- சனசமூக நிலையங்களாகத் தொழிற்படல்.
- சமூகரீதியில் பயனுள்ள ஒரு நிறுவனமாகவும் கலாசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனமாகவும் தற்கால உலகியல் மாற்றங்களை அலசும் இடமாகவும் இருத்தல்.
- பொதுமக்கள் சார்ந்த நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் ஒரு சந்திப்பிடமாகத் தொழிற்படல்.
- பொது, சிறப்பு நிகழ்வுகள் தொடர்பான நூல்களின் பட்டியல்களைக் காட்சிக்கு வைத்தல்.
- பிரபலமான நபர்களின் பேச்சுக்கள், விரிவுரைகள், திரைப் படக்காட்சிகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதனூடாக விரிவாக்க நிலையமாகத் தொழிற்படல்.
- உசாத்துணைச் சேவைகள், சிறுவர்களுக்கான சேவைகள், நூலுருவற்ற சாதனங்களின் சேவைகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தல்.
- பௌதிக ரீதியிலான அனைத்துத் தடைகளையும் உடைத்து அனைத்துத் தகவல் வளங்களையும் வாசகர் அணுகக் கூடியவாறு வழிசமைத்தல்.
- சமூகத்தின் நிகழ்காலத் தேவைகளையும் இனித் தேவைப் -படுமென எதிர்பார்க்கப்படும் தேவைகளையும் பிரதி பலிக்கும் நிலையமாகத் தொழிற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு தனிமனிதனும் தனது தேவைகளுக்கும் ஆர்வங்களுக்கும் ஆற்றல்களுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் ஆய்வு, தனிநபர் கலாசாரம் என்பவற்றுக்கான நிலையமாகத் தொழிற்படல்.
- உயிரூட்டம்மிக்க, சமூகரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட உத்திகளின் உருவாக்க சக்தியாகத் தொழிற்படல்.
- பாடசாலைகள், கல்லூரிகள் என்பவற்றின் முறைசார்ந்த கல்விக்கு உதவும் நிலையமாக இருத்தல்.
- வாசிப்புப் பழக்கத்தை விருத்திசெய்யும் நிலையமாகத் தொழிற்படல்.

ஒரு கிராமப் பொது நூலகமாகத் தோற்றம் பெறும் இணுவில் பொது நூலகமானது முழுக்க முழுக்கக் கிராமத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபடும் சமூக உறுப்பினர்களின் ஆதரவுடன் இயங்கப்போகும் ஒரு சமூக நிறுவனம் என்ற பெருமையைப் பெறுகிறது. மேலே குறிப்பிட்ட தொழிற்பாடுகளின் அடிப்படையில் இந்நூலகம் தனது மக்களுக்கு ஆற்றக்கூடிய பணிகளைக் கீழைத்தேச நூலகவியலின் தந்தை எனப் போற்றப்படுகின்ற பேராசிரியர் எஸ்.ஆர்.இரங்கநாதனின் சிந்தனையில் உதித்து உலகம் முழுவதும் போற்றப்பட்டுப் பின்பற்றப்பட்டுவரும் நூலகவியலின் தலைசிறந்த விதிகளின் அடிப்படையில் ஆராய்வது பொருத்மானதாகும்.

**நூல்கள் பாவனைக்கே**

புகழ்பெற்ற இந்த முதலாவது விதி பரந்துபட்ட கருத்து நிலைகளைக் கொண்டது மட்டுமன்றி பின்னால் வருகின்ற நான்கு விதிகளுக்குமான அடிப்படையாகவும் விளங்குகின்றது. நூல்கள் படிப்பதற்கேயன்றி பத்திரமாய் அலுமாரிகளில் பூட்டிப் பாதுகாப்பதற்கு அல்ல என்பதே இவ்விதியின் அடிப்படை வேதம் ஆகும். இதற்குக் காரணம் உண்டு. எம்மவர் மத்தியில் ஏனைய அலங்காரப்பொருட்களைப் போன்றே நூல்களை அழகாக அடுக்கி வைக்கும் மனப்பான்மையும் படித்தவர் நாம் என்ற அந்தஸ்தை வெளிப்படுத்துவதற்கான குறியீடாக நூல்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதும் தன்மையும் உண்டு. மட்டுப்படுத்தப்பட்ட நிதி, நூல்கள் பழுதடைந்துவிட்டால் ஏற்படும் நிர்வாகச் சிக்கல்கள், நூலுணர்வு சிறிதுமற்ற நூலகப் பணியைச் சேவையாகக் கருதாத தொழிலாக மட்டுமே பார்க்கின்ற நூலக அலுவலர்களின் மனப்பான்மை போன்ற அம்சங்கள் நூல்கள் பயன்படுத்த அல்ல பாதுகாப்பதற்கே என்ற மனப்பான்மை தோன்றக் காரணமாக உள்ளன. கண்ணாடி அலுமாரிகளிலும் இரும்பு அலுமாரிகளிலும் பத்திரமாய்ப் பூட்டி வைக்கும் இத்தன்மையின் சாட்சிகளாக எம் கண்முன்னே காணும் பெரும்பாலான பாடசாலை நூலகங்களும் பொது நூலகங்களும் இருப்பது கண்கூடு. "பெரிய நூலகமென்பது நூலகத்தின் கட்டடத்தின் அளவாலோ, அங்குள்ள நூல்களின் எண்ணிக்கையாலோ கணிப்பிடப்படுவதில்லை. அந்த நூலகத்தில் எத்தனை நூல்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதன் அடிப்படையிலேயே நூலகத்தின் பருமன் அளவிடப் படுகிறது" என்ற கவி தாகூரின் கருத்து இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். நூல்கள் சரியான பயன் பாட்டைப் பெறுவதற்குப் பின்வரும் அம்சங்கள் முக்கியமானவை.

✡ **நூலகத்தை அணுகுவதற்கான சூழல்**

கிராமத்து மக்கள் அனைவரும் பாரபட்சமின்றி இலகுவாக அணுகத்தக்க வகையில் மத்திய அமைவிடம் ஒன்றில் நூலகம் அமைந்திருத்தல் மிக முக்கியமானதாகும். கட்டடம் சிறிதெனினும் கவர்ச்சி அதிகம் நிரம்பியிருத்தல் கண்களுக்கு ஈர்ப்பைக் கொடுக்கும். திறந்த இறாக்கைகளில் தமக்கு வேண்டியவற்றை அவசர அவசரமாகத் தேடும் வாசகர்கள், பத்திரிகையில் மூழ்கியிருப்போர், நூல்களை இரவல் பெற முகப்பு மேசையில் காத்திருப்போர், நூல்களுக்குள் தம்மை மறந்திருப்போர் என்ற நூலகத்தின் உட்பகுதியில் காணும் சுறுசுறுப்பான சூழலொன்றை வெளிக்காட்டக்கூடிய வகையில் நூலகத்தின் முகப்புப் பகுதியில் கண்ணாடி ஜன்னல்கள் பொருத்தப்படின் நூலகத்துக்குள் நுழை -வதற்கான ஒரு தூண்டலை அது ஏற்படுத்தும். நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது படித்த மேதாவிகளுக்கு மட்டுமே உரியது என்ற எண்ணப்பாங்கு எம்மவர் மத்தியில் இருப்பதனால் நூலகத்தில் நுழைவதற்குப் பெரும்பாலானோருக்குத் தயக்கம் இருப்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

✡ **நூலை அணுகுவதற்கான சூழல்**

திறந்த இறாக்கைகளில் நூல்களை ஒழுங்குபடுத்தி வைத்தல், நூல்கள் வைத்திருக்கும் பகுதிக்கு வாசகரை அனுமதித்தல், சுதந்திரமான முறையில் அவர்கள் விரும்பிய நூல்களைத் தேடி எடுக்க அனுமதித்தல், உதவி தேவைப் படுமிடத்து வழிகாட்டல், வாசிப்பு அறைக்கு எடுத்துச் சென்று வாசிக்கவோ அல்லது இரவல் பெற்றுச்சென்று படிக்கவோ உரிமையளித்தல் என்பவற்றைக் கவனத்தில் கொள்வதன் மூலம் இதற்கான சூழலை ஏற்படுத்தலாம். மிக விலையுயர்ந்த நூல்கள், கிடைத்தற்கரிதான நூல்கள், சிறுநூல்கள், புகைப்படங்களை உள்ளடக்கிய நூல்கள் போன்றவற்றை மூடிய இறாக்கைகளில் பேணலாம்.

✡ **படிப்பதற்கான சூழல்**

ஒரு பொது நூலகமானது ஆகக்குறைந்தது ஆறஅமர்ந்து படிப்பதற்கான ஒரு பகுதி, இரவல் பெற்றுச் செல்லும் நூல்களை அடுக்கி வைப்பதற்கான ஒரு பகுதி, வாசகர் -களுக்கு வேண்டிய நூல்களைப் பெற்று அவர்கள் அவற்றை இலகுவாகப் பயன்படுத்தும் வகையில் அவற்றை ஒழுங்கமைப்பதற்கான நிர்வாக அலுவல்களை மேற்கொள் -வதற்கான ஓர் அறை, நூல்களை இரவல் பெற்றுச் செல்வதற்கான ஒரு முகப்பு, மேசைப்பகுதி என்பவற்றைக் கொண்டிருத்தல் அவசியமாகும். நின்ற நிலையில் கையை உயர்த்தி எடுக்கக்கூடிய வகையில் நூல் இறாக்கைகளும், முதுகுவலியை ஏற்படுத்தாத வசதியான கதிரைகளும், படிப்பதற்கு வசதியான மேசைகளும், நூலகத்துக்குள் அமர்ந்து படிக்கும் ஆர்வத்தைத் தரும். செயற்கையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியையும், காற்றோட்ட வசதியையும் விட கண்களை உறுத்தாத இயற்கை ஒளியும், உஷ்ண நேரங்களில் தேவைப்படும் இயற்கையான காற்றோட்ட வசதியும் வாசகனின் படிக்கும் மனோநிலையை மேலும் அதிகரிக்கும் வல்லமை பெற்றவை. கண்களை உறுத்தாத மெல்லிய சுவர்ப்பூச்சு வாசகனது சிந்தனைக்கு இடையூறு ஏற்படுத்தாது. சமூக உறுப்பினர்களின் முக்கிய ஒன்று கூடல்கள், கூட்டங்கள், கருத்தரங்குகள், வாசிப்பு வட்டங்கள் என்பவற்றை நூலகமே ஒழுங்குபடுத்தக்கூடிய வகையில் கருத்தரங்கு மண்டபம் ஒன்றும் இருக்குமாயின் சமூக உறுப்பினர்களின் நூலுணர்வைக் கூட்டுவதற்கான மிகச் சிறந்த வாய்ப்பு இதைவிட வேறொன்றும் இல்லை.

## ஒவ்வொரு வாசகனுக்குமுரிய நூல்

முதலாவது விதியானது நூல்களின் பயன்பாட்டை முக்கியத்துவப்படுத்தும் அதேசமயம் இரண்டாவது விதியானது நூலகத்தில் வாசகனை மையப்படுத்துகிறது. நூலகத்தினைத் தற்போது பயன்படுத்தும் வாசகன் மட்டுமன்றி இணுவில் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தவரதும் வயது, பால், கல்வித்தரம், அவர்களின் ஆய்வுத்துறை என்பவற்றை ஆய்வு செய்து பெறப்படும் தகவல்களினூடாக இனி வரலாம் என எதிர்பார்க்கப்படும் வாசகனையும் இலக்கு வைத்து நூலகத்துக்குக் கொள்வனவு செய்யப்பட வேண்டிய நூல்களைப்பற்றி விளக்குகிறது.

☺ வாசகர் தரம்

பொதுவாகவே நூல்கள் தகவலைத் தருபவை, புத்துயிர் தருபவை, உயிரூட்டுபவை என மூன்று வகைப்படும். பொது நூலகத்தின் வாசக பிரிவினர் சிறுவர் முதல் முதியோர் வரை பலதரப்பட்டவர்களாக இருப்பதனால் இம்மூன்று வகை நூல்களும் இங்கு இடம்பெறுதல் அவசியமாகும். சமூக உறுப்பினர்களால் எழுதப்பட்டுப் பதிப்பிக்கப்படாத கையெழுத்துப் பிரதிகள் முதற்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கணினி உலகில் நின்றுபிடிக்கத்தக்க இணையத் தகவல் வரை நூலகம் உள்ளடக்குவதன் மூலமே அனைத்து மட்ட வாசகருக்குமான சேவையை வழங்கமுடியும்.

☺ **நூல் தெரிவு**

நூலின் தலைவிதியானது அதைப் பயன்படுத்தும் வாசகனது கரங்களிலேயே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்பதை வலியுறுத்தும் இவ்விதியானது வாசகனுக்குப் பொருத்தமற்ற நூல்களைத் தேவையற்ற முறையில் பணத்தைக் கொட்டித் தெரிவு செய்வதை வன்மையாக எதிர்க்கிறது. வாசகனுக்குப் பொருத்தமற்ற நூல்கள் அன்பளிப்பாகக் கொடுத்தால்கூட வாங்குவது தவிர்க்கப்படல் வேண்டும். அதுபோல் ஏற்கனவே நூலகத்தில் இருக்கும் நூல்களும் பொருத்தம் அற்றவை எனக் கண்டால் அவற்றை உடனே அதற்குப் பொருத்தமான இடத்திற்குக் கொடுத்து அங்கிருந்து பெறக் கூடிய பொருத்தமான நூல்களைப் பரிமாற்று அடிப்படையில் பெறுவதை இவ்விதி ஊக்குவிக்கிறது. எனவே இங்கு நூல்தெரிவு, நூல் நீக்கம் என்ற அறிவுசார் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இணுவில் பொது நூலகத்திற்கு நூல்களைத் தெரிவுசெய்யும்போது,

- இணுவில் கிராமம் பற்றியும் அதன் தகவல் தேவை பற்றியும் அறிந்துகொள்ளுங்கள்.

- சிறுவர்க்குத் தேவையான பொது அறிவு நூல்கள், கதைப்புத்தகங்கள், குடும்பத தலைவியருக்குத் தேவைப்படும் மனைப்பொருளியல் சார்ந் நூல்கள், மாணவர்க்குத் தேவைப்படும் பாடவிதானம் சம்பந்தப் பட்ட நூல்கள் என்பவற்றுடன் புத்துயிரூட்டக்கூடிய நூல்கள், கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், ஆண்டு நூல்கள் போன்ற பொது உசாத்துணைச் சாதனங்கள் போன்ற வாசகனின் தகவல்தேவை தொடர்பான அனைத்துப் பொருட்துறைகளும் சேகரிப்பில் உள்ளடக்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உள்ளூர் வரலாறு தொடர்பான நூல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்.

- தெரிவில் பாரபட்சநிலை பேணப்படுவதைத் தவிர்த்தல்.

- தாய்மொழியில் எழுதப்பட்ட நூல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்.

- புனைகதை, வாழ்க்கை வரலாறு, பிரயாணங்கள் நாடகம், கவிதை, நுண்கலைகள், சமயம் போன்ற உணர்வுசார் பொருள்துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல்.

- நூல்களைத் தவிரப் பருவ இதழ்கள், சிறுநூல்கள், உசாத்துணைச் சாதனங்கள், அரசாங்க வெளியீடுகள், அறிக்கைகள், நூலுருவற்ற சாதனங்கள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல்.

- கிராமம் தொடர்பாக வெளிவந்த செய்திகள், கட்டுரை -களைச் சேகரித்தல்.

- நூலகக்குழு, அலுவலர்கள் என்போருடன் வாசகரது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படல் என்பன கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**ஒவ்வொரு நூலுக்குமான வாசகன்.**

இவ்விதியானது பொது நூலகம் ஆற்றவேண்டிய சேவைகளின் மூலம் நூலகத்தில் உள்ள நூல்கள் ஒவ்வொன்றுக்குமான வாசகரைத் தேடிப்பிடிப்பதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. வயது, பால், தொழில், கல்வித்தரம், அந்தஸ்து போன்ற எந்த வேறுபாடுமின்றிப் பொது நூலகமானது சமூகத்தின் அனைத்து மட்டத்தினருக்கும் சேவைசெய்ய வேண்டுமாயின் வாசகர் நூலகம் நோக்கி நகர்வதற்குப் பதிலாக நூலகம் வாசகரை நோக்கி நகர்தல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✠ சமூக உறுப்பினர் ஒவ்வொருவரிடையேயும் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்குதல் இன்றைய உலகில் ஒரு நூலுக்குப் பல வாசகர் என்றால் அது களிப்பூட்டும் கதைப் புத்தகமாகவே இருக்கமுடியும். பொது நூலகங்களும் கூட வாசகர் தொகையை அதிகரிப்பதற்கான சிறந்த உத்தியாக இதைப் பயன்படுத்துகின்றன. ஆனாலும் சரியான அறிவுத்தேடலை நோக்கி ஒரு சமூகத்தை வழிநடத்துவதற்குக் கல்விபெற, தகவலைப்பெற, அகத் தூண்டலை ஏற்படுத்தப் புத்துயிரூட்ட உதவக்கூடிய வகையில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். எங்கிருந்து இதைத் தொடங்கலாம் என்ற வினா எழும்பும்போது மனிதவாழ்வின் ஆராய்வூக்கம் மிக அதிகமாக இருக்கும் குழந்தைப்பருவமே அறிவுத் தேடலைச் சரியாக வழிப்படுத்துவதற்கான பிரதான களமாக இருக்க முடியும். சமூக மேம்பாட்டுக்கு அத்தியாவசியமானது சுயமாகக் கற்றல். சிறுவர்கள் மூலமே இதனைச் செயற் படுத்திக்காட்ட முடியும். இந்த வாய்ப்பை வழங்கக்கூடிய ஒரே நிறுவனம் பொதுநூலகம் மட்டுமே.

✠ சிறுவர்க்கான கதைநேரங்களை ஒழுங்குபடுத்தல். படிப்பதை விடக் கதை கேட்பதில் அதிக நாட்டமுடையவர்கள் சிறுவர்கள். எனவே சிறுவர்க்கான கதைப்புத்தகங்கள் பொழுதுபோக்கு நூல்களை வாங்குவது மட்டுமன்றி அவற்றை அவர்கள் பயன்படுத்துவதற்கான தூண்டலை ஏற்படுத்துவது முக்கியமானதாகும். இதற்குச் சிறுவர்க்கான கதை நேரங்களை ஒழுங்குபடுத்தல் மிகச் சிறந்த வழிமுறையாகும்.

✠ சமூக உறுப்பினரின் பொருள் ஆர்வத்துறைகளை இனங் கண்டு அவை ஒவ்வொன்றிற்குமான வாசிப்பு வட்டங்களை உருவாக்குதல்.

✠ உள்ளூர் கல்வி நிறுவனங்கள் மத, சமூக நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்தி அவர்கள் மேற்கொள்ளும் கருத்தரங்குகள், பொதுச் சொற்பொழிவுகள் என்பவற்றுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான இடத்தை நூலகமே வழங்குவதனூடாக வாசகரை நூலகத்தின்பால் ஈர்த்தல்.

✠ நூலகத்தின் செயற்பாடுகள் பற்றிய விபரங்களைக் காலத்துக்காலம் செய்திக்கடிதங்களாகவோ, செய்தித் தாள்களில் கட்டுரைகளாகவோ வெளியிடுதல்.

✠ சமூகத்தின் கல்வித்தரம் வாய்ந்தவர்களை அணுகி நடைமுறை விவகாரங்களுடன் தொடர்பான பொருட் துறை சார்ந்த சொற்பொழிவுகளை ஒழுங்குபடுத்தும் அதேசமயம் அச்சொற்பொழிவுடன் தொடர்பான நூல்களைக் காட்சிக்கு வைத்தல்.

✠ வேலைக்குச் செல்லும் உறுப்பினர்களைக் கருத்திற் கொண்டு அனைத்து மட்ட உறுப்பினரும் தாம் விரும்பிய நேரம் நூலகத்தைப் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் நூலக சேவை நேரத்தை அதிகரித்தல்.

✠ இடையிடையே நூலக வாரங்களைக் கொண்டாடுவதன் மூலம் நூலகங்களின் அமைப்பு, நடைமுறை, பணிமுறை, பயன்பாடு என்பன பற்றித் தெரியாமல் அல்லது தெரிந்து கொள்ள இயலாமல் இருக்கும் சமூக உறுப்பினர்களிடம் அது பற்றிய அறிவை ஏற்படுத்தல்.

## வாசகர் நேரம் பேணுக

✪ **ஒழுங்கமைப்பு**

நூல்கள் இலகுவான முறையில் எடுக்கத்தக்கவாறு ஒழுங்கமைக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தும் இவ்விதியானது நூலகத்தின் உள்ளகச் செயற்பாடுகளில் அதிக கவனஞ் செலுத்துகிறது. பகுப்பாக்கம் என்ற செயற் பாட்டின் மூலம் ஒரு பொருட்குறை சார்ந்த நூல்களை ஒரே இடத்தில் ஒழுங்குபடுத்துவதும் பட்டியலாக்கம் என்ற செயற்பாடு மூலம் வாசகன் ஒருவன் தனக்குத் தேவையான நூல்களை நூலாசிரியர் ரீதியாகவோ அல்லது நூலின் தலைப்பு சார்ந்த அதுவுமன்றி பொருட்டுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்தோ தேடிக்கண்டுபிடிக்கக்கூடிய வகையிலான ஒழுங்கமைப்பை மேற்கொள்வதையும் அதுகோரி நிற்கிறது.

✪ உசாத்துணைச் சேவை

வாசகனையும் அவனுக்குப் பொருத்தமான நூலையும் பொருத்தமான முறையில் பொருத்தமான நேரத்தில் இணைத்துவிடும் ஆற்றல் நூலகருக்கு இருக்கவேண்டும். நூலுணர்வும் ஒவ்வொரு வாசகனையும் மனங்கோணாமல் முகமலர்ச்சியுடன் வரவேற்கும் பாங்கும் உலக அறிவுத் துறைகள் தொடர்பான பரந்த அனுபவமும் இருந்தால் மட்டுமே பொருத்தமான முறையில் வாசகனையும் அவனுக்குத் தேவைப்படும் நூலையும் இணைத்துவிட முடியும். "வாசிக்க வருபவரின் வருகையை ஏற்றும், மரியாதை காட்டி அவருக்கு இருக்கை தந்தும், ஆசித்த நூல் தந்தும், புதிய நூல்கள் அழைத்திருந்தால் அதை உரைத்தும், நாளும் நூலை நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம் நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும் மாசற்ற தொண்டிழைப்பீர். சமுதாயச் சீர் மறுமலர்ச்சி கண்டதென முழக்கம் செய்வீர்." என்ற புரட்சிக்கவி பாரதிதாசனின் உணர்ச்சி வரிகள் நூலகரின் முக்கியத் -துவத்தை விளக்குவதற்குப் போதுமானவையாகும்.

## நூலகம் வளர்ந்துவரும் ஒரு நிறுவனமாகும்.

நூலகம் என்பது நூல்கள், வாசகன், நூலகர் என்ற மூன்று மூலக்கூறுகளைக் கொண்ட முப்பரிமாண உலகிலுள்ள அனைத்துமே இயங்குசக்தி உள்ளவை என்ற வகையில் இந்த மூன்று மூலக்கூறுகளும் வளரும்போது நூலகமும் வளரும். எனவே நூல்களின் அதிகரிப்பு வாசகரது அதிகரிப்பு நூலக அலுவலகர்களின் அதிகரிப்பு என்பவற்றுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நூலகக் கட்டடம் இருக்கவேண்டும் என்பதுடன் எதிர் காலத்தில் விரிவாக்கக்கூடிய வகையில் கட்டட அமைப்பை இப்போதே திட்டமிடுதலை அது குறித்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

ஒரு சமூகத்தின் பெருமை அச்சமூகத்தின் இயற்கை வளத்தாலோ அல்லது செல்வ வளத்தாலோ கணிக்கப்படுவதில்லை. மனித ஆற்றல், சிந்தனை ஆற்றல் என்ற இரண்டாலுமே ஒரு சமூகத்தின் மேன்மை கணிப்பிடப்படுகிறது. "செந்தமிழ் இன்பம் செறிந்திட நூல்கள் சேர்ப்பதும் நூலகமே, தமிழ் சந்ததம் விளங்கிடச் சாத்திரநூல்கள் தருவதும் நூலகமே, இதை எந்தையர் நாட்டின் அறிவகம் என்றே இயம்பியே வணங்கேனோ" எனச் சமூகத்தில் நூலகத்தின் முக்கியத்துவத்தை கவிதை மொழியில் வெளிப் படுத்துகிறார் இந்திய நூலக அறிஞர் வே.தில்லைநாயகம் அவர்கள். விரும்பிய நூலை விரும்பிய நேரத்தில் விருப்பப்படி சென்று படிக்க ஏற்றவாறு கதவுகளை விரியத் திறந்து வைத்துக் கொண்டு வருக வருக என வரவேற்கக் காத்திருக்கும் நூலகங்களும், இதோ இதோ என இன்னமுதூட்ட இருகரம் நீட்டி அழைக்கும் நூல்களும், ஓ! நாயகனே மனிதரிடமிருந்து கிடைக்கும் பொது அவமதிப்பின் மத்தியிலும் கூட அதனைத் தாங்கி அவர்களுக்குச் சேவை புரியும் மனவுறுதியை எனக்குக் கொடு எனக் கவிஞர் தாகூரின் சிந்தனையின் வழித்தடத்தில் செல்லக்கூடிய அன்பும் அறிவும் முகமலர்ச்சியும் வாசகனின் தேவையைச் சொல்லாமலேயே இனங்காணும் ஆற்றலுமுள்ள நூலகரும் இருக்கும்வரை அந்தச் சமூகம் அறிவமுது பெற்ற சமூகமாகவே இருக்கும். இப்பணியை இணுவில் பொது நூலகமும் ஆற்றட்டும்.

**ஸ்ரீ.அருளானந்தம்**
முதுநிலை உதவிநூலகர்
யாழ். பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவிலில் காணப்படும் தனியார் கல்வி நிறுவனங்கள்

(1) எவறெஸ்ற் கல்வி நிலையம்
(2) அருள் கல்வி நிலையம்
(3) பொருளியல் கல்லூரி
(4) திகழ் கல்வி நிலையம்
(5) அகிலா கல்வி நிலையம்

இவை தவிர ஒருசில ஆசிரியர்கள் தமது இல்லங்கள்களில் பல மாணவருக்கு கல்வி புகட்டுகின்றனர்.

## இணுவிலில் அமைந்துள்ள கணனிக் கல்வி நிறுவனங்கள்

(1) இணுவில் பொது நூலகத்தின் கணனிப் பிரிவு
(2) இணுவில் பெருந்தெருவில் அமைந்துள்ள மௌஸ் கணனி நிலையம்.

பல்லூடகங்களை (Multi Media) மக்களின் பாவனைக்கு ஏற்ற வகையில் பயன்படுத்துவதற்காக 2000.09.01 ஆம் திகதி கு.பதீதரன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரையில் கணனியை உபயோகித்துப் பாடசாலை சார்ந்த நிர்வாகச் செயற்பாடுகளை இலகுவாக்குவதற்காக "பூச்சியம்" என்ற பாடசாலை முகாமைத்துவ மென் பொருள் முதன்முதலில் இலங்கையில் இரண்டு மொழிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை கணனியை உபயோகித்து சிறப்பாக அமைக்கும் வகையில் பல்லூடக குறுவட்டுக்களை (Multimedia Learning CD) ஐ தமிழில் அறிமுகம்செய்துள்ளது.

இணையத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி (Internet Technology) தாயகத்தில் இருக்கும் நம்மவர்களையும் இணைக்க இணையத்தளங்களை உருவாக்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிறுவனம் கிராம மட்டத்தில் அனைவரும் கணனி அறிவு புகட்டப்பட வேண்டும் என்னும் இலக்கில் குறைந்த கட்டணத்திலும், இலவசமாகவும் கணனிப் பயிற்சி வழங்கி வருகின்றது.

2007 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் இருக்கும் அதிகமான அரச, தனியார் நிறுவனங்களின் செயற்பாடு களை தமிழ்மொழி மூலமான கணனிமயப்படுத்தலுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. வித்தியாசமான முறையில் விளம்பரம்செய்வது இவர்களின் தனிப்பாணியாகும்.

(3) இணுவில் பெருந்தெருவில் அமைந்துள்ள கணனியியல் கல்லூரி

இந்நிறுவனம் 30.05.2002 அன்று ஆரம்பிக்கப் பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வாக பல மாணவர்களுக்கு இலவசக் கணனிக் கருத்தரங்கை வழங்கி, அதிலிருந்து சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.

அத்துடன் முதலாவது பிரிவில் நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் கணனிக் கல்வியைத் தொடர்ந்தார்கள். பின்னர் ஓராண்டு நிறைவையொட்டி 500 இற்கும் மேற் பட்ட மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சை நடாத்தப் பட்டு அதிலிருந்து 200 மாணவர்கள் கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டு தற்பொழுதும் கல்வி பயின்று வருகின்றார்கள். இங்கு 8 ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள்.

இந்நிறுவனத்தின் இயக்குநர் சண்முகநாதன் கோவேந்தன் ஆவார். வலிகாமத்தில் கணணிக் கல்விக்குத் தனித்துவம் வாய்ந்த முன்னணி நிறுவனமாக கணனியியல் கல்லூரி திகழ்கின்றது.

(4) இணுவில் கிழக்கு இளைஞர் சேவை மன்றத்தின் கணனிப் பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கலை இலக்கிய வட்டம்

இணுவில் கிராமம் எழில்மிகு தோற்றமும் கல்வி, கலை மேம்பாடுகளும் நிறைந்தது. இங்கு கல்விவளத்தையும், கலை வளத்தையும் மேலும் முன்னேற்றும் நோக்கில் இங்குள்ள கற்றுணர்ந்த இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி 1981 ஆம் ஆண்டு இணுவில் கலை இலக்கிய வட்டத்தை ஆரம்பித்தனர். ஒத்த கருத்துடன் யாவரும் சிறப்பாகப் பணியாற்ற விரும்பி முன் வந்தவர்களுள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் க.ஸ்ரீகணேசன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை எங்கரசு, அரச எழுதுவினைஞர் சிதம்பர. திருச்செந்திநாதன், த.சிவகுமாரன், ந.ஞானசூரியர், க.ஸ்ரீகந்தவேள், நாக.சிவசிதம்பரம் மற்றும் பலரும் அடங்குவர்.

இக்கழகத்தினர் தமது செயற்பாடுகளாகக் கல்வி சார்ந்த விழாக்கள், இலக்கிய விழாக்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றனர். மேலும் ஈழத்து இலக்கியக்கருத்தரங்கு பாரதிவிழா (1982) நூல் விமர்சன அரங்குகள், பெண்விடுதலைக் கருத்தரங்கு, கல்விமான்கள் பாராட்டு விழாக்கள், நாடக மேடையேற்றம், விமர்சன அரங்கு, அஞ்சலி நிகழ்வுகள் என்பவற்றைச் சிறப்பாக நடாத்தி வருகின்றனர்.

செங்கை ஆழியான், கோகிலா மகேந்திரன் போன்ற எழுத்தாளர் அறிமுகமும் விமர்சனமும், மண்சுமந்த மேனியர், கசிப்பு நாடக விமர்சனங்கள், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, நாவலாசிரியர் கே.டானியல் அஞ்சலி நிகழ்வு, கவிஞர் வாகரை வாணன், இணுவையூர் சிதம்பர.திருச்செந்திநாதன், இணுவை துரை எங்கரசு, பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், கந்தையா ஸ்ரீகணேசன் ஆகியோரது நூல் வெளியீடுகளையும் பல நூல் அறிமுக நிகழ்வுகளையும் நடாத்தி வெற்றிகண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ.பத்மநாதனின் ஆபிரிக்கக் கவிதை, கந்தையா ஸ்ரீகணேசனின் நிதர்சனத்தின் புத்திரர்கள், குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகவழக்கு அரங்கக் கட்டுரைகளும் நேர்காணல்களும் (தொகுப்பு கந்தையா ஸ்ரீகணேசன்) என்பவை இவ்வட்டத்தின் கவிதை, நாடக நூல் வெளியீடுகளாகும்.

இணுவில் கலை இலக்கிய வட்ட உறுப்பினர் தாம் பணியாற்றி வதியும் இடங்களிலும் இதுசார்பான வட்டங்களை ஆரம்பித்துச் சிறப்புறச் செயற்பட முன்னின்று உழைக்கின்றனர். கந்தையா ஸ்ரீகணேசன் குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய நாடகவழக்கும் நேர்காணலும் என்ற செயற்பாடுகளைத் தொகுத்து நூலாக அண்மையில் வெகுசிறப்பாக வெளியிட்டவர். இவரால் முதல் எழுதப்பட்ட நிதர்சனத்தின் புத்திரர்கள் என்னும் நாடக நூல் சென்ற ஆண்டு தேசிய மட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டுக் கௌரவிக்கப்பட்டது.

இக்கலை இலக்கிய வட்ட உறுப்பினர்களின் அயராத இலக்கிய நாடக ஆக்கப்பணிகள் மேன்மேலும் சிறப்புடன் வெளிவந்து எமது இணுவில் அன்னையின் பெருமையைச் சிறப்பித்து நற்பலனளிப்பனவாக.

**மு.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ்க் கலைஞர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர்

இணுவில் தெற்கில் வாழ்ந்த வயலின் வித்துவான் நடராஜ ஐயரின் இரண்டாவது அரிய புதல்வனாகப் பிறந்தவர் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்கள். இவரது இயற்பெயர் சப்தரிசிசர்மா என்பதாகும். இவர் இளமையில் மிகத் துடிப்பாகவும், விவேகமாகவும், குறும்பாகவும் வாழ்ந்தவர். இவரது சிறுவயதில் பெற்றோரை இழந்த இவரை மூத்தசகோதரர் பராமரித்து வந்தார்.

இவரது தந்தையின் இசைஞானம் இயற்கையாகவே இவரை ஆட்கொண்டதால் இவர் தமது 22 ஆம் வயதில் தென்னிந்திய கலாசேத்திர நடனப்பள்ளியிற் பயின்று அப்பள்ளி முதல்வர் நடனமேதை ருக்மணி அருண்டேல் அவர்களிடம் பரதக்கலையை ஐயந்திரிபறக் கற்றார். தொடர்ந்து இசைமேதை எம்.டி.இராமநாதையரிடம் இசைக்கலையைக் கற்றார். சாகித்திய கலாவித்தகர் பாபநாசம் சிவன் அவர்களிடம் இசைக்கலையின் நுணுக்கங்களையும் ஆராய்ந்தறிந்து இசைமேதையானார். இவரது திறமையை அறிந்த எச்.எம்.வி.கம்பயினார் இவரை "சாகித்திய கர்த்தாவாக" நியமித்தனர். இதேகாலத்தில் திருமயிலை கபாலீஸ்வரர் ஆலயம்மீது "மயிலைக்குறவஞ்சி" இவராற் பாடப்பட்டது. கபாலீஸ்வரரைத் தலைவராகவும் கற்பகாம்பாளைத் தலைவியாகவும் பாடிய நூலின் முதற்பாடலாகிய "கற்பகவல்லிநின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாய் அம்மா" என்னும் பாடல் முதன் முதலில் இந்தியா, இலங்கை போன்ற தமிழர் வாழும் நல்லுல கெல்லாம் வீரமணிஐயருக்குப் பெரும்புகழைத் தேடித்தந்தது. இப்பாடல் வெளியீட்டின்போது தென்னிந்தியாவில் பிரகாசித்த இசைக் கலைஞர்களெல்லோரும் வீரமணிஐயரை நன்கு பாராட்டிக் கௌரவித்தனர். ஆலய அறங்காவலர் குழுவினர் கோயிலின் வாசலில் அமைந்த கருங்கல்லில் இப்பாடலை எழுதி, பெருமையுடன் இப்பாடலை இயற்றியவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீரமணிஐயர் எனவும் பொறித்துள்ளனர். இவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கோயிலுக்கு இன்றும் வரும் பல்லாயிரக்கணக்கானோர் கண்டு மகிழ்வடைகின்றனர். மேலும் இவரது பாடல்களைத் தென்னிந்தியப் புகழ்பெற்ற பாடகர்களும் தமது குரலில் பாடி எமது கலைஞரைப் புகழ்ந்து பாராட்டியது எமது மண்ணையே கௌரவித்ததாகும். இது நிகழ்ந்தது சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பாகும்.

பலகலைகளையும் பயின்று நாடுதிரும்பியதும் இசை நடன ஆசிரியராக மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் பின் கோப்பாய் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளிலும் ஏறக்குறைய 33 வருடங்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். இவரது படைப்பாக முன்னூற்றைம்பதுக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் மிகச்சிறப்பாக மேடைகளை அலங்கரிக்கின்றன.

இவரது நாட்டிய நாடகங்கள் தமிழிசை, சைவச்செழுமை, தேசப்பற்று, இனவிடுதலை என்பனவற்றைப் பிரதிபலிக்கும். இவரிடம் இசை, நடனம் பயின்ற பலநூற்றுக்கணக்கான கலைஞர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பிரகாசிக்கின்றனர். பலர் தாம் வாழும் இடங்களில் கலா அக்கடமியையும் ஆரம்பித்து அரும்பணியாற்றும் சிறப்பால் தமது குருபக்தியை வெளிக் காட்டுவர்.

இவரது மயிலைக்குறவஞ்சி, திருக்குறள் கீர்த்தனை மாலை, மயிலைக் கீர்த்தனை மாலை, 35 தாளக்கீர்த்தனை மாலை, 175 தாளக் கீர்த்தனை மாலை, 72 மேளகர்த்தாக் கீர்த்தனை மாலை ஆகியன இவரது கலைநுட்பங்களையும் இசையமைப்பையும் எடுத்துக் காட்டுவனவாகும். இதன் சிறப்புக்களை நோக்கி வீணை மேதை பாலச்சந்தர், டாக்டர் பாலமுரளிகிருஷ்ணா போன்ற இசையாளரும், தொல்காப்பிய உரையாசிரியர் மகாவித்துவான் கணேசையரும் நன்கு பாராட்டியுள்ளனர். பாபநாசம்சிவன் அவர்கள் தமது வாழ்த்தாக "தித்திக்கும் தேன்தமிழில் இலக்கணச்சுவை குன்றாது நவரசமும் பக்திரசமும் ததும்ப மயிலைக் குறவஞ்சி என்ற சிறிய அரிய நூலிழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுகட்டியிருக்கும் "அற்புதச் சிலந்தி" நமது ந.வீரமணிஐயர் என்னும் அடையாறு "கலாஷேத்திர மாணவர்" எனப் பாராட்டியுள்ளார்.

ஈழவளநாட்டின் பண்டிதமணி அவர்கள் தமது வாழ்த்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"முத்தமிழும் வல்லோன் முதுமறையோன் வீரமணி
அத்திமுக னுக்கூஞ்சலாகியவன் தித்தித்துத்
தேனொழுகு தீந்தமிழிற் செய்தளித்தான் கீர்த்தன நற்
கானமெழு நாவனினவன் காண்"

சாகித்தியகர்த்தா வீரமணி ஐயரின் இசையமைப்பையும், இசையாற்றலையும் ஈழத்திலும் பாரதத்திலும் உள்ள அனேக ஆலயங்களில் பாடல்கள், கீர்த்தனைகள், திருவூஞ்சற் பாடல்கள், பதிகங்கள் போன்ற மிகச்சிறந்த கலைவடிவங்களாகக் காணலாம். சில ஒலிப்பதிவுசெய்யப்பட்டு இன்றும் ஆலயங்களில் ஒலிக்கின்றன.

யாழ்ப்பாணம் நுண்கலைப்பீடம் இணுவிலில் அமைய வேண்டிப் பல நடவடிக்கைகள் எடுக்க ஆணிவேராக இருந்தவர். யாழ் நுண்கலைப்பீடம் இயங்குகின்றபோதும் பற்பல உதவிகளையும் மனங்கோணாது செய்தவர். 1999 இல் இவரது கலைத்திறைமை காரணமாக முதுகலைமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். இதனால் வீரமணிஐயர் தகுந்த விருதுபெற்று எமது இணுவையம் பதியைச் சிறப்படைய வைத்தமை தெய்வக் கடாட்சமாகும்.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லயஞானகுபேரபூபதி வி.தெட்சணாமூர்த்தி

இவர் பிரபல இசைவேளாளர் விசுவலிங்கத்தின் புதல்வராவார். இவரது மூத்த அண்ணன் உருத்திராபதி, இன்னோர் அண்ணன் கோதண்டபாணி, இன்னோர் அண்ணன் மாசிலாமணி ஆகியோர் சிறந்த நாதஸ்வர வித்துவான்கள். அவர்களுள் மாசிலாமணி சிறந்த பாடகராகவும் நாடக நடிகராகவும் விளங்கியவர்.

அமரர் வி.தெட்சணாமூர்த்தி தம்படிப்பை மூன்றாம் வகுப்புடன் முடித்துக்கொண்டு தமது அக்காள் கணவர் தவிலாசான் கிருஷ்ணசாமியிடமும், பின்பு காரைநகரிலும் அதன் பின்னர் இந்தியாவிலும் வரன்முறையாகத் தவிற்கலையைக் கற்றவர். இவர் தம் பதினான்காவது வயதிலேயே கச்சேரி நடாத்தும் தேர்ச்சி பெற்றுவிட்டார். இவர் ஒரு கலை அவதாரம் என யாரும் நயந்து வியக்கும் அளவிற்கு ஒளி பிரகாசிக்கும் மேனியும் சுடர்தெறிக்கும் விழிகளும் கொண்டு விளங்கினார். இவரது விரல்களில் கலைத் தெய்வம் நடனமாடும். ஆயிரமாயிரம் இரசிக நெஞ்சங்கள் தவில் வாத்தியத்தை இரசிக்க வைத்த பெருமை இவருக்கே உலகில் உரியது எனலாம். இவர் சென்னையில் ஆண்டுதோறும் இடம்பெறும் இசைவிழாக்களில் தவறாது அழைக்கப்பட்டுக் கச்சேரிகளில் தவில் வாசித்து வந்தார். உலக இசை ரசிகர்களே கண்டு களிக்கும் இந்த இசைவிழாக்களில் ஒன்றில் தெட்சணாமூர்த்தியின் தவில் கச்சேரியைச் செவிமடுத்த ஒரு மேலைநாட்டு விமர்சகர் இந்து என்ற பிரபல ஆங்கில இதழில் எழுதிய விமர்சனத்தில் "இதுவரை காலமும் தவில் வாத்தியம் என்பது செவிப்பறையைச் சிதைக்கும் ஒரு வாத்தியம் என்றே என் அனுபவம் சொல்லி வந்தது. ஆனால் இந்த இசைவிழாவில் தெட்சணாமூர்த்தியின் தவில் கச்சேரியைக் கேட்டபோதுதான் தவில் என்ற வாத்தியத்தில் அதிவன்மையான ஒலியை மட்டுமன்றி அதிமென்மையான ஒலியையும் எழுப்பமுடியும் என்பதை உணர்ந்துகொண்டேன். தெட்சணாமூர்த்தியின் தவில் வாத்தியத்தை ரசிக்க நிச்சயம் தேவர்களும் இந்த விழாவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருப்பார்கள்" எனக் குறிப்பிட்டிருந்தார். தெட்சணாமூர்த்தி தமிழ்நாடு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தவிற்கலை விரிவுரையாளராகப் பணியாற்றி ஈழத்துக்கும் இணுவிலுக்கும் புகழ் தேடித்தந்த உலகறிந்த கலைஞர். லயஞான குபேரபூபதி என்ற சிறப்புப் பட்டத்துக்குப் பெருமை கொடுத்து இவரது தவில் வாத்திய இசை நாடாக்கள் ரஷ்யா, செக்கோசிலோவாக்கியா போன்ற நாட்டு வானொலிகளிலும் அடிக்கடி ஒலிபரப்பப்படுவது கீழைத்தேய இசைக் கலைக்கு குறிப்பாகத் தமிழனுக்கே தனித்துரிய தவில் நாதஸ்வரக் கலைக்கு வழங்கப்பட்ட உலக அங்கீகாரம் எனக் கொள்ளப் படுகிறது.

இவரை ஈன்றளித்த இணுவிலும் ஈழமும் தமிழினமும் பெருமைப்பட இவர் காரணமாகியுள்ளார். இவர் சிறுவனாக இணுவில் கந்தசுவாமி கோவிலில் ஒரு திருவிழாவில் இந்தியப் பிரபல தவில் வித்துவான் நீடாமங்கலம் சண்முகசுந்தரம்பிள்ளையுடன் கச்சேரி செய்ய நேர்ந்தபோது அந்த இந்தியக் கலைஞர் இவரது அற்புத ஆற்றலை நயந்து வியந்து தாயகம் சென்று இவரை அங்கு அறிமுகம் செய்தார். அந்த வாய்ப்புக்கள் மூலம் தெட்சணாமூர்த்தி உலகப்புகழ் பெற்றார். அந்த உண்மைக் கலைஞரான பெரிய மனங்கொண்ட நீடாமங்கலம் அவர்களை இணுவில் மக்கள் மறக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்.ஆர்.சின்னராசா

இவர் வி.தெட்சணாமூர்த்தியைப் போல் தமிழ்நாட்டில் கோலாகலமாக நடக்கும் இசைவிழாக்களில் அழைக்கப்பட்டுத் தவில் வாசித்த பெருமைக்குரியவர். பிறப்பில் அமைந்த தமது இசைத்திறனை தமது சளைக்காத சாதகப்பிரயத்தனத்தால் கூர்மைப்படுத்திக் கொண்டவர். ஏராளம் தவில் வித்துவான்களுக்கும் குருவாய் அமர்ந்து பயிற்சி கொடுத்தவர். இணுவில் தவிற்கலை மும்மூர்த்திகளான வி.தெட்சணாமூர்த்தி, நாச்சிமார் கோவிலடி கணேசன், என்.ஆர்.சின்னரசா ஆகியோரை தமிழ்க்கலையுலகம் போற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது புதல்வர்கள் இரவீந்திரன், நரேந்திரன், சுதாகரன், ஆகியோர் இன்று ஈழத்தின் சிறந்த தவில் வாத்திய மேதைகளாக விளங்குகிறார்கள்.

## என்.ஆர்.கோவிந்தசாமி

பிரபல நாதஸ்வர வித்துவானான கோவிந்தசாமி கீர்த்தனைகளை மற்றும் பாடல்களை நாதஸ்வரத்தில் உணர்ச்சி ததும்ப ஏற்ற இராகத்தோடு வாசிப்பதன் மூலம் தமக்கென ஒரு ரசிகர் கூட்டத்தைத் திரட்டிக்கொண்டவர். நிறைந்த சாஸ்திரீய சங்கீத ஞானமும் உடையவர் இவரது புதல்வர்கள் இரத்தினகுமார், வாகீசன் ஆகியோர் இன்று சிறந்த நாதஸ்வர வித்துவான்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

## இ.கனகசபாபதி

தவில்மேதை கனகசபாபதி தமது அயலிலுள்ள மஞ்சத்தடி முருகனைப் பரவிப் பணிசெய்வதாகத் தம் தவிற் கலைப் பயிற்சியை வளர்த்துக்கொண்டவர். இறுதிக்காலம் வரை பல மேடைகளில் கச்சேரி நடத்தியவர்.

## மு.இராமையா

இந்தியாவில் நாதஸ்வரக் கலைபயில இராமன், இலட்சுமணன் என்ற இரட்டையர்கள் இணுவிலிருந்து அங்கு சென்றனர். அவர்களில் இலட்சுமணன் அகாலமரணம் எய்திவிட எஞ்சி மீண்டவர் இராமையா எனப்படும் சிறந்த நாதஸ்வரக் கலைஞராகப் பிரகாசித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.கணேசபிள்ளை

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர் க.கணேசபிள்ளை என்பவர். தமது இளவயதிலிருந்து தவிற் கலையை நன்கு பயின்று உலகப்புகழ் வாய்ந்த தவில் மேதையாகத் தமது இரு மருமகன்களான வி.தெட்சணாமூர்த்தி, என்.ஆர்.சின்னராசா ஆகியவர்களுடன் சேர்ந்து தவில் மூவேந்தராகப் பிரகாசித்தவர். இவர் தமது தவிற்கலையை உலகின் பல்வேறு இடங்களுக்கும் சென்று காட்டியதுடன் இவ்வூரின் புகழைப் பரப்பியதுடன் பல விருதுகளையும் பெற்றவராவார்.

## க.சண்முகம்பிள்ளை

இவர் இணுவில் தவில்மேதை க.கணேசபிள்ளையின் சகோதரராவர். இவர் ஆரம்பத்திலிருந்தே மிருதங்கக் கலைக்குப் புத்துயிர் கொடுத்தவர். இலங்கை வானொலி (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ் அறிவிப்பாளரான K.S.விஸ்வநாதன், பிரபல நாட்டியக்கலைஞர் திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன் ஆகியோர் இவரது மக்கட் செல்வங்களாவர்.

## கே.ஆர்.சுந்தரமூர்த்தி

புகழ்பெற்ற விசுவலிங்கம் இசைக்குடும்பத்தில் விசுவரின் மகளின் மூத்தமகனாகப் பிறந்து நாதஸ்வரக்கலையில் உன்னத ஆற்றலும், ஒழுக்கசீலமும், தன்னடக்கமும் மிக்க உன்னத கலைஞராக விளங்குபவர் என்.ஆர்.சுந்தரமூர்த்தி அவர்கள். இவர் அறுபது வயதுப் பூர்த்தியை அடுத்து இலங்கை அரசினால் கலாபூஷணப் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இவரது புதல்வர்கள் தவில் வித்துவான், நாதஸ்வர வித்துவான், வயலின் வித்துவான்களாக விளங்கித் தந்தை புகழை மேம்படுத்தி வருகிறார்கள்.

## கே.ஆர்.புண்ணியமூர்த்தி

இவர் இணுவிலின் பிரபல இசைக்குடும்பமான விசுவர் குடும்பத்தில் அவரின் பேரப்பிள்ளையாக வாய்த்தவர். நாதஸ்வர வித்துவான் கே.ஆர்.சுந்தரமூர்த்தி அவர்களின் தம்பியார் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவில்மேதை தட்சணாமூர்த்தியின் மருகர். பிரபல தவில் மேதையும் தவிற்கலைக்குருவுமான என்.ஆர்.சின்னராசாவின் தவிற்கலைச் சீடன். இளம்வயதிலேயே இசை ரசிகர்களின் பாராட்டைப் பெறும் தவிற் கச்சேரிகளைச் சபையோரின் கரகோஷ ரசனை ஆரவாரத்தின் மத்தியில் நடத்திப் புகழ் பெற்றவர். இப்பொழுது கொழும்பில் வசிக்கிறார். சிங்கப்பூர், மலேசியா, கனடா, லண்டன் பேர்னற பல நாடுகளில் கச்சேரிகளை நடாத்தி வருகிறார்.

## கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள்

இணுவிலின் புகழ்பெற்ற விசுவலிங்கம் இசைக் குடும்பத்தின் கொழுந்துகளுள் ஒருவரான நாதஸ்வரமேதை கோதண்டபாணியின் மைந்தர்களே கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்களாகிய நாதஸ்வரச் சகோதரர்கள். பஞ்சமூர்த்தி சிறந்த புல்லாங்குழல் வல்லுநருமாவார்.

இந்த இருவரும் தமது தந்தைக்கிருந்த ஆற்றல் இன்னும் சிறக்கப் பெற்றவர்களாகப் புலிக்குப் பிறந்த புலிகளாக இன்று ஈழத்தின் நாதஸ்வரக்கலையில் முன்னணி நட்சத்திரங்களாக விளங்குகின்றனர்.

## தவில்மேதை சி.சுதாகர்

இளம் கலைஞர்களில் மிகச் சாதுர்யமாகத் தவிற்கலையைக் கையாண்டு வருகிறார். தந்தையாரையும் விட உன்னத நிலையை அடையக்கூடிய இவர் தனது திறமையால் வெளியிடங் களுக்குச் சென்று புகழ்பரப்புவதுடன் இந்திய இசைக் கலைஞர்களை இங்கு அழைத்து வந்து உடன் வாசித்துப் பெருமையடைகிறார்.

## க.நித்தியானந்தன்

இவரும் சிறந்த தவில் விற்பன்னர். குறுகிய காலத்தில் முன்னேறிய சிறந்த தவில் கலைஞர்களில் இவரும் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.உதயநாதன்

விசுவின் பூட்டப்பிள்ளைகளான உதயநாதன், பஞ்சரத்தினம், சாந்தையா முதலானவர்கள் பரம்பரைச் சொத்தான நாதஸ்வர, தவில் கலைஞுகளில் உன்னதமாகப் பிரகாசிக்கின்றனர்.

## தெ.உதயசங்கர்

தவில்மேதை தெட்சணாமூர்த்தியின் மகன் உதயசங்கர் என்பவரும் இளைய தலைமுறையின் சிறப்பான தவில் விற்பன்னராவர். இவர் வெளியூர்களில் கலைபரப்பி வருகின்றார்.

## ரத்தினகுமார் - வாகீசன் சகோதரர்கள்

இவர்கள் பிரபல நாதஸ்வர மேதை என்.ஆர்.கோவிந்த சாமியின் புதல்வர்களாவர். கோவிந்தசாமி அவர்களின் புகழலையினைத் தொடர்ந்து இவரது பிள்ளைகளான இரத்தினகுமார், வாகீசன் சகோதரர்கள் தமது திறமையைப் பல இடங்களிலும் நிலைநாட்டிப் புகழடைந்துள்ளனர்.

## வயலின் மேதை உ.இராதாகிருஷ்ணன்

கல்விவழி செல்லாது இசைவழி சென்றதால் உயர் பதவிகளை ஏற்கும் வசதிகளற்றாலும் இவரது இசைஞானம் வயலின் வாசிப்பதில் இவருக்கு நிகர் இவராகவே வகை செய்தது. "மதுரைச்சோமு" என்ற இந்தியக் கலைஞர் இலங்கைக்கு வருகைதந்தபோது சகல கச்சேரிகளுக்கும் இவரே அணியிசை வழங்கினார். பாடகர் மிகக்கடினமான பாடல், சுரவரிசை களைக் கையாளுமிடத்து தம்மை மறந்திருந்து பாடுபவர். முழங்காலில் எழுந்தும் பாடுவார். அப்போது பக்கவாத்தியக்காரரும் அவருடன் செல்லவேண்டும். இவர்களது ஒத்தழைப்பே பாடகருக்குச் சிறப்பைக் கொடுக்கலாம். இராதாகிருஷ்ணன் அவர்கள் பாடகரின் கரடுமுரடான நெளிவுசுழிவுகளையெல்லாம் அறிந்து செயற்படும் இசைஞானம் இருந்ததால் பாடகர் இவரது வயலின் இசையை மெச்சி "சபாஷ்" போடுவார். இதுபோன்ற பல நிகழ்ச்சிகளில் தனது திறமையைக் காட்டியவர். இவரிடம் வயலின் கற்ற பல நூற்றுக்கணக்கானோர் இங்கும் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுளிலும் பிரகாசிப்பது எமது தவப்பேறாகும். தற்போது இவரது மகள் செல்வி சைந்தவி அவர்கள் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் வயலின் இசையில் பட்டப்படிப்பினை முடித்துள்ளார். இவரும் தந்தை இராதாகிருஷ்ணன் அவர்களும் சேர்ந்து பல மேடைகளை அலங்கரித்து வருகின்றனர்.

## இளம் மிருதங்கக் கலைஞர்
## சுப்பிரமணியம் கமலதாஸ்

இணுவில் மேற்கைச் சேர்ந்த இவ்விளங்கலைஞர் பிரபல தவில்மேதை என்.ஆர்.சின்னராசா அவர்களின் சகோதரியின் புதல்வராவார். ஆரம்பக்கல்வியை இணுவில் இந்துக் கல்லூரியில் கற்றவர். இவரது தந்தையார் நாதஸ்வரக் கலைஞராக இருந்ததாலும் இணுவிலின் கலைமணம் இவரின் கலையுணர்வை மீட்டியதாலும் தனது பிஞ்சுப்பருவமான ஆறுவயதில் மிருதங்கம் பயில ஆரம்பித்தார். இவரது மிருதங்கக் குரு யாழ் பல்கலைக் கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர் திரு.ச.மகேந்திரன் ஆவார். இவர் முறைப்படி மிருதங்கம் கற்றதால் தமது 14 ஆவது வயதில் (1992) இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவிலில் மிருதங்க அரங்கேற்றம் நடைபெற்றது. இவரது அரங்கேற்றத்தில் பொன்.சுந்தரலிங்கம், திரு.உ.இராதாகிருஷ்ணன், திரு.துரைரசா ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்றனர்.

இதேவருடம் இளம்தொண்டர் சபையினரால் என்.ஆர்.சின்னராசா அவர்களின் நினைவாக நடாத்தப்பட்ட மிருதங்கப் போட்டியின் முதற்பரிசான தங்கப்பதக்கமும் பெற்றவர். 1998 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தால் நடாத்தப்பட்ட மிருதங்கச் செயல்முறை காட்டல் நிகழ்வில் அதிவிசேட (Supper Grade) சித்திபெற்றவர். 1999 ஆம் ஆ்ணடு இந்தியா சென்று மிருதங்க இசைமேதை காரைக்குடி திரு.ஆர்.மணி அவர்களிடம் மிருதங்க இசை பயின்றவர். தற்போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு மாணவராகப் பயிற்சி பெறுகிறார். இணுவிலில் சகல கலைகளிலும் குறிப்பாக நாதஸ்வரம், தவில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலின், வாய்ப்பாட்டு, வீணை போன்ற துறைகளிலும் கலை வல்லுநர்கள் பிரகாசிக்கின்றனர். மிருதங்கக் கலைஞராக இப்போது பிரகாசிக்கும் இளங்கலைஞர் சு.கமலதாஸ் அவர்கள் தொடர்ந்து பல பட்டங்கள் பதவிகள் பெற்றுச் சிறப்படைவதுடன் இணுவையூருக்குப் பேரும்புகழும் தேடித்தர எல்லாத் தெய்வங் களும் அருளாசி வழங்கட்டும்.

## இளம் மிருதங்கக் கலைஞர் கணபதிப்பிள்ளை கஜன்

இணுவில் கிராமத்தின் இளங்கலைஞர் வரிசையில் மிருதங்க வாத்தியத்திற்கு மெருகூட்டுபவர் திரு.கணபதிப்பிள்ளை கஜன் அவர்கள். இவர் தமது ஆரம்பக்கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கறறவர். பாடசாலைப் படிப்புடன் சிறுவயதிலிருந்தே மிருதங்கக் கலையைப் பயில ஆர்வங்கொண்டதால் தமது ஒன்பதாம் வயதில் இணுவில் இளந்தொண்டர் சபையில் மிருதங்க வகுப்பில் சேர்ந்து ஆரம்பத்தில் இ.அருணகிரிவாசன் அவர்களதும் பின்னர் திரு.க.ப.சின்னராசாவினதும் குருத்துவத்துடன் மிருதங்கக் கல்வியை நன்கு பயின்றார். 1991 ஆம் ஆண்டு பிரபல அணிசெய் கலைஞர்களின் பக்க வாத்தியத்துடன் இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் இவரது மிருதங்க அரங்கேற்றம் வெகு சிறப்பாக நடைபெற்றது. 1995 ஆம் ஆண்டில் வட இலங்கைச் சங்கீதசபை நடாத்திய ஆசிரியர் தேர்வில் சித்திபெற்றதுடன் "கலாவித்தகர்" பட்டமும் பெற்றார்.

இதே காலத்தில் பண்ணிசையிலும் ஆர்வங்கொண்டு வட இலங்கைச் சங்கீதசபையில் தரம் மூன்றிலும் சித்திபெற்றார். 1997 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் சேர்ந்து மிருதங்கத் துறையில் இசைமாணிப் பட்டத்தை 12.10.2002 அன்று பெற்றார். பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற சங்கீதம், பண்ணிசைப்போட்டிகளிற் பங்குபற்றி இதுவரை 12 முதலாம் பரிசுகளையும் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் நடாத்தப்பட்ட இந்து கலாசார அமைச்சின் பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றி யாழ் மாவட்டத்துக்கு 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொடுத்தார்.

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் நடைபெற்ற திருநெறிய தமிழ்மறைக்கழகம் நடாத்திய போட்டியில் இரு தடவை தங்கப்பதக்கங்களையும் பெற்றார். 1996 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை பல்வேறு இடங்களில் பிரபல இசைக்கலைஞர்களின் கச்சேரிகளில் சிறந்த அணிசெய் கலைஞராக மிருதங்கம், கடம் ஆகிய கருவிகளில் தனது வித்துவத்தைக் காண்பித்துப் பாராட்டப்பட்டவர். கொழும்பில் நடைபெற்ற கம்பன் கழக இசைவேள்வியில் 2002, 2003 ஆம் ஆண்டுகளில் பிரபல இசைக்கலைஞர் திரு.தவநாதன் றொபேட் அவர்களின் சங்கீதக் கச்சேரிக்கு மிருதங்கம் வாசித்து நன்கு பாராட்டப்பட்டவர். பிரபல இந்தியப் பாடகர் வீரமணிதாசன் அவர்கள் அராலி அம்மன் கோவிலில் இசைக்கச்சேரி நடாத்திய போது மிருதங்கம் வாசித்துப் புகழ்தேடினார். அண்மையில் நாதஸ்வர வித்துவான் வி.கே.பஞ்சமூர்த்தி அவர்களின் புல்லாங்குழல் கச்சேரியிலும் தனது திறமையினை சிறப்புற எடுத்துக் காட்டியவர். யாழ் பல்கலைக்கழக இசைக் கலைஞர்களது பங்களிப்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் 2000, 2004 ஆகிய ஆண்டுகளில் நடாத்திய தியாகராச உற்சவத்திலும் பங்குபற்றிச் சிறப்பித்தவர்.

வட இலங்கை சங்கீதசபையில் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை உதவித் தேர்வாளராகவும் கடமையாற்றுகிறார். சந்நிதி முருகன் கோயிலின் சந்நிதி வசந்தம், இணுவில் கந்தசுவாமி கோயிலின் இணுவைக் கந்தன் கீர்த்தனைகள், நோர்வே நாட்டு பிராண்டா நகர் அம்பாள் மீது பாடப்பட்ட பக்திப்பாடல்கள் போன்றல பல ஒலி நாடாக் களுக்கான மிருதங்க இசையை வழங்கிப் பெருமை பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலமாகப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் மிருதங்கப் போதனாசிரியராகப் பணியாற்றுகிறார். 2001 ஆம் ஆண்டு தொடக்கம் இணுவில் இளந்தொண்டர் சபைத் தலைவராகவும் செயற்படுகின்றார். பல போட்டிகளில் தவறாது பங்குபற்றிச் சிறப்பான பரிசில்களையும், நன்மதிப்பையும் பெறும் இவர் மேன்மேலும் தமது திறமையால் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று வளமுடன் வாழ வேண்டும். தமது சிறப்பினால் எமது இணுவில் மண்ணில் சமய, சமூகப்பணிகளை முன்னெடுத்துச் சென்று எதிர்கால இளஞ் சந்ததியினரையும் எம்மண்ணின் முத்தமிழ்க் கலைகளையும் இவர் பேணிக்காக்க இணுவைக் கந்தன் நல்லருள் புரியட்டும்.

## சு.கோபிதாஸ்

இவர் இணுவில் பிரபல நாதஸ்வரக் கலைஞர் கலாபூஷணம் என்.ஆர்.சுந்தரமூர்த்தி அவர்களின் இரண்டாவது மகனாவார். ஆரம்பப் படிப்புக் காலத்தில் தமது உறவினரான பிரபல வயலின் மேதை உ.இராதாகிருஷ்ணன் அவர்களிடம் வயலின் கற்றுத் திறமைபெற்றவர். தமது குருவுடன் சேர்ந்து பல கச்சேரிகளில் பிரகாசித்தவர். யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் வயலின் ஒரு முக்கிய பாடமாக இதர பாடங்களோடு கற்றுப் பட்டம்பெற்றவர். மண்மீட்புப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்து இணைந்தவர். தொடர்ந்து தமது பணியில் கலைபண்பாட்டுக் கழகத்தில் தலைசிறந்த கலைஞராகப் பிரகாசித்து வருகிறார். தொடர்ந்தும் பணியிலும் கலை நிகழ்வு களிலும் சிறப்புடன் செயற்பட்டு அனைவரதும் பாராட்டுக்கும் உரியவராகிறார்.

**மு.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நாடக வரலாற்றிலே இணுவிலின் ஆரம்பகாலப் பங்களிப்பு

நீண்டகால வரலாற்றினைக் கொண்ட எமது ஈழநாடு தனக்கே உரிய நாடக வரலாற்றையும் கொண்டுள்ளது. ஈழத்தின் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு நாடகவகை சிறப்பிடம் பெற்றதாகக் காணப்படுகின்றது. அந்தவகையிலே பல்வேறு பிரதேசங்களிலும் இசை நாடகம் ஆற்றுகை செய்யப்பட்ட போதிலும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே இதன் பரம்பல் அதிகமாகக் காணப்பட்டது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இலங்கை, இந்திய நாடுகளை ஆட்சி செய்த காலத்திலே இரு நாடுகளுக் கிடையேயும் போக்குவரத்தினை மேற்கொள்வதில் பெரும் பிரச்சினை ஏதும் இருந்திருக்கவில்லை. இந்தநிலையில் தென்னிந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக ஈழத்திற்கு வந்த நாடகக் கலைஞர்களின் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்திலே அதிகமாக இருந்தன. பின்னர் இந்தியக் கலைஞர்களும், யாழ்ப்பாணத்துக் கலைஞர்களும் சேர்ந்து நடித்தமையும், பின்பு யாழ்ப்பாணத்தவர்களே தனித்து இசை நாடகங்களை மேடையேற்றியமையுமே யாழ்ப்பாணத்தில் இசை நாடகத்தின் பரம்பல் அதிகமாகக் காணப்பட்டமைக்கு காரணங்களாக அமைந்தன எனலாம்.

இவ்வாறு யாழ்ப்பாணத்திலே பரம்பலடைந்த இசை நாடகம் தன் பெருவளர்ச்சியினைக் காண்பதற்கு, பாரம் பரியங்களைப் பேணுவதும் சைவத்தையும் தமிழையும் இன்றும் போற்றிப் பாதுகாப்பதும், இசை, நாட்டிய, நாடக, பல்வகை வாத்தியக் கலைகள் சிறந்தோங்குவதுமான இணுவில் கிராமம் தன் பங்களிப்பினை அதிகளவில் நல்கி வந்துள்ளது.

காலங்காலமாகப் பல கலைஞர்கள் தோன்றி வளர்ந்து முழுமையாகத் தங்களை நாடகக் கலையிலே ஈடுபடுத்தி, பயிற்சி நிலையங்களை நிறுவி பல்வேறு வழிகளில் இவ் வளர்ச்சியிலே பெரும் பங்காற்றி வந்திருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வந்து நாடகம் நடித்த கலைஞர்களின் வருகை குறைவடைந்த வேளையிலே ஈழத்திலும் இசை நாடகங்கள் தோன்றத் தொடங்கின. இதில் இணுவையூர் சின்னத்தம்பிப்புலவர் 1884 இல் எழுதிய வள்ளி திருமணம் நாடகம், அனுருத்தன் நாடகம் என்பன சிறப்பிடம் பெறுகின்றன. அவரைத் தொடர்ந்து பேராயிரவரின் தந்தை சின்னத்தம்பர் என்பவர் 1910 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல நாடகங்களை எழுதினார். பண்டிதர் சரவணமுத்து (கார்த்திகேசு) இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்பு சகுந்தலை, மாமனாக வந்து வழக்குரைத்தவர் போன்ற நாடகங்களை எழுதித் தன் மாணாக்கர்களின் மூலம் மேடையேற்றியிருக்கிறார்.

ஆயினும் தமிழ்நாட்டிலே சங்கரதாஸ் சுவாமிகள் போன்றவர்களால் உருவாக்கப்பட்ட புராண, இதிகாசங்கள் தழுவிய நாடகங்களே இங்கு அதிகம் மேடையேற்றப்பட்டு வந்துள்ளன. தென்னிந்திய நடிகரான எம்.ஆர்.கோவிந்தசாமி என்பவர் இணுவில் சின்னத்தம்பிச் சட்டம்பியாரிடம் சில நாடகப் பாடல்களை எழுதுவித்ததாகவும் அறிய முடிகிறது.

ஈழத்துக் கலைஞர்கள் பலரும் இந்தியக் கலைஞர் களுடன் சேர்ந்து நடித்துப் பெரும் புகழீட்டினர். அவர்களில் இணுவில் அண்ணாவியார் சுப்பையாவும் (அண்ணாவி சுப்பர்) அவரது சகோதரன் நாகலிங்கமும் அடிக்கடி இந்தியக் கலைஞர் களுடன் நடித்துப் பெரும் புகழீட்டியவர்களாவர்.

சீன், வங்கிகளால் இழைக்கப்பட்ட உடுப்புகள் என்பவற்றுடன் இலங்கையில் ஆடிய முதலாவது இசைநாடகம் வள்ளிதிருமணம் நாடகம். இது இணுவில் கிழக்கு சிவகாமசுந்தரி அம்மன் ஆலய முன்றிலில் நடைபெற்றதாக காரை. செ.சுந்தரம்பிள்ளை தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இணுவில் வள்ளி திருமணம் நாடகத்தில் நடித்தவர்கள் பல ஊர்களையும் சேர்ந்தவர்கள் காங்கேசன்துறை இராமர், இணுவில் முருகர், காரைநகர் கோபாலு, நெல்லியடித் தபசர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடமாவடிச் சீனித்தம்பி, அரியாலை மருதையர் போன்ற பிரபல அண்ணாவிமார் களாவர். போக்குவரத்து வசதிகளற்ற அக்காலத்திலேயே இவர்கள் இங்கு வந்து ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். இதே நாடகம் மேலும் பல பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டது.

ஈழத்து நாடகப் பரம்பரையின் தலைவர்களின் வரிசையிலேயே இணுவில் அண்ணாவியார் சுப்பையாவும் (1875), நாகலிங்கம் (1880) சகோதரர்கள் குறிப்பிடக்கூடியவர்கள். இவர்களது தந்தையார் அண்ணாவியார் முருகேசுவும் குரவைக்கூத்து அண்ணாவியாராக விளங்கியிருக்கின்றார். சுப்பையாவும் நாகலிங்கமும் 1900 ஆம் ஆண்டளவிலேயே பிரபலம் அடையத்தொடங்கிவிட்டனர்.

அக்காலத்தில் ஒவ்வொரு சனிக்கிழமை, பண்டிகை மற்றும் விழாக்காலங்களில் இணுவிலில் நாடகம் ஆடப்பட்டது. இணுவில் சந்திக்கு அண்மையாகவும், கமட்டான் என்ற பகுதியிலும் கொட்டகைகள் அமைந்திருந்தன. பல ஊர்களிலிருந்தும் வண்டில் கட்டி இங்கு வந்து கூத்துப் பார்த்தார்கள். குறைந்தது 5000 அல்லது 6000 பார்வையாளர்கள் இருந்திருக்கிறார்கள். பவளக்கொடி, இராமாயணம், வள்ளிதிருமணம், மயானகாண்டம் போன்ற நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

வேலாயுதர் சந்நாசியாரின் அழைப்பை ஏற்றுப் பல நாடகக் குழுக்கள் மஞ்சத்தடி வீதியில் கூத்துக்களை மேடையேற்றின. இதில் வடிவேற்சாமியாரின் தந்தை இணுவில் சந்நாசிக் கந்தர் பல பாத்திரங்களை ஏற்று நடித்தார்.

வேறு பல கொட்டகைகளிலும் அடிக்கடி இந்தியக் கலைஞர்களுடன் நடித்து, இந்தியக் கலைஞர்களதும், ஈழத்துக் கலைஞர்களதும் பாராட்டுக்களைப் பெற்ற அண்ணாவி சுப்பர், நாகலிங்கம் ஆகியோரில் சுப்பர் பாட்டுக்களை எழுதியும், பாடியும் இந்தியக் கலைஞர்களுக்கு ஈடுகொடுத்தார். பிரபல இந்திய நடிகர் எம்.ஆர்.கோவிந்தசாமி போன்று மேடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தவுடன் இசையுடன் பாடும் திறமைசாலி. சீதை பாத்திரம் ஏற்றுப் புகழ் பரப்பியவர். பெண் வேடம் தாங்குவோர் ஏனைய பாத்திரங்களையும் சிறப்பாக நடிப்பர். இதனடிப்படையில் அண்ணாவி சுப்பர் அனைத்துப் பாத்திரங்களையும் சிறப்பாக நடிக்கும் வல்லமை கொண்டவர்.

இவரது சகோதரர் திரு.நாகலிங்கம் மிகச்சிறந்த நடிகர். பல கூத்துக்களில் கதாநாயகனாகவே நடித்தவர். இவர் இராஜபாட், நடிகவேள், இலங்கை இராசசிங்கன் எனப் பல பட்டங்கள் பெற்றவர். இந்திய நடிகர்களான எம்.ஆர். கோவிந்தசாமி, கிட்டப்பா போன்றவர்களுடன் ஒரே மேடையில் நடித்துப் புகழ்பெற்றவர். ஈழத்தில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய பிறநாடுகளிலும் நடித்துப் புகழ் ஈட்டியவர். சிறந்த தமிழ் பல்லவிகள், பதங்கள், கீர்த்தனைகளை, கற்பனைத்திறம் பொலியப் பாடவல்லவர்.

அண்ணாவி சுப்பையாவின் வழிவந்த கலைமணி வடிவேலு அவர்கள் பரம்பரை விளங்கச் சிறந்த கலை வல்லுநராக அண்மைக் காலம் வரை வாழ்ந்து புகழப்பெற்றவர். (இறுதிக்காலத்தில் தாவடிக் கிராமத்தில் வாழ்ந்து கலை பரப்பியவர்)

அந்தக் காலத்தில் நாடகமேடையில் கொடிகட்டிப் பறந்த கொக்குவில் நமசிவாயம் என்பவருடன் ராஜபார்ட்டாக நடித்த இணுவில் சின்னமோனை என்பவர் சிறந்த சாரீரவளமும், சோகமாக நடிக்கும் ஆற்றலும் கொண்டவர். இணுவிற் சின்னமோனை அரிச்சந்திரனாகவும், கொக்குவில் நமசிவாயம் சந்திரமதியாகவும் நடிப்பதைக் காணப் பல்லாயிரம் இரசிகர்கள் கூடியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்கள் தம் நிலையினின்றும் விடுபட்டுப் பாத்திரமாகவே காட்சியளித்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள் தாம் வளர்ந்தது மட்டுமல்லாமல் பல கலைஞர்களையும் உருவாக்கித் தந்துள்ளனர். நாடகக் கலையைத் தன் முழுமூச்சாகக் கொண்டவரும் இணுவில் சண்முகானந்தா பாலிய கான நாடக நடனசபாவை நிறுவி பல நாடகங்களையும் மேடையேற்றியவருமான இணுவில்" என்னும் நாடக சபையை நிறுவி பல இளம் நடிகர்களுக்கு பயிற்சி வழங்கி இசைநாடகக் கலையை வளர்க்கத் துணைபுரிந்துள்ளார்.

ஏரம்பர் நாட்டுக்கூத்தினையும், மேடைக்கூத்தினையும் பயிற்றியவர். ஆசுகவிகள் போல் சுயமாக இசையமைத்துப் பாட வல்லவர். காவடியாட்டத்தில் சிறந்த அண்ணாவியார். ஏரம்பர் ஈழத்தில் பல இடங்களிலும் சென்று அண்ணாவி மரபினை புகழ்மணக்கச் செய்தவர்.

"லங்காசுபோத விலாச சபா"வில் பிரபல பெண் நடிகராகவிருந்த புகழ்பெற்ற இளவாலையைச் சேர்ந்த மெய்கண்டான் சரவணமுத்து என்பவர் 1933 ஆம் ஆண்டளவில் நாடகக்கலை மந்தமடைய, இணுவில் "டப்பாசெற்" நாடக சபாவில் ஆசிரியராகப் பணிபுரிந்து பல கலைஞர்களை உருவாக்கினார். இவர்களுள் இணுவிலைச் சேர்ந்த எஸ்.வி.மாசிலாமணி, ஏ.சுப்பையா (கலாபவனம் சுப்பையா அண்ணாவி ஏரம்பரின் மகன்), நடிகரும் ஹார்மோனிய வித்துவானுமாகிய சரவணமுத்து (வேல்நாயக்கரின் மகன்) தம்பையா தணிகாசலம், கீரிமலை பொன்னுச்சாமி தேசிகர், அளவெட்டி நாகலிங்கம் போன்றோர் புகழ்பெற்றவர்களாவர். ஈழத்து நாடகவரலாற்றிலே முக்கிய இடம்பெறும் வண்ணார் பண்ணை சிவன்கோவிலுக்கு அருகிலே இயங்கிய "சாந்தி நிலையம்" என்னும் நாடகக் கல்லூரி மெய்கண்டான் சரவண முத்துவால் நிறுவப்பட்டது ஆகும். "டப்பாசெற்" தனது நாடகங்களை வேறு பல மாவட்டங்களிலும் மேடையேற்றிப் புகழ் பரப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1938 ஆம் ஆண்டு முதல் 1943 ஆம் ஆண்டுவரை கலாபவனம் சுப்பைய அவர்கள், பெ.கந்தையா, பரதன் தம்பிஜயா, வேலுப்பிள்ளை, சரவண முத்து, வீரசைவர் நடராசா, வடிவேலு போன்ற பல நடிகர்களுடன் ஒரு குழுவாக இயங்கி பல நாடகங்களை மேடையேற்றி வந்தார். இவர்களது நாடகங்கள் யாழ்ப்பாணம் றீகல் தியேட்டரில் அடிக்கடி நடந்து வந்துள்ளன.

கலாபவனம் சுப்பையாவின் சகோதரர் கதிர்காமத்தம்பியும் சிறந்த கூத்துக்கலைஞராகவும், மருத்துவராகவும் விளங்கினார். இவர் இளம் வயதிலேயே இறைவனடி சேர்ந்துவிட்டார்.

ஆரம்பத்தில் இராஜபாட்டாக நடித்துப் புகழ்பெற்றவர் மாசிலாமணி, நடிகராக மட்டுமன்றி சிறந்த பாடகராகவும், வாத்தியக் கலைஞராகவும் விளங்கினார். பின்னர் வேறுபல பாத்திரங்களையும் நடித்துப் புகழ்பெற்றதற்கு இணுவில் ஏரம்பு அண்ணாவியாரதும், மெய்கண்டான் சரவணமுத்துவினதும் வழிகாட்டல்கள் காரணிகளாயின.

வேல்நாயக்கரின் மகன் சரவணமுத்து சிறந்த ஹார்மோனிய வித்துவான். இவரும் மனைவி சந்திராவும் பல நாடகங்களை ஆற்றுகை செய்துள்ளனர். சரவணமுத்து அண்மைக்காலம் வரை வாழ்ந்து பல புதிய இளம் இசை நாடக கலைஞர்களுக்கு வழிகாட்டிச் சென்றுள்ளார்.

இணுவிலில் வாழ்ந்த கலைஞர்களில் பலர் தாம் ஏற்ற பாத்திரங்களின் பெயரால் அழைக்கப்பட்டு, அதன் சிறப்பால் தங்கள் இயற்பெயரை மறைத்துக்கொண்டவர்களும் உள்ளனர். அனுமாராக நடித்துப் புகழ்பெற்ற அனுமான் கதிர்காமர், இசையுடன் பாடவல்லவரான இராமர் கந்தர், சாமிவேடன் சண்முகம், வள்ளிதிருமணத்தில் கிழவனாக நடித்துப் புகழ்பெற்ற பண்டாரக்கிழவன் கார்த்திகேசு, நம்பிராசான் பொன்னையா, அவரின் தந்தை தட்டான் சிதம்பரநாதன், வள்ளியம்மன் நாடகத்தில் முருகனாக நடித்துப் புகழ்நாட்டிய சுப்பிரமணியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசுவலிங்கம், இசையுடன் பாடும் வல்லமையாளரும், நகைச் சுவையாகப் பேசுபவருமான நாரதர் முதலித்தம்பி, இவரது தந்தை மாரீசன் கந்தப்பு, பபூன் பொன்னு வள்ளியம்மனாகப் பல ஊர்களிலிலும் மேடையேறிப் புகழ்பெற்ற வள்ளியம்மன் வேதவனம், கிழவி சின்னத்துரை, மயில்ராவணன் தம்பையா ஆகியோர் சிறப்பானவர்கள்.

இணுவிலில் உள்ளூர்க் குழுக்களையும், இந்தியக் குழுக்களையும் அழைத்து நாடகங்களை ஒழுங்கமைத்து நடத்தி வந்தவர்களுள் சிறப்பானவராக திரு.க.கதிர்காமர் விளங்கினார். இவர் பின்னர் ஏச்சண்டர் கதிர்காமர் எனவே மக்களால் அன்பாக அழைக்கப்பட்டர்.

இவ்வாறு புகழ்பெற்ற கலைஞர்கள் வாழ்ந்து புகழ்பரப்பியும், ஈழத்து நாடகக் கலைக்கு பங்களிப்புகளை ஆற்றியும் வந்துள்ள போதிலும், அவர்களின் வரலாறுகளும், ஈழத்து நாடக வரலாற்றிலே பெரும்பங்காற்றிய இணுவிலின் நாடக வரலாறும் முழுமையாக ஆராயப்படாதது ஒரு துர்ப் பாக்கியமே. இந்நிலையில் எனது இச்சிறுகட்டுரை இணுவிலின் ஆரம்பகால நாடக வரலாற்றினை எடுத்தியம்புகின்றது. தொடர்ந்து இணுவில் நாடக வரலாறு பற்றி முழுமையான ஒரு தேடலைச் செய்ய எண்ணியுள்ளேன். இதற்கு இது சம்பந்தமாக அறிந்துள்ள பெரியவர்கள் தங்கள் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

**நடராசா தவசோதிநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரிணுவைத் திருவூரின் நாடக / நடன வரலாற்றில் பிற்காலப் பங்களிப்பு

முத்தமிழ் ஓங்கி வளர்ந்த புனித பூமியாம் இணுவில் கிராமத்தில் ஆதிகாலத்திலிருந்தே நடனம், நாடகம் யாவற்றிலும் கலைஞர்கள் தமது அயராத முயற்சியால் தம்மை நாடிவந்த பிறவூர்க் கலைஞர்களையும் பங்காற்ற வைத்து இன்புற்றனர். வாழையடி வாழையாக மற்றோரும் இக் கலைகளைப் பின்பற்றிப் புகழ்பெற்றனர்.

நாடகத்துறையில் வல்லுநரான ஏரம்பர் என்பவரின் இரண்டாவது மகன் ஏரம்பு சுப்பையா என்பவர் ஆரம்பத்தில் பெண்பாத்திரம் உட்படப் பல வேடங்கள் தாங்கிச் சிறப்பாக நடித்தவர். நடனமும் நன்கு கற்றுத்தேறி நடன விரிவுரையாளராகவும், பல சிறப்பு வகுப்புகளை நடாத்தியதன் பேரில் தமது புகுந்த கொக்குவிலில் "கலாபவனம்" என்னும் நடனாலயத்தையும் நிறுவி அரிய சேவையாற்றியவர். நடனம், நாடக அங்கமான தாளக் காவடியை இணுவிலில் ஏறக்குறைய 60 வருடங்களுக்கு முன் அன்றைய இளைஞர்களான ஆ.தம்பிராசா, கா.செ.நடராசா, செ.பரமலிங்கம் ஆகிய உடன்பிறவாச் சகோதரர்களுக்குப் பயிற்சி கொடுத்து நாட்டுக்கு அறிமுகஞ்செய்தார். இவர்களது முதல் நிகழ்ச்சி இவர்களது அயலிலுள்ள இணுவில் கந்தசுவாமி கோயிலின் தேர்த்திருவிழாவில் பல இரசிகர்களின் பாராட்டுக் களுடன் முருகனின் கருணையையும் பெறவைத்தது. சுப்பையாவின் கலாபவனத்தில் பயின்ற நடனமேதைகள் பலர் தக்க சிறப்பையும் பெற்றனர். இவரது புதல்வி திருமதி சாந்தினி சிவனேசன் அவர்கள் நடன விரிவுரையாளராகப் பணியாற்றுவதுடன் தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்ட நடனாலயத்தையும் சிறப்புடன் இயக்குகிறார்.

இணுவில் கிழக்கைச் சேர்ந்த தம்பையா சிதம்பரநாதன் என்பவர் சிறுவயதிலிருந்தே நாடகப் பயிற்சி பெற்றதுடன் வாலிப வயதில் நாடகங்களில் நடித்தவர். ஏறக்குறை 30 வருடங்களுக்கு முன் இவரது நாடகம் நடிக்கும் ஆர்வமேலீட்டினால் தென்னவன் பிரமராயன் எனும் புராண நாடகத்தில் பிரதம பாகம் ஏற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்துப் பலராலும் மெச்சப்பட்டவர். இவரது மகன் திருச்செந்திநாதன் என்பவர் தந்தையின் வழியில் சென்று நாவல்கள், நாடகங்கள் எழுதவும், நூல்வடிவில் அமைத்து வெளியிடவும் செய்தவர்.

இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன் பிரபல நாடக நடிகராக விளங்கிய இணுவில் மேற்கைச் சேர்ந்த பெரியதம்பி கந்தையா அவர்கள் கதாநாயகன் பாத்திரமேற்று அரிச்சந்திரா மயானகாண்டம், சத்தியவான் சாவித்திரி, இராமாயண நாடகங்களில் நடிக்க, பெண் பாத்திரமேற்று நடராசா (வீரசைவர்) நடித்தார். இவர்களுடன் முதலித்தம்பி தம்பியையா (பரதன்), சரவணமுத்து, சி.இராமநாதன், மயிலர் வேலுப்பிள்ளை முதலானோர் இணுவிலிலும் அயலூர்களிலும் நாடகங்களைத் தயாரித்து நடித்து மேடையேற்றினர்.

இற்றைக்கு 35 வருடங்களுக்கு முன் செகராசசேகரப் பிள்ளையாரடி இளைஞர்களால் அமைக்கப்பட்ட செகராசசேகரன் நாடக மன்றம் தனது கன்னிப்படைப்பாக இக்கோயிலின் முன்றிலில் முதன்முதலாகக் கர்ணன் என்ற நாடகத்தை மேடையேற்றியது. இரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்ற இக்கர்ணன் நாடகம் யாழ்குடாநாட்டின் பலபாகங்களிலும் மேடையேற்றங்கண்டது. பொலிஸ் சண்முகநாதன், பொன் சந்திரலிங்கம், (சல்லியன்) பஞ்சாட்சரம், சபா சிவநேசன், இலங்கையர், கைலாயபிள்ளை, அழகரத்தினம், அம்பலவாணர், ந.பரமேஸ்வரன், பிரபல பெண்பாத்திர நடிகர் நடராசாவின் பேரன் ந.சிதம்பரேஸ்வரன் முதலானோர் இந்நாடகத்தில் நடித்தனர். இந்த நாடகம் மூலம் பெற்ற வெற்றியினால் மேலும் வீரகுமாரன். அம்பிகாபதி போன்ற நாடகங்களை இணுவில் செகராசசேகரன் நாடக மன்றம் தயாரித்துப் பல ஊர்களிலும் மேடையேற்றியது.

1975 ஆம் ஆண்டு சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இணுவில் ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய ஆதரவில் கந்தசுவாமி கோவில் முன்றிலில் விடிய விடிய நடந்த நவரசக்கலை நாடகவிழா இணுவிலின் நாடகக்கலை வரலாற்றில் குறிப்பிடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கதொரு விழாவாக விளங்கியது. இவ்விழா மேடையில் அம்பிகாபதியென்னும் ஆடல் பாடல் நிறைந்த சரித்திர நாடகம், நேற்றுவந்தவள் என்னும் சமூக நாடகம், விசுக்கோத்தனே மாப்பிள்ளை எனும் நகைச்சுவை நாடகம் என்பன அரங்கேறின. இணுவிலின் இளந்தலைமுறையினர் பலர் இந்நாடகங்கள் மூலம் அறிமுகமாயினர்.

நவீன நாடகங்களின் ஆற்றுகைகளுடன் நாடகத்துறை வளர்ச்சி பெறுவதும் நாடக அரங்கியல் ஒரு பாடத்துறையாக யாழ் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படுவதுமான இக்காலத்தில் இத்துறையில் இணுவில் இளைஞர்களான த.சிவகுமாரன், நாக.சிவசிதம்பரம், ந.ஞானசூரியர், க.ஸ்ரீகந்தவேள் முதலியோர் ஈடுபாடு காட்டிவருகின்றனர். இணுவில் இளந்தொண்டர் சபையினர் மரபுசார்ந்த இசைநாடகங்களான வள்ளிதிருமணம், சத்தியவான் சாவித்திரி, மயான காண்டாம் முதலிய நாடகங்களை மேடையேற்றிப் பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளனர். இவர்களுள் இ.பாலராசன், நா.கிருபாகரன், வ.செந்தில்நாதன் ஆகியோர் தொடர்ந்தும் செயற்படுகின்றனர்.

இணுவில் கிழக்கில் பிரபல நாவல், சிறுகதை எழுத்தாளர் கே.எஸ்.ஆனந்தனின் படைப்பான சாம்றாட் அசோகன் மற்றும் இரு நாடகங்கள் மேடையேறின. இவரது நாடகங்களை பொ.சர்வேஸ்வரனின் நெறியாள்கையுடன் காரைக்கால் சிவன் கோவிலடியைச் சேர்ந்த இளைஞர்கள் காரைக்கால் அம்பலவாணர் கலையரங்கில் மேடையேற்றினர். இவர்களது நாடகங்கள் பல சிறப்பம்சங்களும் சிறந்த நடிப்பும் காரணமாகப் பலரையும் கவரும் பாங்கு கொண்டவையாகும்.

பரவலாக இணுவிலில் கலைகள் வளரும் போக்கில் அன்றுதொட்டு, இன்றுவரை நாடகத்துறையில் நடிகர்களும் நாடக ஆக்கங்கள் செய்வோரும் பயிற்றுவோரும் காலத்துக்குக் காலம் ஏற்படும் நவீன முறைகளைக் கையாண்டு இணுவிலில் நாடகத்துறைக்குப் புத்துயிரூட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

**பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேடைக்கூத்து - குரங்காட்டம்

இணுவைத் திருவூரில் தோன்றிய இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் ஒளியுடன் பிரகாசித்த பலர் இருந்தனர். நாடகப் பிரிவில் உபபிரிவுகளான மேடைக்கூத்து, மேடை நாடகம், நாட்டார் பாடல் போன்றவற்றில் பிரகாசித்த பலரும் இவ்வூருக்கு அணி சேர்த்தனர்.

இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன் இணுவில் - கோண்டாவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தை மையமாகக் கொண்ட சித்தர் ஆறுமுகம் சந்நியாசியார் அவர்கள் பெல்லி, சூனியம், தீராதநோய் ஆகியவற்றினால் நலிவுற்றுத் தன்னை வந்து அணுகுவோருக்கு வேண்டியன செய்து காப்பாற்றினார். இவ்வாறு முறையிடுவோரது வீடுகளுக்கு ஒரு குறிப்பிட்ட நாளில் இரவில் சென்று குறைதீர்ப்பது வழக்கம். இவர் வீடுகளுக்குச் செல்லும்போது பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில் பறைமேளம், உடுக்கு, சங்கு, சேமக்கலம் ஆகிய கருவிகள் ஒலிக்கத் தனது பணியாட்களுடன் செல்வார். இவர் செல்லும்போது முகமூடி அணிந்து அரங்கேற்ற உடையணிந்து வேடதாரிகளும் பார்வையாளரும் பின்தொடர்வர். வேடதாரிகள் சந்திகளில் பறை மேளம் மற்றும் கருவிகளின் இசைக்கேற்ப ஆடுவார்கள்.

இக்கூத்து ஆடுவோரில் திரு.பொ.பரமலிங்கம் என்பவர் குரங்கு வேடமணிந்து செல்வார். ஒருநாள் உற்சாகமின்றி இருந்த பரமலிங்கத்தின் கையில் ஒரு பிரம்பைக் கொடுத்து உற்சாகமாக ஆடுமாறு சந்நியாசியார் பணித்தார். ஏறக்குறைய இருபது வயதுடைய திரு.பரமலிங்கம் அவர்கள் அன்று முதல் உற்சாகத்துடன் துள்ளிக் குதித்து ஆடத்தொடங்கினார். அன்றிலிருந்து இவரது குரங்காட்டம் வெகுசிறப்பாக அமைந்தது. இவர் குரங்காட்டதைத் தொடர்ந்து திறமையுடன் ஆடிவந்தார். இவ்வேடதாரிகளுக்குத் தனது நாட்டுப் பாடலாலும் சேமக்கலத்தின் தாளஒலியாலும் உற்சாகமூட்டியவர் திரு.சங்கரப்பிள்ளை தம்பையா அவர்கள். இவர் உடுக்கும் அடித்துத் தனது திறமையைக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய 35 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் காரியாதிகாரியாக இருந்த திரு.செ.சிவஞானம் அவர்கள் யாழ்ப்பாண நகரமக்களின் மாலைப் பொழுதுக்காக யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வார். ஒரு வருடக் கலைநிகழ்ச்சிக்காகத் தனது பிரிவுக் கிராம சேவையாளர்கள், பிரமுகர்கள் மூலம் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தபோது மஞ்சத்தடி கிராம முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் நாட்டுக்கூத்து, நாட்டுப்பாடலை பிரதிபலிப்பதன் பேரில் "குரங்காட்டம்" என்னும் நிகழ்ச்சி நிரலிடப்பட்டது.

அன்று ஒரு நல்ல பொன்மாலைப் பொழுதில் கலை நிகழ்ச்சிகளை அனுபவிக்கவென வந்த ஆயிரக்கணக்கான ரசிகர்கள் திறந்தவெளி அரங்கில் கூடிவிட்டனர். சில நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. பிற்பகல் எட்டுமணியளவில் கிடைத்த ஒலிபெருக்கி அறிவித்தலில் மஞ்சத்தடி கிராம முன்னேற்றச் சங்கம் வழங்கும் "குரங்காட்டம்" என்னும் நிகழ்ச்சி நடைபெறும் என்றிருந்தது. திறந்த வெளியரங்கு மேடையின் திரை விலகுகிறது.

ஒரு வயோதிபர் இடுப்பில் ஒரு நாலுமுழ வேட்டியின் மேல் ஒரு சால்வை சுற்றிக்கட்டியவர் மேலாடை ஏதும் அணியவில்லை. நன்கு சீவி முடித்த குடுமியும், நெற்றியில் பெரிய குங்குமப்பொட்டும், கையில் சேமக்கலம் அணிந்து அடித்துக்கொண்டு அனுமாரின் துதிப்பாடல் பாடுகிறார். பாடும்போது பாட்டுக்கும் தாளத்துக்கும் ஏற்றபடி தலையும் உடம்பும் ஆடியசைய, நின்ற நிலையில் முன்பக்கம் சாய்ந்து கவிந்த நிலையில் உற்சாகத்துடன் காணப்படுகின்றார். இவர் வேறுயாருமல்லர். நாட்டுப்பாடலில் விற்பன்னரும் இணுவில் கிழக்கைச் சேர்ந்தவருமான சங்கரப்பிள்ளை தம்பையா அவர்களே. இவரின் இணையாக ஆர்மோனியம் வாசிப்பதில் சிறந்தவரான அமரர் சரவணமுத்து அவர்கள் தமது திறமையால் மிக உச்சத்தொனியில் ஆர்மோனியம் வாசிக்கிறார். ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிடங்களாகியும் ஆட வரவேண்டிய குரங்கைக் காணவில்லையே என அங்கலாய்த்த பார்வையாளர்கள் கூச்சல் போடுகிறார்கள். அடுத்தபாடல் தொடங்குகிறது. அமைதி மேலும் குலைகிறது.

ஏற்கனவே மேடையின் கூரையுடன் இணைக்கப்பட்டிருந்த வளைமரத்தில் ஏறியிருந்த குரங்கு எவரும் பாராத வகையில் மிக்க ஆவேசத்துடன் மேடையின் நடுவே வந்து குதித்தது. குதித்ததும் குரங்கின் இயல்பான அங்க அசைவுச் சேட்டைகளுடன் எழுந்து பாட்டுக்கும் தாளத்துக்கும் ஏற்ற வகையில் உண்மையான குரங்கின் ஆட்டம்போல் ஆடத் தொடங்கியதும் அமைதி நிலவியது. பல்லாயிரம் மக்களும் கண்இமை வெட்டாமல் ஆர்வத்துடனும் மெய்மறந்தும் ரசித்தனர். வேறுசில பாடல்களும் விதம்விதமான குரங்காட்டத்தை அறிமுகஞ் செய்தன. அரைமணித்தியாலத்திற்கு மேல் சிறப்பாக நடைபெற்ற குரங்காட்டம் என்ற மேடைக்கூத்து அனைவரையும் தன்பால் ஈர்த்ததில் வியப்பில்லை. நிகழ்ச்சிகள் யாவும் முடிவுற்றதும் நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சன உரையில் குரங்காட்டம் மிகப் பிரமாதமாகப் புகழப்பட்டது. இதனால் கலைஞர்கள் மூவரும் பெருமையால் சிலிர்த்தனர்.

இணுவில் கலைஞர்கள் எத்துறையிலும் தமது கடமையைத் திறம்பட நிறைவேற்றுகின்றனர். குரங்காட்டம் நிகழ்ச்சியில் பங்கு பற்றிய மூவரும் வயோதிபம் காரணமாக மறுமையெய்தியபோதும் இன்றும் எமது மனக்கண்ணில் பெருமையுடன் பிரகாசிக்கிறார்கள். பரமலிங்கம் அவர்கள் தொடர்ந்து குரங்காட்டம் ஆடியவர். தனது கலை சிறக்க அனுமாரை இடையறாது தியானித்து வெற்றிகண்டவர். இறுதிக் காலத்திலும் தன்னால் ஆடமுடியாவிட்டாலும். அனுமாரை நினைத்து விபூதி போட்டுப் பிணியாளரைக் குணப்படுத்தியவர். ஆர்மோனியம் வாசித்த அமரர் சரவணமுத்து அவர்கள் இளம்பராயத்தில் இருந்தே ஆர்மோனியம் வாசித்துப் பிரபல்யம் அடைந்தவர். நாடகங்களிலும் திறமையாக நடித்துப் பாடி மக்களை இன்புறச் செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ச.தம்பையா என்பவர் ஆறுமுகம் சந்நியாசியாரின் பெல்லி, சூனியம், கழிக்கும் நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது அவருடன் செல்லும் வேடதாரிகளின் ஆட்டத்திற்காகச் சேமக்கலம் உடுக்கு ஆகிய இசைக்கருவிகளை உற்சாகத்துடன் அடித்தவர். இவரது சேவை இறைதொண்டாகவே கருதப்படும். கோவில்களில் நடைபெறும் வைபவங்களில் கரகம், கூத்து ஆகிய நிகழ்ச்சிகளிலும் இளந்தாரி கோவிலில் நடைபெறும் வருடாந்தப் பெரும் பொங்கலிலும் சேமக்கலம் அடித்து நன்கு பாடவல்லவர். இவர் பொருளீட்டலன்றி இறை சேவையாகவே இவற்றைச் செய்தவர். சிறந்த ஆற்றல் இவரது இரத்தத்தில் கலந்திருந்தது எனலாம். இவரது ஞானத்தால் இவரது பிள்ளைகள் யாவரும் சங்கீதம், பண்ணிசையில் சிறந்து விளங்கு கின்றனர். வெளி நாடுகளில் வசிக்கும் மகள் கனடாவில் இக்கலையில் சிறந்து செயற்படுவதுடன் வானொலி நிகழ்ச்சி களிலும் பங்குபற்றுகிறார். தம்பையாவின் பேரப்பிள்ளைகளில் அநேகர் பண்ணிசையில் தம்மை அர்ப்பணித்துள்ளனர். குரங்காட்டம் என்னும் நிகழ்ச்சியால் இணுவையூர் சிறந்த பெருமையை அடைகிறது.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சீரிணுவைத்திருவூரில் விவசாயமும், கைத்தொழில் வளமும், இதர சேவைகளும்.



"மேழிச்செல்வம் கோழைபடாது"

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாதா எங்கள் குலமாதா

கோமாதா என்பவள் தேவலோகத்துக் காமதேனு என்னும் அற்புதப் பசு. வேண்டுவோர் வேண்டுவன எல்லாம் தருபவள். மகாலட்சுமியின் அவதாரமானவள். இறைவனை வணங்கும் எவரும் கோமாதாவை வணங்கத் தவறுவதில்லை. தெய்வீகப் பசுவின் வலது கொம்பில் பிரமனும், இடது கொம்பில் விஷ்ணுவும் இருகொம்புகளுக்கும் நடுவே உள்ள இடத்தில் சிவபெருமானும் உள்ளதாக ஐதீகம்.

தேவலோகத்தில் உள்ள காமதேனுவிடம் பெறும் பல செல்வங்களையும் பூவுலகில் வாழும் யாவரும் பெறும் வண்ணம் காமதேனுவின் மகளான நந்தினி என்னும் சிறந்த பசுவை வசிட்ட முனிவர் இவ்வுலகத்திற்கு அழைத்து வந்து தமது ஆச்சிரமத்தில் வளர்த்துச் சகல செல்வங்களையும் பெற்றார் என்பது புராணக் கதை. இதே இனங்களான பசுக்களை இவ்வுலகில் வாழும் பலரும் தமது இல்லம் சிறக்கத் தகுந்த முறையில் நன்கு பராமரித்துப் பயனடைகின்றனர்.

பசு இயற்கையாகவே மிகவும் சாந்தமான மிருகம். இது விரும்பியுண்பது பசும்புல். ஒருவன் தன்வீட்டில் ஒரு பசுவை வளர்க்கும் போது மகாலட்சுமியையும் வணங்குகின்றான். சுத்தமான தொழுவத்தில் அன்போடு ஆதரித்து நல்ல பசும்புல் கொடுத்தால் அவள் தருவது பால். இது சத்துள்ள உணவாகும். பாலிலிருந்து தயிர், தயிரிலிருந்து மோர், வெண்ணெய், வெண்ணெயிலிருந்து பசுநெய் என்பன பெறலாம். இவை யாவும் பாலின் அம்சங்களாகும். கோமயம் என்ற பசுஞ்சாணம் கோசலம் யாவும் சிறந்த பயனுள்ளவை.

இறைவனின் அபிஷேகத்தில் பால் பிரதான பொருள். பசுவின் பாலைவிட உலகிலுள்ள வேறெந்த ஜீவராசிகளின் பாலும் இறைவனின் அபிஷேகத்திற்குப் பயன்படுவதில்லை. பசுவின் பாலின் மகிமை இறைவனுக்கு ஏற்றது. பசும்பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பன பஞ்சகௌவியமாகும். இவை யாவும் இறைவனுக்கு உகந்தவை. தமிழ் மக்களின் புத்தாண்டுத் தினத்தன்று தலையில் வைத்து நீராடும் மருத்துநீரில் பஞ்சகௌவியம் இன்றியமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்கள் சிவனை வழிபடுங்கால் சிவசின்னங்களை அணிவது சிறப்பானது. சிவசின்னத்தில் முக்கியமானது. திருநீறு என்னும் விபூதி. இது பசுவின் சுத்தம் செய்யப்பட்ட பசுஞ் சாணத்திலிருந்து கிடைக்கிறது. பசுஞ்சாணியானது விவசாயத்தில் இடுபொருளான எருவாகவும், இல்லங்களைத் தூய்மைப் படுத்தவும், வீடு மெழுகவும் பயன்படுகிறது. கோமயம், கோசலம் இரண்டும் சிறந்த கிருமிநாசினியாகவும் பயன்படுகின்றன. எம்மூரில் வசித்தவர்கள் பெரும்பான்மையானோர் விவசாயிகள். இவர்கள் குடியிருந்த வீடுகளை மெழுகிச் சுத்தஞ் செய்யவும், தோட்ட நிலங்களுக்கு இடும் பசளைக்கான எருத்தேவைக்காகவும் தங்கள் வீடுகள் தோறும் வீட்டுக்கொரு பசுவேனும் வளர்த்தனர். பசு இனங்களுக்குரிய உணவாகத் தமது தோட்ட நிலங்களில் பயிர்களினூடே வளரும் புற்களைப் பிடுங்கி எடுத்து வந்து கொடுத்து மகிழ்ந்தனர்.

வீட்டில் பசுக்களை வளர்த்துப் பல நன்மைகளையும் பெற்று நல்லறமான இல்லற வாழ்வு வாழ்ந்துகாட்டியவர்கள் எம் ஊர்மக்கள். இன்றும் எம் ஊரில் வாழையடி வாழையாக வாழ்ந்து பசு வளர்த்துப் பல பேறு பெற்று வருகின்றனர். கோமாதா எங்கள் குலமாதா எங்களுக்குப் பல பயன்களைத் தந்து எங்களை வாழவைக்கிறாள் என்றால் மிகையாகாது.

தெய்வீகங் கொண்ட இப் பசுவினங்களை பகுத்தறிவுடையோர் எவரும் துன்புறுத்த முன்வரார். பல இடங்களில் பசு வதைக்கப்பட்டுப் புலையரினால் உணவாகப் பாவிக்கப் படுகிறது. இதனால் நற்சிந்தனையுடையோர் வருந்தத் தவறுவதில்லை. அன்று பசுவதையை எதிர்த்து மனம் வருந்திய யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச சுவாமிகள் இந்த நாட்டை விட்டோடியது யாவரும் அறிந்ததே.

எம்மூரில் பசுவதை செய்து விற்பனை செய்யும் நிலையம் ஏதும் செயற்படாதது எம்மூரின் சிறப்பாகும்.

**மு.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகத்தில் ஊறிய இம்மண்ணின் விவசாயக்களம்

தெய்வீகம் இறையன்பு,கலைஞானம், பொருந்திய இணுவை மண்ணில் நன்னீர் சுரப்பதனாலும் மண்வளம் மிகுந்து இருப்பதாலும் விவசாயஞ் செய்யப் பல வாய்ப்புக்கள் அமைந்திருந்தன. இணுவையூரில் நெல் விளையும் சாத்தியம் குறைவானபோதும் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையை மக்கள் மேற்கொண்டனர். எம்மூர் மக்களின் அறுதிப் பெரும்பான்மையினர் விவசாயிகள்.

முற்காலத்தில் விஞ்ஞானம் விரிவடையாக் காலத்தில் இயந்திர வசதிகளோ நவீன உபகரணங்களோ கிடையாது. ஒரு விவசாயியை நோக்கினால் அதிகாலையில் எழுந்து தனது காலைக் கடன்களை நிறைவேற்றியதும் "பூக்கொண்டு தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார்" என்ற கடமையைச் செய்ததும் தனது விவசாய பூமிக்குச் செல்கிறான். தனது தோட்டத்தில் விவசாயப் பயிர்கள் நாட்ட முன் நிலம் பதப்படுத்தல், பசளையிடல் ஆகியவற்றைக் கவனிக்கிறான். நாட்டப்படும் பயிர்களைக் காலநிலை, சுவாத்தியத்திற்கு ஏற்றவாறு பயிரிடுகிறான். மாரிகாலத்தில் புகையிலைக் கன்று, உருளைக் கிழங்கு, காய்கறிப் பயிர்களையும், கோடைகாலத்தில் வெங்காயம், சாமை, குரக்கன், மரவள்ளி போன்ற ஏனைய பயிர்வகைகளையும் பயிரிடுகிறான். பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சுவது துலாவின் கொடியில் பட்டை (பனையோலையால் இழைக்கப்பட்ட தண்ணீர் அள்ளும் கருவி) என்னும் கருவிகட்டி கிணற்று மிதியில் ஒருவர் நின்று தண்ணீர் எடுத்து வாய்க்காலில் விடுவார். இருவர் துலாவில் ஏறித் தண்ணீர் எடுப்பதற்கேற்பத் துலாவில் முன்சென்று பின் வருவார். இலகுவாகக் கிணற்று நீர் வெளிவந்து வாய்க்காலில் செல்லும். வாய்க்காலில் செல்லும் நீரைப் பயிர்களுக்கு ஏற்றவகையில் மடைமாற்ற ஒருவர் கடமையாற்றுவார். இந்த நான்கு பேரும் ஒருநாளில் அதிகாலை முதல் பிற்பகல் வரை குறைந்நது 5000 கன்று நிலப் பரப்பில் நீர்ப்பாய்ச்சுவர். நான்கு பேரின் மனிதவலு இதற்குத் தேவைப்பட்டது. வேறு செலவில்லாமல் நீர்ப்பாய்ச்சலை மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட் செல்ல முறைக் கணக்கில் மேற்கொண்டார். புகையிலை காசுப்பயிர் முதலீடும். வெங்காயமும் மீத லாபத்ததைத் தரும். ஏனைய காய்கறி வகைகள், கிழங்கு வகைகள் நன்கு லாபம் தரும். சந்தையிற் கொண்டு சென்று சந்தைப்படுத்தி அதிக பயன் அடைந்தனர். தானிய வகைகளைத் தமது உணவுத் தேவைக்காகச் சேமித்து வைத்துத் தேவைக்கேற்பப் பயன் படுத்தியும் எஞ்சியதைப் பிறருக்குக் கொடுத்தும் இன்புற்றனர்.

சாமை, குரக்கன், பயறு போன்றவற்றின் தானிய அறுவடையின் பின் எஞ்சியுள்ள வைக்கோல் போன்ற எஞ்சிய பொருட்களைத் தமது வீடுகளில் கால்நடைகளின் உணவாகப் பயன்படுத்தினர். இவர்களால் வளர்க்கப்படும் கால்நடைகளில் எருதுகளை விவசாய நிலங்களை உழவு செய்யவும் வண்டி இழுக்கவும் பயன்படுத்தினர். பசுக்கள் பால் வளம் சேர்த்தன. இதனால் யாவரும் சிறப்பான சத்துணவையுண்டு நோய் நொடியின்றிச் சுகதேகிகளாக வாழ்ந்தனர்.

விஞ்ஞான வளர்ச்சியால் இயந்திர பாவனைகள் கூடவும் நவீன உபகரணங்கள் கிடைத்தன. பின் வந்த விவிசாயிகளுக்கு முன்பிருந்த கமக்காரரின் திடகாத்திரமும் உற்சாகமும் கூடிய வருமானமும் பெறுவதால் ஏற்பட்ட மனச் சந்தோசம் கிடையாது போயிற்று. உடல், உள நலமின்றி போசாக்கற்ற நிலையில் இருக்கிறார்கள். ஒரு சிலர் விவசாயத் தொழில்களுடன் ஓய்வு நேரங்களில் வருமானம் தரக்கூடிய துணைத் தொழில்களையும் சேர்த்துக்கொண்டனர். இன்றைய சூழலில் விவசாய நுண்ணறிவினால் அதிக விளைச்சலையும் கூடிய வருமானத்தையும் குறுகிய நிலப்பரப்பில் பயிர் செய்து ஈட்டியோருமுளர்.

இணுவில் கிழக்கைச்சேர்ந்த ஓர் அரச ஊழியர் சிறப்பான விவசாயியின் மகன் தனது பணியுடன் சிறிதளவு நிலப்பரப்பில் விவசாயத்தையும் மேற்கொண்டார். உதாரணமாகத் தனது விவசாய நுண்ணறிவையும் கடின உழைப்பையும் சாதகமாகப் பயன்படுத்தி ஏறக்குறைய 250 கன்று பிரதேசத்தில் (நிலப்பரப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று) வெளிநாட்டு இனப்பயிரான லீக்ஸ் என்னும் பயிரை நாட்ட உத்தேசித்தார். 100 கிறாம் லீக்ஸ் விதைகளை வாங்கி நாற்று மேடையொன்று தாமே தயாரித்தார். இதே காலத்தில் குறிப்பிட்ட காணியில் பசுந்தாட் பசளைக்காக 3 கிலோ சணல் விதைத்து 45 நாட்களில் அறுவடை செய்து நிலத்தில் தாழ்த்து மேலெருவும் போட்டு நிலத்தைச் செப்பனிட்டார். லீக்ஸ் நாற்று மேடை 60 நாட்களில் நிலத்தில் நடத்தயாராக இருந்த சமயம் நடுகை நிலம் போதிய பசளையுடன் பதப்படுத்தப்பட்டு இருந்தது. தாமாகவே அவற்றை நாட்டி 3 மாதங்களில் பகுதி பகுதியாக அறுவடை செய்து சந்தையில் விற்பனை செய்து பெற்ற வருமானம் 16,000 ரூபா. இவரது பயிர்ச் செய்கைக்கான மொத்தச் செலவீனம் 1000 ரூபா மட்டுமே. மேடை தயாரித்தல், நீர் ஊற்றல், நடுதல், களைகட்டல், அறுவடை, விற்பனை யாவும் அவரது சொந்த முயற்சியாகும். இவர் பயிரிட்ட காலம் இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்பாகும். இவரது செய்கை இத்துடன் நின்றுவிடவில்லை பீற்றூட், கரட் , தக்காளி, மிளகாய், கறிமிளகாய், போஞ்சி முதலிய பல காய்கறி வகைகளையும் நாட்டினார். இவரது வெற்றியை அறிந்து தாமும் பின்பற்றிய பல விவசாயிகள் செய்கை முறை யாவற்றையும் இவர் மூலம் கையாண்டு இன்றும் பலன் பெறுகின்றனர்.

மேழிச் செல்வம் கோழைபடாது என்ற முதியோர் வாக்குப் படி நன்கு தன்னை அர்ப்பணித்து விவசாயஞ் செய்பவன் எவனும் நற்பலன் எடுத்து இனிது வாழ்வான். இவ்வூர் விவிசாயிகள் விடாமுயற்சியுடன் ஒரு குறிப்பிட்ட வேலையை நிறைவேற்றியே தீர வேண்டுமென்பதால் பசி, உறக்கம், அத்தனையும் மறந்து செயல்படுகின்றார்கள். "மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் செவ்வி அருமையும் பாரார் தம்கருமமே கண்ணாயினார்" என்ற முதுமொழிக்கிணங்க அரும்பாடுபட்டுக் கடுமையாக உழைக்கிறார்கள். இப்படியான சுறுசுறுப்பான பல விவசாயிகளின் அர்ப்பணிப்பால் இணுவில் நிலப்பரப்பில் இணுவில் வடக்கு மத்தி, மேற்கு, கிழக்கு எனப் பலவிடங்களிலும் பயிர்கள் பச்சைப்பசேலென்று கிராமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் பரந்து கண்ணுக்கும், இதயத்துக்கும் குளிர்ச்சியைத் தருகிறது. பனிக்காலங்களில் பனிபெய்து பயிர்களின் இலைகளில் நீர் சொட்டச்சொட்ட கடுங்குளிரையும் பாராது நம் விவசாயிகள் உற்சாகத்துடன் கடினமாக அதிகாலையிலிருந்தே வேலைசெய்து நற்பலன் அடைகின்றனர். ஏர்முனைக்கு நேரெதுவுமே இல்லை என்ற வாக்குப்படி ஓர் இணுவில் விவசாயி பெருமையடைகிறான். இணுவில் அன்னையவள் தன் மைந்தர்களின் செயலைக்கண்டு உள்ளம் பூரிக்கிறாள்.

## விவசாயப்பண்ணையும், விவசாயப் பாடசாலையும்

(முகாமை – யாழ்ப்பணக்கல்லூரி வட்டுக்கோட்டை)

இணுவில் மண்வளம், நீர்வளம் கண்டு வியந்த யாழ்ப்பாணக் கல்லூரிச் சமூகம் தமது சேவைத்திறனை விரிவுபடுத்தும் நோக்கமாக இணுவில் புகையிரத நிலையத்திலிருந்து கிழக்கே செல்லும் பெரு வீதியின் 150 யார் தொலைவில் பரந்த பெருநிலப் பரப்பில் விவசாயப் பண்ணை அமைத்துள்ளது. நாற்று மேடைகள், கனிதரும் விருட்சங்களின் சிறுகன்றுகள், பூவினங்கள், புல்லினங்கள், கால்நடைகள் கோழிப் பண்ணை போன்ற பல பிரிவுகளையும் அமைத்து விவசாயம் படிக்க விரும்பிய மாணவர் களுக்கு 6 மாதப் பயிற்சியளித்து சான்றிதழும் வழங்குகின்றது. இதனால் அயற்கிராம மாணவர்களுடன் இவ்வூர்ப் பிள்ளைகளும் பயிற்சி பெற்றுப் பயனடைகின்றனர்.

## அண்ணா கோப்பி விவசாயப்பிரிவு

அண்ணாகோப்பி நிறுவனத்தினர் இணுவில் புகையிரத நிலையத்திலிருந்து 75 யார் தொலைவில் ஒரு விவசாயப் பண்ணை அமைத்து நானாவித பழங்கள், காய்கறிகள், இலைகள், வாழை, கால்நடை, கோழிப்பண்ணை, நாற்று மேடை ஆகியவற்றை அமைத்துத் தமது சேவையை விசாலித்துள்ளனர். இதனால் பலர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். மேலும் பலர் தனியார்களாக நாற்று மேடைகள் பல்லின ஒட்டுக்கனி மரங்களையும் வியாபார நோக்கில் ஆரம்பித்துச் சேவை செய்கின்றனர்.

மு.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் தொழில்வளமும் இதர சேவைகளும்

**கைத்தொழில் கூட்டுறவுச் சந்தை , வர்த்தகம்.**

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்று பாரதியார் பாடிய பாடலின்படி இணுவையூர் மக்கள் விவசாயத்தைத் தமது பிரதான தொழிலாகக் கொண்டபோதும் விவசாய வேலையில் ஓய்வு கிடைக்கும் போது தாம் விளைவிக்கும் புகையிலையை ஒரு பகுதி மூலப்பொருளாகக் கொண்டு சுருட்டுக் கைத்தொழிலையும் ஒரு பிரதான பணம் பெறும் தொழிலாகக் கொண்டனர். இணுவிலில் அனேக சுருட்டுத் தொழிற்சாலைகள் செயற்பட்டன. இக்கிராமத்தில் ஓலையை மூலப் பொருளாகக் கொண்டு பன்ன வேலையும் பெருமளவில் செயற்படடது.

இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பின்னர் உணவு உடை போன்றவற்றிற்குப் பல நெருக்கடிகள் வந்தபோது அரசாங்கத்தால் நெசவுத்தொழில் ஆரம்பிக்கப்பட்டது. படித்து வேலையற்று மேற்படிப்புப் படிக்க முடியாத அனேக பெண்கள் நெசவுப்பயிற்சி பெற்று இத் தொழிலைக் கையாண்டு போதிய வருமானம் பெற்றனர்.

**அண்ணா தொழிலகம்**

இணுவில் தெற்கில் வசிக்கும் பிரபல வர்த்தகப் பிரமுகர் பொ.நடராசா அவர்கள் துணிவுடன் அண்ணா தொழிலகம் என்ற நிறுவனம் ஒன்றை ஆரம்பத்தில் சிறிதளவில் தொடக்கினார். முதலில் கோப்பித்தூள் தயாரித்து பல அளவுகளிலும் பொதி செய்து விற்பனையாளரின் உதவியுடன் இல்லங்கள், கடைகள் தோறும் விநியோகித்து இன்று இந்த நிறுவனம் வீட்டுப் பாவனைக்குரிய கோப்பி, தேயிலை, மிளகாய்த்தூள், அரிசிமா, மற்றும் பண்டைய இணுவில் மக்களின் சிறப்பான விருப்பமான உணவு வகைகளான ஒடியல்மா, குரக்கன்மா, சோயா மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துள்ள தானிய வகை சேர்த்த ஜீவாகாரம் என்னும் சத்துள்ள (சிறுவர் உணவுக்காக) மா மற்றும் ஊதுபத்தி, சந்தனம், விபூதி, போன்ற பல பொருட்களைத் தமது நிறுவனத்தில் தயாரித்துப் பற்பல நிறைகளிலும் பொதி செய்கின்றனர். இந்த நிறுவனத்தில் நூற்றுக்கணக்கான வறிய பெண்களும் ஆண்களும் கடமையாற்றுவதுடன் கைநிறைய ஊதியமும் பெறுகின்றனர்.

பொதி செய்யப்பட்ட பொருட்கள் நாட்டின் பல பாகங்களிலும் இவர்களது சொந்த வாகனம் மூலம் விற்பனை நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. மேலும் முகாமையாளரின் கண்காணிப்பில் நாட்டின் பல்வேறு பிரதான நகரங்கள் பட்டினங்களில் வியாபார நிலையங்கள் அமைக்கப் பட்டு உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவரது நிறுவனத்தில் அனேகர் வியாபாரப் பணியில் ஈடுபட்டு நன்மதிப்பும் பெறுகின்றனர். வேறு ஒரு சிலர் வெவ்வேறு பொருட்களையும் தமது சொந்த முயற்சியால் தயாரித்து விநியோகித்துப் பயனடைகின்றனர். மேலும் இக்கிராமத்தில் பல அரிசி ஆலைகளும் செயற்படுவதால் பலர் நன்மையடைகின்றனர்.

## லோகேஸ் கூரைத்தகட்டுத் தொழிலகம்

இந்த நிறுவனம் இணுவில் மேற்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கிராம அலுவலர் திரு.க.வேலும்மயிலும் அவர்களின் அரிய புத்திரன் லோகேஸ்வரன் அவர்களால் இணுவில் தெற்கில் நான்கு ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது. இவர் ஜேர்மனியில் வேலை செய்த காலத்தில் ஜேர்மன் நாட்டுக் கைத்தொழில் நிறுவனத்துடன் ஏற்பட்ட தொடர்பில் இவ்வூரில் மேற்கூறிய தொழிலகம் அமைய நற்பயன் கிடைத்தது. ஜேர்மன் நாட்டு நிறுவனம் இலங்கையில் வந்து அரசசார்பற்ற நிறுவனம் G.T.Z என்ற பெயரில் பதிவுசெய்துள்ளது. ஜேர்மன் நாட்டு மக்களின் பங்களிப்பில் யாழ் மாவட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனமாக இயற்கும் வதிவிட அலுவலகம், களஞ்சியம் அமைக்கவெனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவசதிகளும் கொண்டதாக இணுவில் கந்தசுவாமி கோயிலின் தெற்கு வீதியில், பரராசசேகரப் பிள்ளையார் கோயில் வாசல் சந்தியிலும் இயங்கி வருகிறது. இவர்கள் வடஇலங்கையின் அவசியத் திட்டங்களை நிறைவேற்றுகின்றனர். இவர்களின் திட்டத்தில் வீடுகள் அமைத்துக் கொடுத்தலும் ஒன்றாக இருப்பதால் இப்பகுதியில் வீடமைப்புத் தேவைக்காக உதவும் வகையில் கூரைத்தகடுகள் செய்வதற்கான யந்திரங்களைத் தருவித்து லோகேஸ்வரனின் தொழிலகத்துக்கு வழங்கியதுடன் உற்பத்தியாகும் கூரைத் தகடுகளில் கணிசமான அளவு G.T.Z நிறுவனத்துக்கு வழங்கவும் ஏற்பாடு செய்தனர்.

லோகேஸ் கூரைத்தகடுகள் உற்பத்திக்கென உரிய பல தொழிலாளரை நியமித்து அதிகளவிலான கூரைத்தகடுகளை G.T.Z நிறுவனத்துக்கு வழங்குகின்றனர். மிகுதியானவற்றை உள்ளூரில் பொதுமக்களுக்கு விநியோகிக்கின்றனர். இங்கு உற்பத்தி செய்யும் கூரைத்தகடுகன் சிறந்த தரமுடையவை. குறைந்த விலையில் விற்கப்படுவதால் பொதுமக்களும் கூடுதலாக இவர்களை நாடுகின்றனர். மேலும் சீமெந்தினால் செய்யப்பட்ட கொங்கிறீற் கற்களையும் இவர்கள் தமது தொழிலகத்தில் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர். இவர்களது பணி இவ்வூரில் பெரிய சேவையாக அமைந்துள்ளது.

## மல்ரி ஒயில் (பலவித எண்ணெய் ஆலை)

இணுவில் ஆஸ்பத்திரியின் மேற்குத் திசையில் இந்த நிறுவனம் அமைந்துள்ளது. உள்ளூரில் பெறக்கூடிய தேங்காய்க் கொப்பறாவிலிருந்தும் எள்ளு, வேப்பம் விதை போன்ற எண்ணெய் வித்துக்களை இலங்கையின் பல பாகங்களலிருந்தும் தருவித்தும் யந்திரசாதனம் மூலம் எண்ணெயாக்கி விநியோகிக் கின்றனர். ஏறக்குறைய 15 வருடங்களுக்கு முன்பு இந்த நிறுவனம் உரிய யந்திரங்களைத் தருவித்து மிகப்பெரிய மண்டபத்தில் உரிய இடத்தில் யந்திரங்கள் பூட்டப்பெற்று பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் மூலம் எண்ணெயாக்குவதுடன் கழிவுகளான பிண்ணாக்கு கால்நடை உணவுக்காகவும், விற்பனை நிலையங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு விநியோகிப்பதால் உள்ளூர்ப் பொருட்களான சமையல் எண்ணெய் வகை கால்நடைத்தீன் முதலியன குறைந்த விலையில் தொழிலதிபர் திரு.க.பாலசுப்பிரமணியம் இவற்றைச் சேவையெனச் செய்கின்றார்.

## பிற தொழிலகங்கள்

முன்னர் இயங்கி வந்த சுருட்டுத்தொழில் யுத்தநிலை காரணமாகச் செயலற்றது. நூற்றுக் கணக்கான தொழிலாளர் வேலை செய்த இணுவில் தெற்கில் கனகசபை என்பவரால் நடாத்தப்பட்டது. இதனால் பலர் நன்மையடைந்தனர். வேலை செயலிழந்தபோதும் கனகசபை அவர் களின் மருமகன் து.சிவராசா என்பவர் நாட்டின் பாரம்பரியமான சுருட்டுத்தொழிலைக் கைவிடாது நடாத்தி வருவதால் இன்றும் பலர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சூழலில் தனியார் முதலீட்டில் ஆடைகள் தயாரிக்கும் நிலையங்களும் இயங்குவதால் பல பெண்கள் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர். வேறு பல இடங்களில் ஆடை தயாரிக்கும் இடங்களில் குறைவான ஆண்கள் பணிபுரிகின்றனர். தச்சு வேலைகள் செய்யும் இடங்கள் பல உண்டு. இங்கு தளபாடங்கள் கட்டட வேலைகளுக்கான கதவு, ஜன்னல் வகைகளும் கூரைப் பொருட்களும் செய்யக்கூடிய தொழிலாளர்கள் தச்சுத் தொழிலை வளம்படுத்துகின்றனர். இரும்பு வேலைசெய்யும் கம்மாலைகளும் இப்பிரிவில் இயங்குவதால் மக்கள் தமது இரும்பு வேலைகளை இலகுவாகச் செய்யமுடிகிறது.

## கூட்டுறவு

இத்திருவூரில் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் நாட்டில் ஏற்பட்ட பொருட்கள் தட்டுப்பாட்டைப் போக்கும் நோக்கில் கூட்டுறவுக் கடைகளை நிறுவவேண்டிய நிலை ஏற்பட்டது. தேசிய ரீதியாகக் கூட்டுறவு பிராந்தியப்படுத்த முன்பே வடபகுதியில் கூட்டுறவு நன்கு செயற்பட்டது. இக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது விவசாயப்பொருட்களில் முக்கியமாக வெங்காயம், மிளகாய் போன்ற பொருட்கள் சந்தைப்படுத்துவதிலும் நுகர்ச்சிப் பொருட்களின் இலகுவான விநியோகத்திலும் ஐக்கிய கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் எனப் பலதுறைகளில் பெரிய முன்னேற்றம் கண்டன. இணுவிற் கிராமத்தில், கூட்டுறவுப் பரிசோதகராகவிருந்த அருளம்பலம் என்பவரது உதவியால் பல சங்கங்கள் சிறப்பாக இயங்கின. இணுவில் விவசாயிகளின் வெங்காயம் கொள்வனவு செய்த சங்கம் திறம்பட இயங்கி போதிய லாபமீட்டியதன் பலனாக இன்று இணுவில் கிராமிய வங்கி, புடவை நிலையம் கூட்டுறவுப் பண்டகசாலைக் கிளை, சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இணுவில் உபமொத்த விற்பனை நிலையம் யாவற்றையும் தன்னகத்தே அடக்கி அமைந்துள்ள பெரிய கட்டடம் இணுவில் மக்களின் கூட்டுறவுத்துறை விருத்தியின் எடுத்துக்காட்டாக உள்ளது. கூட்டுறவுத் துறையில் முக்கிய அம்சம் ஊழியர் நேர்மையை கடைப்பிடிக்க வேண்டும். கூட்டுறவாளரும், கூட்டுறவு ஊழியரும் மலிந்த ஊர் இணுவில். இக்கூட்டுறவு ஊழியருள் உயரிய அறிவும், எதையும் செய்யக் கூடிய ஆற்றலும், பொதுவுடமைக் கருத்தும், எவரிடமும் மனிதாபிமானத்துடன் அணுகும் பண்பும், தனது கொள்கைகளை ஆணித்தரமாக வலியுறுத்தும் அஞ்சா நெஞ்சமும் படைத்ததுடன் நேர்மையைத் தனது பிரதான குறிக்கோளாகக் கொண்ட இயல்புங் கொண்டவர் இணுவில் மேற்கைச் சேர்ந்த திரு.க.விசுவலிங்கம் அவர்கள். இவர் இணுவில் மத்தியில் கூட்டுறவு பண்டகசாலை முகாமையாளராகப் பணிபுரிந்து பெருமை பெற்றவர். கூட்டுறவுத் துறை ஒருங் கிணைக்கப்பட்டு வலி தெற்குடன் (சுன்னாகம்) இணைந்த பின் சேவையாற்றும் காலத்தில் இவரது நேர்மைக்கும் கூட்டுறவுத் துறையில் உட்புகுந்த ஊழல் மலிந்தோருக்கும் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகத் தனது சேவையிலிருந்து விலகினார். இவரது திறமை கண்ட இவ்வூர் மக்கள் சுன்னாகம் கூட்டுறவுச் சமாசத்தில் இணுவில் பிரதிநிதியாக்கி ஆளுநர் சபை உறுப்பினராகினர். இவர் கூட்டங்களுக்குச் செல்லும் போது வழங்கப்படும் பிரயாணப்படியைக் கூடத் தனது பெருந்தன்மையால் ஏற்க மறுத்தவர். இணுவையூர் கூட்டுறவுத் துறையால் பெரு நன்மையடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தை

இணுவில் விவசாயிகள் தமது விவசாய உணவுப் பொருட்களை விற்பனை செய்வதன் பேரில் அமைந்த சந்தை தற்போது மருதனார்மடத்தில் மிகப்பெரிய விவசாயிகள் சந்தையாகத் திகழ்கிறது. விவசாயிகளின் பொருள் விற்பனை மூலம் பெறும் வரியை தனியார் குத்தகை எடுத்து உடுவில் பிரதேச சபைக்கு வருடக்குத்தகையாக இருபத்தைந்து லட்சம் ரூபாவுக்கு மேல் ஈட்டிக்கொடுத்தனர். பல ஊர் விவசாயிகளின் ஒத்துழைப்பினால் இச்சந்தை யாழ் மாவடட்டத்தில் மிகப்பெரிய வருமானமுடைய சந்தையாகியுள்ளது.

இத்திருவூரிலமைந்த வர்த்தக நிலையங்கள பல நல்ல முறையில் சேவை செய்கின்றன. இணுவை வர்த்தகர்கள் பலர் நாட்டின் பிரபல இடங்களிலும் தமது தொழிலில் முன்னேற்றம் கண்டுள்ளனர். இவ்வர்த்தகர்களால் பல நன்மைகளும் கிடைக்கின்றன. வியாபாரத் துறையிலும் இவ்வூர் மக்கள் பலர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இணுவில் வைத்தியசாலையின் வடக்கே இணுவில் சந்தை நுகர்வோர் தேவைக்கேற்பக் காய்றி வகைகள், மீன் மற்றும் உப பொருட்கள் விற்கும் மையமும் உடுவில் பிரதேச சபையின் முகாமையில் நடைபெறுகிறது. பொதுமக்கள் இவ்விடத்தில் தமது நுகர்வுப் பொருட்கனைப் பெறுகின்றனர். இத்திருவூரின் பல வர்த்தகர்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் சிறப்புடன் செயலாற்றி எமது மண்ணுக்க்குப் பெருமை சேர்க்கின்றனர்.

## பால் சேரிப்பு நிலையம்

இவ்வூரில் வசிக்கும் கால் நடை வளர்ப்போரின் பசுப்பால் இவ்விடத்தில் சேகரிக்கப்பட்டுத் திருநெல்வேலி மத்திய பால் நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. இதனால் கால்நடை வளர்ப்போர் நன்மை அடைகின்றனர். பால்கொடுப்போர் நாளாந்தம் பால் கொடுப்பதுடன் தமது கால்நடைகளுக்கு வேண்டிய கால்நடைத் தீனியையும் பெற்று இறுதியில் தமது பற்றுவரவைச் சீர்செய்து பணம் பெறுவர். இது கூட்டுறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் நடப்பதால் கொடுக்கும் பாலின் அளவுக்கேற்பச் சிறு தொகை சேமிப்பில் வைக்கப்பட்டு இறுதியில் வழங்கப்படுகிறது. இதனால் கால்நடை வளரப்போர் சிக்கனச் சேமிப்பையும் பேணுகின்றனர்.

## வங்கிகள்

கோயில்வாசல் சந்தியில் இணுவில் கிராமிய வங்கி ஏற்கனவே செயற்பட்டு அரியசேவை புரிகிறது. 01.04.2004 அன்று இணுவில் ஆஸ்பத்திரியின் எதிரில் இலங்கை மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளை தனது சேவை நிலையமொன்றை ஆரம்பித்துள்ளது. இந்த வங்கிச் சேவையை இப்பகுதியில் அமைக்க முன்வந்த கன்னாதிட்டி வங்கி முகாமையாளர் திரு.அ.குகதாசன் அவர்கள் (இணுவை மைந்தன்) தமது அரிய முயற்சியால் இங்கு இதனை நிறுவத் திருவருள் கைகூடியது. அன்றைய தினமே நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்கள் தமது புதிய கணக்கை ஆரம்பித்தனர். இதனால் பல வர்த்தகர்கள் மட்டுமன்றி இவ்வூர் மக்கள் பலரும் நன்மையடைவார்கள். இவ் வங்கிச்சேவை தொடர்ந்து இவ்விடத்தில் புதியதொரு கிளையாக அரிய சேவையாற்றத் திரு.குகதாசன் அவர்களே கவனமெடுத்து ஆவனசெய்ய எல்லாம் வல்ல தெய்வங்கள் உதவட்டும்.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரிணுவைத் திருவூரில் அச்சுக்கலையின் வளர்ச்சி

நல்லை ஆறுமுகநாவலர் காலத்திற்கு முன் ஏட்டுச் சுவடிகளே பாவனையில் இருந்தன. பிற மதங்களின் பிடியில் இருந்து சைவத்தையும் தமிழையும் மீட்டுப் புத்துயிர் கொடுக்க எண்ணி ஆறுமுகநாவலர் அவர்கள் சமயபோதனைக்குரிய நூல்களைத் தேடியெடுத்தும், தேவைக்கேற்ற நூல்களைத் தாமே எழுதியும் அவற்றை அச்சகத்தில் பதிப்பித்து வெளியிட்டு வெற்றிகள் கண்டார். தமிழரின் சமயமும் தமிழ்மொழியும் சிறப்புடன் வீறுநடைபோட்டன. இதனை உணர்ந்த பலரும் இணுவிலில் அச்சுப்பதிப்பகத்தை நிறுவ எண்ணியபோதும் அது கைகூடவில்லை. எம்மூரிற்பலர் இதுபற்றி ஆலோசனை செய்தனர், செயற்படவில்லை. ஒருசிலரின் தூண்டுதலினால் இணுவிலிலிருந்தும் சிலர் 30 ஆண்டுகளுக்கு முன்பு அச்சகப் பணியாற்றத் தொடங்கினர்.

### அம்மா அச்சகம்

இணுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை செல்வரத்தினம் என்பவர் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அச்சுப்பதிக்கும் முறைகளைப் பயின்றதனால் ஏறக்குறைய 20 வருடங்களுக்கு முன் தமது வீட்டில் "அம்மா அச்சகம்" என்ற பதிப்பகத்தை நிறுவி நடாத்தி வந்தார். இவரது உடல்நிலை தளர்வுற்றதால் அவரது சகோதரர் செ.ஸ்ரீகிருஷ்ணராசா என்பவர் சகோதரரின் நிறுவனத்தில் உதவிப்பணியாற்றுகிறார். அச்சகம் இவரது விடாமுயற்சியால் தொடர்ந்து இயங்குகின்றது.

நவீன இயந்திர மயமாகும் காலப்போக்கில் கணனி எல்லா இடங்களிலும் அறிமுகமாகியது. கணனியில் படங்கள், எழுத்தமைப்புக்கள் யாவும் திறம்பட வடிவமைத்து ஓவ்செற் அச்சுப்பதிப்பில் நூல்கள் சிறப்பாக வெளிவருகின்றன. கணனி இயந்திரங்கள் பாடசாலைகள், தொழில்நிறுவனங்கள், வசதி படைத்தோர் இல்லங்களில் பாவிக்கும் வசதிகிடைப்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தமது நூல்கள் மற்றும் எழுத்தாக்க வேலைகளைத் தாமே அச்சீடு செய்து நிறைவு காண்கின்றனர். பல்வேறு வகையான பதிப்புக்களும் குறைந்த செலவில் அழகான வடிவத்தில் உருவாவதால் யாவரும் வர்த்தக ரீதியில் செயற்படும் கணனி மூலம் அச்சுப் பதிப்பிக்கும் இலகுமுறை தேடிக் குறிப்பிட்ட நிறுவனங்களை நாடுகின்றனர்.

இவ்வூரில் வர்த்தக ரீதியில் அச்சுப் பதிப்பிக்கும் நிறுவனங்களை நோக்குவோம்.

## ஐங்கரன் டொட் கொம்

இணுவில் தெற்கில் வசிக்கும் திரு.ம.நாகரூபன் என்பவர் தமது ஐங்கரன் தொலைத்தொடர்பு நிலையத்தில் "ஐங்கரன் டொட் கொம்" என்ற நிறுவனத்தை நிறுவி அருஞ்சேவையாற்றுகிறார். விளம்பரங்கள், நூல்கள், பாமாலைகள் போன்றவற்றைச் சிறந்த முறையில் பதிப்பித்து நற்பெயருடன் பொதுமக்களின் பாராட் டையும் பெற்றுவருகிறார்.

## A.P.S பிறின்ரேர்ஸ்

இணுவில் கிழக்கு படமாளிகை ஒழுங்கையைச் சேர்ந்த பொன்னுத்துரை சுரேஸ் என்பவர் தமது தொழில் ஆர்வத்தினால் "**A.P.S** பிறின்ரேர்ஸ்" எனும் நிறுவனத்தை ஆரம்பித்து அச்சக வேலைகளைக் கணனியில் வடிவமைத்துப் பதிப்பித்து அருஞ் சேவை செய்கிறார்.

## தனூஸ் அச்சுப் பதிப்பகம்

இணுவில் மேற்கில் சில இளைஞர்கள் சேர்ந்து நடாத்தும் இவ்வச்சகம் குறுகிய காலத்துள் பத்திற்கு மேற்பட்ட இலக்கிய, சமய நூல்களையும், 20 வரையிலான பல்கலைக்கழக மாணவர் ஆராய்ச்சிக் கட்டுரைகள், 15 வரையிலான நினைவு மலர்கள், ஏராளம் துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றைக் கணனி அச்சுப் பொறிப்பு ஆக்கங்களாக அச்சிட்டு வழங்கியுள்ளது. டிசையினிங் வேலைகளை நுட்பமாகவும் கவர்ச்சிகரமாகவும் தனூஸ் செய்து வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்சைன் கிரபிக்ஸ்

இது இணுவில் மேற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.த.சண்முகலிங்கம் அவர்களால் நிறுவப்பட்டு அவர்களின் மகன் பிரதீபன் அவர்களினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவர் புகைப்படக் கலைஞராகவும், கணனி தொழில்நுட்பங்களை நன்கு அறிந்தவராகவும் காணப்படுகிறார். 06.02.2003 அன்று யாழ் காங்கேசன்துறை வீதியில் (இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவின் அண்மையில் "சண்சைன் கிரபிக்ஸ்" என்ற நிறுவனத்தை நிறுவினார். இவரது நிறுவனத்தில் மூன்று கணனிகள், றோணியோ இயந்திரம், ஸ்கிறீன் பிறின்ற் என்பன உள்ளன. இவர்கள் பாடல்கள், வீடியோப் படங்கள் என்பவற்றை C.D யிலிருந்து கசற்றுக்களிலும், கசற்றுக்களிலிருந்து C.D யிலும் பதித்து வருகின்றனர். இந்த நிறுவனத்தில் மிகப்பெரிய 400 பக்கங்களைக் கொண்ட புத்தகங்கள் மூன்றும் (சீரிணுவைத் திருவூர் உட்பட), 50 - 100 பக்கங்களைக் கொண்ட ஐம்பதுக்கு மேற்பட்ட புத்தகங்கள், 10 - 40 பக்கங்கள் கொண்ட நினைவு மலர்கள் 150, 100 இற்கு மேற்பட்ட பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரை நூல்கள், திருமண வாழ்த்துக்கள், அழைப்பிதழ்கள் போன்றவற்றையும் அச்சிட்டு வெளியீடு செய்துள்ளது. இவர்கள் அச்சுப்பதிப்புத் தொடர்பான சகல வேலைகளையும் பொறுப் பேற்றுச் செய்துவருகின்றனர்.

## யோகநாதன் கிரபிக்ஸ் & ஓவ்செற் பிறின்ரேர்ஸ்

இணுவில் மேற்கைச் சேர்ந்த யோ.சுதந்திரன், யோ.கேசவன் ஆகிய இரு சகோதரர்களால் 01.09.2003 அன்று "யோகநாதன் கிரபிக்ஸ் அன் ஓவ்செற் பிறின்ரேர்ஸ்" என்ற நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு நவீன முறையிலான அச்சுவேலைகளைத் திறம்படச் செய்து வருகின்றது. இவர்கள் அதிக வேலையை மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறப்புடன் செய்து யாவராலும் மெச்சத்தக்க வகையில் செயற்பட்டு வருகின்றனர். இவ்வூர்ச் சிறப்புக்கள் மேலும் பெருக இதுபோன்ற பல நிறுவனங்கள் அமைந்தது இறையருளே.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர் இணுவையில் ஆரோக்கியம்

எல்லா மனிதரும் விரும்புவது சௌகரியங்கள் நிறைந்த சுகவாழ்க்கை. ஆனால் எல்லோருக்கும் அவை கைகூடுவதில்லை. ஆரோக்கியம்தான் எல்லாமே எனக் கூறாவிட்டாலும் ஆரோக்கியமற்ற வாழ்க்கை அர்த்தமற்ற வாழ்க்கை எனக்கொள்ளலாம்.நாம் ஏழ்மையாக இருப்பினும் மனநிறைவுடன் ஆரோக்கியமாக வாழலாம்.இவ்வகையில் இணுவில் சகலவளங்களும் கொண்ட ஒரு சமூகஅமைப்பெனக்கூறலாம்.

1898 ஆம் ஆண்டு இக்கிராமத்தில் அமெரிக்க மிசனறியினால் பெண்களுக்கானதும் சகல வசதிகளும் கொண்டதுமான மக்கிலியட் பிரசவ வைத்தியசாலை அமைக்கப்பட்டது. அந் நாட்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சகல பாகங்களிலிருந்தும் பிரசவத்திற்காக வசதி கொண்ட சமூக அமைப்பினர் இங்கு வருவது வழக்கம். குடாநாட்டில் வேறு எங்கும் இவ்விதமான வசதிகள் இருந்ததில்லை. புகழ்பூத்த பிரசவ வைத்தியர்களான Dr.சேரம்மா, Dr.கெங்கம்மா, Dr.குறியன் முதலானோர் இவ் வைத்தியசாலையில் கடமையாற்றினர்.

அந்நாட்களிலே கிராமங்களில் அவரவர் வீடுகளிலேதான் அனேகமான பிரசவங்கள் பயிற்சிபெற்ற கிராம மருத்துவிச்சியால் நிகழ்விக்கப்பட்டதுண்டு. இக்காரணத்தினால் பிரசவம் தொடர்பான தாய் மரணங்களும் சிசுமரணங்களும் கூடிய அளவில் சம்பவித்ததை யாவரும் அறிவர். 1940 ஆம் ஆண்டளவில் சராசரியாக ஒருவர் வாழ்ந்த காலம் 40 ஆண்டுகளாகும். (life expectancy) ஆனால் எமது ஊரில் கணிசமான தொகையினர் 85 - 90 வயதிற்கு மேலாக அந்நாட்களில் சீவித்ததை நினைவுகூருதல் மிக அவசியம். இதற்கான இரகசியத்தை நாம் ஆராய்வோமாகில் மக்கள் மிகவும் கடின உழைப்பாளிகள். மெய்வருத்தம் பாராது கண்துஞ்சாது கருமமே கண்ணாக இருந்து விவசாயத்தில் ஈடுபட்டனர். தினை, குரக்கன், பயறு, மரவள்ளி, ஏனையகிழங்கு வகைகள் முக்கியமான பயிர்வகைகள் ஆகயிருந்தன. பஞ்சத்திற்கே இடமில்லை அத்தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் சேகரிப்பில் உண்டு. எளிமையான உணவு உண்பர். பலதரப்பட்ட கீரைவகைகளை உணவில் தினம் சேர்க்கத் தவறமாட்டார்கள். பால், தயிர், மோர் இவற்றுக்கு பஞ்சமே இல்லை. கஞ்சி, கூழ், கீரைவகை சேர் பிட்டு, பொரிஅரிசி மா, எள்ளுருண்டை இவை சாதாரண பாவனையில் அடங்கும்.

மன அமைதி பேணி வாழ்ந்தார்கள் நம் மக்கள். இவர்கள் கூடிய கலை உணர்ச்சி கொண்டவர்கள். நாடகம், கூத்து, இசை நிகழ்ச்சிகள் வாத்திய இசை (தவில், நாதஸ்வரம், வயலின்) கர்நாடக சங்கீதம் முதலானவற்றில் எமது ஊர் அன்றும் இன்றும் முதன்மை வகிக்கிறது. பல அண்ணாவிமார் வாழ்ந்தார்கள். இயல் இசை நாடகத்தில் இணைந்து வாழ்ந்தமையால் மனநிறைவாக உளைச்சலின்றி (stress freelife) வாழ்ந்தார்கள்.

**சூழல் சுகாதாரம்.**

எமது ஊர் மாத்திரமன்று வட மாகாணம் ஏன் இலங்கை பூராகவுமே அந்நாட்களில் சூழல் சுகாதாரம் வெகுவாகப் பாதிக்கப் பட்டிருந்தது என்பதைக் குறிப்பிடவேண்டும். 1940 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 90 வீத வீடுகளில் நிரந்தர மலசலகூட வசதிகள் இருந்ததில்லை. திறந்தவெளி பனந்தோட்டங்களில் மக்கள் தமது காலைக்கடனை நிறைவேற்றியதுண்டு. இதனால் குடலுடன் சம்பந்தப்பட்ட நோய்களான வயிற்றோட்டம் நெருப்புக்காய்ச்சல் செங்கண்மாரி வாந்திபேதி முதலான நோய்கள் அடிக்கடி சம்பவித்ததும் உண்டு. கொளுக்கிப்புழு, கீரைப்பாம்பு இவற்றால் இரத்தச்சோகை போசாக்கின்மை என்பன முன்னணிப் பிரச்சினைகளாகின.

1942 ஆம் ஆண்டு இலவசக்கல்வி அறிமுகமான பின்பு சகலரும் கற்கும் வாய்ப்பு அதிகரித்தது. சமூக சுகாதாரப் பிரச்சினைகளையிட்டு மக்கள் படிப்படியாக விழிப்புணர்ச்சி பெற்றனர். இதனால் சமூக சுகாதாரம் தாய்சேய்நலன் விரிவாக்கப் பட்டது. தடைமருந்து கொடுக்கும் திட்டம் அன்றி பயற்றிக் பாவனை முதலானவற்றினால் சமூகத்தில் மக்கள் வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றம் ஏற்பட்டது. அத்துடன் 30 - 40 அடிவரை ஆழத்திலிருந்து கிணற்று நீரைப் பாவிப்பதும் ஓர்சாதகமான அம்சமாக அமைந்திருந்தது. இப்போது கிணறுகள் கட்டப்பட்டு பம்பி மூலம் நீரைக்குடிப்பதற்குப் பெறுவதனால் நீரினால் பரவும் தொற்று நோய்கள் சம்பவிப்பதும் மிகவும் குறைந்தே காணப் படுகிறது. பொருளாதார வசதி படிப்படியாகக் கூடி வருவதும் தற்போது எம்மக்களின் இருப்பிட வசதிகளும் முன்னேற்ற வாய்ப் பாயிற்று. பெரியளவு வெளிச்சம் காற்று வரக்கூடியதாக வீடுகள் அமைந்த காரணத்தினால் காசநோய் எம்மக்களிடையே வெகுவாகக் குறைந்துவிட்டது.

1940 ஆம் ஆண்டளவில் கூடியமக்கள் ஆயுள்வேத வைத்தியத்தையே நம்பிய நிலை காணப்பட்டது. அந்நாட்களில் யாழ் பிரதம வைத்தியசாலையை மக்கள் சிகிச்சைக்காக நாடியதில்லை. இணுவில் செல்லப்பா கந்தையா (கந்தசாமி கோயிலடி) வைத்தியர், சு.இராமலிங்கம் முதலானோர் பிரபல வைத்தியர்களாக விளங்கியமையினால் அயற்கிராமங்களும் இங்கு சிகிச்சைக்காக வருவதுண்டு. திரு.க.அப்பாக்குட்டி வைத்தியர் விசகடி வைத்தியம் செய்வதில் பிரபல்யம் பெற்றவராக விளங்கினார். அந்நாட்கிளல் பெரிய சந்நியாசியார், வேலாயுதர் சந்நியாசியார், ஆறுமுகம் சந்நியாசியார், காரைக்கால் திரு.க.அம்பலவாணர் முதலானோர் ஆத்மீகத்துறை வழிகாட்டிகளாகவும் ஆயுள்வேத மூலிகைகளின பாவனையைத் தூண்டுவதன் மூலம் மக்கள் பிணிகள் துன்பங்களைப் போக்குபவர்களாகவும் உதவிபுரிந்தனர்.

காலக்கிரமத்தில் இணுவில் மத்திய மருந்தகம் அரசினால் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது Dr.K.பாலசுப்பிரமணியம் (DIMS) Dr.M.பஞ்சலிங்கம் (RMO) முதலானோர் தனியார் வைத்தியர்களாகச் சமூகமட்டத்தில் பங்காற்றிவருகின்றனர். அத்துடன் யாழ் பொது வைத்தியசாலை, இணுவில் அமெரிக்கன் மிசன் மக்லியட் வைத்தியசாலையிலும் இன்று வைத்திய வசதிகளைப் பெற முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீக நலன்

கோவில்கள் நிறைந்தது எமது கிராமம். மனதை ஒருமுகப்படுத்தும் முயற்சிகளாகிய ஆலயதரிசனம், பஜனை, கூட்டுப்பிரார்த்தனை, மௌனவிரதம் முதலான முயற்சிகளில் மிளிர்வது இணுவைக் கிராமம். இதனால் மக்கள் மனநிறைவாக இறையருளோடு சீவிக்கமுடிகிறது.

## ஆரோக்கிய வாழ்க்கை.

கடின உழைப்பு, எளிமையான (Simple life) உணவு, மனவுளைச்சல் அற்ற வாழ்வு, புகைபிடிக்காமை, குடிபோதைக்கு உள்ளாகாமை, முதலான காரணிகளை நம்மக்கள் கடைப் பிடிப்பதனால் வாழ்க்கை வாழமுடிகிறது. இவைதான் நீண்ட காலம் வாழ்வதற்கான இரகசியமாகும். தற்போது எம்மவர் 78 - 82 வயது வரை சராசரியாகச் சீவிக்கும் நிலை போற்றப்பட வேண்டியதாகும்.

ஆனால் கடந்த 20 வருட வரவு எமது கிராம மக்களை சின்னாபின்னமாக்கிவிட்டது. அதையடுத்து வலி வடக்கு இடப் பெயர்வுடன் மக்கள் சகலவற்றையும் இழந்தனர். இனம் சுற்றங்களைப் பிரிந்தனர். மனஉளைச்சல் நிலை மேலோங்கியதை குறிப்பிடாமல் இருக்கமுடியாது. மீளக்குடியேறி எம்மவர் போற்றப்படும் வகையில் மறுவாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். இறையருளோடு இருத்தல், கலை, இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றல், சற்சங்கம், கூட்டுப்பிரார்த்தனைகளில் ஈடுபடுவதன் மூலம் ஓரளவு தமது வாழ்க்கையை அர்த்தமுடன் அமைத்துக் கொண்டுள்ளனர். உடல் நலம், உளநலம், சமூக நலன் ஆத்மீகநலன் என்பன பற்றிச் சமூகரீதியாக மக்கள் ஒருமுகமாகச் செயற்படுவதனால் போர் நிறுத்த அறிவிப்புடன் மக்கள் வாழ்வு மகிழ்ச்சியாக அமைகின்றது. சமாதானம் மலரவேண்டும் நாம் மனநிறைவாக வாழ இறையருள் வேண்டிப் பிரார்த்திப்போம்.

**கா.வைத்தீஸ்வரன்**
சுகநலக் கல்வியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் செல்வப்பா வைத்தியசாலை

தெய்வீகத்தையே நம்பிக்கையான அடித்தளமாகக் கொண்டு தூய உள்ளத்துடன் ஆசாரசீலராக ஒழுகி, தமது மூதாதையரின் இயல்பு வாழ்க்கை நெறியான சித்தவைத்தியத் துறையைத் தமது பணியென எண்ணி இணுவில் கந்தசுவாமி கோவிலின் வடகீழ்ப்பகுதியில் அமரர் செல்லப்பாவினால் ஆரம்பிக்கப்பட்டது செல்லப்பா வைத்தியசாலை என்ற உயிர்நாடியான மருத்துவ நிலையம்.

வைரமுத்து செல்லப்பா அவர்கள் இணுவில் கந்தசுவாமி கோவில் பரம்பரை பரிபாலனகர்த்தா ஆறுமுகம் என்பவரின் மகள் சிவநாச்சியை மணம்புரிந்தவர். தமது பரம்பரை வைத்தியத் தொழிலை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கோடு இவ்வூர்ப் பெருஞ் சித்தர் பெரிய சந்நியாசியாரை அணுகினார். இவரது வைத்திய சாலை தற்போது அமைந்த இடத்தில் ஒரு நெடிய இலுப்பை மரம் நின்றதாக அறியப்படுகிறது. அம்மரத்தை அண்மித்து இரு பெரிய மண்குடிசைகளை அமைத்து ஒரு குடிசையில் செல்லப்பா என்பவர் தம் குல தெய்வங்களை வைத்து வழிபாடு செய்ய நேர்ந்தது. பெரிய சந்நியாசியார் தனது சீடர்களான பக்தர்கள் புடைசூழ வந்து தெய்வ வழிபாட்டின் நோக்கில் விளக்கு வைத்துத் தமது கைப்பிரம்பையும் அங்கு விளக்குடன் சார்த்திவைத்து வேலவன் வந்து திருவாக்குச் சொல்வான். வெள்ளிப்பணம் வேலவனுக்கு விளக்கேற்றவும் திருப்பணி செய்யவும் உதவும். இதனால் உனது தொழிலும் விருத்தியாகுமென ஆசீர்வதித்தார். பின்னர் வைத்தியரின் வீட்டில் தயாரித்து வைத்திருந்த தினை அரிசிச்சோற்றை யாவரும் உண்டும், மோர் பருகியும் மகிழ்ந்தனர். இதனால் வைத்தியரின் இல்லமும் வைத்தியசாலையும் சிறப்படைந்து தெய்வீக ஒளி வீசியது.

ஒரு நாள் நண்பகல் வெண்தலைமுடியோடு, வெண்ணிறச் சேலை கட்டிய மூதாட்டி ஒருவர் வந்து வீட்டு முற்றத்தில் உலாவியதுடன் வைத்தியரை நோக்கி "அட செல்லப்பா தண்ணீர் கொடு. இங்கு விளக்கு வை" என்று கூறியபடி கொடி இலுப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தடியில் அமர்ந்தார். சிறிது நேரத்தில் அந்த மூதாட்டி மறைந்துவிட்டார். வந்த மூதாட்டி அம்பாள் என்பதை நன்குணர்ந்த வைத்தியர் அவ்விடத்தில் தவறாது விளக்கேற்றி வந்தார். இதனால் மிக மகிழ்வடைந்த வைத்தியர் வீடும் பிரகாசிக்கத் தொடங்கியது. பெரிய சந்நியாசியாரின் கூற்றினையொட்டியது போல யோகர் சுவாமிகள் வந்து, "செல்லப்பா வேலவனை வணங்கு. தவறாது விளக்கேற்று." வேலவன் வந்து திருவாக்குச் சொல்வான் என வைத்தியத்தொழிலும் சித்தியாகும் என்று ஆசீர்வதித்தார்.

தொடர்ந்து செல்லப்பா வைத்தியர் திருவாக்குச் சொல்வதில் பிரசித்தமானார். இதனால் பலர் நன்மையடைந்தனர். இவ்வூரைச் சேர்ந்த கதிரித்தம்பி என்பவரையும் மனைவியையும் தம்மிடம் அழைத்துத் திருவாக்குச் சொல்லிக் காரைக்காலில் விளக்கேற்றி வழிபடச் செய்தார்.

மாறாத நோய் காரணமாக வாடியவர்களை அழைத்துத் திருவாக்குச் சொல்லியும், நாடி பிடித்துப் பார்த்தும் தகுந்த மருந்து கொடுத்துச் சுகமடையச்செய்தார். நோயாளிகளின் இயல்புக்கேற்றபடி அவர்கள் கொடுப்பதை ஏற்பார். வைத்தியர் செல்லப்பா அவர்கள் தெய்வீகமாகத் திருவாக்குச் சொல்லியும், கைநாடி பார்த்தும், பண்பாகப் பேசியும் வரும் குணநலம் உடையவராதலால் நோயாளிகளின் வரவும், செல்லப்பா அவர்களின் செல்வாக்கும் கூடின. தனது வைத்தியத்துடன் நில்லாது சிறப்பாகச் சோதிடம் பார்க்கவும் செய்தார். கைநாடி பார்த்து நோய்க்கு மருந்தும், தலைக்கு வைக்கும் மருத்தெண்ணெயும் வழங்கி உணவுமுறை பராமரிப்பு முறைக்குக் கடும்பத்தியம் காக்கும்படியும் தெரிவிப்பார். ஆய கலைகள் 64. இவற்றில் ஆயுள்வேதம், சோதிடம் போன்றவற்றில் இவர் கைதேர்ந்தவர். இவரது கைநாடி பார்த்தலின் சிறப்பை நோக்குவோம்.

யேசு பக்தரொருவர் கொடிய நோயினால் தாக்கப்பட்டு இறக்கும் தறுவாயில் இருந்தார். இவரது நோயின் தன்மையை அறியும்பொருட்டு ஆங்கில சித்தமருத்துவ வைத்தியர்கள் பலர் வரவழைக்கப்பட்டனர். வைத்தியர்கள் நோயாளியைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கருத்துக்களைப் பதிவேட்டில் எழுதிவிட்டு மௌனமாக வெளியேறவேண்டுமென யாவரும் அறிவுறுத்தப்பட்டனர். வைத்தியர் செல்லப்பாவின் முறை வந்ததும் நேரடியாக நோயாளியைப் பார்வையிட்டதும் பதிவேட்டில் பின்வருமாறு குறிப்பிட்டார். "இந்த நோயாளிக்கு மருந்து கொடுக்காது நா வறளும்போது ஆத்மசாந்திக்காகத் துளிதுளியாக முலைப்பால் கொடுக்கவும்" கைநாடி பிடித்துப் பார்த்துவிட்டு இவர் பரணி நட்சத்திரத்தில் பாயில் படுத்தார் எனவும், 96 ஆம் நாள் மரணம் நிகழும் எனவும், இரவு பன்னிரண்டரை மணிக்கு இவர் யேசுவின் பாதத்தை அடைவார் எனவும் அவரது சமயமரபுப்படி மறுநாள் வட்டுக்கோட்டையிலுள்ள சேமக்காலையில் பி.ப 4.00 மணிக்கு நல்லடக்கம் செய்யவும் என்றும் குறிப்பிட்டிருந்தார். பதிவேட்டில் பதிந்த பின் மௌனமாக வெளியேறிவிட்டார். இவர் குறிப்பிட்ட படி உரிய திகதி, நேரத்தில் நோயாளி காலமானார். இறந்த மறுநாள் பார்வையிட்டுப் பதிவுசெய்த வைத்தியர்களின் பதிவில் 10 பேரது அறிக்கைகள் சேமக்காலையில் பாதிரியாரால் வாசித்துக் காட்டப்பட்டன.

கைநாடி பார்த்த வைத்தியர் செல்லப்பாவின் அறிக்கையில் இறந்த திகதி, நேரம் சரியாக இருந்ததும் கைநாடி வைத்தியரின் சிறப்பும் பெருமையும் யாவராலும் எடுத்துரைக்கப்பட்டது. இவற்றை எல்லா ஆங்கில நாளேடுகளும் பிரசுரித்தன. மேல்நாட்டைச் சேர்ந்த வெள்ளைக்காரப் பாதிரியார் ஒருவர் பத்திரிகை மூலம் தாம் அறிந்தவற்றை உரியவருடன் கலந்துரையாடி ஒருவாரத்தின் பின் இணுவிலிலுள்ள செல்லப்பா வைத்தியரிடம் வந்து மகிழ்ச்சியுடன் உரையாடி அவரை நன்கு போற்றிப் புகழ்ந்ததுடன் பெறுமதிமிக்க சன்மானமொன்றையும் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வைத்தியர் செல்லப்பாவிடம் அழைத்து வரப்பட்ட ஒரு பெண்ணின் ஏழாவது பிரசவத்தின் போது பிடித்த விக்கல் நோய்க்காக நாடிபிடித்துப் பார்வையிட்ட வைத்தியர் மறுநாள் மருந்து தயாரித்து வைப்பதாகவும் மறுநாள் மாலை இதனை வாழையின் மெல்லிய 5 இளங்குருத்துக்களைக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமாறும் சொல்லியனுப்பினார். மறுநாள் மாலை வைத்தியர் வீட்டுக்கு வந்த நோயாளியின் சகோதரருடன் தனது மாட்டு வண்டிலில் சென்றார். நோயாளியின் வீட்டினமைப்பு முறைகளை அவதானித்தார் வைத்தியர். அவ்வீடு பனையோலையால் வேயப் பட்டிருந்தது. நோயாளி படுத்திருந்த பக்கத்து அறை மீது மேற் கூரையில் ஒருசந்து (பெரிய துவாரம்) வைப்பித்தார். நோயாளியை அடுத்த அறையினுள் கட்டிலுடன் வைக்குமாறும் கூறி வேப்பெண்ணெய் விளக்கேற்றச் செய்வித்தார். நோயாளியை அடுத்த அறைக்கு மாற்றியதும் விளக்கை அணைக்குமாறும் அரைமணி நேரத்தில் நாய்கள் குரைக்கும்போது வெள்ளை நிறமானதும் மிக மெல்லியதுமான வாழைக் குருத்தை நோயாளியின் மீது போடுமாறும் பணித்தார். வாழைக்குருத்து விழுந்ததும் நோயாளி "ஐயோ பாம்பு" என்று உரத்து குழறினார். அத்துடன் விக்கல் நோயும் மறைந்தது. விளக்கேற்றப்பட்டது. பின் ஒன்றரை மணி நேரமாக வீட்டிலுள்ள ஏனையோருடன் கலந்துரையாடினார். விக்கல் சத்தம் ஏதுமற்ற நோயாளியைப் பார்வையிட்ட பின் வைத்தியர் தமது இல்லம் ஏகினார்.

1944 ஆம் ஆண்டு சித்திரை தமது மரணத்துக்கு மூன்று நாட்களுக்கு முன் தான் குறிப்பிட்ட திகதி நேரம் குறித்து பி.ப 4.00 மணியளவில் கொழும்புக்குச் செல்வதாகவும் தம்மை வந்து சந்திக்கலாமெனவும் கூறினார். குறிப்பிட்ட திகதி, நேரத்தில் வைத்தியர் செல்லப்பா அவர்கள் இறைவனடி சேர்ந்தார். தமது கடமையை இறைவணக்கத்துடனும வழிபாட்டுடனும் பெரியார் களின் ஆசீர்வாதத்துடனும் வேலவனின் சக்தியால் திருவாக்குச் சொல்லியும் தமது சோதிடம், கைநாடி பார்த்திடும் அனுபவம், நோயாளி வரும் நிலை, நேரம், அவரின் உரையாடல் யாவற்றையும் அவதானித்து ஏற்ற முறைப்படி சிறப்பான வைத்திய சேவை யாற்றியும் வந்த வைத்தியர் செல்லப்பா அவர்கள் தமது இரு புத்திரர்களைப் பலகாலம் வைத்தியத்தில் ஈடுபடுத்திப் பல நுட்பங்களையும் மனதில் பதியவைத்து எத்தனையோ அரிய சேவை செய்து மறைந்தார். அவரது பணியை அவரது மூத்த மகன் கந்தையா அவர்கள் தொடர்ந்து சிறப்புடன் திருவாக்குச் சொல்லியும் சிறப்பான வைத்தியம் செய்தும் ஆற்றி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் வைத்தியரான கந்தையா அவர்களின் புகழ் தந்தையின் புகழைவிடச் சிறப்பாக இருந்தது. யாவராலும் கைவிடப்பட்ட நோயாளிகளையும் குணமடையச் செய்தவர். தந்தையுடன் பணியாற்றிய காலத்தில் தந்தையார் நோயாளியைப் பரிசீலனை செய்யும் போது நோயாளிக்கு வேண்டிய மருந்தை எடுத்து வந்து தந்தையாரிடம் கொடுக்கும் அனுபவம் மிக்கவர். சிறு பிள்ளை வைத்தியமும், மருத்துஎண்ணெய் தயாரித்து வழங்குவதும் இவரது கைவந்த கலைகளாகும். ஆரம்பகாலம் தொடக்கம் இவர்கள் மருந்து தயாரிக்கும்போது விரதமிந்து ஆசாரசீலராக விளக்கேற்றி வணங்கும் தெய்வங்களை வழிபட்டே ஆரம்பிப்பர். அடுப்பில் மருந்துவகை தயாரிக்கும்போது நெருப்பை அணுகாமலும், விட்டுவிலகாமலும் இருந்து முறைப்படி தயாரிப்பர். வைத்தியர் கந்தையா அவர்களின் புகழ் எல்லா இடமும் பவியது. நோயாளிகள் கூடுதலாக வரத்தொடங்கினர்.

ஆங்கில வைத்திய முறைப்படி நிறைகுறைந்த பிள்ளைகளைக் கண்ணாடிப்பெட்டிகளில் வைத்தே பராமரிக்கின்றனர். சித்தமருத்துவப்படி கந்தையா அவர்கள் நிறைகுறைந்த பிள்ளையைத் தாயானவள் நிமிர்ந்து படுத்துக்கொண்டு தனது இடது மார்புடன் பிள்ளையின் நெஞ்சை அணைத்துக் கொண்டால் பிள்ளையின் 16 வயதில் சாதாரண பிள்ளைகளின் நிறைவும் வளர்ச்சியும் கிடைத்துவிடுமென்ற தகவலை அறிக்கையாக வெளிப்படுத்தினார். இவரது விளக்கக்குறிப்புக்கள் பற்றிய ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் 17 வருட ஆய்வின் பின் இவரது சிகிச்சைக்கான ஆய்வுக்குறிப்பின் வெற்றியைக் கண்ட பேராசிரியர் ஈ.டபிள்யூ.எட்வேட் அவர்கள் எழுதிய ஆங்கில வைத்திய நூலில் சித்தமருத்துவச் சிகிச்சைமுறையைப் பாராட்டி எழுதியுள்ளார்.

இணுவில் செல்லப்பா வைத்தியசாலை வைத்தியரின் சிகிச்சைமுறை பல இடங்களிலும் சிறப்பாகப் பேசப்பட்டது. யாழ். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையைத் திறந்து வைப்பதன் பேரில் யாழ்ப்பாணம் வந்த இலங்கையின் முதலாவது பிரதமர் மாண்புமிகு டீ.எஸ்.சேனநாயக்கா அவர்கள் தமது நிகழ்ச்சிகள் நிறைவுபெற்ற பின் தமது ஆன்மீகப் பணிக்கு வகைதேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகர்சுவாமிகளைக் கண்டு வணங்கிவிட்டு உரையாடிக் கொண்டிருந்தவேளை பிரதமருக்குக் கொடூரமான வயிற்றுவலி ஏற்பட்டதால் பரிதவித்தார். இதனைக்கண்ட யோகர்சுவாமிகள் பிரதமரை நோக்கி உடனடியாக இணுவிலில் செல்லப்பன் என்ற வைத்தியன் இருக்கிறான். அவனிடம் சென்றால் குணப்படுத்துவான் என்று பரிந்துரைத்தார். யோகர்சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் பிரதமரின் நோய் செல்லப்பா வைத்தியசாலையில் சுகப் படுத்தப்பட்டது. இதனால் பேரும் புகழும் மேலும் பரவின.

வைத்தியர் செல்லப்பா கந்தையா அவர்கள் முதுமை அடைந்து மறுமையெய்தியபின் நெடுங்காலம் தந்தையிடமும் மூத்த சகோதரரிடமும் பயின்று அனுபவமடைந்த செல்லப்பா பாலசுப்பிரமணியம் அவர்கள் தொடர்ந்து வைத்திய சேவையாற்றுகிறார்.

மேற்குறிப்பிட்ட சில உண்மைத் தகவல்கள் 11.11.2002 அன்று வலம்புரி நாளேட்டில் செ.பாலசுப்பிரமணியம் அவர்களால் கொடுக்கப்பட்டு வைத்தியர் கந்தையா அவர்களின் சிறப்புப் பற்றிய கட்டுரையாக வெளிவந்தன. அவற்றிலிருந்து இவை தொகுக்கப்பட்ட விபரங்களாகும்.

மூ.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர் இணுவையில் சமூகநலன் பேணும் நிறுவனங்கள்

இணுவையூரின் முற்கால அமைப்புடன் உலகம் நாகரிகம், விஞ்ஞானம், சனநாயகம், என்ற பல முன்னேற்றங்களில் காலெடுத்து வைக்கும் வேளையில் சில புதிய முயற்சிகளும் உதவிகளும் மக்களுக்கு உறுதுணையாக அமைந்துள்ளன. இதனடிப்படையில் கிராமம் அபிவிருத்தி பெற்றுச் சிறப்புடன் வாழச் சமூகத்தில் பணியாற்றித் தமது சேவை முத்திரை பொறிக்கும் நோக்கில் பல நிறுவனங்கள் இங்கு பணியாற்றுகின்றன. சனசமூக நிலையங்கள் வாசிகசாலைகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சமய நிறுவனங்கள், விவசாய சம்மேளங்கள், அரிமாக்கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்றன முக்கியமானவை.

## சனசமூக நிலையங்கள்

இத்திருவூரில் பத்துக்கு மேற்பட்ட சனசமூக நிலையங்கள் சிறப்புடன் இயங்குகின்றன. இந்நிலையங்களில் எவரும் உலகச் செய்திகளை ஒரே பார்வையில் அறியக்கூடிய முறையில் நாளாந்த, வாராந்த, மாதாந்தப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் போன்றவை இலவசமாக வாசிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன் செலவினங்கள் பிரதேசசபை, மன்ற உறுப்பினர்கள், நலன்விரும்பும் பெரியவர்கள் மூலம் ஈடுசெய்யப்படுகின்றன.

## கிராம அபிவிருத்திச் சங்கங்கள்

கிராம முன்னேற்றத்தினை மேம்படுத்தும் நோக்குடைய வயது வந்த பொறுப்புள்ளவர்கள் பொறுப்பாக இருந்து நடாத்துவதற்கெனப் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் கண்காணிப்பில் சங்கங்கள் அமைத்து அரசில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமது பகுதியிலுள்ள வீதிகள், பொது இடங்கள் போன்றவற்றை அமைக்கவும், பாதுகாக்கவும், பழுதுபார்க்கவும் அரசினர் மூலம் செய்வதற்கு சிபார்சு செய்யவும், சங்கஉறுப்பினரும் பொதுமக்களும் சேர்ந்து தேவையேற்படும்போது சிரமதானங்கள் செய்யவும் நேரிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பகுதியில் தொற்று நோய்க்காலங்களில் வெள்ளப்பெருக்கு புயல், வெள்ளச் சேதம் போன்ற காலங்களில் முழுவீச்சாகக் கடமையாற்றவும் நேரிடுகிறது. இச்சங்கம் ஆரம்பப் பள்ளிகளை அமைத்து எமது கிராமத்தில் சிறார்களுக்கு ஆரம்பக்கல்வியை ஊக்குவிப்பது, இளைஞர் கழகங்களை அமைத்து எமது கிராமத்தில் 70 வருடங்களுக்கு முன் ஆரம்பித்து அரும் பணியாற்றிய கழகங்களின் சீரிய தொண்டினை வாழையடி வாழையாக அமைத்து என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற அப்பர் சுவாமிகளின் கூற்றுக்கு அமைவாக தொண்டுசெய்தல், வசதிகுறைந்த மாணவர்களுக்கு மேற்படிப்புக்காகப் பிரமுகர் களிடம் நிதி சேகரித்து வழங்குதல் போன்ற சேவைகளைச் செய்கின்றது.

இது பெருமைக்குரிய விடயமாகும். இதன் ஓர் அங்கமாக விளையாட்டுக் கழகங்களை அமைத்துப் பலதுறை விளையாட்டுக் களில் போதிய ஊக்கம் கொடுத்து உற்சாகப்படுத்துகின்றனர். முற்காலத்தில் இவ்வூரின் பெருவிருப்புக்குரிய "தாச்சி" விளையாட்டு அண்மையில் அருகி வந்தபோதும் சில சங்கங்களின் பெருமுயற்சியால் இம்மாவட்டத்திலேயே பெருமையும் சிறப்பும் அடைந்துள்ளனர். காலத்துக்குக் காலம் ஏனைய விளையாட்டுக் களிலும் சிறப்புறப் பயிற்சி கொடுக்கின்றனர். உபகரணங்களும், நிதியுதவிகளும் அரசினாலும் பிரமுகர்களாலும் வழங்கப்படுகின்றன.

## சமய நிறுவனங்கள்

இவ்வூரில் பலசமய நிறுவனங்கள் தோன்றிச் சேவை யாற்றுகின்றன. அவற்றின் உதவியால் சிறுசிறு சமயப் பாடல்கள், கதைகள், வெளியிடப்படுவதுடன் கோயில்களில் தொண்டு செய்தல், பசனை பாடுதல், அறநெறிப்பாடசாலைகள் அமைத்துச் சிறுவர்களுக்கு பண்ணிசை, சமயம் போன்றவற்றைப் போதித்தல், சமயச் சூழலுக்கேற்பக் கோலம்போடுதல், தோரணம் பின்னுவதற்குப் பயிற்றுதல், சங்கீதம் , நடனம் கற்பித்தல், சமயச் சொற்பொழிவுகளை ஏற்படுத்தல், சமயஅறிவுப்போட்டிகள் வைத்துத் தக்கபரிசில்கள் வழங்குதல் போன்ற பணியாற்றும் பல நிறுவனங்களும் ஊர்மக்களின் அன்பால் அமைக்கப்பட்டு உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயச் சங்கங்கள்

ஒரு விவசாயி சீரான காலங்களில் எவரதும் உதவியின்றித் தானே இயங்குவான். நெருக்கடிகாலம் யுத்தகாலம் போன்றவற்றில் அவதியுற்றுத் தனது தேவைகளை நிறைவேற்றத் தவிக்கும் நேரத்தில் அவன் விவசாயச் சங்கங்கள் விவசாயிக்குத் தேவையான இடுபொருட்கள் கிருமிநாசினிகள், விதைகள், எரிபொருள் போன்றவற்றை விவசாயிகள் சங்கச் சம்மேளனங்கள் மூலம் இலகுவில் பெறமுடிகிறது. பயிர்களின் கடும் நோய்த்தாக்கம் பயிர்களைத் தாக்காவண்ணம் மிகத்திறமையுடன் விளைவித்து அதிக விளைச்சல் ஏற்படுத்தும் இலவச தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்குகின்றன. இவற்றால் எல்லா விவசாயிகளும் நன்மையடைகின்றனர். விவசாயிகளுக்கான இலகுகடன் முறைகளும் இவர்களது பணியால் கிடைக்கப் பெறுவதுடன், விவசாயத்திலும் முன்னணி வகிக்கின்றனர். குறுகியகாலத்தில் இவ்வூர் விவசாயிகள் உருளைக்கிழங்கு வெங்காயம் போன்ற பயிரினங்களால் அதிக லாபம் பெற்று இன்புற்று வாழ்கின்றனர்.

## அரிமாக்கழகம்

இக்கிராமத்தில் பணவசதியடைய ஒருசிலர் இக்கழக உறுப்பினராகச் செயற்படுகின்றனர். இவர்கள் தங்கள் கழக உறுப்பினர்களிடமும் வசதிபடைத்தவர்களிடமும் நிதி சேகரித்துப் பேருந்துத் தரிப்பிடங்களில், நிழல் பாதுகாப்புக்காகத் தங்கிச் செல்லும் தரிப்பிட வசதிகள் செய்துள்ளனர். இலவச கண்சிகிச்சை, சலரோகம் போன்ற நோய்களுக்கான சிகிச்சையளிக்கும் நடமாடும் வைத்திய சேவைகளை நடாத்தி இலவசமாகச் சிகிச்சை செய்வித்ததுடன் இலவச மூக்குகண்ணாடிகளையும் வழங்கியுள்ளனர். இப்பொழுது இணுவில் அரிமாக்கழக உறுப்பினர்களின் பேரூக்கத்தினால் மருதனார்மடச் சந்தியில் இராமநாதன் கல்லூரிக் காணியில் ஒரு உயர்ந்த மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப் பட்டுள்ளது. அதன்சேவை விரைவில் கிடைக்கலாம். இவர்கள் தமது முயற்சியால் நிதிசேகரித்துப் பாடசாலைகளுக்கு பாண்ட் இசைக்கருவிகளும் காணிகளும் பெற்றுக்கொடுத்ததுடன் பாடசாலைகளின் வளர்ச்சிக்காகப் பல உதவிகளை வழங்கி முன்னேற்றப் பாதையைத் துவக்கியுமுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள்

இவ்வூரிலுள்ள ஒவ்வொரு கல்லூரியிலும் எம்மூர்ப் பிள்ளைகள் சிறப்புடன் படித்து முன்னேறுவதன் பேரில் இச் சங்கங்கள் பெரும்பணியாற்றி வருகின்றன. இத்தேவைக்கென உரியவர்கள் நிதி சேகரிக்கச் செல்லுமிடத்து எம்மூர் மக்கள் தங்கள் பிள்ளைகளின் வசதி நோக்கி வாரி வழங்குகின்றனர். இப்பெருநிதியில் பாடசாலைக்கட்டடங்கள், உபகரணங்கள் பரிசுப்பொருட்கள் விளையாட்டு மைதானம் இல்லாத இடங்களுக்கு காணி வாங்க உதவியும், கலை கலாசார, சமூக சமய விழாக்களை மிகச்சிறப்பாக முன்னின்று நடாத்தியும் எமது ஊரின் பிரபல்யத்தைக் குறையடையவிடாது மெருகூட்டுவதுடன் சகல சிறப்புக்களையும் பேணும் சமூகசேவையாளர்கள் தமக்கும் எம்மூருக்கும் பெருமை தேடித் தந்துள்ளனர்.

## நூலகங்கள்

எம்மூரில் பல சிறிய, பெரிய நூலகங்கள் காட்சியளிக்கின்றன. எமது கிராமம் பல புராண, இதிகாச இலக்கிய நூல்களைத் தாமே தமது சொந்தமாக வைத்திருக்கின்றன. இப்படியான நூல்களை ஒருங்கமைத்து ஒரு நூலாராய்ச்சி நிலையமும் நூலகமுமாக இயங்கும் நோக்குடன் இணுவில் மத்தியில் கட்டட வேலை கூரை மட்டம் வரை வளர்ந்துள்ளது. அதனைப் பொறுப் பேற்றுள்ளவர்கள் சிலர் அத்தியாவசியப்பொருட்களான மணல், சல்லி , நிதி போன்றவற்றின் பற்றாக்குறைவால் சிறிது தடை ஏற்பட்டபோதும் விரைவில் அது செயற்படலாம் எனக்கூறினர். கல்லூரிகள் பிரதேசசபை உபநிலையம் மூலமாக சனசமூக நிலையங்க ளிலும், இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் வாசலில் பெரிய அமைப்புடன் பொது நூலகமும் சிறந்த முறையில் நூல்களை வழங்கி, வாசித்தலிலும், அறிவுவிருத்தியிலும் பெருந்தொண்டாற்றுகின்றன.

மூ.சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கிழக்குக் கிராம அபிவிருத்திச் சங்கமும் அதனை மையமாகக் கொண்டியங்கும் சமூக அமைப்புக்களும்

இணுவில் கிராமத்தில் பெரும்பான்மையினர் விவசாயிகள். இவர்கள் சிறுகைத்தொழிலையும் உபதொழிலாக மேற்கொண்டனர். விவசாயப் பெரும்பொருளான வெங்காயம், மிளகாய் போன்றவற்றைச் சந்தைப்படுத்துவதற்காகச் சுன்னாகத்தில் அமைக்கப்பட்ட விளை பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தை நாடவேண்டியிருந்தது. இது அநேக சிரமங்களை ஏற்படுத்தவே பொதுமக்களின் நன்மை கருதி இணுவிலைச் சேர்ந்த கூட்டுறவாளரும் ஆசிரியருமான பண்டிதர் வித்துவான் சைவப்புலவர் இ.திருநாவுக்கரசு அவர்கள் இணுவில் கிழக்கில் ஒரு விளைபொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவினார். இக்கட்டடம் அமைந்த இடமானது இணுவிலைச் சேர்ந்த ஆசிரியை திருமதி திலகவதி அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இங்கு பொதுமக்களின் உதவியுடன் (இப்பொழுது கி.அ.சங்கம்) பெரிய மண்டபம் ஒன்று நிறுவப்பட்டு நல்ல முறையில் இயங்கியது.

இக்கட்டடத்தில் பொதுமக்களின் நன்மைகருதி “இளந்தாரிகள் சனசமூக நிலையம் அமைக்கப் பெற்றது. இங்கு சமய விழாக்கள் பெரியார்களினது நினைவுவிழாக்கள், இலக்கிய, கலை விழாக்கள், முத்தமிழ்விழா என்பன சிறப்பாக நடைபெற்றன. இளைஞர் சங்கமானது உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம் என்பவற்றில் ஈடுபட்டு வேறுநிலையங்களுடன் போட்டியிட்டு வெற்றியும் ஈட்டியது. சமய, இலக்கிய, விவசாயச் செயற்பாடுகள் இடம்பெற்றதுடன் “ கிராம முன்னேற்றச் சங்கமாகவும் இது உருவெடுத்தது.

இக்கிராம முன்னேற்றச் சங்கம் சமூகசேவை, கலை இலக்கிய சேவை, சுகாதாரசேவை, நூலகசேவை போன்றவற்றை மேற்கொண்டது. வேலையற்ற பெண்களுக்குத் தையல்பயிற்சியும் பயிற்றப்பட்டது. புதிய பாதைகள் திறத்தல், வீதிகள் செப்பனிடல், கிராமத்தில் ஏற்படும் அவசிய விபத்துகளுக்கான பொது உதவி களும் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974 ஆம் ஆண்டு இச்சங்க நிர்வாகிகளின் அபிலாசைப்படி நெசவுநிலையம் அமைக்கும் வசதிகளுடன் இது மாற்றியமைக்கப் பட்டது. உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் V.தர்மலிங்கம் அவர்களது உதவியுடன் நெசவுநிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் பல யுவதிகள் வேலைவாய்ப்பைப் பெற்றனர். 1985 ஆம் ஆண்டு சங்கத் தலைவர் திரு.செ.இலகுநாதன், செயலாளர் திரு.தி.சி.சண்முகலிங்கம் ஆகியோரது பெருமுயற்சியால் கிராம முன்னேற்றச் சங்கத்துடன் சேர்ந்ததாக வடகீழ்த்திசையில் கனேடிய அரசாங்கத்தின் உதவியுடன் பெரிய கட்டடம் ஒன்று நிறுவப்பட்டது. இதில் சிறுகைத்தொழில் வகைகள் செய்யப் பட்டன. இதனால் பலர் பயனடைந்தனர். யுத்த நெருக்கடிகள் காரணமாக இவற்றில் செயற்பாடு குன்றியதாக இருப்பினும் கிராம அபிவிருத்திச் சங்கம் தனது செயற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இச்சங்கத்தின் உதவியால் முன்பள்ளி ஒன்று மிகச்சிறப்பாக இயங்கி வருகின்றது. வருடந்தோறும் முன்பள்ளி மாணவரின் விளையாட்டுப்போட்டி, கலைவிழாக்கள் என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதற்குக் கிராம அபிவிருத்திச் சங்கக் கல்விப்பிரிவு உதவி வருகின்றது.

இதே கட்டடத்தில் 1997 ஆம் ஆண்டு கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் "இணுவில் கிழக்கு இளைஞர் கழகம்" உதயமானது. இக்கழகம் தையற் பயிற்சி வகுப்புக்கள், தட்டச்சுப் பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள், பெண்களுக்கான அழகுக்கலை வகுப்புக்கள், சிகை அலங்காரப் பயிற்சி வகுப்புக்கள், புலமைப்பயிற்சி வகுப்புக்கள் என்பவற்றையும் நடாத்தி வருகின்றது. தற்பொழுது TITA நிறுவனத்துடன் இணைந்து கணனிப் பயிற்சி வகுப்புக்களை மிகச் சிறப்பாக நடாத்தி வருகின்றது. இக்கழக உறுப்பினரின் செயற்றிறன் கிராம மட்டத்தில் மட்டுமன்றி, பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டத்திலும் சிறப்பிடம் பெறுகின்றது. மாவட்ட மட்டத்தில் சிறந்த இளைஞர் கழகமாக இணுவில் கிழக்கு இளைஞர் கழகம் செயற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டடத்தில் “இணுவில் கிழக்கு மாதர் சங்கம்” ஒன்றும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இதன் தலைவராக திருமதி கு.செல்வலட்சுமி அவர்கள் சேவையாற்றுகிறார். இவ்விடத்தில் ஐக்கிய நாணய சங்கம் ஒன்றும் இயங்கி வருகின்றது.

இணுவில் கிழக்குக் கிராம அபிவிருத்திச் சங்கம் இக் கிராம மக்களுக்குப் பல்வேறு வழிகளில் சிறப்பான சேவை புரிகிறது. சீரிணுவைத் திருவூரின் பெருமைக்கு இச்சங்கம் முன்னின்று செயற்படுவது சிறந்த முன்மாதிரியாகும்.

**ந. காசிவேந்தன்**
**B.Com Dip.In.Mgt (O.U.S.L)**
செயலாளர்,
இணுவில் கிழக்கு கிராம
அபிவிருத்திச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வகம்

## (விழிப்புலன் வலுவிழந்தோர் நிலையம்).

இணுவிற் கிராமத்தின் வடபுலத்தில் காங்கேசன்துறை வீதியிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் சபாபதிப்பிள்ளை வீதியாகிய குறுந்தெருவின் 150 மீற்றர் தொலைவில் வீதியின் தென்பால் அமைந்துள்ளது விழிப்புலன் வலுவிழந்த பிள்ளைகள் வாழுமில்லமான வாழ்வகம் என்னும் நிறுவனம்.

வாழ்வகம் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி (2002.03.09) அன்று தனது சொந்தக் கட்டடத்தில் ஆரம்பமானது. இவ்வாழ்வகமானது நிறுவனமாக 1988ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் ஆரம்பிக்கப்பட்ட அன்றே பத்துப்பிள்ளைகள் சேர்ந்தனர். இந்த நிறுவனத்தின் தலைவரான ஆசிரிய பயிற்சியும் பிறைலி கல்வி முறையும் விசேடமாகப் பயின்ற செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி என்பவர் தானே கற்பித்ததுடன் நிர்வாகப்பொறுப்பையும் ஏற்று ஒரு நிர்வாக சபையையும் ஏற்படுத்தினார். 1990 ஆம் ஆண்டு போர்ச்சூழலால் தெல்லிப்பழையிலிருந்து இடம்பெயர்ந்து உடுவிலில் 1995 ஆம் ஆண்டு வரை பல சிரமங்களுக்கு மத்தியில் இது இயங்கியது. இறுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் தமது சகல உடைமைகளையும் விட்டுச் சென்றதால் பிள்ளைகளைத் தொடர்ந்தும் பராமரிக்க முடியாமல் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

நிர்வாக உறுப்பினர் சிலரின் முயற்சியால் மீண்டும் மானிப்பாயில் 19.01.1998 அன்று ஆரம்பிக்கப்பட்டுப் பல கஷ்டங்களின் மத்தியில் இவ் வாழ்வகம் இயங்கி வந்தது. சமூகசேவைப் பகுதியினரின் ஆலோசனையின்பேரில் காணி ஒன்று எடுக்க முனைந்தனர். இவர்களது குறைதீர வெளி நாடுகளில் சமயச் சொற்பெருக்காற்றச் செல்லும் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களால் லண்டன் வாழ் பரோப காரிகள் மூலம் இப்போது கட்டடம் அமைந்த $32^1/_2$ பரப்பு நிலம் வாங்கிக் கையளிக்கப்பட்டது. இதற்காக அரச செலவில் RAAN அமைப்பின் உதவியுடன் புதியதோர் கட்டடம் அமைக்கப்பட்டு 2002.03.09 அன்று குடிபுகுந்ததிலிருந்து இது சிறப்புடன் இயங்க முடிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தற்போது 32 விழிப்புலன் வலுவற்ற பிள்ளைகள் தங்கியிருந்து கல்வி பயில்கின்றனர். இவர்களில் 15 ஆண்களும் 17 பெண்களும் அடங்குவர். இவர்கள் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள். இன, மத வேறுபாடின்றி ஏழு வயது முதல் 21 வயது வரை இருந்தபோதும் ஒரே குடும்பமாக ஆசிரியையும் பொறுப்பாளருமான அன்னை செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் பாதுகாப்பில் வாழ்கின்றனர். இவர்கள் யாவரும் பாடசாலையில் கல்வி பயில்வதுடன் வாழ்வகத்திலும் ஏனைய பாடங்களுடன் சமயவழிபாடு, உள்ளகவிளையாட்டு, சங்கீதம், பண்ணிசை, மிருதங்கம் போன்ற கலைப்பயிற்சியும் பெறுகின்றனர். தொலைக்காட்சியில் சத்தங்கள் அசைவுக்கருவிகள் மூலம் அறிந்து தாமே சாதகம் புரியும் ஆற்றலுடையவர்கள். இவர்களில் 11 பேர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆண்டு 6 தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரையும், 13 பேர்இராமநாதன் கல்லூரியில் ஆண்டு இரண்டு முதல் ஆண்டு 10 வரையும் படிக்கின்றனர். மூவர் யாழ். பல்கலைக்கழகத்தில் சமூகவியல், உளவியல், கலை ஆகியவற்றைப் படிக்கின்றனர். ஒருவர் கொழும்பில் சட்டக்கல்வி பயில்கிறார். ஒருவர் வாழ்வகத்தில் உதவி ஆசிரியராகவும் பாடசாலைப் படிப்பிற்கு வயது கூடியமையால் வாழ்வகத்தில் ஏனையவர்களுக்கு உதவி புரிபவராகவும் இருக் கின்றனர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் இராமநாதன் கல்லூரியிலும் விசேட பயிற்சி பெற்ற இரு ஆசிரியர் வீதம் இம் மாணவர்களுக்குக் கல்வி போதிக்கவென வாழ்வகத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் இப்பிள்ளைகள் மற்றைய பிள்ளைகளுடன் தாமும் சேர்ந்து பழகவும் தமது விசேட பாடம் மூலம் கல்வி பயிலவும் செய்யப்பட்டுள்ளது.

இப்பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளுடன் விளையாட்டுப் போட்டி, பேச்சுப்போட்டி போன்ற பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்ற வேண்டிய ஒழுங்குகளைப் பாடசாலைச்சமூகம் ஏற்படுத்தியதால் பல பரிசுகளையும் பெற்றுள்ளனர். யூனியன் கல்லூரியில் பத்தாம் ஆண்டு படிக்கும் 19 வயதுடைய கு.ஜெகதீசன் என்பவர் பண்ணிசை, சங்கீதம் என்பவற்றில் பத்துக்கும் மேற்பட்ட தங்கப்பதக்கங்களைப் பெற்றெடுத்தவர். அமைதியான சுபாவமும் இசைஞானமும் உடையவர். எவராவது வெளியாட்கள் அங்கு சென்றால் நல்ல மரியாதையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்கின்றார். ஜெகதீசன் எனும் இம்மாணவன் கோட்டம், மாவட்டம், தேசிய மட்டங்களில் தனது திறமையைக் காட்டி யதுடன் சென்ற இரண்டாவது உலக இந்து மாநாட்டிலும் பங்கு பற்றி வாழ்வகத்துக்குப் பெருமையையும் பதக்கங்களையும் பெற்றுக்கொடுத்தார். மேலும் கௌரவ இந்து கலாசார அமைச்சர் வாழ்வகத்துக்கு வந்து பிள்ளைகளின் வசதிகளுக்காக ஒரு முச்சக்கரவண்டியும், வேறு பல உபகரணங்களும் வழங்கினார். மேலும் பெருநிதியையும் மாதந்தோறும் தமது சம்பளங்களில் ஒரு தொகையையும் வழங்குகிறார். இந்த நிலையத்தில் தங்கி வாழும் பலர் சங்கீதம், பேச்சு, நடிப்பு, நடனம், கல்வித்தேர்ச்சி காரணமாக பல பெரியார்களால் பாராட்டப்பட்டனர். அரச, அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள், கருணையுள்ளம் கொண்ட தன வந்தர்கள் பொருட்களாகவும் பெருநிதியாகவும் வழங்குவதுடன் தேவைக்கேற்ற வசதிகள் செய்யவும் முன்வந்துள்ளனர்.

வாழ்வகத்திற்குச் சொந்தமான காணியில் கட்டடங்கள் அற்ற நிலங்களில் வாழை, தென்னை மற்றும் உபஉணவுப் பயிர்வகை செய்கை பண்ணி வருகின்றனர். விளைபொருட்களில் நிலையத் தேவைபோக எஞ்சிய பொருட்கள் சந்தையில் விற்கப் படுகின்றன. பால் தேவைக்காக பசுமாடும் வளர்க்கப்படுகின்றது

இங்கு தங்கியுள்ள பிள்ளைகளுக்குத் தலா 300 ரூபா வீதம் சமூக சேவைத் திணைக்களம் உதவுகிறது. இவர்கள் மானிப்பாயில் வசித்த காலத்தில் வலி.தென் மேற்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சமூகசேவை உத்தியோகத்தர் இவர் களுக்கு மனிதாபிமான உதவியை அரசு மூலம் பெற்றுக் கொடுத்ததுடன் தனது தெரிந்த வர்த்தகப் பிரமுகர்கள் மூலம் அரிசி மற்றும் உபபொருட்களைத் தொடர்ந்து எடுத்துக் கொடுத்தார். வாழ்வகப் பிள்ளைகள் கலை கலாசாரப் பிரிவில் கூடிய திறமைபெற உழைத்த பண்பான ஆசிரியை மறைந்தும் இவர்களின் நெஞ்சில் நிறைந்துள்ளார்.

வாழ்வகப் பிள்ளைகளின் பெற்றோர் மிக வறிய நிலையில் உள்ளவர்கள். வருடமொருமுறை வந்து பிள்ளைகளுடன் அன்புடன் அளவளாவிச் செல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டன. பெற்றோர் இவ்விடம் வந்த போது பிள்ளைகளின் படிப்பில் உறுதுணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியும் படி நிர்வாகம் கோரியுள்ளது. இவர்களுக்குப் பலவகையாலும் கிடைக்கும் நிதி செலவினம் யாவும் பதிவு செய்யப்பட்ட கணக்காய் வாளர்களால் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

நிலையத்தில் தைப்பொங்கல், வெள்ளைப்பிரம்பு தினம் (20.10.2002) சிறப்பாக கொண்டாடப்பட்டன. இப்பெருவிருட்சமான வாழ்வகத்தை உருவாக்கியவர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்கள். இவர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கற்றுத் தேறியவர். கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் ஆசிரியராகக் கடமையாற்றிப் பின் யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வந்து கடமை புரிகிறார். கொழும்பில் விழிப்புலனற்றோருக்கான பிறைலி கல்விமுறையும் கற்றுத்தேறியவர். இவர் 1998ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் விழிப்புலன்வலுவிழந்த பல பிள்ளைகளை ஒன்று சேர்த்து ஒரு வாழ்வகமாகத் தெல்லிப்பழையில் ஆரம்பித்தார். இப்பிள்ளை களுக்காகத் தனது வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தித் திருமணமாகாது இப்பிள்ளைகளுக்கு உறுதுணையாய் இருந்து கற்பித்தார்.

இந்த நிலையத்தை உருவாக்கியதுடன் இன்றைய சூழலில் 28 பிள்ளைகளை நிலையத்திலும், 4 பேரை வெளியிலும் (உயர் படிப்புப் பெறுவோர்) ஆதரித்துத் தாயாக, தந்தையாக குருவாகத் தன்னை அர்ப்பணித்த செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி என்பவர் தனது 66 வயதிலும் தனது ஓய்வூதியத்தையும் நிலையத்துக்கே வழங்கித் தனது சேவையையும் அர்ப்பணித்துத் தனக்கென ஒரு கௌரவமான நிலையைப் பெற்றுள்ளார். இந்த நிலை இலகுவில் எவருக்கும் கிடைக்காது. இப்பதவி இவர் களுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட கொடையாகும்.

எமது இணுவில் கிராமத்தில் இப்படியான ஆதரவு கொடுக்கும் இந்நிலையம் அமைந்து, அருஞ்சேவை செய்யும் ஆசிரியைகள் நிர்வாக உறுப்பினர், நலன்விரும்பிகள், கல்வியிலும் தமது விழிப்புலன் வலுவிழந்ததையே சிந்திக்காது நற்பயன் பெறும் மாணவர்கள் என்பவர்களோடு கம்பீரமாக இருப்பதையிட்டு இணுவை அன்னை இன்புறுகிறாள்.

**மு.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவ்வியம் மேதர் மெமோறியல் பெண்கள் இல்லம்

## (அருளகம் பெண்கள் இல்லம்)

1950 ஆம் ஆண்டு மருதனார்மடத்திலே வில்லியம் மேதர் மெமோறியல் ஞாபகார்த்தமாக இவ்வில்லம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வில்லமானது இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. அருளகம் பெண்கள் இல்லம்
2. பெண்கள் இல்லம்

இதனடிப்படையில் அருளகம் பெண்கள் இல்லமானது உறவுகளை இழந்த சிறுவர்களுக்காக நடாத்தப்பட்டு வருகின்றது. இதனை இலங்கைத் திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை ஆகிய மூன்று திருச் சபைகளும் இணைந்து நடாத்துகின்றன. இதற்கு ஜேர்மனி நாடு உதவி வழங்கி வருகின்றது. இதன் தலைமைக் காரியாலயம் கொழும்பில் அமைந்துள்ளது. இச்சிறுவர் இல்லத்திற்குத் திருமதி ஜெயரட்ணம் ஜெயமோகன் அவர்கள் தலைமை தாங்கி வருகின்றார். 60 பிள்ளைகள் இவ்வில்லத்தில் இருந்து உடுவில் மகளிர் கல்லூரில் கல்வி கற்று வருகின்றனர். பிள்ளைகளை நிர்வகிப்பவராக செல்வி சரோஜா சாமுவேல் உள்ளார். அவருக்கு உதவியாளராகத் திருமதி ஜெயச்சந்திரா தாமு, திருமதி ஆனந்தமலர் டேவிட் ஆகியோரும் உள்ளனர். உணவு சமைப்பவர்களாகத் திருமதி யோகேஸ்வரி ஞானப்பிரகாசம், செல்வி கௌசலா ஆகியோர் உள்ளனர். எமது இல்லத்திலிருக்கும் பிள்ளைகள் வழிபாட்டுக்காக மருதனார்மடத்திலுள்ள ஆச்சிரமத்திற்குச் செல்வார்கள். இவர்களுக்கான அடிப்படை வசதிகள் இங்கு வழங்கப்பட்டு வருகின்றன. விடுமுறைக் காலங்களில் விரும்பிய வர்கள் தமது வீடுகளுக்குச் சென்று வருவார்கள். எமது இல்லத்தில் தரம் 2 இலிருந்து உயர்தரம் வரை பிள்ளைகள் உள்ளனர். இவர்களின் மேற்படிப்புக்காக இவ்வில்லத்தின் மூலம் உதவிகள் வழங்கப் படுகின்றன. தொடர்ந்தும் மேற்படிப்புக்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரமுடியாதவர்களுக்காக சிறுகைத்தொழிற் பயிற்சிகள் வழங்கப்படும். இதனடிப் படையில் அவர்கள் தமக்கு விருப்பமான தொழில்களைப் பழகிக் கொள்வார்கள். இப்படியாக எமது இல்லமானது வளர்ச்சியடைந்து வருகின்றது.

அடுத்து, பெண்கள் இல்லமானது பல பாதிக்கப்பட்ட பெண்கள், வயது முதிர்ந்த பெண்களை உள்ளடக்கி அமைக்கப் பட்டுள்ளது. இதனை வழிநடத்துபவராக பேண் இராசையா அவர்கள் இருந்து வருகின்றார். இப்படியாக இவ்விரு இல்லங்களும் பெண்களை உள்ளடக்கியவையாக அமைந்து காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

**இல்லக் காப்பாளர்**
மருதனார்மடம், இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை இல்லம் - இணுவில்.

தென்னிந்திய திருச்சபையானது இலங்கையின் வடபால் தகது சமயமேலீட்டினால் குடாநாட்டில் பல இடங்களில் தமது வணக்கத்துக்குரிய தேவாலயங்களைக் கட்டினர். பெரிய கிராம / நகரத் தொகுதி வாரியாகப் பிரித்து அவ்வப்பகுதியில் சிற் சபைகளையும் நிறுவித் தமது மேல்மட்டச் சபையின் கட்டுப் பாட்டிலும் அறிவுரையின் பேரிலும் ஆங்காங்கே தொண்டு செய்தனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இணுவில் கிராமத்தில் "மக்லியொட்" என்ற பெயரில் பெண்களுக்கான வைத்தியசாலை கட்டிச் சேவையாற்றினர். வழமைபோல இவ் வைத்தியசாலைக்குரிய காணியில் காங்கேசன்துறை வீதியின் அருகாகத் தேவாலயத்தையும் நிறுவினர். இணுவில் மக்கள் எவரும் இந்துசமயத்தில் ஊறிய பக்தி காரணமாக மதம் மாறவும் இல்லை. இந்தத் தேவாலயத்தைப் பயன்படுத்தவும் இல்லை. வைத்தியசாலையில் பணியாற்றுவோரும் வேறிடத்திலிருந்து வருவோரும் மட்டும் வணக்கம் செலுத்தி வந்தனர்.

தமது நோக்கம் நிறைவேற வறியவர்களான உடலால், உள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஊனமுற்றவர்களைத் தமது பொறுப்பில் ஏற்று அவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் கொடுத்து அரவணைக்க முற்பட்டனர். இவர்களுக்கு அடிக்கடி நலம் பரிசீலிக்க வேண்டியதால் இணுவில் ஆஸ்பத்திரியில் ஓர் இல்லம் நிறுவ உத்தேசித்தனர். தென்னிந்தியத் திருச் சபையானது தமது சமய, சமூக மேம்பாடு கருதி மிகவும் வசதி குறைந்த ஊனமுற்ற பிள்ளைகளைக் குடாநாடெங்கிலுமிருந்து தெரிந்தெடுத்துத் தமது சமூகப்பணிக்குப் புத்துயிர் ஊட்டினர்.

ஏற்கனவே தீர்மானித்தபடி ஊனமுற்ற வலுவிழந்த வறிய பிள்ளைகளை ஆதரிப்பதன் பேரில் 1981 ஆம் ஆண்டு இணுவில் ஆஸ்பத்திரியில் "நம்பிக்கை இல்லம்" என்னும் சிறப்புப் பெயருடன் இந்த நிறுவனம் ஆரம்பமானது. தென்னிந்தியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபைப் பேராயர் அதிவணக்கத்திற்குரிய அம்பலவாணர் அடிகள் வைபவரீதியாக இதைத் திறந்துவைத்தார். வலுவிழந்து வறுமை காரணமாகத் தமக்கு எதிர்காலம் திக்கற்ற துன்புறு நிலையில் இருந்த அபலைப் பிஞ்சுகளின் வாழ்வில் நம்பிக்கை ஒளிவீசும் இல்லமாக அமைந்தது யாவரும் மெச்சக்கூடியதாகும்.

அன்று (1981) தொடக்கம் இந்த இல்லம் தொடர்ந்து இயங்கி வருகிறது. இந்த இல்லத்தில் இப்போது ஐம்பது பிள்ளைகள் (ஆண்கள், பெண்கள் உட்பட) தங்கியுள்ளனர். தமது நாளாந்தக் கடமைகளைத் தாமாகவும் உதவியாளர்களின் உதவியுடனும் செய்கின்றனர். இவர்களுக்கென இரு தங்குமிடங்கள் ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறாகவும் (சிறந்த மண்டபங்கள்) இருக்கின்றன. இவர்கள் இணுவில் மத்திய கல்லூரியிலும் உடுவில் மகளிர் கல்லூரியிலும் கல்விகற்க ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நிறுவனத்தில் மேற்பார்வையாளர் உட்பட ஏழு பேர் இரவு, பகல் இவ்விடத்திலேயே தங்கியிருந்து கடமை புரிகின்றனர். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லவென ஒரு வாகனம் இல்லத்தில் எந்நேரமும் தங்கி நிற்பதால் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்று திரும்ப இல்லத்துக்கும் அழைத்து வருகின்றனர். இவ் வாகனத்துக்குரிய வாகனச் சாரதியும் இவ்விடத்திலேயே தங்கிப் பணிபுரிகின்றார். இவர்கள் தமது சமயக் கடமைகளை ஆஸ்பத்திரியிலுள்ள தேவாலயத்தில் நிறைவுசெய்கின்றனர்.

இணுவில் ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்படுகிறது. கடினமான சுகவீனம் ஏற்படுமிடத்து யாழ் அரசினர் வைத்திய சாலைக்குச் சொந்த வாகனம் மூலம் கொண்டு செல்லப்படுகின்றனர். யாழ் பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்கள் மாதமொரு முறை இங்குவந்து இப்பிள்ளைகளைப் பரிசோதிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பெற்றோருள்ள பிள்ளைகள் மாதமிருமுறை பெற்றோரைச் சந்திக்கவும், விடுமுறைகாலத்தில் வீடுசென்று திரும்பவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பெற்றோரில்லாதவர்கள் இல்லத்திலேயே தங்குகின்றனர். இப்பிள்ளைகளின் எதிர்கால நன்மை கருதி விவசாயம், கோழி வளர்த்தல், கால்நடை வளர்த்தல் ஆகிய வற்றிலும் பயிற்சியளிக்கின்றனர்.*

*தமது வாழ்வில் ஊனமுற்றோ, உடல் வலுவிழந்தோ பாதிப்புற்றவர்களுக்குத் தாங்களும் பிறரைப்போல் வாழ நம்பிக்கையூட்டும் இணுவில் நம்பிக்கை இல்லமானது இப் பிள்ளைகளின் வாழ்வுக்கும் உறுதியளிக்கின்றது.*

**பொறுப்பாளர்**
நம்பிக்கை இல்லம்,
இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சீரிணுவைத்திருவூரில் உள்ள மயானங்கள்



முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்
ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ
துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்
லாற் பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்
றேயறி வார்இல்லையே.

- பட்டினத்தடிகள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்கால் மயானம்

இம்மயானம் இணுவில் கோண்டாவில் ஊர் எல்லையில் அமைந்துள்ளது. காரைக்கால் மயானம் இப்பதியிலுள்ள காரைக்கால் சிவன் என்றழைக்கப்படும் தெய்வ சந்நிதி ஆரம்பமான காலத்தில் செயற்படத்தொடங்கியது. பண்டைய இந்திய மன்னர்கள் காசியிலுள்ள விசாலாட்சி விஸ்வநாதப் பெருமான் ஆலயமாக எண்ணியே இவ்வாலயத்தை அமைத்தனர். வட இந்திய காசி விஸ்வநாதர் திருக்கோயிலின் அயலில் ஆடவல்லானான நடேசப் பெருமான் உருத்திரத் தாண்டவம் ஆடவென உருத்திர பூமியாகிய மயானத்தை அமைத்துத் தாண்டவமாடினார் என்பது புராண வரலாறு.

இவ்வூரிலும் விஸ்வநாதப்பெருமானின் ஆடற்கலைக்கு மெருகூட்டவே காரைக்கால் மயானம் ஆரம்பிக்கப்பட்டதெனச் செவி வழிச் செய்திகள் தெரிவிக்கின்றன. காரைக்கால் பதியுறை விஸ்வநாதரின் ஆலயத்திருப்பணி செய்வோர் தமது எதிர்கால இறுதி மரியாதையை ஏற்கும் இடமாக இந்த மயானத்தையும் அவ்வப்போது புனருத்தாரணஞ் செய்து வந்ததை அண்மைக்கால வரலாறு மூலம் அறிகிறோம். திரு.அம்பலவாணர் சுவாமிகள் காரைக்கால் பதி வைரவர் கோயில் வாசலில் திருநீறு போட்டு உருவேற்றிய பின் பேய்பிடித்த மனிதன் சுயநினைவிழக்கிறான். சுவாமியாரின் கட்டளைப்படி மனிதனைப் பிடித்த பேய்கள் தமது செயலைக் காண்பிக்கும். பின் யாவரும் காரைக்கால் மயானம் சென்று பேய்கோரிய பலிகளைக் கொடுப்பதுடன் உணவு வகை, பழவகை, இளநீர் போன்றவற்றையும் கொடுத்து அப்பேயை அந்த இடத்திலிருந்து ஓடச்செய்வர். தான் பிடித்த மனிதரைவிட்டுத் தான் விரும்பிய பலிப்பொருட்களுடன் பேய் சென்று மறைந்துவிடும். இந் நிகழ்வுகள் ஒரு குறிப்பிட்ட காலத்துடன் இல்லாமற் போய்விட்டன.

காரைக்கால் சுவாமிகள் சிவன்கோயிலை நன்கு பராமரித்தது போல் மயானத்தையும் ஊர் மக்கள் மூலம் சுத்தஞ் செய்விப்பார். இவரது ஆலோசனைப்படி இணுவில், மஞ்சத்தடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் ஆகிய இடங்களிலுள்ள பொது நோக்குடையவர்கள் தமது பகுதிகளிலுள்ள இளைஞர்கள் முதியவர்களென்ற பேதமின்றிக் குழுக்கள், சங்கங்கள் மூலமாகவோ, தனியாகவோ வந்து காலத்துக்குக்காலம் பெரிய செடிகளை வெட்டிச் சுத்தஞ் செய்துள்ளனர்.

ஏறக்குறைய 50 வருடங்களுக்கு முன் புல்பூண்டுகள் செடி கொடிகள் தாமாகவே வளர்ந்து பின்னிப்பிணைந்து நின்றதால் தமது உறவினரின் ஈமக்கிரிகைகள் செய்யச் செல்வோர் படும் துன்பத்தை யாவரும் அறிவர். அந்நேரத்தில் முன்னோர் சொல்வது போல் "சுடலை ஞானம்" வந்து மயானத்தைச் செப்பனிட்டு நல்லமுறையில் வைக்க வேண்டும் என்பர், செயற்படுவதில்லை. இப்பகுதி அந்தக்காலத்தில் கோண்டாவில் கிராமத்தில் மஞ்சத்தடிப் பிரிவு ஒரு பகுதியாக இருந்தபோது மஞ்சத்தடி விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்கத்தில் ஆர்வமுள்ள மிடுக்கான வாலிபர் சிலர் தமக்குச் சேர்ந்த பலரையும் அயல் கிராமச் சனசமூக நிலையங்கள் நலன் விரும்பிகளையும் ஒன்றுசேர்த்துக் குறிப்பிட்ட திகதியில் பெரிய படையாக வந்து சிரமதானஞ் செய்வது வழக்கம்.

கிராம அபிவிருத்தியாதலால் இப்பகுதிக்குரிய கிராம சேவையாளர்களின் ஊக்குவிப்பினால் (கச்சேரி) மாவட்ட அதிபர் தொடக்கம், பிரிவுச் செயலர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஈறாக 1966 ஆம் ஆண்டளவில் பெரிய சிரமதான முகாம் அமைத்துச் சிலநாட்கள் பணிகள் சிறப்பாக நடைபெற்றன. இவர்களுடன் அமெரிக்கத் தொண்டர் படையைச் சேர்ந்த திரு.டெனிஸ்கட்ஸ்மன் என்பவரும் தயங்காமல் சிரமதானப் பணியை மேற்கொண்டார். இது யாழ்மாவட்டத்துக்கே பெருமையைத் தந்தது. தொடர்ந்து இணுவில் கோண்டாவில் வாழ் நலன்விரும்பிகளின் விடாமுயற்சியால் சிறந்த இரங்கல் மண்டபமும் நிறுவப்பட்டது. இப்பணியில் இராமர் அணை கட்டும்போது பெரிய பணியாற்றிய அணிலை இராமபிரான் பாராட்டியது போல இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்தவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்கம் ஆரம்ப பாடசாலை, அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமிகோயில் ஆகியவற்றில் அரும்பணியாற்றியவருமான திரு.ஆ.செல்லையா (அமரர்) அவர்கள் பாராட்டுக்குரியவர். சிரமதானத் தொண்டர்களுள் வயது முதிர்ந்தவர் இவர். எவருடனும் நகைச்சுவையாகவும் இனிமையாகவும் பண்புடன் பேசுவார். வேண்டிய தேநீர், சிற்றுண்டி வகை அல்லது அவ்விடத்தில் தயாரித்த புற்கை அல்லது கஞ்சி ஆகியவற்றைத் தொண்டர்களுக்கு வழங்க ஒருசிலரின் உதவியுடன் சிறப்பாக ஏற்பாடு செய்தவர். பிற்காலத்தில் இச்சிரமதானப் பணியில் முழுமூச்சாகப் பணியாற்றியவர் அமரர் பண்டிதர் வே.சண்முகலிங்கம் அவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தமயான இரங்கல் மண்டபத்துடன் மயானத்தின் நாற்புற மதிலையும் அரச உதவியுடன் விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்கத்தினர் செய்துமுடித்தனர். யுத்தகாலம் 1983 ஆம் ஆண்டின் பின் சிரமதான வேலை செய்யப்படவில்லை. தேவைக்கேற்றபடி அவ்வப்போது சிறிது துப்புரவு செய்து ஈமக்கிரியைகளைச் செய்தனர்.

இந்த மயானம் இணுவில் கோண்டாவில் வாழ் சாதாரண மக்களின் இடுகாடு, சுடுகாடு எனப் பயன்படுத்தப்பட்டது. யுத்த காலத்தில் வேற்றூர் மக்களுக்கும் பயன்பட வகை செய்யப் பட்டது. இணுவில் கோண்டாவிலைச் சேர்ந்த பல சித்தர்கள், அருளாளர்கள், மகான்கள் தவசீலர்களின் சமாதிகளும் இந்த மயானத்தில் ஆரம்பகாலந் தொட்டு ஏற்படுத்தப்பட்டன. இம் மயானத்தின் மேற்கெல்லைப்புறமாக மயானத்தின் தென் மேற்கிலுள்ள பிரதான பாதையிலிருந்து வடக்கு நோக்கி அநேக சமாதிகள் காணப்படுகின்றன. இணுவில் ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளின் சமாதி ஏறக்குறைய 12 அடி உயரமும் 100 சதுரஅடி விசாலமும் கொண்டது. ஏனையவை சிறியவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பாவனைக்கென ஓர் ஆழமான கிணறு பெருஞ் செலவில் தோண்டப்பட்டுத் துலாவும் அமைந்திருந்தது. யுத்த காலத்தில் பராமரிப்புப் போதாமல் இக்கிணறு பாழடைந்துள்ளது. இம் மயானத்தின் வடமேற்கு எல்லைச்சுவர் இடிக்கப்பட்டுள்ளது. யுத்த காலத்தைப் பயன்படுத்தி மயானத்திலுள்ள பல மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன. நல்ல முறையில் இயங்கிச் சுத்தம் பேண வேண்டிய இந்த மயானத்தில் ஒரு காவலாளியின் உதவியுடன் பிரேதங்கள் தகனஞ் செய்யப்படுகின்றன.

இவ்விடத்தில் பல பெரியார்களின் சமாதிகள் அமைந் துள்ளதால் இன்றும் இந்த மயானம் ஓர் அமைதியான உருத்திர பூமியாகவே உள்ளது சிறப்புடையதாகும். என்றோ ஒருநாள் நாட்டு நிலைமை சீரானதும் புனருத்தாரணஞ் செய்து வேண்டிய பாதுகாப்புடன் மெருகூட்ட வேண்டிய பெரிய பொறுப்பு மயான அபிவிருத்திச் சபைக்கு இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவோடை மயானம்

இணுவையூரின் வடகீழ்திசையில் கைதடி மானிப்பாய் வீதியில் இணுவில் புகையிரத நிலையத்திலிருந்து 100 யார் தொலைவில் வடக்கே செல்லும் குறுந்தெரு மூலம் 200 யார் தூரம் போய் இதற்கென அமைக்கப்பட்ட பாதையால் கிழக்கு நோக்கிச் சென்றால் தென்படுவது பூவோடை மயானம் என்னும் உருத்திர பூமியாகும்.

இந்த மயானம் நாற்புறமும் விவசாய விளைநிலங்களினாற் சூழப்பட்டுள்ள ஓர் ஏகாந்தமான இடம். இந்த மயானத்தை ஆரம்பித்தவர் இணுவிலைச் சேர்ந்த முருகர் கந்தர் (அலுப்பர்) ஆவார். இவர் இயல்பான ஆன்மீகவாதியானதால் பெரிய சந்நியாசியார் மற்றும் பெரும் சித்தர்களினதும் ஈர்ப்புத் தன்மையால் கவரப்பட்டவர். ஆன்மீகத் தொண்டுகளில் கூடிய ஈடுபாடுடையவர். இவர் வேளாண் குடியிற் பிறந்தவர். இவரிடம் அநேக நிலபுலங்கள் இருந்தன. இணுவில் மக்களின் ஈமச்சடங்குகளை நிறைவேற்றும் பொருட்டுத் தமது காணியில் தற்போதமைந்துள்ள பூவோடை மயானத்தை அமைத்துப் பாதுகாத்து வந்தார்.

இந்த மயானத்தில் ஏகாந்தநிலை காணப்பட்டதால் மருதனார்மடத்தில் கல்லூரியமைத்த சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் இங்கு அடிக்கடி அமைதிகாண வருவார். இந்த மயானத்தை அமைத்துப் பராமரிப்பவரான (முருகர் கந்தர்) அலுப்பரை நோக்கி மயானத்திற்காக அரசினரிடமிருந்து நன்கொடை பெற்றுத் தருவதாகக் கூறினார். மிக வசதியாகவும் கௌரவமாகவும் ஆன்மீக சிந்தனையுடனும் வாழ்ந்தவருக்கு நன்கொடை பெறுவது தமது நிலைமைக்கு இழுக்காகுமென்று நன்கொடை பெற மறுத்தார். தொடர்ந்து இவரினாலும் மரபுவழி வந்தோரினாலும் பராமரிக்கப்பட்டு வந்த உருத்திரபூமியின் வடகீழ்ப் பகுதியில் ஒரு வைரவர் சூலம் நடப்பட்டு ஆதரிக்கப்பட்டது. இன்றும் பலராலும் பேணிக் காக்கப்படுவதுடன் அயலில் வாழ்வோர், மயானத்துக்கு வருவோர் வைரவருக்குத் தேங்காய் உடைத்து விளக்கேற்றிக் கர்ப்பூரம் கொளுத்தி வழிபட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த மயானபூமி நாற்புறமும் மிகப்பெரிய பனைமரங்களாற் சூழப்பட்டுள்ளது. பனைகள் நாட்டியதன் நோக்கம் உரிய நிலம் அயலவர்களால் எல்லைகள் மாற்றஞ் செய்யாமலிருக்கவும் பெருநிழலுக்காகவும் பனையின் பயன்களைப் பெறவுமாகும். இதன் நடுவே பெரிய நிழல்தரும் மரங்களும் ஓங்கி வளர்ந்துள்ளன. இதன் இருபக்கங்கள் எல்லைச் சுவர்களாலும் பாதுகாக்கப்படுகின்றன.


இங்கு ஒரு கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. மயானத்துக்கு வருவோர் தங்க ஓர் இரங்கல் மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இணுவில், உடுவில், சுன்னாகம், உரும்பராய் ஆகிய கிராமங் களில் உள்ளோரது பிரேதங்கள் இங்கு கொண்டு வந்து தகனஞ் செய்யப்படுகின்றன. இந்த மயானம் உடுவில் கிராமசபை எல்லைக்குள் இருப்பதால் உடுவில் கிராமசபை மூலம் ஒரு காவலாளி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மயானத்துக்கு வரும் ஒவ்வொரு பிரேதத்துக்கும் நூறு ரூபா வாங்கி மயான அபிவிருத்திச் சபையிடம் ஒப்படைப்பார். பொதுமக்களின் நன்மை கருதி இக் காவலாளி தனது உதவியாட்களுடன் இங்கு வரும் பிரேதங்களைத் தகனஞ் செய்துகொடுத்து உதவுவார். இதனால் பொதுமக்கள் சிரமமின்றித் தமது கடமைகளைச் செய்யமுடிகிறது.

இந்த மயானம் யுத்தகாலத்துக்கு முன் மயான அபிவிருத்திச் சபை மூலம் நன்கு பேணப்பட்டும் சுத்தம் செய்யப்பட்டும் இருந்தது. யுத்த காலத்தில் இப்பகுதிக்கு வர இராணுவத்தினர் அனுமதிக்காத நிலையில் எவரும் வராததால் மரங்கள் செடிகொடிகள் வளர்ந்து காடுபோலிருந்தது. யுத்தநிறுத்தம் ஏற்பட்டபின் பிரேத தகனங்கள் நடைபெறுவதால் சிறிதளவு பாவிக்கக்கூடியதாக உள்ளது. தொடர்ந்து பாவிக்கப்படுவதால் சிறந்த முறையில் பராமரிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.


**மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் சிவகாமி அம்மன் கோவில் சப்பறம், தேர்




இணுவில் சிவகாமி அம்மன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் சிவகாமி அம்மன் கோவில் மகிடாசுரன்



இணுவில் சிவகாமி அம்மன் கோவில் மானம்பூத் திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இணுவில் கந்தசுவாமி கோவில் ஆறுமுகசுவாமி




இணுவில் சிவகாமி அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரைக்கால் மூலலிங்கம்



காரைக்கால் விசாலாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இணுவில் சிவகாமி அம்மன் கோவில் தங்கரதம்




காரைக்கால் சிவன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரைக்கால் அம்பலவாணர் சமாதி



காரைக்கால் வைரவர் வாசலில் உள்ள சூலம் பதித்த புராதனகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரைக்கால் மாரியம்மன்



மருதனார் மடம் ஆஞ்சனேயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஸ்வேஸ்வரர் (சிவன்) கோவில்



பல்லப்ப வைரவர் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கருணாகரப் பிள்ளையார் கோவில்




பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பரமானந்தவல்லி அம்மன் கோவில்



மாணிக்க வைரவர் பத்திரகாளி அம்மன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இணுவில் கந்தசுவாமி கோவில் மஞ்சம்




இணுவில் கந்தசுவாமி கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இளந்தாரி கோவில்




அண்ணமார் (வேணுகோபாலர்) கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமநாதேஸ்வரம் கோவில்



சேர். பொன். இராமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமநாதன் நுண்கலைப் பீடம்




இணுவில் பொது நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இணுவில் மத்திய கல்லூரி



இணுவில் இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இராமநாதன் கல்லூரி




யாழ்ப்பாணக் கல்லூரி — விவசாய நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்வகம் விழிப்புலன், வலுவிழந்தோர் நிறுவனம்



கிறிஸ்து சேவ ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் சைவத் திருநெறிக்கழக நிர்வாகக் குழுவினர்



இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலை ஆசிரியரும் மாணவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலை நிகழ்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவகாமி அறநெறிப் பாடசாலை




சிவகாமி அறநெறிப் பாடசாலை காவடியாட்ட நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இளந்தொண்டர் சபை




சிவகாமசுந்தரி சனசமுக நிலைய முன்றலில் கூத்து வேடதாரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பூவோடை மயானம்




காரைக்கால் மயானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புகையிரத நிலையம்




வைத்தியசாலை (இணுவில் ஆஸ்பத்திரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம்




தபாற் கந்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மருதனார் மடம் இறையியல் கல்லூரி




காலிங்கன் படமாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பயிர்செய் நிலம்



சந்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரைக்கால் சாமியார்



தியாகராசாச் சாமியார்




நயினாதீவுச் சாமியார்



பெரிய சந்நாசியார்




சாத்திரம்மா




வடிவேல் சாமியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மா. ஆனந்தர்




பார்லிமென்ட் நடராஜா



க.இ.க. கந்தசுவாமி



சபா. ஆனந்தர்



ச.வே. பஞ்சாட்சரம்




சி.மயில்வாகனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சபா. ஜெயராஜா




கு. சண்முகநாதன்



சி. மாணிக்கம்



க. சிற்றம்பலம்



ஆறு. திருமுருகன்




இ. திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இ. சுந்தரமூர்த்தி



வீ. தெட்சணாமூர்த்தி




உ. இராதாகிருஷ்ணன்



ந.வீரமணி ஐயர்




ஆர். சின்னராசா



இ. புண்ணியமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.சதாசிவக் குருக்கள்



கா.வைத்தீஸ்வரன்



க. தேவராஜா



செ.சோதிப்பெருமாள்





வ.நடராசா



க.பொன்னையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


க. ஸ்ரீகணேசன்


சி.திருச்செந்தில்நாதன்


இ. இரத்தினம்



ஏ. சுப்பையா


சு. இராமலிங்கம்


சு. வடிவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர் இணுவைத்திருவூரில் அமைந்துள்ள பிரதான குறிப்புகள்





## வீதிகள்

(a) காங்கேசன்துறை வீதி
(b) கைதடி — மானிப்பாய் வீதி
(c) கோண்டாவில் — மானிப்பாய் வீதி
(d) தியேட்டர் வீதி
(e) சபாபதிப்பிள்ளை வீதி
(f) குமாரலிங்கம் வீதி
(g) விவேகானந்தா வீதி
(h) ஆச்சிரமம் வீதி
(i) கோயில் வீதி
(j) பாரதி வீதி
(k) சின்னத்தம்பிப்புலவர் வீதி
(l) துரை வீதி
(m) பாற்பண்ணை வீதி
(n) மன்னந்தோட்ட செட்டிவளவு வீதி
(o) திருஞானசம்பந்தர் வீதி
(p) சிங்கத்தின் கலட்டி வீதி
(q) வட்டுவினி வீதி
(r) வன்னியசிங்கம் வீதி
(s) அங்களப்பாய் வீதி
(t) புகையிரதப்பாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவில்
(2) இணுவில் இந்துக்கல்லூரி
(3) இணுவில் பொதுநூலகம்
லோகேஸ் கூரைத்தகட்டுத் தொழிலகம்
(4) இணுவில் பொது மருந்தகம்
(5) அண்ணா கோப்பி உற்பத்தித் தொழிலகம்
(6) நடுவிளாத்தி வைரவர் கோவில்
(7) கௌரி அம்பாள் கோவில்
(8) நரசிங்கவைரவர் கோவில்
(9) இணுவில் கந்தசுவாமி கோவில்
இளந்தொண்டர் சபை
(10) இணுவில் மத்திய நூலகம்
(11) அண்ணா சனசமூக நிலையம்
(12) இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் கோவில்
(13) பரமானந்தவல்லி அம்மன் கோவில்
பரமானந்தா சனசமூக நிலையம். உப தபாற்கந்தோர். இணுவில்.
இணுவில் கூட்டுறவு வளாகம்
(14) இணுவில் மத்திய கல்லூரி மேற்பிரிவு
(15) விஸ்வேஸ்வரர் கோவில்
(16) இணுவில் மத்திய கல்லூரி கீழ்ப்பிரிவு
(17) இணுவில் மருத்துவமனை (தென்னிந்தியத் திருச்சபை)
(18) லக்சுமி படமாளிகை (காலிங்கன் தியேட்டர்)
(19) இணுவில் சந்தை
(20) சுந்தர ஆஞ்சநேயர் கோவில்
(21) மருதனார்மடம் சந்தை
(22) பல்லப்பை வைரவர் கோவில்
(23) இராமநாதன் கல்லூரி
இராமநாதேஸ்வரன் ஆலயம்
(23) இராமநாதன் நுண்கலைப்பீடம்
கோட்டக்கல்வி அலுவலகம். வலயக்கல்வி அலுவலகம்
(24) வாழ்வகம்
(25) காந்தரூபன் சனசமூக நிலையம்
(26) மருதனார்மடம் கிறிஸ்தவசேவ ஆச்சிரமம்
(27) இறையியற் கல்லூரி (தென்னிந்தியத் திருச்சபை)
(28) பூவோடை இந்து மயானம்
(29) அண்ணா விவசாயப்பண்ணை
(30) வட்டுக்கோட்டை விவசாயக்கல்லூரி. விவசாயப்பண்ணை
(31) இணுவில் புகையிரத நிலையம்
(32) வில்லியம் மேதர் ஞாகபகார்த்த பெண்கள் நிலையம்
(33) கலாஜோதி சனசமூக நிலையம்
(34) காரைக்கால் சிவன் கோவில்
காரைக்கால் இந்து மயானம்
(35) இளந்தாரி கோவில்
(36) அண்ணமார். வேணுகோபாலர் ஆலயம்
(37) இளந்தாரியின் அரண்மனை. வணக்கத்தலம்
(38) மாணிக்கவைரவர் பத்திரகாளி அம்மன் கோவில்
இணுவில் சிவகாமி அம்மன் கோவில்
இணுவில் சிவகாமி அறநெறிப்பாடசாலை
இணுவில் சிவகாமசுந்தரி சனசமூக நிலையம்
(39) கொட்டம்பனை வைரவர் கோவில்
(40) மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் கோவில்
விவேகானந்த கிராம அபிவிருத்திச் சங்கம். சனசமூக நிலையம்.
நெசவுசாலை.
(41) உதயசூரியன் சனசமூக நிலையம்
(42) கற்பகப்பிள்ளையார் கோவில்
(43) கருணாகரப்பிள்ளையார் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org